தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
திருவள்ளுவர் ஆண்டு 2040, ஆனி 23
2009 ஜூலை 7, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாங்கற்ற
மிக்காருள் மிக்க கொளல்"

அறிஞர்களின் அவையில் நாம் கற்றவைகளை அவர்கள் ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு எடுத்துச் சொல்லி நம்மைவிட அதிகம் கற்றவரிடமிருந்து மேலும் பலவற்றை நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிடாத வினாக்கள்
(பட்டியல்கள் 7 மற்றும் 8@)

பட்டியல்–7

1—

கூடுதல் காவலர்கள்

வினா எண் 29985—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை, திருப்புவனம் காவல் நிலையத்திற்குக் கூடுதல் காவலர்களைப் பணி அமர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இப்பொருள் தொடர்பாகக் கருத்துரு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

@ இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதி அன்றுள்ளவாறு அமைந்தவனவாகும்.

2—

கட்டட வசதி

வினா எண் 31946—திரு. கே.எஸ். விஜயகுமார்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்மிடிப்பூண்டி காவல் துணைக் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

கும்மிடிப்பூண்டி காவல் துணைக் கண்காணிப்பாளருக்கு இல்லத்துடன் கூடிய அலுவலகக் கட்டடம் கட்டுவதற்குப் போதிய நிலம் உள்ளது. 2009-10-க்கான பகுதி-2 திட்டத்தின்கீழ் சேர்த்துக் கட்ட பரிசீலனை செய்யப்படும்.

3—

புதிய குடியிருப்புகள்

வினா எண் 34132—திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், அதிராம்பட்டினம் காவல் நிலைய காவலர்களுக்குப் புதிய வீடுகள் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், அதிராம்பட்டினம் காவல் நிலைய காவலர்களுக்கு 11 குடியிருப்புகள் உள்ளன. இக்குடியிருப்புகள் 1943 ஆம் ஆண்டு கட்டப்பட்டன. இக்குடியிருப்புகள் அனைத்தும் தற்சமயம் பழுதடைந்துள்ளதால், அவற்றை இடித்துவிட்டு அவ்விடத்திலேயே புதிய குடியிருப்புகள் கட்டத் தேவையான தகுதிச் சான்றிதழை தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்திடமிருந்து பெற்று தகுதியிருப்பின், ஆண்டுதோறும் காவலர்களுக்குக் குடியிருப்புகள் கட்டும் திட்டத்தின்கீழ் அதிராம்பட்டினம் காவல் நிலையக் காவலர்களுக்கும் புதிய குடியிருப்புகள் கட்டுவதற்குப் பரிசீலனை செய்யப்படும்.

2009 ஜூலை 7]

4—

மகளிர் காவலர்கள் நியமனம்

வினா எண் 38218—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, ஆழியாறு அணைக்கு மகளிர் காவலர்களை நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, ஆழியாறு அணை புறக் காவல் நிலையத்திற்கு மகளிர் காவலர்களை நியமிப்பது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

5—

காவல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம்

வினா எண் 39291—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை மகளிர் காவல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை அனைத்து மகளிர் காவல் நிலையம் தற்பொழுது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக்காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்காக மானாமதுரை டி.எஸ். எண் 22-ல் 0.56.0 ஏர்ஸ் நிலம் காவல் துறை வசம் தயார் நிலையில் உள்ளது. தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் காவல் நிலையங்களுக்கு அடுத்த மூன்று ஆண்டுகளில் படிப்படியாகச் சொந்தக் கட்டடம் கட்டப்பட வேண்டும் என்ற மூன்றாம்

காவல் ஆணைய பரிந்துரையின் அடிப்படையில் இக்காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் வருங்கால காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் சேர்த்துக் கட்ட பரிசீலனை செய்யப்படும்.

6—

தரம் உயர்த்தல்

வினா எண் 45067—திரு. எம். அன்பழகன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழனி தொகுதி, சாமிநாதபுரத்தில் இயங்கும் புறக் காவல் நிலையத்தை நிரந்தரக் காவல் நிலையமாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

திண்டுக்கல் மாவட்டம், பழனி தொகுதியில் உள்ள சாமிநாதபுரம் புறக் காவல் நிலையம் ஏற்கெனவே முழு காவல் நிலையமாக நிலை உயர்த்தப்பட்டு 25-7-1997 முதல் முழு காவல் நிலையமாக இயங்கி வருகிறது.

7—

சோதனைச் சாவடி

வினா எண் 47230—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மண்டபம், பாம்பன் பாலத்தில் உள்ள சோதனைச் சாவடி செயல்பட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பாம்பன் பாலத்தில் கடலோரக் காவல் பாதுகாப்புக் குழுமத்தினரால் காவல் சோதனைச் சாவடி ஒன்று நிறுவப்பட்டு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

2009 ஜூலை 7]

8—

திறன் மேம்பாட்டுப் பயிற்சி

வினா எண் 47315—திரு. து. ரவிக்குமார்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காவல் துறையில் பணியாற்றும் காவலர்களின் பிள்ளைகளுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி (Skill Development) அளிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

காவல் துறையில் பணியாற்றும் காவலர்களின் பிள்ளைகளுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிப்பதற்கான திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

9—

காவல் துறை அதிகாரி அலுவலகம்

வினா எண் 48770—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சியில் புறநகர் மாவட்ட இணை காவல் துறை அதிகாரி அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் மாவட்டங்களில் மாவட்ட இணை காவல் துறை அதிகாரி என்ற பதவி எதுவும் இல்லை. எனவே, பொள்ளாச்சியில் புதிதாக புறநகர் மாவட்ட இணை காவல் துறை அதிகாரி அலுவலகம் அமைக்க இயலாது.

10—

காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம்

வினா எண் 53362—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், உடுமலைப்பேட்டை காவல் நிலையம் தற்போது அரசுக்குச் சொந்தமான பழைய கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக்காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் வருங்கால காவல் துறை நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ் சேர்த்து கட்ட பரிசீலனை செய்யப்படும்.

11—

புறக்காவல் நிலையம்

வினா எண் 60173—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, டாப்சிலிப்பில் புறக்காவல் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் தற்போதுள்ள புறக்காவல் நிலையங்களை முந்துரிமை அடிப்படையில் படிப்படியாக முழுக் காவல் நிலையங்களாக நிலை உயர்த்துவதே அரசின் கொள்கையாகும். அதன்படி 2006-2007-ல் 10 புறக்காவல் நிலையங்களும், 2008-2009-ல் 10 புறக்காவல் நிலையங்களும் முழு நேரக் காவல் நிலையங்களாக நிலை உயர்த்தப்பட்டுள்ளன. எனவே அரசின் கொள்கையின்படி வால்பாறை தொகுதி, டாப்சிலிப்பில் புறக்காவல் நிலையம் அமைக்க கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை.

12—

புதிய காவல் நிலையம்

வினா எண் 60188—திரு. ஆர். சாமி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2009 ஜூலை 7]

மேலூர் தொகுதி, மேலூர் நகர் மற்றும் புறநகர் பகுதிகளாகப் பிரித்து புதிய காவல் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

மூன்றாவது காவல் ஆணையம் மற்றும் உயர்மட்டக் குழுவின் பரிந்துரைப்படி அடுத்த 5 ஆண்டுகளுக்கு புதிய காவல் நிலையங்கள் அமைக்க மிக மிக அவசியம் எனக் கருதப்படும் இடங்களைத் தவிர பிற இடங்களில் திறக்கவேண்டியதில்லை எனவும், தேவையானால் தற்போதுள்ள காவல் நிலையங்களின் தரத்தை உயர்த்தலாம் என்றும் ஐந்தாண்டுகளுக்கு பிறகு நிலைமையை பரிசீலனை செய்யலாம் எனவும் பரிந்துரை செய்யப்பட்டதற்கேற்ப அரசாணை (நிலை) எண் 733, உள் (கா-14) துறை, நாள் 27-6-2008-ல் ஆணை வெளியிடப்பட்டுவிட்டது. எனவே அரசின் கொள்கையின்படி மேலூர் தொகுதி, மேலூர் நகர் மற்றும் புறநகர் பகுதிகளாகப் பிரித்து புதிய காவல் நிலையம் அமைப்பது குறித்த கருத்துரு தற்சமயம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

13—

புதிய காவல் நிலையம்

வினா எண் 60194—திரு. ஆர்.கே பாரதி மோகன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவிடைமருதூர் தொகுதி, கதிராமங்கலத்தில் புதிய காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

மூன்றாவது காவல் ஆணையம் மற்றும் உயர்மட்டக் குழுவின் பரிந்துரைப்படி அடுத்த 5 ஆண்டுகளுக்கு புதிய காவல் நிலையங்கள் அமைக்க மிக மிக அவசியம் எனக் கருதப்படும் இடங்களைத் தவிர பிற இடங்களில் திறக்கவேண்டியதில்லை எனவும், தேவையானால் தற்போதுள்ள காவல் நிலையங்களின் தரத்தை உயர்த்தலாம் என்றும் ஐந்தாண்டுகளுக்குப் பிறகு நிலைமையை பரிசீலனை செய்யலாம் என்றும் பரிந்துரை செய்யப்பட்டதற்கேற்ப அரசாணை (நிலை) எண் 733

உள் (கா-14) துறை, நாள் 27-6-2008-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. எனவே அரசின் கொள்கைப்படி திருவிடைமருதூர் தொகுதி, கதிராமங்கலத்தில் புதிய காவல் நிலையம் அமைப்பது குறித்த கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை.

14—

போக்குவரத்து காவல் பிரிவு

வினா எண் 60288—திருமதி ஜி. லதா: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் நகரில் போக்குவரத்து காவல் பிரிவு துவக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* வேலூர் மாவட்டம், குடியாத்தம் உட்கோட்டத்தில் குடியாத்தம் டவுன், பரதராமி, கே.வி. குப்பம், குடியாத்தம் தாலுகா, பேரணாம்பட்டு, மேல்பட்டி ஆகிய ஆறு காவல் நிலையங்களும் குடியாத்தத்தில் ஒரு மகளிர் காவல் நிலையமும் இயங்கி வருகின்றன. மேலும் வேலூர் மாவட்டத்தில் ஒரு போக்குவரத்து கண்காணிப்புக் குழு மற்றும் ஐந்து நெடுஞ்சாலை போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவுகளும் இயங்கி வருகின்றன. மேற்படி சூழ்நிலையில் குடியாத்தம் நகரில் போக்குவரத்துப் பிரிவு துவக்கும் திட்டம் ஏதும் தற்சமயம் பரிசீலனையில் இல்லை.

15—

காவல் நிலையம்

வினா எண் 60322—திரு. அ. சௌந்திரபாண்டியன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குன்னூர் தொகுதி, சேயாஸிஸ்-ல் காவல் நிலையம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2009 ஜூலை 7]

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது தமிழ்நாடு அரசு அமைத்துள்ள மூன்றாம் காவல் ஆணையம் மற்றும் உயர்மட்டக் குழுவின் பரிந்துரைப்படி அடுத்த 5 ஆண்டுகளுக்கு புதிய காவல் நிலையங்கள் அமைக்க மிக மிக அவசியம் எனக் கருதப்படும் இடங்களைத் தவிர பிற இடங்களில் திறக்கவேண்டியதில்லை எனவும், தேவையானால் தற்போதுள்ள காவல் நிலையங்களின் தரத்தை உயர்த்தலாம் என்றும் ஐந்தாண்டுகளுக்கு பிறகு நிலைமையை பரிசீலனை செய்யலாம் எனவும் பரிந்துரை செய்துள்ளது. அதற்கான அரசாணையும் அரசாணை (நிலை) எண் 733, உள் (கா-14) துறை, நாள் 27-6-2008-ல் வெளியிடப்பட்டுள்ளது.

எனவே, குன்னூர் தொகுதி, சேயாஸிஸ்-ல் காவல் நிலையம் அமைக்கும் கருத்துரு தற்சமயம் பரிசீலனையில் இல்லை என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

16—

காவல் நிலையம்

வினா எண் 60741—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வீரபாண்டி தொகுதி, வீரபாண்டி ஒன்றியம், இளம்பிள்ளையில் காவல் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

தற்போது தமிழ்நாடு அரசு அமைத்துள்ள மூன்றாம் காவல் ஆணையம் மற்றும் உயர்மட்டக் குழுவின் பரிந்துரைப்படி அடுத்த 5 ஆண்டுகளுக்கு புதிய காவல் நிலையங்கள் அமைக்க மிக மிக அவசியம் எனக் கருதப்படும் இடங்களைத் தவிர பிற இடங்களில் திறக்கவேண்டியதில்லை எனவும், தேவையானால் தற்போதுள்ள காவல் நிலையங்களின் தரத்தை உயர்த்தலாம் என்றும் ஐந்தாண்டுகளுக்குப் பிறகு நிலைமையைப் பரிசீலனை செய்யலாம் எனவும் பரிந்துரை செய்துள்ளது. அதற்கான

அரசாணையும் அரசாணை (நிலை) எண் 733, உள் (கா-14) துறை, நாள் 27-6-2008-ல் வெளியிடப்பட்டுள்ளது.

ஆகவே, வீரபாண்டி தொகுதி, வீரபாண்டி ஒன்றியம், இளம்பிள்ளையில் காவல் நிலையம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்சமயம் பரிசீலனையில் இல்லை.

17—

காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம்

வினா எண் 63616—திருமதி இளமதி சுப்பிரமணியன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

வலங்கைமான் காவல் நிலையம் தற்போது தஞ்சை மாவட்டத்தில் அமைந்துள்ளது. இக்காவல் நிலையம் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக்காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டத் தேவையான நிலம் காவல் துறை வசம் இல்லை. நிலம் கண்டறியப்பட்டதும் வருங்கால நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் சேர்த்து கட்ட பரிசீலனை செய்யப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

18—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 42752—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, புக்கம்பட்டி ஊராட்சி, தேவக்கவுண்டன் வளவு கூட்டுறவு வங்கி அருகில் சிறிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், ஆழ்துளைக் கிணறும் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2009 ஜூலை 7]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், புக்கம்பட்டி ஊராட்சி, தேவக்கவுண்டன் வளவு பகுதிக்கு எஜமானூர் குடியிருப்பில் அமைக்கப்பட்டுள்ள 30,000 லிட்டர் மேல்நிலைத் தொட்டியிலிருந்து காடையாம்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, இப்பகுதிக்கு புதிதாக சிறிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

19—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 42796—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, மல்லிக்குட்டை ஊராட்சி, செம்பிளியானூர் ஆட்டுக்காரன் வளவு பிரிவு சாலை, மயானம், ராமன் வளவு, குட்டியன்காடு பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் வட்டம், செம்பிளியானூர் ஆட்டுக்காரன் வளவு பகுதிக்கு செம்பிளியான் வளவு குடியிருப்பிலிருந்து குழாய் நீட்டிப்புமூலமும், பிரிவு சாலை, மயானம், ராமன் வளவு, குட்டியன்காடு பகுதிகளுக்கு மல்லிக்குட்டை, பரியம்பட்டி, பண்டாரத்தான்வளவு குடியிருப்புகளில் கட்டப்பட்டுள்ள 30,000, 10,000, மற்றும் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளிலிருந்து இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், இக்குடியிருப்புகளுக்கு ஊரக குடிநீர்த் திட்ட விதிகளின்படி கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

20—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 49247—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் தொகுதி, நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியம், சின்ன சோரகை ஊராட்சி, கொசப்பட்டி காட்டுவளவு, தண்டராயன்வளவு, பாலகுட்டை மற்றும் பெரிய சோரகை ஊராட்சி, சரளிக்காடு, புத்திரன்வளவு, செங்காட்டூர் தெற்கு, கோமாளி வளவு ஆகிய பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

சேலம் மாவட்டம், நங்கவள்ளி ஒன்றியம், சின்ன சோரகை ஊராட்சி, கொசப்பட்டி காட்டுவளவு மற்றும் பெரிய சோரகை ஊராட்சி, செங்காட்டூர் தெற்கு குடியிருப்புகளுக்கு இக்குடியிருப்புகளின் மக்கட் தொகையையும் கணக்கில்கொண்டு குல்லானூர் மற்றும் செங்காட்டூர் குடியிருப்புகளில் கட்டப்பட்டுள்ள முறையே 30,000 மற்றும் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளிலிருந்து போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், இக்குடியிருப்புகளுக்கு தற்போது மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்ட வேண்டிய அவசியம் இல்லை. சின்ன சோரகை ஊராட்சி, தாண்டராயன் வளவு, பாலகுட்டை ஆகிய குடியிருப்புகளுக்கும் பெரிய சோரகை ஊராட்சி, சரளிக்காடு, புத்திரன் வளவு மற்றும் கோமாளி வளவு ஆகிய குடியிருப்புகளுக்கு தனித்தனியாக 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுடன் கூடிய குடிநீர்த் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

21—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 50894–திரு. சு.ப. வேலுமணி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதி, வழுக்குப்பாறை ஊராட்சி, வழுக்குப்பாறையில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2009 ஜுலை 7]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வழுக்குப்பாறை ஊராட்சி, வழுக்குப்பாறை குடியிருப்புக்கு பில்லூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டிமூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இம்மேல்நிலைத் தொட்டியே தற்போது போதுமானது. எனவே கூடுதலாக ஒரு மேல்நிலைத் தொட்டி அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

22—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 64943—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, தாந்தோணி ஒன்றியம், வெள்ளியணை ஊராட்சி, ஜல்லிபட்டி மற்றும் கட்டாரிகவுண்டனூர் ஆதி திராவிட தெருக்களுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாந்தோணி ஒன்றியம், வெள்ளியணை ஊராட்சி, ஜல்லிபட்டி அண்ணாநகர் என்கிற ஜல்லிபட்டி அருந்ததியர் தெரு புதிய குடியிருப்பாகும். தற்போது ஜல்லிபட்டி குடியிருப்பிலுள்ள 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குழாய் நீட்டிப்புமூலம் அத்தியாவசியத் தேவைக்கான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

புதிய குடியிருப்பான கட்டாரிகவுண்டனூர் அருந்ததியர் தெருவிற்கு தற்போது கட்டாரிகவுண்டனூர் குடியிருப்பிலுள்ள 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குழாய் நீட்டிப்புமூலம் அத்தியாவசியத் தேவைக்கான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

23—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 70099—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஒன்றியம், மேலப்பகுதி ஊராட்சிக்குட்பட்ட மேல்ஆணைகவுண்டன்பட்டி-நண்டுகுளத்துப்பட்டி பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடவூர் ஒன்றியம், மேலப்பகுதி ஊராட்சிக்குட்பட்ட ஆணைகவுண்டன்பட்டி குடியிருப்பின் ஒரு பகுதியே மேல்ஆணை கவுண்டன்பட்டி ஆகும். அதுபோலவே விராலிபட்டி குடியிருப்பின் ஒரு பகுதியே நண்டுகுளத்துப்பட்டி ஆகும்.

இவ்விரண்டு பிரதான குடியிருப்புகளிலும் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள முறையே, 10,000 மற்றும் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளிலிருந்து கிருஷ்ணராயபுரம், கடவூர் மற்றும் 541 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் தனி மின்விசைத் திட்டம் வாயிலாக இப்பகுதிகளுக்கும் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

24—

உயர் கோபுர மின் விளக்கு

வினா எண் 74733—திரு. எல். ரவிச்சந்திரன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் 1-வது தொகுதி, பழைய பேருந்து நிலையம் (நகரப் பேருந்து நிலையம்) அருகே, சேலம் மாநகராட்சி 34-வது கோட்டம், டி.எம்.எஸ். பேருந்து நிறுத்தம் அருகே மற்றும் சேலம் 1-வது தொகுதி அன்னதானப்பட்டி காவல் நிலையம் ரவுண்டானா ஆகிய பகுதிகளில் உயர் கோபுர மின் விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2009 ஜூலை 7]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இல்லை. தற்போது சேலம் 1-வது தொகுதி, பழைய பேருந்து நிலையம் (நகரப் பேருந்து நிலையம்) அருகே, சேலம் மாநகராட்சி 34-வது கோட்டம், டி.எம்.எஸ். பேருந்து நிறுத்தம் அருகே மற்றும் சேலம் 1-வது தொகுதி அன்னதானப்பட்டி காவல் நிலையம் ரவுண்டானா ஆகிய பகுதிகளில் தேவையான மின் விளக்குகள் பொருத்தப்பட்டு நல்ல ஒளியுடன் உள்ளது. மேலும் ரவுண்டானா மிகச் சிறியதாக உள்ளதால் உயர் மின்கோபுர விளக்கு அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

25—

துணை மின் நிலையம்

வினா எண் 63034—திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தளி தொகுதி, ஜவளகிரி ஊராட்சி, ஜவளகிரியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தளி தொகுதி, ஜவளகிரி ஊராட்சி, ஜவளகிரியில் துணை மின் நிலையம் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை.

26—

துணை மின் நிலையம்

வினா எண் 63035—திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தளி தொகுதி, இருதுக்கோட்டை ஊராட்சி, இருதுக்கோட்டையில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

ஆம்.

27—

துணை மின் நிலையம்

வினா எண் 63036—திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தளி தொகுதி, பெட்டமுகிலாளம் ஊராட்சி, காமகிரிமலை கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தளி தொகுதி, பெட்டமுகிலாளம் ஊராட்சி, காமகிரிமலை கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்கும் அவசியம் தற்போது இல்லை.

28—

துணை மின் நிலையம்

வினா எண் 63038—திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தளி தொகுதி, மாடக்கல் ஊராட்சி, சூலகுண்டா கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

தளி தொகுதி, மாடக்கல் ஊராட்சி, சூலகுண்டா கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை.

2009 ஜூலை 7]

29—

துணை மின் நிலையம்

வினா எண் 63042—திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, ஆச்சுபாலு ஊராட்சி, பேளாலம் கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* தளி தொகுதி, ஆச்சுபாலு ஊராட்சி, பேளாலம் கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்கும் அவசியம் தற்போது எழவில்லை.

30—

துணை மின் நிலையம்

வினா எண் 63044—திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, கெலமங்கலம் பேரூராட்சியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* தளி தொகுதி, கெலமங்கலம் பேரூராட்சியில் துணை மின் நிலையம் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை.

31—

மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 71609—திரு. சபா. இராஜேந்திரன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2009 ஜூலை 7

(அ) நெல்லிக்குப்பம் தொகுதி, அண்ணா கிராம ஒன்றியம், அழகு பெருமாள்குப்பம் ஊராட்சி, புதுமனை காலனிப் பகுதி, மேல்கவரப்பட்டு துணை மின் நிலையம் மற்றும் கொரத்தி இருளர் குடியிருப்புப் பகுதிகளுக்குப் புதிய மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நெல்லிக்குப்பம் தொகுதி, அண்ணா கிராம ஒன்றியம், அழகுபெருமாள்குப்பம் ஊராட்சி, புதுமனை காலனிப் பகுதி மேல்கவரப்பட்டு துணை மின் நிலையம் மற்றும் கொரத்தி இருளர் குடியிருப்புப் பகுதிகளுக்குப் புதிய மின்மாற்றி அமைக்கும் அவசியம் தற்போது இல்லை.

32—

துணை மின் நிலையம்

வினா எண் 75351—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரணமல்லூர் தொகுதி, வடவணக்கம்பாடியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெரணமல்லூர் தொகுதி, வடவணக்கம்பாடியில் துணை மின் நிலையம் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை.

33—

துணை மின் நிலையம்

வினா எண் 75356—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2009 ஜூலை 7]

(அ) ஆற்காடு தொகுதி, காவனூர் பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) ஆற்காடு தொகுதி, காவனூர் பகுதியில் 1 x 8 எம்.வி.ஏ. மின்மாற்றி திறன் கொண்ட ஒரு 33/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க 11-வது ஐந்தாண்டு பெருந்திட்டக் காலத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ளது. துணை மின் நிலையம் அமைக்கத் தேவையான நிலம் கையகப்படுத்தும் பணிகளும் நடைபெற்று வருகின்றன. நிலம் கையகப்படுத்தப்பட்டபின் வாரிய ஒப்புதல் வழங்கப்பட்டு, துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் துவங்கப்படும்.

34—

புதிய பகுதிநேரக் கடை

வினா எண் 52054—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஒன்றியம், அன்னவாசல் கிராம அங்காடியைப் பகுதிநேர அங்காடியாகக் கழனிவாசலுக்கு மாற்றித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஒன்றியம், 572 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டுவரும் அன்னவாசல் கிராம அங்காடியுடன் அதன் உட்கிராமமான கழனிவாசலைச் சேர்ந்த 150 குடும்ப அட்டைகளும் இணைக்கப்பட்டுள்ளன. எனவே, தற்போது நடைமுறையிலுள்ள அரசு நிபந்தனைகளின்படி புதிய பகுதிநேரக் கடை

பிரித்த பின்பு தாய்க் கடையில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை இந்நேர்வில் பூர்த்தியாகாததால் கழனிவாசலில் புதிய பகுதிநேரக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

35—

பகுதிநேர நியாய விலைக் கடை

வினா எண் 61270—திரு. இரா. இராஜேந்திரன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பனமரத்துப்பட்டி தொகுதி, நிலவாரப்பட்டி ஊராட்சியில் இருசாயி அம்மன் கோயில் தெருவில் பகுதிநேர நியாய விலைக் கடை திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி தொகுதி, நிலவாரப்பட்டி ஊராட்சி, கெஜ்ஜல் நாயக்கன்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியால் நடத்தப்படும் நிலவாரப்பட்டி நியாய விலைக் கடையிலிருந்து 350 குடும்ப அட்டைகளைப் பிரித்து 10-9-2008 முதல் இருசாயி அம்மன் கோயில் பகுதியில் நியாய விலைக் கடை திறக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது.

36—

நியாய விலைக் கடை

வினா எண் 61733—திரு. கே.எல். இளவழகன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், பரதராமி ஊராட்சி, நாகன் புரடையில் பகுதிநேர நியாய விலைக் கடை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2009 ஜுலை 7]

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், திமிரி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்கீழ் 680 குடும்ப அட்டைகளுடன் செயல்படும் பரதராமி கூட்டுறவு நியாய விலைக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ள நாகன்புரடை கிராமத்தில் 81 குடும்ப அட்டைகளே உள்ளன. எனவே, தற்போது நடைமுறையில் உள்ள அரசு நிபந்தனைகள் பூர்த்தியாகாததால், நாகன்புரடை கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை துவக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

37—

பகுதிநேர நியாய விலைக் கடை

வினா எண் 64585—திரு. வை. காவேரி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஊராட்சி, கட்டபுளியங்காடு கிராமத்தில் வாடகை இல்லாமல் கட்டடம் அளிக்க மக்கள் முன்வந்துள்ளதால், அப்பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஊராட்சி, மகுடஞ்சாவடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்கீழ் எர்ணாபுரம் கடை எண் 2-ல், ஒன்றேகால் கி.மீ. தொலைவில் உள்ள கட்டபுளியங்காடு பகுதியில் உள்ள 33 குடும்ப அட்டைதாரர்கள், அத்தியாவசியப் பண்டங்கள் பெற்றுச் செல்கின்றனர். கட்டபுளியங்காடு பகுதியில் 150-க்கும் குறைவான குடும்ப அட்டைகள் உள்ளதால், தற்போது நடைமுறையில் உள்ள அரசு விதிகளின்படி புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

38—

பகுதிநேர நியாய விலைக் கடை

வினா எண் 64742—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, கே. நடுஅள்ளி ஊராட்சி, பெ. மாரியம்மன் கோவில் கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி தொகுதி, கே. நடுஅள்ளி ஊராட்சி, கொளத்தூர் நியாயவிலைக் கடையிலிருந்து கே. நடுஅள்ளியில் முதல் பகுதிநேரக் கடையும், முத்துக்கவுண்டன் கொட்டாயில் 2-வது பகுதி நேரக் கடையும் ஏற்கெனவே பிரித்து செயல்பட்டு வருகின்றன. 3-வது பகுதிநேரக் கடையை பெ. மாரியம்மன் கோவிலில் துவக்க கோரப்பட்டுள்ளது. இம்மூன்றாவது பகுதிநேரக் கடையை அரசு ஆணை எண் 291-ன்படி முழுநேரக் கடையாக மாற்ற குறைந்தபட்சம் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். ஆனால் உத்தேச பெ. மாரியம்மன் கோவில் கிராமத்தில் 180 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளதாலும், தாய்க்கடையிலிருந்து உத்தேச பகுதிநேரக் கடை 1 கி.மீ. தூரத்தில் உள்ளதாலும், பெ. மாரியம்மன் கோவில் கிராமத்தில் புதிய பகுதிநேரக் கடை துவக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

39—

நியாய விலைக் கடை

வினா எண் 65359—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் நகராட்சி, 30-வது வார்டு குள்ளவீரம்பட்டியில் புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் நகராட்சி, 30-வது வார்டு குள்ளவீரம்பட்டி பகுதியில் உள்ள 192 குடும்ப அட்டைதாரர்கள்

2009 ஜூலை 7]

1 கி.மீ. குறைவான தூரத்தில் உள்ள மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலையால் நடத்தப்படும் மேட்டூர் பொன்னி கடை எண் 5, 9 மற்றும் 13 ஆகிய மூன்று நியாய விலைக் கடைகளில் அத்தியாவசியப் பொருட்களைப் பெற்று வருகின்றனர். குள்ளவீரம்பட்டி பகுதிக்கும் தாய் நியாய விலைக் கடைகளுக்கும் இடையே உள்ள தூரம் 1.5 கி.மீ.-க்குள் இருப்பதால் இந்நேர்வில் அரசின் நிபந்தனை பூர்த்தியாகாததால் குள்ளவீரம்பட்டி பகுதியில் புதிய பகுதிநேரக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

40—

நீர்ப்பாசனக் கருவிகள்

வினா எண் 59415—திரு. கு. ஹசன் அலி: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பாசன சாகுபடி நிலப்பரப்பை அதிகரிக்க சொட்டு நீர்ப்பாசனக் கருவிகள், தெளிப்பு நீர்ப்பாசனக் கருவிகள் மற்றும் குழாய் நீர்ப்பாசனக் கருவிகள் மானிய விலையில் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

உலக வங்கி நிதி உதவியுடன் இத்துறையின்மூலம் செயல்படுத்தும், நீர்வள நிலவளத் திட்டத்தில் தமிழ்நாட்டில், சொட்டுநீர், தெளிப்பு நீர் மற்றும் நிலத்தடி குழாய்ப் பாசனக் கருவிகள் மானிய விலையில் வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் வழங்கப்படுகின்றன.

சொட்டுநீர் கருவிகள், பயிர்களுக்கு இடையேயான இடைவெளி, பயிரிடப்படும் பாசனப் பரப்பு ஆகியவற்றிற்கு ஏற்ப, மத்திய அரசு வழிக்காட்டுதலில் குறிப்பிடப்பட்டுள்ள உச்சவரம்புக்குட்பட்டு 50% மானியத்தில் வழங்கப்படுகின்றன. இதில் பயன்பெறும் பயனாளர்/ விவசாயி மானியம் போக எஞ்சியுள்ள தொகையினைப் பங்களிப்பாக அளித்தல் வேண்டும். சொட்டு நீர்ப்பாசனம் மற்றும் தெளிப்பு நீர்ப்பாசனப் பணிகள் அனைத்தும் தற்போது தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ் விழுப்புரம், திருவண்ணாமலை, சிவகங்கை, சேலம், புதுக்கோட்டை, விருதுநகர், கோவை, ஈரோடு, தஞ்சை, வேலூர், பெரம்பலூர், தேனி,

[2009 ஜூலை 7

திருநெல்வேலி, மதுரை மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் உள்ள 25 உப வடிநிலப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தெளிப்பு நீர்ப்பாசனக் கருவிகளுக்கு அதிகபட்சத் தொகையான 50% (அல்லது) ரூ. 7,500/- ஹெக்டேர் இதில் எது குறைவானதோ அதனை மானியமாக வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் நீர் சேமிக்கப்பட்டு பாசன சாகுபடிப் பரப்பினை பெருக்க இயலும்.

மேலும் மத்திய அரசு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் நுண்நீர்ப்பாசனத் திட்டம் (சொட்டுநீர் மற்றும் தெளிப்பு நீர்பாசனம்) தோட்டக்கலை வளர்ச்சி முகமையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

41—

கட்டட வசதி

வினா எண் 67291—திரு. தி.க. ராஜா: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் நகராட்சியில் இயங்கி வரும் தோட்டக்கலை அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் நகராட்சியில், தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகம், அரசு சொந்தக் கட்டடத்தில் தான் இயங்கி வருகிறது.

42—

தூர்வாருதல்

வினா எண் 28829—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், கிளாபாக்கம் ஊராட்சி ஏரியைத் தூர்வார அரசு ஆவன செய்யுமா?

2009 ஜூலை 7]

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், கிளாபாக்கம் ஊராட்சி ஏரியை நிதிநிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் தூர்வார ஆவன செய்யப்படும்.

43—

சட்ட உதவி முகாமிற்குக் கட்டடம்

வினா எண் 39286—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை நீதிமன்ற இலவச சட்ட உதவி முகாமிற்குத் தனியாக கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை நீதிமன்றத்திலுள்ள வட்ட சட்டப் பணிகள் குழுவிற்குப் போதிய இடம் கிடைக்கும்பட்சத்திலும், பாராளுமன்ற உறுப்பினர் அல்லது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து நிதியுதவி கிடைக்கும்பட்சத்திலும் இக்குழுவிற்குத் தனியாக சட்ட உதவி மையம் கட்டித் தரப்படும்.

44—

ஆக்கிரமிப்பு அகற்றம்

வினா எண் 59159—திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பண்ருட்டி தொகுதி, மணப்பாக்கம், மனம்தவிழ்ந்தபுத்தூர், சிறுவத்தூர் ஆகிய ஏரிகளிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, மணப்பாக்கம், மனம்தவிழ்ந்தபுத்தூர், சிறுவத்தூர் ஏரிகளிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிட, தமிழ்நாடு ஏரிகள் பாதுகாப்பு மற்றும் ஆக்கிரமிப்புகளை அகற்றும் சட்டம் 2007-ன்படி நடவடிக்கை தற்போது எடுக்கப்பட்டு வருகிறது.

45—

கூடுதல் நீதிமன்றம்

வினா எண் 63516—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரத்தில் மாவட்ட கூடுதல் நீதிமன்றம் மற்றும் நீதிமன்றக் கட்டடங்கள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரத்தில், மாவட்ட கூடுதல் நீதிமன்றம் மற்றும் நீதிமன்றக் கட்டடங்கள் கட்டுவதற்கான செயற்குறிப்பு தலைமை பதிவாளர், சென்னை உயர் நீதிமன்றம் அவர்களிடம் இருந்து பெறப்படும் முன்னுரிமைப் பட்டியலில் இடம் பெறும்பட்சத்தில், நிலம் கையிருப்பு மற்றும் அரசின் நிதிநிலைமைக்கேற்ப அரசு பரிசீலனை செய்யும்.

46—

தூர்வாருதல்

வினா எண் 63729—திரு. கே.எல். இளவழகன்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2009 ஜூலை 7]

(அ) ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், குப்பம் ஊராட்சியில் காவேரி ஓடை தூர்வாரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2008-2009-இல் இப்பணியை நடைமுறைப்படுத்த இயலாது. இருப்பினும் 2009-2010-இல் நிதிநிலைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் தூர்வாரப்படும்.

47—

மதகு சீரமைப்பு

வினா எண் 63739—திரு. கே.எல். இளவழகன்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு தொகுதி, ஆற்காடு ஒன்றியம், கரிவேடு ஏரியை ஆழப்படுத்தி கரைகள் மற்றும் மதகுகளைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆற்காடு வட்டம், திமிரி ஒன்றியம், கரிவேடு ஏரியை தூர்வாரி கரைகளைப் பலப்படுத்தும் பணிகள் 2004-2005 ஆம் ஆண்டு வேலைக்கு உணவுத் திட்டத்தின்கீழ் செய்து முடிக்கப்பட்டுள்ளன. எனினும், தேவையான பணிகள் 2009-2010 ஆம் நிதியாண்டில் நிதிநிலைக்கேற்ப எடுத்துக்கொள்ளப்படும்.

48—

கால்வாய் சீரமைப்பு

வினா எண் 63901—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் தொகுதி, தைப்பாக்கம் ஏரியின் வரவு கால்வாயினைச் சீர் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* காஞ்சிபுரம் தொகுதி, காஞ்சிபுரம் வட்டம், தைப்பாக்கம், ஏரியின் வரத்துக் கால்வாயினைச் சீர்செய்ய 2009-2010 ஆம் நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

49—

தூர்வாருதல்

வினா எண் 63902—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் தொகுதி, காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், திருப்புட்குழி ஏரியைத் தூர்வாரி, ஆழப்படுத்தி, வரவு கால்வாய்களைச் சீர் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* காஞ்சிபுரம் தொகுதி, காஞ்சிபுரம் ஒன்றியம், திருப்புட்குழி ஏரியைத் தூர்வாரி, ஆழப்படுத்தி, வரவு கால்வாய்களைச் சீர் செய்யும் பணி 2009-2010 ஆம் நிதியாண்டில் நிதிநிலைமையின் அடிப்படையில், முன்னுரிமை அடிப்படையில் எடுத்துக் கொள்ளப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2009 ஜூலை 7]

50—

மதகு சீர் செய்தல்

வினா எண் 63903—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் தொகுதி, காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மாகரல் ஏரி மதகுகளைச் சீர் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் தொகுதி, காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மாகரல் ஏரியின் 3-வது மதகினைச் சீர் செய்யும் பணி 2009-2010 ஆம் நிதியாண்டில் நிதிநிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் எடுத்துக்கொள்ளப்படும்.

51—

மதகு சீர் செய்தல்

வினா எண் 63953—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியம், சோகண்டி கிராம பெரிய ஏரி மற்றும் அடவளாகம் ஏரி மதகுகளைச் சீர் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியம், சோகண்டி கிராம பெரிய ஏரி மற்றும் அடவளாகம் ஏரி

மதகுகளைச் சீர் செய்யும் பணிகள் 2009-2010 ஆம் நிதியாண்டில் நிதிநிலைமையின் அடிப்படையில், முன்னுரிமை அடிப்படையில் பணி மேற்கொள்ளப்படும்.

52—

சட்ட ஆலோசனை மையம்

வினா எண் 68493—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதியில் இலவச சட்ட ஆலோசனை மையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காவேரிப்பட்டினம் தாலுகாவில் எந்த ஒரு நீதி மன்றமும் நிறுவப்படவில்லை. ஆகவே, அங்கு சட்டப் பணிகள் குழு இயங்கவில்லை. ஆயினும், இத்தாலுகா கிருஷ்ணகிரி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற வரம்பிற்குள் வருகிறது. கிருஷ்ணகிரி மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் ஏற்கெனவே முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதியை தலைவராகக் கொண்ட மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக் குழு இயங்கி வருகிறது.

53—

விடுதி வசதி

வினா எண் 75106—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கொடைக்கானலில் உள்ள அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகக் கல்லூரிக்கு விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

2009 ஜூலை 7]

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகக் கல்லூரிக்கென்று இதுவரை தனிப்பட்ட விடுதி வசதியில்லை. பிற்படுத்தப்பட்ட மாணவிகள் (50 நபர்கள்) தங்குவதற்காகப் பல்கலைக்கழகத்திற்கென்று அரசால் ஒரு விடுதி இயங்கிக் கொண்டு வருகிறது. பல்கலைக்கழக விடுதியிலும் பிற்படுத்தப்பட்டோர் மாணவிகளுக்கென்று ஒதுக்கப்பட்ட விடுதியிலும்தான் கல்லூரி மாணவிகள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். எனவே, அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகக் கல்லூரிக்கென்று சுமார் 100 மாணவிகள் தங்குவதற்கென்று விடுதி கட்டுவதற்கு பல்கலைக்கழகத்தால் முடிவு செய்யப்படும்.

54—

தகவல் மையம்

வினா எண் 90863—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு நகரில் சென்னை பல்கலைக் கழகத்தின் தொலைநிலைக் கல்வி இயக்க தகவல் மையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடந்த 2007-2008 கல்வியாண்டு முதல் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள செங்கல்பட்டு வித்யாசாகர் மகளிர் கல்லூரியில் சென்னைப் பல்கலைக்கழகத்தின் தொலைதூரக் கல்வி நிறுவனத் தகவல் மையத்துடன், மாணவ மாணவிகள் நேரடிச் சேர்க்கை மையமாகவும் இயங்கிக் கொண்டு வருகின்றது.

55—

புதிய பேருந்து நிறுத்தம்

வினா எண் 66412—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2009 ஜூலை 7

(அ) சென்னையிலிருந்து திருக்கழுக்குன்றம் வழியாக கல்பாக்கம் செல்லும் அனைத்துப் பேருந்துகளும் மங்கலம் பேருந்து நிறுத்தத்தில் நின்று செல்ல அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்பொழுது சென்னையிலிருந்து கல்பாக்கம் செல்லும் விரைவுப் பேருந்துகள் செங்கல்பட்டை அடுத்த 15.0 வது கி.மீ-ல் உள்ள திருக்கழுக்குன்றத்தில் நிறுத்தப்படுகிறது. மங்கலம் பேருந்து நிறுத்தம் திருக்கழுக்குன்றம் பேருந்து நிலையத்திலிருந்து 1.0-வது கி.மீ-ல் கல்பாக்கம் செல்லும் வழியில் அமைந்துள்ளது. இந்த பேருந்து நிறுத்தத்தில் விரைவுப் பேருந்துகள் நீங்கலாக புறநகர் மற்றும் நகரப் பேருந்துகள் நின்று செல்கின்றன. சென்னையிலிருந்து திருக்கழுக்குன்றம் வழியாக கல்பாக்கம் செல்லும் விரைவுப் பேருந்துகளுக்கு மங்கலம் கிராமத்தில் கட்டண நிலை இல்லை. எனவே, அனைத்துப் பேருந்துகளையும் மங்கலம் கிராமத்தில் நிறுத்த இயலாத நிலை உள்ளது. எனினும், மங்கலம் கிராமத்தின் வழியாக இயக்கப்படும் புறநகர்ப் பேருந்துகளின் 78 நடைகளும், நகரப் பேருந்துகளின் 40 நடைகளும் மங்கலம் கிராமத்தில் நின்று செல்கின்றன. ஆகவே, மங்கலம் கிராமத்தில் விரைவுப் பேருந்துகள் தவிர்த்து அனைத்துப் பேருந்துகளும் நிறுத்தப்படுகின்றன.

56—

புதிய பேருந்து

வினா எண் 66414—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை வேளச்சேரியிலிருந்து பல்லாவரத்திற்கு புதிதாக பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2009 ஜூலை 7]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் இயக்க எல்லைக்குட்பட்ட பகுதிகள் அனைத்திற்கும் நேரடி பேருந்து வசதிகளை ஏற்படுத்துவது இயலாத ஒன்று. தற்போது வேளச்சேரி, கிண்டி வழியாக பல்வேறு வழித்தடங்களில் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. கிண்டியை அடுத்த பல்லாவரம் சென்றடைய பொதுமக்கள் GST சாலையில் இயங்கும் பேருந்துகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இருப்பினும், வேளச்சேரியிலிருந்து கிண்டி, பல்லாவரம் வழியாக புதிய வழித்தடத்தில் பேருந்துகளை இயக்குவது குறித்து ஏற்கெனவே மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் பரிசீலனையில் உள்ளது. பேருந்துகள் அதிகரிக்கும் போது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

57—

பேருந்து வசதி

வினா எண் 76571—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் வட்டம், மங்கலத்திலிருந்து மறைமலை நகர் வரை, அரசுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மங்கலம்-மறைமலைநகர் தடத்தின் நீளம் 29.0 கி.மீ. ஆகும். இத்தடம் கல்பாக்கத்திலிருந்து திருக்கழுக்குன்றம்-செங்கல்பட்டு-தாம்பரம் வழியாக கோயம்பேடு செல்லும் பிரதான சாலையில் அமைந்துள்ளது. மங்கலம் கிராமம், திருக்கழுக்குன்றம் பேருந்து நிலையத்திலிருந்து கல்பாக்கம் செல்லும் சாலையில் நகரின் எல்லைக்குள் 1.0 கி.மீ. தூரத்திற்குள் அமைந்துள்ளது. இது பேருந்து வசதி பெற்றதாகவே கருதப்படும். கல்பாக்கத்திலிருந்து கோயம்பேட்டிற்கு அரசு போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படும் சாதாரண புறநகர்ப் பேருந்துகளின் 36

[2009 ஜூலை 7

நடைகளும், மங்கலம்-மறைமலைநகர் தடத்தின் வழியாக இயக்கப்பட்டு அங்கு நின்று செல்கின்றன. கல்பாக்கத்திலிருந்து கோயம்பேட்டிற்கு இயக்கப்படும் விரைவுப் பேருந்துகளும் திருக்கழுக்குன்றம் பேருந்து நிலையத்தில் நின்று செல்கிறது. தற்பொழுது மங்கலம்-மறைமலைநகர் தடத்தில் இயக்கப்படும் பேருந்துகளே போதுமானதென கருதப்படுவதால் புதியதாக பேருந்துகள் இயக்க அவசியமில்லை எனக் கருதப்படுகிறது.

58—

பேருந்து வசதி

வினா எண் 86345—திருமதி ராணி வெங்கடேசன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாத்தான்குளம் தொகுதி, திசையன்விளை-கடகுளம்-புத்தன் தருவை, மேட்டுவிளை-பூச்சிக்காடு ஆகிய கிராமங்கள் வழியாக இயக்கப்பட்ட தடம் எண் 25, 106, 107 ஆகிய பேருந்துகளை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தடம் எண் 25, 106 மற்றும் 107 ஆகிய தடப் பேருந்துகள் இயக்கப்பட்ட போது போதுமான பயணிகளின் பயன்பாடு இல்லாததால், சுமார் 8 வருடங்களுக்கும் முன்பாக தடங்களிலிருந்து மாற்றப்பட்டுள்ளன. மேலும் தற்பொழுது அத்தடங்களின் அனைத்துப் பகுதிகளிலும் போதுமான அளவில் பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது.

59—

கூடுதல் பேருந்து

வினா எண் 86905—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர், திருவையாறிலிருந்து திருப்பூந்துருத்தி வழியாக திருக்காட்டுப்பள்ளி வரை காலை மற்றும் மாலை நேரங்களில் பள்ளி மாணவர்களின் நலன் கருதி கூடுதல் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2009 ஜூலை 7]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

திருவையாறு—திருக்காட்டுப்பள்ளி (வழி) கண்டியூர் கீழ/மேல திருப்பூந்துருத்தி, திருவலம்பொழில், நடுக்காவேரி, மணத்திடல், செந்தலை, மைக்கேல்பட்டி தடத்தின் நீளம் 20.0 கி.மீ. ஆகும். தற்போது கும்பகோணம் புறநகர் பேருந்து தடம் எண் 462சி மூலம் கும்பகோணம்—தோகூர் (வழி) பாபநாசம், வீரசிங்கம்பேட்டை, கண்டியூர், திருவையாறு, திருப்பூந்துருத்தி, திருக்காட்டுப்பள்ளி தடத்தில் காலை/மாலை பள்ளி நேரங்களுக்கு ஏற்ப தினசரி 4 நடைகள் கீழ்க்காணும் நேரங்களில் இயக்கப்பட்டு வருகிறது.

திருவையாறு		திருக்காட்டுப்பள்ளி	
சே.நே.	பு.நே.	சே.நே.	பு.நே.
7.45	7.55	8.35	8.50
11.05	11.15	10.15	10.25
17.35	17.40	18.10	18.20
20.15	20.25	19.35	19.45

இப்பேருந்தினைத் தவிர, தஞ்சாவூர் நகர் பேருந்து தடம் எண் A12, B12, C12 மற்றும் A51 ஆகியவைமூலம் தஞ்சாவூர் பழைய பேருந்து நிலையம்-திருக்காட்டுப்பள்ளி (வழி) கண்டியூர், திருப்பூந்துருத்தி தடத்தில் தினசரி 50 நடைகளும், திருவையாறு-கண்டியூர்-தஞ்சாவூர் தடத்தில் 14 நகர் பேருந்துகள்மூலம் 204 நடைகளும் என தினசரி இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், தற்போது பெறப்பட்ட அரசு வழிகாட்டு நெறிமுறை கடிதத்தில் ஏற்கெனவே உள்ள வழித்தடங்களில் கூடுதல் பேருந்துகள் இயக்குவதற்கும் மற்றும் புதிய வழித்தடங்களில் பேருந்துகள் இயக்கப்படுவதற்கும் அரசின் முன்அனுமதியினைப் பெற்ற பின்னரே பேருந்துகளை இயக்கிட வேண்டும் என தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது புதிய வழித்தடங்களிலோ அல்லது ஏற்கெனவே உள்ள வழித்தடங்களில் கூடுதல் அரசுப் பேருந்துகளை இயக்கிடவோ அரசின் அனுமதி ஏதும் இல்லை. கோரியுள்ள தடப்பகுதிகளுக்கு நேரடியாகவும் மற்றும் பகுதி/பகுதியாகவும் போதியளவு மேற்குறிப்பிட்டவாறு பேருந்து வசதி உள்ளது. எனவே, கோரிக்கைத் தடத்தில் தற்போது மேற்குறிப்பிட்ட இச்சூழ்நிலையில் கோரிக்கை நேரங்களுக்கு ஏற்ப கூடுதல் பேருந்து வசதி அளித்திட செயற்குறிப்பு ஏதும் இல்லை.

[2009 ஜூலை 7

60—

கூடுதல் பேருந்து

வினா எண் 86906—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூரிலிருந்து திருக்கருகாவூர் செல்ல கூடுதல் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் பழைய பேருந்து நிலையம்-திருக்கருகாவூர் (வழி) கரந்தை, பள்ளிஅக்ரஹாரம், திட்டை, அன்னப்பன்பேட்டை, நரியலூர், மெலட்டூர் தடத்தின் நீளம் 24.0 கி.மீ. ஆகும். நகர் மற்றும் புறநகர்ப் பேருந்துகள் மூலம் கீழ்க்கண்டவாறு நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

தஞ்சாவூர் நகர் பேருந்துகள் தடம் எண் A34, B34, A41, A48A மற்றும் L74 ஆகியவை மூலம் 44 நடைகளும், தடம் எண் 454B புறநகர் பேருந்துமூலம் 8 நடைகளும் மற்றும் தனியார் புறநகர் பேருந்துமூலம் 8 நடைகளும் என தினசரி 60 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. தற்போது திருக்கருகாவூரில் பாலம் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருவதால், மேற்குறிப்பிட்ட பேருந்துகளின் நடைகள் மாற்று வழித்தடத்தில் இயக்கப்பட்டு திருக்கருகாவூர் சென்றடைகிறது. மேலும், தற்போது பெறப்பட்ட அரசு வழிகாட்டு நெறிமுறை கடிதத்தில் ஏற்கெனவே உள்ள வழித்தடங்களில் கூடுதல் பேருந்துகள் இயக்குவதற்கும் மற்றும் புதிய வழித்தடங்களில் பேருந்துகள் இயக்கப்படுவதற்கும் அரசின் முன் அனுமதியினைப் பெற்ற பின்னரே பேருந்துகளை இயக்கிட வேண்டும் என தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது புதிய வழித்தடங்களிலோ அல்லது ஏற்கெனவே உள்ள வழித்தடங்களில் கூடுதல் அரசுப் பேருந்துகளை இயக்கிடவோ அரசின் அனுமதி ஏதும் இல்லை. எனவே, தற்போது மேற்குறிப்பிட்ட இச்சூழ்நிலையில் கோரிக்கை வழித் தடத்தில் மேலும் கூடுதல் பேருந்து இயக்கிட செயற்குறிப்பு ஏதும் இல்லை.

61—

பேருந்து வசதி

வினா எண் 86908—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2009 ஜூலை 7]

திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூர்-நீடாமங்கலம் வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கூத்தாநல்லூர்-நீடாமங்கலம் (வழி) லெட்சுமாங்குடி, சேகரை, பொதக்குடி, அத்திக்கடை, கொரடாச்சேரி, கிளரியம் மற்றும் ஒளிமதி தடத்தின் நீளம் 24.0 கி.மீ ஆகும். கோரிக்கை வழித் தடத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் பகுதி/பகுதியாக கீழ்க்கண்டவாறு கழகப் பேருந்து வசதி உள்ளது:

மன்னார்குடி-திருவாரூர் (வழி) கொரடாச்சேரி மற்றும் மன்னார்குடி-கொரடாச்சேரி தடத்தில் கழகப் புறநகர்ப் பேருந்துகள் தடம் எண் 365, 367 மற்றும் 365A ஆகியவைமூலம் 32 நடைகளும், கும்பகோணம்-வடபாதிமங்கலம் (வழி) குடவாசல், கொரடாச்சேரி, லெட்சுமபாங்குடி, கூத்தாநல்லூர் தடத்தில் தடம் எண் 461 மூலம் 8 நடைகளும் மற்றும் திருவாரூர்-நீடாமங்கலம் (வழி) கொரடாச்சேரி தடத்தில் திருவாரூர் புறநகர் பேருந்து தடம் 103D மூலம் தினசரி 16 நடைகளும் என இயக்கப்பட்டு வருகின்றன. இதேபோன்று கும்பகோணம்-வடபாதிமங்கலம் வழித்தடத்தில் தனியார் புறநகர் பேருந்து ஒன்றும் இயக்கப்பட்டு வருகிறது. கூத்தாநல்லூரிலிருந்து கொரடாச்சேரி வரை மூன்று மினிப் பேருந்துகள் மூலம் தினசரி 54 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேற்குறிப்பிட்டவாறு பகுதி/பகுதியாக கழகம் மற்றும் தனியார் மற்றும் தனியார் மினிப் பேருந்து வசதி உள்ளமையாலும், கோரிக்கை வழித் தடத்தில் புதிய வழித்தடப் பேருந்து வசதி அளித்தாலும் போதிய மக்கள் பயன்பாடு மற்றும் வருவாயும் அமைந்திட வாய்ப்பில்லை. மேலும் தற்போது பெறப்பட்ட அரசு வழிக்காட்டு நெறிமுறை கடிதத்தில் ஏற்கெனவே உள்ள வழித்தடங்களில் கூடுதல் பேருந்துகள் இயக்குவதற்கும் மற்றும் புதிய வழித்தடங்களில் பேருந்துகள் இயக்கப்படுவதற்கும் அரசின் முன் அனுமதியினைப் பெற்ற பின்னரே பேருந்துகளை இயக்கிட வேண்டும் என தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது புதிய வழித்தடங்களில் அரசுப் பேருந்து வசதி அளித்திட அரசின் அனுமதி ஏதும் இல்லை. எனவே, தற்போது மேற்குறிப்பிட்ட இச்சூழ்நிலையில் கோரிக்கை வழித் தடத்தில் புதிய வழித்தட அரசுப் பேருந்து இயக்கிட செயற்குறிப்பு ஏதும் இல்லை.

[2009 ஜூலை 7

62—

தனிப் பிரிவு

வினா எண் 51398—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, கோட்டூர் அரசு மருத்துவமனையில் காசநோய் சிகிச்சைக்கு தனிப் பிரிவு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருத்தியமைக்கப்பட்ட தேசிய காசநோய் தடுப்புத் திட்டத்தின் வழிகாட்டுதலின்படி காசநோயாளிகளை உள் நோயாளிகளாக அனுமதிக்க வேண்டியதில்லை. வால்பாறை தொகுதி, கோட்டூர் அரசு மருத்துவமனையில் காசநோயாளிகளுக்கென பரிசோதனையும், சிகிச்சையும் நேரிடை குறுகிய கால சிகிச்சை மூலம் (Dots) தொடர்ந்து 6 மாதம் முதல் 8 மாதங்கள் வரை காசநோய் மருந்துகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. எனவே, கோட்டூர் அரசு மருத்துவமனையில் காசநோயாளிகளுக்கான தனி உள் படுக்கை வசதிகள் தேவையில்லை. எனினும் மிகவும் ஆபத்தான நிலையில் உள்ள காசநோயாளிகளை கோட்டூர் அரசு மருத்துவமனையில் உள்ள பொது வார்டில் அனுமதித்து சிகிச்சை பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

63—

தொழிற்பேட்டை

வினா எண் 68964—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதியில் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2009 ஜூலை 7]

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் 43 தொழிற்பேட்டைகளை நிறுவியும் 35 அரசு தொழிற்பேட்டைகளை முகமை அடிப்படையில் நிர்வகித்தும் வருகின்றது. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சர் செய்த அறிவிப்பினையொட்டி, தமிழ்நாடு முழுவதும் 22 புதிய தொழிற்பேட்டைகளை நிறுவுவதற்கு அரசு தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம்மூலம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

2. தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் நிறுவும் தொழிற்பேட்டைகளில் மொத்தப் பரப்பளவில் 30 விழுக்காடு நிலம், குறுதொழில் நிறுவனங்கள் நிறுவுவதற்காக ஒதுக்கலாம் என முடிவு செய்யப்பட்டுள்ளது.

3. சேலம் மாவட்டத்தில் ஏற்கெனவே கீழ்க்கண்ட இடங்களில் தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன:-

வ. எண்	தொழிற் பேட்டையின் பெயர்	தொடங்கப் பட்ட வருடம்	மொத்த மனைகள்		காலியாக உள்ளவை	
			மனைகள்	தொழிற் கூடங்கள்	மனைகள்	தொழிற் கூடங்கள்
1.	சேலம்	1960	31	34	-	-
2.	மேட்டூர்	1965	141	39	-	-
3.	வீரபாண்டி	1992	11	10 கு.தொ.கூ.	2	-
4.	எடப்பாடி	1980	-	10 கு.தொ.கூ	-	-
5.	கருப்பூர்	2007	154	-	-	-

4. எனினும், போதுமான நிதி ஆதாரங்களோடும் தொழிற்திட்டங்களுடனும் தொழில் துவங்க ஆர்வமுள்ள குறைந்தபட்சம் 20-க்கும் குறையாமல் தொழில் முனைவோர் திரும்பப் பெறாத ஒப்புவிப்புத்

தொகையுடன் முன்வந்தால் மாவட்ட ஆட்சியாளர் (ம) பொது மேலாளர், மாவட்டத் தொழில் மையம் ஆகியோருடன் கலந்தாலோசித்து புதிதாகத் தொழிற்பேட்டை அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

64—

தொழிற்பேட்டை

வினா எண் 68973—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதியில் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் 43 தொழிற்பேட்டைகளை நிறுவியும் 35 அரசு தொழிற்பேட்டைகளை முகமை அடிப்படையில் நிர்வகித்தும் வருகின்றது. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் செய்த அறிவிப்பினையொட்டி, தமிழ்நாடு முழுவதும் 22 புதிய தொழிற்பேட்டைகளை நிறுவுவதற்கு அரசு தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் மூலம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

2. தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் நிறுவும் தொழிற்பேட்டைகளில் மொத்தப் பரப்பளவில் 30 விழுக்காடு நிலம், குறுதொழில் நிறுவனங்கள் நிறுவுவதற்காக ஒதுக்கலாம் என முடிவு செய்யப்பட்டுள்ளது.

3. சேலம் மாவட்டத்தில் ஏற்கெனவே கீழ்க்கண்ட இடங்களில் தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன:

2009 ஜூலை 7]

வ. எண்	தொழிற் பேட்டையின் பெயர்	தொடங்கப் பட்ட வருடம்	மொத்த மனைகள்		காலியாக உள்ளவை	
			மனைகள்	தொழிற் கூடங்கள்	மனைகள்	தொழிற் கூடங்கள்
1.	சேலம்	1960	31	34	—	—
2.	மேட்டூர்	1965	141	39	2	—
3.	வீரபாண்டி	1992	11	10 கு.தொ.கூ.	—	—
4.	எடப்பாடி	1980	—	10 கு.தொ.கூ.	—	—
5.	கருப்பூர்	2007	154	—	—	—

எனவே, எடப்பாடி தொகுதியில் மேலும் புதிய தொழிற்பேட்டை அமைக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

5. எனினும், போதுமான நிதி ஆதாரங்களோடும் தொழிற்திட்டங்களுடனும் தொழில் துவங்க, ஆர்வமுள்ள குறைந்த பட்சம் 20-க்கும் குறையாமல் தொழில் முனைவோர் திரும்பப் பெறாத ஒப்புவிப்புத் தொகையுடன் முன்வந்தால் மாவட்ட ஆட்சியாளர் (ம) பொது மேலாளர், மாவட்டத் தொழில் மையம் ஆகியோருடன் கலந்தாலோசித்து புதிதாகத் தொழிற்பேட்டை அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

65—

கால்நடை கிளை நிலையம்

வினா எண் 69840—திரு. ராம. சுப்புராம்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமயம் தொகுதி, பொன்னமராவதி ஒன்றியம், மேல்த்தானியத்தில் கால்நடை கிளை நிலையம் துவக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், திருமயம் தொகுதி, அறந்தாங்கி கோட்டம், பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மேல்த்தானியம் கிராமத்தில் கால்நடைகளின் அலகுகள் குறைவாக உள்ளதாலும், சடையம்பட்டி கால்நடை மருந்தகம் மற்றும் ஒலியமங்கலம் கால்நடை கிளை நிலையம் ஆகியவற்றின்மூலம் அளிக்கப்படும் சிகிச்சைப் பணிகள் போதுமானதாகக் கருதப்படுவதாலும் மேல்த்தானியம் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

66—

கால்நடை கிளை நிலையம்

வினா எண் 69842—திரு. ராம. சுப்புராம்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் தொகுதி, பொன்னமராவதி ஒன்றியம், திருக்களம்பூரில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) திருக்களம்பூர் கிராமத்தில் உள்ள கால்நடைகளின் அலகுகள் குறைவாக உள்ளதாலும், பொன்னமராவதி கால்நடை மருத்துவமனை, வேந்தன்பட்டி கால்நடை கிளை நிலையம்மூலம் அளிக்கப்படும் சிகிச்சைப் பணிகள் போதுமானதாக இருப்பதாலும், திருக்களம்பூர் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

2009 ஜூலை 7]

67—

தரம் உயர்த்தல்

வினா எண் 69963—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் சாவடிபாளையத்தில் உள்ள கால்நடை கிளை பார்வை நிலையத்தை கால்நடை மருந்தகமாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) சாவடிபாளையம் கிராமத்தில் இணைப்பு தம்பதியினர் (LWC) முதலுதவி பணிகள் செய்து வருகின்றனர். வாரம் இரண்டு நாட்கள் பொன்னன்காளிவலசு கால்நடை ஆய்வாளரைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டு வரும் சிகிச்சைப் பணிகளே போதுமானதாகக் கருதப்படுகிறது. மேலும் இக்கிராமத்தில் குறைந்த அளவே கால்நடைகளின் அலகுகள் இருப்பதால் சாவடிபாளையம் கிராமத்தில் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

68—

நடுத்தரத் தொழில் வளாகம்

வினா எண் 70334—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதியில் நடுத்தரத் தொழில் வளாகம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

தமிழகத்தில் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் 43 தொழிற்பேட்டைகளை நிறுவியும் 35 அரசு தொழிற்பேட்டைகளை முகமை அடிப்படையில் நிர்வகித்தும் வருகின்றது. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு ஊரக தொழில் அமைச்சர் அவர்கள் செய்த அறிவிப்பினையொட்டி, தமிழ்நாடு முழுவதும் 22 புதிய தொழிற்பேட்டைகளை நிறுவுவதற்கு தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் மூலம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

2. தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் நிறுவும் தொழிற்பேட்டைகளில் மொத்தப் பரப்பளவில் 30 விழுக்காடு நிலம், குறு தொழில் நிறுவனங்கள் நிறுவுவதற்காக ஒதுக்கலாம் என முடிவு செய்யப்பட்டுள்ளது.

3. மேல்மலையனூர் தொகுதியில் நடுத்தரத் தொழில் வளாகம் அமைக்கும் கருத்துரு எதுவும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

விழுப்புரம் மாவட்டத்தில் ஏற்கெனவே கீழ்க்கண்ட இடங்களில் தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன:

வ. எண்	தொழிற் பேட்டையின் பெயர்	தொடங்கப் பட்ட வருடம்	மொத்த மனைகள்		காலியாக உள்ளவை	
			மனைகள்	தொழிற் கூடங்கள்	மனைகள்	தொழிற் கூடங்கள்
1.	ஆசானூர்	2006	155	—	97	—
2.	வெண்மணி ஆத்தூர்	2007	32	—	23	—

4. எனினும், போதுமான நிதி ஆதாரங்களோடும் தொழிற் திட்டங்களுடனும் தொழில் துவங்க ஆர்வமுள்ள, குறைந்தபட்சம் 20-க்கும் குறையாமல் தொழில் முனைவோர்கள் திரும்பப் பெறாத ஒப்புவிப்புத் தொகையுடன் முன்வந்தால், மாவட்ட ஆட்சியர் (ம) பொது மேலாளர், மாவட்டத் தொழில் மையம் ஆகியோருடன் கலந்தாலோசித்து புதிதாகத் தொழிற்பேட்டை அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

2009 ஜூலை 7]

69—

தொழில் முனைவோர் மையம்

வினா எண் 71560—திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை கப்பலூர் பகுதியில் பெண்கள் தொழில் முனைவோருக்கான மையத்தை விரைவில் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை கப்பலூர் பகுதியில் பெண்கள் தொழில் முனைவோருக்கான மையம் 18.9.05 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டு, அதில் 70 மேம்படுத்தப்பட்ட மனைகள் உருவாக்கப்பட்டு, 65 மகளிர் தொழில் முனைவோர்களுக்கு ஒதுக்கீட்டு ஆணைகள் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தால் ஏற்கெனவே வழங்கப்பட்டுவிட்டன. ஒதுக்கீடுகள் பெற்ற மகளிர் தொழில் முனைவோர்கள் தொழில் தொடங்குவதற்குத் தேவையான பணியினைத் துவக்கியுள்ளார்.

70—

கால்நடை மருத்துவக் கல்லூரி

வினா எண் 75746—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதியில் கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) காவேரிப்பட்டினம் தொகுதியில் கால்நடை மருத்துவக் கல்லூரி துவக்கும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) எழாது.

71—

கால்நடை மருத்துவக் கல்லூரி

வினா எண் 75824—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு தொகுதியில் கால்நடை மருத்துவக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) ஆற்காடு தொகுதியில் கால்நடை மருத்துவக் கல்லூரி துவக்கும் திட்டம் தற்சமயம் ஏதும் இல்லை.

(ஆ) எழாது.

72—

படித்துறை, செயற்கை நீர்விழ்ச்சி

வினா எண் 65372—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் அணை கீழ்ப்பகுதியான முனியப்பன் கோயில், காவேரி பாலம் தூக்கணாம்பட்டி பகுதிகளில் படித்துறையும்

2009 ஜூலை 7]

மற்றும் மேட்டூர் அணைப் பூங்காவில் செயற்கை நீர்வீழ்ச்சியும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் அணை கீழ்ப்பகுதியான முனியப்பன்கோயில், காவேரி பாலம் தூக்கணாம்பட்டி பகுதிகளில் படித்துறையும் மற்றும் மேட்டூர் அணைப் பூங்காவில் செயற்கை நீர்வீழ்ச்சியும் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது இத்துறையின் பரிசீலனையில் இல்லை.

73—

சுற்றுலாத் தலம்

வினா எண் 69496—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், சிங்கவரம் கிராமத்திலுள்ள ரெங்கநாதர் கோயிலை சீரமைத்து சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

அரசு எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. சுற்றுலாத் தலங்களின் முக்கியத்துவம் மற்றும் அங்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு அங்கு அடிப்படை வசதிகள் மட்டுமே செய்து தருகிறது.

விழுப்புரம் மாவட்டம், சிங்கவரம் கிராமத்திலுள்ள ரெங்கநாதர் கோயிலில் அடிப்படை வசதிகள் செய்து தரும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2009 ஜூலை 7

74—

சுற்றுலாத் தலம்

வினா எண் 69498—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், செஞ்சிக் கோட்டையை சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

அரசு எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. சுற்றுலாத் தலங்களின் முக்கியத்துவம் மற்றும் அங்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு அங்கு தேவையான அடிப்படை வசதிகள் மட்டுமே செய்து வருகிறது.

விழுப்புரம் மாவட்டம், செஞ்சிக் கோட்டையை மேம்பாடு செய்யும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்பொழுது இல்லை.

75—

கட்டட வசதி

வினா எண் 73422—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, நெசவாளர் காலனி மற்றும் நீதிமன்ற வளாகம் அருகில் இயங்கும் பத்திரப் பதிவு அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாவட்டத் தலைநகரங்களில் பதிவுத் துறை ஒருங்கிணைந்த வளாகம் கட்ட அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது.

2009 ஜூலை 7]

முதற்கட்டமாக வேலூர், கடலூர், மதுரை, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டத் தலைநகரங்களில் ஒருங்கிணைந்த வளாகம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தருமபுரி இணை சார்பதிவாளர் அலுவலகம்-2 வளாகத்தில் துறைக்குச் சொந்தமான 22,080 சதுரடி இடம் உள்ளது. அதில் 19,583 சதுரடி இடத்தில் ஒருங்கிணைந்த வளாகம் கட்ட அரசின் நிதி நிலைக்கேற்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

76—

விடுதி

வினா எண் 77336—திருமதி ரா. லீமா றோஸ்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவட்டாறு தொகுதி, மாத்தூர் தொட்டிப்பாலம் அருகில் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

திருவட்டாறு தொகுதி, மாத்தூர் தொட்டிப்பாலம் அருகில் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு விடுதி அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

77—

மேம்பாட்டுப் பணிகள்

வினா எண் 77337—திருமதி ரா. லீமா றோஸ்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவட்டாறு தொகுதி, உலகப் புகழ்பெற்ற சிதறால் ஜெயின் மலைக்கோயிலைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதியில் அமைந்துள்ள உலகப் புகழ்பெற்ற சிதறால் மலைக்கோயிலைச் சுற்றி மேம்பாட்டுப்

பணிகள் மேற்கொள்ள 2005-2006 ஆம் நிதியாண்டில் மைய அரசு சுற்றுலா மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ. 30.00 இலட்சம் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியருக்கு வழங்கி, மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

78—

சுற்றுலாத் தலம்

வினா எண் 79975—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நாமக்கல் மாவட்டத்திலுள்ள நாமக்கல் மலைக்கோட்டையை சுற்றுலாத் தலமாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

அரசு எந்தவொரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு அங்கு அடிப்படை வசதிகள் மட்டுமே செய்து தருகிறது.

நாமக்கல் மலைக்கோட்டையை மேம்படுத்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்பொழுது இல்லை.

79—

நான்கு வழிச் சாலை

வினா எண் 76794—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செங்கல்பட்டு தொகுதி, சிங்கப்பெருமாள் கோவில்-திருப்பெரும்புதூர் சாலையை நான்கு வழிச் சாலையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு தொகுதியில் சிங்கப்பெருமாள்கோவில்-திருப்பெரும்புதூர் சாலையை 4 வழிச்சாலையாக மாற்றி அமைக்கும் பணி

2009 ஜூலை 7]

ரூ. 113.90 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு சாலை கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் கடந்த 30-6-2008 முதல் மேற்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

80—

மேம்பாலம்

வினா எண் 76797—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டம், ஒரகடம் கூட்டு சாலை சந்திப்பில் மேம்பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் மாவட்டம், ஒரகடம் கூட்டுச்சாலை சந்திப்பில் மேம்பாலம் கட்டும் பணி ஒரகடம் தொழிற்பூங்கா சாலை கட்டமைப்பு திட்டத்தின் கீழ் ரூ. 17 கோடி மதிப்பீட்டில் அனுமதிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கான வடிவமைப்புகள் இறுதி செய்யப்படும் நிலையில் உள்ளன. அதன் பின்னர் இப்பணிக்கான மதிப்பீடு தயாரித்து விரைவில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

81—

ஆழ்குழாய் வசதி

வினா எண் 4880—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை மலைப் பகுதியில் குடியிருக்கும் சங்கரன்குடி, மலை சாதி மக்களின் குடியிருப்புப் பகுதிக்கு ஆழ்குழாய் போட்டுத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2009 ஜூலை 7

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை மலைப்பகுதியில் குடியிருக்கும் சங்கரன்குடி மலை சாதி மக்களின் குடியிருப்புப் பகுதிக்கு ஆழ்குழாய் போட்டுத் தர சாத்தியக்கூறு இல்லை. ஏனெனில், வால்பாறை மலைப் பகுதியில் உள்ள மானாம்பள்ளி வனச்சரகத்தில் உள்ள சங்கரன்குடி மலைவாழ் குடியிருப்பு மலையின் அடிப்பகுதியில் உள்ளதால் சாலை வசதியற்ற ஒரு பகுதியாக உள்ளது. ஆகவே ஆழ்குழாய்க் கிணறு அமைக்க வாகனத்தை சங்கரன்குடி மலைவாழ் மக்கள் குடியிருப்புக்கு எடுத்துச் செல்ல இயலாத நிலை உள்ளது. எனவே, மேற்படி பகுதியில் தற்போது ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

82—

தொழிற்பயிற்சி நிலையம்

வினா எண் 48538—திரு. த. தியோடர் ரெஜினால்டு: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பத்மனாபபுரத்தில் ஆதி திராவிடர் நலத் துறை சார்பாக தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

தாட்கோ மூலம் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய ஆதி திராவிட கிறித்துவ இளைஞர்கள் பயனடையும் வகையில் அரசு அங்கீகரிக்கப்பட்ட தொழிற்பயிற்சி நிறுவனங்கள்மூலம் பல்வேறு தொழிற்பயிற்சிகள் மாவட்ட அளவில் அளிக்கப்பட்டு வருகின்றன. பத்மனாபபுரத்தில் தாட்கோ மூலம் தனியே தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் பிரேரணை ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

2009 ஜூலை 7]

83—

பட்டா வழங்கல்

வினா எண் 58665—திரு. பெ. காமராஜ்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கிருஷ்ணராயபுரம் தொகுதி, தாந்தோனி ஒன்றியம், வெள்ளியனை ஊராட்சியில் தாழ்த்தப்பட்ட ஆதி திராவிடர் மக்களுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

கரூர் மாவட்டம், கரூர் வட்டம், வெள்ளியனை ஊராட்சியில் உள்ள நிலங்கள் அரசு வழிகாட்டிப் பதிவேட்டின்படி விலை குறைவாகவும், மார்க்கெட் நிலவரப்படி விலை கூடுதலாகவும் உள்ளது. ஏற்கெனவே மேற்படி ஊராட்சியில் ஆதி திராவிட மக்களுக்கு 10 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ள நிலையில், மேற்படி ஊராட்சிக்கு மீண்டும் பட்டா வழங்கக்கோரி விண்ணப்பங்கள் பெறப்பட்டால் பரிசீலனை செய்யப்படும்.

84—

ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி

வினா எண் 71701—திரு. சபா. இராஜேந்திரன்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நெல்லிக்குப்பம் தொகுதி, ஆதி திராவிட இளைஞர்களுக்கு இலவச ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2008-2009 ஆம் ஆண்டிற்கு ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய ஆதி திராவிட கிறித்துவ இளைஞர்கள் பயனடையும் வகையில் பல்வேறு தொழிற்பயிற்சிகளுக்கு மாநில சிறப்பு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

நிதியிலிருந்து ரூ. 25.00 கோடிக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றுள் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி, அரசு ஓட்டுநர் பயிற்சி நிலையம் வழியாக, அந்தந்தப் பகுதிகளில் (Regional Level) நடத்தப்பட்டு வருகிறது. எனவே, நெல்லிக்குப்பம் தொகுதி, ஆதி திராவிடர் இளைஞர்களுக்கென தனியே இலவச ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

85—

இலவச தொகுப்பு வீடுகள்

வினா எண் 18502—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, மேட்டூர் நகராட்சியிலுள்ள மீனவர்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2005-2006 ஆம் ஆண்டு மாநில அரசின் நிதியுதவியுடன்கூடிய மீனவர் இலவச வீடு கட்டும் திட்டத்தின்கீழ் மேட்டூர் அணை மீனவ கூட்டுறவு விற்பனைச் சங்க உறுப்பினர்களுக்கு 50 வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் மேட்டூர் நகராட்சிப் பகுதியில் உள்ளவர்கள் எவரும் இல்லை. 2006-2007 ஆம் ஆண்டு மாநில அரசின் மீனவர் இலவச வீடு கட்டும் திட்டத்தில் மேட்டூர் அணை மீனவ கூட்டுறவுச் சங்கத்திற்கு 239 வீடுகள் ஒதுக்கீட்டில் 2 பயனாளிகள் மேட்டூர் நகராட்சிப் பகுதியைச் சார்ந்தவர்களாவர்.

86—

மீன் விற்பனை

வினா எண் 49981—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் உள்ள சோலையாறு அணை, ஆழியாறு அணையில் பிடிக்கும் மீன்களை வெளிச் சந்தையில் விற்பதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2009 ஜூலை 7]

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் சோலையாறு அணையில் பிடிக்கப்படும் மீன்கள் உள்ளூர் மக்களுக்கு துறை நிர்ணயிக்கும் விலையில் விற்பனை செய்யப்படுகிறது. ஆழியாறு அணையில் பிடிக்கப்படும் மீன்கள் ஆழியாறு பகுதியிலுள்ள மக்களுக்கு தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழக மீன் விற்பனை அங்காடி மூலம் விற்பனை செய்யப்படுகிறது. எனவே சோலையாறு அணை, ஆழியாறு அணையில் பிடிக்கப்படும் மீன்கள் உள்ளூர் தேவைக்கே போதுமானதாக இருப்பதால் இங்கு பிடிக்கப்படும் மீன்களை வெளிச் சந்தையில் விற்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

87—

மீன் விற்பனை அனுமதி

வினா எண் 56677—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை தொகுதி, சோலையாறு அணையில் மீன்பிடித்து விற்பதற்கு அனுமதி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சோலையாறு அணையில் மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு பங்கு மீன்பிடிப்பு செய்திட அனுமதி வழங்கப்படுகிறது. நாளொன்றுக்கு பிடிக்கப்படும் மீன்களில் 50 சதவீதம் துறை பங்கினை, துறை நிர்ணயிக்கும் விலையில் பொதுமக்களுக்கும், மீனவர்களின் 50 சதவீதம் பங்கினை பொதுமக்களுக்கும் மற்றும் வியாபாரிகளுக்கும் மீனவர்கள் விற்பனை செய்து வருகின்றனர்.

[2009 ஜூலை 7

88—

வெளி மாநில விற்பனை

வினா எண் 58116—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமேஸ்வரம் பகுதியில் பேச்சாளை மீன்களை அரசே கொள்முதல் செய்து வெளிமாநிலங்களில் விற்பனை செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் மீன் விற்பனை செயல்பாடுகள் அண்டை மாநிலங்களில் செயல்பாட்டில் இல்லாத நிலையிலும், பேச்சாளை மீன்கள் ஆண்டுதோறும் கிடைப்பதற்கு வாய்ப்பு இல்லாததாலும் தற்சமயம் இத்திட்டத்தை மீன் வளர்ச்சிக் கழகம் இலாபகரமாகவும் நிறைவுடனும் செயல்படுத்திட வாய்ப்புகள் குறைவு என்பதால் இராமேஸ்வரம் பகுதியில் பேச்சாளை மீன்களை அரசே கொள்முதல் செய்து வெளி மாநிலங்களில் துறை மூலமோ அல்லது மீன்வளர்ச்சிக் கழகம் மூலமோ விற்பனை செய்ய இயலாது.

89—

மீன் குளிரூட்டும் நிலையம்

வினா எண் 61349—திரு. பி. பலராமன்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொன்னேரி தொகுதி, பழவேற்காடு பகுதியில் மீன் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

பழவேற்காடு பகுதியில் அன்றாடம் பிடிக்கப்படும் மீன்கள் மீன் இறங்கு தளத்தில் விற்பனை செய்யப்பட்டவை போக மீதமுள்ளவை அருகிலுள்ள கிராமங்களுக்கு மீன் வியாபாரிகள்மூலம் எடுத்துச் செல்லப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. மீன்கள் அதிகம் கிடைக்கும் காலங்களில்

2009 ஜூலை 7]

பனிக்கட்டி உபயோகப்படுத்தி வேன்கள் மூலம் சென்னை மற்றும் இதர பகுதிகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. எனவே, பழவேற்காடு பகுதியில் மீன் குளிரூட்டும் நிலையம் அமைக்கும் திட்டம் எதுவும் தற்போது அரசிடம் இல்லை.

90—

இலவச தொகுப்பு வீடுகள்

வினா எண் 69722—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேட்டூர் தொகுதி, காவேரிபுரம் ஊராட்சி, கீழ்கோட்டையூர், மேல்கோட்டையூர் பகுதியில் வசிக்கும் மேட்டூர் அணையில் மீன்பிடி உரிமம் பெற்றுள்ள மீனவர்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேட்டூர் தொகுதி, காவேரிபுரம் ஊராட்சி, கீழ்கோட்டையூர், மேல்கோட்டையூர் பகுதியில் வசிக்கும் மேட்டூர் அணையில் மீன்பிடி உரிமம் பெற்றுள்ள மீனவர்களுக்கு அரசாணை (டி) எண் 226, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் (மீன் 3) துறை, நாள் 26-7-2007-ன்படி 2006-2007 ஆம் ஆண்டு மீனவர் இலவச வீடு கட்டும் திட்டத்தின்கீழ் 14 வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

மேல்கோட்டையூர்

1.	*ரங்கசாமி, த/பெ. மாது*	-	*உ.எண் 2381*
2.	*மாதேஸ் த/பெ. ராமசாமி*	-	*உ.எண் 2376*

கீழ்கோட்டையூர்

3.	*பொன்னப்பன் த/பெ. செம்பாக கவுண்டர்*	-	*உ.எண் 617*
4.	*பரமசிவம் த/பெ. முனுசாமி*	-	*உ.எண் 852*
5.	*தனபால் த/பெ. மாது*	-	*உ. எண் 2198*

6.	மாரியப்பன் த/பெ. மாது	-	உ. எண் 2173
7.	குண்டன் (எ) அருணாச்சலம் த/பெ. பொன்னப்பகவுண்டர்	-	உ.எண் 1221
8.	மாது த/பெ. முனுசாமி	-	உ.எண் 1171
9.	பாக்கியம், த/பெ. பழனிச்சாமி	-	உ.எண் 2290
10.	அன்பழகன், த/பெ. தம்மண்ணன்	-	உ.எண் 1636
11.	நஞ்சப்பன், த/பெ. மாரப்பன்	-	உ.எண் 924
12.	கோவிந்தசாமி, த/பெ. சின்னாக் கவுண்டர்	-	உ.எண் 2782
13.	மாரிமுத்து, த/பெ. பழனியப்பன்	-	உ.எண் 2868
14.	தங்கவேலு, த/பெ. நஞ்சப்பன்	-	உ.எண் 1897

மேலும் அரசாணை எண் 54, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் (மீன்3) துறை, நாள் 26-7-2007-ன்படி 2005-2006 ஆம் ஆண்டு மீனவர் இலவச வீடு கட்டும் திட்டத்தின்கீழ் மேல்கோட்டையூரைச் சார்ந்த திரு. அண்ணாதுரை, த/பெ. லிங்கப்பன் உ. எண் 2536 என்பவருக்கு ஒரு வீடு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேட்டூர் தொகுதிக்குட்பட்ட மேல்கோட்டையூர் மற்றும் கீழ்க்கோட்டையூரைச் சார்ந்த 15 நபர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வீடுகளில் 6 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன. 2 வீடுகளின் கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது. மீதமுள்ள 7 வீடுகளின் பயனாளிகள் கட்டுமானப் பணியினைத் துவக்கவில்லை. மேற்படி 2005-2006 மற்றும் 2006-2007 ஆம் ஆண்டுகளுக்கான மீனவர் இலவச வீடு கட்டும் திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட வீடுகள் பயனாளிகள் மூலமாக கட்டவும், கட்டுமானப் பணி நிலைக்கேற்ப தொகை விடுவித்திடும் நடைமுறையின்கீழ் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.

91—

மீன்பிடி தொழில்நுட்பப் பயிற்சி மையம்

வினா எண் 75690—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகாரில் நவீன மீன்பிடி தொழில் நுட்பப் பயிற்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2009 ஜூலை 7]

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினத்தில் மீன்துறைமூலம் நடத்தப்படும் மீனவர் பயிற்சி நிலையம் செயல்பட்டு வருகிறது. அப்பயிற்சி நிலையத்தில் நவீன முறை மீன்பிடிப்புப் பயிற்சி நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த மீனவ இளைஞர்களுக்கு கற்றுத் தரப்படுகிறது. பூம்புகாரைச் சேர்ந்த மீனவ இளைஞர்களும் இப்பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறலாம். எனவே, இந்நிலையில் நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகாரில் தனியாக நவீன மீன்பிடி தொழில்நுட்பப் பயிற்சி மையம் துறைமூலம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

92—

கட்டட வசதி

வினா எண் 65034—திரு. பெ. சு. விஜயகுமார்: *மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) போளூர் தொகுதி, திருசூர் ஊராட்சி, மதுரா எழுவாம்பாடி மற்றும் ஏரிக்குப்பம் கிராமங்களிலுள்ள மகளிர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) போளூர் தொகுதி, திருசூர் ஊராட்சி, எழுவாம்பாடி மகளிர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் தற்போது 21 உறுப்பினர்கள் மூலமாக சராசரி நாளொன்றுக்கு சுமார் 180 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. இச்சங்கத்திற்குச் சொந்தமான காலிமனை ஏதுமில்லாததாலும் நிதி ஆதாரம் இல்லாததாலும் சொந்தக் கட்டடம் கட்ட வாய்ப்பில்லை.

ஏரிக்குப்பம் மகளிர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் தற்போது, 45 உறுப்பினர்கள் மூலமாக நாளொன்றுக்கு சுமார் 230 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. இச்சங்கத்திற்குச் சொந்தமான காலிமனை ஏதுமில்லாததாலும், நிதி ஆதாரம் இல்லாததாலும், சொந்தக் கட்டடம் கட்ட வாய்ப்பில்லை.

[2009 ஜூலை 7

93—

பால் கூட்டுறவுச் சங்கம்

வினா எண் 74387—திரு. செ. சின்னச்சாமி: *மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மருங்காபுரி தொகுதி, வலையப்பட்டியில் பால் கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை தாலுகா, மருங்காபுரி தொகுதியில் உள்ள வலையப்பட்டி பகுதியில் உற்பத்தியாகும் பால், 4 கி.மீ தூரத்தில் செயல்பட்டுவரும் டி.ஆர்.டி. 985 பண்ணான்கொம்பு என்ற பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது. இச்சங்கத்தின் விவகார எல்லையில், வலையப்பட்டி கிராமம் சேர்க்கப்பட்டு, விவகார எல்லையில் உள்ளதால், பண்ணான்கொம்பு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் விவகார எல்லையிலிருந்து வலையப்பட்டி கிராமத்தினை நீக்கம் செய்வதற்கு உரிய துணை விதி திருத்தம் செய்து, வலையப்பட்டி கிராமத்தில் புதிய பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் மார்ச் 2009-க்குள் பதிவு செய்யப்படும்.

94—

பால் உற்பத்தியாளர் சங்கம்

வினா எண் 74431—திரு. எம்.ஆர். சுந்தரம்: *மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆத்தூர் தொகுதி, மேற்கு ராஜாபாளையம் ஊராட்சி, ஈச்சங்காடு, ஆலம்பட்டி பகுதிக்கு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — வாய்மையே வெல்லும் — TRUTH ALONE TRIUMPHS

2009 ஜூலை 7]

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆத்தூர் தொகுதிக்குட்பட்ட, மேற்கு ராஜாபாளையம் ஊராட்சியில் உள்ள ஈச்சங்காடு கிராமத்தில் எஸ்.எம்.டி. 682 ஈச்சங்காடு என்ற பெயரில் 21-09-2003-ல் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் பதிவு செய்யப்பட்டு தற்போது நாளொன்றுக்கு சராசரியாக 260 லிட்டர் பால் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

ஆலம்பட்டி கிராமத்தில் ஈ.டி.920 என்ற பெயரில் 26-02-2007-ல் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் பதிவு செய்யப்பட்டு, தற்போது நாளொன்றுக்கு சராசரியாக 200 லிட்டர் பால் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. எனவே, மேற்கூறிய இரண்டு கிராமங்களிலும் முன்னரே பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

95—

கூட்டுறவுச் சங்கக் கட்டடம்

வினா எண் 74432—திரு. எம்.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதி, சொக்கநாதபுரம் மற்றும் வீரக்கவுண்டனூர் ஆகிய ஊராட்சிகளிலுள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆத்தூர் தொகுதி, சொக்கநாதபுரம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் 17-6-2005 ஆம் ஆண்டிலிருந்து செயலிழந்த நிலையில் உள்ளதாலும், இச்சங்கத்தைப் புதுப்பிப்பதற்கு சங்க உறுப்பினர்கள் ஆர்வமில்லாமல் இருப்பதாலும், நிதி ஆதாரம் இல்லாததாலும் கட்டடம் கட்ட வாய்ப்பில்லை.

வீரக்கவுண்டனூர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான அடிமனை ஏதுமில்லாததாலும், நிதி ஆதாரம் இல்லாததாலும் கட்டடம் கட்ட வாய்ப்பில்லை. இருப்பினும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யும் பட்சத்தில் கட்டடம் கட்ட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[2009 ஜூலை 7

96—

கொள்முதல் நிலையம்

வினா எண் 75423—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கடலூர் மாவட்டம், திட்டக்குடி பகுதியில் பால் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், திட்டக்குடி பகுதிக்கு அருகாமையில், சுமார் 35 கி.மீ. தொலைவிலுள்ள சின்ன சேலத்தில், நாளொன்றுக்கு 1 இலட்சம் லிட்டர் பால் குளிர்விக்கும் திறன்வாய்ந்த, பால் குளிரூட்டும் நிலையம் அமைந்துள்ளது. திட்டக்குடிக்கு அருகாமையிலுள்ள மங்களூர் மற்றும் வேப்பூர் பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களில் தலா 2000 லிட்டர் கொள்ளளவுள்ள இரண்டு பால் குளிர்விப்பான்கள் அமைக்கப்பெற்று செயல்பாட்டில் உள்ளன. ஆவினங்குடி பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தில் 5,000 லிட்டர் கொள்ளளவுள்ள தொகுப்பு பால் குளிர்விப்பான் மையம் அமைக்கப்பட்டு பிப்ரவரி 2009 முதல் செயல்பட்டு வருகிறது.

மேலும், திட்டக்குடி பகுதியில் அமைந்துள்ள சுமார் 25 பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து எவ்விதத் தடங்கலுமின்றி பால் கொள்முதல் செய்யப்பட்டு, சின்னசேலம் பால் குளிரூட்டும் நிலையம் வேப்பூர், மங்களூர் மற்றும் ஆவினங்குடி ஆகிய தொகுப்பு பால் குளிர்விப்பான் மையங்களுக்கு அனுப்பப்பட்டு வருகிறது. எனவே, கடலூர் மாவட்டம், திட்டக்குடி பகுதியில் புதிதாக பால் கொள்முதல் நிலையம் அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

97—

விற்பனை நிலையம்

வினா எண் 75425—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2009 ஜூலை 7]

கம்பம் தொகுதியில் பால் பொருட்கள் விற்பனை நிலையம் துவக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

மதுரையில் உள்ள ஆவின் சங்கத்தின் சார்பாக, கம்பம் உழவர் சந்தையில் ஏற்கெனவே ஒரு பாலகம் அமைக்கப்பட்டு பால் மற்றும் பால் உபபொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. மேலும், யாரேனும் பால் மற்றும் பால் உபபொருட்கள் விற்புனை செய்யும் இடத்தினை தேர்வு செய்து முகவராகச் செயல்பட விருப்பம் தெரிவித்து முன்வருவார்களேயானால், கம்பம் நகராட்சியில் விற்பனை இடத்திற்கான அனுமதி பெற்று ஆவின் மதுரை சார்பாக பாலகங்கள் அமைத்துத் தர பரிசீலிக்கப்படும்.

98—

பால் குளிரூட்டும் நிலையம்

வினா எண் 75688—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டியில் உற்பத்தி செய்யப்படும் பால் சராசரியாக 4,000 லிட்டர் மட்டுமே என்பதாலும், இப்பகுதியிலிருந்து சேலம் பால் குளிரூட்டும் நிலையம் 27 கி.மீ. அருகில் உள்ளதாலும், காடையாம்பட்டியில் தனியாக பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பதற்கு தற்போது வாய்ப்பு ஏதுமில்லை.

99—

ஆவின் விற்பனை மையம்

வினா எண் 75689—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2009 ஜூலை 7

(அ) பூம்புகார் தொகுதி, பொறையாரில் ஆவின் உற்பத்திப் பொருள்கள் விற்பனை மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகை மாவட்டம், மயிலாடுதுறை வரையில் தஞ்சாவூர் ஒன்றிய வாகனத்தின், மூலம் பால் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மயிலாடுதுறையிலிருந்து சுமார் 42. கி.மீ. தூரத்தில் உள்ள பொறையார் நகருக்கு பால் விநியோகம் செய்வதற்கு தனியே பால் வழித்தடம் இல்லை. மேலும், திருச்சியிலிருந்து 182 கி.மீ. தூரத்தில் உள்ள பொறையார் நகருக்கு பால் எடுத்துச் செல்வதால், பாலின் குளிர்தன்மையில் மாற்றம் ஏற்பட்டு பால் கெடுவதற்கு வாய்ப்புள்ளதால், பூம்புகார் தொகுதி, பொறையாரில் ஆவின் பாலகம் அமைக்க வாய்ப்பில்லை.

100—

பால் உற்பத்தி நிலையம்

வினா எண் 75706—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் பால் உற்பத்தி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையிலிருந்து 18 கி.மீ. தொலைவில் உள்ள சிவகங்கையில் தற்போது நாளொன்றுக்கு 10,000 லிட்டர் குளிர்விக்கும் திறனுள்ள பால் குளிரூட்டும் நிலையம் செயல்பட்டு வருகிறது. மேலும், மானாமதுரையைச் சுற்றியுள்ள பகுதியில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் பால் உற்பத்தி மிகவும் குறைவாக உள்ளது. எனவே, தற்போதைய சூழ்நிலையில் மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

2009 ஜூலை 7]

பட்டியல் 8

1—

கட்டட வசதி

வினா எண் 5882—திரு. தி.க. ராஜா: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் நகர காவல் நிலையத்திற்கு நவீன கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

திருப்பத்தூர் நகர காவல் நிலையம் தற்பொழுது அரசுக்குச் சொந்தமான பழையக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக்காவல் நிலையத்திற்கான புதிய கட்டடம் வருங்கால காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்தில் சேர்த்து கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2—

கட்டட வசதி

வினா எண் 9256—திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டுப்பாளையம் தொகுதி, சிறுமுகை காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

சிறுமுகை காவல் நிலையம் தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக்காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட நிலம் தற்போது காவல் துறை வசம் இல்லை. உரிய நிலம் கையகப்படுத்திய பின்னர், தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் காவல் நிலையங்களுக்கு அடுத்த மூன்று ஆண்டுகளில் படிப்படியாக சொந்தக் கட்டடம் கட்டப்பட வேண்டும் என்ற

மூன்றாம் காவல் ஆணைய பரிந்துரையின் அடிப்படையில் இக்காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட பரிசீலனை செய்யப்படும்.

3—

கட்டட வசதி

வினா எண் 9265—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வட்டத் தலைநகரமான பாப்பிரெட்டிப்பட்டி காவல் நிலையத்திற்கு அலுவலகக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி காவல் நிலையம் தற்போது தனியார் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. இக்காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டத் தேவையான நிலம் தற்போது காவல் துறை வசம் இல்லை. நிலம் கையகப்படுத்தப்பட்ட பின் நிலத்தின் தகுதிச் சான்றிதழ் பெற்று வருங்கால காவல் துறை நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ் கட்டடம் கட்ட பரிசீலனை செய்யப்படும்.

4—

கட்டட வசதி

வினா எண் 13174—திரு. க. இராஜேந்திரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மீன்சுருட்டி மதுவிலக்கு காவல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

பொதுவாக மதுவிலக்குப் பிரிவுக்காக தனியாகக் கட்டடங்கள் கட்டப்படுவதில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2009 ஜூலை 7]

5—

குடியிருப்புகள்

வினா எண் 14607—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனத்தில் காவலர்களுக்கான குடியிருப்புகள் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் காவல் நிலைய காவலர்களுக்கென கட்டப்பட்ட 12 குடியிருப்புகள் 1913 ஆம் ஆண்டு கட்டப்பட்டதால் கட்டடம் மிகவும் பழுதடைந்துள்ளது. அரசாணை (நிலை) எண் 1475, உள் (காவல் 10), துறை, நாள் 19-10-2007-ன்படி மேற்குறிப்பிட்ட 12 குடியிருப்புகள் கட்ட ஆணை வழங்கப்பட்டுள்ளது. இக்காவல் நிலையத்திற்கென 33 அலுவலர்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளதால், மீதமுள்ள 21 அலுவலர்களுக்கான குடியிருப்புகள் எதிர்காலத்தில் ஆண்டுதோறும் குடியிருப்புகள் கட்டும் திட்டத்தின்கீழ் சேர்த்து கட்ட பரிசீலனை செய்யப்படும்.

6—

பழுதுபார்த்தல்

வினா எண் 17251—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, கோட்டூர் காவல் நிலையத்தை பழுது பார்க்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டத்திலுள்ள கோட்டூர் காவல் நிலையம் 1927 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. தற்போது இக்காவல்

நிலையம் பழுதடைந்து மோசமான நிலையில், பழுது பார்க்க இயலாத நிலையில் உள்ளதால், இதனை இடித்துவிட்டு புதிய காவல் நிலையம் வருங்கால காவல் துறை நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ் சேர்த்து கட்ட பரிசீலனை செய்யப்படும்.

7—

ஆய்வுக் கூடம்

வினா எண் 17729—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை தொகுதியில் கள்ளச்சாராயத்தைப் பரிசோதிக்கும் ஆய்வுக் கூடம் கட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வட்டாரத் தடய அறிவியல் ஆய்வகம், கோவையில் கள்ளச்சாராய வழக்கு மாதிரிகளை உடனுக்குடன் ஆய்வு செய்து விடுவதால், வால்பாறை தொகுதிக்கென ஆய்வுக் கூடம் கட்டும் செயல் திட்டம் எழ வாய்ப்பில்லை.

8—

தரம் உயர்த்தல்

வினா எண் 18750—திரு. ஞா. ஜாண் ஜோசப்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

விளவங்கோடு தொகுதி, கண்ணுமாமூடு புறக்காவல் நிலையத்தைத் தரம் உயர்த்தி, கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

விளவங்கோடு தொகுதி, கண்ணுமாமூட்டில் புறக்காவல் நிலையம் எதுவும் இயங்கவில்லை. எனவே, அதனை நிலை உயர்த்தி கட்டடம் கட்டுவதற்கான அவசியம் எழவில்லை.

2009 ஜூலை 7]

9—

கட்டட வசதி

வினா எண் 20167—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், ஜவ்வாது மலையிலுள்ள காவலூர் காவல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டி காவலர் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

வேலூர் மாவட்டத்தில் அமைந்துள்ள காவலூர் காவல் நிலையம் தற்பொழுது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக்காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்காக நாயக்கனூர் கிராம சர்வே எண் 91/8-ல் 1.33 சென்ட் நிலம் கண்டறியப்பட்டு முன் நுழைவு அனுமதிகோரி வேலூர் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரால், மாவட்ட ஆட்சியருக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியரிடமிருந்து முன் நுழைவு அனுமதி பெறப்பட்டதும் காவல் நிலையத்திற்கென புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் காவல் நிலையங்களுக்கு அடுத்த மூன்று ஆண்டுகளில் படிப்படியாக சொந்தக் கட்டடம் கட்டப்படவேண்டும் என்ற மூன்றாம் காவல் ஆணைய பரிந்துரையின் அடிப்படையில், இக்காவல் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டித் தர பரிசீலனை செய்யப்படும். காவலர்களின் எண்ணிக்கையைப் பொறுத்த அளவில் மக்கள் தொகை விகிதாச்சாரத்தின் அடிப்படையில் போதுமான அளவில் உள்ளனர்.

10—

கட்டட வசதி

வினா எண் 22624—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை காவல் துணைக் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் கட்டுவது தொடர்பாக மானாமதுரை கிராம சர்வே எண் 144/1-ல் 1 ஏக்கர் மற்றும் 12 சென்ட் நிலத்தை காவல் துறைக்கு நிலமாற்றம் செய்யக்கோரி சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு சிவகங்கை மாவட்டக் காவல் துறை கண்காணிப்பாளரால் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. காவல் துறைக்கு நிலமாற்றம் செய்யப்பட்ட பின்பு அந்நிலம் குறித்து தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்திடமிருந்து தகுதிச் சான்றிதழ் பெற்று, அதன் அடிப்படையில், நிதி நிலையைக் கருத்தில் கொண்டு மானாமதுரை காவல் துறை துணைக் கண்காணிப்பாளருக்கு இல்லத்துடன்கூடிய அலுவலகம் கட்ட பரிசீலனை செய்யப்படும்.

11—

குடியிருப்பைப் புதுப்பித்தல்

வினா எண் 25877—திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூம்புகார் தொகுதி, பொறையார் காவல் நிலையக் காவலர் குடியிருப்பை புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

பூம்புகார் தொகுதி, பொறையார் காவல் நிலையக் காவலர்களுக்கான குடியிருப்புகள் தற்போது புதுப்பிக்க தகுதியில்லாததால் அவற்றை முழுவதுமாக இடித்துவிட்டு புதிதாக 23 குடியிருப்புகள் கட்ட, அரசாணை (நிலை) எண் 1475, உள் (காவல் 10) துறை, நாள் 19-10-2007-ல் ஆணை பெறப்பட்டு, தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

12—

சொந்தக் கட்டடம்

வினா எண் 28535—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2009 ஜூலை 7]

(அ) ராசிபுரம் காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராசிபுரம் துணைக் காவல் துறை கண்காணிப்பாளருக்கு இல்லத்துடன்கூடிய அலுவலகக் கட்டடம் 2008-2009-ம் ஆண்டு பகுதி II திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டு அரசாணை (நிலை) எண் 554, உள் (காவல் 10) துறை, நாள் 22-5-2008-ல் ரூ. 19.42 இலட்சம் செலவில் கட்டுவதற்கு ஆணைகள் வெளியிடப்பட்டு கட்டுமானப் பணிக்கான தொடர் நடவடிக்கை தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம்மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

13—

கட்டட வசதி

வினா எண் 29990—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம், மானாமதுரை காவலர் குடியிருப்புகளுக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் காவலர்களுக்கென 12 குடியிருப்புகள் 1913 ஆம் ஆண்டு கட்டப்பட்டு மிகவும் பழுதடைந்த கட்டடமாக உள்ளது. அரசாணை (நிலை) எண் 1475, உள் (காவல் 10) துறை, நாள் 19-10-2007-ன்படி இக்காவல் நிலையத்திற்கு 12 குடியிருப்புகள் கட்ட ஆணை வழங்கப்பட்டுள்ளது. இக்காவல் நிலையத்திற்கென 33 அலுவலர்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளதால், மீதமுள்ள 21 அலுவலர்களுக்கான குடியிருப்புகள் எதிர்காலத்தில் ஆண்டுதோறும் குடியிருப்புகள் கட்டும் திட்டத்தின்கீழ் சேர்த்துக் கட்ட பரிசீலனை செய்யப்படும்.

2. 1948 ஆம் ஆண்டு 16 குடியிருப்புகள், மானாமதுரை காவல் நிலையக் காவலர்களுக்கு கட்டிக் கொடுக்கப்பட்டன. தற்பொழுது இக்குடியிருப்புகள் மிகவும் பழுதடைந்துள்ளன. தற்பொழுது இக்குடியிருப்புகளை இடித்துவிட்டு புதிய குடியிருப்புகள் கட்ட தகுதிச் சான்றிதழை தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்திடமிருந்து பெற்று தகுதியிருப்பின், ஆண்டுதோறும் குடியிருப்புகள் கட்டும் திட்டத்தின்கீழ் சேர்த்துக் கட்ட பரிசீலனை செய்யப்படும்.

14—

குடியிருப்பு

வினா எண் 31646—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், கண்டாச்சிபுரம், காவல் நிலைய காவலர்களுக்குக் குடியிருப்பு கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், கண்டாச்சிபுரம் காவல் நிலையத்தில் பணிபுரியும் 22 காவல் பணியாளர்களுக்கு (1 உதவி ஆய்வாளர், 21 தலைமைக் காவலர் மற்றும் காவலர்) புதிய குடியிருப்புகள் கட்டுவதற்கான தகுதிச் சான்றிதழ் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்திடம் பெற்றும் 2008-2009-க்கான 2,000 குடியிருப்புகள் கட்டும் திட்டத்தின்கீழ் சேர்த்து புதிய குடியிருப்புகள் கட்டித் தர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

15—

குடியிருப்பு

வினா எண் 31905—திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி காவல் துறை காவலர்களுக்குக் குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

2009 ஜூலை 7]

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி நகர காவல் நிலையத்திற்காக சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட மொத்தமுள்ள 34 குடியிருப்புகளில் 8 காவலர் குடியிருப்புகள் மிகவும் பழுதடைந்துள்ளதால் அவற்றை இடித்து விட்டு புதிய குடியிருப்புகள் ஆண்டுதோறும் குடியிருப்புகள் கட்டும் திட்டத்தின்கீழ் சேர்த்து கட்ட பரிசீலனை செய்யப்படும்.

உசிலம்பட்டி தாலுகா காவல் நிலையத்திற்கு குடியிருப்புகள் கட்டுவதற்கு உசிலம்பட்டி தாலுகா சர்வே எண் 231/1-ல் அமைந்துள்ள 14.98.5 ஹெக்டேர் நிலத்தில் 1.00.0 ஹெக்டேர் பரப்பளவுள்ள நிலத்தை காவல் துறைக்கு நிலமாற்றம் செய்து தரக் கோரி மதுரை மாவட்ட ஆட்சியருக்கு மதுரை மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரால் கருத்துரு அனுப்பப்பட்டு நிலுவையில் உள்ளது. நிலமாற்றம் செய்த பின்னர் காவலர்களின் எண்ணிக்கை, குடியிருப்புகளின் தேவை, நிதி நிலைமை ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு மொத்தக் குடியிருப்புகள் கட்டித் தர பரிசீலனை செய்யப்படும்.

16—

குடியிருப்பு

வினா எண் 33975—திரு. டி இராமச்சந்திரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, அஞ்செட்டி, தளி, கெலமங்கலம், தேன்கனிக்கோட்டை ஆகிய காவல் நிலைய காவலர்களுக்குக் குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள அஞ்செட்டி மற்றும் தளி காவல் நிலையங்களில் பணிபுரியும் காவலர்களுக்கு முறையே 1 ஆய்வாளர், 1 உதவி ஆய்வாளர் மற்றும்

19 காவலர்/தலைமைக் காவலர் என மொத்தம் 21 புதிய குடியிருப்புகள் வரும் நிதியாண்டில் (2009-2010) கட்டித்தர பரிசீலனை செய்யப்படும்.

தேன்கனிக்கோட்டை மற்றும் தேன்கனிக்கோட்டை AWPS-இக்காவல் நிலையங்களில் பணிபுரியும் 1 ஆய்வாளர், உதவி ஆய்வாளர் மற்றும் 34 தலைமைக் காவலர்/காவலர் என மொத்தம் 38 புதிய குடியிருப்புகள் கட்டித் தர அரசாணை (நிலை) எண் 1475 உள் (காவல் 10) துறை, நாள் 19-10-2007-ல் ஆணைகள் வெளியிடப்பட்டு தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தால் கட்டுமானப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

17—

குடியிருப்பு

வினா எண் 34109—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, பொறையார் காவல் நிலைய காவலர்களுக்குக் குடியிருப்பு கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) பூம்புகார் தொகுதி, பொறையார் காவல் நிலையக் காவலர்களுக்கான குடியிருப்புகள் தற்போது புதுப்பிக்கத் தகுதியில்லாததால் அவற்றை முழுவதுமாக இடித்துவிட்டு புதிதாக 23 குடியிருப்புகள் (ஆய்வாளர்-1, உதவி ஆய்வாளர்-2, தலைமை காவலர்/காவலர்-20) கட்ட, அரசாணை எண் 1475, உள் (காவல் 10) துறை, நாள் 19-10-2007-ல் ஆணை வெளியிடப்பட்டு, அதன் கட்டுமானப் பணி தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

18—

நிரந்தரக் கட்டடம்

வினா எண் 34117—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2009 ஜூலை 7]

(அ) பூம்புகார் தொகுதி, நண்டலாறு காவல் துறை சோதனைச் சாவடிக்கு நிரந்தரக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பூம்புகார் தொகுதி, பொறையார் காவல் நிலையத்திற்குட்பட்ட நண்டலாறு சோதனைச் சாவடி தற்போது அமைந்துள்ள இடம் மத்திய கலால் பிரிவுக்குச் சொந்தமான இடமாகும் என்றும், சோதனைச் சாவடிக்கு அருகில் அரசுக்குச் சொந்தமான இடம் எதுவும் இல்லை என்றும் வட்டாட்சியர், தரங்கம்பாடி தெரிவித்துள்ளார். மேலும், சோதனைச் சாவடிக்கு எதிரில் தனியாருக்குச் சொந்தமான இடம் உள்ளதாகவும், அதனை கிரய விலைக்கு பெற்று சோதனைச் சாவடி கட்டலாம் என தரங்கம்பாடி வருவாய் ஆய்வாளர் தெரிவித்துள்ளார். இதுகுறித்து நில ஆர்ஜிதம் செய்வதற்கான அறிக்கை அனுப்பி வைக்குமாறு நாகை மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரிடம் கோரப்பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்திய பின் நண்டலாறு காவல் துறை சோதனைச் சாவடிக்கு நிரந்தரக் கட்டடம் கட்ட பரிசீலனை செய்யப்படும்.

19—

சொந்தக் கட்டடம்

வினா எண் 34173—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை அனைத்து மகளிர் காவல் நிலையம் தற்பொழுது வாடகைக் கட்டடத்தில் இயங்கி

வருகிறது. இக்காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்காக மானாமதுரை டி.எஸ்.எண் 22-ல் 0.56.0 ஹெக்டேர் நிலம் காவல் துறை வசம் தயார் நிலையில் உள்ளது. இக்காவல் நிலையத்திற்கு புதிய கட்டடம், வருங்கால காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் சேர்த்து கட்ட பரிசீலனை செய்யப்படும்.

20—

சொந்தக் கட்டடம்

வினா எண் 34174—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், பூவந்து காவல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடமும், காவலர்களுக்குக் குடியிருப்பும் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், பூவந்து காவல் நிலையம் தற்பொழுது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக்காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு பூவந்தி கிராம சர்வே எண் 25/2-ல் சுமார் 0.76.0 ஹெக்டேர் நிலம் கண்டறியப்பட்டு மாவட்டக் காவல் கண்காணிப்பாளரால் முன்நுழைவு அனுமதி கோரி மாவட்ட ஆட்சியருக்கு கருத்துரு அனுப்பப்பட்டு உள்ளது. நிலம் கையகப்படுத்திய பின்னர் நிதி நிலை மற்றும் முன்னுரிமை அடிப்படையில் பூவந்தி காவல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடமும் காவலர்களுக்குக் குடியிருப்பும் கட்ட பரிசீலனை செய்யப்படும்.

21—

புதிய கட்டடம்

வினா எண் 34188—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

2009 ஜூலை 7]

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம், போளூரில் காவல் துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் கட்டுவது தொடர்பாக செயற்குறிப்பு 2008-2009 ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டு, அதற்கானக் கட்டடம் கட்ட அரசாணை (நிலை) எண் 554, உள் (காவல் 10) துறை, நாள் 22-5-2008-ல் உரிய ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. அதன் கட்டுமானப் பணி தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தால் மேற்கொள்ளப்படுகிறது.

22—

குடியிருப்பு

வினா எண் 34791—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசப்பாக்கம் தொகுதி, கடலாடி காவல் நிலைய காவலர்களுக்குக் குடியிருப்பு கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கலசப்பாக்கம் தொகுதி, கடலாடி காவல் நிலைய காவலர்களுக்கான குடியிருப்புகள் 1921 ஆம் ஆண்டு கட்டப்பட்டன. இக்குடியிருப்புகள் பழுதடைந்த நிலையில் உள்ளன. மேலும், கடலாடி காவல் குடியிருப்புகள் கட்ட கடலாடி கிராம சர்வே எண் 1147, 1142, 160/3-ல் 32 செண்ட் நிலம் உள்ளது. கடலாடி காவலர்களுக்கு புதிய குடியிருப்புகள் ஆண்டுதோறும் காவலர் குடியிருப்புகள் கட்டும் திட்டத்தின்கீழ் சேர்த்து கட்டித் தர பரிசீலனை செய்யப்படும்.

23—

குடியிருப்பு

வினா எண் 38175—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2009 ஜூலை 7

(அ) வால்பாறை தொகுதியில் காவலர்கள் குடியிருப்பு ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை காவல் நிலையத்தில் பணிபுரிகின்ற காவலர்களுக்குப் புதிய குடியிருப்புகள் கட்ட வால்பாறை சர்வே எண் 31/12-13-ன்படி 88 செண்ட் நிலம் கைவசம் உள்ளது. மேலும், தகுதிச் சான்றிதழை தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தினரிடமிருந்து பெற்று ஆண்டுதோறும் குடியிருப்புகள் கட்டும் திட்டத்தின்கீழ் சேர்த்து எதிர்காலத்தில் கட்டித் தர பரிசீலனை செய்யப்படும்.

24—

குடியிருப்பு

வினா எண் 39495—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, ஆழியாரில் காவலர்கள் குடியிருப்பு கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, ஆழியாரில் காவல் நிலையம் இல்லை. புறக்காவல் நிலையம் மட்டுமே செயல்பட்டு வருகிறது. இப்புறக்காவல் நிலையம் கோட்டூர் காவல் நிலையத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. கோட்டூர் காவல் நிலையக் காவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டும்போது ஆழியார் புறக்காவல் நிலையத்தில் பணிபுரியும் காவலர்களுக்கும் ஆண்டுதோறும் குடியிருப்புகள் கட்டும் திட்டத்தின்கீழ் சேர்த்து புதிய குடியிருப்புகள் கட்டித்தர பரிசீலனை செய்யப்படும்.

2009 ஜூலை 7]

25—

அடிப்படை வசதி

வினா எண் 41230—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பேரூராட்சியில் காவல் நிலையத்திற்கு அடிப்படை வசதிகள் செய்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் காவல் நிலையத்திற்கு அடிப்படை வசதிகள், சம்பந்தப்பட்ட மாவட்டக் காவல் கண்காணிப்பாளரிடமிருந்து கருத்துரு பெற்று, அதன் அடிப்படையில் செய்து தர பரிசீலனை செய்யப்படும்.

26—

குடியிருப்பு

வினா எண் 41410—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், பழையனூர் காவல் நிலையப் பணியாளர்களுக்குக் குடியிருப்பு வசதிகள் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, பழையனூர் காவல் நிலையக் காவலர்களுக்குக் குடியிருப்பு கட்ட இடம் போன்ற விவரங்கள் சிவகங்கை மாவட்டக் காவல் கண்காணிப்பாளரிடமிருந்து பெற்று தகுதியிருப்பின் நிதி நிலைமைக்கு ஏற்ப ஆண்டுதோறும் குடியிருப்புகள் கட்டும் திட்டத்தின்கீழ் சேர்த்து, புதிய குடியிருப்புகள் கட்ட பரிசீலனை செய்யப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — TRUTH ALONE TRIUMPHS

[2009 ஜூலை 7

27—

புதிய கட்டடம்

வினா எண் 42496—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு நகர காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம், 2008-2009 ஆம் ஆண்டுக்கான பகுதி-2 திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டு அரசாணை (நிலை) எண் 553, உள் (காவல் 10) துறை, நாள் 22-5-2008-ல் நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்புக்கான ஆணை வழங்கப்பட்டுள்ளது. இதன் கட்டுமானப் பணி தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு, பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

28—

அலுவலகம் விரிவுபடுத்துதல்

வினா எண் 44678—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாமல்லபுரம் காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் அலுவலகத்தை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* மாமல்லபுரம் காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் அலுவலகத்தை விரிவுபடுத்த தற்போதுள்ள அலுவலகத்திற்கு மேற்குப் பக்கத்தையொட்டி 35x100 சதுர அடி

2009 ஜூலை 7]

பரப்பளவுள்ள நிலம் கைவசம் உள்ளது. இதன் தொடர்பாக முழுமையான கருத்துருவினை காஞ்சிபுரம் மாவட்டக் காவல் கண்காணிப்பாளரிடமிருந்து பெற்று, தகுதியிருப்பின் விரிவாக்கக் கட்டடத்திற்கான வரைவுத் திட்டம் மற்றும் செலவு மதிப்பீடு போன்ற விவரங்களை தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்திடமிருந்து பெற்று வருங்காலத்தில் கட்டித் தர பரிசீலனை செய்யப்படும்.

29—

அலுவலகம் விரிவுபடுத்துதல்

வினா எண் 44679—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செங்கல்பட்டு காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் அலுவலகத்தை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில்,

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் 1,285 சதுர அடி பரப்பளவு கொண்ட தரை தளக் கட்டடம் ஆகும். மேலும், கூடுதலாக 2 அறைகள் மற்றும் கலந்தாய்வுக் கூடம் கட்டுவது தொடர்பாக வரைவு திட்டம் மற்றும் செலவு மதிப்பீடு போன்ற விவரங்களை தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்திடமிருந்து பெற்று வருங்காலத்தில் கட்டித் தர பரிசீலனை செய்யப்படும்.

30—

சொந்தக் கட்டடம்

வினா எண் 45069—திரு. எம். அன்பழகன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பழனி தொகுதி, பழனி மதுவிலக்குப் பிரிவு காவல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

பொதுவாக மதுவிலக்குப் பிரிவிற்கென தனியாக புதிய கட்டடங்கள் கட்டப்படுவதில்லை.

31—

கட்டட வசதி

வினா எண் 45145—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிவகங்கை மாவட்டம், கல்லலில் புதிய காவல் நிலையக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், கல்லல் காவல் நிலையம் தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக்காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட சிவகங்கை மாவட்டம், காரைக்குடி தாலுகா, கல்லல் கிராம புல எண் 640/5-ல் 0.12.76 ஹெக்டேர் நிலம் காவல் துறை வசம் உள்ளது. மேலும் வாடகைக் கட்டடத்தில் தற்போது இயங்கி வரும் காவல் நிலையங்களுக்கு அடுத்த மூன்று ஆண்டுகளில் படிப்படியாகச் சொந்தக் கட்டடம் கட்டப்படவேண்டும் என்ற மூன்றாம் காவல் ஆணைய பரிந்துரையின் அடிப்படையில், இக்காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தர பரிசீலனை செய்யப்படும்.

32—

புதிய கட்டடம்

வினா எண் 58023—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், உடுமலைப்பேட்டை, தளி, குடிமங்களம் காவல் நிலையங்களுக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

2009 ஜூலை 7]

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

கோவை மாவட்டம், உடுமலைப்பேட்டை காவல் நிலையம் தற்போது அரசுக்குச் சொந்தமான பழைய கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக்காவல் நிலையத்திற்கான புதிய கட்டடம் வருங்கால காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் சேர்த்துக் கட்டப் பரிசீலனை செய்யப்படும்.

தளி காவல் நிலையம் தற்போது அரசுக்குச் சொந்தமான பழைய கட்டடத்தில் இயங்கி வருகிறது. 12-5-2008 அன்று சட்டப் பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த அறிவிப்பின்படி, தளி காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் ரூ.25.00 இலட்சத்தில் கட்டுவதற்கு செயற்குறிப்பு 2007-2008 (கூடுதல் நிதி ஒதுக்கீடு) ஆண்டுக்கான காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டு அரசாணை (நிலை) எண் 998, உள் (நவீனம்) துறை, நாள் 11-08-2008 இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதன் கட்டுமானப் பணி தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குடிமங்களம் காவல் நிலையம் தற்போது அரசுக்குச் சொந்தமான பழைய கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக்காவல் நிலையத்திற்கான புதிய கட்டடம் வருங்கால காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் சேர்த்துக் கட்டப் பரிசீலனை செய்யப்படும்.

33—

சொந்தக் கட்டடம்

வினா எண் 63798—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம், காவல் துறை மாவட்ட துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் மற்றும் முகாம் அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் தற்பொழுது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. மேலும் புதிய அலுவலகம் கட்ட தற்பொழுது நிலம் கைவசம் இல்லை. நிலம் கையகப்படுத்தப்பட்ட பின்பு எதிர்காலத்தில் காங்கேயம் காவல் துறை துணைக் கண்காணிப்பாளருக்கு இல்லத்துடன் கூடிய அலுவலகம் கட்டப் பரிசீலனை செய்யப்படும்.

34—

குடியிருப்பு

வினா எண் 63858—திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, தேன்கனிக்கோட்டை, அனைத்து மகளிர் காவல் நிலையக் காவலர்களுக்குக் குடியிருப்பும், காவல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடமும் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தேன்கனிக்கோட்டை மகளிர் காவல் நிலையம் தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக்காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கான நிலம் காவல் துறை வசம் இல்லை. தகுதியான நிலம் கண்டறியப்பட்டதும் வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் காவல் நிலையங்களுக்கு அடுத்த மூன்று ஆண்டுகளில் படிப்படியாக புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்ற மூன்றாம் காவல் ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் இக்காவல் நிலையத்திற்கு வருங்கால காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் புதிய கட்டடம் கட்டப் பரிசீலனை செய்யப்படும்.

2009 ஜூலை 7]

35—

நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 3662—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியம், மூங்கில்பாடி ஊராட்சியில் சேனை கவுண்டனூர் பகுதி மற்றும் சரக்கபிள்ளையூர் பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியம் மூங்கில்பாடி ஊராட்சியில் சேனை கவுண்டனூர் மற்றும் சரக்கப்பிள்ளையூர் குடியிருப்புகளில் முறையே 60,000 லிட்டர் மற்றும் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்கப்பட்டு தனி மின்விசைத் திட்டம்மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

36—

நீர்தேக்கத் தொட்டி

வினா எண் 5364—திரு. கே.எல். இளவழகன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், நல்லூர் ஊராட்சி, நல்லூர் காலனியில் கூடுதல் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* வேலூர் மாவட்டம், திமிரி ஒன்றியம், நல்லூர் ஊராட்சியைச் சேர்ந்த நல்லூர் காலனி குடியிருப்பின் ஒரு பகுதி

தனிக் குடியிருப்பாக நல்லூர் புதிய காலனி கண்டறியப்பட்டுள்ளது. நல்லூர் காலனியில் ஏற்கெனவே *30,000* லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் உள்ளது. நல்லூர் புதிய காலனிக்குக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்த நடப்பு நிதியாண்டில் ஒப்புதல் பெறப்பட்டு, திட்டப் பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

37—

குடிநீர் வசதி

வினா எண் 13109—திரு. கே.வீ. ராமநாதன்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பவானி தொகுதி, அட்டவணைப்புதூர், கஸ்பாவில் குடிநீர் வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், அம்மாபேட்டை ஒன்றியம், கஸ்பா பகுதியை உள்ளடக்கிய அட்டவணைப்புதூர் குடியிருப்பில், ஏற்கெனவே அங்குள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு *40* லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

38—

நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 14180—திரு. கோ. எதிரொலி மணியன்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, அன்மருதை கிராமத்தில் புதியதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, அன்மருதை ஊராட்சியைச் சேர்ந்த அன்மருதை குடியிருப்பில் மக்கள் தொகைக்கேற்ப ஏற்கெனவே 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டு போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, கூடுதலாக மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

39—

நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 32469—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செங்கல்பட்டு தொகுதி, சோகண்டி ஊராட்சி, இருளர் பகுதிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், திருக்கழுக்குன்றம் ஒன்றியம், சோகண்டி குடியிருப்புக்குட்பட்ட இருளர் பகுதிக்கு சோகண்டி குடியிருப்பில் 1990 ஆம் ஆண்டு கட்டப்பட்ட 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் தற்போது போதுமான அளவில் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, புதிய திட்டம் அமைக்கும் தேவை எழவில்லை.

40—

நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 35591—திரு. விடியல் எஸ். சேகர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காங்கேயம் தொகுதி, தம்மரெட்டிபாளையத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் வட்டம், காங்கேயம் ஒன்றியம், தம்மரெட்டிபாளையம் ஊராட்சி, தம்மரெட்டிபாளையம் குடியிருப்புக்கு முத்தூர்-காங்கேயம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் கணபதிபாளையம் குடியிருப்பில் கட்டப்பட்டுள்ள 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிமூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், இங்கு கூடுதலாக மேல்நிலைத் தொட்டி அமைக்கும் திட்டம் இல்லை.

41—

நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 35593—திரு. விடியல் எஸ். சேகர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காங்கேயம் தொகுதி, பரஞ்சேர் வழி ஊராட்சி, வேலாயுதம் பாளையத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் வட்டம், காங்கேயம் ஒன்றியம், பரஞ்சேர் வழி ஊராட்சி, வேலாயுதம்பாளையம் குடியிருப்புக்கு முத்தூர்–காங்கேயம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் முருங்கப்பாளையம் குடியிருப்பில் ஏற்கெனவே 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டி கட்டப்பட்டு அதன்மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், இக்குடியிருப்புக்கு மேலும் கூடுதலாக ஒரு மேல்நிலைத் தொட்டி அமைக்கும் திட்டம் இல்லை.

42—

நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 35808—திரு. மு.க. பெரியசாமி: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2009 ஜூலை 7]

(அ) பூம்புகார் தொகுதி, எடுத்துக்கட்டி ஊராட்சி, பூதனூர் பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், பூம்புகார் ஒன்றியம், எடுத்துக்கட்டி ஊராட்சி, பூதனூர் குடியிருப்பிற்கு மக்கட்தொகைக்கேற்ப ஏற்கெனவே மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டு போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுவதால் இக்குடியிருப்பிற்குக் கூடுதலாக ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பதற்குச் சாத்தியக்கூறுகள் இல்லை.

43—

நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 36071—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, மாம்பாக்கம், தத்தலூர் ஊராட்சிகளுக்கு கூடுதல் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், மாம்பாக்கம் மற்றும் தத்தலூர் ஊராட்சிகளில் உள்ள அனைத்துக் குடியிருப்புகளுக்கும் அக்குடியிருப்புகளின் மக்கள் தொகைக்கேற்ப தற்போதுள்ள மேல்நிலைத் தொட்டிகளின்மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே இவ்வூராட்சிகளுக்குப் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

44—

நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 42753—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, மானாத்தாள் ஊராட்சி, கங்காணிப்பட்டி கரட்டுக் காட்டுவளவு பகுதி, சித்தி கவுண்டன் வளவு பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் வட்டம், மானாத்தாள் ஊராட்சி, கங்காணிப்பட்டி கரட்டுக் காட்டுவளவு என்ற கங்காணிப்பட்டி காட்டுவளவுக் குடியிருப்புக்கு 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் 12/2008-ல் கட்டி முடிக்கப்பட்டு, மக்கள் பயனில் உள்ளது. சித்தி கவுண்டன்வளவுப் பகுதிக்கு பண்டிதகாரனூர் குடியிருப்பில் கட்டப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது. எனவே, இப்பகுதிக்கென தனியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட ஊரகக் குடிநீர்த் திட்ட விதிகளின்படி சாத்தியக்கூறுகள் இல்லை.

45—

புதிய நியாய விலைக் கடை

வினா எண் 57516—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தொகுதி, நவப்பட்டி ஊராட்சி, செக்கானூர் நியாய விலைக் கடையைப் பிரித்து கூராண்டிபுதூரில் புதிய நியாய விலைக் கடையை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2009 ஜூலை 7]

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, நவப்பட்டி ஊராட்சி, நவப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வரும் செக்கானூர் நியாய விலைக் கடையிலிருந்து 177 குடும்ப அட்டைகளைப் பிரித்து கூராண்டிபுதூரில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை 12-12-2008 முதல் செயல்பட்டு வருகிறது.

46—

நியாய விலைக் கடை

வினா எண் 58712—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், பெரியேரிப்பட்டி ஊராட்சி, பாலக்காடு நியாயவிலைக் கடையைப் பகுதிநேர நியாய விலைக் கடையாகச் செயல்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, பெரியேரிப்பட்டி ஊராட்சி, பாலக்காடு என்ற பெயரில் நியாய விலைக் கடை ஏதும் செயல்படவில்லை. பெரியேரிப்பட்டி ஊராட்சி, பாலக்காடு என்ற கிராமத்தில் உள்ள 22 குடும்ப அட்டைதாரர்கள் வேடப்பட்டி நியாய விலைக் கடையில் தற்போது அத்தியாவசியப் பொருள்களைப் பெற்று வருகின்றனர். வேடப்பட்டி நியாய விலைக் கடை முழுநேரக் கடையாகவும் சொந்தக் கட்டடத்திலும் செயல்பட்டு வருகிறது. இந்த நியாய விலைக் கடையுடன் 225 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்த நியாய விலைக் கடைக்கும் பாலக்காட்டிற்கும் 0.5 கி.மீ. தொலைவே உள்ளது. எனவே, பாலக்காடு பகுதியில் புதியதாகப் பகுதிநேர நியாய விலைக் கடை ஏற்படுத்த சாத்தியக்கூறுகள் இல்லை.

47—

இரவுக் காவலர்கள் நியமனம்

வினா எண் 62726— திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பேரூராட்சியிலுள்ள நியாய விலைக் கடைகளுக்கு இரவு நேரக் காவலர்கள் நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கூட்டுறவுத் துறையின்கீழ் இயங்கும் நியாயவிலைக் கடைகளில், 1000 கார்டுகளுக்கு மேல் உள்ள நகர்ப்புற கடைகளில் ஒரு விற்பனையாளர் மற்றும் கட்டுநர் பணியிடம் மட்டுமே பணிபுரிய வழிவகையுள்ளது. எனவே நியாய விலைக் கடைக்கு இரவுக் காவலர்களை நியமனம் செய்ய வழி வகை இல்லாததால் இரவுக் காவலர்கள் நியமனம் செய்ய இயலாது.

48—

நியாய விலைக் கடைக்குக் கட்டடம்

வினா எண் 69436—திருமதி பெ. கமலாம்பாள்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காஞ்சிபுரம் தொகுதி, ஆசூர் ஊராட்சி, வரதராஜபுரத்தில் நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் தொகுதி, ஆசூர் ஊராட்சியில் வரதராஜபுரம் பகுதியில் உள்ள 82 குடும்ப அட்டைகளைச் சேர்த்து 302 குடும்ப அட்டைகளுடன் ஆசூர் நியாய விலைக் கடை அரசுக்

கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. ஆசூர் நியாயவிலைக் கடைக்கும், வரதராஜபுரம் பகுதிக்கும் இடையே 3/4 கி.மீ. தூரமே உள்ளது. வரதராஜபுரத்தில் கூட்டுறவு நியாய விலைக் கடை ஏதும் இல்லாத நிலையில் புதியதாகக் கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

49—

கலைக் கல்லூரி

வினா எண் 82776—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் கூட்டுறவுத் துறை மூலம் கலைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம்மூலம் கலைக் கல்லூரி தொடங்குவதற்குரிய கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

50—

புதிய கூட்டுறவு மேலாண்மை நிறுவனம்

வினா எண் 90728—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுடெல்லி தேசிய கூட்டுறவுப் பயிற்சிக் கழகத்தால் நடத்தப்படும் கூட்டுறவு மேலாண்மை நிறுவனத்தை திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூரில் தொடங்க மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரைக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுடெல்லி, தேசியக் கூட்டுறவுப் பயிற்சிக் கழகத்தால் ஏற்கெனவே தமிழ்நாட்டில், சென்னையில் நடேசன் கூட்டுறவு மேலாண்மை நிலையம், மதுரையில் மதுரை கூட்டுறவு மேலாண்மை நிலையம் ஆகிய இரண்டு நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சூழ்நிலையில் மேற்கொண்டு திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூரில் கூட்டுறவு மேலாண்மை நிலையம் தொடங்குவதற்குச் சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.

51—

செடிகள் பாதுகாப்பு

வினா எண் 4461—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை, சோலையார் அணை பகுதியில் விளையும் விலை உயர்ந்த வெண்ணிலாக்காய் செடிகளைப் பாதுகாக்கவும், அவற்றை அதிகமாகப் பயிரிடவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

சோலையார் அணை பகுதியில் தனியார் நிறுவனமே வெண்ணிலா செடி பயிர் செய்து வருகிறது. தற்போது நிலவி வரும் குறைந்த சந்தை விலையில் வெண்ணிலா செடிகள் பயிரிட விவசாயிகள் ஆர்வம் காட்டுவதில்லை. எனவே, இப்பயிர்ப் பரப்பினை அதிகரிக்க வாய்ப்பு இல்லாததால் அவற்றை அதிகமாகப் பயிரிடும் திட்டம் ஏதும் இல்லை.

52—

வெண்ணிலாக்காய் உபயோகம்

வினா எண் 4464—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வெண்ணிலாக்காய்மூலம் உள்ள உபயோகம் என்ன?

2009 ஜூலை 7]

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

வென்னிலா பீன்ஸ் உணவுப் பொருட்களில் மணமூட்டும் பொருளாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக ஐஸ்கிரீம்களில் அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது.

53—

விற்பனைக் கூடம்

வினா எண் 20955—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை தொகுதியில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதிக்கென தனியாக ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

54—

கார்த்திகைக் கிழங்கு

வினா எண் 40784—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மண்வளத்தை விஷமாக்கும் கார்த்திகைக் கிழங்கு உற்பத்தியைத் தடுக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

கார்த்திகைக் கிழங்கு மருந்துப் பயிராக தமிழகத்தின் வறட்சியான பகுதிகளில் கடந்த 20 வருடங்களாகப் பயிரிடப்பட்டு வருகிறது.

கிழங்குகள்மூலமாகப் பயிர்ப் பெருக்கம் செய்து விதைகளுக்காக விவசாயிகள் இதனைச் சாகுபடி செய்கின்றனர். இக்கிழங்குச் சாகுபடி சேலம் மாவட்டத்தில், ஆத்தூர் வட்டத்தில் அதிக அளவில் சுமார் 60 எக்டர் பரப்பில் சாகுபடி செய்து வரப்பட்டது. இருப்பினும் உரிய மார்க்கெட் விலை கிடைக்காததாலும், விலை மிகவும் குறைந்ததாலும், தற்பொழுது 5 எக்டர் அளவில் மட்டும் சாகுபடியில் உள்ளது. இக்கிழங்கினைத் தொடர்ந்து சாகுபடி செய்தால் மண்வளம் பாதிக்கப்படுகிறது என்ற கருத்து நிலவியதைத் தொடர்ந்து, விஞ்ஞான பூர்வமாக ஆராய்ச்சி செய்ததில், கார்த்திகைக் கிழங்கு சாகுபடி செய்தால் மண்வளம் கெடுவதில்லை என உறுதி செய்யப்பட்டது. எனவே கார்த்திகைக் கிழங்கின் உற்பத்தியைத் தடுக்க திட்டமேதும் இல்லை.

55—

இலவச மருந்து

வினா எண் 48197—திரு. வை. காவேரி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாழை இலையில் ஏற்படும் சருகு நோயைக் கட்டுப்படுத்தவும், கரும்புப் பயிருக்கு ஏற்படும் செம்மை நோயினைத் தடுக்க தடுப்பு மருந்தினை இலவசமாக வழங்கவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

தேசியத் தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின்மூலம் வாழை சாகுபடி மேற்கொள்ள 50 சதவீதம் மானியமாக வழங்கப்படும் ரூ. 7,500-ல், உயர் இரக திசு வாழைக் கன்றுகள், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள், உயிர் உரங்கள் ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் வாழை சாகுபடியாளர்களுக்குப் பயிர்ப் பாதுகாப்பு குறித்து தொழில்நுட்பங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

2. கரும்புப் பயிரில் செவ்வழுகல் நோய் ஏற்பட்டால் வட்டார அளவில் அமைக்கப்பட்டுள்ள வேளாண்மை விரிவாக்க மையங்களைத் தொடர்பு கொண்டு விவசாயிகள் நோயினைக் கட்டுப்படுத்த தக்க அறிவுரை பெறலாம். எனவே வாழை இலையில்

2009 ஜூலை 7]

ஏற்படும் சருகு நோயைக் கட்டுப்படுத்தவும், கரும்புப் பயிருக்கு ஏற்படும் செம்மை நோயினைத் தடுக்கவும் தடுப்பு மருந்தினை இலவசமாக வழங்கும் திட்டம் ஏதுமில்லை.

56—

மானியம்

வினா எண் 49751—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி காளியாபுரம், பெத்தநாயக்கனூர், ரமணமுதலிபுதூர், தென்சித்தூர், சோமந்துறை, தென்சங்கம்பாளையம், அங்கலகுறிச்சி, அர்த்தநாரிப்பாளையம் மற்றும் கம்பலாபட்டி ஊராட்சிகளில் பீன்ஸ் பயிரிட வரும் நிதியாண்டில் மானியம் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி காளியாபுரம், பெத்தநாயக்கனூர், ரமணமுதலிபுதூர், தென்சித்தூர், சோமந்துறை, தென்சங்கம்பாளையம், அங்கலகுறிச்சி, அர்த்தநாரிப்பாளையம் மற்றும் கம்பலாபட்டி கிராமங்கள் ஆனைமலை வட்டாரத்தில் தென்னை பயிர் அதிக அளவில் சாகுபடி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இப்பகுதியில் பீன்ஸ் சாகுபடி செய்ய விவசாயிகள் முன்வருவதில்லை. மேலும் விவசாயிகள் பீன்ஸ் சாகுபடி மேற்கொள்ள வரும் பட்சத்தில் அவர்களுக்குத் தேவையான பீன்ஸ் சாகுபடி தொழில்நுட்பங்கள் மற்றும் விதைகள் தோட்டக்கலைத் திட்டங்களின்மூலம் வழங்க வரும் நிதியாண்டில் ஆவன செய்யப்படும்.

57—

நெற்களம்

வினா எண் 59528—திரு. ஆர். சாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதியிலுள்ள அனைத்து கிராமங்களிலும் சிமெண்ட் நெற்களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

மேலூர் தொகுதியில் அனைத்து கிராமங்களிலும் சிமெண்ட் நெற்களம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் தற்பொழுது ஏதும் இல்லை.

58—

நெற்களம்

வினா எண் 60705—திரு. செ. சின்னச்சாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருங்காபுரி தொகுதி, மருங்காபுரி ஒன்றியம், தேனூர் கிராமத்திற்கு நெற்களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மருங்காபுரி தொகுதி, மருங்காபுரி ஒன்றியம், தேனூர் கிராமத்தில் நெற்களம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

59—

காய்ப்புழு நோய்க் கட்டுப்படுத்துதல்

வினா எண் 61148—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2009 ஜூலை 7]

(அ) மானாமதுரை தொகுதியில் கத்திரிப் பயிரில் காய்ப்புழு நோயைக் கட்டுப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மானாமதுரை தொகுதியில், சாகுபடி செய்யப்பட்ட கத்திரிப் பயிரில் காய்ப்புழு தாக்குதலைக் கட்டுப்படுத்த விரிவாக்கப் பணியாளர்கள் மூலம் பயிர்ப் பாதுகாப்பு முறைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு அதன்படி கட்டுப்படுத்தப்பட்டன.

(ஆ) நடப்பு ஆண்டில் செயல்படுத்தப்பட்டு வரும் மாநில மற்றும் மத்திய அரசு தோட்டக்கலை திட்டங்களின் வாயிலாக தோட்டக்கலைப் பயிர்களைத் தாக்கும் பூச்சி/நோய் தாக்குதலை கட்டுப்படுத்தவதற்கான பயிர்ப் பாதுகாப்பு முறைகள் அறிவுறுத்தப்பட்டு வருகின்றன.

60—

அலுவலகம் மாற்றம்

வினா எண் 67272—திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சியிலுள்ள அக்ரோ சென்டர் அலுவலகத்தை மையப் பகுதியான பல்லடத்திற்கு மாற்றித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சியில், பொள்ளாச்சி வேளாண்மை பொறியியல் பணிக் கூட்டுறவு மையம் நலிவடைந்து 12 பணியாளர்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

இம்மாவட்டத்தில் பல்லடத்தில், பல்லடம் வேளாண்மை பணிக் கூட்டுறவு மையம் மூன்று சங்கப் பணியாளர்களைக் கொண்டு நலிவடைந்த நிலையில் செயல்பட்டு வருவதால், பொள்ளாச்சியிலுள்ள வேளாண்மை பொறியியல் பணிக் கூட்டுறவு மையத்தை பல்லடத்திற்கு மாற்ற வேண்டிய அவசியம் எழவில்லை.

61—

விற்பனை நிலையம்

வினா எண் 69227—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்போரூர் தொகுதி, திருப்போரூரில் விவசாய விளைபொருட்கள் விற்பனை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) ஆம். திருப்போரூர் தொகுதி, திருப்போரூரில் விவசாய விளைபொருட்களுக்கென (ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்) விற்பனை நிலையம் அமைப்பதற்கான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(ஆ) ஆய்வுக்குப் பின்னர் அதனடிப்படையில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

62—

தானியக் களம்

வினா எண் 69472—திரு. கே.எல். இளவழகன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு தொகுதி, அரும்பாக்கம் ஊராட்சி, அரும்பாக்கத்தில் புதியதாக தானியக் களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2009 ஜூலை 7]

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆற்காடு தொகுதி, அரும்பாக்கம் ஊராட்சி, அரும்பாக்கத்தில் புதிய தானியக் களம் 2009-2010 ஆம் நிதியாண்டில் அமைத்துத் தரப்படும்.

63—

தானியக் களம்

வினா எண் 70801—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தொகுதி, வல்லம் ஒன்றியம் கொரத்தூர் மற்றும் துருப்பாக்கம் கிராமங்களில் தானியக் களம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

செஞ்சி தொகுதி, வல்லம் ஒன்றியம் கொரத்தூர் மற்றும் துருப்பாக்கம் கிராமங்களில் 2009-2010 ஆம் ஆண்டில் உலர்களம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

64—

நவீனப்படுத்துதல்

வினா எண் 76240—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தை நவீனப்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் 2009-2010 ஆம் நிதியாண்டில் அனைத்து வசதிகளுடன் ஒரு கிட்டங்கி கட்டித்தர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

65—

இணைப்புக் கால்வாய்

வினா எண் 63307—திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி மாவட்டம், பாலக்கோடு செங்கன் பசவன்தலாவ் பெரிய ஏரியின் வடப்புறத்தில் மேட்டுப் பகுதியிலிருந்து கால்வாய் அமைத்து பம்மனூர், வேப்பல அள்ளி, வெலகல அள்ளி, தண்டுகாரண அள்ளி, கொண்டசாமன அள்ளி ஏரிகளுக்கு இணைப்புக் கால்வாய் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், செங்கன் பசவன்தலாவ் பெரிய ஏரியின் வடப்புறத்தில் மேட்டுப் பகுதியிலிருந்து புதிய கால்வாய் அமைத்து பம்மனூர், வேப்பல அள்ளி, வெலகல அள்ளி, தண்டுகாரண அள்ளி, கொண்டசாமன அள்ளி ஏரிகளுக்கு இணைப்புக் கால்வாய் அமைக்கும் திட்டமானது காவிரி நதிப்படுகையில் அமைந்துள்ளதால் காவிரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பு நடைமுறைப்படுத்தப்பட்டவுடன்தான் பரிசீலிக்க இயலும்.

66—

தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 75770—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2009 ஜூலை 7]

(அ) முகையூர் தொகுதியில் தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) முகையூர் தொகுதியில் தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

67—

தொழில் பயிற்சிக் கல்லூரி

வினா எண் 75772—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகையூர் தொகுதியில் தொழில் பயிற்சிக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) முகையூர் தொகுதியில் தொழில் பயிற்சிக் கல்லூரி துவக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

68—

தொழில் பயிற்சிக் கல்லூரி

வினா எண் 75788—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதியில் தொழில் பயிற்சிக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதியில் தொழில் பயிற்சிக் கல்லூரி துவக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

69—

சிற்றுந்து வசதி

வினா எண் 83717—திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் பகுதியில் சிற்றுந்துகள் (Mini Bus) அனுமதி பெற்ற வழித்தடங்களில் செல்ல அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

திருப்பூர் (தெற்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டுப்பாட்டில் 38 மினிப் பேருந்துகளும், திருப்பூர் (வடக்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டுப்பாட்டில் 51-ம் ஆக மொத்தம் 89 மினிப் பேருந்துகள் இயங்கி வருகின்றன. அனுமதி பெற்ற வழித் தடங்களில் முறையாக இயங்கி வருகின்றனவா என்பதனை களப் பணியாளர்கள் மூலம் கண்காணிக்கப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டில் தெற்கு வட்டாரத்தில் 17-ம், வடக்கு வட்டாரத்தில் 26-ம் ஆக மொத்தம் 43 சிற்றுந்துகளுக்கு தணிக்கை அறிக்கை வழங்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தொடர்பாகப் பெறப்படும் புகார்களின் மீது விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு, திருப்பூர் பகுதியில் சிற்றுந்துகள் அனுமதி பெற்ற தடத்தில் இயங்க தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

70—

கடல்வாழ் உயிரின மையம்

வினா எண் 84220—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் பகுதியில் கடல்வாழ் உயிரினங்களின் நலன் கருதி கடல்வாழ் உயிரின மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் பகுதியில் கடல்வாழ் உயிரினங்களைப் பாதுகாக்க மன்னார் வளைகுடா உயிர்கோள் காப்பகம்மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, மண்டபம் பகுதியில் தனியாக கடல்வாழ் உயிரினங்களின் நலன் கருதி ஓர் உயிரின மையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

71—

சுற்றுலா மையம்

வினா எண் 66470—திரு. ஆர்.எம். பழனிசாமி: *மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மொடக்குறிச்சியை சுற்றுலா மையமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு எந்தவோர் இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு அங்கு அடிப்படை வசதிகள் மட்டுமே செய்து தருகிறது.

மொடக்குறிச்சியில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

72—

சுற்றுலாத் தலம்

வினா எண் 69478—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, தேவகானம்பேட்டை, துர்க்கையம்மன் கோயிலை சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

அரசு எந்தவோர் இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. சுற்றுலாத் தலங்களின் முக்கியத்துவம் மற்றும் அங்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு அங்கு அடிப்படை வசதிகள் மட்டுமே செய்து வருகிறது.

மேல்மலையனூர் தொகுதி, தேவகானம்பேட்டை, துர்க்கையம்மன் கோயிலில் அடிப்படை வசதிகள் செய்து தரும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்பொழுது இல்லை.

2009 ஜூலை 7]

73—

சுற்றுலாத் தலம்

வினா எண் 69479—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, புதுப்பாளையம், மலைக்கோயில் துர்க்கையம்மன் கோயிலை சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

அரசு எந்தவோர் இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. சுற்றுலாத் தலங்களின் முக்கியத்துவம் மற்றும் அங்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு அங்கு அடிப்படை வசதிகள் மட்டுமே செய்து வருகிறது.

மேல்மலையனூர் தொகுதி, புதுப்பாளையம், மலைக்கோயில் துர்க்கையம்மன் கோயிலில் அடிப்படை வசதிகள் செய்துதரும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

74—

அடிப்படை வசதி

வினா எண் 69497—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டத்திலுள்ள செஞ்சிக்கோட்டையைச் சுற்றி அடிப்படை வசதிகளைப் பெருக்கி சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டத்திலுள்ள செஞ்சிக்கோட்டையைச் சுற்றி அடிப்படை வசதிகளை அதிகரிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

[2009 ஜூலை 7

75—

சுற்றுலா மையம்

வினா எண் 72643—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, வத்தல்மலை பகுதியில் புதியதாக சுற்றுலா மையம் துவக்கவும், தொப்பையாறு நீர்த்தேக்க சுற்றுலா மையத்தை மேம்படுத்தவும், அதியமான் கோட்டை ஊராட்சி, அதியமான் கோட்டையிலுள்ள பெருமாள் கோயிலை சுற்றுலாத் துறைமூலம் மேம்படுத்தவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், வத்தல்மலையில் புதியதாக சுற்றுலா மையம் ஏற்படுத்தவோ, தொப்பையாறு நீர்த்தேக்க சுற்றுலா மையத்தை மேம்படுத்தவோ, அதியமான் கோட்டையிலுள்ள பெருமாள் கோயிலை மேம்படுத்தவோ செயற்குறிப்பு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

76—

சுற்றுலாத் தலம்

வினா எண் 76537—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வரலாற்று தொல்பொருள் ஆய்வு கிராமமான ஈரோடு சென்னிமலையிலுள்ள கொடுமணல் கிராமத்தைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2009 ஜூலை 7]

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு எந்தவோர் இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு அங்கு அடிப்படை வசதிகள் மட்டுமே செய்து தருகிறது. ஈரோடு சென்னிமலையிலுள்ள கொடுமணல் கிராமத்தில் அடிப்படை வசதிகள் செய்துதரும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

77—

சுற்றுலாத் துறைமூலம் கலை நிகழ்ச்சி

வினா எண் 80221—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறைக்கு சுற்றுலாப் பயணிகள் நாள்தோறும் அதிகமாக வருவதால் சுற்றுலாத் துறைமூலம் கலை நிகழ்ச்சிகள் நடத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

வால்பாறையில் சுற்றுலாத் துறைமூலம் கலை நிகழ்ச்சிகள் நடத்தும் செயற்குறிப்பு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

78—

குளிர்சாதன டூரிஸ்ட் ஆட்டோக்கள்

வினா எண் 80269—திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக சுற்றுலாத் துறையில் அங்கீகரிக்கப்பட்ட ஆட்டோ டிரைவர்கள் என்ற தரச் சான்றிதழ் வழங்கி புதுமையான குளிர்

சாதனப்படுத்தப்பட்ட ஆட்டோக்களை டூரிஸ்ட் ஆட்டோக்களாக அறிமுகப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

சுற்றுலாத் துறையின் சார்பில் தமிழ்நாட்டிலுள்ள முக்கிய சுற்றுலாத் தலங்களில் தற்போது சுற்றுலா நட்பு வாகனம் (Tourist Friendly Auto) என்ற திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. சுற்றுலாத் துறையில் அங்கீகரிக்கப்பட்ட ஆட்டோ டிரைவர்கள் என்ற சான்றிதழ் வழங்கி புதுமையான குளிர்சாதனப்படுத்தப்பட்ட ஆட்டோக்களை டூரிஸ்ட் ஆட்டோக்களாக அறிமுகப்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

79—

சேமிப்புக் கிடங்கு அமைத்தல்

வினா எண் 80762—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செங்கல்பட்டு மற்றும் திருக்கழுக்குன்றம் நகரங்களில் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம்மூலம் சேமிப்புக் கிடங்கு அமைக்க அரசு ஆவன் செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ. வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்திற்குச் சொந்தமான, விஞ்ஞான முறைப்படி கட்டப்பட்ட காஞ்சிபுரம் கிடங்குகள் 1965 ஆம் ஆண்டு முதலும், மதுராந்தகத்தில் உள்ள கிடங்குகள் 1984 ஆம் ஆண்டு முதலும், இயங்கி வருகின்றன. இக்கிடங்குகள் திருக்கழுக்குன்றம் மற்றும் செங்கல்பட்டு நகரங்களுக்கு மிக அண்மையில் அதாவது கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொலைவில் உள்ளன:

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2009 ஜூலை 7]

சேமிப்புக் கிடங்கின் பெயர்	திருக்கழுக்குன்றம்	செங்கல்பட்டு
மதுராந்தகம்	சுமார் 20 கி.மீ. தொலைவில்	சுமார் 25 கி.மீ. தொலைவில்
காஞ்சிபுரம்	சுமார் 50 கி.மீ. தொலைவில்	சுமார் 35 கி.மீ. தொலைவில்

மேலும், தற்சமயம் சேமிப்புக் கிடங்கின் பயனீட்டை பயன்படுத்தக்கூடிய தனியார், அரசு மற்றும் கூட்டுறவு சரக்கு வைப்பாளர்கள் மிகவும் குறைவாக இருப்பதால், திருக்கழுக்குன்றம் மற்றும் செங்கல்பட்டு ஆகிய இடங்களில் சேமிப்புக் கிடங்கினை அமைக்கச் சாத்தியக்கூறுகள் இல்லை. மேலும், அருகில் உள்ள தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்திற்குச் சொந்தமான கிடங்குகளில் போதிய இடவசதி உள்ளது.

80—

சேமிப்புக் கிடங்கு

வினா எண் 80763—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கின் மண்டல அலுவலகத்தை மதுரையில் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் மதுரை மண்டலத்தின்கீழ் 1. அருப்புக்கோட்டை 2. ராஜபாளையம் 3. மானாமதுரை 4. தேனி 5. திண்டுக்கல் 6. திருமங்கலம் 7. காரைக்குடி 8. பழனி மற்றும் 9. தாராபுரம் ஆகிய கிடங்குகள் இயங்கி வருகின்றன. சிறிது காலம் அதாவது 1988 முதல் 1991 ஆம் ஆண்டு வரை மதுரை மண்டல அலுவலகம் மதுரை நகரத்தில் உள்ள அரசடியில் வாடகை இடத்தில் இயங்கி வந்தது. இது சரக்கு வைப்பாளர்களைச் சந்திப்பதற்கும், மதுரை மண்டலத்தின்கீழ் இயங்கி வரும் சேமிப்புக் கிடங்குகளின் இயக்கத்தினை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கண்காணிப்பதற்குமுள்ள சிரமங்களைக் கருத்திற்கொண்டும், மேலும், சேமிப்புக் கிடங்குகளின் தொலைவினையும், மண்டல அலுவலகத்தின் வாடகையினைக் கருதியும், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கிற்குச் சொந்தமான கிடங்குகள் எதுவும் மதுரையில் இல்லாததாலும், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கின் மண்டல அலுவலகம் எல்லா வசதியும் உள்ள திண்டுக்கல் கிடங்கு வளாகத்திற்கே *1991* ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் மாற்றப்பட்டது. மேற்கூறிய காரணங்களினால், மதுரை மண்டல அலுவலகம், திண்டுக்கல்லில் இருந்து மதுரைக்கு மாற்றும் எண்ணம் எதுவும் தற்சமயம் அரசுக்கு இல்லை.

81—

சேமிப்புக் கிடங்கு

வினா எண் 80770—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சேமிப்புக் கிடங்குகளை அதிகப்படுத்தவும், மேம்படுத்தவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் இயங்கும் செயல்முறை கிடங்கு மற்றும் சேமிப்புக் கிடங்குகள் பற்றிய விவரம் கீழ்வருமாறு:

வ. எண்	கிடங்குகள் விவரம்	செயல்முறை கிடங்குகள்		சேமிப்புக் கிடங்குகள்	
		எண்ணம்	கொள்ளளவு மெ.டன்	எண்ணம்	கொள்ளளவு மெ.டன்
1.	சொந்தக் கிடங்குகள்	*169*		*28*	
2.	வாடகை-தனியார்	*12*		*12*	

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வ. எண்.	கிடங்குகள் விவரம்	செயல்முறை கிடங்குகள்		சேமிப்புக் கிடங்குகள்	
		எண்ணம்	கொள்ளளவு மெ.டன்	எண்ணம்	கொள்ளளவு மெ.டன்
3.	வாடகை-கூட்டுறவுத் துறை	17		3	
4.	அரசு கட்டடம்	2		1	
5.	தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம்	10		14	
6.	மத்திய சேமிப்புக் கிடங்கு	-		2	
7.	இந்திய உணவுக் கழகம்	-		1	
	மொத்தம்	210	577430	61	296415

இவற்றின் மொத்த கொள்ளளவு 8,73,845 மெ. டன் ஆகும்.

மேற்கூறப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் தற்போது சேமிப்புக் கிடங்குகள் போதுமான எண்ணிக்கையில் உள்ளன. இருப்பினும் அவசர அவசிய காலங்களில் சொந்தக் கிடங்குகள் கட்டுவதற்கும், மேலும், வாடகைக்கு கிடங்குகளை அமர்த்திக்கொள்ளவும் அவ்வப்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

82—

சேமிப்புக் கிடங்கு

வினா எண் 94867—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஆத்தூரில் உணவு தானிய சேமிப்புக் கிடங்கு கட்ட அரசு ஆவன செய்யுமா.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஆத்தூரில் 3,400 மெ.டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்கு 1990-1991ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் பொது விநியோகத் திட்ட அரிசி மற்றும் சர்க்கரை ஆகியவைகளின் சரக்குகளை சேமித்து வைக்க ஆத்தூரில் உள்ள சேமிப்புக் கிடங்கை உபயோகப்படுத்தி வருகிறது. எனவே, சேலம் மாவட்டம், ஆத்தூரில் உணவு தானிய சேமிப்புக் கிடங்கு கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

83—

சேமிப்புக் கிடங்கு

வினா எண் 95467—திரு. வை. காவேரி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடியில் உணவுப் பொருட்கள் சேமிப்புக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் சந்திப்பில் 28,600 மெ.டன் கொள்ளளவு கொண்ட 9 சேமிப்புக் கிடங்குகள் கட்டப்பட்டுள்ளன. சேலம் நகரத்தில் 14,200 மெ.டன் கொள்ளளவு கொண்ட 8 சேமிப்புக் கிடங்குகள் இயங்கி வருகின்றன. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவன சேமிப்புக் கிடங்குகளுக்கும் எடப்பாடிக்கும் தோராயமாக 40 கி.மீ. தொலைவு உள்ளது. மேலும் சேமிப்புக் கிடங்கினை பயன்படுத்துவோர் (தனியார், கூட்டுறவு மற்றும் அரசு முகவர்கள்) எடப்பாடியில் மிகவும் குறைவு என்பதால் எடப்பாடியில் புதியதாகச் சேமிப்புக் கிடங்கு அமைக்கும் கருத்துரு ஏதும் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY தமிழ்நாடு சட்டப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2009 ஜூலை 7]

84—

வாரிய வீடுகள்

வினா எண் 3182—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, சேத்துமடை அண்ணாநகர் பகுதியில் குடிசை மாற்று வாரியம்மூலம் வீடு கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன், குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது பெருநகரங்கள் தவிர இதர நகரங்களில் உள்ள குடிசைப்பகுதி வாழ் குடும்பங்களுக்கு வீடுகள் அமைக்க நிதி ஆதாரம் இல்லை. எனவே சென்னை, மதுரை மற்றும் கோவை தவிர இதர நகரங்களில் உள்ள குடிசைப்பகுதி வாழ் குடும்பங்களுக்கு வீடுகள் அமைக்க மைய அரசின் 13-வது நிதிக் குழுவிடம் நிதி ஆதாரம் கோரப்பட்டுள்ளது. இந்நிதி ஆதாரம் கிடைக்கப் பெற்றபின் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. மைய அரசின் 13-வது நிதிக் குழுவின் பரிந்துரை 2010-க்கு பின் பெறப்பட்டு துரித நடவடிக்கை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

85—

வீடுகள் சீரமைப்பு

வினா எண் 62323—திரு. தா. மலரவன்: மாண்புமிகு குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் செல்லபுரம், கெம்பட்டி காலனி பகுதிகளிலுள்ள பழுதடைந்த வீடுகளைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன், குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்:

கோவை, கெம்பட்டி காலனி பகுதியில் உள்ள ஸ்லேட்டர் ஹவுஸ், செல்வபுரம் பகுதியிலுள்ள செல்வபுரம் வடக்கு பேரூர் மற்றும் தெற்கு பேரூர் அடுக்குமாடிக் குடியிருப்புகள் வீட்டு வசதி வாரியத்தினால் 1967-ல் கட்டப்பட்டு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திடம் 11-8-2004 அன்று ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குடிசை மாற்று வாரியத்தின் அனைத்து குடியிருப்புகளின் ஸ்திரத் தன்மையை ஆராய கோவை மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையின்கீழ் நிபுணர்கள் குழு அமைக்கப்பட்டது. அவ்வாறு அமைக்கப்பட்ட தொழில்நுட்பக் குழு மேற்கண்ட திட்டப் பகுதியை 11-11-2007 அன்று ஆய்வு செய்து தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது. தொழில்நுட்பக் குழு தனது அறிக்கையில் கெம்பட்டி காலனி ஸ்லேட்டர் ஹவுஸ், செல்வபுரம் வடக்கு மற்றும் தெற்கு பேரூர் ரோட்டில் அமைந்துள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகள் இடிந்து விழும் தருவாயில் இருப்பதாகவும் மக்கள் வாழ்வதற்குத் தகுதியற்றவை என்றும் அறிக்கையினை சமர்ப்பித்தது. தொழில்நுட்பக் குழுவின் அறிக்கையை மாவட்ட ஆட்சித் தலைவர் 27-11-2007 அன்று அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தெரிவித்து குடியிருப்பைக் காலி செய்ய ஒத்துழைக்குமாறு தெரிவித்தார். அதன் அடிப்படையில் குடியிருப்புகளைக் காலி செய்து தற்காலிகமாக வேறு இடத்திற்குக் குடிபெயர வாடகைச் செலவிற்காக ஒரு குடும்பத்திற்கு ரூ.8,000 வழங்கவும் அரசு ஆணை பிறப்பித்தது.

மேற்கண்ட கருணைத் தொகையைப் பெற்றுக் கொண்டு தாங்கள் குடியிருக்கும் குடியிருப்பைக் காலி செய்து புதிதாகக் கட்டும் குடியிருப்புகளில் எந்தத் தளத்தில் தற்போது உள்ளார்களோ அதே தளத்தில் குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்படும் என்று உத்திரவாதம் அளித்தும் குடியிருப்புகளைக் காலி செய்ய மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். தங்களுடைய குடியிருப்புகள் நல்ல நிலையில் உள்ளதாகவும் ஒதுக்கீடுதாரர் அனைவரும் தாங்களே பழுதுபார்த்துக் கொள்வதாகவும் கூறினார்கள்.

மேற்கண்ட திட்டப் பகுதியின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவுடன் பலமுறை கோவை வருவாய்க் கோட்டாட்சியர் முன்பாக சமாதானக் கூட்டம் நடைபெற்றது. மக்கள் பிரதிநிதிகள் தங்கள் குடியிருப்புகள்

நன்றாக உள்ளதாகவும் குடியிருப்புகளை இடிக்கக்கூடாது என்றும் அவர்களது கருத்தைக் கூறினார்கள். அதன் பிறகு தபால்மூலமாக வீட்டின் ஸ்திரத் தன்மையை விளக்கமாக எடுத்துரைத்து குடியிருப்புகளைக் காலி செய்ய அறிவிப்பு (Notice) அனுப்பப்பட்டது. மக்கள் அதனைப் பெற்றுக் கொள்ளாமல் திருப்பி அனுப்பிவிட்டனர். மேற்கண்ட அறிவிப்பு சம்பந்தமாக ஒதுக்கீடுதாரர்கள் சிலர் எழுத்து மூலமாக தங்கள் குடியிருப்புகள் நன்றாக உள்ளதாகவும், தாங்களே பழுதுபார்த்துக்கொள்கின்றோம் என்றும், அதன் பிறகு எந்தவித அசம்பாவிதங்கள் ஏற்பட்டாலும் தாங்களே பொறுப்பேற்பதாகவும் தெரிவித்துள்ளனர். குடியிருப்பின் ஸ்திரத் தன்மை பற்றி விளக்கமாக 24-10-2008 அன்று தினத்தந்தி செய்தித் தாளில் வெளியிடப்பட்டது.

இச்சூழ்நிலையில் கோவை மாவட்ட ஆட்சியர் மாவட்ட தொழில் நுட்பக் குழுவினை மீண்டும் கூட்டி அதனுடைய கருத்துரைகளைப் பெற்று அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

இதற்கிடையில் பயனாளிகள் குடியிருப்பைக் காலி செய்து ஒத்துழைக்கும்பட்சத்தில் அதே இடத்தில் மாற்றுக் குடியிருப்புகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

86—

விடுதி

வினா எண் 51626—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கொசூரில் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கொசூரில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி துவங்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

87—

சொந்தக் கட்டடம்

வினா எண் 85658—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு நவீன வசதிகளுடன் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டுவது தொடர்பாக, அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனினும் இந்த ஆண்டு சிவகங்கை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

88—

சாலை வசதி

வினா எண் 30230—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, தளிஞ்சி குடியேற்றப் பகுதி, சரக்குப்பட்டி முதல் தளிஞ்சி வரை சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* உடுமலைப்பேட்டை தொகுதி, தளிஞ்சி குடியேற்றப் பகுதி சரக்குப்பட்டி முதல் தளிஞ்சி வரையிலுள்ள சாலையானது

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2009 ஜூலை 7]

இந்திரா காந்தி வன உயிரினச் சரணாலயப் பகுதியினுள் அமைந்துள்ளதாகும். இச்சாலையை மேம்படுத்தி பராமரிக்கப்பட வேண்டுமானால், வனப் பாதுகாப்புச் சட்ட விதிகளுக்கு உட்பட்டு தேசிய வன உயிரின குழுமம் மற்றும் உச்ச நீதிமன்றத்தின் முன் அனுமதி பெற்ற பிறகு சாலை பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும் இச்சாலையின் தூரம் 18 கி.மீ. இதனைப் பராமரிக்க ஒரு கிலோ மீட்டருக்கு ரூ.3 இலட்சம் வீதம் ரூ.54 இலட்சம் தேவைப்படும்.

89—

சாலை வசதி

வினா எண் 35800—திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, மஞ்சுகொண்டப்பள்ளி ஊராட்சி மஞ்சுகொண்டப்பள்ளி, இரத்தினகிரி ஊராட்சி குடியூர், நாட்ராம்பாளையம் ஊராட்சி நூறு ஒந்துசாமி, பெட்டமுகிலாளம் ஊராட்சி, பெட்டமுகிலாளம் முதல் காலிகட்டாவரை, குல்லட்டி முதல் பழையூர் தொலுவபெட்டா வரை, மாடக்கல் ஊராட்சி உலிபெண்டா, உனிசேநத்தம் ஊராட்சி பேல்கரை ஆகிய மலை கிராமங்களுக்கு தார்ச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தளி தொகுதி மஞ்சுகொண்டப்பள்ளி ஊராட்சி, மஞ்சுகொண்டப்பள்ளி-PMGSY திட்டத்தின்கீழ் 2005-2006 ஆம் ஆண்டு அஞ்செட்டி உரிகம் சாலை முதல் பேல்பட்டி வரை உள்ள வனச் சாலையினை மேம்படுத்த நெடுஞ்சாலைத் துறைமூலம் அனுமதிக்கப்பட்டுள்ளது. பேல்பட்டி முதல் மஞ்சுகொண்டப்பள்ளி வரையுள்ள சாலை காப்புக் காட்டிற்கு வெளியே உள்ளது. இந்தச் சாலையினை மேம்படுத்த ஊராட்சித் துறைமூலமாக நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

இரத்தினகிரி ஊராட்சி-குடியூர் கிராமம்-குடியூர்-கூச்சவாடி சாலை அய்யூர் தொடர்ச்சி காப்புக் காட்டில் அமைந்துள்ளது. இதன் அனுமதிக்கப்பட்ட உரிமை வழிப் பாதையின் அகலம் 10 கஜம் ஆகும்.

நாட்ராம்பாளையம் ஊராட்சி, நூறு ஒந்துசாமி கிராமம்-அத்திநத்தம் முதல் ஒந்துசாமி மலை வரையுள்ள சாலை வருவாய் நிலம் வழியாகச் செல்கிறது.

பெட்டமுகிலாளம் ஊராட்சி, பெட்டமுகிலாளம் முதல் காலிகட்டா வரை சுமார் 1½ கி.மீ. தூரம் காலிக்கட்டா காப்புக் காடு மாரண்டஹள்ளி காப்புக் காடு எல்லையாக அமைந்துள்ளது.

குல்லட்டி முதல் மழையூர், தொலுவபெட்டா வரை-குல்லட்டி காப்புக் காட்டில் அனுமதிக்கப்பட்ட நடைபாதையாகும். இதன் அகலம் 6 கஜம் ஆகும்.

மாடக்கல் ஊராட்சி, உலிபெண்டா கிராமம்-மாடக்கல் முதல் உலிபெண்டா வரையிலான பாதை உலிபெண்டா காப்புக் காடு அறிவிக்கையின்படி அனுமதிக்கப்பட்ட நடைபாதை மற்றும் கால்நடை பாதையாகும். இதன் அகலம் 3 கஜம் ஆகும்.

உனிசேநத்தம் ஊராட்சி, பேல்கரை கிராமம்-கும்பளாபுரம் முதல் பேலக்கரை கிராமம் வரையிலான பாதை தளி காப்புக் காடு அறிவிக்கையின்படி அனுமதிக்கப்பட்ட நடைபாதையாகும். அதன் அகலம் 6 கஜம் ஆகும்.

மேலே குறிப்பிட்டுள்ள நடைபாதைகளை தார்ச் சாலையாக அமைக்கப்பட வேண்டுமானால் இப்பாதைகளை அகலப்படுத்தப்பட வேண்டும். வன நிலங்களை வனமற்ற பிற பணிகளுக்கு பயன்படுத்த வேண்டுமானால் வனப் பாதுகாப்புச் சட்டம் 1980-ன்படி மத்திய அரசின் முன்அனுமதி பெறப்பட வேண்டும். எனவே, வனப் பாதுகாப்புச் சட்டம், 1980-ன்படி உரிய கருத்துரு ஊரக வளர்ச்சி/ நெடுஞ்சாலைத் துறையிடமிருந்து உரிய படிவத்தில் பிரேரணைகளை அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது. அப்பிரேரணைகள் வரப் பெற்றவுடன் சாலையை அகலப்படுத்தி தார்ச் சாலை அமைக்க மத்திய அரசின் முன்அனுமதி பெற தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

90—

சாலை வசதி

வினா எண் 45935—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2009 ஜூலை 7]

(அ) ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஒன்றியம், ஐயப்பமடை-அம்பேத்கர் காலனி, வெங்கமேடு வரையிலுள்ள சாலையை வனத் துறை அனுமதியோடு தார்ச் சாலையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இவ்வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையானது ஈரோடு மாவட்டம், ஈரோடு வனக் கோட்டத்தை சார்ந்த வெள்ளிக்காடு காப்புக் காட்டில் அமைகிறது. இப்பாதைக்கு வெள்ளிக்காடு காப்புக் காட்டில் 6 கஜம் (5.5.மீ) அகலத்திற்கு வழி உரிமம் வழங்கப்பட்டுள்ளது. இப்பாதையின் நீளம் 1.50 கி.மீ. இப்பாதை ஆரம்ப காலத்தில் மண் சாலையாக உபயோகப்படுத்தப்பட்டு வந்தது. பின்னர் பஞ்சாயத்து நிதியின்மூலமாக இச்சாலை கல்பரப்பிய சாலையாக பராமரிக்கப்பட்டு வருகிறது. இச்சாலையினை தார்ச் சாலையாக மாற்ற கி.மீட்டருக்கு ரூ.12.00 இலட்சம் வீதம் 1½ கி.மீ.க்கு ரூ.18.00 இலட்சம் நிதி தேவைப்படுகிறது. இப்பணியினை மேற்கொள்ள மாவட்ட நிர்வாகமோ/ஊராட்சி ஒன்றியமோ/ பஞ்சாயத்தோ நிதி ஒதுக்கீடு வழங்கும்போது இச்சாலையை தார்ச் சாலையாக மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

91—

சாலை வசதி

வினா எண் 49421—திரு. கே.பி. இராமசுவாமி: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராசிபுரம் தொகுதி, ரா. புதுப்பட்டி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி முதல் புதுமாரியம்மன் கோயில் வரை தார்ச்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

ராசிபுரம் தொகுதி, ரா. புதுப்பட்டி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைந்துள்ள இடத்திலிருந்து புதுமாரியம்மன்

LEGISLATURE
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கோயில் வரை தார்ச் சாலை அமைக்க கோரப்பட்டுள்ள பகுதி காப்புக் காட்டிற்கு வெளியே அமைந்துள்ள சாலையாகும். மேற்படி சாலையானது 1913-14 ஆம் ஆண்டில் புதுப்பட்டியிலிருந்து புதுப்பட்டி காப்புக் காடு வரை செல்ல 2.8 கி.மீ. தூரம் 3.60 மீட்டர் அகலத்திற்கு அமைக்கப்பட்டுள்ள மண் சாலையாகும். இச்சாலை இதுவரை வனச்சாலை என்றே அழைக்கப்பட்டு வருவாய் துறை ஆவணங்களிலும் வனச் சாலை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்சமயம் மேற்படி சாலையின் இருபுறமும் உள்ள நில உரிமையாளர்கள் தங்கள் விவசாய விளை பொருட்களை எடுத்து வர இச்சாலையினை உபயோகப்படுத்தி வருகின்றனர். இச்சாலை வனத் துறை அதிகாரிகள் போக்குவரத்திற்கும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இச்சாலை ஒதுக்கு காட்டிற்கு வெளியே இருப்பினும் வனத் துறைக்குச் சொந்தமான சாலையாகும். இந்த சாலையினை மேம்படுத்த நெடுஞ்சாலைத் துறையினரோ அல்லது வேறு துறையினரோ முன்வந்து அனுமதி கோரினால் வனத் துறை அனுமதியளிக்கும்.

92—

கசிவுநீர்க் குட்டை அமைத்தல்

வினா எண் 50410—திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, குண்டலப்பட்டி ஊராட்சி, மலையனூர் வனப் பகுதியில் கசிவுநீர்க் குட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதி, குண்டலப்பட்டி ஊராட்சி மலையனூர் பகுதியானது காப்புக் காடு பகுதி அல்ல. இப்பகுதி தீர்வை ஏற்படாத அரசு புறம்போக்கு நிலமாகும். இப்பகுதி வனத் துறையின் கட்டுப்பாட்டில் இல்லை.

காப்புக் காடு மற்றும் அதன் அருகாமையில் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் கசிவுநீர்க் குட்டைகள் அமைக்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் புதிய வேலைகள் மேற்கொள்வது

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2009 ஜூலை 7]

2008-2009 உடன் முடிவடைகிறது. ஒவ்வொரு வருடமும் மாநிலம் முழுவதும் தரம் குறைந்த காட்டுப் பகுதிகளின் அருகாமையில் உள்ள கிராமங்கள் குறிப்பிட்ட எண்ணிக்கையில் தேர்வு செய்யப்பட்டு அந்த கிராம மக்களின் பங்கேற்பு மற்றும் ஒத்துழைப்புடன் இத்திட்டம் நிறைவேற்றப்படுகிறது. காடுகளில் மரம் இல்லாத இடைவெளிகளில் மரக்கன்றுகள் நட்டு காடுகளின் வளத்தினை மேம்படுத்துதல் மற்றும் கசிவுநீர்க் குட்டைகள், தடுப்பணைகள் ஆகியவை கட்டப்பட்டு நிலத்தடி நீரை உயரச் செய்தல் ஆகிய பணிகள், இத்திட்டத்தின்கீழ், கிராமப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதி வன நிலமல்லாத நிலையில் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தில் சேர்க்கப்படாததால் இத்திட்டத்தின்கீழ் கசிவுநீர்க் குட்டை அமைக்க வாய்ப்பில்லை. இத்திட்டத்தினை தவிர வேறு திட்டங்களில் கசிவுநீர்க் குட்டை அமைக்க வனத் துறைக்கு தற்சமயம் நிதி ஒதுக்கீடு ஏதும் இல்லாததால் இப்பணியினை வனத் துறை மேற்கொள்ளும் வாய்ப்பில்லை.

93—

சாலை அமைத்தல்

வினா எண் 50411—திரு. த.அ. மேகநாதன்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, பையூர் ஊராட்சி, கீழ்பையூர் முதல் மாதனூர் வரை சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கீழ்பையூர் முதல் மாதனூர் வரை செல்லும் சாலை அமைக்க கோரும் பகுதி வெண்ணேஸ்வரமடம் காப்புக் காட்டின் எல்லையோரம் அமைந்த பகுதியாகும். இச்சாலை காப்புக் காட்டின் எல்லையோரம் வருவாய்த் துறை நிலத்தின் வழியாக செல்கிறது. இந்த வருவாய் நிலமானது கிராமப் பதிவேட்டில் மலை (Hills) என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இப்புலத்தில் கிருஷ்ணகிரி இடைபடு காடுகள் கோட்டம்மூலம் தோட்டம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. எனவே இப்பகுதியில் சாலையமைக்க வேண்டுமெனில் வனத் துறையின் இசைவு பெற்று நெடுஞ்சாலைத்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

துறையின் மூலமாகவோ அல்லது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலமாகவோ சாலையமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பாதை செல்லும் புலமானது வருவாய் துறை நிலமாக இருப்பினும் இப்புலத்தில் கிருஷ்ணகிரி இடைபடு காடுகள் கோட்டம்மூலம் தோட்டம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதால் வனத் துறையின் இசைவு அளிக்கப்பட்டு சாலை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

94—

சாலையைப் புதுப்பித்தல்

வினா எண் 25753—திரு. சு.ப. வேலுமணி: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பேரூர் தொகுதி, மதுக்கரையிலிருந்து வாளையாறு வரையுள்ள சாலையைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் முதல் கொச்சி வரையிலான தேசிய நெடுஞ்சாலை எண் 47-ல் சேலம் முதல் வாளையாறு (தமிழ்நாடு எல்லை) வரையிலான (கி.மீ. 0/000 முதல் கி.மீ. 182/250 முடிய) தற்போது இருவழிச்சாலையாக உள்ள தேசிய நெடுஞ்சாலையினை 4-வழிச்சாலையாக மேம்படுத்தும் திட்டம், தேசிய நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி திட்டம்-பகுதி II-ல் இந்திய அரசால் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இதில் சேலம் முதல் செங்கப்பள்ளி வரை (கி.மீ. 0/000 முதல் 100/000 முடிய) உள்ள 100 கி.மீ. நீளமுள்ள தேசிய நெடுஞ்சாலைப் பணிகள் கடந்த 19-1-2006 இல் துவக்கப்பட்டு சித்தோடு-பெருந்துறை-சிப்காட் சந்திப்பு வரை தற்போது முடிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய பகுதியில் பணி முடிக்கும் தருவாயில் உள்ளது. இதனைத் தொடர்ந்து செங்கப்பள்ளி முதல் வாளையாறு (தமிழ்நாடு எல்லை) முடிய (கி.மீ.100/00 முதல் 182/250 வரை) உள்ள பகுதியில் ஏற்கெனவே எல்&டி கட்டுமான நிறுவனத்தாரால் புறவழிச்சாலை அமைக்கப்பட்டு அவர்களின் பராமரிப்பில் உள்ள (கி.மீ.141/000 முதல் 170/000 முடிய) 29 கி.மீ. நீளம் நீங்கலாக 53.250 கி.மீ.

நீளமுள்ள சாலையினை கி.மீ. 100/000 முதல் 141/000 முடிய 41 கி.மீ. தூரம் 6 வழிச்சாலையாகவும், கி.மீ. 170/000 முதல் 182/250 முடிய உள்ள 12.500 கி.மீ. தூரம் 4 வழிச்சாலையாக மேம்படுத்த விரிவான திட்ட அறிக்கைக்கு இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு தகுதியுள்ள நிறுவனத்தை தேர்வு செய்ய ஒப்பந்தப்புள்ளிகள் (Pre-Qualification Tender) கோரப்பட்டுள்ளன என இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் கோயம்புத்தூர் திட்ட இயக்குநர் தெரிவித்துள்ளார். அதனை முடிவு செய்து திட்டத்தினை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிய வருகிறது.

95—

சாலை வசதி

வினா எண் 81974—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிங்கப்பெருமாள் கோவில்-திருப்பெரும்புதூர் சாலையை ஆறுவழிச் சாலையாக அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், சிங்கப்பெருமாள் கோவில்-திருப்பெரும்புதூர் சாலை முதற்கட்டமாக நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தப்பட்டு வருகிறது. ஆறு வழிச்சாலையாக மாற்றுவதற்குத் தேவையான நில எடுப்புப் பணி முடிந்தவுடன் மேலும் அகலப்படுத்தி ஆறு வழிச்சாலையாக விரிவுபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இத்திட்டத்திற்கு ரூ. 300 கோடி அரசு அனுமதித்துள்ளது.

96—

சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 69073—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதி, மேலேரிப்பாக்கம் முதல் சோகண்டி வரை சாலையை சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையானது செங்கல்பட்டு (நெ) கோட்டத்தின் பராமரிப்பில் உள்ள 'சட்ராஸ்-செங்கல்பட்டு-காஞ்சிபுரம்-அரக்கோணம்-திருத்தணி சாலையில் கி.மீ. 24/4-ல் பிரிந்து சோகண்டி (வழி) வீரகுப்பம் சாலை கி.மீ 0/0-8/28 எனும் 8.28 கி.மீ. நீளமுடைய ஒரு வழித்தடமான மாவட்ட இதர சாலையாகும். இச்சாலையில் கி.மீ. 0/0 - 2/0 வரை உள்ள பழுதடைந்த பகுதிகள் 2006-2007 ஆம் ஆண்டு சிறப்பு பழுதுபார்த்தல் (Special Repairs) திட்டத்தின்கீழ் ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைத்து பணிகள் 30-6-2007 இல் முடிக்கப்பட்டு நல்ல நிலையில் உள்ளன.

மேலும், கி.மீ. 2/0-6/0வரை உள்ள பழுதடைந்த பகுதியை 2007-2008 ஆம் ஆண்டு சிறப்புப் பழுதுபார்த்தல் திட்டத்தின்கீழ் ரூ.51.00 இலட்சம் மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு பணிகள் யாவும் 31-10-2008-ல் முடிக்கப்பட்டு நல்ல நிலையில் உள்ளன. மீதமுள்ள கி.மீ. 6/0-8/28 வரை உள்ள சாலைப் பகுதியும் போக்குவரத்துக்கு ஏற்றவாறு நல்ல நிலையில் உள்ளது.

97—

சத்துணவுக் கூடம்

வினா எண் 8081—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, சென்னிமலை ஒன்றியம், திப்பம்பாளையம் அரசு உயர்நிலைப் பள்ளியில் சத்துணவுக் கூடம் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டத்தில் 2008-2009 ஆம் ஆண்டில் 109 சத்துணவு மையங்கள் கட்ட ரூ. 65.40 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு

2009 ஜூலை 7]

செய்யப்பட்டது. இந்நிதி ஒதுக்கீட்டில் துவக்கப் பள்ளிகளுக்கு மட்டும் சத்துணவுக் கூடம் கட்ட ஆணை உள்ளது. எனவே, திப்பம்பாளையம் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்ட நிதியிலோ அல்லது பாராளுமன்ற உள்ளூர் தொகுதி மேம்பாட்டு நிதியிலோ சத்துணவுக் கூடம் கட்டும் பணி மேற்கொள்ளப்படும்.

98—

சத்துணவுக் கூடம்

வினா எண் 51088—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி நகராட்சி, இந்திரா நகர் துவக்கப்பள்ளியில் சத்துணவுக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி நகராட்சி, இந்திரா நகர், ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளி வளாகத்தில் 5 ஆண்டுகளுக்கு முன்பு சட்டமன்ற உறுப்பினர் உள்ளூர் அபிவிருத்தித் திட்டத்தில் கட்டப்பட்ட சிமெண்ட் தளம் கொண்ட சமையலறைக் கட்டடம் நல்ல முறையில் உள்ளது. சத்துணவு இருப்பு பொருட்களைத் தற்போது பள்ளி நடைபெறும் கட்டடத்தில் வைத்து பாதுகாத்து வருகின்றனர். இருப்பறைக் கட்டடம் மட்டும் தனியாகத் தேவைப்படுகிறது. இருப்பறைக் கட்டடம் கட்ட போதிய இடவதியும் உள்ளது. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ. 75,000/- மதிப்பீட்டில் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

99—

மீன் பண்ணை அலுவலகம்

வினா எண் 62555—திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை தொகுதி சிவகங்கையில் மாவட்ட மீன் பண்ணை அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை தொகுதியில், சிவகங்கையைத் தலைமையிடமாகக் கொண்டு மீன் துறை உதவி இயக்குநர் அலுவலகம் ஒன்று இயங்கி வருகிறது. மீனவர்களுக்கான நலப் பணிகள் அனைத்தும் இவ்வலுவலகத்தால் கவனிக்கப்பட்டு வருவதால் சிவகங்கையில் மாவட்ட மீன் பண்ணை அலுவலகம் அமைக்கும் சாத்தியக் கூறுகள் ஏதும் தற்போது இல்லை.

100—

பால் குளிரூட்டும் நிலையம்

வினா எண் 75732—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேல்மலையனூர் தொகுதியில் உள்ள அவலூர்பேட்டையில் புதிய பால் குளிரூட்டும் நிலையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேல்மலையனூர் தொகுதியில் 32 பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்களிலிருந்து நாளொன்றுக்கு 7,740 லிட்டர் பால் ஆலம்பூண்டி மற்றும் செஞ்சி தொகுப்பு பால் குளிர்விக்கும் மையங்கள் மூலம் சேகரம் செய்யப்படுகிறது. அவலூர்பேட்டையிலிருந்து 23 கி.மீ. தொலைவில் ஆலம்பூண்டி மற்றும் 27 கி.மீ. தொலைவில் செஞ்சி தொகுப்பு பால் குளிர்விக்கும் மையங்கள் அமைந்துள்ளன.

அவலூர்பேட்டை பகுதியில் செயல்படும் 2 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நாளொன்றுக்கு சுமார் 700 லிட்டர் பால் மட்டுமே சேகரம் செய்யப்பட்டு செஞ்சி தொகுப்பு பால் குளிர்விக்கும் மையத்திற்கு அனுப்பப்பட்டு வருவதால், தற்போது மேல்மலையனூர் தொகுதி, அவலூர்பேட்டையில் புதியதாக பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

மருத்துவக் கல்லூரி பயிற்சி மருத்துவர்களின் வேலைநிறுத்தம்

திரு. சி. ஞானசேகரன்: Speaker Sir, ...

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சொல்லுங்கள், திரு. பீட்டர் அல்போன்ஸ்.*

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சில நாட்களாக நம்முடைய மருத்துவக் கல்லூரிகளிலே பயின்று பயிற்சி எடுக்கக்கூடிய பயிற்சி டாக்டர்கள் தொடர்ந்து வேலைநிறுத்தம் செய்து வருகிறார்கள். இதன்மூலமாக, அரசு மருத்துவமனைகளிலே சிகிச்சை பெறுகின்ற நோயாளிகள், பெரும் துன்பத்திற்கும், சிரமத்திற்கும் உள்ளாயிருக்கிறார்கள். இதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின்...*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. பீட்டர் அல்போன்ஸ், இன்றைக்குக் கேள்வி நேரத்தையே ஒத்திவைத்திருக்கிறோம். அதனால்* No zero hour. *நாளைக்கு எடுப்போம்.*

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: *சரி. (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நாளைக்கு எடுப்போம் என்று சொல்லிவிட்டேன். உட்காருங்கள். வேறு* subject *இருந்தால் எல்லாவற்றையும் நாளைக்கு எடுப்போம். உட்காருங்கள் (குறுக்கீடு) நாளைக்குத்தான் எடுப்போம் என்று சொல்கிறேன். பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்களைப் பேச விட்டால் எல்லோரும் எழுந்து சொல்லிக்கொண்டேயிருப்பார்கள்.* It will take time. Please sit down. *(குறுக்கீடு) திரு. கே.ஏ. செங்கோட்டையன், என்ன? சொல்லுங்கள்.*

***திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயிற்சி டாக்டர்கள் குறித்து ஒரு சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நாளை அதை எடுத்துக்கொள்வீர்களா என்பதை உங்கள்மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பின்னர் எடுத்துக்கொள்ளப்படும் என்று சொல்லியிருக்கிறேன். உட்காருங்கள்.*

3. விதி 110-ன்கீழ் அறிக்கை

பண்ணைசாரா கூட்டுறவுக் கடன் புதிய சிறப்புத் தீர்வுத் திட்டம்– வட்டி குறைப்பு, அபராத வட்டி மற்றும் இதர செலவுத் தொகை தள்ளுபடி குறித்து மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அவருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகச் சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் பின்வரும் அறிக்கையினை அவைமுன் வைக்கின்றேன்:

கழக அரசு பொறுப்பேற்ற 13–5–2006 அன்றே விவசாயிகளின் துயர் துடைக்க ரூபாய் 7,000 கோடி அளவிற்கான விவசாயக் கூட்டுறவுக் கடன்களை இரத்துச் செய்து ஆணையிடப்பட்டது. ஆனால், விவசாயம் சாராத தொழில்களுக்குக் கூட்டுறவு வங்கிகள்மூலம் வழங்கப்பட்ட கடன்கள் தொழிற்கடன்கள் என்பதால், அவை இரத்துச் செய்யப்படவில்லை. இவ்வாறு தொழில் சார்ந்த பண்ணைசாராக் கடன்களையும், தள்ளுபடி செய்ய கோரிக்கை எழுப்பப்பட்டது. இத்தகைய கடன்கள், விசைத்தறி, போக்குவரத்து வாகனங்கள், செங்கல் சூளை போன்ற தொழில்களுக்காக கடனாகக் கூட்டுறவு வங்கிகளால் வழங்கப்பட்டவை. இக்கடன்களின்மீது, அவை வழங்கப்பட்ட காலத்தில் நடைமுறையில் இருந்த அதிக வங்கி வட்டி வீதத்தையொட்டி 18 விழுக்காடு வரை கூட்டு வட்டி வசூலிக்கப்பட்டது. மேலும், தவணை தவறிய தொகைக்கு 3 விழுக்காடு அபராத வட்டியும் வசூலிக்கப்பட்டது. இவை சொத்து அடமானத்தின் அடிப்படையில் தொழில் செய்வதற்காகப் பெறப்பட்ட கடன் என்பதால், முழுவதும் தள்ளுபடி செய்ய இயலாது என்ற நிலையில், கடன்பெற்றோர் தொடர்ந்து தொழில் செய்திட ஏதுவாகப் புதிய திட்டம் ஒன்று 27–12–2006 அன்று அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்தின்படி, கடனை உடனடியாகச் செலுத்த முன்வருபவர்களுக்கு அத்தகைய கடன்கள்மீதான கூட்டு வட்டி 18 சதவீதம் வரை இருந்ததை மாற்றி, 31–3–2001 முதலாக 12 சதவீத சாதாரண வட்டி செலுத்தலாம் எனக் குறைக்கப்பட்டது. மேலும், அபராத வட்டியும் தள்ளுபடி செய்யப்பட்டது. இந்தச் சலுகைத் திட்டம் 30–6–2009 வரை நடைமுறையில் செயல்படுத்தப்பட்டது.

2009 ஜூலை 7] [பேராசிரியர் க. அன்பழகன்]

இந்தச் சலுகைத் திட்டத்தின்கீழ் 31–3–2009 வரை ரூபாய் 509.99 கோடி கடன் தொகை வசூலிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் கடன் பெற்றவர்கள் ரூபாய் 127.93 கோடி அளவுக்குச் சலுகை பெற்றுள்ளனர். 31–3–2009 நிலவரப்படி இன்னமும் ரூபாய் 709.51 கோடி மொத்த கடன் பாக்கி நிலுவையில் உள்ளது.

முற்பகல் 9–35

இந்நிலையில், இத்தகைய பண்ணைசாராக் கடன்மீதான வட்டியையாவது தள்ளுபடி செய்து, கடனைத் திருப்பிச் செலுத்த உதவிட வேண்டுமென்ற கோரிக்கைகள் பல்வேறு தரப்பிலிருந்தும் வலியுறுத்தப்பட்டு வருகின்றன. எனவே, அதிக எண்ணிக்கையிலானோர் இத்திட்டத்தைப் பயன்படுத்தி கடன் தீர்வு செய்துகொள்ள வழிவகுத்தால் கூட்டுறவு வங்கிகளும், கடன் பெற்றவர்களும் பயன்பெறுவர் என்பதால், இந்த வட்டிக் குறைப்புத் திட்டத்தின்மூலம் மேலும் சலுகைகளை அளிக்க அரசு முடிவு செய்து, ஒரு சிறப்பு கடன் தீர்வுத் திட்டத்தைப் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு செயல்படுத்த முடிவெடுத்துள்ளது:

புதிய சிறப்பு கடன் தீர்வுத் திட்டத்தின்படி இது 31–3–2007–க்குள் இறுதித் தவணை செலுத்த வேண்டியிருந்து, அதைக் கட்டத் தவறிய பண்ணை சாராக் கூட்டுறவுக் கடனுக்கு மட்டுமே பொருந்தும்.

கடனைத் திரும்பச் செலுத்த முன்வருபவர்களுக்குத் தற்போது வசூலிக்கப்படும் 12% சாதாரண வட்டிக்குப் பதிலாக, வங்கியில் கடன் பெற்ற தேதியிலிருந்தே 6 விழுக்காடு சாதாரண வட்டி மட்டுமே வசூலிக்கப்படும். அபராத வட்டியும், இதர செலவுத் தொகையும் முழுமையாகத் தள்ளுபடி செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

இத்திட்டத்தின்படி 31–10–2009 நாளுக்குள் வங்கியுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளவும், அதன்படி கடன் முழுவதும் திரும்பச் செலுத்த, ஒப்பந்தம் போடப்பட்ட நாளிலிருந்து மூன்று மாத காலம் வரையில் மட்டுமே அனுமதிக்கப்படும். ஒப்பந்தப் பத்திரத்தில் கையெழுத்திட்டு 25 விழுக்காடு தொகையை உடனடியாகச் செலுத்தி, மீதி 75 விழுக்காடு தொகையை ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்ட மூன்று மாதத்திற்குள்ளாக ஒரு தவணையாகவோ, ஒன்றுக்கும் மேற்பட்டால் மூன்று தவணையாகவோ திரும்பச் செலுத்த வேண்டும்.

இந்தப் புதிய வட்டிச் சலுகைத் திட்டத்தின்மூலம் கூட்டுறவு வங்கிகளுக்கு ஏற்படும் வட்டி இழப்பில், 4 சதவீதத் தொகையை மாநில அரசே ஈடு செய்யும்; மீதித் தொகையை அந்த வங்கிகளே ஏற்கும்.

இந்தப் புதிய சிறப்புக் கடன் தீர்வுத் திட்டத்தின்கீழ் வட்டிக் குறைப்புமூலம் உத்தேசமாக ரூபாய் 144.62 கோடியும், அபராத வட்டித் தள்ளுபடி மூலம் ரூபாய் 101.98 கோடியும், இதர செலவுத் தள்ளுபடி மூலம் ரூபாய் 4.61 கோடியும், ஆக மொத்தம் ரூபாய் 251.21 கோடி அளவிற்குத் தள்ளுபடி செய்வதால் அதன்மூலம் ஒரு இலட்சத்து முப்பத்துரெண்டாயிரம் பேர் பயனடைவார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் மாண்புமிகு திருமதி டி. யசோதா அவர்கள்.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008–2009 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 157–வது முதல் 161–வது வரையிலான 5 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் மாண்புமிகு திரு. கி. ஆறுமுகம் அவர்கள்.

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008–2009 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 123 மற்றும் 124 ஆகிய இரண்டு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

இந்தப் புதிய வட்டிச் சலுகைத் திட்டத்தின்மூலம் கூட்டுறவு வங்கிகளுக்கு ஏற்படும் வட்டி இழப்பில், 4 சதவீதத் தொகையை மாநில அரசே ஈடு செய்யும்; மீதித் தொகையை அந்த வங்கிகளே ஏற்கும்.

இந்தப் புதிய சிறப்புக் கடன் தீர்வுத் திட்டத்தின்கீழ் வட்டிக் குறைப்புமூலம் உத்தேசமாக ரூபாய் 144.62 கோடியும், அபராத வட்டித் தள்ளுபடி மூலம் ரூபாய் 101.98 கோடியும், இதர செலவுத் தள்ளுபடி மூலம் ரூபாய் 4.61 கோடியும், ஆக மொத்தம் ரூபாய் 251.21 கோடி அளவிற்குத் தள்ளுபடி செய்வதால் அதன்மூலம் ஒரு இலட்சத்து முப்பத்துரெண்டாயிரம் பேர் பயனடைவார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் மாண்புமிகு திருமதி டி. யசோதா அவர்கள்.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008–2009 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 157–வது முதல் 161–வது வரையிலான 5 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் மாண்புமிகு திரு. கி. ஆறுமுகம் அவர்கள்.

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008–2009 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 123 மற்றும் 124 ஆகிய இரண்டு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

இந்தப் புதிய வட்டிச் சலுகைத் திட்டத்தின்மூலம் கூட்டுறவு வங்கிகளுக்கு ஏற்படும் வட்டி இழப்பில், 4 சதவீதத் தொகையை மாநில அரசே ஈடு செய்யும்; மீதித் தொகையை அந்த வங்கிகளே ஏற்கும்.

இந்தப் புதிய சிறப்புக் கடன் தீர்வுத் திட்டத்தின்கீழ் வட்டிக் குறைப்புமூலம் உத்தேசமாக ரூபாய் 144.62 கோடியும், அபராத வட்டித் தள்ளுபடி மூலம் ரூபாய் 101.98 கோடியும், இதர செலவுத் தள்ளுபடி மூலம் ரூபாய் 4.61 கோடியும், ஆக மொத்தம் ரூபாய் 251.21 கோடி அளவிற்குத் தள்ளுபடி செய்வதால் அதன்மூலம் ஒரு இலட்சத்து முப்பத்துரெண்டாயிரம் பேர் பயனடைவார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் மாண்புமிகு திருமதி டி. யசோதா அவர்கள்.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008–2009 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 157–வது முதல் 161–வது வரையிலான 5 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் மாண்புமிகு திரு. கி. ஆறுமுகம் அவர்கள்.

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008–2009 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 123 மற்றும் 124 ஆகிய இரண்டு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

2009 ஜூலை 7]

(இ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கை அளித்தல். பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர் மாண்புமிகு திரு. எஸ்.கே. வேதரத்தினம் அவர்கள்.

***திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008–2009 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் எட்டாவது அறிக்கையைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

5. மானியக் கோரிக்கைகள், 2009–2010, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 4–ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2009–2010 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். 3–7–2009 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற மானியக் கோரிக்கை எண் 4–ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கை மற்றும் அதன்மீது முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றின்மீதான விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி. முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார், ஒதுக்கப்பட்ட நேரம் 10 நிமிடங்கள். (குறுக்கீடு)

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. கு. பாண்டுரங்கன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

முற்பகல் 9–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பாண்டுரங்கன், என்ன? சொல்லுங்கள். (குறுக்கீடு) மற்றவையெல்லாம் பின்னால் பார்ப்போம் என்று சொல்கிறேன் அல்லவா? உட்காருங்கள். (குறுக்கீடு) இன்றைக்கு நேரம் இல்லை. We have no time. Please, we will take it tomorrow. No, no. (குறுக்கீடு) உட்காருங்கள். நேரம் முடிந்துவிட்டது. (குறுக்கீடு) உங்கள் நேரம் எல்லாம் முடிந்துவிட்டது. உட்காருங்கள்.

2009 ஜூலை 7]

(இ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கை அளித்தல். பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர் மாண்புமிகு திரு. எஸ்.கே. வேதரத்தினம் அவர்கள்.*

***திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008–2009 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் எட்டாவது அறிக்கையைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

5. மானியக் கோரிக்கைகள், 2009–2010, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 4–ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2009–2010 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். 3–7–2009 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற மானியக் கோரிக்கை எண் 4–ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கை மற்றும் அதன்மீது முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றின்மீதான விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி. முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார், ஒதுக்கப்பட்ட நேரம் 10 நிமிடங்கள். (குறுக்கீடு)*

2. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. கு. பாண்டுரங்கன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

முற்பகல் 9–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. பாண்டுரங்கன், என்ன? சொல்லுங்கள். (குறுக்கீடு) மற்றவையெல்லாம் பின்னால் பார்ப்போம் என்று சொல்கிறேன் அல்லவா? உட்காருங்கள். (குறுக்கீடு) இன்றைக்கு நேரம் இல்லை.* We have no time. Please, we will take it tomorrow. No, no. *(குறுக்கீடு) உட்காருங்கள். நேரம் முடிந்துவிட்டது. (குறுக்கீடு) உங்கள் நேரம் எல்லாம் முடிந்துவிட்டது. உட்காருங்கள்.*

5. மானியக் கோரிக்கைகள், 2009–2010, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 4–ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. து. ரவிக்குமார், பேசுங்கள்.*

திரு. து. ரவிக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களுடைய உரிமைகளுக்காக 100 ஆண்டுகளுக்கு முன்னே அரும்பாடுபட்டு உழைத்த மாபெரும் தலைவர், மாவீரன் என்று அந்த மக்களால் போற்றப்படுகின்றவர், வட்ட மேசை மாநாடுகளிலே அண்ணல் அம்பேத்கர் அவர்களோடு கலந்துகொண்டு, இந்த மக்களுடைய உரிமைகளுக்காக வாதாடியவர் திரு. ரெட்டமலை சீனிவாசன். அவர்களுக்கு நம்முடைய அரசு சார்பிலே மணிமண்டபம் கட்டப்பட்டு, அதை நம்முடைய மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் இன்றையதினம் திறக்கவிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த நாளிலே, இந்த ஆதி திராவிடர் நலத் துறை மானியக் கோரிக்கையின்மீது பேச வாய்ப்பளித்த உங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த மணிமண்டபத்தைத் திறந்து வைக்கவிருக்கின்ற நம்முடைய மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பிலேயும், ஒடுக்கப்பட்ட மக்களின் சார்பிலேயும், மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். முதலிலே என்னுடைய தொகுதி சார்ந்த கோரிக்கைகளை முன்வைக்க விரும்புகிறேன்.*

சமுதாயக் கூடம் கட்டும் திட்டத்தின் அடிப்படையிலே, காட்டுமன்னார்கோவில் தொகுதிக்குட்பட்ட குமராட்சி கிராமத்திற்கு ஒரு சமுதாய நலக் கூடம் கட்டித் தர வேண்டும். அதுபோல், குளக்குடியில் உள்ள ஆதி திராவிட நலப் பள்ளியைத் தரம் உயர்த்தித் தர வேண்டும். காட்டுமன்னார்கோவிலில் உள்ள ஆதி திராவிட மாணவர் விடுதி மிகவும் மோசமாக உள்ளது. அதனைச் சீரமைத்துத் தர வேண்டும். மேலும், சிதம்பரத்தில் ஆதி திராவிடர் நலத் துறையின் சார்பிலே நடத்தப்பட்டு வருகின்ற I.T.I., தனியார் பங்களிப்போடு மேம்படுத்தப்பட வேண்டும். என்னுடைய தொகுதி ஆண்டுதோறும் வெள்ளத்தால் பாதிக்கப்படுகின்ற காரணத்தினால், அங்கே இருக்கின்ற தொகுப்பு வீடுகள் அனைத்தையும் பழுது நீக்கித் தருகின்ற ஒரு சிறப்புத் திட்டத்தை ஆதி திராவிடர் நலத் துறையின் சார்பிலே

அறிவிக்க வேண்டும். எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட, நேர்மைக்கும், திறமைக்கும் எடுத்துக்காட்டாகச் சொல்லப்படுகின்ற திரு. கக்கன்ஜி அவர்களுடைய நூற்றாண்டு விழாவினை நம்முடைய அரசின் சார்பிலே சிறப்பாக நடத்த வேண்டும்.

அதேபோல், இன்றைக்கு வருவாய்த் துறையிலே கிராம ஊழியர்கள் சுமார் 16,000 பேர்கள் பணிபுரிந்துகொண்டுள்ளனர். அவர்களுடைய நீண்ட நாள் கோரிக்கை. அவர்களுடைய அடிப்படைச் சம்பளத்தினை அலுவலக உதவியாளர்களுடைய சம்பளத்திற்கு இணையாக அமைத்துத் தர வேண்டும் என்ற கோரிக்கையினை அரசு பரிவோடு பரிசீலிக்க வேண்டும். மேற்கண்ட கோரிக்கைகளை முதலிலே நான் முன்வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆதி திராவிட மக்களுக்கு அடுக்கடுக்கான நன்மைகளைச் செய்துகொண்டிருக்கின்ற... (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தியாக சீலர் கக்கன்ஜி அவர்களின் நூற்றாண்டு விழா அரசின் சார்பிலே கொண்டாடப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ரவிக்குமார் அவர்கள் கேட்டார்கள். பொது வாழ்க்கையில் தூய்மையாகவும், நேர்மையாகவும் எப்படி வாழ்ந்து காட்ட வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து காட்டிய தியாக சீலர் கக்கன்ஜி அவர்களின் நூற்றாண்டு விழாவினை, அவர் பிறந்த மதுரை மாவட்டம், தும்பைப்பட்டியிலே சிறப்பாகக் கொண்டாடுவதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. து. ரவிக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்த ஆதி திராவிட சமூகத்திலே இருக்கின்ற மக்களுக்கெல்லாம் எண்ணற்ற நன்மைகளைச் செய்துகொண்டிருக்கின்ற நம்முடைய அரசு, இதிலே அடிநிலையில் இருக்கின்ற அருந்ததியின மக்களுக்கு மூன்று சதவிகிதம் உள் ஒதுக்கீடு வழங்கி, இன்றைக்கு அவர்களையும் கைதூக்கிவிட்டிருக்கின்றது. அதைப்போலவே, இந்த ஆதி திராவிடர் பட்டியலிலே இன்னும் அடிநிலையில் ஒன்றிரண்டு சாதியினர் இருக்கின்றனர். குறிப்பாக, மக்களுக்கு சலவைத் தொழிலைச் செய்து, அவர்களுடைய பிறப்பு இறப்புச் சடங்குகளிலே பங்காற்றி, இன்னும் படிப்பறிவிலும்,

வேலைவாய்ப்பிலும் மிகவும் பின்தங்கியிருக்கின்ற மக்கள்தான் புதிரை வண்ணார்கள் என்று அழைக்கப்படுகின்ற அந்த மக்கள். இந்த இனப் பட்டியலில் 60–வது சாதியாக குறிக்கப்பட்டிருக்கின்ற அந்த புதிரை வண்ணான் சாதியினர் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்று கணக்கெடுப்பு எடுத்துக்கொண்டிருக்கின்ற நேரத்திலே, இதற்காகச் செயல்பட்டுக்கொண்டிருக்கின்ற தொண்டு நிறுவனங்கள், சுமார் மூன்று இலட்சம் பேர்கள் இருக்கின்றார்கள் என்று சொல்கின்றார்கள். ஆனால், 1981 ஆம் ஆண்டு சென்சஸிலே எடுக்கப்பட்ட புள்ளிவிவரம், அவர்கள் 26,000 பேர் இருப்பார்கள் என்று சொல்கிறது. அவர்கள் எவ்வளவு பேர் இருந்தாலும், இன்றைக்கு அவர்களை நாம் கைதூக்கிவிட வேண்டும் என்று சொன்னால், இப்படி உள் ஒதுக்கீடு வழங்குவதற்கு வாய்ப்பில்லை என்கின்ற காரணத்தினாலே, அவர்களுக்கு ஒரு நல வாரியம் அமைத்துத் தர வேண்டும் என்று நான் மெத்தப் பணிவோடு உங்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 9–45

இன்றைக்கு மத்திய அரசு சிறப்பு நிதி உதவித் திட்டம் என்று வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதைப்போல, ஆதி திராவிட மக்களுக்கு 25 கோடி ரூபாயை சிறப்பு நிதி உதவியாக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அறிவித்தார்கள். ஒவ்வோர் ஆண்டும் அந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையிலே, இன்றைக்கு அந்த சமூகத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளையெல்லாம் நம்முடைய ஆதி திராவிடர் நலத் துறை வழங்குகிறது. அப்படி மேம்பாட்டுப் பயிற்சிகளை வழங்குகின்ற நேரத்திலே, அதற்கான பயிற்சிகளை வழங்குகின்ற நிறுவனங்களைத் தேர்ந்தெடுப்பதற்குப் பல்வேறு விதிமுறைகளை வைத்திருக்கிறார்கள் என்றபோதிலும், இன்றைக்கு அதிலே பயிற்சி பெறுகிறவர்கள் எந்த அளவிற்கு உடனடியாக வேலைவாய்ப்பைப் பெறுகிறார்கள் என்று பார்த்தால், அது நமக்கு அந்த அளவிற்கு உற்சாகம் தருவதாக இல்லை. எனவே, அந்த விதிமுறைகளை இன்னும் கடுமையாக்கி, தேசிய அளவிலே அங்கீகாரம்பெற்ற நிறுவனங்கள்மூலமாக இந்தப் பயிற்சியை அளித்தால், அந்த இளைஞர்கள் நிச்சயமாக வேலைவாய்ப்பைப் பெற முடியும். அது மட்டுமல்லாமல், தொழில் நிறுவனங்களோடும் சேர்ந்து நாம் இதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

இன்றைக்கு ஆதி திராவிடர் நலத் துறையின் சார்பிலே ஆதி திராவிடர்கள் மற்றும் பழங்குடியினருக்கு 1,269 விடுதிகள் நடத்தப்படுகின்றன. இவற்றிலே 87 ஆயிரம் மாணவர்கள் தங்கிப் படித்துக்கொண்டிருக்கின்றார்கள். இந்த விடுதிகளைப் பொறுத்தவரையிலே, ஒவ்வோர் ஆண்டும் புதிய விடுதிகள் கட்டப்படுகின்றன; இருக்கின்ற விடுதிகள் மேம்படுத்தப்படுகின்றன என்றாலும்கூட, அந்த விடுதிகளுடைய தரம், அங்கே இருக்கின்ற நிலை மிக மோசமாக இருக்கின்றது என்று தொடர்ந்து பத்திரிகைகளும், சமுதாய இயக்கங்களும் சொல்லி வருகின்றன. இந்த விடுதிகளையெல்லாம் மேம்படுத்துவதற்கு நம்முடைய ஆதி திராவிடர் நலத் துறையிலே ஏற்கெனவே உயர்நிலைக் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த உயர் நிலைக் குழுவிலிருந்து ஒரு துணைக் குழுவை அமைத்து, இந்த விடுதிகளையெல்லாம் ஒரு குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள் பார்வையிட்டு, அவற்றை மேம்படுத்துவதற்குப் பரிந்துரைகளை உடனடியாக வழங்குவதற்கு நம்முடைய அரசு முன்வர வேண்டும் என்று நான் வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்ததாக, இந்தத் துறையிலே நடத்தப்படுகின்ற பள்ளிகள். இன்றைக்கு 1,359 பள்ளிகள் இரண்டரை இலட்சம் மாணவர்களைக்கொண்டு இந்தத் துறையினால் நடத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றன. இன்றைக்கு அவர்களுடைய தேர்ச்சி சதவீதம், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு அவர்கள் இதிலே அதிக கவனம் எடுத்துக்கொண்டு, அந்தத் தேர்ச்சி சதவீதம் உயர்ந்திருக்கிறது என்று சொன்னாலும்கூட, இன்றைக்கும்கூட அந்தப் பள்ளிகளினுடைய கல்வித் தரம் என்பது பலவிதத்திலே குறைபாடு உள்ளதாகத்தான் இருக்கிறது. இதற்கான முக்கியக் காரணம் என்னவென்று சொன்னால், அந்தப் பள்ளிகளைக் கண்காணிப்பதற்காக நியமிக்கப்பட்டிருக்கிற அலுவலர்கள் வருவாய்த் துறையிலிருந்து வருகின்ற அலுவலர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர்களாக இருந்தாலும் சரி, கல்விக்கூடங்களைக் கண்காணிக்கின்ற அலுவலர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் கல்வித் துறையைச் சார்ந்தவர்களாக இல்லாத காரணத்தினாலே, அந்தப் பள்ளிகளை எப்படி மேற்பார்வையிடுவது, அதிலே இருக்கின்ற குறைகளை எப்படிக் களைவது என்பதைப் பற்றி அவர்களுக்குச் சரியான விதத்திலே தெரியவில்லை. இந்தக் குறைகளைக் களைய

வேண்டும் என்று சொன்னால், நாம் இன்றைக்கு இருக்கிற பள்ளிக் கல்வித் துறையினுடைய கண்காணிப்பின்கீழ் ஆதி திராவிடர் நலப் பள்ளிகளையும் கொண்டு வர வேண்டும் என்று நான் தொடர்ந்து இங்கே வேண்டுகோள் விடுத்துக்கொண்டிருக்கின்றேன். அப்படிக் கல்வித் துறையின் கண்காணிப்பின்கீழ் இந்தப் பள்ளிகள் வந்தால்தான் இந்த மாணவர்களுடைய கல்வி வளர்ச்சி பெறும் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அடுத்ததாக, இந்த அவையிலே பல்வேறு உறுப்பினர்களும் தெரிவித்த கருத்துத்தான். இது பின்னடைவுக் காலிப் பணியிடங்கள் பற்றியது. நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும் இது தொடர்பாக அன்றைக்கே கருத்துத் தெரிவித்திருக்கின்றார்கள். இதற்காக ஒரு உயர் நிலைக் குழு அமைக்கப்பட்டு, சிறப்பு ஆணை ஒன்றும் பிறப்பிக்கப்பட்டு, இதிலே ஒவ்வொரு துறையிலும் எவ்வளவு பணியிடங்கள் காலியாக இருக்கின்றன என்பதைக் கண்டறியும்படி நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் 2006 ஆம் ஆண்டிலேயே ஆணையிட்டார்கள். அதன் அடிப்படையிலே இன்றைக்குப் பல்வேறு துறைகளிலே காலிப் பணியிடங்கள் கண்டறியப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். கடலூரிலே இருக்கின்ற பாலசுப்பிரமணியம் என்பவர் Right to Information Act அடிப்படையிலே பல்வேறு துறைகளுக்கும் எழுதி, இன்றைக்கு 19,300 காலிப் பணியிடங்கள் இந்தத் துறையிலே இருக்கின்றன என்பதைக் கண்டறிந்திருக்கிறார்கள்...

முற்பகல் 9–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா. (குறுக்கீடு)

திரு. து. ரவிக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரையை முடித்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. நீங்கள் time–ஐ keep up செய்தால்தான், சரியான நேரத்தில் அவையை முடிக்க முடியும். (குறுக்கீடு) நேரத்தைப் பாருங்கள்; உங்களுக்கு ஏற்கெனவே ஒரு நிமிடம் கூடுதலாகக் கொடுக்கப்பட்டுள்ளது. (குறுக்கீடு)

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, திரு. து. ரவிக்குமார், சீக்கிரம் சொல்லி முடியுங்கள். (குறுக்கீடு) Madam, கொஞ்சம் பொறுங்கள்.

திரு. து. ரவிக்குமார்: எனவே, அந்தக் காலிப் பணியிடங்களையெல்லாம் உடனடியாக நிரப்புவதற்கு, நம்முடைய அரசு உடனடி நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி சொல்லி, அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா. உங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நேரம் 15 நிமிடங்கள்.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை எண் 4–ஆதி திராவிடர் நலத் துறையின்மீது பேசுகின்ற ஒரு வாய்ப்பினை எனக்கு உருவாக்கித் தந்த எங்கள் சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களுக்கும், நான் பேசுகின்ற வரையிலும் நீண்ட நேரத்தை ஒதுக்கித் தரவிருக்கின்ற மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம் திரு. ரெட்டமலை சீனிவாசன் பிறந்த நாள்; அவருக்காக இன்றைக்கு மணிமண்டபம்கூடத் திறக்கவிருக்கின்றோம். அதேபோல, கக்கன்ஜி நூற்றாண்டு விழா நடைபெறுகின்ற ஆண்டாக இந்த ஆண்டு இருக்கிறது.

இத்துறை, நலிந்த ஆதி திராவிட மக்களுக்குக் கல்வியும், பொருளாதார ஏற்றமும் ஏற்பட்டாலன்றி, இவர்கள் மற்றவர்களுடன் சமமான அந்தஸ்தில் வரமுடியாது என்பதற்காக, கல்வி, பொருளாதார முன்னேற்றம் காண பெரும் முயற்சி எடுத்திருப்பதைக் காணமுடிகிறது. 'ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது' என இல்லாமல், துடிப்பாகச் செயல்பட வேண்டுமென்ற எதிர்பார்ப்பும் உள்ளது. 100–க்கு 99 சதவிகிதம் சென்ற ஆண்டு ஒதுக்கிய தொகையே இந்த ஆண்டும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஒரு ரூபாய்கூட உயர்த்தாமல், 2008–2009 ஆம் ஆண்டைய நிலைதான் 2009–2010–லும் என்றால், இத்துறைமூலம் அபிவிருத்தி இல்லை என்பதைத்தான் அது சுட்டிக்காட்டுவதாக இருக்கின்றது.

உதாரணத்திற்கு, முதுகலைப் பட்டம் படிக்கும் மாணவியருக்கு சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணச் சலுகைகள் (பக்கம் 9); இதற்காக 2008–2009–ல் ஒதுக்கப்பட்ட தொகை ரூ.50 இலட்சம்; 2009–2010–ல் ஒதுக்கப்பட்டுள்ள தொகை அதே 50 இலட்சம்

ரூபாய். 10 ஆம் வகுப்பு வரை படிப்பவர்களுக்குச் சிறப்புக் கட்டணச் சலுகை; 2008–2009–ல் ஒதுக்கப்பட்ட தொகை ரூ.100.40 இலட்சம்; 2009–2010–ல் ஒதுக்கப்பட்டுள்ள தொகை அதே ரூ.100.40 இலட்சம். பொதுத் தேர்வுக் கட்டணச் சலுகைகள் (பக்கம் 10); பத்தாம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்புப் படிக்கிற மாணவ, மாணவியருக்கு, 2008–2009–ல் ஒதுக்கப்பட்ட தொகை ரூ.461.71 இலட்சம்; 2009–2010–ல் ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ.461.71 இலட்சம்.

பள்ளிச் சேர்க்கையை அதிகரித்தல்; 2008–2009–ல் ஒதுக்கப்பட்ட தொகை ரூ.300 இலட்சம்; 2009–2010–ல் ஒதுக்கப்பட்டுள்ள தொகை அதே ரூ.300 இலட்சம். இடை நிற்றலைத் தவிர்த்தல்; ஆறாம் வகுப்பு சேர்ந்து கல்வி பயிலும் மாணவியருக்கு மாதம் 100 ரூபாய் வீதம், 10 மாதங்களுக்கு உதவித் தொகை 2008–2009–ல் ஒதுக்கப்பட்ட தொகை ரூ.300 இலட்சம்; 2009–2010–ல் ஒதுக்கப்பட்டுள்ள தொகை அதே ரூ.300 இலட்சம். சிறப்புப் பரிசுத் தொகைத் திட்டம் (பக்கம் 19); 2008–2009–ல் ஒதுக்கப்பட்ட தொகை ரூ.18.50 இலட்சம். அதற்காக 2009–2010–ல் ஒதுக்கப்பட்டுள்ள தொகை அதே ரூ.18.50 இலட்சம். சிறந்த மாணவர்களுக்கான ஊக்கத் தொகை—பக்கம் 24–ல் வருகிறது— 2008–2009–ல் ஒதுக்கப்பட்ட தொகை ரூ.8.16 இலட்சம்; 2009–2010–ல் ஒதுக்கப்பட்டுள்ள தொகை அதே ரூ.8.16 இலட்சம். இலவசப் பாடப் புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் வழங்கும் திட்டம் (பக்கம் 27); 2008–2009–ல் ஒதுக்கப்பட்ட தொகை ரூ.1,000 இலட்சம்; 2009–2010–ல் ஒதுக்கப்பட்டுள்ள தொகை அதே ரூ.1,000 இலட்சம்.

ஆக, ஏறக்குறைய சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்ட நிதிதான், இந்த ஆண்டும் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், சென்ற ஆண்டைவிட, இந்த ஆண்டில் ஏற்றம் இருக்கவில்லை என்பதைத்தான் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பு சுட்டிக்காட்டுவதாக இருக்கிறது என்று அறிகின்றேன்.ஆகவேதான் சொல்லுகின்றேன்; மத்தியிலே எப்படி இரயில்வே பட்ஜெட் என்று ஒன்றைத் தனியாகப் போடுகிறார்களோ, பட்ஜெட்டுக்குள்ளேயே ஆதி திராவிடர் நலத் துறைக்கென்று ஒரு தனியான பட்ஜெட்டைப் போட்டு, எங்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு வழிவகுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 9–55

'புஸ்தகம்' என்பது வட மொழிச் சொல். அதற்கு தமிழ்ச் சொல் 'நூல்'. 'பாடசாலை' என்பது வட மொழிச் சொல். அதற்குத் தமிழ்ச்

சொல், 'பள்ளிக்கூடம்'. 2,000 ஆண்டுகளுக்கு முன்பே தொல்காப்பியர், 'பறையர், பாணர், கடம்பர், துடியர்', இந்த நான்கு அல்லாத வேறு குடி அல்லர் என்றார். வேறு சமூகத்தினர் இல்லை என்று சொன்னார். இதனை வட மொழியில், பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்று வேத வியாசர் குறிப்பிட்டது. 'பிரம்மம்' தெரிந்தவன் பிராமணன் என்றால், 'பரம்' தெரிந்தவன் பறையன்.

இத்துறைமூலம் இருக்கக்கூடிய இடம், மண்ணின் மைந்தர்கள் எந்த அளவு ஏற்றம் பெற்றிருக்கின்றனர் என்பதை ஆண்டுதோறும் செய்கின்ற இந்த ஆய்வே ஆதி திராவிடர் நலத் துறை மானியமாக இந்த மன்றத்தில் வைக்கப்படுகிறது. மத்திய நிதியுதவி அளிக்கப்பட்டாலும், அது போதவில்லை என்று மீண்டும் தொகை பெறும் அண்டை மாநிலங்களைப்போல், மத்திய நிதியை விரைவாக ஆதி திராவிட மக்களின் நலப் பணிகளில் செலவிட்டு, ஆண்டு முடிவதற்குள் மீண்டும் மத்தியத் தொகையைப் பெறவேண்டும். கொடுக்கும் தொகையைத் திருப்பி அனுப்பும் நிலையோ அல்லது தவணை கேட்கும் சூழலோ உருவாகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

ஆதி திராவிடர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அரசுப் பணிகளில் பணியாற்றும்போது, அவர்களுக்குத் தருகின்ற பொறுப்பு, முக்கியம் இல்லாத, போணியாகாத பொறுப்புகளாகத்தான் இருக்கின்றன. முக்கியத்துவம் வாய்ந்த பொறுப்புகள் அவர்களுக்குத் தரப்படுவதில்லை. ஓய்வு பெறும்போது அவர்கள் ஊனப்படுத்தி அனுப்பப்படுகின்றனர். ஒதுக்கீடு என்பது மண்ணுக்கு உரிய சட்டம். Law of land. இதில் நீதிமன்றம் குறுக்கிடுவதும், இந்த ஒதுக்கீடுகளுக்கெதிராகத் தீர்ப்பு வழங்குதலும் இம்மக்களுக்கு டாக்டர் அம்பேத்கர் பெற்றுத் தந்த உரிமைகள் கொல்லப்படுகின்றனவோ என்ற அச்சம் ஏற்பட்டிருக்கின்றது. இதனை மேட்டுக்குடி மக்கள் ஒரு ஆயுதமாகவே தலித் மக்களுக்கு எதிராகப் பயன்படுத்துகின்றனர். இதனை அரசும், முதல்வரும் கூர்ந்து கவனிக்கக் கோருகின்றேன்.

உதாரணத்திற்கு, மதுரையிலே இருக்கின்ற தமிழ்ச் சங்கம். நான்காம் தமிழ்ச் சங்கம் என்று சொல்வார்கள். தோற்றம் 1901. நிறுவியவர் பாண்டித்துரை தேவர். பாளையம்பட்டி ஜமீனுக்குச் சொந்தக்காரர். அவர் 1957–இல் செந்தமிழ்க் கல்லூரியை உருவாக்கினார். 15 ஆசிரியர் பணியிடங்கள். ஒரே ஒரு S.C. தான் இருக்கின்றார். அரசாங்கம் 3 பேரை சுழற்சி முறையில் போட்டு, 2 தலித் ஆசிரியர்களைப் போட வேண்டுமென்று உத்தரவு

பிறப்பித்துங்கூட, 3 பேர், ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தலைவராகவும், சங்கத்தினுடைய செயலாளராகவும், அந்தக் கல்லூரியினுடைய செயலாளராகவும், காசாளராகவும் இருக்கின்ற காரணத்தினால், அரசு ஆணைக்கு எதிராக, 2 தலித்துகளைப் போடுவதற்குப் பதிலாக 3 பேரை, வேற்று சமுதாயத்தைச் சேர்ந்தவர்களைப் போட்டிருக்கின்ற காரணத்தினால், அதை மறுபடியும் பரிசீலிக்க வேண்டும் என்று இப்போது அது பள்ளிக் கல்வித் துறைக்கு வந்திருக்கின்றது. நீதிமன்றத்திலேயும் இந்த வழக்கு இருக்கின்றது. இந்த நிலையிலே அரசு உத்தரவை நிறைவேற்றாமல், அதற்கு மாறாக, வேறு சமுதாயத்தைச் சேர்ந்தவர்களைப் போடக்கூடிய ஒரு நிலைமை இருக்கின்றதென்று சொன்னால், இதுபோன்ற தவறுகளை அரசாங்கம் மிக வன்மையாகக் கண்டிப்பதோடு மட்டுமல்லாமல், நடவடிக்கையும் எடுக்க வேண்டும்.

2007–இல் அரசு சுழற்சி முறையில்தான் இப்பணி நிரப்பப்பட வேண்டும் என்பது ஆணை. ஆனால், செந்தமிழ்க் கல்லூரிக்கு, 2007–லிருந்து இச்சமுதாய மக்களுக்கு அரசு ஒதுக்கீடு நீதிமன்றத்தில் காலதாமதம் ஆவதால் எங்கள் உரிமைகள் பணத்தாலே பாதிக்கப்படுவதை உடனடியாக அரசு தடுத்து நிறுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பிப்ரவரி மாதம் 27 ஆம் தேதி Board Meeting நடந்திருக்கின்றது. அந்த Board Meeting–இலே, A.E.–க்களையெல்லாம் Executive Engineer–களாகப் பதவி உயர்வு செய்ய, 5 ஆண்டுகாலம் முழுமை பெற்றிருந்தால், அதனை ஏற்று பதவி உயர்வு அளிக்கலாம் என்ற ஒரு வரம்பு நிர்ணயம் செய்யப்பட்டு அனுமதி அளித்திருக்கின்றது. 54 நாட்கள் குறைவாக இருந்து, அதுவும் ஏப்ரல் 26 ஆம் தேதியுடன் நிறைவு பெற்றுவிட்டது. Backlog பதவி உயர்வுக்கான உத்தரவு முடிவுக்கு வந்திருக்க வேண்டும். ஏன் அது காலம் தாழ்த்தப்படுகிறது? அரசு, தாழ்ந்தவர்களை அல்ல, மற்றவர்களால் தாழ்த்தப்பட்டிருப்பவர்களை உயர்த்த, இதுபோன்ற காலதாமதத்தைத் தடுத்து, உடன் பதவி உயர்வு ஆணை பிறப்பிக்கக் கோருகின்றேன்.

செத்தால் கொடுக்கும் தொகைகூட—வாரியத்தில் உள்ளவர்களுக்கு 2,000 ரூபாய், சாதாரணமானவர்களுக்கு 500 ரூபாய் என்று கொடுக்கப்படுகிறது. ஏன் இந்த வேறுபாடு? இதனைச் சமன்படுத்துங்கள். இதில் தாழ்ந்தவர்–உயர்ந்தவர் என்ற மாறுபாடு வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தாட்கோ கடன். வறுமைக் கோட்டுக்குக்கீழே இருப்பவர்களுக்குத்தான் தாட்கோ கடன் கொடுக்கப்படுகிறது. ஆனால், தாட்கோமூலமாகப் பரிந்துரை செய்யப்படுகின்ற அந்தக் கடன்கள் வங்கிகளுக்குப் போகின்றபோது, அவர்கள் சொத்து surety கேட்கிறார்கள். அப்படி சொத்து surety கேட்கின்றபோது, சொத்து surety கொடுத்தால் அவன் வறுமைக் கோட்டுக்குக்கீழே இருக்கின்ற அந்தத் தகுதியை இழந்துவிடுவான். ஆக, அந்த தாட்கோ கடன் பெறுவதற்குரிய அந்தத் தகுதியும், அங்கீகாரமும் அவனுக்கு இல்லாமல் போய்விடும். ஆகவேதான், பல முறை இந்த மாமன்றத்திலே நாங்கள் கேட்கின்றோம். தாட்கோவிற்கு என்று தனியாக ஒரு வங்கியினை உருவாக்கித் தாருங்கள். அப்போதுதான் இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு காண முடியும். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், மாவட்டரீதியாக தாட்கோவுக்கு என்று தொகை ஒதுக்கீடு செய்யப்படுகிறது. பலர் மனுச் செய்கிறார்கள். எந்தத் துறைக்கு? மாட்டு வண்டி வாங்குவதற்காகவா, ஆட்டோ ரிக்ஷா வாங்குவதற்காகவா, கார் வாங்குவதற்காகவா, பெட்டிக் கடை வைப்பதற்காகவா, எதற்கு என்பதே தெரியாது, தொகை ஒதுக்கப்படுகிறது. கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டதுபோல மாவட்டம் முழுமையில் இருக்கின்ற அத்தனைபேரும் மனு செய்கிறார்கள்.

முற்பகல் 10–00

இந்தத் தொகையை எந்தெந்தப் பஞ்சாயத்துக்களுக்குக் கொடுக்க இருக்கிறோம் என்று சொல்லியாவது ஒதுக்கியிருக்க வேண்டும். இன்னின்ன பகுதிகளுக்கு இந்த லோன் eligible என்ற அடிப்படையில் கொடுக்கப்பட இருக்கிறது, இன்னின்ன கடன்களுக்குக் கொடுக்கப்பட இருக்கிறது என்பதை முறையாகத் தெரிவித்தால், அத்தனைபேரும் ஒட்டுமொத்தமாக மனுச் செய்யமாட்டார்கள். ஏனென்று சொன்னால், ஒரு சாதாரண ஏழை மனுச் செய்ய வேண்டுமென்று சொன்னால், அவன் வீட்டில் இருக்கிற அண்டா, குண்டா, அடுக்குச் சட்டி போன்ற எல்லாவற்றையும் அடமானம் வைத்துவிட்டு மனுச் செய்ய வேண்டிய நிலை இருக்கிறது. ஏன் தெரியுமா? அங்கே இருக்கிற கிராம உதவியாளரை அவன் கவனிக்க வேண்டும்; அதைப்போல இன்னும் இருக்கின்ற கிராம நல உதவியாளரைக் கவனிக்க வேண்டும்; துறையைச் சார்ந்தவர்களைக் கவனிக்க வேண்டுமென்ற நிலை இருக்கிறபோது, அத்தனையையும் செய்துவிட்டு, அவன் முடிவுக்குக் காத்திருக்கும்போது, உங்களுடைய பகுதி இப்போது

எடுத்துக்கொள்ளப்படவில்லை என்று சொல்லும்போது மிகப் பெரிய ஏமாற்றம் அவனுக்கு வருகின்றது. ஆகவே, நீங்கள் தாட்கோ கடன் எங்கெங்கே கொடுக்கப்படுகிறது என்பதைக் குறிப்பிட்டுச் சொன்னால் சிறப்பாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல 1961–லே பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்த தியாகத் தலைவர் கக்கன்ஜி அவர்கள் தலைமையிலேதான் சிதம்பரத்தில் நந்தனார் மேல்நிலைப் பள்ளி மற்றும் தங்கும் விடுதி கட்டி முடிக்கப்பட்டு, மக்கள் தலைவர் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் அதைத் திறந்து வைத்தார்கள். ஆனால் இன்று வரைக்கும் அந்தக் கட்டடத்தில் ஒரு கீறல்கூட விழவில்லை. 1961 ஆம் ஆண்டிலே கட்டியது என்று சொன்னால், இன்றைக்கு எத்தனை ஆண்டு காலம் என்று பாருங்கள், 48 ஆண்டுகளுக்குப் பிறகுகூட அந்தக் கட்டடத்திலே ஒரு கீறல்கூட விழவில்லை. அதற்குப் பிறகு கட்டப்பட்ட அத்தனை கட்டடங்களும் விழுந்து விழுந்து பழுதுபார்க்கக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால், அதற்கு என்ன காரணம்? அந்தக் காலத்திலே இருந்த சேவை மனப்பான்மை தற்போது இல்லை. எல்லாம் வியாபார நோக்கோடு செய்யப்படுகிறது. இதையும் அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய தம்பி ரவிக்குமார் அவர்கள்கூடச் சொன்னார்கள். ஆதி திராவிட மக்களுக்கு என்று இருக்கிற அந்த விடுதிகள். நான் பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் என்ற முறையில் பார்வையிடச் சென்றேன். அன்றைக்குத்தான் அந்த இடத்தையெல்லாம் கழுவிவிட்டிருக்கிறார்கள். ஈரத்தோடு இருக்கிற நிலைமையிலேதான் நாங்கள் எல்லாம் போய்ப் பார்த்தோம். உறுப்பினர் திருமதி லீமா றோஸ் அவர்கள்கூட என்னுடன் வந்தார்கள். யாராவது வருகிறார்கள் என்றால்தான், visit செய்கிறார்கள் என்றால்தான், அந்த விடுதியில் உள்ள bath room, latrine எல்லாம் கழுவப்படுகின்றன. ஆகவே, அந்த நிலைமை இருக்கக்கூடாது. சுகாதார நிலையிலே அவர்களுக்குப் பங்கம் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது.

வாழும்போது வளமாக வாழவிடாத சமூகம், இறந்த பிறகும் சுடுகாடு செல்ல படும் துன்பம் வேதனைக்குரியது. வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கொத்தக்கோட்டை ஊராட்சியில் 200 பேர்

அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் வாழ்கிறார்கள். இவர்களுக்குத் தனி மயானம் கிடையாது. பொது மயானத்தில் புதைக்கப்படும்போது அங்குள்ள இதர சமூகத்தினர் அடியாட்கள்மூலம், அடிதடி, கலவரம், உயிருக்கு ஆபத்தான சூழ்நிலை உருவாக்கப்பட்டு பிரச்சினை உருவாவதால், இதனை அரசுக்கு எடுத்துச் சொல்லி, அருந்ததியர் மயானத்திற்கு 50 சென்ட் நிலத்தைத் தமிழக அரசு ஒதுக்கியது. இது செயல்வடிவம் பெறாமல் வெறும் ஏட்டளவில் இருப்பதால் இந்த இடத்தை பிறர் ஆக்கிரமிப்புச் செய்து வருகின்றனர். இதுசம்பந்தமான வழக்கு எண் W.P. 2900/2002 நிலுவையில் உள்ளது. அரசு இதில் தலையிட்டு, அவர்களுக்கு அறிவித்த மயானம் கிடைக்க வழி செய்ய வேண்டும். காரணம், 15 நாட்களுக்கு முன்னாலே வரதராஜன் என்பவர் இறந்துவிட்டார். மயானத்திற்கு எடுத்துச் செல்ல அரசு கொடுத்திருக்கும் வண்டியைக்கூட கொடுக்க முடியாது என்று சொல்லி, ஜாதி வெறி அங்கே தோற்றுவிக்கப்பட்டு, அங்கே இறந்து கிடந்த சடலத்தை மிகக் கேவலான முறையில் நடத்தினார்கள் என்று நினைக்கின்றபோது வேதனையாக இருக்கின்றது. S.C. மக்களை மனிதர்களாகக்கூட நடத்த முடியாத அளவுக்கு ஜாதி வெறி இன்றைக்கு அந்தப் பகுதியிலே இருக்கின்றது.

S.C. மக்களை பெருமாள் கோயில்களுக்கு டிரஸ்டிகளாக நியமிப்பது இல்லை. 20 ஆம் நூற்றாண்டில் இப்படி ஒரு வரம்பு ஏன்? 'ஜாதிகள் இல்லையடி பாப்பா' என்ற பாரதி S.C. இல்லை; ஆதி திராவிட மக்களிடையே புரட்சி ஏற்படுத்திய புதிய சமுதாயம் படைத்த இராமானுஜர் அதாவது 'உடையவர்' ஜாதி பார்த்ததில்லை. ஆனால், நாம் இன்னும் பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஆதி திராவிடர் சமுதாயத்தைச் சேர்ந்த பரமேஸ்வரன் அவர்களை அறநிலையத் துறை அமைச்சராக்கினார் காமராஜர் அவர்கள். அனைத்துச் சமுதாயத்தைச் சார்ந்தவர்களும் அர்ச்சகர்கள் ஆகலாம் என்றார் டாக்டர் கலைஞர் அவர்கள். அவர்கள் வாழும் இந்த மண்ணில் உள்ள பெருமாள் கோயில்களில் மட்டும் இந்தச் சமுதாய மக்கள் அறங்காவலர்களாக இருக்கக்கூடாது என்ற எண்ணத்தை உடைத்தெறிய கலைஞர் அவர்கள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் ஊரில் உள்ள பெருமாள் கோயிலுக்கு, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த, விழுப்புரம் நகரக் கழகச் செயலாளர் அவர்கள் அறங்காவலர் குழுவிலே நியமிக்கப்பட்டிருக்கிறார். ஆகவே, அதுபோன்ற விதி எங்கே இருக்கின்றது? ஒவ்வொரு அறங்காவலர் குழுவிலும் ஒரு பெண்ணும், ஒரு தாழ்த்தப்பட்டவரும் இருக்க வேண்டும் என்ற விதியைத் தலைவர் கலைஞர் அவர்கள் உருவாக்கி, அறங்காவலர் குழுவிலே நியமிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவசரப்பட வேண்டாம். எங்கள் ஊரான ஸ்ரீபெரும்புதூரில் ஒரேயொரு கோயில், இராமானுஜர் கோயில். அந்தக் கோயிலில் ஆதி திராவிடர் சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவரை, தலைவராகக்கூட அல்ல, அறங்காவலராகப் போட வேண்டுமென்று மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டபோது, ஆதி திராவிடர் சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவரைப் பெருமாள் கோயிலுக்குப் போடுவதற்கு அங்கீகாரம் இல்லை; முறையில்லை என்று என்னிடம் நேரடியாகச் சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீரங்கம் கோயிலிலேகூட ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவர் இருக்கிறார். பெருமாள் கோயில்தான் ஸ்ரீரங்கம் கோயில். அந்த ஸ்ரீரங்கம் கோயிலில் ஆதி திராவிடர் சமுதாயத்தைச் சேர்ந்தவர் இருக்கிறார். ஸ்ரீரங்கம் பெருமாள் கோயிலிலே போட்டிருக்கிறார்கள். ஆதி திராவிடர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களை எல்லா இடங்களிலும் போட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தத் திருக்கோயில், நிர்வாகத் திட்டத்தின்கீழ் வரும் கோயில். பொதுவான கோயில்களுக்கு, மற்ற இடங்களிலே ஆதி திராவிடர் சமுதாயத்தைச் சேர்ந்தவர் அவசியம் ஒருவர் இருக்க வேண்டும் என்றும், அதேபோல,

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, ஒரு பெண்ணும் இடம்பெற வேண்டுமென்று சட்டமே இயற்றப்பட்டிருக்கிறது. அதிலே மாற்றுக் கருத்து எதுவும் இல்லை. ஒருவேளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்த அந்த நபருக்கு வேண்டுமானால் வாய்ப்பு இல்லாமல் இருந்திருக்கலாம்.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி. நான் நேராகவே கேட்டதன் காரணமாக, அதற்குப் பிறகு துறை சார்ந்த அதிகாரிகளிடத்திலே அணுகியபோது, அவர்கள் சொன்னதை வைத்துத்தான் இப்போது நான் இதைச் சொல்கின்றேன். இதற்கு ஒரு மறுமலர்ச்சி கிடைக்கிறது என்று சொன்னால், உங்களைவிட மகிழ்ச்சி எனக்குத்தான்.

Special Component Plan மூலமாக மத்திய அரசிடமிருந்து இந்த அரசுக்கு எத்தனை கோடி ரூபாய் 2008–2009 ஆம் ஆண்டில் வந்தது? (மணியடிக்கப்பெற்றது.) மூன்று அமைச்சர்கள் குறுக்கிட்டு பதில் சொல்லியிருக்கிறார்கள். முடித்துவிடுகிறேன். இத்தொகையின்மூலம் என்னென்ன இலவசத் திட்டங்கள் எந்தெந்தத் துறையின்மூலமாகச் செயல்படுத்தப்படுகின்றன? அதேபோல, சமத்துவபுரங்கள் அமைய இந்தத் தொகை முழுவதும் பயன்படுத்தப்படுகிறதா? இதில் வசிக்கும் பயனாளிகள் எந்த சதவிகிதத்தின் அடிப்படையில் ஒதுக்கீடு பெற்றுள்ளனர்? ஆதி திராவிடர் நலத் துறையின்மூலமாகக் கடந்த காலங்களில் தொகுப்பு வீடுகள், சாலை வசதி, குடிநீர் வசதி போன்ற நலப் பணிகள் செய்யப்பட்டு வந்தன. அவை தற்போது இந்தத் துறையின்மூலம் வழங்கப்படவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவரை அணுகிக் கேட்கின்றபோது, கையை விரிக்கின்றார். எனவே, இப்பணிகள் மீண்டும் இத்துறையின் மூலமாகச் செயல்படுத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகம் முழுவதும் ஆதி திராவிடர் மக்கள் வசிக்கும் பகுதிகளில் உள்ள தொகுப்பு வீடுகளைப் பராமரிக்கவும், தனித் தொகுப்பு வீடுகளைக் கட்டவும், தனி நிதியம் அமைத்து புனரமைத்திடக் கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு, மத்திய அரசின் உயர் கல்வி நிறுவனங்களான I.I.T., I.I.M. ஆகியவற்றில் ஒதுக்கீடு செய்திருக்கின்றது. ஆனால், பட்டியல் இன, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீட்டில், 1,100 இடங்கள், தகுதியான

மாணவர்கள் இல்லாமல் காலியாக இருப்பதாக அறிகிறோம். தமிழகத்தைச் சார்ந்த, S.C., S.T. மாணவர்களுக்கு I.A.S., I.P.S. தேர்வுகளுக்காக விசேஷப் பயிற்சி அளிப்பதுபோல, I.I.T., I.I.M. நுழைவுத் தேர்வுகளுக்குத் தனிப் பயிற்சி அளிக்க வேண்டுமென்று சகோதரர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் உயர் கல்வித் துறை மானியத்தின்போது பேசியிருக்கின்றார்கள். நானும் அதனை வலியுறுத்துகின்றேன். கலைஞர் அவர்கள் அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

என்னுடைய தொகுதியிலே கொல்லைச்சேரி என்கிற ஒரு கிராமம் இருக்கிறது. இன்றையதினம் திரு. கக்கன்ஜி அவர்களுடைய நூற்றாண்டு விழா கொண்டாடப்படுகின்ற இந்த நேரத்திலே நான் மாண்புமிகு கலைஞர் அவர்களுக்கு என்னுடைய தொகுதி சார்பான கோரிக்கையை முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். கொல்லைச்சேரி என்கிற அந்த கிராமம், முழுக்க, முழுக்க ஆதி திராவிடர்கள் வசிக்கின்ற பகுதி. திரு. கக்கன்ஜி அவர்கள் உள் துறை அமைச்சராக இருந்தபோதுதான் அந்தப் பகுதிக்குச் சென்று, அங்கிருக்கின்ற மக்களுக்காக, ஆதி திராவிட மக்களுக்கென்று ஆதி திராவிடர் கல்லுடைக்கும் கூட்டுறவுச் சங்கத்தை ஆரம்பித்தார்கள். அதைத் திறந்து வைத்தது அன்றைய முதல்வராக இருந்த மாண்புமிகு காமராஜர் அவர்கள். அங்கே கல்வெட்டு இருக்கின்றது; கட்டடம் இருக்கின்றது. ஆனால், அரசுக்குச் செலுத்த வேண்டிய கட்டணம் சரியாகச் செலுத்தப்படவில்லை என்ற காரணத்தினால், அதற்கு மூடுவிழா நடத்தப்பட்டிருக்கின்றது. அங்கே கிட்டத்தட்ட 1,000 பேர்களுக்கு மேலாக ஆதி திராவிட மக்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்கு அந்தத் தொழிலைத் தவிர வேறு தொழில் தெரியாது என்கின்ற நிலையில், அவர்களுக்கு வாழ்வுரிமை அளிப்பதற்காக, அந்த ஆயிரம் குடும்பங்கள் வாழ்வதற்காக, அவர்கள் பக்கத்திலே உங்களுடைய கருணையைத் திருப்பி, கொல்லைச்சேரி ஆதி திராவிடர் கல் உடைக்கின்ற கூட்டுறவுச் சங்கத்திற்கு உயிர் தருவதோடு, அங்கே அவர்கள் தொழில் நடத்துவதற்குரிய அனுமதியையும் தாங்கள் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 10–10

அதேபோல, காட்டாங்கொளத்தூர் ஒன்றியம், ஊனமாஞ்சேரியில் S.T. சமூகத்தைச் சேர்ந்த 600 குடும்பங்கள் இருக்கின்றன. கடந்த காலங்களில் S.T. ஆக இருந்த அந்தப் பஞ்சாயத்தைத் தற்போது

பொதுத் தொகுதியாக மாற்றிவிட்டார்கள். பாவம், அவர்களுக்கு ஒரே ஒரு பஞ்சாயத்துத் தலைவர் வருவது, அதுவும் இல்லாமல் போய்விட்டது. அதுபோன்ற நிலைமையைப் பார்த்து, நீங்கள் கணிக்க வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, அருந்ததியர்கள். வேலைவாய்ப்பு அளிக்கும்போது, ஒரு மாவட்டத்திற்குத் தகுதியானவர்கள் இல்லையென்றால், அந்த மாவட்டங்களில் அப்பணிக்கு உரியவர்களை அமர்த்தலாம். நகரத் துப்புரவுத் தொழிலாளர்களை பகுதிநேரப் பணியாளர்கள் என்கின்றனர். அவர்களைப் பகுதிநேரப் பணியாளர்கள் என்று சொல்லி, 8 மணி முதல் 12 மணி வரையிலும் ஒப்பந்ததாரர்கள் வேலை வாங்குகிறார்கள். இவர்களுடைய பணி நிரந்தரம் செய்யப்பட வேண்டும். ஓய்வுபெறும்போது அவர்களுக்கு 50,000 ரூபாயாவது ஆறுதல் பரிசு அளிக்க வேண்டும். ஒப்பந்த முறை இரத்துச் செய்யப்பட வேண்டும், இதில் தவறு நடக்கிறது.

மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளில் வேலைவாய்ப்பு அலுவலகங்கள்மூலம் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் துப்புரவுப் பணிக்கு அமர்த்தப்பட்ட பிறகு, அதிகாரிகளின் தயவால் பிற பணிகளுக்குச் செல்லும் நிலை இருப்பதால், தகுதியான அருந்ததியினர் புறக்கணிக்கப்படுகின்ற நிலை இருக்கின்றது. அதைத் தவிர்க்க வேண்டும்.

அதேபோல, அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். அவர்கள், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருந்தபோதும், நம்முடைய துணை முதல்வர் அவர்கள், இன்றைக்கும் உள்ளாட்சித் துறை அமைச்சராக பொறுப்பிலே இருக்கின்ற நேரத்திலே, துப்புரவுப் பணிக்கு வேலைவாய்ப்பு அலுவலகத்தின்மூலமே பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்று அறிவித்து, சில இடங்களில் அது நடைமுறைப்படுத்தப்பட்டது. இன்றைக்கு அந்த முறை இரத்துச் செய்யப்பட்டிருப்பதன் காரணம் என்ன? அந்த ஒப்பந்த முறையை தயவுசெய்து நீக்க வேண்டுமென்று உங்களிடத்தில் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில், வட்டாரத்திற்கு ஒரு மாணவர் வீதம் தேர்ந்தெடுக்கப்பட்டு, 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை அரசு செலவில் படிக்க வைக்கப்படுவார்கள் என்ற திட்டத்தின்கீழ் இதுவரை எத்தனை மாணவர்கள் ஆறாம் வகுப்பில் சேர்க்கப்பட்டார்கள்? அவர்கள் எந்தப் பள்ளிகளில்

சேர்க்கப்பட்டுள்ளார்கள்? இவர்களுக்காக அரசு எவ்வளவு பணம் கட்டியுள்ளது? ஆதி திராவிட மாணவர்களுக்கு விமான ஓட்டுநர் பயிற்சி வழங்கப்படும் என்று சென்ற ஆண்டு அறிவித்தார்கள். அந்த அறிவிப்பின் தற்போதைய நிலை என்ன?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர், உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 15 நிமிடங்கள். ஆனால், நீங்கள் 22 நிமிடங்கள் எடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) சீக்கிரம் உரையை முடியுங்கள்.

திருமதி டி. யசோதா: கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன், மாவட்டத்திற்கு 10 மாணவர்கள் வீதம் 11 ஆம் வகுப்பில் சேர்க்கப்பட்டு, சிறந்த கல்வி அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. அந்த மாணவர்கள் 12 ஆம் வகுப்புத் தேர்வில் எவ்வளவு மதிப்பெண்கள் பெற்றுள்ளார்கள் என்பதை அறிய விரும்புகிறேன். உயர் கல்வி உதவித் தொகை கேட்டு அதிகமான மாணவர்கள் விண்ணப்பிக்கின்றார்களே, அவர்கள் அனைவருக்கும் உயர் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறதா என்று கேட்டு, இந்த மானியத்திலே பேசுவதற்கு வாய்ப்புத் தந்த உங்கள் அனைவருக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். தேன்மொழி. உங்களுக்கு 10 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

திருமதி எஸ். தேன்மொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின்மீது பேச எனக்கு வாய்ப்பளித்த எங்கள் இதய தெய்வம், ஒன்றரைக் கோடி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களின் உயிர் மூச்சு, (மேசையைத் தட்டும் ஒலி) நாளைய தமிழகத்தின் நம்பிக்கை நட்சத்திரம், வருங்கால பாரதத்தின் வழிகாட்டி, பெண்ணினத்தின் பெருமைக்குரிய தலைவி, ஒப்புயர்வற்ற வீராங்கனை, ஆற்றலின் பிறப்பிடம், அன்பின் வடிவம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற திசை நோக்கி இரு கரம் கூப்பி வணங்கி, அவருக்கு என் நெஞ்சார்ந்த நன்றியினை முதலில் காணிக்கையாக்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களின் இதயக் கோயிலில் பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு என்றைக்கும் ஒரு தனி இடம் உண்டு. அதேபோல, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள், இந்த சமுதாயத்தினரின் முன்னேற்றத்திற்காக ஆற்றிய அரும்பணிகளையும், இந்தச் சமுதாய மக்கள் மறக்கமாட்டார்கள் என்பதை நான் நன்றியோடு இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பொருளாதார ரீதியில் பின் தங்கிய +1, +2 படிக்கும் மாணவ, மாணவிகள் நீண்ட தூரம் நடந்து சென்று பள்ளிப் படிப்பைத் தொடர முடியாத நிலையினை அறிந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தியாவுக்கே முன்னோடியாக, இலவச சைக்கிள் வழங்கும் திட்டத்தை, முதல் முறையாக 2001 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தினார். இலட்சக்கணக்கான ஏழை, எளிய மக்களின் கல்விக் கண்ணைத் திறந்து வைத்து சாதனை படைத்தவர் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான்.

முற்பகல் 10–15

ஆதி திராவிடர் நலத் துறையின் அமைச்சர் கடந்த இரண்டு ஆண்டுகளில் தனது பதிலுரையின்போது வெளியிட்ட சில அறிவிப்புகள் தற்போது எந்த நிலையில் உள்ளன என்பதை அவர் இங்கே தெரிவிக்க வேண்டும்.

ஆதி திராவிட சமுதாயப் பெண்கள் 100 பேருக்கு விமானப் பணிப்பெண் பயிற்சியும், ஆண்களுக்கு விமானத்திற்குள் பணி செய்யும் பயிற்சியும் அளிக்கப்படும் என்று அமைச்சர் கூறினார். அதன்படி, பயிற்சி அளிக்கப்பட்டதா? பயிற்சி பெற்றவர்களில் எத்தனை பேருக்கு வேலை கிடைத்துள்ளது என்பதை அமைச்சர் பதிலுரையில் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆதி திராவிட, பழங்குடியின மாணவர்களின் ஆங்கில மொழித் திறனை வளர்க்க 30 ஆங்கில மொழி பயிற்றுவிக்கும் ஆய்வகங்கள் ரூ. 30 இலட்சம் செலவில் அமைக்கப்படும் என்று 2007 ஆம் ஆண்டு அமைச்சர் கூறினார். அந்தப் பயிற்சி மையங்கள் எந்தெந்த ஊர்களில் திறக்கப்பட்டுள்ளன என்பது தெரியவில்லை. அதை இரகசியமாக நடத்துகிறீர்களா?

அதே ஆண்டு அமைச்சர் தனது பதிலுரையில், ஆதி திராவிட சமுதாய மாணவர்கள் 5,000 பேருக்கு ரூ.28 கோடி செலவில் ஆங்கிலத்தை சரளமாகப் பேசுவதற்கும் பயிற்சி அளிக்கப்படும் என்று அறிவிப்பு வெளியிட்டார். இந்தப் பயிற்சியும் எந்தெந்த ஊர்களில் நடைபெற்றது? அதில் பயன்பெற்ற மாணவர்கள் பட்டியலை அமைச்சர் வெளியிடுவாரா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

அதேபோல, கடந்த 2008 ஆம் ஆண்டு இதே அவையில் அமைச்சர் சில அறிவிப்புகளை வெளியிட்டார். அதிலே குறிப்பாக, ஆதி திராவிட இளைஞர்களுக்குக் கடல்சார் பயிற்சி அளிக்கப்படும் என்றும், இது தமிழ்நாடு கடல்சார் நிறுவனம் மற்றும் தேசிய கடல்கள் பயிற்சி நிறுவனம்மூலம் ஆறு மாத கால, ஒரு வருட காலப் பயிற்சிகளாக இருக்கும் என்றும் தெரிவித்தார். கடல் சார்ந்த துறையில் அதிக வேலைவாய்ப்பு இருப்பதால், இந்தப் பயிற்சி அளிக்கத் திட்டமிட்டிருப்பதாக அமைச்சர் தெரிவித்தார். அப்படிப்பட்ட பயிற்சி 100 பேர்களுக்கு அளிக்கப்பட்டதா, பயிற்சியை முடித்தவர்கள் யார், அதனால் வேலைவாய்ப்பு பெற்றவர்கள் யார், யார் என்ற விவரத்தை அமைச்சர் தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, ஏ.சி. மெஷின் ரிப்பேர், கார்பென்டர், டிரைவர், வெல்டிங் வேலை பார்ப்பவர்களுக்கு வெளிநாட்டில் வேலைவாய்ப்பு அதிகமாக இருப்பதால், ஆதி திராவிட சமூகத்தைச் சேர்ந்த 500 இளைஞர்களுக்கு இந்தத் துறையில் பயிற்சி அளித்து அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்மூலம் வெளிநாடுகளில் வேலைவாய்ப்பைப் பெற்றிட முதலமைச்சர் ஆணை வழங்கியுள்ளார் என்று அமைச்சர் தெரிவித்தார். அப்படி, 500 பேர்களுக்குப் பயிற்சி தந்தீர்களா? அதில், எத்தனை பேர்களுக்கு அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்மூலம் வேலை கிடைக்க இந்த அரசு உதவி செய்திருக்கிறது என்ற விவரத்தையும் பதிலுரையில் அமைச்சர் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உங்களுடைய பல அறிவிப்புகள் பத்திரிகைகளுக்கு ஒரு நாள் செய்தியாகத்தான் அமைந்துவிட்டனவே தவிர, மக்கள் பயன்பெற்றதாகத் தெரியவில்லை. உதாரணமாக, ஆதி திராவிட மாணவர்களுக்கு 1 கோடியே 12 இலட்சம் ரூபாய் செலவில் ஒவ்வொருவருக்கும் ஒரு போர்வை வழங்கப்படும் என்று சொன்னீர்கள். ஆனால், என்னுடைய தொகுதி உட்படப் பல ஊர்களில் விடுதிகளில் மாணவர்களுக்கு போர்வை தரப்படவில்லையென்று சொன்னார்கள்.

தேர்தலில்தான் ஓட்டுக்குப் பணம் கொடுத்தால் ஜெயித்துவிடலாம் என்று மக்களை ஏமாளிகளாக நினைக்கிறீர்கள். ஆட்சியையும் அதேபோல நடத்தாதீர்கள். அறிவிப்பு வெளியிட்டால் போதும், அதன்படி செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்று மக்களை ஏமாற்றாதீர்கள்.

2007–2008 ஆம் ஆண்டு ரூ.8.75 கோடி செலவில் 25 புதிய விடுதிகள் கட்டி முடிக்கப்பட்டனவா? அதேபோன்று, 2008–2009 ஆம் ஆண்டு 25 புதிய விடுதிகள் கட்டுவதற்கு நிதி எவ்வளவு ஒதுக்கப்பட்டது? தற்போது ஒரு விடுதிக்கு ரூ.56.45 இலட்சம் மதிப்பு என்று சொல்லப்படுகிறது. உங்கள் ஆட்சியில் இந்த மூன்று வருடங்களில் விடுதி கட்டுவதற்கு செலவு, ஆண்டுக்காண்டு விலைவாசி விஷம் போல் உயர்ந்துகொண்டே போகிறது. இதற்குக் காரணம், உங்கள் ஆட்சியில் சிமெண்ட், மணல், இரும்புக் கம்பி ஆகியவற்றின் விலையை உங்களால் கட்டுப்படுத்த முடியாமல் போனதுதான்.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் அனைத்து விடுதிகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் சீராகக் கிடைத்து வந்தது. அதுபோல, விடுதிகளில் உள்ள கழிப்பறைகளிலும் முறையாகத் தண்ணீர் வசதி செய்து கொடுக்கப்பட்டன. ஆனால், உங்கள் ஆட்சியில் இந்த மூன்று வருடங்களாகக் குடிநீருக்கும் தட்டுப்பாடு. குடிநீரை மேல்நிலைத் தொட்டிகளில் ஏற்றுவதற்கான மோட்டார் மின்சாரத் தட்டுப்பாட்டால் குடிநீரும் கிடைப்பதில்லை. கழிப்பறைகளில் பயன்படுத்தும் தண்ணீரும் கிடைப்பதில்லை. இதுதான் உங்கள் ஆட்சியின் சாதனையா?

ஆதி திராவிடர்கள் நல விடுதி எப்படிப் பராமரிக்கப்படுகிறது என்பதற்கு ஓர் உதாரணம், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் தொகுதியில் மதுரை பந்தயத் திடலில் அமைந்துள்ள ஆதி திராவிடர் நல விடுதியில் தண்ணீர் இல்லாமல் மாணவர்கள் தங்களுடைய சொந்தச் செலவில் தினந்தோறும் ரூ.400 கொடுத்து லாரியில் குடிநீர் வாங்கித்தான் அருந்துகிறார்கள் என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–20

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் விடுதிகளைப் பராமரிப்பதற்கு தனியார் நிறுவனம்மூலம் செயல்படுத்தப்படுமென்று சொன்னீர்கள். ஏதாவது ஒரு விடுதியில் தனியார் நிறுவனம்மூலம்

பராமரிப்பு அல்லது துப்புரவுப் பணி செய்யப்பட்டதா? சொன்னது ஏதையுமே செய்யவில்லை. விடுதி மாணவ, மாணவியர்கள் அனைவரும் அவதிப்படுகிறார்கள். சிக்குன்குனியா, பறவைக் காய்ச்சல், பன்றிக் காய்ச்சல் வந்துவிடுமோ என்ற பீதியில் இருக்கிறார்கள். 100 மாணவ, மாணவியர் விடுதிகளில், யோகா பயிற்சி செயல்படுத்தப்படுமென்று சொன்னீர்கள். இதுவரை எங்கும் யோகா பயிற்சி நடந்ததாகத் தெரியவில்லை. இதுவும் சாதனை.

தாட்கோமூலம் வழங்கப்படும் பொருளாதார மேம்பாட்டுக் கடனுதவிகள் பெற்று வாழ்க்கையில் எவரும் முன்னேற்றம் அடைந்தததாகத் தெரியவில்லை உங்கள் ஆட்சியில். வார வட்டி, கந்து வட்டி, மீட்டர் வட்டி போன்ற வட்டிகள்தான் உயர்ந்து வருகின்றன உங்களுடைய ஆட்சியில். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில், கந்து வட்டி, மீட்டர் வட்டி ஒழிக்கப்பட்டது. ஆனால், உங்கள் ஆட்சியில், மீண்டும் கந்து வட்டி, மீட்டர் வட்டி தலைதூக்கி விட்டது. இதனால், தாழ்த்தப்பட்ட, ஏழையெளிய ஆதி திராவிட மக்கள்தான் அதிகமாக பாதிக்கப்படுகிறார்கள். உங்கள் ஆட்சியில் ஏழைகள், ஏழைகளாகத்தான் இருக்கிறார்கள். குறிப்பாக, முன்னேற்றம் அடையாத மக்கள் தாழ்த்தப்பட்ட மக்கள்தான்.

சமத்துவபுரம் என்று சொல்லி 100 குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்பட்டு, சமத்துவமாக வாழுங்கள் என்ற திட்டத்தைத் துவக்கினீர்கள். தற்போது சமத்துவபுரங்களில் குடியிருப்பவர்களின் இடையேதான் சாதிச் சண்டைகள் தாண்டவமாடுகின்றன. சமத்துவபுரம் கட்டப்படாமல் இருந்திருந்தால்கூட அவரவர், அவர்களது ஊர்களில் சாதிச் சண்டையின்றி இருந்திருப்பார்கள். சமத்துவபுரம் கட்டியதால்தான் சாதிச் சண்டைகள் பரவி வருகின்றன.

நிலம் இல்லாத, ஏழையெளிய, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இலவசமாக 2 ஏக்கர் நிலம் கொடுப்பதாகச் சொல்லி 3 வருடம் முடிந்தும்கூட, 2 ஏக்கர் நிலத்திற்குப் பதிலாக 2 சென்ட் நிலம்கூட கொடுக்க முடியாத அரசு, உங்கள் அரசு என்று தாழ்த்தப்பட்ட மக்கள் குமுறுகிறார்கள். இன்றைக்குப் பழங்குடியின மக்களைப் பொறுத்தவரையில், சாதிச் சான்றிதழ் வழங்குவதிலே பல்வேறு பிரச்சினைகள் இருந்துகொண்டே இருக்கின்றன. மதுரை மாவட்டம், ஒன்றுபட்ட மாவட்டமாக இருக்கும் வரை, 1985 ஆம் ஆண்டு வரை, மலைவேடன் சாதியினருக்கு சாதிச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால், இன்றைக்கு மதுரை மாவட்டம், திண்டுக்கல், தேனி மாவட்டங்களாக பிரிக்கப்பட்டதற்குப் பின்பு, மதுரை மாவட்டத்திலும், தேனி மாவட்டத்திலும், சாதிச் சான்றிதழ்கள் வழங்கப்படாமல் உள்ளன. எனவே, பாதிக்கப்பட்டுள்ள மலைவேடன் சாதியினருக்கு சாதிச் சான்றிதழ் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

ஆதி திராவிடர் மக்கள் தாட்கோமூலம் கடன் பெறுவதற்காக தாட்கோ படிவம் கேட்கச் சென்றால், உரிய படிவம் கிடைக்கப்பெறுவதில்லை. காரணம், தாட்கோ படிவம் மொத்தத்தையும் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் மொத்தமாக வாங்கிச் சென்று அவர்களுக்கு வேண்டியவர்களுக்கு மட்டும் அந்தப் படிவம் கொடுக்கப்படுகின்ற நிலை உள்ளது. தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு விண்ணப்பப் படிவமே கிடைக்கப்பெறவில்லை என்றால், கடன்களை எங்கிருந்து பெறுவார்கள்? இந்த நிலை மாற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிலக்கோட்டை பேரூராட்சி 30–6–2008 ஆம் தேதியில், பேரூராட்சி மன்றக் கூட்டத்தில், வீடுகளுக்கு 25 சதவீதமும், கடைகளுக்கு 150 சதவீதமும், வரலாறு காணமுடியாத அளவிற்கு, சொத்து வரியினை ஏற்றி, செயல் அலுவலரின் ஒத்துழைப்புடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. வரிச் சுமையினைக் குறைக்கக் கோரி பொது மக்கள் கடும் ஆட்சேபணை தெரிவித்தும், நேரில் மனுக் கொடுத்தும் மற்றும் பல்வேறு சங்கங்களின் ஒத்துழைப்புடன் 26–12–2008 ஆம் நாளன்று கடையடைப்புச் செய்தும், மக்களின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் பேரூராட்சி நிருவாகம் பொது மக்களிடம் கெடுபிடியாக வசூல் செய்து வருகின்றது. மாவட்ட நிர்வாகமும் இதைக் கண்டுகொள்வதில்லை.

26–2–2009 ஆம் நாளன்று, சட்டப் பேரவையில் கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கான பதிலுரையில், அரசால் நியமிக்கப்படும் அலுவல் குழு அறிக்கை அளிக்கும் வரை, பழைய வரியே வசூல் செய்யப்படும் என்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டும், பேரூராட்சி நிருவாகம், பொது மக்களைப்பற்றிக் கவலைப்படாமல், வருமானம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு கெடுபிடி வசூலில் இறங்கியுள்ளனர். எனவே, பொது மக்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு, சொத்து வரியைக் குறைக்க வேண்டுகிறேன்.

மேலும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை, காலம் தாழ்த்தி, அரையாண்டுத் தேர்வு முடிந்தவுடன் வழங்கப்படுகிறது. இதனால், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியர்களின் பெற்றோர் கடன் வாங்க வேண்டிய சூழ்நிலையைத் தவிர்க்க, கல்வியாண்டின் தொடக்கத்திலேயே உதவித் தொகை வழங்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். மேலும், தொகுப்பு வீடுகள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சீக்கிரம் உரையை முடியுங்கள், time ஆகி விட்டது.

திருமதி எஸ். தேன்மொழி: தொகுப்பு வீடுகளைப் பழுது நீக்கம் செய்ய ஊராட்சி ஒன்றியத்தின்மூலம் அரசே கூடுதல் நிதி ஒதுக்கி, பழுது நீக்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

2006–2007 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், நிலக்கோட்டை தொகுதியில் உள்ள கண்ணாபட்டிக்கும், செக்காப்பட்டிக்கும் இடையில், வைகை ஆற்றின் குறுக்கே கண்ணகி பாலம் *3* கோடி ரூபாய் செலவில் கட்டப்படுமென்று அறிவித்திருந்தீர்கள். *3* வருடங்கள் ஆகியும் இதுவரை பாலம் கட்ட எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மேற்கண்ட பாலம் சேதமடைந்து . . . (குறுக்கீடு)

முற்பகல் *10–25*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலத்திற்கு இப்பொழுது அடிக்கல் நாட்டப் போகிறோம். தலைவர் கலைஞர் அவர்கள் (குறுக்கீடு) இல்லை, இப்பொழுது பணம் sanction பண்ணியாகிவிட்டது. அடிக்கல் நாட்டப் போகிறோம். ஆனால், சட்டமன்ற உறுப்பினரை அழைப்போம். அவர்கள் வரமாட்டார்கள்.

திருமதி எஸ். தேன்மொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடிக்கல் நாட்டி ஒரு வருடம் ஆகிவிட்டது. இன்னும் வேலை நடைபெறவில்லை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் அடிக்கல்லே நாட்டவில்லை. நீங்கள் அடிக்கல் நாட்டினோம் என்று சொன்னால், உறுப்பினர் பொறுப்போடு பதில் சொல்லவேண்டும். 2 ஏக்கர் நிலம் வழங்குகிற நிகழ்ச்சிக்கு நீங்கள் வரவில்லை. குன்னாரங்கோட்டை பக்கத்திலே 2 ஏக்கர் நிலம் வழங்கினோம். நீங்கள் வரவேயில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கலந்துகொள்ளவே இல்லை. ஆகவே, தவறான தகவலை இங்கே சொல்லக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி தேன்மொழி, உரையை முடியுங்கள்.

திருமதி எஸ். தேன்மொழி: நிலக்கோட்டை தொகுதியில் பல கிராமங்களில் விவசாயத்தையே நம்பி வாழ்ந்து வருகிறார்கள். மழை பெய்தால் மட்டுமே விவசாயத்திற்கான நீரைக் கிணற்றிலிருந்து பெறுகிறார்கள். பல ஆயிரம் ஏக்கர் நிலத்தில் பயிர் செய்வதற்கு நீர் ஆதாரம் இல்லாத காரணத்தால், வெளி மாநிலங்களுக்குப் பிழைப்பதற்காகச் செல்கிறார்கள். மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து ஒருங்கிணைக்கப்பட்ட புள்ளுபட்டி கண்மாயிலிருந்து நிலத்தடி நீரைப் பெருக்கி, கூலம்பட்டி, ஒட்டிப்பட்டி, மைக்கேல்பாளையம் வழியாகப் புதிய வடிகால் வாய்க்கால் அமைத்தால் சுமார் 20 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பயனடையும். எனவே, புதிய வடிகால் வாய்க்கால் அமைக்க வேண்டுகிறேன்.

மேலும், 50 ஆண்டுகளாக வட்டாரத் தலைமையிடமாக விளங்கி வரும் நிலக்கோட்டையில் நீதிமன்றங்கள், நீதிபதிகள் குடியிருப்புகள், வழக்கறிஞர்கள் அறை, பொதுக் காவல் நிலையம், வட்டாட்சியர் அலுவலகம், பெண்களுக்கான கிளைச் சிறைச்சாலை, பொது நூலகம், பேரூராட்சி அலுவலகம் ஆகியவற்றிற்குப் போதுமான இட வசதிகளுடன்கூடிய புதிய கட்டடங்கள் கட்ட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், நிலக்கோட்டையிலிருந்து சென்னை, கோவை, திருப்பூர் ஆகிய நகரங்களுக்குச் செல்ல சொகுசுப் பேருந்துகளும், தினசரி திண்டுக்கல், சின்னாளப்பட்டி, கொடை ரோடு, காந்தி கிராமம் ஆகிய ஊர்களுக்குத் தொடர் பேருந்து வசதியும் செய்து கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கல்வி வளர்ச்சியில் மிகவும் பின் தங்கிய பகுதியான நிலக்கோட்டையில் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் ஆண்கள் கலைக் கல்லூரியும் அமைத்துத் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

நிலக்கோட்டை தொகுதியில் பெண்களுக்கான கல்லூரி விடுதியும், ஆண்களுக்கான பள்ளி விடுதியும் ஏற்படுத்தித் தர வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், நிலக்கோட்டை தொகுதி, வத்தலக்குண்டு, விருவீடு பகுதிகளில் தக்காளி மற்றும் முருங்கைக்காய் அதிகமாக விளைவதால், தக்காளி மற்றும் முருங்கைக்காய் பவுடர் தொழிற்சாலையும், நிலக்கோட்டையில் மல்லிகைப் பூக்கள் அதிகமாக விளைவதால் சென்ட் தொழிற்சாலையும் அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

நிலக்கோட்டைக்கு அருகில் வைகை ஆற்றில் அமைந்துள்ள பேரணைக்கு ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள். அதுபோன்றே, அருள்மிகு ஆஞ்சநேயர் கோயிலுக்கு ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகின்றனர். எனவே, அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி, பேரணையை சுற்றுலா மையமாக்க வேண்டுகிறேன்.

கடைசியாக ஒரே ஒரு விஷயம். மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கும் இந்த ஆட்சி எப்போது முடிவுக்கு வரும்? (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். திருமதி தேன்மொழி, அதிகமான நேரம் கொடுத்திருக்கிறேன் உங்களுக்கு. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் கூடுதலாக 8 நிமிடங்கள் பேசி இருக்கிறீர்கள். மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை. (குறுக்கீடு) மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அ.தி.மு.க.வைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திருமதி தேன்மொழி அவர்கள் பேசுகிறபோது, சமத்துவபுரத்திலே சாதிக் கலவரங்கள் நடந்துகொண்டிருக்கின்றன என்ற ஒரு செய்தியை இங்கே சொல்லியிருக்கிறார்கள். எந்த சமத்துவபுரத்திலே அப்படி ஒரு சம்பவம் நடந்திருக்கிறது? அதை ஆதாரத்தோடு இங்கே எடுத்துச்

சொல்வார் என்று சொன்னால், அதற்குரிய நடவடிக்கையை நிச்சயமாக இந்த அரசு எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் குன்னாரங்கோட்டை பகுதியிலே தலா 2 ஏக்கர் வழங்கியதாகச் சொன்னார்கள். இன்னாண்டார் எப்பொழுதும் மக்களுக்கு 2 ஏக்கர் வழங்கவில்லை என்ற நிலை இருக்கிறது என்று நாட்டு மக்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, *(குறுக்கீடு)* மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே இந்த அவையிலே தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். 2 இலட்சத்து 10 ஆயிரம் ஏக்கர் கொடுத்திருக்கிறோம். வரச் சொல்லுங்கள். மாண்புமிகு உறுப்பினரை வரச் சொல்லுங்கள். அவர் தொகுதியிலே கொடுத்திருக்கிறோம். வாருங்கள், காண்பிக்கிறேன். *(குறுக்கீடு)* அவர் தொகுதியிலும் கொடுத்திருக்கிறோம். இல்லை, இல்லை. எதிர்க்கட்சியினுடைய தலைவர் தொகுதியிலே, உங்களுடைய கட்சியினுடைய பொதுச் செயலாளர் தொகுதியிலே ஏறத்தாழ 500 பேர்களுக்கு மேலாக 2 ஏக்கர் நிலம் கொடுத்திருக்கிறோம். வாருங்கள், காண்பிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை. *(குறுக்கீடு)* Everything is in order. உட்காருங்கள்.

முற்பகல் 10–30

***மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் மிகப் பொருத்தமான ஒரு இனிய நாளில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. *(குறுக்கீடு)* திரு. ரெட்டமலை சீனிவாசன் அவர்களுடைய பிறந்த நாள் விழாவிலும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ம. குணசேகரன், உட்காருங்கள். *(குறுக்கீடு)* No, no.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: திரு. கக்கன்ஜி அவர்களுடைய நூற்றாண்டிலும் ஆதி திராவிடர் நலத் துறை மானியக் கோரிக்கை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. நெருப்பைப் பார்த்து 'பகவான்' என்று பயந்தவர்களுக்கு, அது 'தீ' என்று அறிவுத் தீயை ஏற்றிய அறிவுலக மேதையே, எங்கள் அன்புத் தலைவரே, *(மேசையைத் தட்டும் ஒலி)* உலகத் தமிழர்களின் தலைவராக மட்டுமல்லாமல், உலக நாடுகளுக்கும், இந்தியாவில் உள்ள மற்ற மாநில முதல்வர்களுக்கும், ஏன், இந்திய அரசிற்கும் வழிகாட்டியாக விளங்கி, இந்திய அரசியலமைப்பில் வகுக்கப்பட்டுள்ள மக்கள் நலன் காக்கும் அரசு அமைத்து—It is a welfare State, not a police State—அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மற்றும் பின்தங்கிய மக்களின் விடிவெள்ளியாக விளங்கும் நீங்கள் ஒரு கலைஞர், கவிஞர், முத்தமிழ் அறிஞர், மூதறிஞர், அரசியல் அறிஞர், டாக்டர் கலைஞர் அவர்களே! *(மேசையைத் தட்டும் ஒலி)* உங்கள் கை வண்ணத்தில் உருவாகிய சங்கத் தமிழை எடுத்து வாசித்தபோது நீங்கள் எழுதிய 'மலர்மாரி பொழிகின்றேன்' என்ற வைர வரிகள் என் நெஞ்சில் நீங்காது நிற்கிறது. "கடல் குளித்து முத்து எடுக்கும்போதும், கனிகள் வெட்டிப் பொன் குவிக்கும்போதும் களிப்புத் துள்ளும் உள்ளத்தைப்போல, இந்தக் கலைஞனது உள்ளமுமே துள்ளுவது உண்மை; கருவூலப் பொருள்கூட அள்ள அள்ளக் குறையும், சங்கக் கவிப் பெரியோர்களின் கற்பனையோ அகழ்கின்ற ஊற்றாக நிறையும்" என்று எழுதி இருந்தீர்கள். கருவூலப் பொருள்கூட அள்ள அள்ளக் குறையுமாம், சங்கக் கவிப் பெரியோர்களின் கற்பனையோ அகழ்கின்ற ஊற்றாக நிறையும் என்று சொன்னீர்கள். அதனால்தான் நீங்கள் கருணையும், நிதியும் கலந்த இதயத்தைக் கொண்டுள்ளதால், ஆதி திராவிட மக்களுக்கு அள்ளிக் கொடுக்கும் சலுகைகளும், நிதிகளும், கவிஞர்களின் கற்பனையைப்போலத் தலைவர் கலைஞரது இதயம் அகழ்கின்ற ஊற்றாக நிறைகின்றது என்பதை நான் பெருமையோடு கூறிக்கொள்ள விரும்புகின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பயன் அளிக்காத சொற்களை விடுத்து, மனதில் பதிந்து பயன் அளிக்கக்கூடிய சொற்களை மட்டுமே தன் பொது வாழ்வில் பேசக்கூடிய பேராற்றல் படைத்த இனமானப் பேராசிரியப் பெருந்தகை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களே!

அன்பு மனம், அறிவு மனம், அழகு மனம், அகல மனம் கொண்டு, கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என்று பார்க்காது, நாலாபுறமும் சென்று, நாவால் உணர்வை வீசி, வெற்றிக் கனியைக் கொண்டு வந்து, செங்கோட்டையை உங்கள் கோட்டை என மாற்றி இருக்கிற எங்களின் தளபதியே, (மேசையைத் தட்டும் ஒலி) தரணி புகழ் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களே, உங்களுக்குத் தலைதாழ்ந்த வணக்கங்கள் பலப் பல.

'தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்கு
அரும்பொருள் யாதொன்றும் இல்.'

தெளிந்த, தேர்ந்த நண்பர்களுடன் சேர்ந்து, ஆற்ற வேண்டிய செயலை ஆராய்ந்து, தாமும் நன்கு சிந்தித்துச் செயல்படும் நற்குணம் கொண்ட எங்கள் ஆற்றலரசர், அஞ்சா நெஞ்சர் மாண்புமிகு மத்திய உரம் மற்றும் இரசாயனத் துறை அமைச்சர் அவர்கள்,

'எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு'

என்ற குறளின் அடியொற்றி நடந்ததனால், எங்கள் தென் மண்டல அமைப்புச் செயலாளர், மதுரையில் நடைபெற்ற 3 இடைத் தேர்தல்களிலும் மாபெரும் வெற்றியைப் பெற்று, பின்னர் நடைபெற்ற நாடாளுமன்றத் தொகுதிகளுக்கான தேர்தலிலும் தென் மண்டலப் பகுதியில் உள்ள தொகுதிகளில் 10-க்கு 9 என்ற வெற்றியைப் பெற்று நவரத்தினங்களைப்போல இன்று ஜொலித்துக்கொண்டிருக்கும் எங்கள் மத்திய அமைச்சர்—மாண்புமிகு மத்திய உரம் மற்றும் இரசாயனத் துறை அமைச்சர் அவர்களையும் தலை சாய்த்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தீங்கு செய்தவரைத் தண்டிப்பதற்குச் சரியான வழி, அவருக்கு நன்மை செய்வதுதான் ஒரே வழி என்ற பொய்யாமொழிப் புலவர் காட்டிய வழியில் நடக்கும் எங்கள் ஆற்காட்டார், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களே, எங்கள் புறநகர் மாவட்டக் கழகச் செயலாளரும், சோழவந்தான் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான மரியாதைக்குரிய அண்ணன் திரு. மூர்த்தி அவர்களே! (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குத் தாயால் வந்தது யாக்கை, ஐயா, உங்கள் தயவால் வந்தது பொது வாழ்க்கை, அதனால்தான் ஐயா, நன்றியோடு பேச நான் பழகி இருக்கின்றேன்,

நாக்கை. இம்மாமன்றத்தில் 4–வது முறையாக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கையை சமர்ப்பிக்க வைத்து, எங்கள் இன மக்களின் வாழ்வின் வளர்ச்சிக்கு அயராது அரும்பணியாற்றிக் கொண்டிருக்கும் மாண்புமிகு முதல்வர், முத்தமிழ் அறிஞர், தமிழினத்தின் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களின் பாதம் பணிந்து என்னுடைய பதிலுரையைத் தொடங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கை விவாதத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் 11 பேர் தங்களுடைய அரிய கருத்துகளை வழங்கியுள்ளார்கள். அவற்றிற்கு சில விளக்கங்களை நான் அளிக்க உள்ளேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த பல ஆக்கப்பூர்வமான கருத்துகள் இத்துறையை மேலும் செம்மையாக வழி நடத்தப் பயன்படுத்தப்படும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10–35

மாண்புமிகு உறுப்பினர், முன்னாள் அமைச்சர் திரு. சொ. கருப்பசாமி அவர்கள் இங்கே பேசியபோது, 11–11–1989 முதல் பழங்குடியினருக்குச் சாதிச் சான்றிதழ் வழங்கும் அதிகாரம் வருவாய்க் கோட்டாட்சியருக்கு மாற்றப்பட்டுள்ளது என்று பேசினார்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். தேன்மொழி அவர்களும் இதே கருத்தைச் சொன்னார்கள். அதாவது, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இந்த அதிகாரத்தை வருவாய்க் கோட்டாட்சியருக்கு மாற்றியதாகவும், சாதிச் சான்றிதழ் வாங்குபவர்களை அலைக்கழிப்பதற்காகவே மாற்றியிருப்பதாகவும் குற்றஞ்சாட்டிப் பேசினார்கள். 1989–க்குப் பிறகு, அ.தி.மு.க. 1991–1996 வரையிலும் மற்றும் 2001–2006 வரையிலும் தமிழகத்திலே பத்து ஆண்டுகள் ஆட்சியில் இருந்தது. அப்போது சாதிச் சான்றிதழ் வழங்கும் அதிகாரத்தை மீண்டும் வட்டாட்சியருக்கு நீங்கள் மாற்றியிருக்க வேண்டியதுதானே? நீங்கள் ஏன் அதைச் செய்யவில்லை? பொறுப்பில் இருந்தபோது அது உங்களுக்குத் தெரியவில்லையா? மேலும், இந்த அதிகாரத்தை வட்டாட்சியரிடமிருந்து வருவாய்க் கோட்டாட்சியருக்கு மாற்றியது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அல்ல. உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பில், வருவாய்க் கோட்டாட்சியர் மூலம்தான் பழங்குடியினருக்குச் சாதிச் சான்றிதழ்

வழங்கவேண்டுமென்ற ஆணை வெளியிடப்பட்டதால், வருவாய்க் கோட்டாட்சியருக்கு அந்த அதிகாரம் மாற்றப்பட்டது. வருவாய்க் கோட்டாட்சியர்மூலம் சாதிச் சான்றிதழ் வழங்கியதில், இதுவரை இல்லாத அளவிற்கு சென்ற ஆண்டு மட்டும் 13,683 பேர்களுக்கு சாதிச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இப்பணி துரிதப்படுத்தப்பட்டுள்ளது. உங்களுடைய ஆட்சியில் எவ்வளவு பேருக்கு சாதிச் சான்றிதழ் வழங்கினீர்கள் என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள்.

மாண்புமிகு உறுப்பினர் அம்மையார் திருமதி டி. யசோதா அவர்கள் பேசும்போது, ஆதி திராவிடர் நலத் துறைக்கு ஒதுக்கப்படும் நிதி ஒவ்வோர் ஆண்டும் குறைக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். 2005–2006 ஆம் ஆண்டு ஆதி திராவிடர் நலத் துறை மானியக் கோரிக்கையின்போது, 488 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவு செய்யப்பட்டது. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, அதாவது, தலைவர் கலைஞர் அவர்களின் அரசு பொறுப்பேற்ற பிறகு, 2006–2007–ல் 552 கோடி ரூபாயாகவும், 2007–2008–ல் 663 கோடி ரூபாயாகவும் உயர்ந்துள்ளது. 2008–2009 நிதியாண்டு வரவு–செலவுத் திட்டத்தில் 774 கோடி ரூபாயாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. அது மேலும் உயர்த்தப்பட்டு, நடப்பாண்டில் அது 876.39 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

S.C.A. திட்டத்தின்மூலம் வழங்கப்படும் நிதி எவ்வளவு பெறப்படுகின்றது, அது எவ்வாறு செலவழிக்கப்படுகின்றது என்ற வினாக்களை இங்கே கேட்டார்கள். S.C.A. திட்டத்தின்மூலம், மத்திய அரசு நிதியுதவித் திட்டத்தின்மூலம், 2007–2008–ல், 51 கோடி ரூபாய் மத்திய அரசிடம் மாநில அரசால் கோரப்பட்டு, அதன்மூலம் மத்திய அரசின்மூலம் வரப்பெற்றது 48.97 கோடி ரூபாய். அதேபோன்று, 2008–2009–ல் மாநில அரசால் கோரப்பட்டது 60 கோடி ரூபாய். மத்திய அரசு தந்தது 60 கோடி ரூபாய். இதில், மொத்த நிதி ஒதுக்கீட்டில் 90 சதவிகிதம் ஆதி திராவிடர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கும், 10 சதவிகிதம் ஆதி திராவிட மக்கள் வசிக்கும் பகுதிகளில் அடிப்படை வசதிகள் மேற்கொள்வதற்கும் இந்த நிதி பயன்படுத்தப்படுகின்றது என்பதைத் தங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

அதேபோன்று மாண்புமிகு உறுப்பினர்கள் பேசியபோது, தாட்கோமூலம் விமானப் பணிப் பெண் பயிற்சி எவ்வளவு பேர்களுக்கு வழங்கப்பட்டது என்று கேட்டார்கள். திருமதி எஸ். தேன்மொழி அவர்கள் பேசும்போதும் இதையே கேட்டார்கள். 43 பெண்களுக்கு விமானப் பணிப் பெண் பயிற்சி அளிக்கப்பட்டு, அவர்கள் விமான நிலையங்களில் பணியாற்றி 6,500 ரூபாயிலிருந்து 8,000 ரூபாய் வரை சம்பளத்தைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, உணவகங்கள், சுற்றுலா மையங்கள் மற்றும் B.P.O. Call Centre போன்ற இடங்களிலும் பெண்கள் பணியாற்றி, வருமானத்தை ஈட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அதேபோன்று, விடுதிகளில் உள்ள மாணவர்களுக்குப் பயிற்சியளிப்பது பற்றியும் குறிப்பிட்டார்கள். ஆங்கிலம் பேசுவதற்கான பயிற்சி வழங்கப்படுகின்றதா என்று கேட்டார்கள். மாணவர்கள் சரளமாக ஆங்கிலம் பேசுவதற்குப் பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு விடுதிக்கும் சென்று நீங்களே கேட்டுப் பாருங்கள். அதேபோன்று, போர்வை வழங்கப்படவில்லையென்றும் சொன்னார்கள். விடுதிகளில் உள்ள ஒவ்வொரு மாணவருக்கும் இரண்டு வருடங்களுக்கு ஒரு போர்வை வீதம் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எந்தப் பகுதியில் வழங்கப்படவில்லை என்று அவர்கள் அதைக் குறிப்பிட்டுக் காண்பிப்பார்களானால், அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சொ. கருப்பசாமி அவர்கள் பேசும்போது, சங்கரன்கோவில் பகுதியில் விடுதி கட்ட நடவடிக்கை எடுக்கவில்லையென்று சொன்னார்கள். அதற்கு திருத்திய மதிப்பீடு கோரி அனுப்பப்பட்டிருக்கிறது. விரைவில் பணி தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மூர்த்தி அவர்கள் பேசும்போது, சமுதாயக் கூடம் கட்டும் பணி தொடங்கப்படவில்லை என்று கூறினார்கள். அதற்கு நிலம் பெறுவதில் சில பிரச்சினைகள் இருந்தன. அவை களையப்பட்டு, உடனடியாக அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. மகேந்திரன் அவர்கள் பேசியபோது, அவருடைய பகுதியில் வெங்கடேசபுரம் பள்ளி

இடிக்கப்பட்டிருக்கிறது, அதற்கு நிதி ஒதுக்கப்படவில்லையென்று சொன்னார்கள். அந்தப் பள்ளிக் கட்டடம் கட்டுவதற்கு 49.5 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கான பணிகள் விரைவில் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–40

அதேபோல, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜெயக்குமார் அவர்கள் இங்கே பேசுகின்றபோது விளிம்புத் தொகை பற்றிக் குறிப்பிட்டுப் பேசினார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வரவில்லை என்றாலும், அதற்கான விளக்கத்தினை அளிக்கின்றேன். 2002–2003 ஆம் ஆண்டு விளிம்புத் தொகை கடந்த கால ஆட்சியில் நிறுத்திவைக்கப்பட்டது. தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று, 2007–2008 ஆம் ஆண்டு 5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்மூலமாக ஒரு கோடியே இருபது இலட்சம் ரூபாய் விளிம்புத் தொகை கடனாக பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜெயக்குமார் அவர்கள் பேசுகின்றபோது, தாட்கோ பங்கு மூலதனம் இல்லாமல் செயல்படுகிறது என்ற தவறான குற்றச்சாட்டு ஒன்றைச் சொன்னார்கள். தாட்கோவிற்கு அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் என்பது 100 கோடி ரூபாய். அந்த 100 கோடி ரூபாயில், மத்திய, மாநில அரசுகளால் தாட்கோவிற்கு அங்கீகரிக்கப்பட்ட மூலதனத்தில் 95 கோடியே 12 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் மூலதனமாகச் செலுத்தப்பட்டு, தாட்கோவின் மூலதனமாகக் கடந்த ஆண்டு மட்டும் 147.39 கோடி ரூபாய் நலத் திட்ட உதவிகளாக வழங்கப்பட்டுள்ளது. இதில் 65 கோடி ரூபாய் மானியமாகவும், ஒரு கோடியே இருபது இலட்சம் ரூபாய் விளிம்புத் தொகையாகவும், மீதமுள்ள தொகை வங்கிக் கடனாகவும் வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் மொத்தம் 70,473 பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. கே. மகேந்திரன் அவர்கள் ஈரோடு மலையாளி 24 வகைக் குறவர் இன மக்களைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பதற்கு வேண்டுகோள் வைத்தார்கள். இப்பொருள் பற்றிய கருத்துரு மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது. இதற்கு மாண்புமிகு நமது முதல்வர்

அவர்கள் மத்திய அரசுக்கு நேர்முகக் கடிதம் அனுப்பியுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் திரு. உலகநாதன் அவர்கள் பேசுகின்றபோது, ஆதி திராவிடர் நலத் துறையில் தொகுப்பூதிய அடிப்படையில் பணியாற்றும் சமையலர்களைக் கால முறை ஊதியத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். இக்கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. விரைவில் காலமுறை ஊதியத்திற்கு அவர்கள் கொண்டு வரப்படுவார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சதன் திருமலைக்குமார் அவர்கள் பேசுகின்றபோது, தமிழ்நாடு தேர்வாணையக் குழுவால் பணிக்குத் தேர்வு செய்யப்படுகின்றபோது சாதிச் சான்றிதழ் சரிபார்த்தல் காரணமாகப் பணி நியமன ஆணை கிடைக்கப்பெறவில்லை என்ற ஒரு கருத்தை வெளியிட்டார்கள். இப்போது உச்ச நீதிமன்ற ஆணையின்படி பழங்குடியினர் சாதிச் சான்றிதழ்கள் சரிபார்த்தலுக்கு மாநில அளவிலும், ஆதி திராவிடர்களுக்கான சாதிச் சான்றிதழ் சரிபார்த்தலுக்கு மாவட்ட அளவிலும் குழுக்கள் திருத்தியமைக்கப்பட்டு, தற்போது மாநில அளவில் உள்ள குழுவின் முன்னர் 844 விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளன. இதற்குத் தேவையான விவரங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் கோரப்பட்டு, இதில் 32 மனுக்கள்மீதான விவரங்கள் பெறப்பட்டு, இந்த மாதத்திலேயே பரிசீலிக்கப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அம்மையார் திருமதி டி. யசோதா அவர்கள் குறிப்பிட்டபோதும், திரு. மூர்த்தி அவர்கள் பேசுகின்றபோதும், ஈமக்கிரியைக்குரிய பணம் குறைவாக, ரூபாய் 500 வழங்கப்படுகிறது, மற்ற வாரியத்தின்மூலம் 2,500 ரூபாய் வழங்குகிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். நம்முடைய மக்கள், விவசாய நல வாரியத்திலும், மற்ற வாரியத்திலும் உறுப்பினராக உள்ளனர். வாரியத்தின்மூலம் ஈமக்கிரியைக்குப் பணம் பெறுகின்றனர். ஆனால் வாரியத்தின் உறுப்பினராக இல்லாத மற்ற நபர்கள் நம்முடைய துறையின்கீழ் அந்த நிதியை எதிர்பார்க்கின்றார்கள். அதில் அரசின் நிதியுதவி என்பது ஏதாவது ஒரு திட்டத்தின்கீழ்தான் பயன்பெறமுடியும். விவசாய நல வாரியத்தில் உறுப்பினராக

இருப்பதால் நம்முடைய துறையில் நிதியைப் பெறமுடியாது. இருந்தாலும், இத்துறையின்மூலமாக நம்முடைய மக்கள் அந்த நிதியைப் பெறுகின்றனர். சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதி என்பது செலவழிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே வாரியத்தால் கொடுக்கப்படுகின்ற நிதியைப்போல இதற்கும் வழங்குவதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மற்ற உறுப்பினர்கள் பேசிய பல்வேறு கருத்துகளுக்கு நிறைய விளக்கங்கள் இருந்தாலும், நேரத்தின் அருமையைக் கருதி சில சாதனைகளைச் சொல்லி, என்னுடைய பதிலுரையைத் துவக்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர், முத்தமிழ் அறிஞர் அவர்கள் இட ஒதுக்கீட்டைப் பற்றிக் கூறும்போது, 'ஒரு நோயைக் குணப்படுவதற்கு நல்ல மருந்தைக் கொடுத்தால்கூட, நல்ல மருந்து வேறு சில பக்க விளைவுகளை உடலில் ஏற்படுத்தக்கூடும்; அதுபோல, இட ஒதுக்கீட்டின் காரணமாக சாதி மாறுபாடுகள், சாதி வேறுபாடுகள் இன்றைக்கு நாட்டில் தலைதூக்குகின்றன. அதற்காக நோய் தீர்க்க நல்ல மருந்தைக் கொடுக்காமல் இருக்க முடியாது. இந்த மருந்துகளால் பக்க விளைவு ஏற்படுமே என்பதற்காக நோயை அலட்சியப்படுத்தி, நல்ல மருந்தைக் கொடுக்காமல் இருந்துவிட முடியாது. பக்க விளைவு வந்தால் அதை எப்படிச் சந்திக்கவேண்டும்; எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்பதைச் சிந்தித்து, நல்ல மருந்தைக் கொடுத்துத்தான் தீரவேண்டும்' என்று கூறினீர்கள். அக்கூற்று வெறும் கூற்றாக இல்லாமல், சமூக நீதியை நோக்கி வெவ்வேறு பரிமாணங்களில் இட ஒதுக்கீட்டை வழங்கி, அம்மக்களின் வாழ்வில் ஒளியை ஏற்றியுள்ளீர்கள். இதுபோன்ற நிகழ்வைப் பற்றி கவிஞர் ஈரோடு தமிழன்பன் கூறுகையில், "உழைக்க ஒரு ஜாதி, உறிஞ்சிப் பிழைக்க ஒரு ஜாதி, இந்தக் கிழட்டு நீதி கிழிபடப் போவது எந்தத் தேதி" என்று குறிப்பிட்டிருந்தார். அந்தக் கிழட்டு நீதியைக் கிழித்து, சமூக நீதி வரலாற்றில் நீங்கா இடம்பெற்ற தலைவர் நீங்கள் அல்லவா! (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–45

அருந்ததியின மக்களுக்கு சமூக, கல்வி, பொருளாதார நிலையில் அடித்தளத்தில் இருப்பதால், அவர்களை முன்னேற்றுவதற்கு சில

சிறப்புச் சலுகைகள் அளிப்பது அவசியம் என, ஆதி திராவிடர்களுக்கு வழங்கப்பட்ட இட ஒதுக்கீட்டில் அருந்ததியின மக்களுக்கு 3 விழுக்காடு உள் ஒதுக்கீடு வழங்க, சட்டம் இயற்றி, அதனை 29–4–2009 அன்று நடைமுறைப்படுத்தி, சமூகப் புரட்சியில் மேலும் ஒரு வைரக் கல்லை அணிகலன் ஆக்கியவர் உலகிலேயே நீங்கள் ஒருவர்தான் என்பதை நான் இந்த மாமன்றத்தில் பெருமையோடு பதிவு செய்ய விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முழுமையான சமூக நீதி அனைத்துத் தரப்பு மக்களுக்கும் கிடைத்திட அல்லும், பகலும் உழைத்து உருவாக்கிய அந்த சமூக நீதியை நுகர்வதற்கு கல்வி ஒரு முக்கியக் காரணி ஆகும். இதற்காக இத்துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதி என்பது ரூபாய் 872 கோடியே 39 இலட்சமாகும். இதில் 671 கோடியே 74 இலட்சம் ரூபாய் அதாவது, 77 விழுக்காடு நிதி கல்வி சார்ந்த திட்டங்களுக்காகச் செலவிடப்படுகிறது. இதன்மூலம் 2006 ஆம் ஆண்டு 10 ஆம் வகுப்பில் தேர்ச்சி விகிதம் என்பது 70 விழுக்காடாக இருந்தது, இவ்வாண்டின் தேர்ச்சி விகிதம் 79 விழுக்காடாக உயர்த்தப்பட்டிருக்கிறது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ரவிக்குமார் அவர்கள் பேசும்போதுகூட குறிப்பிட்டுச் சொன்னார்கள், அதேபோல் 12 ஆம் வகுப்புத் தேர்வில் தேர்ச்சி விகிதம் என்பது 56 விழுக்காடாக இருந்தது, இவ்வாண்டு தேர்ச்சி விகிதம் என்பது 75 சதவிகிதமாக உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதை, இதுவரை இத்துறை இவ்வளவு ஒரு தேர்ச்சி விகிதத்தைக் கண்டதில்லை என்பதைக் குறிப்பிட்டுச்சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திருமதி யசோதா அவர்கள்கூட இதைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள்.

அதேபோல் தமிழ் மொழியின் முத்து போன்ற மூன்று பிரிவுகளான இயல், இசை, நாடகம் போன்று கடந்த 3 ஆண்டுகளில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்காக முத்தான, சத்தான சாதனைகளைச் செய்திருந்தாலும் அவற்றில் ஒரு சில முத்துக்களை இம்மாமன்றத்தில் பதிவு செய்துகொள்ள விரும்புகின்றேன்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் கல்வித் தரத்தை மேம்படுத்த வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்தில் 3 ஆண்டுகளில் ஒரு கோடியே 77 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 5 ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும்,

4 கோடியே 34 இலட்சத்து 98 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 16 ஆதி திராவிடர் நல நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 2 கோடியே 86 இலட்சத்து 6 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 8 பழங்குடியினர் நல உண்டி உறைவிட நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

அதேபோல் அரசுப் பள்ளிகள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகள், மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பள்ளிகளில் 10 ஆம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெறும் மாணவர்கள், அதாவது இங்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. உலகநாதன் அவர்களும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திருமதி யசோதா அம்மையார் அவர்களும் பேசுகின்றபோது குறிப்பிட்டுச் சொன்னார்கள், தனியார் பள்ளியில் சேர்ந்து படிக்க வைக்கப்படுகின்ற குழந்தைகள் எந்த நிலையில் படித்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற ஒரு வினாவைக்கூட இங்கே எழுப்பினார்கள். அதிக மதிப்பெண் பெறும் முதல் 10 மாணவர்கள் மாவட்டந்தோறும் தாங்கள் விரும்பும் சிறந்த தனியார் பள்ளிகளில் சேர்ந்து 11 ஆம் வகுப்பைத் தொடர்ந்து படிக்க தலைவர் கலைஞர் அவர்களால் ஒரு கோடியே 68 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து இந்தச் சிறப்பான திட்டத்தை அறிமுகப்படுத்தியதன் விளைவாக இம்மாணவர்கள் 1,200–க்கு 1,150 மதிப்பெண்களுக்கு மேல் 5 நபர்கள் பெற்றுள்ளார்கள் என்பதை மிகப் பெருமையோடு கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

அதேபோல், 1,100 மதிப்பெண்களுக்கு மேல் 30 மாணவர்கள் பெற்றுள்ளார்கள். 1,000 மதிப்பெண்களுக்கு மேல் 129 மாணவர்கள் பெற்றுள்ளார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அதேபோல், கிராமங்களில் அரசுப் பள்ளிகளைத் தவிர, ஆங்கில நர்சரி பள்ளிகளிலும், ஏழையெளிய குழந்தைகள் கல்வி பயின்று வருகிறார்கள். எனவே, 6 ஆம் வகுப்பு செல்லும் ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியர்களுக்குத் தரமான, சிறந்த கல்வியை வழங்கும்பொருட்டு ஒரு தனித் தேர்வு நடத்தி, வட்டாரத்திற்கு ஒரு குழந்தை வீதம் ஒரு மாணவரைத் தேர்ந்தெடுத்து, மொத்தம் 385 வட்டாரங்களில் உள்ள 385 மாணவ, மாணவியர் நற்பெயர் பெற்ற சிறந்த உண்டி உறைவிடப் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பில் சேர்ந்து, அந்த மாணவர்கள் தொடர்ந்து 12 ஆம் வகுப்பு

வரை கல்வி பயில இதற்காகும் செலவினம் முழுவதையும் கலைஞர் அரசே ஏற்றுக்கொள்ளும் என்ற மாபெரும் கல்விப் புரட்சித் திட்டத்தை கடந்த ஆண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிமுகப்படுத்தியதன் விளைவாக, இதன்மூலம் தமிழகத்தில் 385 வட்டாரங்களில் 196 மாணவர்களும், 189 மாணவியர்களும், அம்மாணவர்கள் மற்றும் பெற்றோர்களின் விருப்பத்திற்கிணங்க, தலைசிறந்த 146 பள்ளிகளில் கல்வி பயின்று வருகிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு இம்மாமன்றத்தில் பதிவு செய்துகொள்ள விரும்புகின்றேன்.

முற்பகல் 10—50

தரமான கல்வி வழங்குவதற்கு மத்திய அரசு, மாநில அரசு கல்வி உதவித் தொகையாக, கடந்த 3 ஆண்டுகளில் 472 கோடியே 8 இலட்சத்து 26 ஆயிரம் ரூபாய் கல்வி உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

மேலும், 2006—2007 ஆம் ஆண்டு வரை உயர் கல்வி உதவித் தொகை 15,000 மாணவர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வந்தது. சென்ற முறை மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் யசோதா அவர்கள் குறிப்பிட்டுப் பேசியிருந்தார்கள். இந்தக் கல்வி உதவித் தொகை என்பது, கேட்கின்ற அனைத்து மாணவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்று அவர்கள் இங்கே பேசியிருந்தார்கள். இந்த ஆண்டும் அவர்கள் பேசியிருக்கிறார்கள். 15,000 மாணவர்களுக்கு மட்டும் வழங்கப்பட்டு வந்த கல்வி உதவித் தொகை, தலைவர் கலைஞர் அரசு பொறுப்பேற்று, கழகத்தின் ஆட்சி பொறுப்பேற்று, விண்ணப்பம் செய்த அனைத்து மாணவர்களுக்கும், இந்த உயர் கல்வித் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை 53,295 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.35 கோடியே 21 இலட்சத்து 30 ஆயிரம் உயர் கல்வி உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது என்பதை நான் பெருமையோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் பள்ளிகளில், உட்கட்டமைப்பு வசதிகளைப் பெருக்குவதற்காக நபார்டு வங்கித் திட்டத்தின்மூலம் 50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து அந்தப் பணியும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

ஆதி திராவிட மாணவ, மாணவியர்கள் பெரும்பாலோர் கிராமப் பகுதிகளில் வசிப்பதால் தலைசிறந்த கல்வி வழங்க வேண்டுமென்று, விடுதிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, மாணவ, மாணவியர்களுக்கு, இத்துறையின்கீழ் ஆதி திராவிடர்களுக்கென 1,229 விடுதிகளும், பழங்குடியினருக்கென 40 விடுதிகளும் செயல்பட்டு வருகின்றன.

இந்த விடுதிகளில் தங்கிப் பயிலுகின்ற மாணவ, மாணவியர்களுக்கு உணவுக் கட்டணமாக கடந்த ஆட்சியில் பள்ளி மாணவர்களுக்கு ரூ.300/– என்று இருந்ததைப் படிப்படியாக உயர்த்தி 450 ரூபாயாகவும், கல்லூரி விடுதியில் தங்கிப் பயில்வோர்க்கு 400 ரூபாயாக இருந்ததை 550 ரூபாயாகவும் உயர்த்தி உள்ளார்கள். இதில் நீங்கள் ஒன்றை எண்ணிப் பார்க்க வேண்டும். கடந்த ஆட்சியில் அரிசி கிலோ ரூ.3.50 என்று இருந்தது. ஆனால், இன்று ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய்க்கு வழங்கப்பட்டு மாணவர்களுக்கு இந்த உணவுக் கட்டணத்தின்மூலம் சிறப்பான, தரமான உணவு வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், விடுதியில் பயில்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே இருப்பதால், அவர்களுக்குப் புதிய விடுதிகள், தேவை மற்றும் இன்றியமையாமை ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு நமது முதல்வர் அவர்கள் கடந்த 3 ஆண்டுகளில் 51 புதிய விடுதிகளைத் திறப்பதற்கு ஆணையிட்டுள்ளார்கள். இதன் மொத்த மதிப்பீடு ரூ.3 கோடியே 75 இலட்சத்து 91 ஆயிரம் ரூபாய். கடந்த 3 ஆண்டுகளில், 76 புதிய விடுதிகளுக்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு ரூ.35 கோடியே 92 இலட்சத்து 78 ஆயிரம் ஒதுக்கீடு செய்து அப்பணிகளும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், ஆதி திராவிட மக்கள் திருமணங்களை நடத்துவதற்கு ஏதுவாக, கடந்த 3 ஆண்டுகளில் 252 இலட்சம் மதிப்பீட்டில் 30 சமுதாயக் கூடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளைச் செய்து தருவதற்கு நபார்டு வங்கித் திட்டத்தின்கீழ் கடனுதவிமூலம் 249 குடியிருப்புகளுக்கு 110 கோடியே 87 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இவற்றில் 205 குடியிருப்புகளுக்கு பல்நோக்கு மையம்

என்றழைக்கப்படும் சமுதாயக் கூடம் தலா 18 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய *30* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.78,14,48,000/–* மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.9,000/–ல் ரூ.100/–* குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *7741*, திரு. ஞா. செந்தமிழன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *7790*, திரு. ஆர். சின்னசாமி.

திரு. ஆர். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய *30* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.78,14,48,000/–* மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.9,000/–ல் ரூ.100/–* குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *8252*, திரு. எல். ரவிச்சந்திரன்.

திரு. எல். ரவிச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.78,14,48,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6548, திரு. கே.எல். இளவழகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7765, திரு. த.அ. மேகநாதன்.

திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.78,14,48,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7775, திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.78,14,48,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7796, திரு. தி.க. ராஜா.

திரு. தி.க. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.78,14,48,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7816, திரு. மு.க. பெரியசாமி.

திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.78,14,48,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8250, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.78,14,48,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8251, திரு. கோ. எதிரொலி மணியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8253, திரு. அ. தமிழரசு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8256, திரு. டி. மூர்த்தி.

திரு. டி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.78,14,48,000/— மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8268, திரு. பெ. கண்ணன்.

திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.78,14,48,000/— மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8274, திரு. கி. ஆறுமுகம்.

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.78,14,48,000/— மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6557, திரு. கே. உலகநாதன்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.78,14,48,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7746, திருமதி பி. பத்மாவதி.

திருமதி பி. பத்மாவதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.78,14,48,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7748, திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.78,14,48,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8262, திரு. எஸ். இராசசேகரன்.

திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.78,14,48,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7749, திரு. ஆர்.எம் பழனிசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7751, திரு. மா. தண்டபாணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7809, திரு. அருள் அன்பரசு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8275, திரு. விடியல் எஸ். சேகர், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7666, திரு. ப. டில்லி பாபு.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.78,14,48,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7811, திரு. சி. கோவிந்தசாமி.

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.78,14,48,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *6558*, திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *7148*, திரு. சி. சண்முகவேலு.

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழக அரசு வெளியீடுகள், உடுமலைப்பேட்டை ஒன்றிய அலுவலகங்கள், நகராட்சிக்கும் கிடைத்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய *30* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*78,14,48,000/–* மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*9,000/–*ல் ரூ.*100/–* குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *7167*, திரு. இ. மகேந்திரன்.

திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர் அலுவலகங்களுக்குத் தேவையான எழுதுபொருள் நோட்டுகள், கோப்புகள் முதலானவற்றை அரசே வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய *30* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*78,14,48,000/–* மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*9,000/–*ல் ரூ.*100/–* குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *7619*, திருமதி ஜி. லதா.

திருமதி ஜி. லதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் எழுதுபொருட்கள், கோப்புகள் அனைத்தும் தரமான தாள்கள் கொண்டதாக வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.78,14,48,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7735, திரு. ம. குணசேகரன்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையில் காலியாக உள்ள பணியிடங்களை உடனே நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.78,14,48,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7742, திரு. செ.ம. வேலுசாமி.

திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எழுதுபொருள் அச்சகங்களை நவீனப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.78,14,48,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7745, திரு. கோவை தங்கம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7747, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலையில் உள்ள அரசு அச்சகத்தை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.78,14,48,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7752, திரு. ஞா. ஜாண் ஜோசப்.

திரு. ஞா. ஜாண் ஜோசப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு மைய அச்சகத்திலுள்ள பெண் தொழிலாளர்களின் சீருடைத் தையற் கூலியை ரூ.100/– ஆக உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.78,14,48,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,000/–ல் ரூ.100/–குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7754, திருமதி பெ. கமலாம்பாள்.

திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழக அரசு வெளியிடும் ஒவ்வொரு அரசாணைகளும் எளிதில் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.78,14,48,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7764, திருமதி இளமதி சுப்பிரமணியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7785, திரு. ஆர். சாமி.

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழக அரசின் அச்சகத்தை நவீனப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.78,14,48,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7794, திரு. ஓ.கே. சின்னராஜ்.

திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு அலுவலர்களுக்கு வழங்கும் எழுதுபொருட்களை அரசு அச்சகத்திலே அச்சிட்டு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.78,14,48,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7795, திரு. தா. மலரவன்.

திரு. தா. மலரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு அச்சகங்களில் ஊனமுற்றோருக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.78,14,48,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8265, திரு. சு.ப. வேலுமணி.

திரு. சு.ப. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் அனைத்துப் பள்ளி மாணவர்களின் நலன் கருதி அரசே எழுதுபொருட்கள் மற்றும் நோட்டுப் புத்தகங்களை இலவசமாக வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.78,14,48,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8280, டாக்டர் க. நெடுஞ்செழியன், இருக்கையில் இல்லை.

மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால், கூறலாம். மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) மற்றும் முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ளவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் தருகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

@ 840 முதல் 952 வரையிலான பக்கங்களில் இணைப்பு II, III மற்றும் IVஆக அச்சிடப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் உறுப்பினர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. அவற்றில், தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய அரிய, பெரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், அவற்றிற்கெல்லாம் என்னுடைய பதிலுரையில் விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். இன்று நான்கு மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் நான்கு மானியக் கோரிக்கைகள்மீதும் சேர்த்தே பேசலாம். முதலில், மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. சின்னப்பன், ஒதுக்கப்பட்ட நேரம் 15 நிமிடங்கள்.

திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடிமைப்பட்ட நம் பாரதத்திற்கு அகிம்சையால், காந்தி புன்னகைத்துக்கொண்டே விடுதலை வாங்கித் தந்தார். தர்மம் ஜெயித்தது. இன்றோ தேர்தல் பாதையில் அதே காந்தி புன்னகையைக் காட்டி தர்மம் தோற்கடிக்கப்பட்டுள்ளது. இது தற்காலிகம்தான்.

"தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும்
தர்மம் மீண்டும் வெல்லும்."

அண்ணா ஆண்ட காலம் தமிழ்நாட்டிற்குக் கிடைத்த நல்ல காலம். புரட்சித் தலைவர் ஆண்ட காலம் ஏழை மக்களுக்கு ஏற்றம் தந்த காலம். புரட்சித் தலைவி அம்மா ஆண்ட காலம், தமிழ் மக்களின் வாழ்வில் வசந்த காலம். இப்போது நடப்பதோ களப்பிரர்

@ 953 முதல் 1021 வரையிலான பக்கங்களில் இணைப்பு V மற்றும் VI-ஆக அச்சிடப்பட்டுள்ளன.

காலம்போல் இருண்ட காலம். இந்த இருண்ட காலத்தை முடிந்த காலமாக்கி, தமிழர்களின் எதிர்காலத்தை வசந்த காலமாக்க, எக்காலமும், எந்நேரமும் தமிழ் மக்களின் முன்னேற்றத்தைச் சிந்திக்கும் எங்கள் அம்மா இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன்.

முற்பகல் 11–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடல் வற்றுமா என்று காத்திருந்த கொக்கு, குடல் வற்றி இறந்த நிலைதான் எல்லோருக்கும் ஏற்படும்.

திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் வெளிமாநிலக்காரர்கள், உள்ளூரில் அதிகாரம் படைத்த புரோக்கர்களின் துணைகொண்டு, நிலங்களை வாங்கி வருகின்றார்கள். இப்படியே போனால், கிராம விவசாய நிலங்கள் முள்வேலிக்குள் முடங்கிப் போகும். கரிசல் காடுகளில் ஆடு, மாடுகள் மேய்த்து வந்த பெரிய விவசாயக் கூட்டம், வாழ்விழந்து உள்ளூரிலேயே அகதிகளாக மாறும் சூழ்நிலை உள்ளது.

இன்னொரு கொடுமை. அசல் பத்திரம், பட்டா, நிலத்துக்காரர்களிடம் பத்திரமாக உள்ளது. பத்திரம் பத்திரமாக உள்ளது. ஆனால், போலி ஆவணங்கள்மூலம், அவர்களின் நிலம் அதிகாரம் படைத்தோரின் துணையோடு பறிபோகிறது. இப்படி, கடந்த மூன்றாண்டு கால ஆட்சியில் நிலம் இழந்தவர்களின் எண்ணிக்கை ஏராளம். விவசாயிகளின் நிலங்களைப் பாதுகாத்திட, போலி ஆவணங்கள்மூலம் நிலங்களை விற்பனை செய்யும் கூட்டத்தைக் கூண்டோடு அகற்றிட, ஆதாயக் கொலைகள் நடைபெறாமல் தடுத்திட விழிப்புடன் அரசு செயல்பட வேண்டும்.

மனிதனுக்கு அருள் வேண்டி, கோயில், குளம் உள்ள பல ஊர்களுக்கும், நிம்மதியையும், மகிழ்ச்சியையும் தேடிச் செல்வதற்கும் பெயர் சுற்றுலா. இன்று தலைநகரங்களோ கொலை நகரங்களாக மாறிவிட்டன. குற்றவாளிகளைத் தேட வேண்டிய காவலர்கள், கொலை செய்யப்பட்டவர்களின் தலைகளைத் தேடி அலைகிறார்கள். புனிதக் கோயில் மதுரை மாநகரில் உணவுக்குப் பதில் டிஃபன் பாக்ஸில் குண்டு இருக்கிறது. நெல்லைப் பகுதியில், மனித உயிர்கள் நித்தம் நித்தம் வன்முறையில் மண்ணில் சாய்க்கப்படுகின்றன.

இலையுதிர் காலம்போல் அங்கு இப்போது கொலையுதிர் காலம்தான் நிலவுகிறது. இப்படியிருந்தால் எப்படி வருவார்கள் சுற்றுலாவிற்கு?

சாதாரணமாக வெளியில் சென்றுவிட்டு, வீடு திரும்புவதே இந்த ஆட்சியில் அதிசயமாகிவிட்டது. வன்முறையில்லா அமைதி ஆட்சி மீண்டும் மலர, சுற்றுலா பெருக எங்கள் அம்மாவின் ஆட்சி வேண்டும்.

வீரத்தின் அடையாளம், தியாகத்தின் பிறப்பிடம், பாஞ்சையில் உதித்த சிங்கம், கயத்தாறில் விதைத்த வீரம், மாவீரன் வீரபாண்டிய கட்டபொம்மனுக்குத் தமிழகத்தின் தலைநகரில் சிலை இல்லை. அந்த வீர வரலாற்று நாயகனுக்கு சென்னை மாநகரில் சிலை நிறுவ வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) காவடிச் சிந்து பாடிய சென்னிகுளம் செந்தூரப் பொட்டுக்காரர், கழுகுமலை முருகனுக்கு அழகு தமிழில் பாமாலை தொடுத்த கவிராயர், நல்கவிமழை தந்த புகழ்மழைப் பேருடைய அண்ணாமலைக் கவிராயரின் அவதாரத் திருநாளை இந்த அரசே விழா எடுத்துக் கொண்டாட வேண்டும். விளாத்திகுளம் கரிசல் மண்ணில் அவதரித்த கர்நாடக சங்கீத மேதை, உயர்ஞானம் கொண்ட நல்லப்ப சுவாமிகளுக்கு விளதை மண்ணில் ஒரு மணிமண்டபம் வேண்டும். சென்ற ஆண்டும் இதை நான் வலியுறுத்தினேன். வீரபாண்டிய கட்டபொம்மனின் தளபதிகள் அனைவருக்கும் பாஞ்சாலங்குறிச்சியில் தோரணவாயில் இருக்கிறது. ஆனால், அருந்ததியர் குலத் திலகம், கட்டபொம்மனின் தளபதிகளுள் ஒருவரான விடுதலைப் போராட்ட வீரன் பொட்டிப்பகடை நினைவாக பாஞ்சைப் பகுதியில் தோரணவாயில் இல்லை; தோரணவாயில் அமைத்திட வேண்டும்.

ஜனநாயகத்தின் நான்கு தூண்களில் ஒன்றான பத்திரிகைத் துறையில், பத்திரிகையாளர்கள் உள்ளதை உள்ளபடி ஊருக்குச் சொல்லும் உத்தமர்கள். ஜனநாயகத்தைத் தாங்கும் பலவான்கள். எளிய மனிதருக்கும் செய்தி தரும் தூதுவர்கள். இவர்கள் வாழ்க்கையில் நிம்மதி வேண்டும். ஆகையால் 60 வயது நிறைந்த, சமூகப் பாதுகாப்பற்ற, வறுமையில் வாடும் பத்திரிகைத் துறை ஊழியர்கள் அனைவருக்கும் ஓய்வூதியம் வழங்கிட அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். பத்திரிகையாளர்கள் அனைவருக்கும் இலவச பஸ் பாஸ் வழங்கிடக் கேட்டுக்கொள்கின்றேன்.

தொலைக்காட்சிகளில், "மானாட மயிலாட" நிகழ்ச்சியைப் போன்ற நிகழ்ச்சிகள், சமுதாயச் சீரழிவாக இருந்தும், தணிக்கையில்லாமல் அனுமதிக்கப்படுகின்றன. ஆனால், தொன்றுதொட்டு நம்முடைய

முன்னோர்கள் காலத்திலிருந்து, பாரம்பரிய நிகழ்ச்சிகளாகக் கருதப்படுகின்ற ஆடல், பாடல்களுடன்கூடிய கிராமிய நடன நிகழ்ச்சிகள், தென் மாவட்டங்களில் தற்போது தடை செய்யப்பட்டுள்ளன. கொஞ்சங்கொஞ்சமாக சிதைந்துகொண்டிருக்கும் இந்தக் கிராமிய நிகழ்ச்சிகள் முழுவதும் சிதைந்துவிடாமல் சீர்படுத்திட, இப்படிப்பட்ட கலை நிகழ்ச்சிகளுக்கு அரசு அனுமதி வழங்கிட வேண்டும்.

மாவீரன் வீரபாண்டிய கட்டபொம்மனின் தளபதிகளான வீரன் சுந்தரலிங்கம், வீரன் வெள்ளையத்தேவன் இருவருக்கும், எங்கள் இதய தெய்வம் அம்மா அவர்கள், தலா *25* இலட்சம் ரூபாய் ஒதுக்கி, அந்த மண்ணின் மைந்தர்களுக்கு, அந்த வீரபுருஷர்களுக்கு கவர்னகிரியிலும், வல்லநாட்டிலும் மணிமண்டபம் கட்டினார்கள். மாண்புமிகு சபாநாயகர் அவர்கள்தான் திறந்துவைத்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முழுப் பூசணிக்காயைச் சோற்றிலே மறைக்கக்கூடாது. வல்லநாட்டிலே வெள்ளையத்தேவனுக்கும், கவர்னகிரியில் சுந்தரலிங்கத்திற்கும் மணிமண்டபங்கள் கட்டப்பட்டு, அவற்றை என்னுடைய தலைமையில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்தான் திறந்து வைத்தார்கள்.

முற்பகல் 11–35

திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மீண்டும் கூறுகிறேன், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் நிதி ஒதுக்கி, கட்டிக் கொடுத்தார்கள்; திறந்து வைத்தது மட்டும்தான் நீங்கள். அந்த மணிமண்டபங்களைப் பராமரிக்க இன்று வரை எந்தப் பணியாளர்களையும் இந்த அரசு நியமிக்கவில்லை.

இதேபோன்று, சீறாப்புராணம் எழுதிய உமறுப்புலவருக்கும் மணிமண்டபம் கட்ட இதய தெய்வம் அம்மா அவர்களால் நிதி ஒதுக்கப்பட்டு, அதுவும் பேரவைத் தலைவர் அவர்களால்தான் திறந்து வைக்கப்பட்டது. ஆனால், இன்று வரை பணியாளர் நியமிக்கப்படாமல், பராமரிப்பின்றி, கேட்பாரற்று, கவனிக்கப்படாமல் உள்ளது. ஆனால், கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகம், பக்கம் *13*–ல், அது செய்தி–மக்கள் தொடர்புத் துறையால் உருவாக்கப்பட்டு,

பேணிப் பாதுகாக்கப்பட்டு வருவதாகக் கூறப்பட்டுள்ளது. இனியாவது, பணியாளரை உடனே நியமித்துப் பேணிப் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். நாங்கள் கட்டி முடித்ததற்குத் திறப்பு விழா மாத்திரம் நடத்திவிட்டு, பராமரிப்புப் பணிகளுக்குக்கூட முக்கியத்துவம் தராமல் இருப்பது வருத்தத்தை அளிக்கிறது.

அந்நிய ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, சுதேசிக் கப்பல் கம்பெனியை அமைத்துப் போராடிய விடுதலைப் போராட்ட வீரர், செக்கிழுத்த செம்மல் வ.உ.சி.யின் பிறந்த நாளை முன்னிட்டு, எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியின்போது, ஆண்டுதோறும் செப்டம்பர் 5 ஆம் தேதியன்று அரசின் சார்பில் விழா எடுக்கப்பட்டது. செய்தி—மக்கள் தொடர்புத் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பு, பக்கம் 23—ல், ஒவ்வொரு ஆண்டும் ஒட்டப்பிடாரத்தில் செக்கிழுத்த செம்மல் வ.உ.சி.க்கும், கோவில்பட்டியில் வீரன் அழகுமுத்துக்கோனுக்கும் விழா எடுப்பதாக உண்மைக்கு மாறாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்த அரசு பொறுப்பேற்ற பின், கடந்த மூன்று ஆண்டுகளாக விழா எடுக்காமல், வ.உ.சி.யையும், வீரன் அழகுமுத்துக்கோனையும் புறக்கணிப்பது ஏன்? இந்த ஆண்டாவது விழா எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வ.உ.சி.யை ஏதோ நாங்கள் புறக்கணித்ததுபோலச் சொல்கிறார். விடுதலைப் போராட்டத்திலே பங்கேற்ற தியாகிகளையெல்லாம் ஏற்றிப் போற்றுகின்ற ஒரே அரசு, தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையிலே அமைந்திருக்கிற இந்த அரசுதான். (மேசையைத் தட்டும் ஒலி) வ.உ.சி. அவர்கள் சிறைச்சாலையிலே இழுத்த செக்கைத் தேடிக் கண்டுபிடித்துக் கொண்டு வந்து, அரசினர் தோட்டத்தில் வைத்தது மட்டுமல்ல, இன்றைக்கு இராஜாஜி மண்டபத்திலும் அது பாதுகாப்பாகப் பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வ.உ.சி. பெயரிலே ஒரு பொறியியல் கல்லூரிக்கு அனுமதி அளித்திருப்பவரும் தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள்தான். இது, இந்த ஆண்டு செய்திருக்கின்ற சாதனை.

திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செக்கிழுத்த செம்மல் வ.உ.சி.க்குத் திருநெல்வேலியில் 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மணிமண்டபம் கட்டி அழகுபடுத்தினார்கள். எங்கள் அம்மா அவர்களின் ஐந்து ஆண்டு கால ஆட்சியின்போது, நான் மாவட்ட ஊராட்சித் துணைத் தலைவராக இருந்தபோது தொடர்ந்து வ.உ.சி. விழாவிலே கலந்துகொண்டிருக்கின்றேன். ஆனால், இந்த ஆட்சி வந்து மூன்றாண்டுகளில் ஒரு தடவைகூட விழா நடத்தவில்லை என்பதை மீண்டும் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

சென்ற அ.தி.மு.க. ஆட்சியில் பதிவுபெறும் ஒவ்வொரு பத்திரத்திற்கும் பதிவுக் கட்டணம் வசூலிக்கப்பட்டு, அவ்வாறு பெறும் தொகையில், பத்திர எழுத்தர்களுக்கு பென்ஷன் திட்டம் அறிவிக்கப்பட்டது. இந்தத் திட்டம் இந்த ஆட்சியில் என்ன நிலையிலுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழகம் முழுவதும் real estate தொழில் செய்பவர்கள் முத்திரைத்தாள் கட்டணத்தைக் கட்டாமல், அரசை ஏமாற்ற வேண்டுமென்பதற்காக Power of Attorney–ஐப் பயன்படுத்தி, நிலங்களை விற்பனை செய்து கொண்டிருக்கின்றனர். இதனால் அரசுக்கு வரவேண்டிய வருமானம் real estate அதிபர்களுக்குத்தான் போகிறது. எனவே, Power of Attorney மூலம் நிலங்கள் பரிவர்த்தனை செய்வதை அரசு முறைப்படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

வங்கக் கடலில், மன்னார் வளைகுடாவில் நல்லதண்ணீர்த் தீவு என்று ஒன்று உள்ளது. அங்கு முனீஸ்வரன் கோயில் ஒன்றும் உள்ளது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பத்திரப் பதிவில் Power of Attorney பற்றிச் சொன்னார்கள். கலைஞர்

அவர்களுடைய ஆட்சியில்தான் அதற்கான சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டு, எந்தெந்தப் பகுதிகளில் Sub–Registrar லிமிட்டிற்குள்ளாக அவர்கள் Power of Attorney செய்துகொள்ள வேண்டுமென்றும், அவர்களுக்கு போட்டோக்கள் ஒட்ட வேண்டுமென்றும், இந்த அரசால், இந்தத் துறையால் முடிவெடுக்கப்பட்டு, அதற்கான அனுமதிக்காக மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. அனுமதி கிடைத்தவுடன் நடைமுறைப்படுத்தப்படும்.

திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். வங்கக் கடலில் மன்னார் வளைகுடாவில் நல்லதண்ணீர்த் தீவு உள்ளது. அங்கு ஒரு முனீஸ்வரன் கோயிலும் உள்ளது. இந்துக்களைக் காட்டிலும், அங்கு மீன் பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கிற கிறித்துவர்கள் அதிகமான அளவில் அந்த முனீஸ்வரன் கோயிலில் கும்பிடுகிறார்கள். அந்த அளவிற்கு அது ஒரு சிறப்பு வாய்ந்த கோயில். நடுக்கடலில் உள்ள அந்தத் தீவில் நல்ல தண்ணீர் கிடைக்கிறது.

அதிகமான சுற்றுலாப் பயணிகள் அங்கு வந்து செல்கின்றனர். அங்கு பாதுகாப்பில்லாத மீன்பிடிப் படகுகளில் வந்து செல்கின்றனர். அதனால், அந்தத் தீவிற்கு விளாத்திகுளம் தொகுதி, வேம்பாரிலிருந்து, சுற்றுலாத் துறையின்மூலமாகப் படகுகளைவிட்டு போக்குவரத்திற்கு வசதி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, அந்தத் தீவில் சுற்றுலாத் துறையின்மூலம் தங்கும் விடுதியும், உணவகமும் அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–40

விளாத்திகுளம், நாகலாபுரத்தில் அவதரித்த மதுரகவி பாஸ்கரதாஸ், நாடகக் கலையின் தந்தையாகக் கருதப்படுபவர். அவரிடம்தான் பழம்பெரும் நடிகர் பி.யு. சின்னப்பா, தியாகராஜ பாகவதர் போன்றவர்கள் நாடகம் பயின்றனர். அப்பேர்ப்பட்ட புகழ்பெற்ற பாஸ்கரதாஸ் சுவாமிகளுக்கு நாகலாபுரத்தில் மணிமண்டபம் அமைத்து அரசு விழாவும் நடத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உள்ளாட்சியில் நல்லாட்சி என்று செய்தித் துறைமூலமாக விளம்பரம் செய்யப்படுகிறது. உண்மையில் எங்கள் அம்மா அவர்களின் ஆட்சிக் காலம்தான் உள்ளாட்சியில் பொற்கால ஆட்சி.

ஏனெனில், இப்போது ஊராட்சி ஒன்றியச் சாலைகளைப் புதுப்பிக்க வேறு எந்த நிதியும் இல்லை. நபார்டு வங்கியையும், மத்திய அரசின் PMGSY போன்ற திட்டங்களையும் நம்பியே இருக்க வேண்டியுள்ளது. அதில் பல விதிகள் உள்ளன. இரண்டு கிலோ மீட்டருக்கு மேல் இருந்தால்தான் எடுக்க முடியும் என்பது நபார்டு வங்கியின் விதி. வேறு சாலைகளாக இருந்தால் எடுக்க முடியாது என்பதும் PMGSY–ன் விதி. மொத்தத்தில் கிராமச் சாலைகள் குண்டும் குழியுமாகத்தான் உள்ளன. எங்கள் அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் மோசமாக உள்ள கிராமச் சாலைகளை, ஊராட்சி ஒன்றியச் சாலைகளை நெடுஞ்சாலைத் துறையே எடுத்துச் செய்யலாம் என்று இருந்தது. அதனால், உடனுக்குடன் அந்தச் சாலைகள் புதுப்பிக்கப்பட்டன. ஆனால், இன்றைக்குக் கேட்பாரற்று, கவனிப்பாரற்று இருக்கின்றன. இந்த அரசு வந்தபின் ஊராட்சி சாலைகளையோ, ஊராட்சி ஒன்றியச் சாலைகளையோ நெடுஞ்சாலைத் துறை எடுத்துச் செய்யக்கூடாது என்று ஆணை வெளியிட்டு, ஊரக வளர்ச்சி இயக்குநர் கடிதம் எண் 22038/2008, கிராமங்களைக் கற்காலத்திற்கு அழைத்துச் சென்றுள்ளது. எங்கள் அம்மாவின் ஆட்சிக் காலம்தான் உள்ளாட்சித் துறையின் பொற்காலம்.

அடுத்து, தொகுதிப் பிரச்சினைக்கு வருகிறேன், எனது விளாத்திகுளம் தொகுதியில் எந்த அரசுக் கல்லூரியோ, தனியார் கல்லூரியோ, பாலிடெக்னிக்கோ, ஏன் I.T.I.–கூட இல்லை. ஆகையால், விளாத்திகுளத்தில் ஒரு அரசுக் கலைக் கல்லூரி தொடங்கக் கேட்டுக்கொள்கிறேன்.

விளாத்திகுளம் தொகுதி, புதூர் ஒன்றியத்தின்கீழ் பகுதி கிராமங்களான என்.ஜெகவீரபுரம், சங்கரப்பநாயக்கன்பட்டி, கந்தசாமிபுரம், சின்னூர் உட்பட பல கிராமங்கள் மழைக் காலங்களில் மற்ற பகுதிகளிலிருந்து துண்டிக்கப்பட்டு, தனித் தீவு போல் மாறிவிடுகின்றன. பள்ளி சென்ற குழந்தைகள் வீடு திரும்ப முடியாது. எனவே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மாதலம்புரத்திற்கும், கந்தசாமிபுரத்திற்குமிடையே மூன்று பாலமும், மாவிலோடைக்கும் சின்னூருக்கும் இடையே ஒரு பாலமும், ஒட்டபிடாரம் ஒன்றியம் மிளகுநத்தத்திற்கும், ஆதனூருக்கும் இடையே ஒரு பாலமும் அமைத்துத் தரக் கேட்டுக்கொள்கிறேன். மிகவும் மோசமாக உள்ள எட்டையபுரத்தில் இருந்து விளாத்திகுளம் வழியாக சூரன்குடி வரை செல்லும் நெடுஞ்சாலைத் துறைச் சாலையை உடனடியாகப் புதுப்பிக்க நெடுஞ்சாலைத் துறையைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளாத்திகுளம் தொகுதி அருகே வைப்பாற்றின் குறுக்கே குறுகிய ஓடுபாலமாக தற்போது உள்ளது. வைப்பாற்றில் வெள்ளம் வரும்போதெல்லாம் விளாத்திகுளம் மற்ற பகுதிகளிலிருந்து துண்டுபட்டு, தனித்தீவுபோல் ஆகிவிடுகிறது. பள்ளி செல்லும் குழந்தைகள் வாரக் கணக்கில் பள்ளிகளுக்குச் செல்ல முடிவதில்லை. நூற்றுக்கும் மேற்பட்ட கிராம மக்களுக்குப் போக்குவரத்து இல்லாமல், மிகவும் சிரமத்துக்குள்ளாகி வருகிறார்கள். எனவே, அங்கு உயர்மட்டப் பாலம் அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா ஆட்சிக் காலத்திலேயே உத்தேச மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, proposal அனுப்பப்பட்டது. 2006 ஆம் ஆண்டே நெடுஞ்சாலைத் துறை மானியக் கோரிக்கையின்போதே அமைச்சரால் இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டது. மூன்று ஆண்டுகளாகியும் இன்னும் எந்தப் பணியும் தொடங்கப்படவில்லை. இனியும் இந்த அரசு தாமதம் செய்யாமல், உடனடியாக டெண்டர் விட்டு பணியைத் தொடங்கக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது விளாத்திகுளம் தொகுதியில் மொத்தம் 286 கிராமங்கள் உள்ளன. எங்கள் அம்மாவின் ஆட்சிக் காலத்தில் சீவலப்பேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலமும், வல்லநாடு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலமும் முறையாகக் குடிநீர் வந்தது. ஆனால், கடந்த மூன்று ஆண்டுகளாக 200-க்கும் மேலான கிராமங்களுக்குக் குடிநீரும் வரவில்லை. குழாயைத் திறந்தால் காற்றுகூட வரவில்லை. முறையாகக் குடிநீர் வழங்கிடக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் வீரபாண்டியபுரம் என்ற கிராமத்தில் 32 கலர் டிவிக்கள் பயனாளிகளுக்கு டோக்கன் கொடுக்கப்பட்டு, கடந்த இரண்டு ஆண்டுகளாக V.A.O. அலுவலகத்தில் தூங்கிக் கொண்டிருக்கின்றன. சென்ற முறை அமைச்சர் பதில் அளிக்கும்போது, உடனடியாக அந்த டி.வி.க்கள் ஒரு வாரத்தில் வழங்கப்படும் என்று கூறினார். அது அவைக் குறிப்பில் உள்ளது. ஆனால், இன்று வரை வழங்கப்படவில்லை. தி.மு.க.காரர்கள் என்றால் உடனே கொடுத்துவிடும் இந்த அரசு எதிர்க்கட்சிக்காரர்கள் என்றால் கண்டும் காணாமல் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்கள் அம்மா வீரப்பனை ஒழித்தார். வீராணம்மூலம் சென்னையில் குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்கினார். திருட்டு V.C.D.-ஐ ஒழித்தார். ஆனால், இப்போது வீரப்பன்கள் பல பேர் உருவாகியுள்ளனர். திருட்டு V.C.D. பெருகிப் போயிற்று.

மொத்தத்தில், இந்த ஆட்சி மறைந்து எங்கள் அம்மா ஆட்சி வந்தால்தான் தமிழ் மக்களின் வாழ்வில் வசந்தம் வரும், வரும் என்று கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா.

திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை, முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவுத் துறை, செய்தி மற்றும் விளம்பரத் துறை மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த, உலகமெங்கும் வாழும் தமிழர்களின் நெஞ்சங்களில் நீக்கமற நிறைந்திருக்கும், தமிழ் இனமானத் தலைவர், முத்தமிழ் அறிஞர், மாண்புமிகு முதல்வர், தலைவர் கலைஞர் அவர்களையும், மாண்புமிகு நிதி அமைச்சர் இனமானப் பேராசிரியர் பெருந்தகை அவர்களையும், உழைப்பால், தியாகத்தால், நிதானத்தால், திறமையினால் வளர்ந்து நிற்கும் தமிழகத்தின் மாண்புமிகு துணை முதல்வர் அண்ணன் தளபதி அவர்களையும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அண்ணன் ஆற்காட்டார் அவர்களையும் வணங்குகிறேன். இந்த மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு முன்பாக—நம்முடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள், இளைஞர் அணித் தலைவராகப் பொறுப்பேற்று, திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கின்ற அத்தனை இளைஞர்களையும் ஈர்த்து தன்வசப்படுத்தியவர். கழகப் பொருளாளராகப் பொறுப்பேற்று, தலைவர் அவர்களுடைய பொன் விழா ஆண்டை முன்னிட்டு, கழகத்தினுடைய முன்னோடிகள் அன்பையெல்லாம் பெற்று, பொற்கிழி வழங்கி, திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கின்ற அத்தனை தலைவர்களையும் தன் அன்பால் இன்றைக்கு ஈர்த்திருப்பவர். நம்முடைய மேயராக இரண்டு முறை பதவியேற்று, அரசுப் பணி அவர் செய்திருக்கின்ற காரணத்தால், அரசு ஊழியர்கள், அரசு அதிகாரிகள் மற்றும் I.A.S. அதிகாரிகளின் மத்தியிலே பாராட்டைப் பெற்றவர். சட்டமன்றத் தேர்தலிலும், நாடாளுமன்றத் தேர்தலிலும் அவர் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து, இந்த அவையிலே பல தலைவர்கள் வெற்றி பெறுவதற்கும், நாடாளுமன்றத் தேர்தலிலே தலைவர்கள் வெற்றி பெறுவதற்கும், அமைச்சராக ஆவதற்கும் பொறுப்பேற்றுப் பணியாற்றிய அவர், இங்கே இருக்கின்ற கூட்டணிக் கட்சித் தலைவர்கள், அரசியல் கட்சித் தலைவர்களின் மத்தியிலே பாராட்டைப் பெற்றவர்.

உள்ளாட்சித் துறையிலே 3 ஆண்டுகள் அமைச்சராகப் பொறுப்பேற்று, அவருடைய சீரிய பணியின்வாயிலாகப் பொது மக்களின் மத்தியிலே நன்மதிப்பைப் பெற்றவர். ஆக, திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள், அதேபோல, நம்முடைய அரசு அதிகாரிகள், அரசியல் கட்சித் தலைவர்கள், பொது மக்கள் மத்தியிலே பாராட்டைப் பெற்றவரை, இன்றையதினம் அத்தனை பத்திரிகைகளும் அவருடைய பணியை வெகுவாகப் பாராட்டி எழுதியிருக்கின்றன. ஒரே ஒரு வாரப் பத்திரிகை என்று சொல்ல வேண்டுமென்று சொன்னால், அது நம்முடைய தலைவர் அவர்களையும், தலைவர் அவர்களின் குடும்பத்தையும், திராவிட முன்னேற்றக் கழகத்தையும் தொடர்ந்து எதிர்த்து விமர்சனம் செய்துகொண்டிருக்கின்ற ஒரு வாரப் பத்திரிகை, துக்ளக் வாரப் பத்திரிகை. திரு. சோ அவர்கள்கூட உங்களுடைய செயல்பாடுகளைக் கண்டு மிகவும் பாராட்டி, பத்திரிகையிலே எழுதியிருக்கிறார். பல பத்திரிகைகள் தங்களுடைய தலையங்கத்திலே பாராட்டியிருந்தாலும்கூட, அத்தனை பாராட்டுதல்களுக்கும் ஒரே ஒரு கேள்வியாகச் சொன்னது என்ன வேண்டுமென்று சொன்னால், ஏன் இவருக்குத் துணை முதல்வர் பதவி கொடுத்தார்கள் என்று கேட்கவில்லை. ஏன் காலதாமதமாக துணை முதலமைச்சர் பதவி கொடுத்தார்கள் என்ற கேள்விதான் அத்தனை பத்திரிகைகள் மற்றும் நாட்டு மக்கள் மத்தியிலே ஒரு பேச்சாக நிலவுகிறது.

சென்ற வாரம் நம்முடைய மாண்புமிகு தளபதி அவர்கள் மானியக் கோரிக்கைக்கு பதில் அளிக்கின்ற நேரத்திலே ஒரு கருத்தைத் சொன்னார்கள். இந்த அவையிலே நான் மாணவனாக இருந்து பதிலுரையில் சொல்கிறேன் என்று சொன்னார்கள். நாங்களெல்லாம் அன்றைக்குக் கேட்டுக்கொண்டிருந்தோம். ஆனால், ஒரு மணி நேர பதிலுரையிலே, அவர் சொல்லுகின்ற நேரத்திலே, அவர் பேராசிரியராகப் பேசியதும், நாங்கள் மாணவர்களாக நின்று கேட்டதும்தான் எங்களுக்கு மன மகிழ்ச்சியைத் தந்தது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். நேரத்தின் அருமை கருதி—பல்வேறு துறைகள் இருந்தாலும், இன்றைக்கு சுற்றுலாத் துறை மிகச் சிறப்பான முறையிலே செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற காரணத்தினால், அதிலே இருக்கின்ற சில நல்ல செய்திகளை, இந்த அரசு செய்த செய்திகளை மட்டும் உங்கள் மத்தியிலே எடுத்துச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கின்றேன். காரணம், ஏழையெளிய மக்கள் இன்றைக்கு ஊட்டிக்குச் செல்ல முடியாது, கொடைக்கானல் செல்ல

முடியாது, கொடநாட்டிலே போய் மாதக் கணக்கிலே ஓய்வு எடுத்துக்கொள்ள முடியாத ஒரு சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலே, ஏழையெளிய மக்களுக்கு தமிழக சுற்றுலாத் துறை இன்றைக்கு அதிகம் பிரபலம் அடையாத சுற்றுலாத் தலங்களை அடையாளம் கண்டு, அவற்றை மேம்படுத்திட, அதிகமான நிதியினை ஒதுக்கீடு செய்து, ஏலகிரி, ஏற்காடு, கொல்லிமலை போன்ற சுற்றுலாத் தலங்களை மேம்படுத்தி வருவது பாராட்டுக்குரியது. இந்தப் புதிய முயற்சியின் காரணமாக, பல்வேறு பகுதிகளில் வசிக்கும் மக்கள் வேலைவாய்ப்பைப் பெறுவார்கள். தொழில் பெருகும். கைவினைப் பொருட்கள் அதிகளவில் விற்பனையாகும்; கலைஞர்களின் வாழ்வு செழிக்கும். அதற்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 11–50

கடந்த 3 ஆண்டுகளில் தமிழக சுற்றுலாத் துறை நான்கு தேசிய விருதுகளைப் பெற்றிருப்பது பாராட்டுதலுக்குரியது. அதன்மூலம் இந்தியத் துணைக் கண்டமே தமிழகத்தை வியந்து நோக்கும் வகையில் தன் கவனத்தைச் செலுத்த ஆரம்பித்திருக்கிறது என்றால், அது மிகையாகாது. இதனால் தமிழகத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும். தமிழகத்திற்கு அதிக அளவு அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும்.

தமிழகத்திலுள்ள செட்டிநாடு பகுதி, திருவரங்கம் பகுதி மேம்பாடு, சென்னை மெரினா கடற்கரையினை அழகுபடுத்துதல், குற்றாலம் மேம்பாடு, திருச்செந்தூர் மேம்பாடு, ஒகேனக்கல் மேம்பாடு போன்று பல்வேறு பகுதிகளை மேம்பாடு செய்வதற்கு நிதி ஒதுக்கீடு செய்து பணிகளை மேற்கொண்டு வருவது பாராட்டுதலுக்குரியது.

மதுரை மீனாட்சி அம்மன் கோயிலைச் சுற்றி அழகான டைல்ஸ் பதித்து, சாலை அமைத்து, அந்தப் பகுதிகளிலே வாகனங்கள் செல்லத் தடை விதித்து, பேட்டரி கார்களில் சுற்றிப் பார்க்க வசதி செய்து கொடுத்திருப்பது வரவேற்கத்தக்கது.

ஊரகச் சுற்றுலா மேம்பாட்டிற்கு இந்த அரசு முக்கியத்துவம் கொடுத்து வருவது வரவேற்கத்தக்கது. இது கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பை உருவாக்கும் புதிய உத்தியாகும். சென்ற ஆண்டு தீவுத் திடலில் நடைபெற்ற பொருட்காட்சியில், ஒரு கிராமத்தையே

அரங்கமாக வடிவமைத்து, அனைத்துத் தரப்பு மக்களின் பேராதரவைப் பெற்றது.

சாகசச் சுற்றுலா, அதாவது, Adventure Tourism–க்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து பாரா கிளைடிங், ராக் கிளைம்பிங், அதி விரைவுப் படகுச் சவாரி போன்ற பல்வேறு சாகச விளையாட்டுக்களைத் தீவுத் திடலிலும், முதலியார்குப்பத்திலும் அறிமுகப்படுத்தியிருப்பது, இளைஞர்களுக்கு சின்னக் காயங்கள் பட்டால்கூடச் சுருண்டுவிடாமல், தன்னம்பிக்கையுடன் வாழ்க்கையை எதிர்கொள்வதற்கான உத்வேகத்தை அளிக்கும். அதற்கு எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வெளிநாட்டிலிருந்து தமிழகத்திற்கு சிகிச்சை பெற வருபவர்கள் தமிழகத்தின் பண்பாட்டினையும், பெருமைகளையும் பற்றித் தெரிந்துகொள்ள மருத்துவச் சுற்றுலா எனும் புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியிருப்பதை மனமகிழ்ச்சியுடன் நான் வரவேற்கிறேன்.

சுற்றுலா நட்பு வாகனங்களை அறிமுகப்படுத்தி, சுற்றுலாப் பயணிகள் எந்தவித இடையூறும் இல்லாமல் சுற்றுலாத் தலங்களைக் காண வசதியினை உருவாக்கிக் கொடுத்திருப்பது பாராட்டுதலுக்குரியது.

'சென்னை சங்கமம்' எனும் கிராமியக் கலை நிகழ்ச்சிகளை சென்னையிலும், முக்கிய மாவட்டத் தலைநகரங்களிலும் நடத்தி, நலிந்த கிராமக் கலைஞர்களுக்குப் புத்துயிரும், கிராமியக் கலைஞர்களுக்கு வேலைவாய்ப்பும் அளித்த கலைஞர் அவர்களின் அரசுக்கு எனது நன்றியினைக் காணிக்கையாக்குகின்றேன்.

சுற்றுலாத் துறை அண்ணா நூற்றாண்டு நிறைவினையொட்டி பொன்னேரிக்கரையினை மேம்படுத்தி அழகுபடுத்த, நெடுஞ்சாலைத் துறையின்மூலமாக 10 கோடி ரூபாய் செலவில் பணிகளை மேற்கொள்ளவிருப்பதை பேரறிஞர் அண்ணா அவர்களின் வழி நடக்கும் தொண்டர்களாகிய நாங்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம்.

நான் காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் என்பதால், மாமல்லபுரத்தில் ஆண்டுதோறும் சுற்றுலாத் துறையின் சார்பில் நடத்தப்பட்டு வரும் நாட்டிய விழா, இந்திய நாட்டிய விழாவாக உருப்பெற்று சிறப்பாக நடந்து வருவதற்கு எனது மகிழ்ச்சியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதைப்போன்றதொரு நாட்டிய விழாவினை புராதன நகரமான காஞ்சிபுரத்திலும் இந்த

அரசு நடத்திப் பெருமை சேர்க்க வேண்டுமென்ற இந்தக் கோரிக்கையினைப் பணிவன்புடன் பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாகச் சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

சமீபத்தில் இந்த அரசு "Hop on - Hop off" என்று அழைக்கப்படும் "எங்கும் ஏறலாம், எங்கும் இறங்கலாம்" என்ற பேருந்து வசதியினை சென்னை நகரில், குறிப்பாக, தாம்பரம் தொகுதி, கிழக்குக் கடற்கரைச் சாலையிலும் அறிமுகப்படுத்தியிருப்பதை வரவேற்கிறேன். அண்ணா நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு அவர் பிறந்த காஞ்சிபுரத்திலும் இதுபோன்ற பேருந்து வசதியினை அறிமுகப்படுத்த வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி) தலைமை]

ஆக, சுற்றுலாத் துறை என்பது ஏழையெளிய மக்களுக்காக, குறிப்பாக, நம்முடைய தமிழகத்திலே ஊட்டி, கொடைக்கானல், இப்படிப் பல்வேறு பகுதிகளிலே சுற்றுலாத் தலம் இருந்தாலும், எனக்குத் தெரிந்து இந்தியாவிலே, தமிழகத்திலே இருக்கின்ற கோயில்களைப்போல் வேறு எந்த ஊரிலும் கோயில்கள் இல்லை என்பதை நான் அறிகின்றேன். அந்த அளவிற்கு, தமிழகத்திலே இருந்து பல ஊர்களுக்கு—பல மாநிலங்களுக்குச் சென்றோமானால், 3 நாட்கள், 4 நாட்களிலே ஒரு மாநிலம் முழுவதும் சுற்றிப் பார்த்துவிட்டு வந்துவிடலாம். ஆனால், தமிழ்நாட்டிலே சுற்றிப் பார்க்க வேண்டுமென்று சொன்னால் குறைந்தது 15 தினங்கள் செல்லக்கூடிய அளவிற்கு, 15 தினங்கள் சுற்றிப் பார்க்கின்ற அளவிற்கு சுற்றுலாத் தலங்கள், கோயில் தலங்கள் அத்தனையும் இருந்துகொண்டிருக்கின்ற இந்த நேரத்திலே மேன்மேலும் ஏழையெளிய மக்களுக்கு இந்த வசதியைச் செய்து தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கோரிக்கை வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நான் குறிப்பாக நம்முடைய மாற்றுத் தலைவர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்வது, தாம்பரம் தொகுதியினுடைய வளர்ச்சி. இன்றைக்கு உள்ளாட்சித் துறைப் பொறுப்பில் இருக்கிற— நம்முடைய எதிர்க்கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் நம்முடைய திரு. சின்னப்பன் அவர்கள் பல கருத்துகளை இங்கே சொன்னார்கள். நான்கூட அவருக்குப் பதில் சொல்லவேண்டுமென்று சொன்னால் அதிக நேரம் ஆகும். பத்திரத்திலே duplicate பத்திரம் இருக்கிறது என்று சொன்னார். நான்கூட ஒரு பத்திரிகையிலே செய்தியாகப் படித்தேன். அது உண்மையா, பொய்யா என்று தெரியாது. ஒரு வாரத்திற்கு முன்பாக நம்முடைய பொதுப் பணித்

துறை அமைச்சர் மாண்புமிகு திரு. துரைமுருகன் அவர்கள்கூட சொன்னார். பல சான்றிதழ்கள் தவறான சான்றிதழ்கள் பெறுகிறார்கள் என்று.** சில நேரங்களிலே சில தவறுகள் மக்கள் மத்தியிலே தெரியாமல் நடப்பதற்கு . . . (குறுக்கீடு)

முற்பகல் 11–55

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி): மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறபோது, அதைப் பற்றி இங்கு அவைக் குறிப்பில் இடம் பெறக்கூடாது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி): மாண்புமிகு உறுப்பினர் திரு. இராஜா, அடுத்த விஷயத்திற்குப் போங்கள்.

திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தமிழ்நாட்டிலே, வளர்ந்து வரும் நகராட்சிகளிலே. .

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி): அந்தக் கருத்து நீக்கப்படுகிறது.

திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தமிழ்நாட்டிலே பல்வேறுபட்ட நகராட்சிகள் வளர்ந்து வருகின்ற நகராட்சிகளாக இருந்தாலும், தாம்பரம் நகராட்சி மிக முக்கியமான நகராட்சியாக வளர்ந்து வந்து கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னப்பன் அவர்கள், அவர்களுடைய அம்மா அவர்கள்தான் உள்ளாட்சியிலே அதிக நிதியைக் கொடுத்து பணிகளைச் செய்தார்கள் என்று சொன்னார்கள். அவருக்காக ஒரேயொரு விளக்கத்தை மட்டும் சொல்கிறேன். இப்போது, இந்த 3 ஆண்டுகளிலே தாம்பரம் நகராட்சியிலே குடிதண்ணீர்த் திட்டத்திற்கு மட்டும் நம்முடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் ரூ.32 கோடியை வழங்கி இருக்கிறார்கள். வேங்கடமங்கலம் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம், தாம்பரம், ஆலந்தூர், பல்லாவரத்திற்கு மட்டும் ரூ.44 கோடி திட்ட ஒதுக்கீட்டில் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இரண்டு மேம்பாலங்களுக்கு. . .

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி): மாண்புமிகு உறுப்பினர், இன்னும் ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

திரு. எஸ்.ஆர். இராஜா: 10 நிமிடங்கள் கொடுத்திருக்கிறீர்கள். வேங்கடமங்கலத்திற்கு மட்டும் 44 கோடி ரூபாய்; இரண்டு மேம்பாலங்களுக்கு 50 கோடி ரூபாய்; பேருந்து நிலையத்திற்கு மட்டும் 5 கோடி ரூபாயில் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இன்னொரு பேருந்து நிலையத்திற்கு 5 ஏக்கர் நிலம் பெறப்பெற்றிருக்கிறது. ஆக, இந்த மூன்றாண்டுகளிலே தாம்பரம் நகராட்சியிலே இப்போது நடந்துகொண்டிருக்கிற வளர்ச்சிப் பணிகளை மட்டும் நான் சொல்கிறேன். பொது மக்கள் நெரிசல் அதிகமாக இருக்கிறது. நான் உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையிலேயே தாம்பரத்தை மாநகராட்சியாகத் தரம் உயர்த்துவார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால், இந்தப் பணிகளை எல்லாம் உடனடியாக முடிக்க வேண்டுமென்று சொன்னால், ஒரு I.A.S. அதிகாரியை உடனடியாக நியமித்துத் தந்தால்தான் இந்தப் பணிகள் எல்லாம் இன்னும் ஓராண்டிற்குள் முடியும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

முன்னாள் மத்திய அமைச்சர், மறைந்த அண்ணன் என்.வி.என். சோமு அவர்கள் இருந்த காலத்திலேயிருந்து, தாம்பரத்திற்குப் பேருந்து நிலையம் வேண்டுமென்று நான் கேட்டேன். 5 ஏக்கர் நிலத்தை மத்திய அரசாங்கத்திலிருந்து இப்போதுதான் 12 ஆண்டுகள் கழித்து, நம்முடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அண்ணன் டி.ஆர். பாலு அவர்களும் எங்களுக்குப் பெற்றுத் தந்திருக்கிறார்கள். தாம்பரத்திலே 30 ஏக்கர் நிலம் இருக்கிறது. மத்திய சர்க்காருக்கு, விமானப் படைக்குச் சொந்தமான இடம் 3,500 ஏக்கர் இருக்கிறது. இந்த 30 ஏக்கர் நிலத்தை நம்முடைய தமிழக அரசு தாம்பரத்திற்கு பெற்றுத் தந்தால் மத்திய அரசும், மாநில அரசும், சற்றேறக்குறைய (மணியடிக்கப்பெற்றது) ஒரே நிமிடம், முடித்து விடுகிறேன். ஒரேயொரு சப்ஜெக்ட், வேறு எந்த சப்ஜெக்ட்டும் இல்லை. 49 அலுவலகங்கள் தாம்பரத்திலே இருக்கின்றன, இந்த 30 ஏக்கரை தமிழக அரசு உள்ளாட்சிக்குப் பெற்றுத் தந்தால், அந்த ஒரே இடத்திலே அத்தனை அலுவலகங்களும் அரசுக் கட்டடங்களாக, மாநகராட்சியாக உயர்வதற்கும், பேருந்து நிலையங்கள் அமைப்பதற்கும் இந்த மாதிரி நகரம் தமிழ்நாட்டிலே எங்கும் இல்லாத அளவிற்கு சிறப்பாக அமைய வேண்டுமென்று சொன்னால், நம்முடைய முதல்வர் அவர்களும், மாண்புமிகு துணை

முதல்வர் அவர்களும் இதை சிரமேற்று செய்து தந்து தாம்பரத்திற்கு மீண்டும் ஒரு பெருமை சேர்த்துத் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். பொதுப் பணித் துறை என்று எடுத்துக்கொண்டால்... (குறுக்கீடு) 10 நிமிடங்கள் கொடுத்திருந்தீர்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி): நேரம் இல்லை. அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. கோபாலன்.

திரு. போ. கோபாலன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 2009 மே மாதம் 13 ஆம் தேதி நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில், சிலரது எண்ணத்தில் அல்லது ஆசையில் மண் அள்ளிப் போட்ட மக்கள், இந்திய நாட்டை காங்கிரஸ் கூட்டணி வசம் மீண்டும் ஒப்படைத்துள்ளனர். தமிழகத்தில் டாக்டர் கலைஞரின் மூன்றாண்டு பொற்கால ஆட்சிக்குப் பரிசாக மீண்டும் வெற்றிக் கனியைக் கொடுத்துள்ளனர். அது மட்டுமின்றி, ஆற்றல்மிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதி திரு. ஸ்டாலின் அவர்கள் துணை முதல்வராகப் பொறுப்பேற்றுள்ளதை மனதாரப் பாராட்டி, சுற்றுலா, பத்திரப் பதிவு, கலை மற்றும் பண்பாடு ஆகிய துறைகளின் மானியக் கோரிக்கைகளில் பேச வாய்ப்பளித்த எங்களுடைய கட்சித் தலைவர் திரு. சுதர்சனம் அவர்களுக்கும், கொறடா திரு. பீட்டர் அவர்களுக்கும் நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரை, சுற்றுலா, தேயிலை விவசாயம் என்பதைத் தவிர எங்களுக்கு வேறு எதுவும் இல்லை என்ற நிலையில் இருந்துகொண்டிருக்கிறோம். அதுவும், மலைகளின் ராணி என்று மிக அழகாக அழைக்கப்படுகிறது உதகை நகரம் உள்ள நீலகிரி மாவட்டம்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

நண்பகல் 12–00

ஆனால், ஒன்றை நினைத்துப் பார்க்கவேண்டும். ஒரு காலக்கட்டத்தில் மக்கள் பெருக்கம், எங்கள் மலை வாசஸ்தலத்தில் மிக அதிகமாகப் போய்விட்டது. மலர்க் கண்காட்சிக்கு டிக்கெட் வாங்கி உள்ளே வந்தவர்கள் இந்த முறை ஒரு இலட்சத்து 27 ஆயிரம் பேர் garden–க்குள்ளே வந்திருக்கிறார்கள். அதேபோல, பழக் கண்காட்சி. அந்த நாளில் மட்டும் கட்டணம் செலுத்தி 23 ஆயிரம் பேர்கள் உள்ளே வந்திருக்கிறார்கள். அதேபோல, காய்கறிக் கண்காட்சி. 19 ஆயிரம் பேர்கள் உள்ளே வந்திருக்கிறார்கள். ரோஜாத் தோட்டத்தில் கண்காட்சி. 50 ஆயிரம் பேர்கள் உள்ளே

வந்திருக்கிறார்கள். நமது மாண்புமிகு அமைச்சர் வீரபாண்டியார் அவர்களும் வந்திருந்தார்கள். மே மாதம் மட்டும் எங்கள் மாவட்டத்திற்கு ஏழு இலட்சத்திற்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் வந்திருந்தார்கள். ஒன்றை நான் இந்த நேரத்தில் சொல்ல விரும்புகிறேன். ஒரு பக்கம் மகிழ்ச்சியாக இருந்தாலும், மறு பக்கம் எங்கள் மக்கள் எவ்வளவு கஷ்டப்படுகின்றார்கள்; போக்குவரத்துக்கு எவ்வளவு தொல்லைபடுகின்றார்கள் என்பதைச் சொல்லவேண்டும். பேருந்துகளை நிறுத்துவதற்கும், கார்களை நிறுத்துவதற்கும் எவ்வளவு தொல்லைப்படுகின்றார்கள், நடமாடுவதற்கு, குடிதண்ணீருக்கு எவ்வளவு தொல்லைப்படுகின்றார்கள் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். எனவே உள்ளாட்சித் துறையைச் சார்ந்தவர்களும், நகராட்சியைச் சார்ந்தவர்களும், சுற்றுலாத் துறையைச் சார்ந்தவர்களும் எங்களுக்கு வேண்டிய வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று, எங்களுடைய மேலான எண்ணத்தை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

சுற்றுலாத் துறையைப் பொறுத்தவரை மிகவும் சிறப்பு மிக்க இடத்தில், மிக முக்கியமான பகுதியில், சேரிங் கிராஸ் என்ற இடத்தில் சுற்றுலா அலுவலகம் இருக்கிறது. அங்கே இப்போது இரண்டு அலுவலர்கள் மட்டுமே இருக்கிறார்கள். 10, 12, 20 ஆண்டுகளுக்கு முன்பு, 5, 6, 7 பேர்களாக இருந்த அந்த அலுவலகத்தில் இப்போது 2 பேர்கள் மட்டுமே இருக்கிறார்கள். அதிலும் Tourist அலுவலர் இல்லை. Incharge—ஆகத்தான் ஒருவர் இருந்துகொண்டிருக்கிறார். தயவுசெய்து அலுவலரைப் போடுங்கள். ஆங்கிலம் பேசத் தெரிந்தவர்களைப் போடுங்கள். வரக்கூடிய வெளிநாட்டுப் பயணிகளுக்கு ஊட்டியில் பார்க்கவேண்டிய இடங்களைப் பற்றி எடுத்துச் சொல்வதற்குத் தகுந்த ஆட்களை நீங்கள் நியமிக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களுக்கும், எனக்கும் நீங்காத ஒரு பனிப்போர் இருந்துகொண்டிருக்கிறது. 2006 ஆம் ஆண்டு முதன்முதலாக ஒரு cable car—ஐத் தாருங்கள் என்று நான் கேட்டபோது, உடனடியாக அனுமதிக்கப்படுகின்றது என்று ஆசை வார்த்தையைச் சொன்னார்கள். 2007 ஆம் ஆண்டும் சென்றுவிட்டது, 2008 ஆம் ஆண்டும் சென்றுவிட்டது, 2009 ஆம் ஆண்டும் சென்றுவிட்டது. இன்னும் ஊட்டிக்கு cable car திட்டம் வரவில்லை. தயவுசெய்து நீங்கள் அதை வேகப்படுத்தவேண்டும். ஏனென்றால், பொருளாதாரப் பிரச்சினையில், Finance—ல் நிலுவையில் இருப்பதை

நான் அறிவேன். நீங்கள் அதைத் துரிதப்படுத்தி, நிறைவேற்றித் தரவேண்டுமென்று இந்த நல்ல நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடிப்படையில், இந்தத் துறை 4 தேசிய விருதுகளைப் பெற்றிருக்கிறது என்று சொன்னால் (மேசையைத் தட்டும் ஒலி) இதைவிடச் சிறப்பு வேறு எதுவும் இருக்க முடியாது. கடந்த ஆட்சிக் காலத்திலும் விருதுகளைப் பெற்றோம் என்று சொன்னார்கள். எப்படிப்பட்ட விருதுகளைப் பெற்றார்கள் என்று சொன்னால், தனியார் நிறுவனம் கொடுத்த விருதுகளைத்தான் அந்தத் துறையின் சார்பாகக் கடந்த ஆட்சிக் காலத்தில் பெற்றதேயொழிய, இந்த ஆட்சிக் காலத்தில், 3 ஆண்டு காலத்தில் 4 தேசிய விருதுகளைப் பெற்று இன்றைக்கு இந்தத் துறை மிகப் பெரிய வளர்ச்சியைப் பெற்றிருக்கிறது என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினருக்கு நான் தெரியப்படுத்திக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று வருவாயைப் பொறுத்தவரையில், கடந்த 5 ஆண்டு காலத்தில் ரூ.192 கோடியே 82 இலட்சம். ஆனால், இந்த 3 ஆண்டு காலத்திலே ரூ.180 கோடியே 10 இலட்சம். நிகர இலாபத்தைப் பொறுத்தமட்டில் கடந்த ஆட்சியில் 5 ஆண்டு காலத்தில் ரூ.9 கோடியே 69 இலட்சம்; இந்த மூன்று ஆண்டு காலத்தில் கலைஞருடைய ஆட்சிக் காலத்தில் ரூ.19 கோடியே 5.5 இலட்சம்.

அதேபோன்று பயணிகளின் எண்ணிக்கையைப் பொறுத்தமட்டில் சுமார் 6½ கோடிப் பேர் உள்நாட்டுப் பயணிகள் தமிழகத்திற்கு வருகை தந்திருக்கிறார்கள். வெளிநாட்டுப் பயணிகளைப் பொறுத்தமட்டில் சுமார் 20 இலட்சம் பேர் வருகை தந்திருக்கிறார்கள். ஆண்டுதோறும் சுற்றுலாப் பயணிகளினுடைய எண்ணிக்கையைப் பொறுத்தவரையில் தொடர்ந்து 22 சதவீதம் உயர்ந்துகொண்டே இருக்கிறது. அந்த அளவிற்கு இந்தத் துறையின் சார்பாக வெளிநாடுகளில், உள்நாடுகளில், வெளி மாநிலங்களில் பல்வேறு விளம்பர முகாம்களை நடத்துகின்ற காரணத்தினால், வெளிநாட்டுப் பயணிகளும் உள்நாட்டுப் பயணிகளும் தமிழகத்திற்கு அதிக அளவில் இன்றைக்கு வருகை தந்துகொண்டிருக்கிறார்கள்.

அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் கோபாலன் அவர்கள், சுற்றுலா அலுவலர்களை மேலும் அதிகப்படுத்தவேண்டும் என்று சொன்னார்கள். நிச்சயமாக உங்களுடைய கோரிக்கையை எங்களுடைய கவனத்தில் எடுத்துக்கொண்டு, தேவைப்படுகின்றபோது அதனையும் நிதிநிலைமையைப் பொறுத்து அதிகப்படுத்தக்கூடிய முயற்சிகளில் இந்தத் துறை ஈடுபடும் என்பதையும் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர் திரு. கலியவரதன் அவர்கள் சுற்றுலா இடமாக அவர்களுடைய பகுதிகளை அறிவிக்க வேண்டும் என்று சொன்னார்கள். எந்தவோர் இடத்தையுமே சுற்றுலாத் துறை சுற்றுலா இடமாக அறிவிப்பதில்லை. அங்கு வருகின்ற பயணிகள் அதிகரிக்கின்றபோது, அந்தப் பகுதிகளில், பகுதிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை இந்தத் துறை தொடர்ந்து செய்துகொண்டிருக்கிறது. எனவே, நிச்சயமாக உங்களுடைய பகுதியாகிய கல்வராயன் மலைப் பகுதி, காரியநல்லூர் ஏரிகளைச் சீரமைப்பதற்காகக் கடந்த ஆண்டு ரூ.60 இலட்சம் ஒதுக்கிடப்பட்டு, ஆணை வெளியிடப்பட்டிருக்கிறது. பணிகள் மிக விரைவிலே தொடங்க இருக்கின்றன.

அதேபோன்று, சட்டமன்ற உறுப்பினர் திரு. மாரிமுத்து அவர்கள், அவருடைய பகுதிகளில் less known tourist place—ஐ—அறிமுகமாகாத tourist இடங்களை—அறிமுகப்படுத்த வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தமட்டில் சுமார் 18 இடங்கள் அறிமுகம் இல்லாத சுற்றுலா இடங்கள் என அறிமுகப்படுத்தப்பட்டு, இன்றைக்கு ரூ.27 கோடிக்கான செலவில் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றக்கூடிய அளவிற்கு இந்தத் துறை பல்வேறு பணிகளை மேற்கொண்டு இருக்கிறது.

அதேபோன்று வழிகாட்டி மதிப்பைவிடக் கூடுதலாகப் பதிவு செய்கிறார்கள்; வழிகாட்டி மதிப்பும் இன்றைக்கு அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். வழிகாட்டி மதிப்பைப் பொறுத்தமட்டில் இந்தத் துறை முடிவு செய்வதில்லை. இந்தத் துறையின் சார்பாக ஒவ்வொரு பகுதியிலும், மாவட்ட அளவில், வட்ட அளவில், கிராம அளவில் குழுக்கள் அமைக்கப்பட்டு, அந்தக் குழுக்களின் முடிவுகள் பொது மக்களுடைய பார்வைக்கு வெளியிடப்பட்ட பிறகு, அந்தப் பொது மக்களுடைய பார்வையில் தெரிந்து, அவர்கள் எதிர்ப்புகள், குற்றம், குறைகள் சொன்னால், அதையும் குறித்து வைத்துக்கொண்டு, இந்தத் துறை முடிவு செய்து அறிவிக்கப்பட்டு, 2006–2007 ஆகஸ்ட்டில் இருந்து புதிய வழிகாட்டி நெறிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. தமிழகத்தைப் பொறுத்தமட்டில் ஒரேயொரு இடத்தில் மட்டும், கரூர் மாவட்டத்தில் இருந்து ஒரு குறை சொன்னார்கள். அந்தக் குறையும் இன்றைக்கு நிவர்த்தி செய்யப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 1–45

அதுபோன்று, போலி முத்திரைத் தாள்களை ஒழிக்க வேண்டும் என்று தளி தொகுதியைச் சார்ந்த திரு. இராமச்சந்திரன் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். போலி முத்திரைத் தாளை முழுமையாக அறவே ஒழிக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு இந்தத் துறை e–Stamping முறை என்று சொல்லக்கூடிய அந்த முறையைப் புகுத்துவதற்காக, முதற்கட்டமாக மாநகராட்சிப் பகுதிகளில் அறிமுகப்படுத்த வேண்டுமென்று இந்தத் துறை அதற்கான பணிகளை மேற்கொண்டு, இன்னும் ஒரு மாத காலத்திற்குள்ளாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அந்த முறையைத் தொடங்கி வைக்க இருக்கின்றார்கள் என்ற நல்ல செய்தியையும் இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தமிழக சுற்றுலாத் துறையைப் பொறுத்தமட்டில் 3 ஆண்டுகளில் 4 தேசிய விருதுகளைப் பெற்றிருக்கின்றது. அதேபோன்று, பல்வேறு இடங்களில் சாகசச் சுற்றுலா என்று புதிய முயற்சிகள் தமிழகத்திலே பதியம் போடப்பட்டிருக்கின்றன. சுற்றுச்சூழல் குறித்த பல்வேறு முயற்சிகள், வீதி தோறும் விழிப்புணர்வுகள், கடற்கரைத் தூய்மை முகாம்கள், கோயில்களிலே ஆர்வலர்கள் பயிற்சி, இயற்கை நமக்கு அளித்தவற்றை, முன்னோர்கள் நமக்கு முன்மொழிந்தவற்றை அடுத்த தலைமுறைக்கு அடையாளப்படுத்தும் எண்ணற்ற செயல்களை இந்தத் துறை செய்துகொண்டிருக்கிறது. அதேபோன்று, பல்வேறு இடங்களில் வருகின்ற பயணிகளை அழைத்துச் செல்வதற்காகப் பல்வேறு வழித்தடங்களில் சுமார் 38 வகையான சுற்றுலாக்களை நாங்கள் இயக்கிக்கொண்டிருக்கின்றோம். அதில் முக்கியமாக மருத்துவச் சுற்றுலா, நல்வாழ்வுச் சுற்றுலா, அறுபடை வீடு சுற்றுலா, நவக்கிரகச் சுற்றுலா, திருப்பதிச் சுற்றுலா, சோழ நாட்டுத் திருப்பதிகள் சுற்றுலா, அம்மன் சன்னதிச் சுற்றுலா, ஆன்மீகச் சுற்றுலா போன்று பல்வேறு சுற்றுலாக்களை இந்தத் துறை நடத்திக்கொண்டிருக்கிறது. சுற்றுலாத் துறை நடத்துவது மட்டுமல்லாமல், அங்கு வழிகாட்டிகளுக்கும் பயிற்சிகள் அளிக்கப்பட்டு, வருகின்ற பயணிகளினுடைய தேவைகளை, சந்தேகங்களைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவுக்கு அந்த வழிகாட்டிகளுக்கும் இந்தத் துறையின் சார்பாகப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு, மற்றவர்கள் பாராட்டக்கூடிய அளவுக்கு இன்றைக்கு இந்தத் துறை செயல்பட்டுக்கொண்டிருக்கிறது.

அதுபோன்று மாமல்லபுரம் நாட்டியத் திருவிழா நிகழ்ச்சிகளைப் பொறுத்தமட்டில், ஒவ்வோராண்டும் டிசம்பர், ஜனவரி மாதங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஒவ்வோராண்டும் அந்த மாதத்தில் நடைபெறுகிறது என்று சொன்னால், வாரத்தின் இறுதி நாட்களில் இரண்டு நாட்கள் மட்டும் நடைபெற்ற வரலாறு. ஆனால் அதனை மாற்றி, மாதம் முழுவதும் நடக்கக்கூடிய அளவுக்குப் பரிணாம வளர்ச்சிகளை இன்றைக்கு இந்தத் துறை தந்திருக்கிறது. அதோடு அந்த நிகழ்ச்சிகளில் பல மாநிலங்களைச் சார்ந்தவர்கள் பங்குபெறக்கூடிய அளவுக்கும், இந்தியத் திருவிழாவாக மாற்றி, நம் நாட்டுப்புறக் கலைகளையும் இன்றைக்கு இந்தத் துறையின் சார்பாகக் கொண்டு சேர்த்திருக்கின்றோம். இதன்மூலமாக, கிராமத்தில் இருக்கக்கூடிய நாட்டுப்புறக் கலைஞர்கள் எல்லாம் பாராட்டக்கூடிய அளவுக்கு இந்தத் துறையினுடைய செயல்பாடுகள் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கின்றன.

அதேபோன்று 100 நாட்டுப்புறக் கலைகளை அடையாளம் கண்டு, தடையேதுமின்றி அவற்றைப் பேண நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியம் அமைத்த அரசும் கலைஞருடைய அரசு என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

அதேபோன்று, இந்தத் துறையின் சார்பாகத் தமிழகத்திலே தீவுத் திடலிலே பொருட்காட்சி ஆண்டுதோறும் நடைபெறுவது வழக்கமாக இருக்கிறது. ஆனால், அந்தப் பொருட்காட்சி முடிந்த பிறகு அது ஒரு தீவுத் திடலாக இருந்த நிலைமையை மாற்றி, எப்பொழுதுமே ஏதாவது ஒரு நிகழ்ச்சி நடைபெறக்கூடிய அளவுக்கு பயனுள்ள வகைகளிலே அந்தத் தீவுத் திடலில் இன்றைக்கு பல்வேறு கண்காட்சிகள் நடத்துகின்ற காரணத்தால், இந்தத் துறைக்கு மேலும் வருவாயை ஈட்டக்கூடிய அளவுக்கு இந்தத் துறையினுடைய செயல்பாடுகள் அமைந்திருக்கின்றன. அதன்மூலமாக, கோடையில் குளிர்பனித் திருவிழா நிகழ்ச்சி, கார் பருவத்தில் உணவுத் திருவிழா, பள்ளிக் குழந்தைகளின் கல்விச் சுற்றுலாக் கண்காட்சி, மனதிற்கு முத்திரை பதிக்கும் சித்திரைச் சந்தை, தனியார் நடத்தும் கலை விழாக் கண்காட்சிகள். இப்படிப் பல்வேறு கலை நிகழ்ச்சிகளை அந்தத் தீவுத் திடலில் நடத்தி, அரசின் வருமானம் இன்றைக்கு அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது.

அதுபோன்று, வருகின்ற விருந்தினரை மகிழ்விக்கக்கூடிய அளவுக்கு 'விருந்தினர் போற்றுதும், விருந்தினர் போற்றுதும்' என்ற ஒரு திட்டத்தை நாங்கள் தொடங்கினோம். அதேபோன்று, சுற்றுலா நட்பு

வாகனங்கள் என்று விதிகளுக்குக் கட்டுப்பட்டு விருந்தோம்பல் வாகனங்களை வீதிதோறும் விடக்கூடிய முயற்சிகளில் இந்தத் துறை ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது.

அதுபோன்று, இங்கே பேசிய உறுப்பினர்கள்கூடச் சொன்னார்கள், சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பாக நடைபெறும் விடுதிகளின் தரத்தை உயர்த்த வேண்டுமென்று. அப்படிச் சொன்ன உறுப்பினர்களையும் மற்ற உறுப்பினர்களையும் தயவுசெய்து நாங்கள் கேட்டுக்கொள்வதெல்லாம், இப்பொழுது இந்தத் துறையின் சார்பாக நடந்துகொண்டிருக்கக்கூடிய, தமிழகத்தில் இருக்கக்கூடிய அந்த விடுதிகளில் நீங்கள் சென்று பார்க்க வேண்டுமென்று அன்போடு நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். கலைஞருடைய ஆட்சிக் காலத்தில்தான் அதற்கான நிதிகளை ஒதுக்கித் தந்து இன்றைக்குத் தமிழகத்தில் இருக்கக்கூடிய அனைத்து சுற்றுலா விடுதிகளும் புதுப்பிக்கப்பட்டு, தரமும் உயர்த்தப்பட்டிருக்கிறது என்ற நல்ல செய்தியை இந்தநேரத்தில் நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்றைக்கு விடுதி தங்குவதற்கு மட்டுமல்ல, வசிப்பதற்கும் ஏற்ற இடம் என்று சொல்லக்கூடிய அளவுக்கு, இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், வெளிநாட்டைச் சார்ந்தவர்கள் நம்முடைய மாநிலத்திற்கு வருகை தந்து சுமார் ஒரு வார காலம் தங்கிவிட்டுச் சென்ற பிறகு எங்களுக்குப் பல்வேறு கடிதங்கள் அனுப்பி நன்றி சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இங்குள்ள விடுதிகளும், இந்தத் துறையின் சார்பாக வருகிற அந்தப் பயிற்சியாளர்களும் திறமைசாலிகள், நன்றாகக் கவனித்தார்கள் என்று பாராட்டக்கூடிய அளவுக்கு இந்தத் துறையைச் சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னால், இந்தத் துறையினுடைய செயல்பாடுகளும், இந்தத் துறையினுடைய அதிகாரிகளும் அதற்குக் காரணம் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று, சிங்காரச் சென்னையை அங்கொன்றும், இங்கொன்றுமாய்ப் பார்க்கக்கூடிய அந்தச் சங்கடத்தைத் தீர்க்கக்கூடிய அளவுக்கு, 'எங்கும் ஏறலாம், எங்கும் இறங்கலாம்' என்று சொல்லக்கூடிய "Hop on - Hop off" என்ற பேருந்து வசதியைப் போக்குவரத்துத் துறையோடு இணைந்து இன்றைக்கு இந்தத் துறை செயல்படுத்திக்கொண்டிருக்கிறது. எனவே, இப்படிப்பட்ட பல்வேறு சாதனைகளை இந்தத் துறையின் சார்பாக நாங்கள் செய்துகொண்டிருக்கின்றோம்.

பிற்பகல் 1–50

அய்யன் திருவள்ளுவர் சிலையைப் பார்ப்பதற்காக இரண்டு புதிய நவீனக் கப்பல்கள் வாங்கப்பட்டு, இன்றைக்கு அவற்றை இயக்கிக்கொண்டிருக்கின்றோம். அதேபோன்று, சுற்றுலாவும், கலை–பண்பாடும், அருங்காட்சியகமும், தொல்பொருள் துறையும் இவ்வாட்சியில் ஒரே உள்ளங்கையை நோக்கி நீளும் விரல்களாக இருந்துகொண்டிருக்கின்றன. அதேபோன்று, கவின்கலைக் கல்லூரிகளை மேம்படுத்த நடவடிக்கை, சென்னை இசைக் கல்லூரிகள் புனரமைப்பு, திருவையாறு இசைக் கல்லூரிக்குச் சொந்தக் கட்டடம், 'தமிழகச் சுற்றுலா' எனும் கையேடு பதிப்பீடு, 'பூங்காவில் பூங்காற்று' மூலம் வாரந்தோறும் கலைகளின் தாகம் தீர்க்கும் முயற்சிகள், இப்படிப் பல்வேறு சாதனைகளை இந்த அரசாங்கம் செய்துகொண்டிருக்கிறது.

வருங்காலத்திலும் இந்தத் துறை மேலும் வளர்ச்சியடையக்கூடிய அளவுக்கு நீங்கள் பல்வேறு கருத்துகளை எடுத்து வைத்திருக்கிறீர்கள். உங்களுடைய கருத்துகளையெல்லாம் எங்களுடைய மனதிலே பதிய வைத்துக்கொண்டு, உங்களுடைய ஒத்துழைப்போடு நிச்சயமாக இந்தத் துறையைப் பொறுத்தமட்டில் மற்ற மாநிலத்திற்கெல்லாம் எடுத்துக்காட்டக்கூடிய அளவிற்கு முதல் மாநிலமாக ஆக்கக்கூடிய முயற்சிகளில் இந்தத் துறை ஈடுபடும் என்ற உறுதியை நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பதிவுத் துறையைப் பொறுத்தமட்டில், சுமார் 145 ஆண்டுகள் பழமைவாய்ந்த துறைகளில் ஒன்றான இந்தத் துறை அதிகமான வருவாயை அரசுக்கு ஈட்டித் தருவதில் மூன்றாவது துறையாக இன்றைக்கு இருந்துகொண்டிருக்கின்றது.

பதிவுத் துறையைச் சார்ந்த சேவைகளைப் பெறுவதில் ஆண்டொன்றுக்கு சார் பதிவாளர் அலுவலகங்களில் தமிழகத்தைச் சேர்ந்த சுமார் ஒன்றரைக் கோடி மக்கள் வந்து பயன்பெறக்கூடிய ஒரு துறையாக இந்தத் துறை விளங்கிக்கொண்டிருக்கிறது. எனவே, உடனுக்குடன் அவர்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் அதற்கென அதிகமான நிதியை ஒதுக்கித் தந்த காரணத்தால், விஞ்ஞானத் தொழில்நுட்ப யுக்திகளைப் பயன்படுத்தி, ஆவணப் பதிவுகளைப் பாதுகாத்தல், வில்லங்கச் சான்றுகளை உடனுக்குடன் அளிக்கக்கூடிய அளவுக்குப் பல்வேறு வசதிகளை மேற்கொண்டு இன்றைக்குக் கருவி வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன.

பதிவுத் துறையின் முக்கிய சாதனைகளாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், உலக அளவில் மிகப் பெரிய அளவுக்கு ஒரு பொருளாதாரப் பின்னடைவு, தேக்க நிலை ஏற்பட்டிருந்தபோதிலும், இந்தியாவில் பல மாநிலங்களில் ஆவணப் பதிவுகளில் வருவாய் மிகப் பின்னடைவாகக் காணப்பட்டிருந்தாலும்கூட, நம்முடைய முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலான கழக அரசின் தொலைநோக்குப் பார்வை, பொருளாதார முன்னேற்ற நடவடிக்கைகள், தொழில் கொள்கைகள், தகவல் தொழில்நுட்ப மேம்பாட்டு நடவடிக்கைகள், ஆகியவை உலகப் பொருளாதாரப் பின்னடைவை தமிழகத்தைப் பொறுத்தமட்டில் ஓரளவுக்குப் பாதிக்காத அளவுக்கு ஆவணப் பதிவில் மற்ற மாநிலங்களைவிட முன்னேற்றம் காணப்படுகிறது. வருவாயைப் பொறுத்தமட்டில் 2008–2009 ஆம் ஆண்டில் சுமார் 4,100 கோடி ரூபாயை அரசுக்கு இந்தத் துறை ஈட்டித் தந்திருக்கிறது என்ற நல்ல செய்தியையும் நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன்.

அதேபோன்று, வழிகாட்டி மதிப்பைப் பொறுத்தமட்டில் இங்கே நிறைய சட்டமன்ற உறுப்பினர்கள் பேசுகின்றபோது சொன்னார்கள், வழிகாட்டி மதிப்பு அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது என்று. எனவே, வழிகாட்டி மதிப்பைப் பொறுத்தமட்டில்—நில மதிப்பைப் பொறுத்தமட்டில், சொத்து மதிப்புகளைப் பொது மக்களுக்கு வெளிப்படுத்தாத சூழ்நிலை ஒரு காலத்தில் நிலவியது. சொத்து மதிப்பைக் குறித்து பொது மக்களுக்கிடையே பல்வேறு இடர்ப்பாடுகளைத் தவிர்த்திட 1971 ஆம் ஆண்டு சொத்து மதிப்பு வழிகாட்டி என்னும் புதிய புரட்சிகரமான கோட்பாட்டை இந்தியாவிலேயே முதன்முதலாக அறிமுகப்படுத்தியது நம்முடைய தலைவர் முதல்வர் கலைஞர் அவர்கள்தான். இப்போது சொத்து மதிப்பின் மீதிருந்த ஐயப்பாடுகள், யூகங்கள் விலகின. மாநிலம் முழுவதும் சொத்து மதிப்பை நிர்ணயிக்க இதர துறைகளின் பங்களிப்போடு, மாநில, மாவட்ட மற்றும் வட்ட அளவில் குழுக்களை அமைத்து நிர்ணயித்த பிறகு, இன்றைக்கு எந்தவிதமான பிரச்சினைகளும் இல்லாமல், பொது மக்களுக்கு ஐயமில்லாமல் பதிவு செய்யக்கூடிய ஒரு நிலைமையை இந்தத் துறை ஏற்படுத்தியிருக்கிறது. மேலும், நிலுவையாகவுள்ள முத்திரைத் தீர்வைக்குப் பொது மக்கள் ஆண்டொன்றுக்கு 24 சதவீதம் வட்டி செலுத்த வேண்டுமென்ற நிலைமையைக் குறைத்து, பாதியாகக் குறைத்து, 12 சதவீதமாக அந்தச் சட்டத் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்பதையும், அது விரைவில் அமல்படுத்தப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்து, ஸ்டார் திட்டம். 1997 ஆம் ஆண்டு கலைஞர் தலைமையிலான கழக அரசு கணினி வழி வில்லங்கச் சான்று வழங்கும் திட்டத்தை முன்னோடித் திட்டமாக முதன்முதலில் துவங்கியது. பின்னர் ஆவணம் தொடர்பான அனைத்துப் பணிகளையும் கணினிமயமாக்கும் ஸ்டார் திட்டம், 6–2–2000 அன்று மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுடைய தலைமையில் துவக்கி வைக்கப்பட்ட இந்தத் திட்டம், தமிழகத்திலுள்ள அனைத்து சார் பதிவாளர் அலுவலகங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டு, இன்றைக்கு 568 சார் பதிவாளர் அலுவலகங்களும் கணினிமயமாக்கப்பட்டிருக்கின்றன என்பதை இந்தநேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இதன்மூலமாக வில்லங்கச் சான்றிதழ், திருமணச் சான்றிதழ் மற்றும் பல்வேறு சான்றிதழ்கள் கணினிமூலம் கிடைக்கக்கூடிய அளவுக்கு மட்டுமல்ல, உங்களுடைய இல்லங்களுக்கே வந்து கிடைக்கக்கூடிய அளவுக்கு ஒரு வழிவகையை இந்தத் துறை செய்திருக்கிறது. உலகின் எந்த மூலையில் இருப்பவர்களும், அவர்கள் விண்ணப்பித்த சான்றிதழ்களை அவர்தம் இல்ல வாசலிலே பெற்றுக்கொள்ளக்கூடியவண்ணம் REGINET சேவை இந்தியாவில் முதன்முதலில் தமிழகத்தில் அளிக்கப்பட்டு வருகின்றது என்ற நல்ல செய்தியை இந்தநேரத்தில் நாம் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளோம்.

அதுபோல், இந்தத் துறையைப் பொறுத்தவரையில், இன்னும் பல்வேறு வகையில் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது. கடந்த ஆட்சியில் 40 சார் பதிவாளர் அலுவலகங்கள் மூடப்பட்டன. சிக்கன நடவடிக்கை என்று அதற்குக் காரணம் சொன்னார்கள். ஆனால், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபிறகு, அந்த 40 சார் பதிவாளர் அலுவலகங்களும் மீண்டும் திறக்கப்பட வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டு, 2006–2007 ஆம் ஆண்டில் 10 சார் பதிவாளர் அலுவலகங்களும், 2007–2008–ல் மேலும் 5 சார் பதிவாளர் அலுவலகங்களும், இந்த ஆண்டு 2009–2010–ல் மேலும் 5 சார் பதிவாளர் அலுவலகங்களும் திறக்கப்படவுள்ளன என்பதையும் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 1–55

அதேபோன்று, ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், சகோதர, சகோதரிகள் இடையே உறவின் அடிப்படையில் எழுதித் தரப்படுகின்ற விடுதலை ஆவணங்கள், செலுத்த வேண்டிய முத்திரைத் தீர்வைச்

சொத்தின் மதிப்பின்மீது 8 சதவீதமும், பதிவுக் கட்டணம் 1 சதவீதமாக இருந்தது. இந்த நிலைமைகளை மாற்றி, சொத்து மதிப்பு எவ்வளவு இருந்தாலும், உச்சபட்ச முத்திரைத் தீர்வையைப் பொறுத்தமட்டில், 10,000 ரூபாய் என்றும், பதிவுக் கட்டணம் 2,000 ரூபாய் என்றும் குறைத்து நிர்ணயித்து, சகோதர, சகோதரிகளுக்கிடையே ஒரு நல்லுறவை ஏற்படுத்தக்கூடிய அளவிற்கு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் தலைமையிலான நல்லாட்சி ஏற்பாடு செய்திருக்கிறது என்றும், அதேபோல், போலி முத்திரைத் தாளை அறவே ஒழிக்க வேண்டும் என்ற முறையில் e–Stamping முறையைப் புகுத்தக்கூடிய அளவிற்கு இந்தத் துறை செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது. முதற்கட்டமாக, மாநகராட்சிப் பகுதிகளில் சுமார் ஒன்பது அலுவலகங்களை உள்ளடக்கி, நான்கு இடங்களில் முன்னோடித் திட்டமாக அறிவிக்கப்படவுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்குப் பல உறுப்பினர்கள் சொன்னார்கள், பாதிக் கட்டடங்கள் வாடகைக் கட்டடத்தில் இயங்குகின்றன என்று. ஆனால், 1947 ஆம் ஆண்டுக்குப் பிறகு பதிவுத் துறையில் ஒரே ஆண்டில் 20 சார் பதிவாளர் அலுவலகங்கள் மாண்புமிகு முதலமைச்சர் தலைவர் கலைஞர் ஆட்சியில்தான் கட்டப்பட்டன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த ஐந்து ஆண்டுகளில் ஒரே ஒரு சார் பதிவாளர் அலுவலகம்தான் கட்டப்பட்டது. ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் ஆட்சியில் மூன்று ஆண்டு கால ஆட்சியில் 20 சார் பதிவாளர் அலுவலகங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. ஆண்டுதோறும் புதிய சொந்தக் கட்டடமாக மாற்றிக்கொண்டிருக்கின்றோம். தற்போது சுமார் 245 சார் பதிவாளர் அலுவலகங்கள் வாடகைக் கட்டடத்தில் இயங்கிக்கொண்டிருக்கின்றன. இதற்கான வாடகையாக ரூ.1,26,80,760/– செலவிடப்படுகின்றது.

அதுபோன்று, பணியாளர்களைப் பொறுத்தமட்டில், இந்த அரசாங்கத்தால் பல்வேறு நிலைகளில் சுமார் 932 பணியாளர்கள் மூன்றாண்டு காலத்தில் நியமனம் செய்யப்பட்டிருக்கின்றார்கள். கடந்த ஆட்சிக் காலத்தில் எந்தவிதமான பணியாளர்களும் நியமனம் செய்யப்படாத காரணத்தினால் மிகப் பெரிய தொய்வு ஏற்பட்டது. அந்த நிலைமைகளைப் போக்குவதற்காக, நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அனுமதி அளித்ததன் அடிப்படையில், 932 பேர்கள் புதியதாக நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

அதுபோன்று, கருணை அடிப்படையில் 52 காலிப் பணியிடங்களுக்கான பணி நியமன ஆணைகள் தலைவர் கலைஞர் அவர்களுடைய பொற்கரங்களால் வெகுவிரைவில் வழங்கப்படவிருக்கின்றன. அதுபோல், தினக் கூலி அடிப்படையில் Data Entry Operator, சுமார் 400 பேர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டு, அதில் 200 நபர்கள் Elcot மூலமாகவும், 200 நபர்கள் வேலைவாய்ப்பு அலுவலகம்மூலமாகவும் நிரப்புவதற்காக வகை செய்யப்பட்டு, அந்தப் பணியிடங்களும் உடனடியாக நிரப்பப்படவிருக்கின்றன.

இதுபோல் பல்வேறு சாதனைகளை இந்தத் துறை செய்துகொண்டிருக்கின்றது. அதுபோல், அறிவிப்புகளைப் பொறுத்தமட்டில், உங்களிடத்தில் தரப்பட்டுள்ளன. அதனை நீங்கள் தெரிந்துகொள்ளலாம் என்றும், தற்போது நேரத்தின் அருமை கருதியும், பசியின் அருமை கருதியும் அதனைப் படித்துத் தெரிந்துகொள்ளலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஒரே ஓர் அறிவிப்பை மட்டும் சொல்கிறேன். ஏனென்று சொன்னால், மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்கள் இன்று காலை தொலைபேசி மூலமாகத் தொடர்புகொண்டு இதனை அறிவிக்க வேண்டும் என்று சொன்னார்கள். மாண்புமிகு மத்திய அமைச்சர், அண்ணன் திரு. மு.க. அழகிரி அவர்களின் வேண்டுகோளை ஏற்று—ஏற்கெனவே இயங்கிக்கொண்டிருந்ததைக் கடந்த ஆட்சியில் நிறுத்திவிட்டார்கள். அதாவது, சித்தம்பட்டியிலிருந்து ஒத்தக்கடைக்கு மாற்றப்பட்ட தாமரைக்குளம் சார் பதிவாளர் அலுவலகம் மீண்டும் சித்தம்பட்டியிலேயே செயல்படும் என்றும், ஒத்தக்கடைக்குப் புதிய சார் பதிவாளர் அலுவலகம் திறக்கப்படும் என்ற அந்த நல்ல செய்தியையும் எடுத்துக் கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கே அறிவிப்புகள் தரப்பட்டுள்ளன. அந்த அறிவிப்புகளை@ நான் படித்ததாக ஏற்றுக்கொண்டு, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இந்தத் துறையினுடைய வளர்ச்சிக்காக செயலாளர் முனைவர் திரு. வெ. இறையன்பு அவர்களும், அதுபோன்று, திரு. ராஜீவ் ரஞ்சன் அவர்களும், பதிவுத் துறையினுடைய தலைவர் திரு. ஆர். சிவகுமார் அவர்களும், இயக்குநர் திரு. ஏ.சி. மோகன்தாஸ் அவர்களும் மற்றும் அனைத்து அலுவலர்களும் செயல்படுவதன் காரணமாக இந்த இரு

@ 1024 முதல் 1037 வரையிலான பக்கங்களில் இணைப்பு VIII மற்றும் IX ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

துறைகளும் மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக விளங்கக்கூடிய அளவிற்குச் செயல்படுவதனால், அவர்களுக்கும் இந்த நேரத்திலே நன்றி கூறி, மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய அனைத்து கருத்துகளையும் ஏற்றுக்கொண்டு, வருங்காலத்தில் உங்களுடைய கருத்துகளையெல்லாம் ஏற்று, இந்தத் துறை செயல்படும் என்பதையும் இந்தநேரத்தில் கூறிக்கொண்டு, நீங்கள் கொடுத்த அனைத்து வெட்டுத் தீர்மானங்களையும் திரும்பப்பெற வேண்டுமென்று கேட்டு, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் தமிழகத்திலே சுற்றுலாவை விரிவாக்கம் செய்து, அதைப் பரவலாக்குவதற்கான பல்வேறு திட்டங்களை, முயற்சிகளை அறிவித்திருக்கிறார்கள். நம்முடைய சுற்றுலாத் தலங்கள் சுகாதாரமின்றி இருப்பதாகப் பல்வேறு இடங்களிலிருந்து புகார்கள் வந்திருக்கின்றன. குறைந்தபட்சம் மாமல்லபுரம், கன்னியாகுமரி, குற்றாலம் போன்ற மிகப் பிரபலமான சுற்றுலாத் தலங்களிலே, பிளாஸ்டிக் பொருட்களை உபயோகிப்பதை முழுமையாகத் தடை செய்து, அந்தச் சுற்றுலாத் தலங்களில், குறைந்த வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள், உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வருகின்ற அந்த இடங்களிலே பிளாஸ்டிக் பொருட்களை முழுமையாகப் புறக்கணிப்பதற்கும், அவற்றைத் தடை செய்வதற்கும் அமைச்சர் அவர்கள் ஆவன செய்து, அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முன்வருவார்களா என்று மட்டும் நான் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அண்ணன் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் எடுத்துக் கூறியதுபோன்று, பல்வேறு இடங்களில் விழிப்புணர்வு முகாம்கள் நடத்திக்கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மற்றவர்களெல்லாம் கேட்டதற்குப் பின்னர் ஓரிரு வார்த்தைகளில் சொல்லிவிடுங்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள், மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலா—பண்பாடு, பதிவுத் துறை அறிவிப்புகளிலே, நாதஸ்வரப் பயிற்சி, இசைப் பயிற்சி, இன்னும் வாய்ப்பாட்டுப் பயிற்சி போன்ற பல பயிற்சிகள் கொடுப்பதாக அறிகிறேன். அதுபோல, வீணைக்கு, வாய்ப்பாட்டுக்கு, நாதஸ்வரத்திற்குப் பயிற்சி அளிப்பதைப்போல, உருமி மேளம், நையாண்டி மேளம், உடுக்கை, பம்பை போன்ற புராதன இசைக்கு முக்கியத்துவம் தந்து, அதற்குப் பயிற்சி கொடுக்கப்படுமா? அதேபோல உடுக்கை, பம்பையிலே பாடல்கள், அம்மனுடைய பாடல்கள், வாய்ப்பாட்டாக, அதிலும் பயிற்சி கொடுப்பதற்கு அரசு முன்வருமா என உங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாமல்லபுரத்தில் ஒலி—ஒளிக் காட்சிகள் அமைக்கப்படும் என்று அரசு அறிவித்து நீண்ட நாட்கள் ஆகின்றன. அதை அமைக்க அரசு முன்வருமா? அதேபோன்று இப்போது 'எங்கு வேண்டுமானாலும் இறங்கலாம், எங்கு வேண்டுமானாலும் ஏறலாம்' என்கிற பேருந்து விடப்பட்டிருக்கிறது. அதன் கட்டணத்தைக் குறைப்பதற்கு அரசு முன்வருமா? பாரிஸ் நகரிலே இயக்கப்படும் அந்தப் பேருந்துகளில் உள்ளேயிருந்தும் அமர்ந்து பார்க்கலாம், வெளியிலிருந்தும் பார்க்கலாம் என்கிற நிலையில் மாடிப் பேருந்துகளாக இயக்கப்படுகின்றன, சுற்றுலாத் தலங்களுக்கு. அதுபோன்ற பேருந்துகள் இயக்கப்படுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

***திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றாலம் நீர்வீழ்ச்சியைப் போன்றே பணகுடி மேற்குத் தொடர்ச்சி மலையில் குத்திரைப்பாய்ந்தான் நீர்வீழ்ச்சியிலும், குற்றாலத்தில் தண்ணீர் வருகின்ற காலம் முழுவதும் இங்கேயும் தண்ணீர் வரும். ஆகவே, அதற்குப் போக்குவரத்து வசதியும், அடிப்படை வசதிகளும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து தருவார்களா என்று தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி.

டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம் சுகாதாரமில்லாமல், பராமரிப்பில்லாமல் மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. இந்தச் சரணாலயத்தை நல்ல முறையில் பராமரித்து, இன்னும் அதிக அளவில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் இந்த அரசு நடவடிக்கைகள் எடுக்குமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பத்திரப் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய உரையில், 2006–2007 ஆம் ஆண்டு பத்திரப் பதிவிற்கான நில மதிப்பு மாற்றியமைக்கப்பட்டதில் கரூரில் மட்டும் சிறு பிரச்சினை வந்தது, சரி செய்யப்பட்டது என்று இங்கே தெரிவித்தார்கள். நான் ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே நேரடியாகத் தெரிவித்திருக்கின்றேன். திருப்பூரிலே அவர் சொன்ன எந்த முறையும் அமலாக்கப்படவில்லை. பத்திரப் பதிவு நிலத்தினுடைய மதிப்பு 5,000 சதவீதத்திற்கு மேல் உயர்த்தப்பட்டு, சாதாரண மக்கள் அங்கே ஒரு சென்ட், 2 சென்ட் இடமே பதிவு செய்ய முடியாத அளவிற்கு நிலைமை இருக்கிறது என்று ஆதாரத்தோடு, அதற்கான விவரங்களையெல்லாம் அவர்களிடத்தில் நேரடியாகக் கொடுத்திருக்கிறேன். சரி செய்யப்படும் என்று கடந்த ஆண்டும் தெரிவித்தார்கள். இந்த ஆண்டு அவருடைய பதிலுரையிலே, கரூரைத் தவிர வேறு எங்கும் பிரச்சினைகள் இல்லையென்று தெரிவித்தது எனக்கு நிரம்ப வருத்தமளிக்கிறது. ஆகவே தயவுசெய்து அமைச்சர் அவர்கள், ஏற்கெனவே அவர் என்னிடத்திலே இந்த அவையிலும் ஏற்றுக்கொண்டபடி, திருப்பூரில் உயர்த்தப்பட்ட அந்த நில மதிப்பை மாற்றியமைப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுப்பார்களா, எப்போது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சுற்றுலா இடங்கள் மிகத் தூய்மையாக வைக்கப்பட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். நிச்சயமாக இந்தத் துறையின் சார்பாகப் பல்வேறு நேரங்களில் விழிப்புணர்வு முகாம்கள் நடத்திக்கொண்டிருக்கிறோம். பள்ளிக் குழந்தைகள், மற்றவர்களுக்குத் தெரியப்படுத்தக்கூடிய அளவிற்குப் பல்வேறு வகைகளில் விழிப்புணர்வு முகாம்களை நடத்திக்கொண்டிருக்கிறோம். இருந்தாலும்கூட, அந்த உள்ளாட்சி அமைப்புகளிடத்திலும் எடுத்துக் கூறி, தொடர்ந்து அது தூய்மையாக இருக்கக்கூடிய அளவிற்கு வைப்பதற்கான முயற்சிகளில் இந்தத் துறை நிச்சயமாக ஈடுபடும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–05

அதேபோன்று, அம்மையார் அவர்கள் இசையைப் பற்றிச் சொன்னார்கள். இசையைப் பொறுத்தமட்டில், பல்வேறு இசைக் கல்லூரிகள் இன்றைக்கு இயங்கி கொண்டிருக்கின்றன. எனவே, இசைக் கல்லூரிகளில் மேலும் பல்வேறு வகையான இசைப் பாடங்களைப் புகுத்துவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே கேட்டு, அதற்கான அனுமதியைப் பெற்று, வருங்காலத்தில் அதுகுறித்துப் பரிசீலிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, திரு. சி. கோவிந்தசாமி அவர்கள் திருப்பூர் பகுதிகளில் நிலத்தினுடைய வழிகாட்டி மதிப்பு அதிகமாக இருக்கிறதென்று சொன்னார்கள். ஒரேயொரு இடத்தில் அதிகமாக இருப்பது உண்மைதான். கடந்த ஆண்டிலும் அவர் இதைச் சொல்லியிருக்கிறார். துறையினுடைய அதிகாரிகளும் இங்கே இருக்கின்ற காரணத்தால், நிச்சயமாக அது மீண்டும் பரிசீலிக்கப்பட்டு, அதனை முடிவிற்குக் கொண்டு வரமுடியும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம் அவர்கள் மாமல்லபுரத்தில் ஒலி–ஒளிக் காட்சியை அமைப்பது பற்றிச் சொன்னார்கள். மாமல்லபுரத்தில் ஒலி–ஒளிக் காட்சியை அமைப்பதைப் பொறுத்தமட்டில், முடிவடையக்கூடிய நிலைமையில் இருக்கிறது. தொல்பொருள் துறைதான் அதைச் செய்துகொண்டிருக்கிறது; அது மத்திய அரசாங்கத்தினுடைய நிர்வாகம். இருந்தாலும்கூட வேகமாக அந்தப் பணி முடிக்கப்பட்டு,

இன்னும் ஒரு சில மாதங்களில் அங்கே ஒலி—ஒளிக் காட்சிகள் தொடங்கக்கூடிய அளவிற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி அவர்கள் வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்தைத் தூய்மையாகப் பராமரிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். உண்மைதான்; அங்கே பராமரிப்பைப் பொறுத்தமட்டில், மிகவும் குறைவாக இருக்கிறது. அந்தப் பகுதியைத் தூய்மைப் பகுதியாக மாற்றி, சுற்றுலாப் பயணிகள் பாராட்டக்கூடிய அளவிற்கு இந்தத் துறையினுடைய செயல்பாடுகள் நிச்சயமாக இருக்கும் என்பதைக் கூறி, நீங்கள் கொடுத்திருக்கக்கூடிய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப்பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(ஆ) கோரிக்கை எண் 29—சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 29—சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகின்றேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

“சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.73,88,01,000/—, மூலதனக் கணக்கில் ரூ.24,71,57,000/— மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/— ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்” என்னும் மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

(இ) கோரிக்கை எண் 11–முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 11–முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகின்றேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ170,82,16,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

(ஈ) கோரிக்கை எண் 28–செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 28–செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகின்றேன்.*

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.42,12,64,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

(உ) கோரிக்கை எண் 30–எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 30–எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகின்றேன்.*

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.78,14,48,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.9,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (குறுக்கீடுகள்)

ஆதி திராவிடர் நலத் துறை மானியக் கோரிக்கைமீதான வாக்கெடுப்பு காலையிலேயே முடிந்துவிட்டது. (குறுக்கீடு) அது காலையிலேயே முடிந்துவிட்டது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (8–7–2009) புதன்கிழமை காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–09 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

58. சிறைத் துறைக்குத் தேவையான பிற மளிகைப் பொருட்கள் (நிதித் (சம்பளங்கள்) துறையின் 11–11–2008 ஆம் நாளிட்ட அரசாணை நிலை எண் 483–ல் அறிவிக்கையிடப்பட்டுள்ள பொருட்கள் நீங்கலாக) மற்றும் காய்கறிகளைக் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்யப்படலாம் என அறிவிக்கையிட்டது குறித்து நிதித் (சம்பளங்கள்) துறையின் 24–3–2009 ஆம் நாளிட்ட 115 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

(இ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கை அளித்தல். பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர் மாண்புமிகு திரு. எஸ்.கே. வேதரத்தினம் அவர்கள்.

***திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008–2009 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் எட்டாவது அறிக்கையைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

5. மானியக் கோரிக்கைகள், 2009–2010, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 4–ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2009–2010 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். 3–7–2009 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற மானியக் கோரிக்கை எண் 4–ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கை மற்றும் அதன்மீது முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றின்மீதான விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி. முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார், ஒதுக்கப்பட்ட நேரம் 10 நிமிடங்கள். (குறுக்கீடு)

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. கு. பாண்டுரங்கன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

முற்பகல் 9–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பாண்டுரங்கன், என்ன? சொல்லுங்கள். (குறுக்கீடு) மற்றவையெல்லாம் பின்னால் பார்ப்போம் என்று சொல்கிறேன் அல்லவா? உட்காருங்கள். (குறுக்கீடு) இன்றைக்கு நேரம் இல்லை. We have no time. Please, we will take it tomorrow. No, no. (குறுக்கீடு) உட்காருங்கள். நேரம் முடிந்துவிட்டது. (குறுக்கீடு) உங்கள் நேரம் எல்லாம் முடிந்துவிட்டது. உட்காருங்கள்.

5. மானியக் கோரிக்கைகள், 2009–2010, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 4–ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. து. ரவிக்குமார், பேசுங்கள்.

திரு. து. ரவிக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களுடைய உரிமைகளுக்காக 100 ஆண்டுகளுக்கு முன்னே அரும்பாடுபட்டு உழைத்த மாபெரும் தலைவர், மாவீரன் என்று அந்த மக்களால் போற்றப்படுகின்றவர், வட்ட மேசை மாநாடுகளிலே அண்ணல் அம்பேத்கர் அவர்களோடு கலந்துகொண்டு, இந்த மக்களுடைய உரிமைகளுக்காக வாதாடியவர் திரு. ரெட்டமலை சீனிவாசன். அவர்களுக்கு நம்முடைய அரசு சார்பிலே மணிமண்டபம் கட்டப்பட்டு, அதை நம்முடைய மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் இன்றையதினம் திறக்கவிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த நாளிலே, இந்த ஆதி திராவிடர் நலத் துறை மானியக் கோரிக்கையின்மீது பேச வாய்ப்பளித்த உங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த மணிமண்டபத்தைத் திறந்து வைக்கவிருக்கின்ற நம்முடைய மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பிலேயும், ஒடுக்கப்பட்ட மக்களின் சார்பிலேயும், மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். முதலிலே என்னுடைய தொகுதி சார்ந்த கோரிக்கைகளை முன்வைக்க விரும்புகிறேன்.

சமுதாயக் கூடம் கட்டும் திட்டத்தின் அடிப்படையிலே, காட்டுமன்னார்கோவில் தொகுதிக்குட்பட்ட குமராட்சி கிராமத்திற்கு ஒரு சமுதாய நலக் கூடம் கட்டித் தர வேண்டும். அதுபோல், குளக்குடியில் உள்ள ஆதி திராவிட நலப் பள்ளியைத் தரம் உயர்த்தித் தர வேண்டும். காட்டுமன்னார்கோவிலில் உள்ள ஆதி திராவிட மாணவர் விடுதி மிகவும் மோசமாக உள்ளது. அதனைச் சீரமைத்துத் தர வேண்டும். மேலும், சிதம்பரத்தில் ஆதி திராவிடர் நலத் துறையின் சார்பிலே நடத்தப்பட்டு வருகின்ற I.T.I., தனியார் பங்களிப்போடு மேம்படுத்தப்பட வேண்டும். என்னுடைய தொகுதி ஆண்டுதோறும் வெள்ளத்தால் பாதிக்கப்படுகின்ற காரணத்தினால், அங்கே இருக்கின்ற தொகுப்பு வீடுகள் அனைத்தையும் பழுது நீக்கித் தருகின்ற ஒரு சிறப்புத் திட்டத்தை ஆதி திராவிடர் நலத் துறையின் சார்பிலே

அறிவிக்க வேண்டும். எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட, நேர்மைக்கும், திறமைக்கும் எடுத்துக்காட்டாகச் சொல்லப்படுகின்ற திரு. கக்கன்ஜி அவர்களுடைய நூற்றாண்டு விழாவினை நம்முடைய அரசின் சார்பிலே சிறப்பாக நடத்த வேண்டும்.

அதேபோல், இன்றைக்கு வருவாய்த் துறையிலே கிராம ஊழியர்கள் சுமார் 16,000 பேர்கள் பணிபுரிந்துகொண்டுள்ளனர். அவர்களுடைய நீண்ட நாள் கோரிக்கை. அவர்களுடைய அடிப்படைச் சம்பளத்தினை அலுவலக உதவியாளர்களுடைய சம்பளத்திற்கு இணையாக அமைத்துத் தர வேண்டும் என்ற கோரிக்கையினை அரசு பரிவோடு பரிசீலிக்க வேண்டும். மேற்கண்ட கோரிக்கைகளை முதலிலே நான் முன்வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆதி திராவிட மக்களுக்கு அடுக்கடுக்கான நன்மைகளைச் செய்துகொண்டிருக்கின்ற... (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தியாக சீலர் கக்கன்ஜி அவர்களின் நூற்றாண்டு விழா அரசின் சார்பிலே கொண்டாடப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ரவிக்குமார் அவர்கள் கேட்டார்கள். பொது வாழ்க்கையில் தூய்மையாகவும், நேர்மையாகவும் எப்படி வாழ்ந்து காட்ட வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து காட்டிய தியாக சீலர் கக்கன்ஜி அவர்களின் நூற்றாண்டு விழாவினை, அவர் பிறந்த மதுரை மாவட்டம், தும்பைப்பட்டியிலே சிறப்பாகக் கொண்டாடுவதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. து. ரவிக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்த ஆதி திராவிட சமூகத்திலே இருக்கின்ற மக்களுக்கெல்லாம் எண்ணற்ற நன்மைகளைச் செய்துகொண்டிருக்கின்ற நம்முடைய அரசு, இதிலே அடிநிலையில் இருக்கின்ற அருந்ததியின மக்களுக்கு மூன்று சதவிகிதம் உள் ஒதுக்கீடு வழங்கி, இன்றைக்கு அவர்களையும் கைதூக்கிவிட்டிருக்கின்றது. அதைப்போலவே, இந்த ஆதி திராவிடர் பட்டியலிலே இன்னும் அடிநிலையில் ஒன்றிரண்டு சாதியினர் இருக்கின்றனர். குறிப்பாக, மக்களுக்கு சலவைத் தொழிலைச் செய்து, அவர்களுடைய பிறப்பு இறப்புச் சடங்குகளிலே பங்காற்றி, இன்னும் படிப்பறிவிலும்,

வேலைவாய்ப்பிலும் மிகவும் பின்தங்கியிருக்கின்ற மக்கள்தான் புதிரை வண்ணார்கள் என்று அழைக்கப்படுகின்ற அந்த மக்கள். இந்த இனப் பட்டியலில் 60–வது சாதியாக குறிக்கப்பட்டிருக்கின்ற அந்த புதிரை வண்ணான் சாதியினர் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்று கணக்கெடுப்பு எடுத்துக்கொண்டிருக்கின்ற நேரத்திலே, இதற்காகச் செயல்பட்டுக்கொண்டிருக்கின்ற தொண்டு நிறுவனங்கள், சுமார் மூன்று இலட்சம் பேர்கள் இருக்கின்றார்கள் என்று சொல்கின்றார்கள். ஆனால், 1981 ஆம் ஆண்டு சென்சஸிலே எடுக்கப்பட்ட புள்ளிவிவரம், அவர்கள் 26,000 பேர் இருப்பார்கள் என்று சொல்கிறது. அவர்கள் எவ்வளவு பேர் இருந்தாலும், இன்றைக்கு அவர்களை நாம் கைதூக்கிவிட வேண்டும் என்று சொன்னால், இப்படி உள் ஒதுக்கீடு வழங்குவதற்கு வாய்ப்பில்லை என்கின்ற காரணத்தினாலே, அவர்களுக்கு ஒரு நல வாரியம் அமைத்துத் தர வேண்டும் என்று நான் மெத்தப் பணிவோடு உங்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 9–45

இன்றைக்கு மத்திய அரசு சிறப்பு நிதி உதவித் திட்டம் என்று வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதைப்போல, ஆதி திராவிட மக்களுக்கு 25 கோடி ரூபாயை சிறப்பு நிதி உதவியாக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அறிவித்தார்கள். ஒவ்வோர் ஆண்டும் அந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையிலே, இன்றைக்கு அந்த சமூகத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளையெல்லாம் நம்முடைய ஆதி திராவிடர் நலத் துறை வழங்குகிறது. அப்படி மேம்பாட்டுப் பயிற்சிகளை வழங்குகின்ற நேரத்திலே, அதற்கான பயிற்சிகளை வழங்குகின்ற நிறுவனங்களைத் தேர்ந்தெடுப்பதற்குப் பல்வேறு விதிமுறைகளை வைத்திருக்கிறார்கள் என்றபோதிலும், இன்றைக்கு அதிலே பயிற்சி பெறுகிறவர்கள் எந்த அளவிற்கு உடனடியாக வேலைவாய்ப்பைப் பெறுகிறார்கள் என்று பார்த்தால், அது நமக்கு அந்த அளவிற்கு உற்சாகம் தருவதாக இல்லை. எனவே, அந்த விதிமுறைகளை இன்னும் கடுமையாக்கி, தேசிய அளவிலே அங்கீகாரம்பெற்ற நிறுவனங்கள்மூலமாக இந்தப் பயிற்சியை அளித்தால், அந்த இளைஞர்கள் நிச்சயமாக வேலைவாய்ப்பைப் பெற முடியும். அது மட்டுமல்லாமல், தொழில் நிறுவனங்களோடும் சேர்ந்து நாம் இதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

இன்றைக்கு ஆதி திராவிடர் நலத் துறையின் சார்பிலே ஆதி திராவிடர்கள் மற்றும் பழங்குடியினருக்கு 1,269 விடுதிகள் நடத்தப்படுகின்றன. இவற்றிலே 87 ஆயிரம் மாணவர்கள் தங்கிப் படித்துக்கொண்டிருக்கின்றார்கள். இந்த விடுதிகளைப் பொறுத்தவரையிலே, ஒவ்வோர் ஆண்டும் புதிய விடுதிகள் கட்டப்படுகின்றன; இருக்கின்ற விடுதிகள் மேம்படுத்தப்படுகின்றன என்றாலும்கூட, அந்த விடுதிகளுடைய தரம், அங்கே இருக்கின்ற நிலை மிக மோசமாக இருக்கின்றது என்று தொடர்ந்து பத்திரிகைகளும், சமுதாய இயக்கங்களும் சொல்லி வருகின்றன. இந்த விடுதிகளையெல்லாம் மேம்படுத்துவதற்கு நம்முடைய ஆதி திராவிடர் நலத் துறையிலே ஏற்கெனவே உயர்நிலைக் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த உயர் நிலைக் குழுவிலிருந்து ஒரு துணைக் குழுவை அமைத்து, இந்த விடுதிகளையெல்லாம் ஒரு குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள் பார்வையிட்டு, அவற்றை மேம்படுத்துவதற்குப் பரிந்துரைகளை உடனடியாக வழங்குவதற்கு நம்முடைய அரசு முன்வர வேண்டும் என்று நான் வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்ததாக, இந்தத் துறையிலே நடத்தப்படுகின்ற பள்ளிகள். இன்றைக்கு 1,359 பள்ளிகள் இரண்டரை இலட்சம் மாணவர்களைக்கொண்டு இந்தத் துறையினால் நடத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றன. இன்றைக்கு அவர்களுடைய தேர்ச்சி சதவீதம், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு அவர்கள் இதிலே அதிக கவனம் எடுத்துக்கொண்டு, அந்தத் தேர்ச்சி சதவீதம் உயர்ந்திருக்கிறது என்று சொன்னாலும்கூட, இன்றைக்கும்கூட அந்தப் பள்ளிகளினுடைய கல்வித் தரம் என்பது பலவிதத்திலே குறைபாடு உள்ளதாகத்தான் இருக்கிறது. இதற்கான முக்கியக் காரணம் என்னவென்று சொன்னால், அந்தப் பள்ளிகளைக் கண்காணிப்பதற்காக நியமிக்கப்பட்டிருக்கிற அலுவலர்கள் வருவாய்த் துறையிலிருந்து வருகின்ற அலுவலர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர்களாக இருந்தாலும் சரி, கல்விக்கூடங்களைக் கண்காணிக்கின்ற அலுவலர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் கல்வித் துறையைச் சார்ந்தவர்களாக இல்லாத காரணத்தினாலே, அந்தப் பள்ளிகளை எப்படி மேற்பார்வையிடுவது, அதிலே இருக்கின்ற குறைகளை எப்படிக் களைவது என்பதைப் பற்றி அவர்களுக்குச் சரியான விதத்திலே தெரியவில்லை. இந்தக் குறைகளைக் களைய

வேண்டும் என்று சொன்னால், நாம் இன்றைக்கு இருக்கிற பள்ளிக் கல்வித் துறையினுடைய கண்காணிப்பின்கீழ் ஆதி திராவிடர் நலப் பள்ளிகளையும் கொண்டு வர வேண்டும் என்று நான் தொடர்ந்து இங்கே வேண்டுகோள் விடுத்துக்கொண்டிருக்கின்றேன். அப்படிக் கல்வித் துறையின் கண்காணிப்பின்கீழ் இந்தப் பள்ளிகள் வந்தால்தான் இந்த மாணவர்களுடைய கல்வி வளர்ச்சி பெறும் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அடுத்ததாக, இந்த அவையிலே பல்வேறு உறுப்பினர்களும் தெரிவித்த கருத்துத்தான். இது பின்னடைவுக் காலிப் பணியிடங்கள் பற்றியது. நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும் இது தொடர்பாக அன்றைக்கே கருத்துத் தெரிவித்திருக்கின்றார்கள். இதற்காக ஒரு உயர் நிலைக் குழு அமைக்கப்பட்டு, சிறப்பு ஆணை ஒன்றும் பிறப்பிக்கப்பட்டு, இதிலே ஒவ்வொரு துறையிலும் எவ்வளவு பணியிடங்கள் காலியாக இருக்கின்றன என்பதைக் கண்டறியும்படி நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் 2006 ஆம் ஆண்டிலேயே ஆணையிட்டார்கள். அதன் அடிப்படையிலே இன்றைக்குப் பல்வேறு துறைகளிலே காலிப் பணியிடங்கள் கண்டறியப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். கடலூரிலே இருக்கின்ற பாலசுப்பிரமணியம் என்பவர் Right to Information Act அடிப்படையிலே பல்வேறு துறைகளுக்கும் எழுதி, இன்றைக்கு 19,300 காலிப் பணியிடங்கள் இந்தத் துறையிலே இருக்கின்றன என்பதைக் கண்டறிந்திருக்கிறார்கள்...

முற்பகல் 9–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா. (குறுக்கீடு)

திரு. து. ரவிக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரையை முடித்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. நீங்கள் time–ஐ keep up செய்தால்தான், சரியான நேரத்தில் அவையை முடிக்க முடியும். (குறுக்கீடு) நேரத்தைப் பாருங்கள்; உங்களுக்கு ஏற்கெனவே ஒரு நிமிடம் கூடுதலாகக் கொடுக்கப்பட்டுள்ளது. (குறுக்கீடு)

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

LEGISLATURE ... வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, திரு. து. ரவிக்குமார், சீக்கிரம் சொல்லி முடியுங்கள். (குறுக்கீடு) Madam, கொஞ்சம் பொறுங்கள்.

திரு. து. ரவிக்குமார்: எனவே, அந்தக் காலிப் பணியிடங்களையெல்லாம் உடனடியாக நிரப்புவதற்கு, நம்முடைய அரசு உடனடி நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி சொல்லி, அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா. உங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நேரம் 15 நிமிடங்கள்.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை எண் 4–ஆதி திராவிடர் நலத் துறையின்மீது பேசுகின்ற ஒரு வாய்ப்பினை எனக்கு உருவாக்கித் தந்த எங்கள் சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களுக்கும், நான் பேசுகின்ற வரையிலும் நீண்ட நேரத்தை ஒதுக்கித் தரவிருக்கின்ற மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம் திரு. ரெட்டமலை சீனிவாசன் பிறந்த நாள்; அவருக்காக இன்றைக்கு மணிமண்டபம்கூடத் திறக்கவிருக்கின்றோம். அதேபோல, கக்கன்ஜி நூற்றாண்டு விழா நடைபெறுகின்ற ஆண்டாக இந்த ஆண்டு இருக்கிறது.

இத்துறை, நலிந்த ஆதி திராவிட மக்களுக்குக் கல்வியும், பொருளாதார ஏற்றமும் ஏற்பட்டாலன்றி, இவர்கள் மற்றவர்களுடன் சமமான அந்தஸ்தில் வரமுடியாது என்பதற்காக, கல்வி, பொருளாதார முன்னேற்றம் காண பெரும் முயற்சி எடுத்திருப்பதைக் காணமுடிகிறது. 'ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது' என இல்லாமல், துடிப்பாகச் செயல்பட வேண்டுமென்ற எதிர்பார்ப்பும் உள்ளது. 100–க்கு 99 சதவிகிதம் சென்ற ஆண்டு ஒதுக்கிய தொகையே இந்த ஆண்டும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஒரு ரூபாய்கூட உயர்த்தாமல், 2008–2009 ஆம் ஆண்டைய நிலைதான் 2009–2010–லும் என்றால், இத்துறைமூலம் அபிவிருத்தி இல்லை என்பதைத்தான் அது சுட்டிக்காட்டுவதாக இருக்கின்றது.

உதாரணத்திற்கு, முதுகலைப் பட்டம் படிக்கும் மாணவியருக்கு சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணச் சலுகைகள் (பக்கம் 9); இதற்காக 2008–2009–ல் ஒதுக்கப்பட்ட தொகை ரூ.50 இலட்சம்; 2009–2010–ல் ஒதுக்கப்பட்டுள்ள தொகை அதே 50 இலட்சம்

ரூபாய். 10 ஆம் வகுப்பு வரை படிப்பவர்களுக்குச் சிறப்புக் கட்டணச் சலுகை; 2008–2009–ல் ஒதுக்கப்பட்ட தொகை ரூ.100.40 இலட்சம்; 2009–2010–ல் ஒதுக்கப்பட்டுள்ள தொகை அதே ரூ.100.40 இலட்சம். பொதுத் தேர்வுக் கட்டணச் சலுகைகள் (பக்கம் 10); பத்தாம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்புப் படிக்கிற மாணவ, மாணவியருக்கு, 2008–2009–ல் ஒதுக்கப்பட்ட தொகை ரூ.461.71 இலட்சம்; 2009–2010–ல் ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ.461.71 இலட்சம்.

பள்ளிச் சேர்க்கையை அதிகரித்தல்; 2008–2009–ல் ஒதுக்கப்பட்ட தொகை ரூ.300 இலட்சம்; 2009–2010–ல் ஒதுக்கப்பட்டுள்ள தொகை அதே ரூ.300 இலட்சம். இடை நிற்றலைத் தவிர்த்தல்; ஆறாம் வகுப்பு சேர்ந்து கல்வி பயிலும் மாணவியருக்கு மாதம் 100 ரூபாய் வீதம், 10 மாதங்களுக்கு உதவித் தொகை 2008–2009–ல் ஒதுக்கப்பட்ட தொகை ரூ.300 இலட்சம்; 2009–2010–ல் ஒதுக்கப்பட்டுள்ள தொகை அதே ரூ.300 இலட்சம். சிறப்புப் பரிசுத் தொகைத் திட்டம் (பக்கம் 19); 2008–2009–ல் ஒதுக்கப்பட்ட தொகை ரூ.18.50 இலட்சம். அதற்காக 2009–2010–ல் ஒதுக்கப்பட்டுள்ள தொகை அதே ரூ.18.50 இலட்சம். சிறந்த மாணவர்களுக்கான ஊக்கத் தொகை—பக்கம் 24–ல் வருகிறது—2008–2009–ல் ஒதுக்கப்பட்ட தொகை ரூ.8.16 இலட்சம்; 2009–2010–ல் ஒதுக்கப்பட்டுள்ள தொகை அதே ரூ.8.16 இலட்சம். இலவசப் பாடப் புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் வழங்கும் திட்டம் (பக்கம் 27); 2008–2009–ல் ஒதுக்கப்பட்ட தொகை ரூ.1,000 இலட்சம்; 2009–2010–ல் ஒதுக்கப்பட்டுள்ள தொகை அதே ரூ.1,000 இலட்சம்.

ஆக, ஏறக்குறைய சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்ட நிதிதான், இந்த ஆண்டும் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், சென்ற ஆண்டைவிட, இந்த ஆண்டில் ஏற்றம் இருக்கவில்லை என்பதைத்தான் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பு சுட்டிக்காட்டுவதாக இருக்கிறது என்று அறிகின்றேன்.ஆகவேதான் சொல்லுகின்றேன்; மத்தியிலே எப்படி இரயில்வே பட்ஜெட் என்று ஒன்றைத் தனியாகப் போடுகிறார்களோ, பட்ஜெட்டுக்குள்ளேயே ஆதி திராவிடர் நலத் துறைக்கென்று ஒரு தனியான பட்ஜெட்டைப் போட்டு, எங்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு வழிவகுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 9–55

'புஸ்தகம்' என்பது வட மொழிச் சொல். அதற்கு தமிழ்ச் சொல் 'நூல்'. 'பாடசாலை' என்பது வட மொழிச் சொல். அதற்குத் தமிழ்ச்

சொல், 'பள்ளிக்கூடம்'. 2,000 ஆண்டுகளுக்கு முன்பே தொல்காப்பியர், 'பறையர், பாணர், கடம்பர், துடியர்', இந்த நான்கு அல்லாத வேறு குடி அல்லர் என்றார். வேறு சமூகத்தினர் இல்லை என்று சொன்னார். இதனை வட மொழியில், பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்று வேத வியாசர் குறிப்பிட்டது. 'பிரம்மம்' தெரிந்தவன் பிராமணன் என்றால், 'பரம்' தெரிந்தவன் பறையன்.

இத்துறைமூலம் இருக்கக்கூடிய இடம், மண்ணின் மைந்தர்கள் எந்த அளவு ஏற்றம் பெற்றிருக்கின்றனர் என்பதை ஆண்டுதோறும் செய்கின்ற இந்த ஆய்வே ஆதி திராவிடர் நலத் துறை மானியமாக இந்த மன்றத்தில் வைக்கப்படுகிறது. மத்திய நிதியுதவி அளிக்கப்பட்டாலும், அது போதவில்லை என்று மீண்டும் தொகை பெறும் அண்டை மாநிலங்களைப்போல், மத்திய நிதியை விரைவாக ஆதி திராவிட மக்களின் நலப் பணிகளில் செலவிட்டு, ஆண்டு முடிவதற்குள் மீண்டும் மத்தியத் தொகையைப் பெறவேண்டும். கொடுக்கும் தொகையைத் திருப்பி அனுப்பும் நிலையோ அல்லது தவணை கேட்கும் சூழலோ உருவாகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

ஆதி திராவிடர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அரசுப் பணிகளில் பணியாற்றும்போது, அவர்களுக்குத் தருகின்ற பொறுப்பு, முக்கியம் இல்லாத, போணியாகாத பொறுப்புகளாகத்தான் இருக்கின்றன. முக்கியத்துவம் வாய்ந்த பொறுப்புகள் அவர்களுக்குத் தரப்படுவதில்லை. ஓய்வு பெறும்போது அவர்கள் ஊனப்படுத்தி அனுப்பப்படுகின்றனர். ஒதுக்கீடு என்பது மண்ணுக்கு உரிய சட்டம். Law of land. இதில் நீதிமன்றம் குறுக்கிடுவதும், இந்த ஒதுக்கீடுகளுக்கெதிராகத் தீர்ப்பு வழங்குதலும் இம்மக்களுக்கு டாக்டர் அம்பேத்கர் பெற்றுத் தந்த உரிமைகள் கொல்லப்படுகின்றனவோ என்ற அச்சம் ஏற்பட்டிருக்கின்றது. இதனை மேட்டுக்குடி மக்கள் ஒரு ஆயுதமாகவே தலித் மக்களுக்கு எதிராகப் பயன்படுத்துகின்றனர். இதனை அரசும், முதல்வரும் கூர்ந்து கவனிக்கக் கோருகின்றேன்.

உதாரணத்திற்கு, மதுரையிலே இருக்கின்ற தமிழ்ச் சங்கம். நான்காம் தமிழ்ச் சங்கம் என்று சொல்வார்கள். தோற்றம் 1901. நிறுவியவர் பாண்டித்துரை தேவர். பாளையம்பட்டி ஜமீனுக்குச் சொந்தக்காரர். அவர் 1957–இல் செந்தமிழ்க் கல்லூரியை உருவாக்கினார். 15 ஆசிரியர் பணியிடங்கள். ஒரே ஒரு S.C. தான் இருக்கின்றார். அரசாங்கம் 3 பேரை சுழற்சி முறையில் போட்டு, 2 தலித் ஆசிரியர்களைப் போட வேண்டுமென்று உத்தரவு

பிறப்பித்துங்கூட, 3 பேர், ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தலைவராகவும், சங்கத்தினுடைய செயலாளராகவும், அந்தக் கல்லூரியினுடைய செயலாளராகவும், காசாளராகவும் இருக்கின்ற காரணத்தினால், அரசு ஆணைக்கு எதிராக, 2 தலித்துகளைப் போடுவதற்குப் பதிலாக 3 பேரை, வேற்று சமுதாயத்தைச் சேர்ந்தவர்களைப் போட்டிருக்கின்ற காரணத்தினால், அதை மறுபடியும் பரிசீலிக்க வேண்டும் என்று இப்போது அது பள்ளிக் கல்வித் துறைக்கு வந்திருக்கின்றது. நீதிமன்றத்திலேயும் இந்த வழக்கு இருக்கின்றது. இந்த நிலையிலே அரசு உத்தரவை நிறைவேற்றாமல், அதற்கு மாறாக, வேறு சமுதாயத்தைச் சேர்ந்தவர்களைப் போடக்கூடிய ஒரு நிலைமை இருக்கின்றதென்று சொன்னால், இதுபோன்ற தவறுகளை அரசாங்கம் மிக வன்மையாகக் கண்டிப்பதோடு மட்டுமல்லாமல், நடவடிக்கையும் எடுக்க வேண்டும்.

2007–இல் அரசு சுழற்சி முறையில்தான் இப்பணி நிரப்பப்பட வேண்டும் என்பது ஆணை. ஆனால், செந்தமிழ்க் கல்லூரிக்கு, 2007–லிருந்து இச்சமுதாய மக்களுக்கு அரசு ஒதுக்கீடு நீதிமன்றத்தில் காலதாமதம் ஆவதால் எங்கள் உரிமைகள் பணத்தாலே பாதிக்கப்படுவதை உடனடியாக அரசு தடுத்து நிறுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பிப்ரவரி மாதம் 27 ஆம் தேதி Board Meeting நடந்திருக்கின்றது. அந்த Board Meeting–இலே, A.E.–க்களையெல்லாம் Executive Engineer–களாகப் பதவி உயர்வு செய்ய, 5 ஆண்டுகாலம் முழுமை பெற்றிருந்தால், அதனை ஏற்று பதவி உயர்வு அளிக்கலாம் என்ற ஒரு வரம்பு நிர்ணயம் செய்யப்பட்டு அனுமதி அளித்திருக்கின்றது. 54 நாட்கள் குறைவாக இருந்து, அதுவும் ஏப்ரல் 26 ஆம் தேதியுடன் நிறைவு பெற்றுவிட்டது. Backlog பதவி உயர்வுக்கான உத்தரவு முடிவுக்கு வந்திருக்க வேண்டும். ஏன் அது காலம் தாழ்த்தப்படுகிறது? அரசு, தாழ்ந்தவர்களை அல்ல, மற்றவர்களால் தாழ்த்தப்பட்டிருப்பவர்களை உயர்த்த, இதுபோன்ற காலதாமதத்தைத் தடுத்து, உடன் பதவி உயர்வு ஆணை பிறப்பிக்கக் கோருகின்றேன்.

செத்தால் கொடுக்கும் தொகைகூட—வாரியத்தில் உள்ளவர்களுக்கு 2,000 ரூபாய், சாதாரணமானவர்களுக்கு 500 ரூபாய் என்று கொடுக்கப்படுகிறது. ஏன் இந்த வேறுபாடு? இதனைச் சமன்படுத்துங்கள். இதில் தாழ்ந்தவர்–உயர்ந்தவர் என்ற மாறுபாடு வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆதி திராவிட மாணவ, மாணவியர்கள் பெரும்பாலோர் கிராமப் பகுதிகளில் வசிப்பதால் தலைசிறந்த கல்வி வழங்க வேண்டுமென்று, விடுதிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, மாணவ, மாணவியர்களுக்கு, இத்துறையின்கீழ் ஆதி திராவிடர்களுக்கென 1,229 விடுதிகளும், பழங்குடியினருக்கென 40 விடுதிகளும் செயல்பட்டு வருகின்றன.

இந்த விடுதிகளில் தங்கிப் பயிலுகின்ற மாணவ, மாணவியர்களுக்கு உணவுக் கட்டணமாக கடந்த ஆட்சியில் பள்ளி மாணவர்களுக்கு ரூ.300/– என்று இருந்ததைப் படிப்படியாக உயர்த்தி 450 ரூபாயாகவும், கல்லூரி விடுதியில் தங்கிப் பயில்வோர்க்கு 400 ரூபாயாக இருந்ததை 550 ரூபாயாகவும் உயர்த்தி உள்ளார்கள். இதில் நீங்கள் ஒன்றை எண்ணிப் பார்க்க வேண்டும். கடந்த ஆட்சியில் அரிசி கிலோ ரூ.3.50 என்று இருந்தது. ஆனால், இன்று ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய்க்கு வழங்கப்பட்டு மாணவர்களுக்கு இந்த உணவுக் கட்டணத்தின்மூலம் சிறப்பான, தரமான உணவு வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், விடுதியில் பயில்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே இருப்பதால், அவர்களுக்குப் புதிய விடுதிகள், தேவை மற்றும் இன்றியமையாமை ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு நமது முதல்வர் அவர்கள் கடந்த 3 ஆண்டுகளில் 51 புதிய விடுதிகளைத் திறப்பதற்கு ஆணையிட்டுள்ளார்கள். இதன் மொத்த மதிப்பீடு ரூ.3 கோடியே 75 இலட்சத்து 91 ஆயிரம் ரூபாய். கடந்த 3 ஆண்டுகளில், 76 புதிய விடுதிகளுக்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு ரூ.35 கோடியே 92 இலட்சத்து 78 ஆயிரம் ஒதுக்கீடு செய்து அப்பணிகளும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், ஆதி திராவிட மக்கள் திருமணங்களை நடத்துவதற்கு ஏதுவாக, கடந்த 3 ஆண்டுகளில் 252 இலட்சம் மதிப்பீட்டில் 30 சமுதாயக் கூடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளைச் செய்து தருவதற்கு நபார்டு வங்கித் திட்டத்தின்கீழ் கடனுதவிமூலம் 249 குடியிருப்புகளுக்கு 110 கோடியே 87 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இவற்றில் 205 குடியிருப்புகளுக்கு பல்நோக்கு மையம்

என்றழைக்கப்படும் சமுதாயக் கூடம் தலா 18 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

கடந்த மூன்று ஆண்டுகளில் 1,293 பழங்குடியினர்களுக்கு 5 கோடியே 28 இலட்சத்து 17 ஆயிரம் செலவில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. 1,048 பழங்குடியினருக்கு 1 கோடியே 70 இலட்சத்து 96 ஆயிரம் ரூபாய் செலவில், கறவை மாடுகள் வழங்கப்பட்டுள்ளன. 1,081 பழங்குடியினர்களுக்கு 20 கோடியே 3 இலட்சத்து 67 ஆயிரம் மதிப்பீட்டில் ஆடு அலகுகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் சென்ற ஆண்டு தேனி மாவட்டத்தில் 4 இலட்சம் ரூபாய் செலவில் பழங்குடியினருக்கு 40 குதிரைகள் வழங்கப்பட்டு, இது தவிர, பழங்குடியினர் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி மற்றும் மின்சார வசதி ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அட்ச ரேகை, பூமத்திய ரேகை, ஆயுள் ரேகை பார்த்தவர்கள் மத்தியில், ஏழைகளின் வறுமை ரேகையைக் கருத்திற்கொண்டு செயல்படுபவர்தான் எங்கள் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மக்கள் பொருளாதார வளர்ச்சியடைய பல உன்னதத் திட்டங்களை நிறைவேற்றி, இப்பொருளாதாரத் திட்டங்கள் முழுவதையும் நிறைவேற்றுவதற்காக மத்திய அரசு வழங்கும் சிறப்பு நிதியுதவியுடன் மாநில அரசும் சிறப்பு நிதியுதவியாக கடந்த மூன்று ஆண்டுகளில் 75 கோடி ரூபாய் வழங்கியுள்ளது. இம்மாநில நிதியின்மூலமாக கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிடர்கள் இத்திட்டத்தின்கீழ் பயன்பெறுவார்கள்.

மத்திய மாநில அரசின் நிதியின்மூலம் எண்ணற்ற பொருளாதாரத் திட்டங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன. 250 பெண்களுக்கு விமானப் பணிப்பெண் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. 150 ஆண்களுக்கு இவ்விமானப் பணியாளர் பயிற்சி தொடர்ந்து வழங்கியது மட்டுமல்லாமல் கடந்த ஆண்டு, முதன் முதலாக 10 நபர்களுக்கு தலா 12 இலட்சம் வீதம் 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், விமான ஓட்டுநர் பயிற்சி வழங்கத் திட்டம் வகுக்கப்பட்டு, சிறப்புடன் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன், மாண்புமிகு உறுப்பினர் தேன்மொழி அவர்களுக்கு.

2009 ஜூலை 7] [திருமதி ஆ. தமிழரசி]

மேலும், தமிழ்நாட்டில் பட்டயக் கணக்கர் (C.A), செலவுக் கணக்கர் (C.W.A.) போன்ற படிப்புகளில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர், மதம் மாறிய ஆதி திராவிடர்கள் சேர்வது மிகவும் குறைவாக இருப்பதை அறிந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், 25 நபர்களுக்கு 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்ததன்மூலம் இப்பயிற்சி நல்ல முறையில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

முற்பகல் 10–55

பட்டப் படிப்பு மற்றும் பொறியியல் படித்த இளைஞர்களுக்கு வெளிநாட்டில் உயர் கல்வி படிப்பதற்கு GRE, TOFEL, GMAT, CAT போன்ற தேர்வுகளில் தேர்ச்சி பெறுவதற்கு ஆதி திராவிட மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிட மற்றும் பழங்குடியினர்களுக்கு 200 இளைஞர்களுக்கு 40 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து, இதன்மூலம் அப்பயிற்சி சிறப்பாக வழங்கப்பட்டு வருகிறது. மேலும் 100 நபர்களுக்கு 25 இலட்சம் ரூபாய் செலவில் B.Ed. பயிற்சி வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளதன்பேரில் அப்பயிற்சியும் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

பல அரசுகளின் நிழல்களை தனது குடையின்கீழ் கொண்டு வரும் வலிமைபெற்றவர்கள் உழவர்கள் என்பதை நன்கு அறிந்த நமது முதல்வர் அவர்கள், உழவர்கள் படும் இன்னல்களைக் கண்டு, முதல்வராகப் பதவியேற்றவுடன் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கடன்கள் அனைத்தையும் தள்ளுபடி செய்தார். அதேபோல் தாட்கோ நிறுவனத்தின்மூலம் விவசாய நோக்கத்திற்காக ஆதி திராவிட விவசாயிகள் வாங்கிய கடன் 4 கோடியே 7 இலட்சம் ரூபாயைத் தள்ளுபடி செய்துள்ளார்கள். இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்தினை அறிமுகப்படுத்தியதன்மூலமாக அனைத்து விவசாயப் பெருங்குடி மக்களும் எல்லையில்லா மகிழ்ச்சியடைந்து விவசாயிகளிடம் 10,000 ரூபாய் பெற்றுக்கொண்டு மின் இணைப்புகளை விரைந்து வழங்குதல், Fast Track Power Supply திட்டத்தினை தமிழ்நாடு மின்சார வாரியம் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தில் ஆதி திராவிட மற்றும் பழங்குடியின விவசாயிகள் பெரும்பாலோர் 10,000 ரூபாய் செலுத்த இயலாத நிலையில் இருப்பதை அறிந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் நபர் ஒருவருக்கு ரூபாய் 10,000 வீதம் ஆண்டொன்றுக்கு 10,000 நபர்களுக்கு 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு தாட்கோமூலம்

செலுத்தி அந்த மின் இணைப்பை விரைவில் பெறவுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மக்களில் பெரும்பான்மையோர் சிறந்த தொழில் முனைவர்களாக வரக்கூடிய தகுதிகள் இருந்தும் பொருளாதார வசதியின்மையால் தொழில் தொடங்க இயலாத நிலையில் இருப்பதைக் கண்டதனால், முதற்கட்டமாக 5 நபர்களை தொழிலதிபர்களாக ஆக்கும் முயற்சியில் மூலதன மானியமாக அரசின் சார்பில் 50 இலட்சம் அல்லது 10 சதவிகிதம், இதில் எது குறைவோ, அதை மானியமாக வழங்கி, மீதத் தொகையினை வங்கி அல்லது நிதி நிறுவனங்கள் மூலமாகக் கடனாகப் பெற்று தொழில் தொடங்குவதற்கு ஆணையிட்டதன்பேரில் 5 நபர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

பல்வேறு அறிவிப்புகள் இருந்தாலும், ஒரு சிலவற்றை மட்டும் கூறி முடித்துக்கொள்கின்றேன். துப்புரவுப் பணியாளர் நல வாரியத்தின் மூலமாக 1 கோடி ரூபாயைத் தலைவர் கலைஞர் அவர்கள் நிதியை ஒதுக்கித் தந்து அதன்மூலமாக 12 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் நிதியாக வழங்கப்பட்டுள்ளது. அதேபோல் பழங்குடியினர் நல வாரியத்திற்கு 1 கோடி ரூபாய் நிதியாக வழங்கியுள்ளார்கள். அதன்மூலம் 106 பயனாளிகளுக்கு 1 இலட்சத்து 75 ஆயிரத்து 780 ரூபாய் நிதி உதவியாக வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், இந்த வாரியத்தை துரிதப்படுத்துவதற்கான நடவடிக்கை துறையின்மூலமாக எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

புதிய அறிவிப்புகள். 41 புதிய அறிவிப்புகளை நான் கையில் வைத்திருக்கின்றேன். இந்தப் புதிய அறிவிப்புகளில் ஒரு சிலவற்றை இம்மாமன்றத்தில் தெரிவித்து, மற்றவற்றை@ நான் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று மிகத் தாழ்மையோடு கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். இங்கே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ரவிக்குமார் அவர்கள் பேசும்போதுகூட குறிப்பிட்டுச் சொன்னார்கள். நீண்ட நாள் கோரிக்கையான புதிரை வண்ணான்—பொருளாதார, சமூக கல்வி நிலைகளில் மிகவும் அடித்தளத்தில் இருந்துவரும் புதிரை வண்ணான்

@ 831 முதல் 839 வரையிலான பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

இனத்தைச் சார்ந்த மக்கள் மிகக் குறைவான எண்ணிக்கையில் இருந்தாலும், அவர்கள் நலனில் அக்கறைகொண்ட மாண்புமிகு முதல்வர், முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள், அவர்களுக்கென்று தனியே ஒரு நல வாரியத்தை அமைத்து, மற்ற நல வாரிய உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் அனைத்துச் சலுகைகளும், இந்த நல வாரியத்தில் வழங்கப்படும் என்கிற அறிவிப்பை வெளியிட ஆணையிட்டுள்ளார்கள் என்பதைப் பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், விடுதிகளுக்கு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி. இல்லந்தோறும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கி வரும் எங்கள் இணையிலா மாண்புமிகு துணை முதல்வர் அவர்களின் பரிந்துரைக்கிணங்க, ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மாணவர்களின் அறிவுத்திறனை மேம்படுத்த ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை நடத்தும் அனைத்து விடுதிகளுக்கும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இவ்வாண்டில் வழங்கப்படும் என்று முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

ஒரு சிறு நிகழ்வைக் கூறி முடித்துக்கொள்கின்றேன். சட்டப் பேரவையில் விடுதிகளுக்கான வண்ணத் தொலைக்காட்சிப்பெட்டி வழங்கப்படுமா என்று வினா எழுகின்றபொழுது, என்னுடைய பதிலில், மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் கவனத்திற்கு எடுத்துச் சென்று, இந்த வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கப்படும் என்று வினாவிற்கு பதில் சொல்லியிருந்தேன். துணை முதல்வர் அவர்களிடம், அதாவது வியாழக்கிழமை காலை 10 மணிக்கு அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்றேன். விடுதிகளுக்கு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கப்பட வேண்டுமென்று அவருடைய கவனத்திற்குச் சென்றவுடன், உடனடியாக முதல்வர் அவர்களிடம் பேசி, அந்த நிதியைப் பெற்றுத் தந்தார்கள். நான் கேட்டது 10 மணிக்கு. துணை முதல்வர் அவர்கள் 10½–க்கெல்லாம் அந்த ஆணையைப் பெற்றுத் தந்தார்கள். எங்களுடைய துணை முதல்வர் அவர்களுக்கு இந்தத் துறையின் சார்பாகவும், விடுதி மாணவர்கள் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் ஒரே ஒரு கருத்தை மட்டும் வலியுறுத்தினார்கள். இதற்கு எவ்வளவு நிதியாகும் என்று அவர்கள் கேட்கவில்லை. ஆனால் மாணவர்கள் கல்வி பாதித்துவிடக்கூடாது, அந்த மாணவர்கள் சிறந்த கல்வியைப் பெற வேண்டுமென்று மட்டும் வலியுறுத்தினார்கள். அதற்கு எங்களது நெஞ்சார்ந்த நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

அடுத்த ஒரு அறிவிப்பு. 6 ஆதி திராவிடர் நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 6 ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், 2 அரசு உண்டி உறைவிட பழங்குடியினர் நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 2 அரசு உண்டி உறைவிட பழங்குடியினர் உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடு)

முற்பகல் 11–00

நான்கு அறிவிப்புகளை மட்டும் சொல்லி என் உரையை முடித்துக்கொள்கிறேன். மாநில அரசின் சிறப்பு ஒதுக்கீட்டின்கீழ் 25 கோடி ரூபாயில் பல்வேறு பயிற்சிகள் வழங்கப்படும். அதில், இதழியல் பயிற்சி, அதாவது வளர்ந்து வரும் பத்திரிகை மற்றும் இதழ்களில் தொழில் சார்ந்த இதழாளர்களின் தேவை அதிகரித்து வருகிறது. மேலும், இவ்விதழாளர்கள் அச்சு ஊடகம், தொலைக்காட்சி ஊடகம், வானொலிப் பகுதி போன்ற தொழில்நுட்பம் மிகுந்த துறைகளில் கை தேர்ந்த வல்லுநர்களாக வேலை பார்க்க வாய்ப்புள்ளதால், முதன்முதலாக 10 ஆதி திராவிட மற்றும் பழங்குடியின நபர்களுக்கு 20 இலட்சம் ரூபாய் செலவில் இப்பயிற்சி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடு)

இன்னும் இரண்டே இரண்டு அறிவிப்புகள் மட்டும்தான். விடுதிகளில் சுகாதாரச் சீர்கேட்டினைத் தவிர்க்கும்பொருட்டு இவ்வரசானது, தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசானது, ஆதி திராவிட மற்றும் பழங்குடியின நல மாணவர்கள் பயிலும் பள்ளிகளிலும், தங்கும் விடுதிகளிலும் சுத்தமான குடிநீரை வழங்க முடிவு செய்து, முதற்கட்டமாக 130 ஆதி திராவிடர் பள்ளிகளுக்கும், 141 ஆதி திராவிடர் நல விடுதிகளுக்கும் குடிநீரை சுத்தப்படுத்தும் கருவிகள் 36 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. தங்கமணி அவர்களும் உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையின்போது ஒரு குறையைச் சுட்டிக் காண்பித்தார்கள். திருமதி தேன்மொழி அவர்களும் பேசும்போதுகூட இங்கே அதைச் சுட்டிக்காண்பித்தார்கள். மதுரை

மாவட்டம், பந்தயத் திடலில் உள்ள விடுதியில் மாணவர்கள் தண்ணீர் வாங்குவதற்கு, மாணவர்களே 400 ரூபாய் செலுத்தி தண்ணீரைப் பெறுவதாக இங்கே ஒரு தவறான தகவலைச் சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். அந்த மாதிரி எந்த வகையிலும் மாணவர்கள் தங்களுடைய ரூபாயைக் கொடுத்து தண்ணீர் வாங்குவதில்லை. அரசின்மூலமாகத்தான் தண்ணீர் வழங்கப்படுகிறது, லாரிகளின்மூலமாக. அதுவும், ஏப்ரல், மே மாதங்களில் மட்டுமே அந்த லாரிகளின் மூலம் தண்ணீர் வழங்கப்படுகிறது. மாநகராட்சியின்மூலமாக pipeline போடப்பட்டு, இன்றைக்கு அந்த மாணவர்களுக்குத் தண்ணீர் வசதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

கலைஞரின் கவிதை மழையில் நான் படித்த ஒன்றைக் கூறி என் உரையை முடித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடு) ஒன்றிரண்டு வரிகளை மட்டும் சொல்லி, என் உரையை முடித்துக்கொள்கின்றேன்.

கலைஞரின் கவிதை மழையில்,

'தக்காது இந்த ஆட்சி! தலைகீழாய்த்
தடதடவெனக் கவிழ்ந்து விடு மென்று
நாள் நட்சத்திரம் பார்த்துக்கொண்டு
நாற்காலிக் கனவுகளில் மிதந்திருந்தோர்களுக்கு
எதற்காக இந்த ஆட்சி கவிழவேண்டும்
இடத்துக்காக பேசுகின்ற குதர்க்க மனிதர்
என்றேனும் சிந்தித்துப் பார்த்தனரா?
இம் என்றவுடன் மிகவும் பிற்படுத்தப்பட்டமக்களுக்கு
இருபது சதவீதம் ஒதுக்கியது கழகத்தின் ஆட்சி!
இல்லையோ மணவாழ்வு என ஏங்கிய மங்கையர்க்கு
இல்வாழ்வு விளக்கேற்ற இருபதாயிரம் ஈவது இந்த ஆட்சி!
இலவச மின்சாரம் விவசாயிகளுக்கு எனும் கோரிக்கை
இனிதாக நிறைவேற்றியது எந்த ஆட்சி?
கண்களுக்கு ஒளியூட்ட சிகிச்சை முகாம்—நம்
பெண்களுக்கு சொத்துரிமை வழங்கியது இந்த ஆட்சி!
ஆதி திராவிடர் மக்களுக்குச் சிறப்பு உட்கூறு திட்டத்திற்கு
நிதி யொதுக்கியதும் கலைஞர் ஆட்சி!

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

அருந்ததியர் மக்களுக்கு 3% இட ஒதுக்கீடு
சட்டமாகக் கொண்டு வந்தது கழகத்தின் ஆட்சி!
(மேசையைத் தட்டும் ஒலி)
புதிரை வண்ணான் மக்களுக்கு நல வாரியம்
அமைத்துக் கொடுத்ததும் இந்த ஆட்சி!
மத்திய அரசு அலுவலர் ஊதியத்திற் கீடாக
மாநில அரசு ஊழியர்களுக்கு ஊதியம் வகுத்தது
கலைஞரின் ஆட்சி!
6 ஆண்டுகளுக்கு முன்பு இதே வாரத்தில் அரசு
ஊழியர்களை வேலை நீக்கம் செய்து, நிராயுதப்படுத்தி
கசப்பு மருந்து கொடுத்தது கடந்த கால ஆட்சி!
அரசு ஊழியர்களின் நெஞ்சில் தைத்த முள்ளை
எடுத்து எறிந்தது கலைஞரின் இதயம்!
பல இலட்சம் அரசு ஊழியர்களை வேலை இழக்கச்
செய்த இடத்தில்
பல இலட்சம் அரசு ஊழியர்களைப் பணியில்
அமர்த்தியது கலைஞரின் ஆட்சி!
எந்த நிலையிலும் இந்த உயிர்
செந்தமிழர் நாட்டின் மேன்மைக்கே
என்றுரைத்த தமிழினத்தின் தலைவர்
டாக்டர் கலைஞரின் வரலாற்றுப்
புத்தகத்தில் எமக்கும் ஒரு வாய்ப்பைத் தந்த

முதல்வர் அவர்களுக்கு அவர் பாதங்களில் என் நன்றியைக் கூறி, (மேசையைத் தட்டும் ஒலி) இம்மானியக் கோரிக்கை விவாதத்தில் பங்குபெற்ற மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும், மானியக் கோரிக்கைக்குத் தேவையான தகவல்களைத் தந்து உதவிய ஆதி திராவிடர் நலத் துறைச் செயலாளர், ஆதி திராவிடர் நலத் துறை ஆணையர், பழங்குடியினர் நலத் துறை இயக்குநர், தாட்கோ மேலாண்மை இயக்குநர், ஆதி திராவிடர் நலத் துறையின் அதிகாரிகள் அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், தலைமைச் செயலாளர், நிதித் துறைச் செயலாளர் ஆகியோருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கை எண் 4–ன்மீது, மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் 314 வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்துள்ளார்கள். அந்தக் கோரிக்கைகளையும், வெட்டுத் தீர்மானங்களையும் நான் படித்துப் பார்த்தேன். இந்த மானியக் கோரிக்கை தொடர்பாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் வழங்கிய ஆலோசனைகளுக்கும், கருத்துருக்களுக்கும் வேண்டிய விளக்கங்கள் அளித்துள்ளேன் எனக் கருதுகிறேன். உறுப்பினர்கள் தங்கள் வெட்டுத் தீர்மானங்களில் சுட்டிக்காட்டிய கருத்துகளை, திட்டங்களை நன்கு பரிசீலனை செய்து, மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களின் அரசு உரிய வகையில் நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, வெட்டுத் தீர்மானங்களை அளித்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அவற்றைத் திரும்பப் பெற்று, இம்மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமெனக் கேட்டுக்கொண்டு, விடைபெற்றுக்கொள்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் இரண்டு மானியங்களை நிறைவேற்ற வேண்டும். (குறுக்கீடு) சரி, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் என்னவென்று சொல்லுங்கள்.

முற்பகல் 11–05

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஆண்டும் உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளில் படிக்கக்கூடிய ஆதி திராவிட மாணவர்களின் எண்ணிக்கை கூடிக்கொண்டே போகின்றது. ஒவ்வொரு ஆண்டும் புதிய விடுதிகளுக்கான அறிவிப்பு இருக்கும். ஆதி திராவிட மாணவ, மாணவிகளுக்கான தேவைகள் அதிகம் இருக்கின்ற காரணத்தினால், பல்வேறு பகுதிகளிலிருந்து புதிய மாணவ, மாணவியர்களுக்கான கோரிக்கைகள் இருக்கும். இந்த வருடம் மாண்புமிகு ஆதி திராவிட நலத் துறை அமைச்சர் அவர்களிடத்திலிருந்து புதிய விடுதிகளுக்கான அறிவிப்புகள் ஒன்றும் இல்லை. கடந்த ஆண்டு 25 விடுதிகள் தந்தீர்கள் என்று நான் எண்ணுகிறேன். இந்த ஆண்டு 10 விடுதிகளாவது தருவதற்கு தாங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைத்து, பெற்றுத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் அமைச்சரவையில் இடம் பெற்று, பொது வாழ்க்கையில் தூய்மையாக, எளிமையாக, நேர்மையாகப் பணியாற்றி, பொது வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்தவர் அமரர் கக்கன் அவர்கள். அவருக்கு நூற்றாண்டு விழா; அவரைப் பற்றியெல்லாம் பேசிக்கொண்டிருக்கின்றோம். ஆகவே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த நூற்றாண்டு விழாவில், அவருக்கு அரசே நூற்றாண்டு விழா எடுப்பதோடு, மணிமண்டபம் கட்டித் தர வேண்டும் என்று எதிர்பார்த்த அறிவிப்புக்கு—(குறுக்கீடு) நான் கொஞ்சம் தாமதமாக வந்தேன்—ஆகவே, பொறுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்தச் சிறப்புக் கூறு திட்டத்தின் அடிப்படையில் மத்திய அரசினால் வழங்கக்கூடிய நிதி, மாநில அரசினால் முழுமையாகப் பயன்படுத்தப்படாமல் திருப்பி அனுப்பப்படுகின்றது என்ற செய்தி பரவலாக வந்துகொண்டிருக்கின்றது. ஆகவே, சிறப்புக் கூறு திட்டத்தினுடைய தொகை முழுமையாகப் பயன்படுத்தப்படுகின்றதா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா. (குறுக்கீடு) திரு. கருப்பசாமி, பொறுங்கள்.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் சரவெடிபோல் தொடர்ந்து படபடபடவென்று அவர்களுடைய பதிலுரையை அளித்திருக்கின்றார்கள். ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் என்னென்ன கருத்துகளை வைத்தார்கள், என்ன அவர்கள் கேள்வி கேட்டார்கள் என்பதைக் குறித்து வைத்து, மிகச் சிறந்த முறையிலே அவர்கள் ஆற்றிய அந்த பதிலுரையை இந்த மாமன்றத்தில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் பாராட்டுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார்.

திரு. து. ரவிக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரவாணிகள் நல வாரியம், வீட்டுப் பணியாளர்கள் நல வாரியம், நரிக்குறவர்களுக்கு நல வாரியம் என்ற வரிசையிலே, இன்றைக்கு புதிரை வண்ணார்கள் இன மக்களுக்காக நல வாரியம் அமைத்துத் தர வேண்டும் என்று நான் எழுப்பிய கோரிக்கையை ஏற்று, அந்த மக்களுக்கு நல வாரியம் அமைத்து அறிவிப்புச் செய்த மாண்புமிகு முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுக்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பிலே நன்றி சொல்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சொ. கருப்பசாமி.

***திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் விளிம்புத் தொகை கொடுக்கப்படவில்லை என்ற தவறான தகவலைத் தெரியப்படுத்தினார்கள். மத்திய அரசு கொடுக்க வேண்டிய அந்த விளிம்புத் தொகையினை 2004 ஆம் ஆண்டிலிருந்து கொடுக்கவில்லை. ஆனால், மாநில அரசு கொடுக்க வேண்டிய தொகையை முழுவதுமாக ஆதி திராவிட மக்களுக்கு வழங்கியது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியே தவிர**என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கடைசியாகச் சொன்னது அவைக் குறிப்பில் ஏறாது. மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். தேன்மொழி.

திருமதி எஸ். தேன்மொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆதி திராவிட நலத் துறை அமைச்சர் அவர்கள், விடுதிகளுக்கெல்லாம் போர்வை தரப்படுகிறது என்று சொன்னார்கள். என்னுடைய தொகுதியில் உள்ள மாணவர் விடுதிகளில் போர்வைகள் தரப்படவில்லை. இதனை நான் நேரடியாகக் கேட்டு வந்துதான் இந்த அவையில் சொல்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாமல், சமத்துவபுரத்தில் சாதிச் சண்டை வரவில்லை என்று மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். (குறுக்கீடு) விருதுநகர் மாவட்டத்தில், காரியாப்பட்டி ஒன்றியத்தில், கல்லுக்குறிச்சி என்ற ஊரில் இரண்டு நாட்களுக்கு முன் சமத்துவபுரத்தில் சாதிச் சண்டை வந்துள்ளது. அது மட்டுமல்ல, சோழவந்தான் தொகுதியில்,

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

வாடிப்பட்டி பக்கத்தில் குற்றிலாடம்பட்டி என்ற ஊரில் உள்ள சமத்துவபுரத்தில் சாதிச் சண்டை வந்துள்ளது. இதனை நான் நேரடியாகக் கேட்டு வந்த பின்னர்தான் இந்த அவையில் குறிப்பிடுகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு மட்டுமல்லாமல், . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடக்கூடிய கல்லுக்குறிச்சி என்னுடைய கிராமத்திலிருந்து நான்கு கிலோ மீட்டர் தள்ளியிருக்கக்கூடிய ஒரு ஊர். நான் நேற்று இரவுகூட அங்கிருந்துதான் வந்தேன். ஆனால், அப்படி ஒரு சாதிச் சண்டை நடந்ததுபோல் நான் எந்த இடத்திலும் கேள்விப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பக்கத்து வீட்டுக்காரர்களுடன் சண்டை போட்டதைக்கூட நீங்கள் சாதிச் சண்டை என்று சொல்வது இந்த அவையினுடைய மரபுகளுக்கு மிகவும் முரணானது என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு ஊரில் பக்கத்து, பக்கத்து வீட்டில் உள்ள இரண்டு பேர்களிடையே வாய்த் தகராறு ஏற்பட்டதையெல்லாம் சாதிச் சண்டை அளவுக்கு நீங்கள் இந்த அவையில் சொல்வது மிகவும் வேடிக்கையாகவும், வினோதமாகவும் இருக்கிறது. அப்படிப்பட்ட சம்பவங்கள் எங்கும் நடைபெறவில்லை என்பதை நான் இங்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

முற்பகல் 11–10

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே பேரவையில் ஆதி திராவிட மாணவ, மாணவிகளுக்கு காலையிலே சிற்றுண்டி வழங்க வேண்டும்; அரிசி சாதம்தான் வழங்குகிறார்கள் என்ற கோரிக்கையை வைத்தேன். தமிழக வரலாற்றிலேயே முதன்முதலாக ஆதி திராவிட மாணவ, மாணவிகளுக்கு காலையில் சிற்றுண்டி வழங்கிய ஒரே முதலமைச்சர் நம்முடைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் ஐயா என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், இந்தியாவிலேயே ஆதி திராவிட மக்களுக்காக அயராது உழைத்து, அவர்களுடைய வாழ்க்கை உயர்வதற்குப் பாடுபடுகின்ற ஒரே முதலமைச்சர் நம்முடைய டாக்டர் கலைஞர் ஐயா என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

மானியக் கோரிக்கை எண் 4—ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை. 3—7—2009 அன்று மாண்புமிகு உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறுகின்றனவா என அறிய விரும்புகின்றேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகின்றன.

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.780,68,13,000/—, மூலதனக் கணக்கில் ரூ.91,67,71,000/— மற்றும் கடன் கணக்கில் ரூ.3,44,000/— ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

(ஆ) கோரிக்கை எண் 29—சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2009—2010 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 29—சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை), மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.73,88,01,000/–, மூலதனக் கணக்கில் ரூ.24,71,57,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 309, திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,88,01,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,71,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7090, திரு. அருள் அன்பரசு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7128, திரு. சு. சிவராஜ்.

திரு. சு. சிவராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,88,01,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,71,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7527, திரு. ஆர்.எம். பழனிசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7533, திரு. மா. தண்டபாணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8154, திரு. விடியல் எஸ். சேகர், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1605, திரு. ஆர். வைத்திலிங்கம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1736, திரு. டி. ஜெயக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1798, திரு. பெ. மோகன்.

திரு. பெ. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,88,01,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,71,57,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7119, திரு. சி. சண்முகவேலு.

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,88,01,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,71,57,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7509, திரு. கே.எஸ். விஜயகுமார்.

திரு. கே.எஸ். விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,88,01,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,71,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7514, திரு. ஞா. செந்தமிழன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7561, திரு. ஆர். சின்னசாமி.

திரு. ஆர். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,88,01,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,71,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8141, திரு. எல். ரவிச்சந்திரன்.

திரு. எல். ரவிச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,88,01,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,71,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6528, திரு. பெ. கண்ணன்.

திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,88,01,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,71,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7076, திரு. தி.க. ராஜா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7109, திரு. மு.க. பெரியசாமி.

திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,88,01,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,71,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7547, திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,88,01,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,71,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7577, திரு. த.அ. மேகநாதன்.

திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,88,01,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,71,57,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7597, திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,88,01,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,71,57,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8127, திரு. கோ. எதிரொலி மணியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8145, திரு. டி. மூர்த்தி.

திரு. டி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,88,01,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,71,57,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8147, திரு. கி. ஆறுமுகம்.

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,88,01,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,71,57,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8162, திரு. கே.எல். இளவழகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7094, திரு. சி. கோவிந்தசாமி.

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,88,01,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,71,57,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7525, திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,88,01,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,71,57,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8153, திரு. எஸ். இராசசேகரன்.

திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,88,01,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,71,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8184, திரு. டி. இராமச்சந்திரன்.

திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,88,01,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,71,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1916, திரு. ஆர்.டி. கணேசன்.

திரு. ஆர்.டி. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தேனி மாவட்டம், சுருளி அருவி, சின்ன சுருளி அருவி, கௌமாரியம்மன் திருக்கோயில், வீரபாண்டி, சனீஸ்வரன் கோவில், குச்சனூர் ஆகிய பகுதிகளைச் சுற்றுலாத் துறையின் மூலம் மேம்பாடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,88,01,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,71,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6525, திரு. கே. உலகநாதன்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்துறைப்பூண்டி தொகுதி, ஆதிரெங்கம் ஸ்ரீரெங்கநாதர்

திருக்கோயிலைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,88,01,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,71,57,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6531, திரு. தி. இராமசாமி.

திரு. தி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவில்லிபுத்தூர் தொகுதி, தாணிப்பாறையில் ஓடும் ஆற்றின் குறுக்கே, ஆங்காங்கு தடுப்பணை கட்டி மலையைக் குளிர்வித்து, சுற்றுலாப் பயணிகள் வருகையை அதிகரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,88,01,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,71,57,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6534, திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7069, திரு. தா. மலரவன்.

திரு. தா. மலரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவைக் குற்றாலத்தை நவீனமயமாக்கி, உல்லாசப் பயணிகளுக்குச் சிறப்பாக வசதி செய்து தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,88,01,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,71,57,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7070, திருமதி செல்வி ராமஜெயம்.

திருமதி செல்வி ராமஜெயம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிள்ளை, பிச்சாவரம் சுற்றுலாப் பகுதியில் படகு சவாரி செய்யப் போதுமான படகுகள் இல்லாமல் உள்ளது. குறிப்பாக, சனி, ஞாயிறு போன்ற விடுமுறை நாட்களில் சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வெளியூரில் இருந்து வருகிறார்கள். அந்தச் சமயத்தில் படகுகள் போதுமானதாக இல்லை. ஆதலால் மோட்டார் பொருத்திய சிறிய விசைப் படகுகளை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,88,01,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,71,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7072, திரு. என்.ஆர். ரெங்கராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7073, திரு. எஸ். ஜெயபால், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7074, திரு. இ. மகேந்திரன்.

திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, திடியனில் உள்ள அருள்மிகு கைலாசநாதர் பெரியநாயகி கோயிலுக்கு வாரந்தோறும் வியாழக்கிழமை சிறப்பு வழிபாடு நடைபெறுவதால் பக்தர்கள் கூட்டம் அலைமோதுகிறபடியால், சுற்றுலாத்தலமாக்குவதற்கு உள்ள அனைத்து அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,88,01,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,71,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7086, திரு. ந. கணபதி.

திரு. ந. கணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதியில் ஆரோவில் பகுதியை சுற்றுலா மையமாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,88,01,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,71,57,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7088, திரு. இரா. குமரகுரு.

திரு. இரா. குமரகுரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநாவலூர் தொகுதி, கூவாகம், கூத்தாண்டவர் கோயிலை சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,88,01,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,71,57,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7089, டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7503, திருமதி ஜி. லதா.

திருமதி ஜி. லதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குடியாத்தம் தொகுதியில் உள்ள மோர்தானா அணைக்கட்டுப் பகுதியைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,88,01,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,71,57,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7508, திருமதி பி. பத்மாவதி.

திருமதி பி. பத்மாவதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நன்னிலம் தொகுதி, திருமருகல் ஒன்றியம், பனங்குடி ஏரியை நவீனப்படுத்தி சுற்றுலாத் தலம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,88,01,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,71,57,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7510, திரு. ம. குணசேகரன்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மானாமதுரை தொகுதி, இடைக்காட்டூர் சுற்றுலாத் தலத்தைச் சீரமைத்து நவீனப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,88,01,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,71,57,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7515, திரு. ஆர்.கே. பாரதி மோகன்.

திரு. ஆர்.கே. பாரதி மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவிடைமருதூர் மகாலிங்க சுவாமி திருக்கோயில் மிகவும் கலைநுட்பத்தோடு அமைந்துள்ள கோயில்; அங்கு வரும்

பக்தர்கள் நலன் கருதி, சுற்றுலாப் பூங்கா அமைப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,88,01,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,71,57,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7516, திரு. ஞா. ஜாண் ஜோசப்.

திரு. ஞா. ஜாண் ஜோசப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விளவங்கோடு தொகுதி, சிற்றார் அணை, சிவலோகம் பகுதியில் படகு சவாரி துவக்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,88,01,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,71,57,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7520, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலையை சுற்றுலா நகராக அறிவித்து, பக்தர்களின் வசதியை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,88,01,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,71,57,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7523, திரு. மா. சந்திரகாசி.

திரு. மா. சந்திரகாசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரம்பலூர் மாவட்டம், வரகூர் தொகுதி, ஆடுதுறை ஈஸ்வரன் கோயிலைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,88,01,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,71,57,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7524, செல்வி கே. பாலபாரதி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7536, திரு. பி. பலராமன்.

முற்பகல் 11—15

திரு. பி. பலராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதியில் உள்ள பழவேற்காடு பகுதியைச் சுற்றுலாத் தலமாக மாற்றி, அடிப்படையான அனைத்து வசதிகளையும் செய்து தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,88,01,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,71,57,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7538, திரு. ப. டில்லி பாபு.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டம், அரூர் தொகுதி, தீர்த்தமலை தீர்த்தகிரீஸ்வரன் திருக்கோயிலுக்கு வெளி மாநில பக்தர்கள் பல்லாயிரக்கணக்கில் வருவதால், தீர்த்தமலையைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,88,01,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,71,57,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7543, டாக்டர் க. நெடுஞ்செழியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7554, திரு. செ.ம. வேலுசாமி.

திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவைக் குற்றாலம், திருநீர்மலை ஆகிய சுற்றுலாத் தலங்களைப் பயணிகள் பயன்பெறும் வகையில் விரிவுபடுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,88,01,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,71,57,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7559, திருமதி இளமதி சுப்பிரமணியன்.

திருமதி இளமதி சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வலங்கைமானில் பயணிகள் தங்கும் விடுதியிலுள்ள நெடுஞ்சாலைத் துறை அலுவலகத்தை அகற்றிவிட்டு, பயணிகள் தங்கும் விடுதியாக அமைத்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,88,01,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,71,57,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7566, திரு. எஸ். ராஜகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7567, திருமதி பெ. கமலாம்பாள்.

திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காஞ்சிபுரம் பகுதியில் நாட்டுப்புறக் கலைஞர்களுக்கான பயிற்சிப் பள்ளி தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,88,01,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,71,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7587, திருமதி ரா. லீமா றோஸ்.

திருமதி ரா. லீமா றோஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதி, திற்பரப்பு நீர்வீழ்ச்சியில் பூங்கா அமைத்து, சுற்றுப்புறத்தைச் சுகாதாரமாக சீர்செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,88,01,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,71,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7605, திரு. ந. சுப்ரமணியன்.

திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குளத்தூர் தொகுதி, கொடும்பாளூரில் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையில் உள்ள மூவர் கோயிலைப் புனரமைத்து, சுற்றுலாத் தலமாக்கிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,88,01,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,71,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7606, திரு. ஆர். சாமி.

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேலூர் தொகுதி, மேலூர் நகரிலுள்ள மகாத்மா காந்திஜி பூங்காவை மேம்படுத்திடவும், மேலூர் நகரில் சிறுவர் பூங்கா அமைத்திடவும் வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,88,01,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,71,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7612, திரு. ஓ.கே. சின்னராஜ்.

திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழர்களின் பழம்பெரும் பாரம்பரியக் கலையான தெருக்கூத்துக் கலையை மீண்டும் உயிர்ப்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,88,01,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,71,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8125, திருமதி எஸ். தேன்மொழி.

திருமதி எஸ். தேன்மொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; "நிலக்கோட்டை தொகுதி, பேரணையை சுற்றுலாத் தலமாக அறிவித்து, நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,88,01,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,71,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8126, திரு. என். நன்மாறன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8129, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம், செஞ்சி ராஜா தேசிங்கு உயிர் நீத்த இடத்தில் மணிமண்டபம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,88,01,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,71,57,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

வந்திருக்கிறார்கள். நமது மாண்புமிகு அமைச்சர் வீரபாண்டியார் அவர்களும் வந்திருந்தார்கள். மே மாதம் மட்டும் எங்கள் மாவட்டத்திற்கு ஏழு இலட்சத்திற்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் வந்திருந்தார்கள். ஒன்றை நான் இந்த நேரத்தில் சொல்ல விரும்புகிறேன். ஒரு பக்கம் மகிழ்ச்சியாக இருந்தாலும், மறு பக்கம் எங்கள் மக்கள் எவ்வளவு கஷ்டப்படுகின்றார்கள்; போக்குவரத்துக்கு எவ்வளவு தொல்லைபடுகின்றார்கள் என்பதைச் சொல்லவேண்டும். பேருந்துகளை நிறுத்துவதற்கும், கார்களை நிறுத்துவதற்கும் எவ்வளவு தொல்லைப்படுகின்றார்கள், நடமாடுவதற்கு, குடிதண்ணீருக்கு எவ்வளவு தொல்லைப்படுகின்றார்கள் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். எனவே உள்ளாட்சித் துறையைச் சார்ந்தவர்களும், நகராட்சியைச் சார்ந்தவர்களும், சுற்றுலாத் துறையைச் சார்ந்தவர்களும் எங்களுக்கு வேண்டிய வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று, எங்களுடைய மேலான எண்ணத்தை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

சுற்றுலாத் துறையைப் பொறுத்தவரை மிகவும் சிறப்பு மிக்க இடத்தில், மிக முக்கியமான பகுதியில், சேரிங் கிராஸ் என்ற இடத்தில் சுற்றுலா அலுவலகம் இருக்கிறது. அங்கே இப்போது இரண்டு அலுவலர்கள் மட்டுமே இருக்கிறார்கள். 10, 12, 20 ஆண்டுகளுக்கு முன்பு, 5, 6, 7 பேர்களாக இருந்த அந்த அலுவலகத்தில் இப்போது 2 பேர்கள் மட்டுமே இருக்கிறார்கள். அதிலும் Tourist அலுவலர் இல்லை. Incharge–ஆகத்தான் ஒருவர் இருந்துகொண்டிருக்கிறார். தயவுசெய்து அலுவலரைப் போடுங்கள். ஆங்கிலம் பேசத் தெரிந்தவர்களைப் போடுங்கள். வரக்கூடிய வெளிநாட்டுப் பயணிகளுக்கு ஊட்டியில் பார்க்கவேண்டிய இடங்களைப் பற்றி எடுத்துச் சொல்வதற்குத் தகுந்த ஆட்களை நீங்கள் நியமிக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களுக்கும், எனக்கும் நீங்காத ஒரு பனிப்போர் இருந்துகொண்டிருக்கிறது. 2006 ஆம் ஆண்டு முதன்முதலாக ஒரு cable car–ஐத் தாருங்கள் என்று நான் கேட்டபோது, உடனடியாக அனுமதிக்கப்படுகின்றது என்று ஆசை வார்த்தையைச் சொன்னார்கள். 2007 ஆம் ஆண்டும் சென்றுவிட்டது, 2008 ஆம் ஆண்டும் சென்றுவிட்டது, 2009 ஆம் ஆண்டும் சென்றுவிட்டது. இன்னும் ஊட்டிக்கு cable car திட்டம் வரவில்லை. தயவுசெய்து நீங்கள் அதை வேகப்படுத்தவேண்டும். ஏனென்றால், பொருளாதாரப் பிரச்சினையில், Finance–ல் நிலுவையில் இருப்பதை

நான் அறிவேன். நீங்கள் அதைத் துரிதப்படுத்தி, நிறைவேற்றித் தரவேண்டுமென்று இந்த நல்ல நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

வால்பாறையைப் பற்றி நமது கோவை தங்கம் அவர்கள் அடிக்கடிச் சொல்வார்கள். அங்கே ஓர் அருமையான சுற்றுலா மாளிகை அமைக்க அரசாணை பிறப்பிப்பதாக அறிகிறேன். அதை விரைந்து முடித்துத் தருமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, நேற்றையதினம் மரணமடைந்த எங்கள் அன்புத் தோழர் திரு. செல்வராஜ் அவர்கள் ஒரே ஒரு கோரிக்கையை என்னிடம் கொடுத்துவிட்டுப் போனார்கள். பேசவேண்டியவர் இன்று பேசவில்லை, படுத்துக்கொண்டிருக்கின்றார். அவர் சொன்னது என்னவென்றால், Amusement Park. சுற்றுலாவை வளர்க்கக்கூடிய Amusement Park–க்குக் கேளிக்கை வரியாக 10 சதவிகிதம் வசூலிக்கிறார்கள். அதை 5 சதவிகிதமாகக் குறைக்க வேண்டுமென்ற கோரிக்கையை அவர்கள் வைத்திருந்தார்கள். அதேபோல, மின் கட்டணம் 5 சதவிகிதம் வாங்குகிறார்கள். அதையும் குறைக்கவேண்டுமென்ற கோரிக்கையையும் அவர் வைத்திருந்தார். தயவுசெய்து அதைப் பற்றிப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறாக, சுற்றுலாப் பயணிகள் குவியக்கூடிய ஊட்டியில், ரோடுகள் நன்றாக அமைய வேண்டுமென்ற எண்ணத்தில், நம்முடைய கலைஞர் அவர்கள் அரசில் ரோடுகள் மிகச் சிறப்பான முறையில் உருவாக்கப்பட்டிருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அப்படி இருந்தாலும்கூட, சில பகுதிகளில் இன்னும் ரோடு வசதி சரியாக அமையவில்லை. அதையும் சீர்படுத்த வேண்டுமென்ற என்னுடைய ஆசையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரை, அந்தச் சிறிய மாவட்டத்திற்கு அழகான பேருந்துகளை, நூற்றுக்கும் மேற்பட்ட புதிய பேருந்துகளை மாண்புமிகு அமைச்சரவர்கள் அளித்திருக்கிறார்கள். இன்னும் பேருந்துகள் செல்லாத இடங்களுக்கும் பேருந்துகளை வழங்கி, சுற்றுலாப் பயணிகளை கவரக்கூடிய வகையிலும், அந்தப் பகுதி மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையிலும் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஊட்டியிலே வாகனங்களை நிறுத்துவது என்பது கடினமான காரியமாக இருக்கிறது. ஒரு மாத காலம் மக்கள் நடக்கக்கூட முடியாத நிலையில், எங்கு பார்த்தாலும் வாகனக் குவியலாக ஊட்டி இருந்துகொண்டிருக்கிறது. அவற்றை நிறுத்துவதற்கு இடத்தை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டேயிருக்கிறோம்.

அதேபோன்று சேரிங் கிராஸிலிருந்து A.T.C. வரை ஒரு கால்வாய் போய்க்கொண்டிருக்கிறது. அந்தக் கால்வாயின் மேல்புறம் ஒரு மேம்பாலம் கட்டினால், அந்த மேம்பாலத்தின் கீழே ஒரு மூடியைப் போட்டு, கால்வாய் செல்வதற்கு ஏற்பாடு செய்தால், கார்கள், ஆட்டோக்கள், சைக்கிள் போன்றவை அங்கே நிறுத்துவதற்கு வாய்ப்பாக இருக்கும். வாகன நெரிசலும் குறையும். மக்களும் நிம்மதியாக நடந்து செல்வதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதை இந்த நல்ல நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதேபோன்று, சென்னை மாநகரத்தில் அற்புதமான பாலங்களைக் கட்டி அழகான நகரமாக மாற்றியிருக்கக்கூடிய நீங்கள், நீலகிரி மாவட்டத்தில், மலைகளின் ராணியின்மீது கவனம் செலுத்தியாகவேண்டும். மலைகளின் ராணியை நீங்கள் சிறப்பிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல, நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 217–ன்படி, ஊட்டியில் கட்டடங்களைக் கட்ட மாநில அரசாங்கத்திடம்தான் அனுமதி பெறவேண்டுமென்றிருக்கிறது.

பிற்பகல் 12–05

எத்தனை அடி கட்டடம் கட்ட வேண்டும், எப்படி கட்ட வேண்டும் என்பதற்கான பிளான் அப்ரூவல் எல்லாம் மாநில அரசிடமிருந்து பெறவேண்டும் என்பதிலிருந்து ஊட்டி, சேலம், திண்டுக்கல் ஆகிய மூன்று மாவட்டங்களுக்கு மாநில அரசினுடைய அனுமதி பெறவேண்டியதில்லை, மாவட்ட நிர்வாகத்திடம் பெற்றாலேபோதும் என்ற ஒரு சலுகையை அவர்கள் அளித்திருக்கிறார்கள். டாக்டர் கலைஞர் அவர்களின் வாக்குறுதியின்படித் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. நகராட்சிகள் சட்டம் எண் 58, 1992, அத்தியாயம் 10ஏ விதிகளை மறு சீரமைக்கவேண்டும். அப்படி மறு சீரமைத்தால்தான், பல ஆண்டு காலம் வீடு கட்டி இருந்து வரும் மக்கள், பல ஆண்டு காலம் சொந்தம் என்று எண்ணி வியாபாரம் செய்து வரக்கூடிய மக்கள், அனுமதியில்லாமலே கட்டியிருக்கிறார்கள்; அவர்களுக்காக ஒரு சீரமைப்பு செய்து இந்தத் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்று இந்த நேரத்தில் என்னுடைய கோரிக்கையாக நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, Master Plan. ஒரு மிகப் பெரிய திட்டமாக ஊட்டியிலே சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்காக Master Plan திட்டம் இருக்கிறது.

அந்தத் திட்டத்தில் சில வரையறைகளை, சில விதிமுறைகளை நீங்கள் ஏற்படுத்தித் தரவேண்டும். 7 மீட்டருக்கு மேல் கட்டடங்கள் கட்டக்கூடாது, 21 அடிக்கு மேல் கட்டமுடியாது என்ற நிலையை ஏற்படுத்தியிருக்கிறீர்கள். நல்லதுதான் என்றாலும்கூட, ஒரு கார் நிறுத்துவதற்குக்கூட இடமில்லை. ஒரு சென்ட் பூமி இருக்கிறது, அரை சென்ட் பூமி இருக்கிறது என்றால்கூட, மேலே கட்டுவதற்கு முடியாத காரணத்தால் அவர்கள் கீழேயே அறைகளை விரிவுபடுத்திக்கொண்டிருக்கிறார்கள். இங்கே போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் . . .

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி): மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, குறுக்கீடுகளுக்குப் பொறுத்துக்கொள்ளவும். ஊட்டிக்கு முழுமைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அது பொது மக்களுடன் கலந்தாய்வு செய்து, உள்ளாட்சிப் பிரதிநிதிகளோடு கலந்தாய்வு செய்து, இறுதி செய்யப்படவிருக்கிறது. இருந்தாலும், தற்போதுள்ள நவீன யுக்தியைக் கையாண்டு G.I.S. என்கிற Geo Informative System என்று சொல்வார்கள்; அதன்மூலம், வான்வெளியிலிருந்து சாட்டிலைட் மூலமாக அந்த முழுமைத் திட்டத்தைத் தயாரித்தால், எதிர்காலத்தில் எந்தவித சிறு குறைபாடுகளும் இல்லாத அளவிற்குத் துல்லியமாகத் தயாரிக்கக்கூடிய வகையிலே அந்த முறை கையாளப்படுகிறது. பரிட்சார்த்தமாக, பெரம்பலூர் மாவட்டத்திலே இப்போது அதைச் செய்துகொண்டிருக்கிறோம். அடுத்து, நீலகிரியிலும் அதுபோல் செய்யலாமா என்கிற கருத்துரு பரிசீலனையில் இருக்கிறது. உங்களுடைய மாவட்ட அமைச்சரிடத்திலும் கலந்துகொண்டு நாங்கள் நடவடிக்கை எடுப்போம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி): மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

***திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்று 'தினமணி' பத்திரிகையிலே செய்திகளாக வந்திருக்கிறது; 'காந்தி மண்டபம் விளம்பரத் தூதரகமாக மாற்றப்பட்டது ஏன்?, என்ற கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது. காந்தி மண்டபத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் இருக்கின்றபோது சிறப்பு நிதியொதுக்கி பராமரிப்புச்

செய்தார்கள். இந்த நாடு விடுதலை பெறவேண்டுமென்பதற்காக அண்ணல் காந்தி அவர்கள் சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடத்தி இந்தியாவிற்கு மட்டுமல்ல உலகத்திற்கே வழிகாட்டியாகத் திகழ்ந்தார்கள். இங்கே 'ஏர்செல்' என்கிற நிறுவனத்திடமிருந்து காந்தி மண்டபத்திற்கு விடுதலையை எப்போது திருப்பித் தரப்போகிறீர்கள் என்பதை மட்டும் நான் இந்த நேரத்திலே தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மற்றொன்று, பத்திரிகையாளர்களெல்லாம் இறந்துபோனால் ரூபாய் 2 இலட்சம் கொடுக்கப்படும் என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் அறிவித்து தொடர்ந்து தவறாமல், இறந்தவுடனேயே பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்பட்டது. ஆனால் 16 பேருக்கு இன்றைக்கு வழங்காத நிலை இருக்கிறது. அதை இந்த அரசு உடனடியாக வழங்குமா என்பதையும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி): மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா அவர்கள் தினமணியிலே வந்த செய்தியைப் பற்றிச் சொன்னார்கள். அது எந்த அளவிற்கு உள்நோக்கத்தோடு எழுதப்பட்டிருக்கிறது என்பதைப் பார்த்தால் நீங்களே புரிந்துகொள்வீர்கள். ஆகவே, அந்தப் பத்திரிகையிலே வந்திருக்கின்ற செய்தி ஒரு உள்நோக்கம் கொண்டது. இன்றையதினம் அங்கே ரெட்டைமலை சீனிவாசனுக்காகச் செய்யப்படுகின்ற அந்தச் சிறப்புக்களை அவர்களாலே பொறுத்துக்கொள்ள முடியவில்லை. இதுதான் உண்மை.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி): மாண்புமிகு உறுப்பினர். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: நான் சொல்லிவிடுகிறேன். அதாவது, சென்ற ஆண்டே நான் பதிலுரை அளிக்கின்ற நேரத்திலே, அந்த அறிவிப்பிலே அதைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன். சென்னை, கிண்டியில் 18.42 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள காந்தி மண்டப வளாகத்தில் உள்ள திறந்த வெளியிடங்களை அரசுக்கு எந்தவிதச் செலவுமின்றி 'ஏர்செல்' நிறுவனத்தின் உதவியுடன் ரூபாய் 78.00 இலட்சம் செலவில் மரங்கள், மலர்ச் செடிகள், அலங்கார வளைவுகள், நீரூற்றுகள் மற்றும் நீர்நிலைகளை மேம்படுத்தி சுற்றுலாப் பயணிகளைக்

கவரும் வண்ணம் அழகுற அமைக்கப்படும் என்று சென்ற ஆண்டு அறிவித்தபோது, மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன் அவர்கள் அதை எதிர்க்கவில்லை.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி): மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்

***திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த நாட்டிற்கு சுதந்திரத்தை வாங்கித் தந்த அண்ணல் காந்தியடிகளுக்கே விளம்பரம்மூலமாக விடுதலை வாங்கித் தருகிறேன் என்று சொல்கிறீர்கள். அதைப் பராமரிப்பதற்கு அரசிடம் நிதியில்லையா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி): மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ்.

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வரலாற்றுப் புகழ் மிக்க நினைவிடங்களிலே இதைப்போன்ற பெரிய தொழில் நிறுவனங்கள், அவற்றைப் பராமரித்து அழகுபடுத்தும் செலவை ஏற்றுக்கொண்டு, அங்கே தங்களுடைய பெயர்களையும் அதிலே வைத்துக்கொள்வதிலெல்லாம் ஒன்றும் பெரிய ஆட்சேபணை இருக்கமுடியாது. ஆனால், காந்தி மண்டபம் என்கின்ற பலகையிலேயே 'ஏர்செல்' என்று எழுதி வைத்திருக்கிறார்கள். அதைக்கூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பார்த்து, அதை எடுக்கச் சொன்னால் நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன்.

பிற்பகல் 12-10

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி): மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. கோபாலன்.

திரு. போ. கோபாலன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய விளக்கத்திற்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த Master Plan-க்கு ஒரு வரைமுறைப்படுத்தும் one time regularisation வாய்ப்பைக் கொண்டு வர வேண்டுமென்ற என்னுடைய கோரிக்கையையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, ஊரகத் தொழில் துறை அமைச்சரிடம், நாங்கள் எங்களுடைய நஞ்சநாடு கிராமத்திற்கு ஒரு இண்ட்கோ தேயிலைத் தொழிற்சாலை வேண்டும் என்று கோரிக்கை வைத்திருந்தோம்.

அந்தக் கோரிக்கையை நிறைவேற்றி, அந்த வேலைகள் இன்று தொடங்கப்பட்டிருக்கின்றன. அதற்காக நான் மக்களின் சார்பாக நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்தலைமை)

அதேபோல் நீலகிரி மாவட்டத்தில் பேருந்துகள் மிக அதிகமான அளவுக்குக் கொடுக்கப்பட்டிருந்தாலும்கூட, வருங்காலத்தில் இன்னமும் புதிய பேருந்துகள் வேண்டும், அந்த மக்களுடைய எண்ணங்கள், சுற்றுலாப் பயணிகளுடைய வசதிகளைப் பொறுத்து, அதை ஏற்படுத்தித் தரவேண்டுமென்ற என்னுடைய எண்ணத்தையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமின்றி, அமைச்சர்கள் உதகை நகரத்திற்கு வரும்பொழுது, மத்திய அமைச்சர்கள் ஆனாலும், மாநில அமைச்சர்கள் ஆனாலும், முதலில் நான் சட்டமன்ற உறுப்பினராக இதற்கு முன்பு இருந்த காலத்தில் அவர்களுடைய நேர்முக உதவியாளர்கள் எங்களுக்கு அவர்களுடைய பயணத் திட்டத்தை அறிவிப்பார்கள். எப்பொழுது அமைச்சர் வருகிறார் என்பதெல்லாம் எங்களுக்குத் தெரிந்துகொள்ள வாய்ப்பிருந்தது. ஆனால் இப்பொழுது எந்த வாய்ப்பும் இல்லாமல், எந்தக் கடிதமும் வருவதில்லை. அமைச்சர்கள் வருகை எங்களுக்கு அறிவிக்கப்பட வேண்டும். அது மத்திய, மாநில அமைச்சர்களாக இருந்தாலும் கொடி போட்டுக் கொண்டு செல்கிறார்கள். M.L.A. பார்த்து, யாரோ கொடி போட்டுக் கொண்டு செல்கிறார்களே, யார் என்று கேட்கக்கூடிய ஒரு அவமானமான நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. அந்த வாய்ப்பை, அதாவது எல்லோரும் எப்போது வருகிறார்கள் என்பதைத் சொல்லியாக வேண்டும் என்று நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, சட்டமன்ற உறுப்பினர்கள் இரண்டு வழித்தடங்களைச் சொன்னால் பேருந்துகள் விடப்படும் என்று சொன்னார்கள். ஆனால் நான் இரண்டு வழித்தடங்களைச் சொல்லி இன்னமும் பேருந்துகள் விடப்படவில்லை. ஆகவே, தயவுசெய்து மணியெட்டி என்ற கிராமத்திலிருந்து கோவை மாவட்டத்திற்கு ஒரு பேருந்தை அளித்து, மக்களுடைய வசதிகளைப் பெருக்க வேண்டுமென்பதையும் நான் இந்த நல்ல நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

புதிரை வண்ணான்களுக்காகச் சொன்னார்கள். நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல நீலகிரியில் ஈழவ தீயா சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். கன்னியாகுமரியிலே, மற்ற இடங்களிலே அவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள் பட்டியலிலே சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அந்த ஈழவ தீயா மக்களையும் தாழ்த்தப்பட்டவர்கள் பட்டியலிலே சேர்க்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நீலகிரியில் தூதூர்மட்டம் என்ற ஒரு பகுதி இருக்கிறது. தோட்டத் தொழிலாளர்களுடைய குழந்தைகள் மட்டும்தான் அங்கே இருந்து ப்ளஸ் 2 படிக்க, ப்ளஸ் 1 படிக்க குன்னூருக்கு வந்தாக வேண்டும். 16 கிலோ மீட்டர் அவர்கள் நடந்து வந்தாக வேண்டும். அந்தத் தொழிலாளர்களுடைய குழந்தைகளுக்கு தூதூர்மட்டத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றித் தரவேண்டும் என்று நான் நம்முடைய பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, தூதூர்மட்டத்தில் 350 குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் கொடுத்து ஏறக்குறைய 6,7 ஆண்டுகள் ஆகிவிட்டன. 6,7 ஆண்டுகள் ஆன பிறகும் வீடுகளைக் கட்ட முடியாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். காரணம், அங்கே போவதற்கான பாதையே இல்லை. ரோடே இல்லை என்பதால் எப்படிக் கட்டுவது என்று அவர்கள் திணறிக்கொண்டிருக்கிறார்கள். மாவட்ட நிர்வாகத்திடம் சொல்லி, அந்தத் தூதூர்மட்டத்தில் 350 குடும்பங்களுக்கும் வீடுகளைக் கட்ட வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களுடைய பட்டாக்களை நீங்கள் இரத்துச் செய்யக் கூடாது என்பதையும் நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், நம்முடைய வனத் துறை அமைச்சர் அவர்கள் அந்த வனத் துறை எப்படி ஒரு கோடு போட்டிருக்கிறதோ, அந்தக் கோட்டைத் தாண்டமாட்டேன் என்று உற்சாக உறுதியோடு இருந்துகொண்டிருக்கிறார்கள். பாராட்டுகின்றேன். ஒரு அமைச்சருடைய கடமையைத்தான் அவர்கள் செய்துகொண்டிருக்கிறார்கள். ஆனால், அந்தச் சட்டங்கள் மனிதர்களை எப்படிப் பாதுகாக்கத் தவறிவிடுகின்றன என்பதை நீங்கள் எண்ணிப் பார்த்தாக வேண்டும். விலங்குகளை, புலிகளை,

சிங்கங்களை நாம் காப்பாற்றியாக வேண்டும், அழகைப் போற்றியாக வேண்டும். ஆனால் மக்களுக்கு எப்படி இடையூறுகள் ஏற்படுகின்றன என்பதை நீங்கள் எண்ணிப் பார்த்தாக வேண்டும். மக்கள் பெரியவர்களா, விலங்குகள் பெரியவர்களா என்று தயவுசெய்து நீங்கள் எண்ணிப் பாருங்கள். எங்களுக்கு ஒரு கருணை காட்டுங்கள். ஒரு ரோடு போட வேண்டுமென்று சொன்னால், அங்கே மக்கள் 1,000 பேர் இருந்துகொண்டிருக்கிறார்கள். இடையிலே வனத் துறையைச் சார்ந்த ஒரு 100 அடி, 200 அடி பாதை இருக்கிறது; ஒரு பூமி இருக்கிறது; அங்கே நீங்கள் ரோடு போடக்கூடாது என்று வனத் துறை தடுக்கிறது.

அதேபோல், ஒரு சின்ன foot path—நடைபாதை செல்கிறது. அந்த நடைபாதை ஒரு 500 மீட்டர் போட வேண்டும் என்று சொன்னால், 50 மீட்டர் வனத் துறைக்குச் சேர்ந்தது; நீங்கள் போடக் கூடாது என்ற நிலைமை இருக்கிறது. நாங்கள் நம்முடைய துணை முதல்வரிடம் பேசி இருக்கிறோம். நம்முடைய வனத் துறை அமைச்சர் அவர்களும், நம்முடைய மத்திய வனத் துறை அமைச்சர் அவர்களும், செயலாளர் அவர்களும் ஒன்று கூடி இதைப் பற்றிப் பேசி ஒரு நல்ல முடிவை நீங்கள் கொண்டு வர வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, இங்கே பத்திரிகையாளர்களைப் பற்றிப் பேசினார்கள். பத்திரிகையாளர்களுக்கு பென்ஷன் கொடுங்கள், பத்திரிகையாளர்களுக்குப் பேருந்து வசதிகள் கொடுங்கள். ஆனால் ஒன்று, மாவட்ட நிருபர்களுக்கு மட்டும் பேருந்துப் பயண இலவச பஸ் பாஸ் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். உள்ளூரிலே, ஊட்டியிலே ஒரு நிருபர், குன்னூரிலே ஒரு நிருபர், கோத்தகிரியிலே ஒரு நிருபர் இருந்தால், அவர்களுக்கும் பேருந்து பாஸ்களைக் கொடுக்க வேண்டும் என்று உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

டாஸ்மாக்கிலே வேலை செய்பவர்கள் என்று சொல்லி எங்கு பார்த்தாலும் ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. டாஸ்மாக் ஊழியர்களுக்கு தயவுசெய்து சம்பள உயர்வு ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

நீங்கள் அவர்கள் உற்சாகத்தை ஊக்கப்படுத்தாவிட்டால்அவர்கள் கடையிலேயே உற்சாகப்படுத்திக்கொள்ளக்கூடிய வாய்ப்பு

ஏற்பட்டுவிடக்கூடும். அந்த ஆபத்தைத் தடுக்க வேண்டும் என்று நான் உங்களை பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–15

அதேபோல, நம்முடைய ஆட்சியில் மின் தடை இல்லாமல் சிறப்பான முறையிலே நடந்துகொண்டிருக்கிறது. ஊட்டியில் மின் தடையே இல்லை. சென்னையில் மின் தடை இல்லை. MLA Hostel–இலும்தான் மின் தடை இல்லை. ஏதோ மேல்தட்டு மக்கள் இருக்கக்கூடிய இடமோ என்று எண்ணிவிட்டு என்னுடைய மகன் திருவான்மியூரில் இருக்கிறான், அங்கே செல்கிறேன், வேளச்சேரி செல்கிறேன், அண்ணா நகரிலே என்னுடைய உறவினர்கள் வீட்டிலே தங்குகிறேன். எங்குமே மின் தடை இல்லாத நிலைமை இருக்கிறது. நான் இந்த அரசைப் பாராட்டுகிறேன்.

நீலகிரி மாவட்டம், மழையும், காற்றும் மிக அதிகமாக வீசக்கூடிய மாவட்டம். மரங்களை வெட்டுவதற்கு நீலகிரி மாவட்டத்திற்கு மட்டுமாவது பரிசீலனை செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, ஒரு சிறிய கவிதையோடு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

அன்று என்றோ ஒரு நாள் நம்முடைய நண்பர்கள் சொன்ன ஒரு விஷயத்தைச் சொல்லியாகவேண்டும். நம்முடைய பண்பாட்டுத் துறையிலே, 6 மாவட்டங்களை ஒன்றாக்கி ஒரு மண்டலமாக்கி, அவர்கள் கலை நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு, ஒரு மண்டலத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் என்றுதான் ஒதுக்கப்படுகிறது. அந்த ஒரு இலட்சம் ரூபாய் போதாது. எனவே ஒரு மண்டலத்திற்கு 10 இலட்சம் ரூபாய் என்று ஒதுக்கினால், கலை–பண்பாட்டுத் துறை சிறப்பான முறையிலே நடைபெறும் என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, பத்திரப் பதிவுத் துறை. பத்திரப் பதிவுத் துறை சிறப்பான முறையிலே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஊட்டியிலே சுற்றிச் சுற்றி வருகிறார்கள். ஒரு சென்ட்டுக்கு ஒரு இலட்சம், இரண்டு இலட்சம் என்று கொடுத்தெல்லாம் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். அந்தப் பத்திரப் பதிவு செய்யும்போது, அங்கே வாழக்கூடிய எங்களைப்போன்ற மக்கள் ஒரு சென்ட் வாங்க வேண்டும் என்றால்கூட, அந்த மதிப்பிற்கான பத்திரப் பதிவைத்தான் நாங்கள் மதிப்பீட்டு முறையில் கட்டியாகவேண்டும் என்ற நிலை

ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றது. யார், யாரோ கோடிக்கணக்கிலே கொட்டி வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். ரூ.6,000 கொடுத்து வாங்கிய ஒரு இடத்தை ஒரு மனிதர் பம்பாயில் இருந்து வந்து 6 இலட்சம் ரூபாய் கொடுத்து வாங்கி இருக்கிறார்கள் என்று சொன்னால், அந்த ஆபத்தை நாங்கள்தான் தாங்கியாகவேண்டும். இதை வரன்முறைப்படுத்தியாக வேண்டும் என்று நான் உங்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், ஞானசேகரன் அவர்கள் ஒரு கோரிக்கை விட்டிருக்கிறார்கள். வேலூரிலே Stamp vendor ஒரே ஒருவர்தான் இருக்கிறார். எனவே, இரண்டு, மூன்று பேர் அங்கே வேண்டும் என்ற எண்ணத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.

என்றோ ஒரு நாளில், ஏதோ ஒரு நிலையில் காங்கிரஸ்காரர்களின் கண்ணீருக்குக் காரணமானவன் நீ.—என்றோ ஒரு நாளில், ஏதோ ஒரு நிலையில் காங்கிரஸ்காரர்களின் கண்ணீருக்குக் காரணமானவன் நீ. இன்று உலகத் தமிழர்களின் கண்ணீருக்குக் காரணமாய் உறங்கிக்கொண்டிருக்கிறாய். போய்விட்ட உனக்கு அஞ்சலி செலுத்தி, என் உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.ஏ.டி. கலியவரதன் அவர்கள். (குறுக்கீடு) அதற்கு முன்பாக, மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா அவர்கள் இங்கே பேசும்போது, இறந்து போன பத்திரிகையாளர்களுக்குக் குடும்ப நிதியுதவி அளிக்கவில்லை என்று சொன்னார்கள். பத்திரிகைத் துறையில் ஆசிரியர், உதவியாசிரியர், நிருபர், புகைப்படக்காரர் மற்றும் பிழை திருத்துபவர் பணிகளில் 20 ஆண்டுகள் பணிபுரிந்து, பணியில் இருக்கும்போதே இயற்கை எய்தினால்தான் பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி அளிக்கப்படும் என்று உங்களுடைய ஆட்சியிலே அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இவ்வரசு பொறுப்பேற்றவுடன், பத்திரிகையாளர் நலன் கருதி, 20 ஆண்டுகள் பணிபுரிந்தால்தான் குடும்ப நிதி உதவி வழங்கப்படும் என்பதை மாற்றி, 5 ஆண்டுகள் பணிபுரிந்தால் ரூ.50,000 எனவும், 10 ஆண்டுகள் பணிபுரிந்தால் ரூ. 1 இலட்சம் எனவும், 15 ஆண்டுகள் பணிபுரிந்தால் ரூ.1½ இலட்சம் எனவும், 20 ஆண்டுகள் பணிபுரிந்தால் ரூ.2 இலட்சம் எனவும் வழங்க இவ்வரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டது. 31–12–2008 வரை

39 நபர்களுக்கு பத்திரிகையாளர் குடும்ப நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பத்திரிகையாளர் இறந்தால் ரூ.2 இலட்சம் வழங்கும் திட்டத்தை அறிவித்தது உங்களுடைய முன்னாள் முதலமைச்சர்தான். ஆனால், அவர்கள் ஆட்சியில் இருந்ததுவரை யாருக்கும் வழங்கவில்லை. 'நமது எம்.ஜி.ஆர்.' பத்திரிகையில் பணியாற்றிய முருகேசன் என்பவர் இறந்தார். அவருக்கே கலைஞர் அவர்களுடைய ஆட்சியில்தான் அவருடைய குடும்பத்திற்கு நிதியுதவி வழங்கப்பட்டது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் ஏதோ சொல்ல விரும்புகிறார்.*

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோபாலன் அவர்கள் தன்னுடைய உரையின்போது வனத் துறை கடுமையாக நடந்துகொள்கிறது என்று சொன்னார்கள். அவர்களுடைய உரையிலே அவரே குறிப்பிட்டிருக்கிறார். நீலகிரி மலை, மலைகளின் அரசி என்று குறிப்பிட்டார். எனவே, அந்த அரசியினுடைய அழகுக்கு குறைவு ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காகத்தான் மரங்களை வெட்டுவதில்லை என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோபாலன் அவர்கள் அங்குள்ள நிலத்தின் மதிப்பைப் பற்றிச் சொன்னார்கள். தமிழகத்திலே தலைவர் கலைஞர் ஆட்சி பொறுப்பேற்ற பிறகுதான் தமிழகம் முழுவதும் வழிகாட்டி மதிப்புகள் கணக்கெடுக்கப்பட்டு, இன்றைக்கு அது நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. பொது மக்கள் எந்த ஐயம், எதுவும் இல்லாமல் இன்றைக்கு பத்திரப் பதிவு செய்யக்கூடிய ஒரு நிலைமை கலைஞர் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்டிருக்கிறது.*

பிற்பகல் 12–20

அதேபோன்று, ஊட்டியில் கேபிள் கார் விடுவது பற்றிச் சொன்னார்கள். கேபிள் காரைப் பொறுத்தமட்டில், கழக

ஆட்சியில்தான் இத்திட்டத்திற்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது. அரசாணை வெளியிடப்பட்டவுடன், இத்திட்டம் நிறைவேற்றுவது தொடர்பான ஒப்புதல் கடிதம் ஒப்பந்தக்காரரான SPML நிறுவனத்திற்கு சுற்றுலாத் துறை வளர்ச்சிக் கழகத்தின் சார்பாக வழங்கப்பட்டது. ஆனால், அந்த நிறுவனம் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளாத காரணத்தால், இத்திட்டத்தின்மீது தொடர் நடவடிக்கை எடுக்க முடியவில்லை. தொடர்ந்து பல்வேறு இடங்கள் வனத் துறைக்கு உட்பட்டதாக இருக்கின்ற காரணத்தாலும், அவர்களுடைய அனுமதியைப் பெறுவதற்கு மிகச் சிரமமாக இருக்கின்ற காரணத்தாலும் இத்திட்டத்தைக் கைவிட்டு, மாற்று இடங்களில் இந்தத் திட்டத்தை ஆரம்பிக்கலாம் என்று எங்கள் துறை ஆலோசித்துக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் சொல்லுகிறபோது, ரூ. 2 இலட்சம், ரூ. 1½ இலட்சம், ரூ. 1 இலட்சம் என்று சொன்னார். அதிலே நான் குறுக்கிட விரும்பவில்லை. ஆனால், 16 பேர்களுக்கு இன்னும் நிலுவையிலே இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறேன். அதற்கு அவர் பதில் சொல்லவில்லை. பத்திரிகைக்காரர்களுக்கு எல்லாம் வீடுகள் ஒதுக்குகிறபோது 3 சதவிகிதம் ஒதுக்கலாம் என்று இருந்தது. இதனைச் சரியாக இந்த அரசு செய்யவில்லை என்று பத்திரிகைக்காரர்களே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதை இந்த அரசு நிவர்த்தி செய்யப் போகிறதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன் (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இருங்கள். திரு. வீ.ஏ.டி. கலியவரதன் அவர்கள். தற்போது நேரம் இல்லை. எனக்கு ஒன்றும் புரியவில்லை, ஏன் செங்கோட்டையன் பேசுவது எல்லாம் பத்திரிகைகளில் ஏறுவது இல்லை என்பது.

திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுற்றுலா, கலை மற்றும் பண்பாடு, முத்திரைத்தாள் மற்றும் பதிவுத் துறை, செய்தி மற்றும் விளம்பரம், தமிழ் வளர்ச்சி ஆகிய துறைகள்மீது பேசுவதற்கு வாய்ப்பைத் தந்த, போராட்டமே வாழ்க்கை எனத் தமிழக மக்களுக்காகவும், இந்திய நாட்டில் வாழும் தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் எதிர்காலம்

நன்றாக அமைய வேண்டும் என்பதற்காக, தமிழ்நாட்டுப் பெண்கள் கண்ணீர் இல்லாமல் வாழ பூரண மதுவிலக்கு, புகையில்லா நாடாக மாற்ற வேண்டும் என்பதற்காக, ஒட்டுக்காக இல்லாமல் நாட்டுக்காகவும், நாட்டு மக்களுக்காகவும், எதிர்கால இளைஞர்கள் நலனில் அக்கறையுள்ள எங்கள் தமிழினப் போராளி மருத்துவர் அய்யா அவர்களுக்கும், இளம் போராளி மருத்துவர் சின்ன அய்யா அவர்களுக்கும், என் தொகுதி மக்களுக்கும், அதே நேரம் அதிக நேரம் பேச வாய்ப்பைத் தர வேண்டும் என்பதற்காகப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கைகள்மீது பேசுவதற்கு முன்பு எனது தொகுதியைப் பற்றி சொல்லிவிடுகின்றேன். திருக்கோவிலூர் என்பது மிகப் பெரிய ஆலயங்களைத் தாங்கிய ஊராகும். எனக்கு நினைவு தெரிந்த நாள் முதல், பேருந்து நிலையம் குறுகிய இடத்தில் செயல்பட்டு வருகிறது. மிகவும் நெரிசலில் மக்கள் அவதிப்படுகின்றனர். ஒரு பேருந்து, நிலையத்திற்குச் சென்று வெளியே வர வேண்டுமென்றால், ஒரு மணி நேரம் ஆகிறது. இதனால் கடைத் தெருவுக்குச் சென்று வர, திருவிழாக் கூட்டத்தில் சென்று வருவதுபோல் மக்கள் அல்லல்படுகின்றனர். ஒரு சிலர் நலனுக்காக அந்தப் பேருந்து நிலையம் மாற்றம் செய்யப்படாமல் உள்ளது. அதிகாரிகளும் அதைக் கண்டுகொள்வதாக இல்லை. நானும் பல முறை சட்டமன்றத்தில் வினா எழுப்பியும் பயன் இல்லை. இந்த ஆண்டிலாவது மணம்பூண்டி அருகில் இருக்கின்ற ஏரிப் புறம்போக்கு இடத்தில் அல்லது அரகண்டநல்லூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தை இடமாற்றம் செய்துவிட்டு, அந்த இடத்திலாவது பேருந்து நிலையம் அமைக்கலாம். எனவே, உடன் புதிய பேருந்து நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அரகண்டநல்லூர் அதுல்யநாதீஸ்வரர் கோயில் அருகில் இருக்கும் அரசுக்குச் சொந்தமான பல ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தி, அந்த இடத்தில் பூங்காக்கள் அமைத்து அந்தத் திருத்தலத்தை சுற்றுலாத் தலமாக மாற்ற வேண்டும். அந்தக் கோயில் கடைகளின் வருமானம், நிலங்களின் வருமானத்தையும் ஒரு தனி நபர் வசூலித்து, கொள்ளையடித்து வருகிறார்; அந்த வருமானத்தை கோயில் நிர்வாகத்திற்கு பயன்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விழுப்புரம் சாலையில் உள்ள துரிஞ்சல் ஆற்று இரும்புப் பாலம் இடிந்து விழும் நிலையில் உள்ளது. உடன் புதிய பாலம் கட்டவில்லையென்றால். போக்குவரத்து பாதிக்கப்படும் என்பதையும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மிகப் பெரிய மாவட்டமான விழுப்புரம் மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும் எனப் பல முறை கோரியும், இன்னும் பிரிக்கப்படவில்லை. உடனடியாக அரசு இதில் கவனம் செலுத்தி, இந்த மிகப் பெரிய மாவட்டத்தை, 12 சட்டமன்றத் தொகுதிகள் உள்ளடக்கிய மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பல ஆண்டுகள் சட்டமன்றத்திலே எங்கள் தொகுதிக்கு ஒரு கலை, அறிவியல் கல்லூரி வேண்டுமென கேட்டேன். ஆனால், அறிவிக்கின்ற மருத்துவக் கல்லூரி, இன்ஜினியரிங் கல்லூரியை எங்கள் மாவட்ட அமைச்சர் அவர்கள் விழுப்புரம் பகுதியிலே அமைத்துக் கொள்கிறார். அவருக்கும் மற்ற தொகுதிக்கு தந்து மகிழ மனம் இல்லை. எனவே, இந்த ஆண்டிலாவது கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

இன்றைய மானியக் கோரிக்கைகள்மீது சில கோரிக்கைகள். தமிழ் வளர்ச்சியைப் பற்றி மேடைக்கு மேடைதான் பேசுகிறார்கள். ஆனால், தமிழ் இன்னும் பத்தாண்டுகளில் எங்கே இருக்கிறது என்று தேட வேண்டிய நிலை ஏற்படும். தமிழ் இசை தமிழ்நாட்டில் மறைந்து, பல நாட்டு இசையைக் கேட்டு மக்களும், தலைவர்களும் மாறி வரும் நிலையில் உள்ளது. எனவே, தமிழகப் பாடத் திட்டத்தில் தமிழிசையையும் ஒரு பாடமாகச் சேர்க்க வேண்டுகிறேன்.

பிற்பகல் 12—25

மாவட்டந்தோறும் தமிழ் இசைக் கல்லூரி அமைக்க வேண்டும். தமிழ்நாட்டில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகளில் சுமார் 650 மேல்நிலைப் பள்ளிகளில் முதுகலைத் தமிழ் ஆசிரியர் பணியிடம் இல்லாத நிலை உள்ளது. அந்தப் புதிய பணியிடங்களை ஏற்படுத்தி, முதுகலை தமிழ் ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும். இதேபோல், கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தரம் உயர்த்தப்பட்ட 200 அரசு உயர்நிலைப் பள்ளிகளில் பட்டதாரி தமிழ் ஆசிரியர் பணியிடங்களை ஏற்படுத்தி தமிழ் ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும்.

LEGISLATIVE ... வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தமிழுக்கும், தமிழ் இனத்துக்கும், பண்பாடு, கலாச்சாரத்துக்கும், கல்விக்கும், வேளாண்மைக்கும், தொழில் வளர்ச்சிக்கும், வேலைவாய்ப்புக்கும், ஆக ஒட்டுமொத்தத் தமிழ்நாட்டு மேம்பாட்டுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் தமிழ் சார்ந்த தொலைக்காட்சிகளில் ஒளிபரப்புவதிலும், மக்கள் பார்ப்பதற்குச் சென்றடையும் கம்பிவடங்களிலும் தமிழ் மண்ணில், தமிழ்நாட்டில் முட்டுக்கட்டை உள்ளது. வேற்று மொழித் தொலைக்காட்சிகள் முக்கியத்துவம் பெறுகின்றன. இது ஏன்? இந்த நிலை மாற வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், தமிழக அரசும் கவனம் செலுத்த வேண்டும்.

கலை மற்றும் பண்பாட்டுத் துறையின்கீழ் பல மாவட்டங்களை இணைத்து மண்டலமாகப் பிரித்து, மண்டலத்திற்கு ரூபாய் ஒரு இலட்சம் வீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இதன்மூலம் பல மாவட்டங்களில் உள்ள கிராமங்களில் கிராமியக் கலை நிகழ்ச்சி நடத்தப் போதுமானதாக இல்லை. ஆகவே, மண்டலத்திற்குக் குறைந்தது 10 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

அதேபோன்று கலை. கடந்த காலங்களில் கிராமத்தில் பல கலைகளை மக்களின் முன்னேற்றத்திற்குப் பயன் உள்ளதாகக் கலைஞர்கள் நடித்துக் காட்டுவார்கள். ஆனால், இப்போதுள்ள கலைஞர்கள் நடிக்கும் நாடகத்தைப் பார்த்தும், சின்னத் திரையைப் பார்த்தும், சினிமாவைப் பார்த்தும், அதிலுள்ள கதாநாயகன் எப்படிக் காதலிக்கின்றானோ, எப்படிக் கொலை செய்கின்றானோ, எப்படி அனைவரையும் ஏமாற்றுகின்றானோ, அதை அப்படியே நிஜ வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தி, தங்களது வாழ்க்கையைத் தமிழகத்தில் உள்ள பல இலட்சக்கணக்கான பேர் வீணடித்துக்கொண்டு, குடும்பமே அழிந்துகொண்டிருக்கிறது. இதை மாற்ற இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

ஆபாசமில்லாத, விரசமில்லாத, பாலுணர்வைத் தூண்டாத குடும்பப் படமாக, மக்களைக் கவரும் விதத்தில் சினிமாக்களைத் தயாரிக்க வேண்டுமென இந்த அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.

சுற்றுலாத் துறை ஒரு வருமானமுள்ள துறை. ஆனால், இந்தத் துறைமூலம் வருகின்ற வருமானம் குறையக் காரணம், சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் சுற்றுலாத் தலங்கள் இல்லை. உதாரணத்திற்கு. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மாவட்டச் செய்திகளையெல்லாம் நிறையத் தெரிந்து வைத்திருப்பார் என்று நினைக்கிறேன். பொறியியல் கல்லூரி, அவர்கள் அய்யா இருக்கிற திண்டிவனத்திலேயே ஒன்று ஆரம்பித்திருக்கிறோம். அதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அவர் தொகுதியிலேயும் அவர் பத்திரிகையைப் படித்திருந்தார் என்றால் தெரிந்திருக்கும். அரகண்டநல்லூர் பகுதியிலேயே மத்திய அரசாங்கத்தினுடைய பாலிடெக்னிக் கல்லூரி திருக்கோவிலூருக்குப் பக்கத்திலே, அரகண்டநல்லூருக்குப் பக்கத்திலேயேதான் வருகிறது. அவர் தொகுதிதான். அதுவும் இடத்தையே போய்ப் பார்த்துவிட்டு வந்திருக்கிறேன். பத்திரிகையிலேயும் செய்தி வந்திருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதையும் தெரிந்துகொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: நான் கலைக் கல்லூரி வேண்டுமென்றுதான் கேட்டேன். பாலிடெக்னிக் வேண்டுமென்று கேட்கவில்லை. இந்தியாவிலேயிருக்கின்ற . . .

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கலைக் கல்லூரி வேண்டுமா அல்லது மத்திய அரசாங்கம் வழங்குகிற தொழில்நுட்பக் கல்லூரி வேண்டுமா? அல்லது அதை எடுத்துவிடலாமா?

திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: பின்தங்கிய பகுதியான எங்கள் தொகுதியிலே கிராமங்கள் அடங்கிய பகுதிகள் இருக்கின்றன. எனவே, கிராம மக்கள் பயன்பெறுகின்ற வகையிலே அனைத்துக் கல்லூரிகளையும் எங்கள் தொகுதிக்குத் தர வேண்டுமென்றுதான் நான் கேட்டேன். *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. சிவராஜ்.

திரு. சு. சிவராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முகையூர் தொகுதியிலே, கொல்லூரிலே ஒரு பாலிடெக்னிக்கைக் கொடுத்திருக்கின்றார்கள். கலை, அறிவியல் கல்லூரியைத்

திருக்கோவிலூர் நகரத்தில் அமைத்தால் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: இப்போது புதிய தொகுதியாக திருக்கோவிலூர் தொகுதி அமைந்திருக்கிறது. அதனால், திருக்கோவிலூர் தொகுதியிலே கொடுத்தாலும் பரவாயில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. வீ.ஏ.டி. கலியவரதன், சீக்கிரம் உரையை முடித்துவிடுங்கள்.

திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: உதாரணத்திற்கு, இந்தியாவில் இருக்கின்ற மாநிலத்தில் ஒன்றான கோவா மாநிலத்தில் 10, 15 ஏக்கர் பரப்பளவு உள்ள கடற்கரையோரம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வந்து தங்குவதற்குண்டான விடுதிகள் அவர்களைக் கவருகின்ற வகையில் கடற்கரையில் கவர்ச்சியான வகையில் வடிவமைக்கப்பட்டிருக்கின்றன. அந்த மாநிலத்தில் சுற்றுலாத் துறைமூலமாக வருகின்ற வருமானம் அந்த மாநிலத்தின் நிதிநிலையை நிர்ணயிக்கின்ற வகையில் அமைந்துள்ளது. ஆனால், தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 500 கிலோ மீட்டர் கடற்கரை அமைந்துள்ளது. அதுவும் கடற்கரைச் சாலை, சென்னை முதல் கடலூர் வரையிலும், நாகப்பட்டினம் முதல் கன்னியாகுமரி வரையிலும் இருந்தும், போதுமான விடுதிகள் வெளிநாட்டினர் விரும்புகின்ற வகையில் இல்லை. இயற்கைப் பூங்காக்களும் உருவாக்கப்படவில்லை. அப்படி உருவாக்கினால், சுற்றுலாப் பயணிகள்மூலம் அரசுக்கு வருமானம் வரும். ஆனால், பெரியவர்கள், பெண்கள், இளைஞர்கள் முதல் குடிக்கின்ற மதுபானக் கடையைத் திறந்து, அதன்மூலம் வரும் வருமானத்தை வைத்து ஆட்சி நடத்துகிறோம். நிதியைப் பெருக்கிக்கொள்கிறோம்.

விழுப்புரம் மாவட்டத்தில் கல்வராயன் மலையைச் சுற்றி இயற்கை எழில் வாய்ந்த பகுதியாக இருக்கின்றது. அதற்கு அதிக அளவில் நிதியொதுக்கி மிகப் பெரிய சுற்றுலாத் தலமாக்கினால் அதன்மூலம் அரசுக்கு வருமானம் கிடைக்கும்.

பிற்பகல் 12–30

தமிழ்நாட்டில் உள்ள பூம்புகார், மகாபலிபுரம், கொடைக்கானல், ஏற்காடு, ஒகேனக்கல் ஆகிய இடங்கள் மிகப் பெரிய சுற்றுலாத் தலங்களாக விளங்க அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்து நவீனமயமாக்கப்பட வேண்டும். மாமல்லபுரத்தில் அரசு அறிவித்த ஒலி–ஒளிக் காட்சியை எப்பொழுது தொடங்குவீர்கள் என அறிய

விரும்புகிறேன். விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள செஞ்சிக் கோட்டைக்கு ரோப் கார் வசதி செய்து தந்தால் அதன்மூலமாக சுற்றுலாத் துறைக்கு அதிக வருமானம் வரும். எனவே, அதைச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பத்திரிகைகள் ஜனநாயகத்தின் நான்காவது தூணாக இருக்கின்றன. பத்திரிகையாளர்களுடைய அரிய பணியை இந்த அரசு உணர வேண்டும். பத்திரிகையாளர்கள் மேம்பாட்டிற்கும், பாதுகாப்பிற்கும் தனி நல நிதியம் ஒன்றினை உருவாக்கி நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இந்த நிதியத்தின்மூலமாக அவர்களுக்கு ஓய்வூதியம் கூடுதலாகவும், குடியிருப்பு மற்றும் பல உதவிகள் அனைவருக்கும் தொடர்ந்து வழங்கப்படவேண்டும். இதழியலாளர்களுக்கு அளிக்கப்படும் அனைத்துச் சலுகைகளும் காட்சி ஊடகத்தில் உள்ளவர்களுக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டும். பத்திரிகையாளர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டத்தினைச் செயல்படுத்த வேண்டும். பத்திரிகையாளர்கள் தமிழகம் முழுவதும் பேருந்துகளில் இலவசமாகச் செல்ல பஸ் பாஸ் தொடர்ந்து வழங்கப்படவேண்டும்.

எய்ட்ஸ் விழிப்புணர்வு, புகையிலை உபயோகிப்பதைக் கட்டுப்படுத்துதல் மற்றும் இளைஞர்களிடம் வேகமாகப் பரவி வரும் குடிப்பழக்கத்தைக் கட்டுப்படுத்த அரசு பத்திரிகைகளில் அதிக அளவில் விளம்பரம் செய்ய வேண்டும். அனைத்து மாவட்டங்களிலும் பதிவு பெற்ற அனைத்துப் பத்திரிகைகளுக்கும் பாரபட்சமின்றி விளம்பரம் தரப்பட வேண்டும்.

தமிழுக்கு முக்கியத்துவம் கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால், இன்னும் சாதி இருப்பிடச் சான்று, அரசு ஆணைகள், சுற்றறிக்கைகள், கோப்புகள் உள்ளிட்ட அரசின் அலுவலக நடவடிக்கைகள் ஆங்கிலத்தில்தான் வந்துகொண்டிருக்கின்றன. இதனை மாற்றி தமிழில் கொடுப்பதற்கு அரசு முன்வராதது ஏன்?

சட்டமன்ற உறுப்பினர்களது பணிகள் குறித்து தொகுதி மக்களுக்கு செய்தித் துறைமூலமாகப் புத்தகமாக அச்சடித்து இலவசமாக வழங்க வேண்டும். தேர்தலின்போது அனைத்துச் சுவர்களிலும் தேர்தல் விளம்பரம் செய்வதை முழுமையாகத் தடை செய்ய வேண்டும். அரசினர் தோட்டத்தில் புதிய தலைமைச் செயலகமும், புதிய சட்டமன்ற வளாகமும் கட்டப்படுவதால், ஏற்கெனவே இருந்த சென்னை செய்தியாளர் மன்றத்தை அப்புறப்படுத்த நோட்டீஸ்

கொடுக்கப்பட்டுள்ளது. அதற்கு மாற்றாக இடமும் கொடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. அதனை உடனடியாகக் கட்டித் தருவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சீக்கிரம் உரையை முடியுங்கள்.

திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: புதிய கட்டடம் கட்டப்படும் வரை சென்னை செய்தியாளர் மன்றம்—Madras Reporters Guild இயங்குவதற்கு மாற்று ஏற்பாட்டை அரசு உடனடியாக ஏற்பாடு செய்து தர வேண்டும். நாட்டின் எதிர்காலம் ஆரோக்கியமாக இருக்க வேண்டுமானால், தரமான ஊடகங்களும், ஊடக விஷயங்களும் அவசியம். இன்றைய சூழ்நிலையில் நாளேடுகளும், வார ஏடுகளும் பெருமளவில் பெருகிவிட்டன. பல்வேறு பல்கலைக்கழகங்களிலும், கல்லூரிகளிலும் Visual Communication என்று அழைக்கப்படும் இதழியல் பாடப் பிரிவுக்கு மாணவர்களிடையே மிகுந்த ஆர்வமும், வரவேற்பும் உள்ளது. இதனை மேலும் ஊக்கப்படுத்தும் வகையில், ஆரோக்கியமான எதிர்காலத்திற்கு நாட்டை அழைத்துச் செல்லும் வகையில் ஊடகவியலுக்காகத் தனிப் பல்கலைக்கழகத்தை ஏற்படுத்தித் தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

முதல்வர் அவர்கள் தானும் ஒரு பத்திரிகையாளர் என்று பெருமையோடும், கம்பீரத்தோடும் கூறும் நிலையில், இந்தியாவிலேயே முதன்முதலாக இந்தப் பல்கலைக்கழகத்தைத் தோற்றுவித்தால், எதிர்காலத் தலைமுறை அவரை வாழ்த்தும், வணங்கும். இரண்டு கட்டமாகப் பத்திரிகையாளர்களுக்கு வீடு கட்டித் தரப்படும் என்றார்கள். அதுபற்றி அரசு கவனம் செலுத்த வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உரையை முடித்து விடுங்கள்.

திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: ஒரு நிமிடம். பத்திரப் பதிவுத் துறை. முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பத்திரப் பதிவுத் துறையைப் பற்றி நீங்கள் ஒன்றும் பதிவு செய்யவேண்டாம்.

திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: பத்திரப் பதிவு நிலத்திற்கான Guideline Value அளவுக்கு அதிகமாகிவிட்டதால், இப்போது நிலத்தின் விலை குறைந்துவிட்ட நிலையில் பத்திரப் பதிவுக்கு ஆகும் செலவு அதிகம்

என்பதால், உடனே Guideline Value–வைக் குறைத்து, நிலுவையில் உள்ள பத்திரங்களை release செய்ய சமாதான் திட்டம் அறிவிக்க வேண்டும். தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டப் பத்திரப் பதிவு அலுவலகங்களிலும் நடைபெறும் முறைகேடுகளைத் தடுக்க சிறப்புப் பிரிவினை ஏற்படுத்த வேண்டும். தமிழகத்தில் உள்ள அனைத்து பழைய கட்டடங்களுக்கும். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உரையை முடியுங்கள். (குறுக்கீடு) இரண்டு நிமிடம் முடியாது. நான்கு subjects இருக்கின்றன. (குறுக்கீடு) இல்லை. இல்லை. நான்கு subjects இருக்கின்றன. நீங்கள் எங்களுடைய கஷ்டத்தினைப் புரிந்துகொள்ள வேண்டும்.

திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: வாடகையிடத்தில் இயங்கும் கட்டடங்களுக்கும் புதிய கட்டடம் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோல், பத்திர விற்பனையாளர்கள் தமிழ்நாட்டில் குறைவாக உள்ளனர். விற்பனையாளர்களை அதிகப்படுத்தி, எளிதில் பத்திரங்கள் மக்களுக்குக் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. மாரிமுத்து அவர்கள். (குறுக்கீடு) இல்லை. நான்கு subjects இருக்கின்றன. (குறுக்கீடு) நீங்கள் senior member. நீங்கள்தான் co–operate பண்ண வேண்டும்.

***திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவைக்கு ஒரு தவறான தகவலைத் தந்தார்கள். திரு. கே.பி. முருகேசன், சென்னை 'நமது எம்.ஜி.ஆர்' நாளிதழில் பணியாற்றியவருக்குப் பணம் வழங்கவில்லை என்ற ஒரு தவறான தகவலைச் சொன்னார்கள். அரசாணை (நிலை) எண் 66, நாள் 7–4–2005–ல் அவருக்கு ரூ.2 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. அதேபோல், 'மக்கள் குரல்' திரு. சக்திவேல், அதேபோல், திரு. வரதராஜன் போன்றவர்களுக்குத் தலா இரண்டு இலட்சம் வழங்கப்பட்டிருக்கின்றது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு தவறான தகவலை இந்த அவைக்குத் தந்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தவறான தகவலைச் சொல்லவில்லை. G.O. pass செய்து இருக்கிறீர்கள். பணம் கலைஞர் ஆட்சியில் வழங்கப்பட்டிருக்கின்றது என்று சொன்னார்கள். (குறுக்கீடு)

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: எங்கள் ஆட்சியிலேயே கொடுத்துவிட்டோம். நீங்கள் தவறாகச் சொல்லக்கூடாது. அதைவிட நீங்கள் ஒரு தவறு செய்கின்றீர்கள்.

பிற்பகல் 12–35

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இல்லை. அவர் சொன்னதைத்தான் நான் விளங்குகிற மாதிரி சொன்னேன். வேறு ஒன்றும் இல்லை. மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கலியவரதன் அவர்கள் பேசுகின்றபோது, சுற்றுலாத் துறையைப் பொறுத்தமட்டில் சரியாகச் செயல்படவில்லை, அதனுடைய வருவாய் குறைந்திருக்கிறது என்று சொன்னார்கள். இந்தத் துறையைப் பொறுத்தமட்டில், மூன்று ஆண்டு காலத்தில் நான்கு தேசிய விருதுகளைப் பெறக்கூடிய அளவிற்கு இந்தத் துறை பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டதன் அடிப்படையில், இன்றைக்கு சுற்றுலாப் பயணிகளுடைய எண்ணிக்கை ஒவ்வோர் ஆண்டும் 22 சதவீதம் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. வருவாயைப் பொறுத்தமட்டில், நிகர வருவாய், இந்த மூன்றாண்டுகளில் 19 கோடியே 55 இலட்சம் ரூபாய். ஆனால், கடந்த ஆட்சிக் காலத்தில், ஐந்தாண்டு காலத்தில் 9 கோடியே 69 இலட்சம் ரூபாய். எந்த அளவிற்கு வேறுபாடு என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. மாரிமுத்து அவர்கள். (குறுக்கீடு) முடியாது. (குறுக்கீடு) இல்லை. நான் இன்னொருவரை அழைத்துவிட்டேன். மீண்டும் வேண்டாம். (குறுக்கீடு) இல்லை. I am sorry. திரு. மாரிமுத்து, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு)

திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: ஒரே ஒரு கருத்தைச் சொல்லிவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இல்லை, நிறைய வாய்ப்புக் கொடுத்துவிட்டோம். 14 நிமிடங்கள் கொடுத்திருக்கிறோம். (குறுக்கீடு) இல்லை, வேண்டாம். திரு. மாரிமுத்து, பேசுங்கள்.

திரு. வே. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு, முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு, செய்தி மற்றும் விளம்பரம், எழுதுபொருள் மற்றும் அச்சு ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் சில கருத்துகளைப் பதிய வைக்க விரும்புகிறேன்.

இன்றைக்குத் தமிழக அரசுக்கு வருவாய் ஈட்டித் தருவதில் மூன்றாவது துறையாக விளங்குவது பதிவுத் துறையாகும். இத்துறையினுடைய வருவாய், இன்று உலகம் முழுவதும் ஏற்பட்டிருக்கக்கூடிய பொருளாதார நெருக்கடியின் காரணமாக ஒரு பாதிப்பை இன்றைக்குச் சந்தித்திருக்கிறது. தமிழகத்தில் 2008–2009 ஆம் ஆண்டு பத்திரப் பதிவு வரவு என்பது சிறிதளவு குறைந்திருக்கிறது என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்குப் பத்திரப் பதிவில் ஏற்பட்டிருக்கக்கூடிய வருவாய்க் குறைவுக்கு இன்னொரு காரணம், தமிழகத்தினுடைய பல்வேறு பகுதிகளிலே ரியல் எஸ்டேட் நடத்தக்கூடிய பெரிய முதலாளிகள் மாநில அரசினுடைய வழிகாட்டு மதிப்பீட்டைவிடக் கூடுதலான தொகைக்கு இன்றைக்குப் பத்திரப் பதிவைச் செய்கின்ற சூழல் ஏற்படுகிறது. இதன் காரணமாக, சாதாரண ஏழை, எளிய மக்கள் ஒரு சென்ட் இடம் வாங்குவதற்குக்கூட இன்றைக்கு மிகப் பெரிய அல்லலுக்கு ஆட்படுகிறார்கள் என்பதை நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். எனவே, வழிகாட்டு மதிப்பைவிடக் கூடுதலாகப் பதிவு செய்யக்கூடிய பகுதிகளில் அரசு கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒரு நிமிடம். என்ன? திரு. கலைராஜன்.

***திரு. வி.பி. கலைராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு இதே மானியக் கோரிக்கையில், மறைந்த மாமேதை அண்ணல் டாக்டர் அம்பேத்கர் திரைப்படம் N.F.D.C.ஆல்—National Film Development Corporation–ஆல் எடுக்கப்பட்டிருக்கிறது; அதை மொழியாக்கம் செய்து தமிழ்நாட்டிலே தமிழிலே வெளியிட வேண்டும் என்று நான் கோரிக்கை வைத்தேன். அப்போது பத்து இலட்சம் ரூபாய் தமிழாக்கம் செய்வதற்கு ஒதுக்கப்படுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

அந்தப் படத்திற்கு நிதி ஒதுக்கப்பட்டுவிட்டதா? அந்தப் படம் வெளியிடப்படுமா? அவர்களுடைய வாழ்க்கை வரலாறு இளைஞர்களுக்காகத் தமிழகத்திலே ஒளிபரப்பப்படுமா என்பதை நான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைச்சர், நீங்கள் reply–யிலேகூட சொல்லிக்கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: இல்லை, இப்போதே சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் சார்பில் 1997 ஆம் ஆண்டு மாமேதை டாக்டர் அம்பேத்கர் திரைப்படத்தின் ஆங்கிலப் பதிப்பினை தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டால் மானியம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் 5–3–1997 அன்று 1997–1998 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை சட்டப் பேரவையில் தாக்கல் செய்தபோது, அண்ணல் அம்பேத்கர் வாழ்க்கை வரலாற்றினை புகழ்பெற்ற குணச்சித்திர நடிகர் மம்முட்டி அவர்கள் நடிப்பில் ஆங்கில மொழியில் திரைப்படமாக எடுத்திடும் முயற்சிக்குத் தமிழக அரசின் சார்பில் வாழ்த்துக் கூறுவதுடன், அந்தப் படம் தமிழாக்கம் செய்யப்பட்டு வெளியிடப்படுமேயானால், தமிழக அரசின் பரிசுத் தொகையாக அதன் தயாரிப்பாளருக்குப் பத்து இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். இதன் தொடர்ச்சியாக, மேற்கண்ட திரைப்படத்தைத் தயாரித்த தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகத்தை—National Film Development Corporation—தமிழில் மொழிமாற்றம் செய்யுமாறு கோரப்பட்டது. இதுதொடர்பாகப் பல முறை நினைவூட்டுக் கடிதங்களும் அனுப்பப்பட்டன. தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகம், சென்னை மண்டல மேலாளர் திரு. மத் அவர்களைத் தற்போது தொடர்பு கொண்டதில், இதுகுறித்து மும்பையிலுள்ள தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகத்தின் தலைமையிடத்திற்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், விரைவில் இதுதொடர்பாக விவரம் தெரிவிப்பதாகவும் தெரிவித்துள்ளார்கள். மேலும், இப்பொருள் குறித்து அனைத்து நடவடிக்கைகளும் தலைமையிடத்தில்தான் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மாரிமுத்து.

திரு. வே. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று பத்திரப் பதிவுத் துறை அலுவலகங்களில் லஞ்ச ஒழிப்புப் போலீசாரால் raid என்கிற பெயரில், பல ஆயிரக்கணக்கான ரூபாய் அந்த அலுவலகங்களிலேயிருந்து கைப்பற்றப்படுகிறது. இன்றைய பத்திரிகைச் செய்திகூட, சென்னை அருகே ஒரு பத்திரப் பதிவு அலுவலகத்தில், அது இருக்கக்கூடிய தெருக்களிலே பணம் பறந்ததாகப் பத்திரிகைச் செய்திகள் வருகின்றன.

எனவே, பத்திரப் பதிவுத் துறையில், சொத்து விற்பனை, பரிவர்த்தனையின்போது முறைகேடாகப் பதிவு செய்வதற்கு இப்படிப் பணம் வாங்கப்படுகிறதா என்பதைக் கண்டறிய மாநில அரசு உரிய முறையிலே விசாரணை நடத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–40

அதோடு, பத்திரப் பதிவுத் துறையில் இன்றைக்கு உரிய காலத்தில் பத்திரப் பதிவு செய்யப்படவேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள். இன்றைக்குப் பத்திரப் பதிவு அலுவலகத்திற்கு ஆயிரக்கணக்கான மக்கள் வந்துகொண்டிருக்கிறார்கள். எனவே, மக்களுக்குண்டான அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, கழிப்பிட வசதிகளைப் பத்திரப் பதிவு அலுவலகங்களிலே மக்களுக்குச் செய்து கொடுக்க வேண்டும். அதேபோல, பத்திர எழுத்தர்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அவர்களுக்கு வழங்கப்படுகின்ற விற்பனைக்கான தொகையை மாநில அரசு உயர்த்தித் தரவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய தமிழகம் பலவகையான சுற்றுலாச் சிறப்பியல்புகளைக் கொண்ட மாநிலமாகும். இன்றைக்கும் தமிழகத்தில் பிரபலமாகாத மலைகள், அருவிகள், கோட்டைகள், கலைச் சிற்பங்கள் நிறைந்த ஆன்மீகத் திருத்தலங்கள் ஏராளமாக உள்ளன. எனவே, அவற்றைக் கண்டுபிடித்து, மக்கள் அங்கே செல்லத்தக்க வகையில், மாநில அரசு சுற்றுலா இடங்களாக, தலங்களாக அவற்றை உருவாக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு நம்முடைய சுற்றுலாத் தலங்களில் சர்வதேசத் தரத்தில் விடுதிகளை சுற்றுலாத் துறை உருவாக்கவேண்டும். தமிழகத்திலிருக்கக்கூடிய பெரும்பகுதியான சுற்றுலாத் தலங்களில் சாதாரண மக்களும் தங்கிச் செல்கிற ஒரு சூழலை உருவாக்கவேண்டும். அந்த மக்களுக்குக் குறைந்த கட்டணத்திலே

தங்கும் விடுதிகளை மாநிலம் முழுவதும் இருக்கக்கூடிய சுற்றுலாத் தலங்களிலே மாநில அரசு உருவாக்கவேண்டும். சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கின்ற வகையில்—சர்வதேச சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கின்ற வகையில்—நம்முடைய சுற்றுலாத் தலங்கள் உருவாக்கப்படவேண்டும்.

மதுரை நாயக்கர் மஹால்; பல ஆயிரக்கணக்கான மக்கள் தினசரி வந்து செல்லும் மதுரை நாயக்கர் மஹாலில் ஒலி–ஒளிக் காட்சி கடந்த காலங்களிலே நடத்தப்பட்டது; தற்போது அது நிறுத்தப்பட்டிருக்கிறது. எனவே, மதுரை நாயக்கர் மஹாலில் ஒலி–ஒளிக் காட்சி தொடர்ந்து நடைபெறுவதற்குண்டான நடவடிக்கையை அரசு எடுக்கவேண்டும்.

இன்றைக்கு சிப்பாய்க் கலகத்தினுடைய சின்னமாக விளங்குவது வேலூர் கோட்டை. மக்கள் சென்று பார்க்கின்ற அளவிற்கு அதை ஒரு சுற்றுலாத் தலமாக மாநில அரசு அறிவிக்கவேண்டும். அதேபோல, ஏலகிரி மலை, மோர்தானா அணை, ஆன்மீகத் திருத்தலங்கள் நிறைந்த நாகப்பட்டினம் ஆகிய பகுதிகளை சுற்றுலாத் தலங்களாக மாநில அரசு அறிவிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இசைக் கல்லூரிகளிலே படிக்கும் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தருவதற்குண்டான திட்டத்தை அரசு உருவாக்க வேண்டும். இன்றைக்குத் தமிழகத்திலே நலிந்த கலைஞர்களுக்கு மாதந்தோறும் 1,000 ரூபாய் நிதி வழங்கப்படுகிறது. ஆனால், இவற்றை நலிந்த கலைஞர்கள் பெறுவதற்கு விதிமுறைகள் கடுமையாக இருக்கிறதெனச் சொல்கிறார்கள். எனவே, விதிமுறைகளைத் தளர்த்தி, நலிந்த கலைஞர்கள் அனைவரும் இந்தத் தொகையைப் பெறுவதற்குண்டான வகையில் விதிமுறைகளிலே திருத்தம் கொண்டு வர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, தமிழகத்திலே இருக்கக்கூடிய தெருக்கூத்துக் கலைஞர்கள், கிராமப்புறக் கலைஞர்கள் போதிய வருவாயின்றி மிகவும் சிரமத்தில் இருக்கிறார்கள். எனவே, இப்படிப்பட்ட கலைஞர்களுக்கு அரசு இலவச பஸ் பாஸ் வழங்க வேண்டுமெனக் கோருகிறேன்.

அதேபோல அரசின் நடவடிக்கைகளை, திட்டச் செயல்பாடுகளை விளம்பரங்கள்மூலமாக அரசு கொடுத்து வருகிறது. அப்படிப் பத்திரிகைகளுக்கு விளம்பரங்கள் கொடுக்கிறபோது, பாரபட்சமின்றி அனைத்துப் பத்திரிகைகளுக்கும் அரசு விளம்பரம் கிடைப்பதற்கு உத்தரவாதம் செய்யவேண்டும்.

அதேபோல, தேச விடுதலைக்கு முக்கியப் பங்காற்றிய மகாத்மா காந்தி அவர்கள், தன்னுடைய முழு ஆடையை அரை ஆடையாகக் குறைத்துக் கொண்டது மதுரையில்தான். அப்படிப் புகழ்பெற்ற மதுரை, காந்தி மைதானத்திலே இருக்கக்கூடிய காந்தி சிலை சிறிய அளவில் இருக்கிறது. எனவே, மதுரை காந்தி மைதானத்திலே இருக்கக்கூடிய அந்தச் சிலையை அகற்றிவிட்டு, அரசின் சார்பில் புதிய காந்தி சிலையை வைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *சீக்கிரம் உரையை முடித்துவிடுங்கள்.*

திரு. வே. மாரிமுத்து: *முடித்துவிடுகிறேன். எனக்கு 10 நிமிடங்கள். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இல்லை, தினந்தோறும் பேசுவதால் 7 நிமிடங்கள்தான்.

திரு. வே. மாரிமுத்து: அடுத்து, நெல்லை மாவட்டம், நெற்கட்டும்செவல் வீரன் ஒண்டி வீரருக்குச் சிலை அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். தொல்காப்பிய அரங்கேற்றத்தின்போது தலைமையேற்ற அதங்கோட்டாசான் அவர்கள் சிலை உள்ள இடத்தில் கோபுர வடிவ மண்டபம் அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். தமிழ்த் தென்றல் மறைமலை அடிகளார் பிறந்த நாகப்பட்டினத்தில், மறைமலை அடிகளாருக்கு ஒரு மணிமண்டபம் எழுப்ப வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, மாநில அரசு நினைவு மண்டபங்களை ஏராளமாக உருவாக்குகிறது; நினைவுச் சின்னங்களை உருவாக்குகிறது. இவற்றைப் பராமரிப்பதற்கு ஆண்டுதோறும் குறிப்பிட்ட நிதியை ஒதுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

ஒரேயொரு நிமிடம். சிற்பத்திற்குப் பெயர் பெற்றது மாமல்லபுரம்; அங்கே 1,500 சிற்பிகள் உள்ளனர்; 300 விற்பனைக் கூடங்கள் உள்ளன. ஆனால், இன்றைக்கு உலகப் பொருளாதார நெருக்கடியால் சிற்ப விற்பனை பாதிப்பு அடைந்திருக்கிறது. சிற்பங்களுக்கான ஆர்டரும் குறைந்திருக்கிறது. எனவே, சிற்பிகள் நகரத் திட்டம் ...

பிற்பகல் 12–45

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன். *(குறுக்கீடு)* இல்லை, என்னாலே

முடியாது. (குறுக்கீடு) யாராலேயும் முடியாது. (குறுக்கீடு) திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள். உங்களுக்கு 7 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. (குறுக்கீடு) அவரைப் பேச அழைத்துவிட்டேன். (குறுக்கீடு) அவருக்கு மைக் கொடுங்கள். திரு. இராமச்சந்திரன், பேசுங்கள். (குறுக்கீடு)

திரு. வே. மாரிமுத்து: துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிப் பிரச்சினை ஒன்றே ஒன்று உள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இல்லை, நாளை பேசிக்கொள்ளலாம். (குறுக்கீடு) திரு. இராமச்சந்திரன், பேசுங்கள். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் பேசாதீர்கள். பேசினால் பதிவாகாது.

***திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுற்றுலா, கலை மற்றும் பண்பாடு, முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு, செய்தி மற்றும் விளம்பரம், எழுதுபொருள் மற்றும் அச்சு ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது என்னுடைய கருத்துகளை எடுத்துரைக்க வாய்ப்பளித்த தங்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசுக்கு அதிக வருவாய் ஈட்டித் தரக்கூடிய துறைகளிலே பத்திரப் பதிவுத் துறை ஒன்றாகும். இந்தத் துறையிலுள்ள சில குறைபாடுகளைக் களைய அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

முத்திரைத்தாள்களுக்கு ஏற்படும் தட்டுப்பாட்டைத் தவிர்க்கவும், போலி முத்திரைத்தாள்களைப் புழக்கத்திலே முறியடிக்கவும், e–stamping மின்னணு முறை அல்லது franking இயந்திரங்கள்மூலம் அத்தாட்சி செய்து, முத்திரைத் தீர்வையினை வசூலிக்கும் முறையை நடைமுறைப்படுத்த வேண்டும்.

அதேபோன்று, போலிப் பத்திரப் பதிவுகளைத் தவிர்க்க அண்டை மாநிலங்களிலே நடைமுறையில் இருப்பதுபோல Electronic thumb impression and biometric camera பதிவு முறையை நமது மாநிலத்திலும் நடைமுறைப்படுத்த வேண்டும்.

நிலத்தினுடைய வழிகாட்டு மதிப்பு காரண காரியமின்றி பல மடங்கு உயர்த்தப்பட்டிருப்பதால், ஏழையெளிய நடுத்தரக் குடும்பத்தினர், அவர்களால் வாங்கப்படும் 5 அல்லது 10 சென்ட் நிலத்தைக்கூட பத்திரப் பதிவு செய்ய சில இலட்சங்கள் முத்திரைத் தீர்வை செலுத்த வேண்டியிருக்கிறது. பத்திரப் பதிவு செய்யத் தயக்கம்

காட்டி வருகிறார்கள். ஆகவே, இத்தகைய நெருக்கடியைத் தீர்க்கும் வகையிலே, அரசு தன்னுடைய புதிய வழிகாட்டு மதிப்பீட்டை மறு ஆய்வு செய்து, எதார்த்த நிலையில் நிர்ணயிக்க வேண்டும்.

அதேபோல, பவர் பத்திரம் எனப்படும் பொது அதிகாரப் பத்திரம், வில்லங்கச் சான்றிதழிலே பிரதிபலிக்கப்படுவதில்லை. ஆகவே, ஒரே நபர் ஒரே நிலத்தைப் பல நபர்களுக்கு இதன்மூலம் விற்கிறார். இத்தகைய பவர் பத்திரங்கள்மூலமாக மோசடி என்பது நடைபெறுகிறது. ஆகவே, வில்லங்கப் பத்திரத்திலே அந்த நிலத்தினுடைய அனைத்து விவரங்களும் அடங்கும் வகையிலே அந்த பவர் பத்திரங்களை வரும் காலங்களில் வில்லங்கச் சான்றில் பதிவு செய்யும் முறையையும் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, பத்திரப் பதிவு செய்த பிறகு பட்டா மாற்றம் செய்யப்பட வேண்டுமென்றால், பணம் கேட்டு வட்டாட்சியர் அலுவலகத்தில் 2 அல்லது 3 மாதங்கள் அலைக்கழிக்கப்படுகின்றார்கள். கர்நாடகா போன்ற மாநிலங்களிலே பத்திரப் பதிவு அலுவலகத்திலேயே வருவாய் ஆய்வாளர் அலுவலகம் அமைத்து, ஒரு வார காலத்திற்குள் பட்டா மாற்றம் செய்து உரியவர்களுக்கு வழங்கப்படுகிறது. அந்த முறையை இங்கேயும் நடைமுறைப்படுத்த வேண்டும்.

பெரும்பாலான பத்திரப் பதிவு அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இதனால் அரசுக்குப் பெரிய இழப்பு ஏற்படுகிறது. ஆகவே, வாடகைக் கட்டடங்களில் செயல்படும் அனைத்து சார் பதிவாளர் அலுவலங்களுக்கும் சொந்தக் கட்டடம் கட்டித் தர வேண்டும்.

என்னுடைய தளி தொகுதியிலே கெலமங்கலம் சார் பதிவாளர் அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அங்கே புதிய சொந்தக் கட்டடம் ஒன்றைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், தளியிலே ஒரு புதிய சார் பதிவாளர் அலுவலகம் ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பத்திரப் பதிவு அலுவலகங்களில் பதிவு செய்யப்பட்டு பத்திரங்கள் பெறப்படவேண்டுமென்று சொன்னால், ஒன்றிரண்டு மாத காலம் தாமதம் ஆகிறது. ஆகவே, அனைத்து சார் பதிவாளர் அலுவலகங்களும் கணினிமயமாக்கப்பட வேண்டும்.

60 வயதிற்கு மேற்பட்ட ஆவண எழுத்தர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும். பத்திரத் தொழிலாளர்களுக்கெனத் தனி நல வாரியம் அமைக்கப்பட வேண்டும்.

பதிவுத் துறையிலே பணியாற்றி வரும் பணியாளர்கள் ஒரே இடத்திலே 6 முதல் 9 ஆண்டுகாலம் பணியாற்றுகிறார்கள். இதனால் முறைகேடுகள் நடக்க வழியுண்டு. ஆகவே, 3 ஆண்டுகளுக்கு மேல் ஒரே இடத்திலே பணியாற்றியவர்களைப் பணி மாற்றம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும், வேலைவாய்ப்பையும் உருவாக்குவதிலே, அன்னியச் செலவாணி ஈட்டுவதிலே சுற்றுலாத் துறை முக்கியப் பங்கு வகிக்கிறது. தமிழகத்தில் நீண்ட கடற்கரைப் பகுதி, சிறந்த வழிபாட்டுத் தலங்கள், நீர்வீழ்ச்சிகள், கோடை வாசஸ்தலங்கள் என சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள் ஏராளமாக உள்ளன. ஆனால், கேரளா, ராஜஸ்தான், கோவா போன்ற மாநிலங்களின் மொத்த வருவாயே சுற்றுலாவைச் சார்ந்திருக்கும் நிலையில், தமிழகத்தில் அது பெரும் பின்னடைவிலே உள்ளது. காரணம், பல சுற்றுலா மையங்களில் அடிப்படை வசதி என்பது, கடந்த 10, 15 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த அதே நிலைதான் இன்றைக்கும் தொடர்ந்துகொண்டிருக்கிறது. ஆகவே, சுற்றுலாப் பயணியர்களினுடைய எதிர்பார்ப்புக்கேற்ப இவற்றை மேம்படுத்த வேண்டும்.

அதேபோல், நம்முடைய மெரினா கடற்கரை என்பது மிகவும் பிரசித்தி பெற்ற கடற்கரையாகும். ஆனால், இன்றைக்கு அது சுத்தப்படுத்தப்படாமல் இருக்கிறது. ஆகவே, மெரினா கடற்கரையைத் தூய்மைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவர நவீனங்களை அறிமுகப்படுத்துவதைவிட, நமது பாரம்பரிய தொன்மைக் கலைகளைப் பரீட்சைப்படுத்துவதே அவர்களை வெகுவாகக் கவரும். அதற்கான நடவடிக்கைகளை சுற்றுலாத் துறையின்மூலமாக மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆங்கிலேயர்களால் Little England என்று அழைக்கப்பட்ட என்னுடைய தளி தொகுதியில் வருடம் முழுவதும் குளிர்ச்சியான சீதோஷ்ண நிலை நிலவக்கூடியது. கடல் மட்டத்திலிருந்து 3,600 அடி உயரமுள்ள எனது தளி தொகுதியிலே அமைந்துள்ள இயற்கை எழில் நிறைந்த பெட்டமுகிலாளம் மற்றும் கொடைகரையை சுற்றுலாத்

தலமாக அறிவித்து, அதற்கான கட்டமைப்பு வசதிகளைத் துறையின்மூலமாகச் செயல்படுத்த வேண்டும். அதேபோல, என்னுடைய தளி தொகுதியிலே, தளி பெரிய ஏரியிலே படகு இல்லம் ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

பிற்பகல் 12–50

என்னுடைய தொகுதியில் அமைந்துள்ள சிறப்பு வழிபாட்டுத் தலங்களான தேவர்பெட்டா சிவன் கோயில், நூறுந்துசாமி மலை, மதனகிரி முனீஸ்வரன் திருக்கோயில் மற்றும் தப்பக்குளி போன்ற கோயில்களுக்கு ஏராளமான பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், வெளி மாநிலங்களிலிருந்தும் தினந்தோறும் நூற்றுக்கணக்கானோர் வருகை தருகின்றனர். எனவே, சுற்றுலாத் துறையின் சார்பில் குடிநீர் வசதி, சாலை வசதி, தங்கும் விடுதி போன்ற அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மூலிகை சார்ந்த மருத்துவ சுற்றுலாக்களையும், Eco–Tourism என்னும் சூழல் சுற்றுலாக்களை அமைப்பதற்கான முயற்சிகளை நம்முடைய சுற்றுலாத் துறை மேற்கொள்ள வேண்டும். அதைப்போல தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல் நீர் வீழ்ச்சியின் எழிலைக் காண மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், வெளி மாநிலங்களிலிருந்தும் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். கடந்த ஆண்டு 3 கோடியே 20 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு இன்றைக்கு அந்தப் பணிகள் ஆமை வேகத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆகவே அதை விரைந்து முடிக்கவும், அதேபோல பயணிகள் அருவிகளின் எழிலைக் கண்டுகளிக்க rope car வசதியும், வனத் துறை சார்பிலே உயிரியல் பூங்காவும், குளிக்கக் கூடுதல் இட வசதியும் மற்றும் துறையின் சார்பிலே நட்சத்திர விடுதி ஒன்றையும் கட்டித் தர வேண்டுகிறேன்.

இந்திய நாட்டினுடைய ஜனநாயகத்தைப் பாதுகாக்கின்ற நான்கு தூண்களிலே பத்திரிகை ஜனநாயகம் என்பது ஒரு தூணாகும். பத்திரிகை ஜனநாயகத்தின்மூலம்தான் ஒரு நாட்டின் ஆட்சியின் ஆக்கப்பூர்வமான பணிகள், மக்களுக்கான நலத் திட்டங்கள், அறிவிப்புகள், தேச ஒற்றுமை, மத நல்லிணக்கம் போன்றவை கோடிக்கணக்கான மக்களுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றது. அந்த அளவுக்கு ஒரு முக்கியமான துறையாக செய்தித் துறை விளங்குகிறது.

அந்தத் துறையிலே பணியாற்றி வருகின்ற பத்திரிகையாளர்களுக்கு மாவட்டத் தலைநகரங்களில் மட்டுமின்றி, குறிப்பாக வட்டார அளவிலும், கிராமப்புறங்களிலும் பணியாற்றுகின்ற பத்திரிகையாளர்களுக்கும் பஸ் பாஸ், அடையாள அட்டை, வீட்டுமனை, Press Sticker வழங்க வேண்டும். ஒரு பத்திரிகை நிறுவனத்தில் மூன்று ஆண்டுகளுக்குமேல் பணிபுரிந்தால் அடையாள அட்டை ஆகியவை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோல, 20 ஆண்டுகள் பணியாற்றி ஓய்வுபெற்று நலிவடைந்த, பத்திரிகையாளர்களுக்கு வழங்குகின்ற குடும்ப ஓய்வூதியம் ரூபாய் 4,000 என்பது 10,000 ரூபாயாக உயர்த்தப்பட வேண்டும். அதேபோல, அரசு விளம்பரம் வழங்கும்போது பாரபட்சம் காட்டப்படுகின்றது. குறிப்பாக 'ஜனசக்தி' போன்ற பத்திரிகைகளுக்கு அரசு விளம்பரம் என்பது வழங்கப்படுவதில்லை. அப்படி பாரபட்சம் இல்லாமல் அனைத்துப் பத்திரிகைகளுக்கும் அரசு விளம்பரம் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பத்திரிகையாளர்கள் வாடகை வீட்டிற்கு விண்ணப்பித்துப் பல மாதங்கள் காத்திருக்க வேண்டியுள்ளது. ஆகவே காலதாமதத்தைத் தவிர்த்து விண்ணப்பித்த அனைவருக்கும் உடனடியாக கிடைக்க வழிவகை செய்வதோடு, பத்திரிகையாளர்களுக்கு ஒதுக்கப்பட்ட குடியிருப்புப் பகுதியில் பத்திரிகையாளர்களைத் தவிர மற்றவர்களுக்கு ஒதுக்கீடு செய்யக்கூடாது. இதைக் கண்காணிக்கும் வகையிலே அதிகாரிகள் மற்றும் பத்திரிகையாளர்கள் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட வேண்டும்.

நகர்ப்புறங்களிலே குடிசை மாற்று வாரியத்தில் குறிப்பிட்ட சதவீத வீடுகள் பத்திரிகையாளர்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும். பத்திரிகையாளர்களின் வாரிசுதாரர்களுக்கு உயர் கல்வி பயிலும் வகையிலே கல்வி நிறுவனங்களிலே ஒரு குறிப்பிட்ட சதவீதம் இட ஒதுக்கீட்டை அரசு ஒதுக்கீடு செய்ய வேண்டும். அதேபோல தனியாக Journalist Institute ஒன்றை அரசின் சார்பிலே ஏற்படுத்தித் தர வேண்டும். ஓய்வூதியம் பெறுவதிலே உள்ள விதிமுறைகள் தளர்த்தப்பட வேண்டும். ஓய்வூதியம் பெறும் பத்திரிகையாளர் இயற்கை மரணம் எய்தினால், குடும்பத்திற்கு வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியம் ரூபாய் 2,000 என்பதை ரூபாய் 5,000 ஆக உயர்த்தித் தர வேண்டும்.

20 ஆண்டுகள் பத்திரிகைத் துறையில் பணிபுரிந்து இயற்கை எய்தினால் வழங்கப்படும் ...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்திரபாண்டியன் அவர்கள். (குறுக்கீடு)

***திரு. கே. ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தினசரி பத்திரிகை நிருபர்களுக்கு பஸ் பாஸ், இரயில் கட்டணத்தில் 50 சதவீதம் சலுகை அளிக்கப்படுகிறது. அனைத்து வாரப் பத்திரிகையாளர்களுக்கும் பாரபட்சம் காட்டாமல் இந்தச் சலுகைகளை வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரை வழங்கும்போது இது குறித்த விளக்கத்தைச் சொல்லுவார்கள். அடுத்து, திரு. அ. சௌந்திரபாண்டியன். உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 7 நிமிடங்கள். (குறுக்கீடு) மைக் கொடுங்கள்.

திரு. அ. சௌந்திரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேசும் கலை வளர்த்து, பெரியாரின் கொள்கை ஏந்தி, ஜனநாயக நெறிகாத்து, கடைசி மனிதனுக்கும் ஜனநாயகம் உரித்தாக்கிய வாழும் பெரியார் அய்யா முதல்வரை வணங்குகிறேன்.

வீறுபாய்ச்சும் விரிவுரையாளர்களை வித்திட்ட இனமானப் பேராசிரியரை வணங்குகிறேன்.

திராவிட இயக்கத்தின் நான்காம் தலைமுறையும், நாளைய தமிழ்ச் சமுதாயத்தின் வழிகாட்டியுமான மாண்புமிகு துணை முதல்வர் அண்ணன் தளபதியாரை வணங்குகிறேன்.

சுற்றுலா, கலை—பண்பாடு, பதிவுத் துறை, செய்தி—விளம்பரம் ஆகிய துறைகளில் பேச வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் மற்றும் அரசு கொறடா அவர்களுக்கும் நன்றி கூறி, என் உரையைத் தொடங்குகிறேன்.

மனித இனத்திற்கு மகிழ்ச்சியூட்டி அறிவு வளர்ச்சியை விசாலப்படுத்திடும் சுற்றுலா, கலை—பண்பாட்டுத் துறையானது சமூகப் பொருளாதார வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகிக்கிறது உலகளவில் கருத்தொருமிப்பிற்கு வழிகாணுகிறது. சுற்றுலாத் தலங்கள் உலகளாவிய கலாச்சாரங்களின் சங்கமமாகிறது என்று சொன்னால், மிகையாகாது.

இத்துறை 1971—இல் நமது தலைவர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்டது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சுற்றுலாத் துறையின் வழிகாட்டிப் பயிற்சிகள் எந்த அளவிற்குத்

தெளிவிருக்கிறதோ, அந்த அளவிற்கு சுற்றுலாவை மேம்படுத்த முடியும் என்ற அடிப்படையில் தமிழகத்தில் ஊரக வளர்ச்சித் துறையின்மூலமாக 400 பேருக்கு ரூபாய் 22.10 இலட்சம் செலவில் பயிற்சி வழங்கியதை வரவேற்கின்றேன். 2007–2008 ஆம் ஆண்டு உதகை சுற்றுலா சுற்றுச் சாலைக்காக ரூபாய் 439.50 இலட்சம் ஒதுக்கியதை வரவேற்கிறேன். H.A.D.P. மூலம் நீலகிரிக்கு 2008–2009 ஆம் ஆண்டு சுற்றுலா மேம்பாட்டிற்கு ரூபாய் 203.50 இலட்சம் ஒதுக்கியதை வரவேற்கின்றேன். அத்துடன் கடந்த மூன்று ஆண்டுகளில் கட்டமைப்பு வசதிக்காக கழக அரசின் நிதி ஒதுக்கீடாக 2006–2007 ஆம் ஆண்டில் ரூபாய் 63.57 கோடியும், 2007–2008 ஆம் ஆண்டில் ரூபாய் 51.53 கோடியும், 2008–2009 ஆம் ஆண்டில் ரூபாய் 62.04 கோடியும் ஒதுக்கியதன்வாயிலாக இன்றைக்கு 2005–2006 இல் 50 விழுக்காடு வளர்ச்சிபெற்றது. தற்போது 2008–2009 ஆம் ஆண்டில் 62 சதவீதமாக உயர்ந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 12–55

2004–2005 ஆம் ஆண்டில், முன்பதிவின்மூலமாக 14.90 இலட்சம் ரூபாய்தான் ஈட்டியிருக்கிறார்கள். ஆனால், 2008–2009 ஆம் ஆண்டில் அது 138.70 இலட்சம் ரூபாயாக உயர்ந்துள்ளதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தமிழ்நாடு சுற்றுலாமூலம் அந்நியச் செலவாணி ஈட்டுவதில், 2005 ஆம் ஆண்டில் 2,556 கோடி ரூபாயாக இருந்தது, 2008 ஆம் ஆண்டில் 6,236 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. இது கடந்த ஆட்சியைவிட சுமார் மூன்று மடங்கு அதிகரித்துள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மேலும், 2007 ஆம் ஆண்டில் மூன்று சுற்றுலா விருதுகளையும், 2008 ஆம் ஆண்டில் ஒரு சுற்றுலா விருதையும், ஆக மொத்தம் நான்கு சுற்றுலா விருதுகளைக் கழக அரசு பெற்றிருப்பது, சுற்றுலாத் துறை ஆற்றியிருக்கும் பணியின் சாதனை என்று சொன்னால், அது மிகையாகாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஜனநாயகத்தின் நான்காவது தூணாகப் பத்திரிகைத் துறை விளங்குகின்ற காரணத்தால், இத்துறையில் பணியாற்றுபவர்கள் எதிர்காலம் பற்றிய ஏக்கம் மற்றும் துயரமின்றிச் சேவை செய்திடவும், அவர்களது வாரிசுதாரர்கள் அடிப்படை வசதிகளைப் பெற்றிடவும், பத்திரிகையாளர்களின் ஓய்வூதியம் ரூ.3,000/–லிருந்து ரூ.4,000/–ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் 87 பேர் பயன்பெறுகின்றார்கள். இதுபோன்று, குடும்ப ஓய்வூதியம், குடும்ப உதவி நிதி மற்றும் பத்திரிகையாளர்கள் நல நிதியம், இணையதளம், அடையாள

அட்டைகள், பஸ் பாஸ் போன்ற பல்வேறு நலத் திட்டங்கள் பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அரசுக் குடியிருப்புகளில் ஒதுக்கீடு பெற்றவர்கள் 283 பேரில் 140 பேரை இவ்வரசு தேர்வு செய்துள்ளது. வீட்டுமனைகள் வழங்கப்பட்டுள்ள 438 பேரில் 174 பேரைத் தேர்வு செய்து, கழக அரசு சாதனை புரிந்துள்ளது. இவ்வாறாகப் பத்திரிகையாளர் நலன் பாதுகாக்கப்பட்டிருக்கிறது. கடந்த ஆட்சியில் பத்திரிகையாளர்கள் நிலை என்ன என்பதை நாட்டு மக்களும், இங்கே வீற்றிருக்கின்ற பத்திரிகையாளர்களும் நன்கறிவார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையானது, சமூக நீதியை நோக்கிய பயணத்தில் முதலிடம் பிடித்திருக்கிறது. இத்துறையில் 1,802 பேர் பணியாற்றுகிறார்கள் என்றால், இதில் 429 பேர் பெண்கள். இது சுமார் 23 சதவிகிதமாகும். 157 பேர் ஊனமுற்றவர்கள். இது சுமார் 15 சதவிகிதமாகும்.

தொழிலாளருக்கு இரவுப் படியாக 7 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. இதனை 15 ரூபாயாக உயர்த்தித் தர வேண்டுமென்று வேண்டி, விரும்பிக் கேட்டுக்கொள்கின்றேன். இத்துறையில் ஆண் தொழிலாளர்களுக்குத் தையற்கூலியாக ரூ.800/–ம், பெண் தொழிலாளர்களுக்கு ரூ.120/–ம் வழங்கப்படுகிறது. ஆண்களுக்கு ஈடாக பெண்களுக்கும் இதனை சமன் செய்யவேண்டுமென்று சமூக நீதிக் காவலர் அவர்களுடைய மேலான பார்வைக்குச் சமர்ப்பிக்கின்றேன்.

சத்தமில்லாமல் சாதனை படைத்து வருவது எழுதுபொருள்–அச்சுத் துறையாகும். இந்தத் துறையின்மூலமாக சட்டப் பேரவை உறுப்பினர்களின் letter pad அச்சிட்டுத் தருவதுபோல், cover–களையும் இத்துறையே வழங்குமானால், இத்துறையின் சாதனையும், சேவையும் முழுமை பெறும் என்ற வேண்டுகோளை வைக்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிலத்திற்கு சட்ட அங்கீகாரத்தை ஏழைகளுக்குப் பதிவுத் துறைமூலம் வழங்கச் செய்த நமது முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களை இந்தியத் திருநாடே இன்று பாராட்டுகின்றது; வரவேற்கின்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்கள் எப்போதெல்லாம் பதவி ஏற்கிறார்களோ, அப்போதெல்லாம் தமிழ்நாட்டில் கலை–பண்பாடு, நாகரிகம் இலக்கியம் ஆகியவை சட்டத்தின் துணையுடன்

பாதுகாக்கப்படுகின்றன என்பதை எதிர்க்கட்சியினரும் ஏற்றுக்கொள்ளும் கூற்றுத்தான். சமீபத்தில், வட அமெரிக்காவில் தமிழ்ச் சங்கப் பேரவை நிகழ்ச்சி ஒன்று அட்லாண்டா நகரில் நடைபெற்றபொழுது, தமிழ்ப் பண்பாடு புதிய தலைமுறையினருக்கும் எடுத்துச் செல்லப்பட வேண்டுமென்ற விவாதத்தின்போது ஒரு கவிஞர் பேசியிருக்கின்றார். தந்தை பெரியார் காட்டாறாகவும், அண்ணா அவர்கள் அந்தக் காட்டாற்றின் நீரைத் தேக்கி வைத்த அணையாகவும், ஆனால் அந்த நீரைக் கடைசி வயலுக்கும் கொண்டு சேர்த்த பெருமை தலைவர் கலைஞர் அவர்களுக்குச் சொந்தம் என்று சுட்டிக்காட்டியிருக்கிறார். இது அமெரிக்காவில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

2007 ஆம் ஆண்டில் தமிழகத்தில் சென்னை சங்கமம்மூலம் பல்வேறு கலைஞர்களும், கலைகளும் புத்துயிர் பெற்றிருக்கின்றன. இதற்குக் காரணகர்த்தாவான மாநிலங்களவை உறுப்பினர், சமூக சிந்தனையாளர், கவிஞர் கனிமொழி, எம்.பி. அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

சுற்றுலா வள வாய்ப்புகளைப் பயன்படுத்தி, எனது தொகுதியில் பக்காசூரன் மலைக்கு சாலை வசதி செய்து, காட்சிமுனை அமைத்திட வேண்டுமென்று வேண்டி, விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். கோத்தகிரி பகுதியில் Catherine Water falls–ல் சுற்றுலா மேம்பாடு செய்திட அலுவலர்கள் ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும். குன்னூர் பேருந்து நிலையத்தை நவீன முறையில் விரிவாக்கம் செய்திட வேண்டுகிறேன். எனது தொகுதியில் கட்டப்பெட்டு, பாரதி நகருக்கு சாலை வசதி ஏற்படுத்துமாறும், அதேபோல, தெங்குமரஹடாவிற்குச் செல்ல மாயாற்றின் குறுக்கே பாலம் அமைத்திடுமாறும் கோரிக்கை வைக்க விரும்புகிறேன். கோத்தகிரி–மேட்டுப்பாளையம் இடையில் பொது மக்கள் பயன்பெறும்பொருட்டு, H.A.D.P. மூலம் சிற்றுண்டி மற்றும் கழிப்பிட வசதிகள் செய்து தர நெடுஞ்சாலைத் துறை இடத்தைத் தேர்வு செய்திட வேண்டுகிறேன். நீலகிரியில் நடுத்தர மக்களுடைய வீடுகள் என்பது இன்றைக்கு கேள்விக்குறியாக இருக்கின்ற காரணத்தால், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்வாயிலாக குன்னூர், கோத்தகிரி, ஊட்டி, கூடலூர் போன்ற நான்கு பகுதிகளில் வீடுகளை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏப்ரல், மே மாதங்களில் சுற்றுலா மையங்களான உதகை, கொடைக்கானல், ஏற்காடு, குற்றாலம் போன்ற பகுதிகளுக்குச் சுற்றுச்சூழல் பேருந்துகளை இயக்கிட அரசு ஆவன செய்ய வேண்டுகிறேன்.

பிற்பகல் 1–00

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் கடன்கள் சுமார் 16 கோடி ரூபாயாக உள்ளது. அந்தத் தொழிலாளர்களுடைய நலன் காக்கும் தலைவர் கலைஞர் அவர்கள் அம்மக்களின் நலன் கருதி, அந்தக் கடன்களைத் தள்ளுபடி செய்திட அன்போடு வேண்டுகிறேன். அரசின் பல்வேறு நலத் திட்டங்கள் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களைச் சென்றடைவதில்லை. வருமான வரம்பு காரணமாக, நல்லரசின் நலத் திட்டங்களான திருமண உதவித் தொகை, முதியோர் ஓய்வூதியம், உழவர் அட்டைமூலம் பெறும் நலன்கள், இலவச எரிவாயு அடுப்பு போன்ற பல்வேறு நலத் திட்டங்கள் அவர்களைச் சென்றடைவதில்லை. பனி, மழை, அட்டைக் கடி மற்றும் வன விலங்குகளுக்கு மத்தியில் வாழும் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் சூழ்நிலையை, தாயுள்ளம் கொண்ட தலைவரின் மேலான பார்வைக்குச் சமர்ப்பிக்கிறேன்.

இந்த மண்ணில் கடைசித் தமிழன் வாழும் வரை நிலைத்திருக்கும் சொற்கள் என நான் கருதும் இரண்டில் ஒன்று, அய்யன் திருவள்ளுவர்; மற்றொன்று, தமிழின் முகவரியாகத் திகழும் நமது தலைவர், முதல்வர் கலைஞர் ஐயா அவர்கள் என்று கூறி, வாய்ப்புக்கு நன்றி கூறி, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. கணபதி அவர்கள் (குறுக்கீடு) திரு. செந்தில் பாலாஜி அவர்கள்.

திரு. வே. செந்தில் பாலாஜி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட இனாம் கரூர், காதப்பாறை, ஆண்டான்கோயில் போன்ற ஊராட்சிகளில் கோயில் நிலங்கள் என்று அரசினால் கடிதம் வழங்கப்பட்டு, பத்திரப் பதிவு அலுவலகத்தில் பத்திரப் பதிவு தடை செய்யப்பட்டுள்ளது. இதற்கு, மதுரை, உயர் நீதிமன்றத்திலே பொது மக்கள் 28–4–2009 அன்று நீதிமன்றத்தினுடைய ஆணையைப் பெற்றுக் கொடுத்தும் இன்று வரை பத்திரப் பதிவு நடைபெறவில்லை. இதற்கிடையிலே அறநிலையத் துறையின்மூலம், இந்தப் பதிவுகளை நாங்கள் மேல்முறையீடு செய்கிறோம் என்று ஒரு கடிதம் வழங்கியுள்ளார்கள். எனவே, பத்திரப் பதிவு நடைபெறுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைச்சர் அவர்கள் பதிலுரையில் சொல்வார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கணபதி அவர்கள். (குறுக்கீடு) மைக் கொடுங்கள்.

***திரு. ந. கணபதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முத்திரைத்தாள் மற்றும் பத்திரப் பதிவு, சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு, செய்தி மற்றும் விளம்பரம், எழுதுபொருள் மற்றும் அச்சு ஆகிய துறைகளின் மானியக் கோரிக்கைகளின்மீது பேச எனக்கு வாய்ப்பளித்த கழகப் பொதுச் செயலாளர், எங்கள் குடும்பக் குல தெய்வம், தந்தை பெரியாரின் கொள்கையை ஏற்று, பேரறிஞர் அண்ணாவின் வழிகாட்டியாகவும், பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்களின் வாரிசாகவும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினை வழிநடத்திச் செல்கின்ற வருங்காலத் தமிழகத்தின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) பேரவைத் துணைத் தலைவருக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தில் ஆவணங்கள் பதிவு செய்வதற்கும், இந்து திருமணம் மற்றும் சிறப்புத் திருமணம் பதிவு செய்வதற்கும், 568 சார் பதிவாளர் அலுவலகங்கள் மற்றும் அலுவலகங்கள் செயல்படுவதில், 50 சதவீதம் வாடகைக் கட்டடத்தில் செயல்படுவதாகக் கொள்கை விளக்கக் குறிப்பில் கூறியுள்ளீர்கள். வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்ற சார் பதிவாளர் அலுவலகங்கள் பழுதடைந்துள்ளதாலும், சேதமடைந்திருப்பதாலும், அவை அரசுக் கட்டடத்தில் இயங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

பொது அதிகாரப் பத்திரம்மூலம் பலவிதமான மோசடிகள் நடைபெற்று வருகின்றன. பொது அதிகாரப் பத்திரம்—General Power of Attorney—குறித்த பதிவுகள் வில்லங்கச் சான்றிதழில் இடம்பெறாத காரணத்தினால், ஒரே நிலத்தை ஒரே நபர் 5, 6 நபர்களுக்கு விற்கின்ற பெரிய அளவு மோசடி நடைபெறுவதாகப் பத்திரிகைகளில் செய்திகள் வெளிவருகின்றன. எனவே, வில்லங்கச் சான்றிதழில் பொது அதிகாரப் பத்திரம் குறித்த தகவல்கள் இடம்பெறச் செய்ய வேண்டும். இதுபற்றிப் பதிவுச் சட்டத்தில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்று சென்ற ஆண்டு அறிவித்தீர்கள். அறிவிப்பின் நிலை என்ன என்று அமைச்சர் விளக்குவாரா?

பெரும்பாலான பத்திரப் பதிவுகள் புரோக்கர்கள்மூலம் நடைபெற்று வருவதால், லஞ்சம் மற்றும் ஊழல் போன்றவை பத்திரப் பதிவு அலுவலகங்களில் புரையோடிக் கிடக்கின்றன. இதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

தமிழகத்தில் பெரும் புள்ளிகள் மற்றும் பல பணக்காரர்கள் சென்னை மற்றும் சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளில் மிக அதிகமான அளவுக்கு நிலங்களை வாங்கிக் குவித்து வைத்துக்கொண்டு, அவற்றைப் பயன்படுத்தாமல், விலையேற்றம் வரும் என்று எதிர்பார்த்து விற்காமல் இருக்கின்ற காரணத்தினால், நிலத்தின் விலை பல மடங்கு கூடி, இன்றைய சூழ்நிலையில் ஏழை, எளிய மக்கள் ஒரு சென்ட் நிலம்கூட வாங்க முடியாத நிலையில் உள்ளதை அறிந்து இந்த அரசு நடவடிக்கை எடுத்திட வேண்டுகிறேன்.

பத்திரப் பதிவுத் துறை அலுவலகத்தில் பணியாற்றும் பணியாளர்களுக்குப் போதிய கணினிப் பயிற்சி இல்லாததால், பத்திரங்களைப் பதிவு செய்கின்றபோது, பதிவு செய்த பத்திரங்களையோ அல்லது பழைய பத்திரங்களையோ பெறுகின்றபோது பொது மக்களுக்கு சிரமங்கள் ஏற்படுகின்றன. அதனைப் போக்குவதற்கு அரசு முன்வர வேண்டும். முத்திரைத்தாள்கள் அரசின் சார்பில் அலுவலகத்தில் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

பிற்பகல் 1–05

சுற்றுலாத் துறை என்பது நாட்டின் வருமானத்தையும், அன்னியச் செலாவணியையும் ஈட்டித் தரும் ஒரு பிரதான துறையாகும். ஒரு நாட்டிற்கு சுற்றுலாப் பயணிகள் வர வேண்டுமானால், அந்த சுற்றுலாத் தலம் அமைதியாகவும், சட்டம்–ஒழுங்கு என்பது கட்டுப்பாட்டிலும் இருந்தால்தான் சுற்றுலாப் பயணிகள் சுதந்திரமாக சுற்றுலா வருவார்கள். இன்று நாட்டின் நடப்பு என்ன? பத்திரிகையைப் பார்த்தால், கொலை, கொள்ளை, வழிப்பறி என்ற இந்த நிலையில் சுற்றுலாப் பயணிகள் தமிழ்நாட்டிற்கு வரத் தயங்குகிறார்கள்.

சுற்றுலாத் துறையில் மாண்புமிகு அம்மா ஆட்சிக் காலத்தில் "ட்டி–3 அமெடியஸ்" விருது, பாட்வா சர்வதேச விருது, தேசிய மற்றும் உலகளவில் பாராட்டுக்களையும், பரிசுகளையும் பெற்றுள்ளதை மறக்க முடியாது. ஆனால், இன்று அப்படி ஏதாவது நீங்கள் விருதுகளைப் பெற்றுள்ளீர்களா என்பதனை அறிய விரும்புகிறேன்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்மூலம் தங்கும் விடுதிகள், இளைஞர் விடுதிகள், அகமகிழ் மன்றங்கள், உணவகங்கள், சுற்றுலாத் திட்டங்கள், படகு இல்லங்கள், தொலைநோக்கி இல்லங்களை சுற்றுலாப் பயணிகள் விரும்புகிற வகையில் தர மேம்பாடு செய்தும், புதிய அம்சங்களை உட்புகுத்தியும் செயல்படவும் வேண்டும்.

தமிழ்நாடு தனித்தன்மைவாய்ந்த கலாச்சாரத்தையும், பலவகை சுற்றுலா வளவாய்ப்புகளையும் கொண்டிருப்பதால், மேலைநாடு மற்றும் வெளிநாட்டைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் ஆண்டு முழுவதும் நமது நாட்டில் உள்ள சுற்றுலாத் தலங்களுக்கு வருகின்றனர். அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளையும், மேலும் அவர்களுக்குப் போதிய காவல் பாதுகாப்பும் வழங்கிடவும் வேண்டும்.

சுற்றுலா அலுவலர் பதவிகள் மொத்தம் 24. தற்பொழுது காலியாக உள்ள இடம் 12. 1987 ஆம் ஆண்டு டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் தலைமையில் உருவாக்கப்பட்ட பதவிகள். தற்பொழுது அரசு ஆணை எண் 78 மூலம் இந்தப் பதவிகளை நிரப்பத் தடை செய்வதாகத் தெரிகிறது. ஆகவே, அந்தத் தடையை நீக்கி, காலியாக உள்ள பணியிடங்களை நிரப்பிடக் கேட்டுக்கொள்கிறேன்.

நலிந்த நாட்டுப்புறக் கலைஞர்களின் வாழ்வில், அவர்களின் பாதுகாப்பு மற்றும் முக்கியத்துவத்தைக் கருத்தில்கொண்டு, அவர்களுக்கு மானியத்துடன்கூடிய கடன் உதவி மற்றும் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் அனைவருக்கும் வழங்கிட வேண்டும்.

மேலும், இந்திய இசை வரலாற்றில் தமிழ் இசைக்குத் தனி மகத்துவம் உண்டு. ஆகவே, அரசு இசைக் கல்லூரியில் பயிலும் அனைத்துப் பிரிவு மாணவர்களுக்கும் கல்வி உதவித் தொகை ரூ.250 என்று வழங்கப்படுவதை ரூ.500—ஆக உயர்த்தித் தரக் கேட்டுக்கொள்கிறேன்.

அரசு கவின்கலைக் கல்லூரி, அரசு கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரியில் பயிலுகின்ற மாணவ, மாணவியர்க்கு, கலை, பண்பாட்டினை வளர்க்கும்பொருட்டு அவர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கிட வேண்டும்.

மேலும், நலிந்த நிலையில், அகவை முதிர்ந்த நிலையில் வாழும் சிறந்த கலைஞர்களுக்கு ரூ.1,000 என்று வழங்கப்படுவதை, அவர்களின் குடும்பச் சூழ்நிலை கருதி ரூ.2,000 என்று வழங்கிட வேண்டும்.

நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு, கலைக் குழுக்களுக்கு இசைக் கருவிகள், ஆடை அணிகலன்கள் வாங்க நிதி உதவியாக ரூ.750/—ம், ரூ.2,500/—ம் வழங்கப்படுவதை உயர்த்தி வழங்கிட வேண்டும்.

தமிழகத்தில் உள்ள நினைவுச் சின்னங்களையும், வரலாற்றுச் சின்னங்களையும் சீரமைத்துப் பாதுகாப்பதுடன், 20 அருங்காட்சியகங்கள் என்று உள்ளதை அனைத்து மாவட்டங்களிலும் ஏற்படுத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசு எழுதுபொருள்—அச்சுத் துறையின்மூலம் காகிதங்கள், அட்டைகள், தட்டச்சுப் பொறிகள், படிப்பெருக்கிகள், படிப்பெருக்கி மை, மைப்படித் தாள், படிப்பெருக்கித் தாள் போன்றவை அரசு எழுதுபொருள் கிடங்கு, சென்னையிலிருந்து அரசு அலுவலகங்களுக்குக் கிடைப்பதுபோல், தென்மட்ட அரசு அலுவலகங்களும் பயன்பெறுகின்ற வகையில் மதுரையில் அரசு எழுதுபொருள் கிடங்கு அமைத்திடக் கேட்டுக்கொள்கிறேன்.

தம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் தம் தொகுதியினுடைய எம்.எல்.ஏ.க்களின் செயல்பாடு சட்டமன்றத்தில் எப்படி உள்ளது என்பதைத் தொகுதி மக்கள் தெரிந்துகொள்ளவும், மேலும், தமிழகத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் எவ்வாறு செயல்படுகிறார்கள் என்பதனைத் தெரியப்படுத்திடவும், உதாரணத்திற்கு காவிரி, முல்லைப் பெரியாறு, இலங்கைப் பிரச்சினை, கச்சத்தீவுப் பிரச்சினை, குடிநீர்த் திட்டங்கள் மற்றும் மாநிலத்தின் முக்கியப் பிரச்சினைகள் குறித்து சட்டமன்றத்தில் விவாதிக்கப்படுவதைத் தமிழக மக்கள் உடனுக்குடன் தெரிந்துகொள்ள தொலைக்காட்சிகளில் நேரடி ஒளிபரப்புச் செய்ய நடவடிக்கை எடுக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

திரைப்படங்களைத் தணிக்கை செய்வதற்கு சென்சார் போர்டு என்ற அமைப்பு உள்ளதைப்போல, தனியார் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சிகளையும் தணிக்கை செய்து அந்த ஒளிபரப்பினை அனுமதிக்கத் தனியே ஒரு அமைப்பை உருவாக்கிட வேண்டுமென்றும், அருவருக்கத்தக்க மற்றும் குழந்தைகள், பெண்கள் காண இயலாத நிலையிலுள்ளதைத் தடுக்கவும் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–10

பொது மக்களுக்குக் குறைந்த செலவில் கேபிள் டி.வி. கிடைக்கச் செய்யும் வகையில் ஏற்படுத்தப்பட்ட அரசு corporation–ன் நிலை என்ன? அந்தக் கழகம் மூடப்பட்டுவிட்டதா என்பதைத் தெரிவிக்கக் கேட்டுக்கொள்கிறேன். ஒரு சில தொலைக்காட்சிகளில் செய்யப்படும் விளம்பரங்களுக்கு அதிக அளவில் கட்டணங்களை அந்தத் தொலைக்காட்சி நிறுவனங்களே வசூலிக்கின்றன. அந்தத் தொகையில் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை அரசு வசூலித்து, பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்குப் பயன்படுத்த வேண்டும். அதேபோல, Madras Reporters Guild–க்கு கட்டடம் கட்டித் தர அரசு ரூ.39.40 இலட்சம் ஒதுக்கியுள்ளது. எப்பொழுது அது கட்டித் தரப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் தெரிவிக்க வேண்டும். டி.வி., பத்திரிகையாளர் பெருகிவிட்டதால், அரசுமூலம் அவர்களுக்கு வீடு கட்டித் தரப்பட முடியுமா என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவாரா? பத்திரிகையாளர்களின் பென்ஷன் உயர்த்தப்பட வேண்டும், சில விதிமுறைகளும் தளர்த்தப்பட வேண்டும். பணிக்காலத்தில் இறந்தால் வழங்கும் பணம் உயர்த்தித் தரப்பட வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கணபதி, நன்றி சொல்லி உரையை முடித்து விடுங்கள்.

திரு. ந. கணபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு, வானூர் ஒன்றியம், திருவக்கரை–கொடுக்கூர் சங்கராபரணி ஆற்றின் குறுக்கே மேம்பாலம் கட்ட வேண்டுமென்று மூன்று ஆண்டுகளாக நான் சட்டமன்றத்தில் பேசும்பொழுதெல்லாம், இந்தக் கோரிக்கையை வைத்திருக்கின்றேன். அந்தப் பகுதியைச் சேர்ந்த 15 கிராம மக்கள் மழைக் காலங்களில் வெள்ளம் வரும்பொழுதெல்லாம் 50 கிலோ மீட்டர் சுற்றிக்கொண்டு, அருகேயுள்ள நகரங்களான விழுப்புரம், புதுச்சேரி செல்கின்றனர். அதேசமயம், திருவக்கரைக்கு வரும் பக்தர்களுக்கு வசதியாகச் செல்ல இந்த பாலத்தைக் கட்டித் தர வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு நிமிடம். நெடுஞ்சாலைத் துறையிலிருந்து தற்போது தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் மயிலம்–புதுச்சேரி சாலை; இந்தச் சாலை புதுச்சேரி, விழுப்புரம் மற்றும் திருப்பதி ஆகிய நகரங்களை இணைக்கும் முக்கியச்

சாலையாகும். Package 3–ன்மூலம் 15 கிலோ மீட்டர் வேலை நடைபெற்று மீதம் உள்ள 16 கிலோ மீட்டர் சாலை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனை TNRSP–ன்மூலம் எடுத்துச் செய்தால் மட்டுமே சிறந்த முறையில் மேம்படுத்த முடியும். மேலும் பின்தங்கிய மற்றும் தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் இப்பகுதிக்கு TNRSP–ல் ஏதேனும் ஒரு திட்டத்தின்மூலம் மேற்கண்ட சாலையைப் பழுது நீக்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பதிலுரையாக மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உங்களுக்கு finishing trouble இருக்கிறது. நானும் பார்க்கிறேன், இரண்டு, மூன்று நிமிடங்களாக முடிக்கமாட்டேன் என்கிறீர்கள்.

திரு. ந. கணபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம். மேலும் 2007 ஆம் ஆண்டு சுற்றுலாத் துறை மானியக் கோரிக்கையில் நான் பேசும்போது, “ஆரோவில்” என்கின்ற சுற்றுலாத் தலம் பூகோளரீதியாக 90 சதவீதம் தமிழகப் பகுதியில் வானூர் சட்டமன்றத் தொகுதியில் இருந்தாலும், தமிழக அரசு எல்லைக்குள் இருந்தாலும், சுயாட்சி முறையிலே இயங்கி வருகிறது. இதனால் தமிழக அரசுக்குப் பல்வேறு வகையிலும் வருவாய் இழப்பு ஏற்படுகிறது. குறிப்பாக, சுற்றுலாத் துறைக்கு அதிகஅளவில் வருவாய் இழப்பு ஏற்படுகிறது. மேலும், இங்கு பல்வேறு முறைகேடுகளும், சட்டத்திற்குப் புறம்பான செயல்பாடுகளும் நடைபெற்று வருவதாக அறிகிறோம். இவ்வாறான முறைகேடுகளைத் தடுத்து நிறுத்தவும், மிகப் பெரிய சுற்றுலாத் தலத்தினுடைய வருவாய் தமிழகத்திற்கு வந்து சேரவும், ஆரோவில்–ஐத் தமிழக அரசு தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு...

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கணபதி, உங்களுக்கு நிறைய time கொடுத்திருக்கிறார்கள். போதும். மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆக்கப் பணிகளிலே தம்மை நீக்கமற நிறைத்திருக்கும் காரணத்தால், தூக்கமின்றி, துஞ்சுகிற நேரமின்றி, ஊக்கமுடன் பணியாற்றி, ஓய்வின்றிச் செயலாற்றி, ஆய்ந்தாய்ந்து தமிழர்க்கு அரிய பல நலத் திட்டங்களைச் செயல்படுத்தி, முன்னேற்றப் பாதையிலே

தமிழகத்தைக் கண்ணோட்டம் சிதையாமல் செலுத்துகிற தேர்ப் பாகர்; திக்கெட்டும் தமிழ் முழக்கம், தித்திக்கும் கலை நுணுக்கம், சாலைகளின் ஓரத்திலே சரிபாதி தொழிற்சாலை; வேகமுடன் வளர்கிறது வியக்கும்படி விஞ்ஞானம்; அரசுப் பணியாளர்கள் அகம் குளிர ஊதியத்தில் உயர்வளித்து, ஏழை மக்களுக்கும் மலிவு விலையில் மனம் குளிர அரிசி வழங்கி; விவசாயக் கடன்களை விரைவாகத் தள்ளுபடி செய்து; தொழிலாளர் தழைத்தோங்க கணக்கற்ற வாரியங்கள்; நலிந்தோர்க்கும் நிதியுதவி, மெலிந்தோர்க்கும் பண உதவி; என்று வழிந்தோடும் கருணையினால், வழிகாட்டும் அரசின் வெண்கொற்றக் குடையை மேலும் வெண்மையாய் ஆக்கும் மென்மை படைத்த, மேன்மைகொண்ட, பேராண்மை படைத்த எங்கள் பேராசான் மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களே, *(மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் *1–15*

இந்த மன்றத்தில் மட்டுமல்ல, அத்தனை மன்றத்திலும் நீரே பரிதி, நாங்கள் மாதவம் செய்து பெற்ற ஆதவன் நீர், வழு இன்றி வாழும் உமது ஒளியால் விழும் வெளிச்சக் கதிர்களால் துளிர்த்தவர் நாங்கள். இந்த மன்றத்தில் நான்காவது முறையாக செய்தித் துறை மானியக் கோரிக்கையை சமர்ப்பிக்க என்னை அமர்ப்பித்தவர் நீங்கள், உங்களின் கமல மலர்ப் பாதங்களுக்கு எனது நன்றியினைக் காணிக்கையாக சமர்ப்பிக்கிறேன்.

முதுமையில் அழகுபெறும் கனியினைப்போல, கனிவினில் முதிர்ந்து, கருணையில் திரண்டு நடந்திடும்பொழுது தரையும் அதிர்ந்திடாவண்ணம் அன்பினில் திளைத்து, பொறுமையை, ஆழ்ந்த புலமையை, அனைவரும் மதிக்கும் சான்றாண்மையை எங்கட்கு வார்த்தையால் அல்ல, வாழ்க்கையால் உணர்த்தும் மாண்புமிகு நிதி அமைச்சர் பேராசிரியர் பெருந்தகை அவர்களையும் வணங்கி, *(மேசையைத் தட்டும் ஒலி)* குறையின்றித் துறை நடத்தும் முறைகாக்கும் இறையாய் நிற்கும் பண்பினால் வளர்ச்சி பெற்று, சுழற்சியாய் இயங்கும் நெறியினால் எழுச்சியுற்றும், ஊரகப் பகுதிகளில் ஊருணி அமைத்தும், கல்விச் சாலைகள் சமைத்தும், நகர்ப்புறம் அனைத்தும் நல்கட்டமைப்பு வடித்தும், பார்த்தவர் தம் மூக்கிலே வைத்த விரலினை எடுக்கவே மறந்தும், வாழும் நிலையினை ஆழமாய் அமைத்த தமிழகத்தின் முதலாவது மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களே, *(மேசையைத் தட்டும் ஒலி)*

முதலாவது துணை முதலமைச்சர் அவர்களே என்கின்றபோது எல்லாவற்றிலும் நீங்கள் முதலாவதுதான். சென்னை மாநகராட்சிக்கு மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மேயரும் நீங்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டாவது முறையும் தேர்ந்தெடுக்கப்பட்டீர்கள். பொறுக்க முடியாதவர்கள் சட்டத்தைக் கொண்டு வந்து உங்களிடமிருந்த பதவியைப் பறித்தார்கள். ஆனால், காலத்தின் கட்டாயம் இன்றைக்குத் தமிழகத்திற்கே உள்ளாட்சித் துறை அமைச்சர் மட்டுமல்ல, முதல் துணை முதல்வராகவும் நீங்கள் பரிணாமம் பெற்றிருக்கிறீர்கள். உங்களை முதல் துணை முதல்வர் என்று அழைப்பதிலே மற்றவர்களைக் காட்டிலும் எனக்குப் பெரிதும் மன மகிழ்ச்சியும், புளகாங்கிதமும் ஏற்படுகிறது. ஏனென்று உங்களுக்குத் தெரியும், எனக்குத் தெரியும்; நம் இருவரும் அறிந்த மற்றவர்களுக்கு இது புரியும். ஏனென்றால், உங்கள் அரசியல் நெடும் பயணத்தில் ஆரம்ப காலம் முதல் இன்று வரை தோளோடு தோள் சேர்ந்து வந்திருக்கிறேன். இன்று மட்டுமல்ல, என்றுமே இறுதி வரையில் வருவேன் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதல் துணை முதல்வர் அவர்களே, உங்களது வழிகாட்டல் எங்களது துறைக்கு எப்போதும் உண்டு என்பதால் வணக்கங்கள்.

தமிழகம் உங்களுக்கு கடந்த தேர்தலில் சுற்றி வரும் ராஜ வீதியானது. சூறாவளியாய்ச் சுழன்றதால் வீசியது தென்றல் காற்று, எழுந்த்து ஞாயிறு, வெற்றியை முதல்வரின் நெற்றியில் சேர்த்த பெருமைக்கு நீரே சொந்தக்காரர். உங்களுக்கும், இந்த நல்வாய்ப்பினை வழங்கிய பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எனது நன்றியைக் காணிக்கையாக்கி, நேரத்தின் அருமை கருதி பதிலுரையை சுருக்கமாக வைத்துக்கொள்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

செய்தித் துறை அரசுக்குத் திருமுகம், திட்டங்களுக்கு அறிமுகம், வேளாண்மையானாலும், தொழில் மேலாண்மையானாலும், அவற்றை மக்கள் அறிந்து தாளாண்மை செய்வதற்கு எங்கள் துறையே விழியாகவும், செவியாகவும், அதற்கு விழிப்புணர்வாகவும் செயல்படுகிறது.

இத்துறை ஏழைகளுக்குப் படித்துறை. முதல்வரே சில காலம் இத்துறையை வைத்திருந்த காரணத்தால், அதில் பணியாற்றும் நொடி யாவும் மகிழ்ச்சியில் மிதக்கும் இதயம், நெகிழ்ச்சியில் நெகிழும் உள்ளம்.

செய்தித் துறை ஒருங்கிணைக்கிற பணியை ஓயாமல் செய்கிறது. ஆக்கப் பணிகளைத் தேக்கமின்றி இதழ்களுக்கு அளித்து இடம்பெறச் செய்தும், விளம்பரம் வெளியிட்டும், திட்டங்களில் பலர் களமிறங்கச் செய்தும் காரியமாற்றுவது எங்கள் துறை.

அத்தோடு தலைவர்கள் சிலைகளைக் காக்கிற பணியும், அவர்க்குப் புகழ் சேர்க்கிற பணியும், அவர்கள் அவதரித்த நாட்களில் மாலை வார்க்கின்ற பணியும் செய்கிற பொறுப்பு செய்தித் துறையினுடையது.

அதோடு, பொருட்காட்சி, திரைப்பட விருது, சின்னத் திரை விருது, படப்பிடிப்பு அனுமதி, அரசு விழா ஏற்பாடு, தமிழரசு வெளியீடு என்று பல்வேறு தளங்களில் பணியாற்றும் துறை.

மேலும், செய்தியாளர்கள் நலன்களை ஆதாரத்துடன் சேதாரமின்றிக் காக்கின்ற துறை செய்தித் துறை. செய்தியாளர்கள் குடும்பத்திற்கு ஓய்வூதியமளித்து, செய்திகள் சேகரிக்கும் பணியிலே பொருளினை சேகரிக்கத் தவறிய ஊடக நண்பர்கள் குடும்பம் தத்தளிக்கும்பொழுது, கலங்கரை விளக்கமாய் ஆனது தலைவர் கலைஞரின் அரசு.

பத்திரிகையாளர் பணியில் இயற்கை எய்தினால், அவர்கள் குடும்பத்திற்கு உதவி வழங்கும் திட்டமும் செம்மைப்படுத்தப்பட்டு, மூன்றாண்டுகளில் 39 குடும்பங்கள் பயன்பெற்றிருக்கின்றன.

ஒரு கோடி நிதியளித்து, கடைக் கோடி இதழாளர் கண்ணீரைத் தடுக்க பத்திரிகையாளர் நல நிதியம் தொடங்கி, அவர்தம் துயர் துடைக்கும் பணியும் இந்த ஆட்சியில்தான் நடைபெற்றிருக்கிறது.

காந்தி மண்டப வளாகம் மாநகரின் இதயப் பகுதியில் இடம்பெற்றிருக்கிறது. தனியார் பங்களிப்புடன் இந்த மகாத்மா காந்தி மண்டப வளாகத்தை மகத்தான வளாகமாய் மாற்றி சுற்றுலாப் பயணிகளுக்கு சுகம் சேர்த்திருக்கிறது.

பிற்பகல் 1–20

வெகுகாலம் வெளிச்சம் காணாமல் இருந்த பொருள் பொதிந்த கோரிக்கை, தாத்தா ரெட்டமலை சீனிவாசன் பெருந்தகைக்கு மணிமண்டபம் வேண்டுமென்ற அவா. அது செவ்வனே நிறைவேற்றப்பட்டு, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் இன்று மாலை திறந்து வைக்கப்பட இருக்கிறது என்கின்ற தேனான செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

திரைப்படத் துறை தழைத்து, திரைகடல் ஓடியும் திரவியம் தேடி, தமிழக வரைபடம் தன்னை உலகினில் நாட்டும் உயர்வினைப் பெற்று, உயர்வினை அடைய கலைஞரின் அரசு கனிவுடன் செய்த சலுகைகள் யாவும் காரணமாகும். இத்துறை தோற்கின் எத்துறை வெல்லும் என்பதே உண்மை. பத்தரை மாற்றுத் தங்கம் போலவே செய்திகள் அனைத்தும் பத்திரப்படுத்தும் கடமையாற்றும் துறை இது. தொடர்ந்து உழைப்போம், தொய்வின்றி இயங்குவோம், அரசின் பயன்களைக் கடைசி வரைக்கும் கொண்டு போய்ச் சேர்ப்போம், ஏழைகளின் இதழிலே புன்னகையைப் பொருத்துவோம், எளியவர் தமக்கு இன்முகம் காட்டுவோம், தன்னிறைவு பெற்ற தமிழகம் காண முதல்வரின் தலைமையில் கண் துஞ்சாது, பசி நோக்காது பணியாற்றி வாழ்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்ற நேரத்திலே சொன்னார்கள். சென்னை பத்திரிகையாளர் மன்றத்திற்கு இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு ரூ.30 இலட்சம் ஒதுக்கீடு செய்து புதிய கட்டடம் கட்டித் தர நடவடிக்கை எடுத்தது. ஆனால், தற்போது அறிவிக்கப்பட்ட அந்த இடத்தில் அரசினர் தோட்ட வளாகத்தில் புதிய சட்டமன்றம் கட்டப்பட்டு வருவதால், சென்னை பத்திரிகையாளர் மன்றத்திற்கு மாற்று இடம் தேர்வு செய்யப்பட்டு, அந்த இடத்திலே புதிய கட்டடம் கட்டித் தர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, பத்திரிகையாளர் ஓய்வூதியம். பத்திரிகைத் துறையிலே 20 ஆண்டுகள் பணியாற்றி, பணியிலிருந்து ஓய்வுபெற்ற, நலிவுற்ற நிலையில் உள்ள பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் மாதாந்திர ஓய்வூதியம் இவ்வரசு பொறுப்பேற்றபின் ரூ.3,000/–லிருந்து ரூ. 4,000/–ஆக உயர்த்தியுள்ளது. தற்போது இந்தத் திட்டத்தின்மூலமாக 31–12–2008 வரை 86 நபர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் 1987 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாண்டு ரூ. 41.2 இலட்சம் ஓய்வூதியமாக அளிக்கப்பட்டிருக்கிறது.

பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம். 1999 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டத்தின்கீழ், ஓய்வூதியம் பெற்று இயற்கை எய்திய பத்திரிகையாளர் மனைவிக்கு வழங்கப்பட்டு வந்த மாதாந்திர ஓய்வூதியம் இவ்வரசு பொறுப்பேற்றபின் ரூ.1,500/–லிருந்து ரூ.2,000/–ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 1–1–2008 முதல் 31–12–2008 வரை 21 நபர்களுக்குக் குடும்ப ஓய்வூதியம்

அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு ரூ.5.04 இலட்சமாக அளிக்கப்பட்டுள்ளது.

பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி. ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா அவர்களுக்கு இந்த பதிலைத் தந்திருக்கிறேன். அதேபோல, இவ்வரசு பொறுப்பேற்றபின் 6 பத்திரிகையாளர்களுக்கு மருத்துவ சிகிச்சைக்கு நிதி உதவியும், ஒரு பத்திரிகையாளர் மகளின் அறுவை சிகிச்சைக்கான நிதி உதவி மாண்புமிகு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 5 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

பத்திரிகையாளர் நல நிதியம். 14–1–2008 அன்று வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண் 17, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறைமூலமாக பத்திரிகையாளர் நல நிதியத்திற்கு ஒரு கோடி ரூபாய் நிதி தனியே ஒதுக்கப்பட்டு, தமிழ்நாடு மின் விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது. இந்த வைப்பீட்டுத் தொகைக்கு மாதம் ஒன்றுக்கு வட்டியாக ரூ. 83,033/– கிடைக்கும். இந்த வட்டித் தொகையிலிருந்து, கடுமையான நோயினால் பாதிக்கப்பட்டு மருத்துவ சிகிச்சை மேற்கொள்ளும் பத்திரிகையாளர்களுக்கு மருத்துவ நிதி உதவியாக ஒவ்வொருவருக்கும் ரூ.50 ஆயிரத்திற்கு மிகாமல் நிதி உதவி அளிக்கப்படும். 'தினகரன்' புகைப்பட நிருபர் திரு. சிவக்குமார் அவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாயை வழங்க நேற்றைக்கு முன்தினம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

செய்தியாளர்களுக்கு, அரசு அமைத்துள்ள பத்திரிகையாளர் அங்கீகாரக் குழு—Accreditation Committee–யின் பரிந்துரையின்பேரில் ஆண்டுதோறும் நாளிதழ்கள், தொலைக்காட்சிகள், செய்தி நிறுவனங்களில் பணிபுரியும் பத்திரிகையாளர்களுக்கு செய்தியாளர் அங்கீகார அட்டை—accreditation card வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி 1–1–2008 முதல் 31–12–2008 வரை செய்தியாளர் அங்கீகார அட்டை சென்னையில் 619 செய்தியாளர்களுக்கும், மற்ற மாவட்டங்களில் 61 செய்தியாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள்மூலம் 479 பத்திரிகையாளர்களுக்கு அடையாள அட்டை (Identity card) வழங்கப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

காலமுறை செய்தியாளர்களுக்கு செய்தி அட்டை. காலமுறை செய்தியாளர்களுக்கு செய்தியாளர் அட்டை பரிந்துரைக் குழுவின் பரிந்துரையின்பேரில் செய்தியாளர் அடையாள அட்டை வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி 1-1-2008 முதல் 31-12-2008 வரை சென்னையில் பணிபுரியும் 180 செய்தியாளர்களுக்கு, புகைப்படக்காரர்களுக்கு செய்தியாளர் அட்டை வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, பத்திரிகையாளர்களுக்கு இலவச பேருந்துப் பயண அட்டை. அங்கீகார அட்டை மற்றும் அடையாள அட்டை பெற்ற பத்திரிகையாளர்கள் செய்தி சேகரிப்பதற்கு வசதியாக அரசுப் பேருந்துகளில் பயணம் மேற்கொள்ளும்போது இலவசமாகப் பயணிப்பதற்கு ஏதுவாக ஒரு வருட காலத்திற்குச் செல்லத்தக்க வகையில் இலவசப் பேருந்துப் பயண அட்டைகள் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது.

பிற்பகல் 1-25

1-1-2008 முதல் 31-12-2008 வரை சென்னையில் அங்கீகார அட்டை பெற்ற 300 பத்திரிகையாளர்களுக்கும், மாவட்டங்களில் அடையாள அட்டை பெற்ற 1,127 பத்திரிகையாளர்களுக்கும் இலவசப் பேருந்துப் பயண அட்டைகள் வழங்கப்படுகின்றன. இலவசப் பேருந்துப் பயண அட்டை வழங்கும் வகையில் சுமார் 45.00 இலட்சம் ரூபாய் நடப்பாண்டில் செலவிடப்பட்டுள்ளது. இத்தொகையை எங்களுடைய துறை போக்குவரத்துத் துறைக்கு ஈடு செய்யும்.

பத்திரிகையாளர்களுக்கு அரசு வாடகைக் குடியிருப்பு வசதி. பத்திரிகையாளர்களுக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் சிறப்பு அடிப்படையில் அரசு வாடகைக் குடியிருப்பு ஒதுக்கப்பட்டு வருகின்றது. இதுவரை தமிழகம் முழுவதும் 31-3-2009 வரை பத்திரிகையாளர்கள் 140 பேர்களுக்கு வாடகை வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். பத்திரிகையாளர்களுக்கு வீட்டுமனை வசதி. இத்திட்டத்தின்கீழ் ஆறு மாவட்டங்களில் இதுவரை 214 பேர்களுக்கு வீட்டுமனைகள் வழங்கப்பட்டுள்ளன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கு பேசிய அனைவருமே பாகுபாடின்றிப் பத்திரிகையாளர்களுக்கு விளம்பரங்கள் வழங்கவேண்டுமென்று சொன்னார்கள். அதிலே இந்த அரசுக்கு எந்த பாரபட்சமும்

கிடையாது. விளம்பரங்களை வெளியிடக் கோரும் துறைகளின் பரிந்துரைகளைப் பரிசீலித்து, விளம்பரம் சென்றடைய வேண்டிய பகுதி, வாசகர்களின் தரம், விளம்பரத்தின் தன்மை மற்றும் பத்திரிகைகளின் உள்ளடக்கம் ஆகியவற்றின் அடிப்படையில், செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறையில் பத்திரிகைகளின் பட்டியல் தேர்வு செய்யப்படுகின்றது. துறைகளிலிருந்து பெறப்படும் வரைகலை ஒப்பந்தப்புள்ளி, நிலம் கையகப்படுத்துதல், விளம்பரங்கள் வெளியிடும்போது துறை குறிப்பிடும் நாளிதழுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. பின்பு நாளிதழ்களின் விற்பனை அடிப்படையிலும், விளம்பரத்தின் முக்கியத்துவத்தைக் கருதியும், அது சென்றடைய வேண்டிய பகுதி ஆகியவற்றைக் கருத்தில்கொண்டும் நாளிதழ்களில் விளம்பரங்கள் வெளியிடப்படுகின்றன. எனினும், சிறிய அளவில் வெளிவரும் அரசின் அங்கீகரிக்கப்பட்ட பட்டியலில் இடம்பெற்றுள்ள நாளிதழ்களுக்கும் அரசு விளம்பரங்கள் அளிக்கப்பட்டு அவர்கள் ஊக்குவிக்கப்படுகின்றார்கள் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இறுதியாக, எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை குறித்து ஓரிரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையின்கீழும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்பேரிலும் தமிழகத்தின் அனைத்துத் துறைகளிலும் இத்துறை பீடுநடை போடுகிறது. இந்தியத் துணைக் கண்டத்திற்கே தமிழகம் வழிகாட்டியாகத் திகழ்கிறது. தமிழகத்திலே நிறைவேற்றப்படும் திட்டங்கள், இந்திய அளவிலும், உலக அளவிலும் உதாரணப்படுத்தப்பட்டு, பேசப்பட்டு வருகின்றன. கொள்கை விளக்கக் குறிப்பில் தெரிவித்துள்ளவாறு, எழுதுபொருள்—அச்சுத் துறையின்கீழ் சென்னையில் அரசு மைய அச்சகம், உயர் நீதிமன்றக் கிளை அச்சகம், திருச்சி, சேலம், புதுக்கோட்டை, விருத்தாசலம் மற்றும் மதுரை ஆகிய நகரங்களில் கிளை அச்சகங்களும், அனைத்துத் துறைகளின் எழுதுபொருள் தேவையினை நிறைவேற்றுவதற்காக எழுதுபொருள் கிடங்கு ஒன்றும் சென்னையில் இயங்கி வருகிறது. அதுபோல, பொதுமக்களால் நேரடியாகப் பயன்படுத்தப்படும் பிறப்பு, இறப்புச் சான்றிதழும், வருவாய்த் துறை, புள்ளியியல் துறை, மருத்துவத் துறை, போக்குவரத்துத் துறை மற்றும் கல்வித் துறை போன்ற அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் படிவங்கள் மற்றும் அனைத்துத் துறைகளுக்கும் தேவையான படிவங்களும், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை வாயிலாக அச்சிட்டு வழங்கப்படுகின்றன.

அரசுத் தேர்வுத் துறையினால் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் நடத்தப்படும் பல்வேறு தேர்வுகளுக்கான விண்ணப்பங்களும், விடைத்தாள்களும், தொழில்நுட்பத் தேர்வுகளுக்கான விடைத்தாள்களும், தமிழ்நாடு தேர்வாணையத்தால் நடத்தப்படும் தேர்வுகளுக்கான விடைத்தாள்களும், சட்டமன்றச் செயலகக் குழு அறிக்கைகள், சட்டமன்ற நிகழ்ச்சித் தொகுப்புகள், அட்டவணைக் குறிப்புகள் ஆகியவை இத்துறையின்மூலமாக அச்சிடப்பட்டு வருகின்றன. மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர், மாண்புமிகு தலைமை நீதியரசர், உயர் நீதிமன்ற நீதியரசர் மற்றும் தலைமைச் செயலக உயர் அலுவலர் ஆகியோருக்கான பெயர் விவரக் கற்றை—Letter pad, பெயர் அட்டை—Visiting Card முதலியன இத்துறையால் அச்சிடப்பட்டு வழங்கப்படுகின்றன.

மேலும், ஆண்டுதோறும் வழங்கப்படும் தமிழக அரசின் நாட்காட்டிகள் மற்றும் நாட்குறிப்பேடுகள் இத்துறையால் அச்சடிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன. கடந்த மூன்றாண்டுகளில் பகுதி II திட்டத்தின்கீழ் இவ்வரசு 3 கோடி ரூபாய் மதிப்பில் அரசு மைய அச்சகம் மற்றும் கிளை அலுவலகங்களை நவீனப்படுத்தி, கணினி மற்றும் இதர அச்சு இயந்திரங்கள் கொள்முதல் செய்து நிறுவப்பட்டு, அச்சுப் பணி மேம்படுத்தப்பட்டு, தரமாக அச்சிட்டு வழங்கப்படுகின்றன. 2006 ஆம் ஆண்டு அரசு அச்சகங்களின் தரத்தை மேம்படுத்தும் நோக்கில், அவற்றை நவீனப்படுத்த அச்சுக் கலைகளில் அனுபவம் வாய்ந்த சிறப்பு வல்லுநர்களைக் கொண்ட ஒரு குழுவினை அமைத்து, பரிசீலனை செய்திட முதல்வர் அவர்கள் ஆணையிட்டார்கள். அதன் அடிப்படையில் வல்லுநர் குழுவால் அளிக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட கருத்துகளில், முதற்கட்டமாக சென்னையிலுள்ள அரசு மைய அச்சகத்தினை மேலும் நவீனப்படுத்த ரூ. 4 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, நவீன இயந்திரங்கள் விரைவில் நிறுவப்படவுள்ளன. அவ்வியந்திரங்களின் மூலமாக அரசுத் தேர்வுத் துறைக்கான விடைத்தாள்களும் அச்சிடுதல் மற்றும் இதர பணிகள் அச்சிட்டு விரைவில் வழங்க இயலும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: இவ்வரசு பதவியேற்றவுடன் 2006 ஆம் ஆண்டில் அச்சகங்களில் நிறுவப்பட்டுள்ள நவீன இயந்திரங்களை இயக்கும் வகையில், 19 வகையான 333 பணியிடங்கள் உருவாக்கப்பட்டு, தகுதிவாய்ந்த பணியாளர்கள் கண்டறியப்பட்டு, அப்பணியிடங்களில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். உடல் ஊனமுற்றோர் நலனில் அக்கறைகொண்ட இந்த அரசின் அறிவுரைப்படி, வேலைவாய்ப்பு அலுவலகங்கள்மூலமாக, கண்பார்வையற்றோர் 37 நபர்கள் புத்தகக் கட்டுனர்களாகவும், ஒருவர் தொலைபேசி இயக்குபவராகவும், மொத்தம் 38 பேர்கள் எழுதுபொருள்-அச்சுத் துறையில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். ஆக, கண்பார்வையற்றோர் 70 பேர்களும், காதுகேளாத, வாய் பேசாத 5 பேர்களும், உடல் ஊனமுற்றோர் 82 பேரும், மொத்தம் 157 பேர்கள் இத்துறையில் பணிபுரிந்து வருகின்றனர். தற்போது பணிபுரியும் பணியாளர்களில் இவர்கள் 8.7 விழுக்காடு என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்; ஊனமுற்றவர், கண்பார்வையற்றோர், காது கேளாதோர்.

மேலும், கடந்த 3 ஆண்டுகளில் இத்துறையில் பணிபுரியும் பணியாளர்கள் 763 பேர்களுக்கு, அவர்களது பணி முதுநிலை வரிசைப்படியும், அரசு விதிகளின்படியும் பதவி உயர்வு அளிக்கப்பட்டிருக்கிறது. இவ்வரசு பதவி ஏற்றவுடன் 2006 ஆம் ஆண்டில் அரசு அச்சகத் தொழிலாளர்களின் நீண்ட நாள் கோரிக்கையான, சொந்த அலுவலுக்கான ஈட்டா விடுப்பு 6 மாதங்கள் வழங்கி ஆணையிட்டது. தொழிலாளர் நலனைக் கருத்தில்கொண்டு வழங்கப்பட்ட இந்த ஆணைமூலம் ஈட்டா விடுப்பினைப் பணிக்காலத்தில் துய்க்காத பணியாளர்கள் ஓய்வு பெறும்போது 3 மாத ஊதியத்தினை ரொக்கமாகவும் பெறும் பலனைப் பெற்றிருக்கிறார்கள்.

அரசு அச்சகத் தொழிலாளர்களின் நலனைக் கருத்தில்கொண்டு, இவ்வரசு இதுநாள் வரை அவர்களுக்கு வழங்கப்பட்ட சீருடைகள் 3 ஜோடி 2 வருடத்திற்கு என்றிருந்ததை, 2 வருடத்திற்கு 4 ஜோடி சீருடைகள் எனவும், அவற்றின் நீள, அகல அளவுகளை உயர்த்தியும் வழங்கப்பட்டுள்ளது. அச்சகத் தொழிலாளர்களின் மனச்சோர்வினைப் போக்கும்பொருட்டு, மனமகிழ் மன்றங்கள் மூலமாகவும் விளையாட்டுப் பொருட்களை வழங்கிடவும், விளையாட்டுப் போட்டிகளை நடத்தி பரிசுப் பொருட்கள் வழங்கிடவும் இவ்வரசு

பதவியேற்றவுடனேயே நிதியொதுக்கீடு ரூபாய் 45 ஆயிரம் ஒரு வருடத்திற்கு என்பதை ஒரு இலட்சமாக உயர்த்தி ஆணையிட்டிருக்கிறது.

அரசு அச்சகம் தொடங்கப்பட்டு 175 ஆண்டுகள் நிறைவுற்றதைக் கொண்டாடும் வகையில் அரசு அச்சகப் பணியாளர்கள் 2,255 பேர்களுக்கு நினைவுப் பரிசாகத் தலா ரூபாய் ஐந்தாயிரத்திற்கான அஞ்சலக சேமிப்புப் பத்திரங்கள் வழங்கப்பட்டன. அரசு அச்சகங்கள் தொடங்கி 177 ஆண்டுகள் கடந்த நிலையில், அனைத்து அச்சகங்களும் நவீனமயமாக்கப்பட்டு வருவதன் விளைவாக உற்பத்தித் திறன் அதிகரிக்கப்பட்டு, அரசின் அச்சுத் தேவைகள் திறம்பட நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

கமுக்கத் தன்மை வாய்ந்த, இரகசியத் தன்மை வாய்ந்த ஆவணங்களின் இரகசியங்கள் காப்பாற்றப்பட்டும், அரசின் அச்சுத் தேவைகள் குறித்த காலக்கெடுவிற்குள் சிறப்பாகவும், நேர்த்தியாகவும், செம்மையாகவும் முடித்துக் கொடுக்கப்படுகின்றன என்பதை இப்பேரவையிலே மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இத்துறையில் பணியாற்றும் ஊழியர்களின் கோரிக்கைகள் கனிவுடன் பரிசீலிக்கப்படும் எனவும், காலிப் பணியிடங்களில், முதற்கட்டமாக 61 நபர்களுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யவும், எஞ்சிய நபர்களைப் படிப்படியாக பணி நியமனம் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். நான் நிறைய நேரம் எடுத்துக்கொள்ளவில்லை. ஒன்றிரண்டு அறிவிப்புகளை மட்டும் படித்துவிடுகின்றேன். மற்ற அறிவிப்புகளையும்@ நான் இந்த அவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் நிறையப் பேசுவீர்கள் என்று எதிர்பார்த்தோம். இதில் உங்களுக்கே அக்கறை இல்லை என்கிறபோது நான் என்ன செய்வது?

எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர்களின் பயன்பாட்டிற்கென ரூபாய் 50 இலட்சம்

@ 1022 மற்றும் 1023 ஆம் பக்கங்களில் இணைப்பு VII–ஆக அச்சிடப்பட்டுள்ளது.

செலவில் வண்ணப் படச் சுருள் பதனிடும் இயந்திரம், சென்சிடோ மீட்டர் மற்றும் டென்சிட்டோ மீட்டர் ஆகிய கருவிகள் வாங்கி வழங்கப்படும்.

எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன நூலகத்திற்கு ரூபாய் 4.50 இலட்சம் செலவில் தற்போதைய தொழில்நுட்பம் சார்ந்த புத்தகங்கள் மற்றும் திரைப்படக் கலை சார்ந்த புத்தகங்கள் புதியதாக வாங்கி வழங்கப்படுவதுடன், கணினிகள் மற்றும் குளிர்சாதன வசதியுடன்கூடிய நூலகம் புதுப்பித்து நவீனப்படுத்தப்படும்.

பொறியியல் மற்றும் மருத்துவப் படிப்பு படித்த இளைஞர்கள் மேற்படிப்பிற்காக அதிகமாக வெளிநாடுகளுக்குச் செல்கிறார்கள். வெளிநாடு சென்று உயர் கல்வி படிப்பதற்கும் இந்திய உயர் கல்வி நிறுவனங்களில் படிப்பதற்கும் GRE / TOEFL / GMAT / CAT போன்ற தேர்வுகளில் தேர்ச்சி பெறுவது அவசியம். எனவே, இதுபோன்ற தேர்வுகளுக்குத் தயார் செய்யும் இளைஞர்களை ஊக்கப்படுத்த 200 நபர்களுக்கு ரூ.40.00 இலட்சம் செலவில் பயிற்சிகள் அளிக்கப்படும்.

2009 ஜூலை 7]

8. தொழிற்சார் சிறப்புப் படிப்புகளுக்கான நிதியுதவி

தற்போது தமிழ்நாட்டில் பட்டயக் கணக்கர் (CA) செலவுக் கணக்கர் (CWA), போன்ற படிப்புகளில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆர்வம் காட்டுவது குறைவாக உள்ளது. இந்நிலையை மாற்ற இப்படிப்பு படிக்கும் மாணவர்களின் கல்விக் கட்டணம், புத்தகக் கட்டணம், தேர்வுக் கட்டணம் முதலியவற்றை அரசே ஏற்கும். இதற்காக 75 நபர்களுக்கு ரூ.25.00 இலட்சம் நிதியுதவி வழங்கப்படும்.

9. தேசிய நிறுவனங்கள்மூலம் பயிற்சி

தேசிய நிறுவனங்களான CIPET மூலம் பிளாஸ்டிக் பொருட்கள் தயாரித்தல் பயிற்சியும், ATDC மற்றும் NIFT மூலம் ஆயத்த ஆடை வடிவமைத்தல் பயிற்சியும், CFTI மூலமாக தோல் பொருள் மற்றும் காலணி தயாரித்தல் பயிற்சியும், TACLIT மூலம் தகவல் தொழில்நுட்பப் பயிற்சியும் வழங்கப்பட்டு வருகின்றன. இந்நிறுவனங்களில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு பயிற்சி வழங்கி உடனடி வேலை கிடைக்க உறுதிசெய்யும் வகையில் 1,250 இளைஞர்களுக்கு ரூ.200.00 இலட்சம் செலவில் பயிற்சிகள் அளிக்கப்படும்.

10. திரைப்படம் சார்ந்த துறையில் பயிற்சிகள்

திரைப்படத் துறையில் ஆதி திராவிடர்கள் மற்றும் பழங்குடியின இளைஞர்களின் பங்களிப்பு மிகவும் குறைவாக இருக்கிறது. இத்துறையில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களை ஊக்குவிக்கும் பொருட்டு விஷுவல் மீடியா, சினிமாட்டோகிராபி மற்றும் ஒலிப்பதிவு போன்ற திரைப்படம் சார்ந்த பயிற்சிகள் 340 நபர்களுக்கு, ரூ.85.00 இலட்சம் செலவில் அளிக்கப்படும்.

11. விமானப் பணிப் பெண் பயிற்சி

கடந்த ஆண்டுகளில் விமானப் பணிப் பெண் பயிற்சி, விமானப் பணியாளர் பயிற்சி வழங்கியது போன்று, நடப்பாண்டிலும் 25 பெண்களுக்கு விமானப் பணிப் பெண் பயிற்சி, ரூ.25.00 இலட்சம் செலவில் அளிக்கப்படும்.

12. விடுதி மாணவர்களுக்கு ஆங்கிலப் பேச்சாற்றல் பயிற்சி

கிராமப்புற இளைஞர்களும், ஆங்கிலத்தில் பேசும் திறமையை வளர்க்க ஆதி திராவிடர் விடுதிகளில் தங்கிப் பயிலும் 4,000 இளைஞர்களுக்கு ரூ.120.00 இலட்சம் செலவில் ஆங்கில பேச்சாற்றல் பயிற்சி அளிக்கப்படும்.

[2009 ஜூலை 7

13. மூன்றாண்டு செவிலியர் பட்டயப் பயிற்சி

மூன்றாண்டு செவிலியர் பட்டயப் படிப்பு படித்தவர்களுக்கு அதிக வேலைவாய்ப்பு இருந்து வருகிறது. இதனைக் கருத்தில் கொண்டு தற்போது அரசுக் கல்லூரிகளில் ஆதி திராவிடர்கள் மற்றும் பழங்குடியினர்களுக்கு இருந்து வரும் (18 சதவீத) ஒதுக்கீட்டுடன் கூடுதலாக 125 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின பெண்களுக்கு அரசுக் கல்லூரிகளில் பயிற்சி அளிக்கப்படும்.

14. கல்வியியல் பட்டயப் படிப்பு (பி.எட்.) பயிற்சி

கல்வியியல் பட்டயப் படிப்பு (பி.எட்.) படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பு அதிகம் இருப்பதால் அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் இப்படிப்பிற்காக 200 நபர்களுக்கு ரூ.50.00 இலட்சம் செலவில் நிதியுதவி அளிக்கப்படும்.

15. உணவு தயாரித்தல் மற்றும் பரிமாறுதல்

விருந்தோம்பல் துறையில் அதிக வேலைவாய்ப்பு பெருகி வருவதால் உணவு தயாரித்தல் மற்றும் உணவு பரிமாறுதல் பயிற்சி நற்பெயர் பெற்ற நிறுவனங்கள்மூலம் 2,000 நபர்களுக்கு ரூ.300.00 இலட்சம் செலவில் அளிக்கப்படும்.

16. உதவி செவிலியர் பயிற்சி

உள்நாடுகளிலும், வெளிநாடுகளிலும் உதவி செவிலியர் வேலைக்கு வாய்ப்பு அதிகமிருப்பதால் 1,000 நபர்களுக்கு நற்பெயர் பெற்ற பயிற்சி நிறுவனங்கள்மூலம் ரூ. 200.00 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்படும்.

17. கனரக வாகன ஓட்டுனர் பயிற்சி

கனரக வாகன ஓட்டுனர்களுக்கு வேலைவாய்ப்பு அதிகம் இருப்பதால், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு கனரக வாகன ஓட்டுனர் பயிற்சி, சாலைப் போக்குவரத்து நிறுவனம் (Institute of Road Transport) மற்றும் அசோக் லைலேண்ட் நிறுவனம் மூலம் 120 நபர்களுக்கு ரூ.25.00 இலட்சம் செலவில் அளிக்கப்படும்.

2009 ஜூலை 7]

18. ஜேசிபி இயக்குபவர் பயிற்சி

ஜேசிபி இயக்குபவர்களுக்கு வேலைவாய்ப்பு அதிகம் இருப்பதால், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு ஜேசிபி இயக்குபவர் பயிற்சி நற்பெயர் பெற்ற தனியார் நிறுவனங்கள் மூலம் *300 நபர்களுக்கு ரூ.12.50 இலட்சம் செலவில் அளிக்கப்படும்.*

19. ஏசி. மெக்கானிக் / டீசல் மெக்கானிக் வெல்டிங் பயிற்சி

ஏ.சி. மெக்கானிக் மற்றும் டீசல் மெக்கானிக் பயிற்சிகளுக்கு வெளிநாடுகளிலும், தொழிற்கூடங்களிலும் வேலைவாய்ப்பு அதிகம் உள்ளதால் 1,000 நபர்களுக்கு ரூ. 100.00 இலட்சம் செலவில் நற்பெயர் பெற்ற நிறுவனங்கள்மூலம் பயிற்சி அளிக்கப்படும்.

20. கணினி பயிற்சி

கணினி துறையில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களின் பங்கு மிகவும் குறைவாக உள்ளதால் இத்துறையில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் பங்களிப்பை அதிகப்படுத்த 2,000 நபர்களுக்கு ரூ.325.00 இலட்சம் செலவில் கணினி பயிற்சி அளிக்கப்படும்.

21. கண் சிகிச்சை உதவியாளர் பயிற்சி

கண் சிகிச்சைக்கான சிறப்பு உதவியாளர்களின் தேவை அதிகரித்து வருவதால் இவ்வாண்டு ரூ.40.00 இலட்சம் செலவில் தமிழகத்தின் சிறந்த கண் மருத்துவமனைகள்மூலம் 200 நபர்களுக்கு கண்சிகிச்சை உதவியாளர் பயிற்சி அளிக்கப்படும்.

22. தொழில் முனைவோருக்கு மூலதன உதவி

ஆதி திராவிடர்/பழங்குடியின மக்களில் பெரும்பான்மையோர் சிறந்த தொழில் முனைவர்களாக வரக்கூடிய தகுதிகள் அனைத்தும் பெற்றிருந்தும் பொருளாதார வசதியின்மையால் தொழில் துவங்க இயலாத நிலை உள்ளது. சுமார் 5 நபர்களை தொழிலதிபர்களாக்கும் முயற்சியில் சிறப்பு மூலதன மானியமாக ரூ.50.00 இலட்சம் அல்லது 10 சதவீதம் இதில் எது குறைவோ அதனை அரசு மானியமாகவும், மீதத் தொகையினை வங்கி அல்லது நிதி நிறுவனங்கள்மூலமாக கடனாகவும் பெறுவதற்கு வழிவகை செய்யப்படும்.

23. தொடக்கப் பள்ளி ஆசிரியர் பயிற்சி

100 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு தொடக்கப் பள்ளி ஆசிரியர் பயிற்சி (Secondary Grade training-Diploma in Teacher Education) *அளிக்கப்படும்.*

24. மருத்துவ ஆய்வுக்கூட தொழில்நுட்பாளர் பயிற்சி

100 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு மருத்துவ ஆய்வுக் கூட தொழில்நுட்பாளர் பயிற்சி (Certificate of Medical Laboratory Technician) *வழங்கப்படும்.*

25. அழகுக் கலை பயிற்சி

500 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு அழகுக் கலை பயிற்சி (Beautician Course) *வழங்கப்படும்.*

26. தையற்கலை பயிற்சி

500 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு தையற் கலை பயிற்சி (Tailoring Course) *வழங்கப்படும்.*

2009–2010 ஆம் ஆண்டில் புதிய அறிவிப்பாக வெளியிடவிருக்கும் பகுதி–II திட்டங்கள்

27. தலைமைச் செயலகத்தின் பயன்பாட்டுக்காக 21 கணினிகள் வாங்குதல்

அரசு அலுவலகங்களை கணினிமயமாக்குவதற்கு அரசு முனைப்புடன் செயல்படுவதால் அரசின் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் அன்றாடப் பணிகளை துரிதப்படுத்த 21 கணினிகள் மற்றும் துணை பாகங்கள் ரூ.8.40 இலட்சம் செலவில் வாங்கப்படும்.

28. ஆதி திராவிடர் நல ஆணையர் அலுவலகத்தில் 15 கணினிகள் வாங்குதல்

ஆணையர் அலுவலகத்தினை நவீனப்படுத்தவும், அன்றாடச் செயல்களை துரிதப்படுத்தவும் ரூ. 6.00 இலட்சம் செலவில் 15 கணினிகள் வாங்கப்படும்.

2009 ஜுலை 7]

29. அரியலூர் மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலகத்திற்கு நிகரி (FAX) மற்றும் ஒளிநகல் (Xerox) வழங்குதல்

புதியதாக உருவாக்கப்பட்ட அரியலூர் மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்திற்குத் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தும் பொருட்டு நிகரி (Fax) மற்றும் ஒளிநகல் (Xerox) இயந்திரம் ரூ.0.60 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

30. ஆதி திராவிடர் நல ஆணையரகம் மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்களுக்கு ஈப்பு மாற்றி வழங்குதல்

ஆதி திராவிடர் நல ஆணையரகம் அலுவலகம், மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள் பயன்படுத்தும் ஈப்புகள் மிகவும் மோசமான நிலையிலுள்ளதால் அதனை மாற்றி புதிய ஈப்புகள் வாங்கப்படுகின்றன. இதற்கென ரூ.35.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

31. 152 விடுதிகளுக்கு எரிவாயு இணைப்பு வழங்குதல்

தமிழ்நாட்டில் உள்ள அரசுக் கட்டடங்களில் இயங்கும் ஆதி திராவிடர் நல மாணவ/மாணவியர் விடுதிகளுக்கு எரிவாயு இணைப்பு படிப்படியாக வழங்கப்பட்டு வருகிறது. தற்போது 152 விடுதிகளுக்கு ரூ.45.60 இலட்சம் செலவில் 2009-2010 ஆம் ஆண்டில் எரிவாயு இணைப்பு வழங்கப்படுகிறது.

32. 130 பள்ளிகளுக்கும், 141 விடுதிகளுக்கும் குடிநீர் சுத்திகரிப்புக் கருவி வழங்குதல்

சுகாதார சீர்கேட்டினைத் தவிர்க்கும் பொருட்டு, இவ்வரசானது ஆதி திராவிடர் மாணவர்கள் பயிலும் பள்ளிகளிலும், தங்கும் விடுதிகளிலும் சுத்தமான குடிநீரை வழங்க முடிவு செய்து, முதற்கட்டமாக 130 ஆதி திராவிடர் பள்ளிகளுக்கும், 141 ஆதி திராவிடர் நல விடுதிகளுக்கும் குடிநீரைச் சுத்தப்படுத்தும் கருவிகள் ரூ.36.36 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

33. நாமக்கல் மாவட்டம்–களங்காணி மேல்நிலைப் பள்ளியை பழுதுபார்த்தல்

நாமக்கல் மாவட்டத்தில் களங்காணி என்ற ஊரிலுள்ள ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளியானது மிகவும் பழுதடைந்துள்ளது. பழுதினைச் சரிசெய்ய ரூ.12.09 இலட்சம் 2009-2010 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2009 ஜூலை 7

34. திருவள்ளூர் மாவட்டத்தில் 25 விடுதிகள் பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல்

திருவள்ளூர் மாவட்டத்தில் மொத்தம் 29 விடுதிகள் ஆதி திராவிடர் மாணவர்களுக்காகவும், 10 விடுதிகள் ஆதி திராவிடர் மாணவிகளுக்காகவும் இயங்கி வருகின்றன. அவைகளில் மிகவும் பழுதடைந்த நிலையிலுள்ள 25 விடுதிகளில் பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள 2009-2010 ஆம் ஆண்டில் ரூ.30.00 இலட்சம் வழங்கப்படுகிறது.

35. சாய்வு நாற்காலியுடன்கூடிய மேஜை ரூ.6920/– வீதம் 50 பள்ளிகளுக்கு 30 இருக்கைகள்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் இயங்கும் பள்ளிகளில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தும் வகையில் முதற் கட்டமாக 50 பள்ளிகளுக்கு ஒவ்வொரு பள்ளிக்கும் 30 வீதம் சாய்வு நாற்காலியுடன் கூடிய மேஜைகள் ஒன்று ரூ.6,920/- வீதம் மொத்தம் ரூ.104.40 இலட்சம் செலவில் வழங்கப்படுகிறது.

36. 130 உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு ரூ.300/– வீதத்தில் 50 பிளாஸ்டிக் நாற்காலிகள் வழங்குதல்

ஆதி திராவிடர் நல பள்ளிகளில் அன்றாடம் நடக்கும் ஆசிரியர் கூட்டங்கள் மற்றும் ஏனைய கூட்டங்களை சிறப்புற நடத்த முதல் கட்டமாக 130 உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு 50 பிளாஸ்டிக் நாற்காலிகள் ஒன்று ரூ.300 வீதம் மொத்தம் ரூ.19.50 இலட்சம் செலவில் வாங்கி வழங்கப்படும்.

பழங்குடியினர் நலம்

37. உண்டி உறைவிட விடுதிகளைப் பழுது பார்த்தல் மற்றும் புதிய கட்டடங்கள் கட்டுதல்

பழங்குடியினர் விடுதிகள்/உண்டி உறைவிடப் பள்ளிகளில் பழுதுபார்த்தல், பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும் மற்றும் புதிய கட்டடங்கள் கட்டவும் 2009-2010 ஆம் நிதி ஆண்டில் ரூ.78.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2009 ஜூலை 7]

38. 14 உண்டி உறைவிட மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளுக்கு மரச்சாமான்கள் வாங்குதல்

14 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளுக்கு மேஜை நாற்காலிகள் வழங்க ரூ.20.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

39. 4 கணினிகள் மற்றும் துணை பாகங்கள் பழங்குடியினர் நல இயக்குநரகத்திற்கு வாங்குதல்

பழங்குடியினர் நல இயக்குநரகத்திற்கு, 4 கணினிகள் மற்றும் உதிரி பாகங்கள் ரூ.1.60 இலட்சம் செலவில் வாங்கப்படும்.

40. பழங்குடியினர் நல இயக்குநரகத்திற்கு நிகரி (Fax) மற்றும் ஒளிநகல் (Xerox) இயந்திரங்கள் வாங்குதல்

பழங்குடியினர்களுக்கு பல முன்னேற்றத் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதால், பழங்குடியினர் நல இயக்குநரகத்திற்குத் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தும் பொருட்டு நிகரி (Fax) மற்றும் ஒளிநகல் (Xerox) இயந்திரம் ரூ.0.60 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

41. நாமக்கல், சேலம், திருவண்ணாமலை, திண்டுக்கல் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள அரசு உண்டி உறைவிடப் பள்ளிகளை பராமரித்தல் மற்றும் மேம்படுத்துதல்

நாமக்கல், சேலம், திருவண்ணாமலை, திண்டுக்கல் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள அரசு பழங்குடியினர் நல உண்டி உறைவிடப் பள்ளிகளில் மேம்பாடு மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள ரூ.71.85 இலட்சம் 2009-2010 ஆம் நிதியாண்டில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

42. 100 அரசு பழங்குடியினர் நல உண்டி உறைவிட ஆரம்ப பள்ளிகளுக்கு பள்ளி ஒன்றுக்கு ஒரு அமரும் பலகை ரூ. 3,000/– வீதம் 10 அமரும் பலகைகள் வழங்குதல்

100 அரசு பழங்குடியினர் நல உண்டி உறைவிட ஆரம்பப் பள்ளிகளுக்கு மொத்தம் 1,000 அமரும் மரப் பலகைகள், பலகை ஒன்றுக்கு ரூ.3,000/- வீதம் மொத்தம் ரூ.30.00 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

இணைப்பு II

(736 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண் 29—சுற்றுலா

கொள்கை விளக்கக் குறிப்பு, 2009–2010

சமூகப் பொருளாதார வளர்ச்சியில் சுற்றுலாவின் பங்கு முதன்மையானது. "உலகச் சிற்றூர்" எனும் கோட்பாட்டின் ஓர் உறுப்பாக சுற்றுலா திகழ்வதால் இது உலகளவில் கருத்தொருமிப்பிற்கு அடிகோலுகிறது. சுற்றுலாப் பயணிகள் முழுமையான அனுபவத்தை உய்க்க விரும்புகின்றனர். இதனை வரலாற்றுச் சிறப்புமிக்க நினைவுச் சின்னங்கள், நினைவகங்கள், பண்பாடு ஆகியவற்றைப் பற்றி தெரிந்து கொள்வதன்மூலம் அடைய முடிகிறது. கேளிக்கை, விளையாட்டு, நடனம், இசை, விழாக்கள், சாகசம், உணவு, கல்வி, உடல் நலம் மற்றும் வணிகம் ஆகியன இந்த அனுபவத்தை உய்க்க உதவுகின்றன. போக்குவரத்து, தகவல் தொடர்பு மற்றும் பொருளாதார வளர்ச்சி போன்றவற்றால் சுற்றுலாவின் தேவை அதற்கேற்ப அதிகரித்துள்ளது.

1. சுற்றுலா – பொருள் விளக்கம்

1.1 மனமகிழ்ச்சி அல்லது பொழுதுபோக்கிற்காகவும், ஓய்விற்காகவும் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மேற்கொள்ளப்படும் பயணம் 'சுற்றுலா' எனப்படும். தான் வாழ்ந்து வரும் சூழலிலிருந்து வெளியே சென்று ஓய்வு, தொழில் போன்ற காரணங்களுக்காக ஓராண்டிற்கும் மேலாக அவ்விடத்தில் வருமானம் ஈட்டுகிற செயலுடன் தொடர்பற்ற பிற நோக்கங்களுக்காக செயல்படுபவர் சுற்றுலாப் பயணி என உலக சுற்றுலா நிறுவனம் விவரித்துள்ளது. சுற்றுலா உலகளாவிய ஓய்வு உய்யும் நிகழ்வாக ஆகியுள்ளது.

1.2 சுற்றுலா சார்ந்த தொழிலில் பொருள் மற்றும் சேவையைக் கொண்டு பெரும் முதலீட்டவும், சுற்றுலாத் தொழில்மூலம் வேலைவாய்ப்பு அதிகரிப்பதை முன்னிட்டும், சுற்றுலா, உலகின் பல நாடுகளிலும், குறிப்பாக தீவுப் பிரதேசங்களிலும் மிகவும் முக்கியமாகிவிட்டது. சுற்றுலாத் தொழிலில் சுற்றுலாக் கப்பல்கள், வாடகைச் சீருந்துகள் முதலியன போக்குவரத்து சேவைகளாகவும், விடுதிகள், ஓய்வு இல்லங்கள் மற்றும் கேளிக்கை இடங்கள் முதலியன தங்குமிட சேவைகளாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. (இணையதளம் இஎன்.விகிபீடியா.ஓஆஜி/விகி/டூரிசம்)

2009 ஜூலை 7]

1.3 பொருளாதார வள வாய்ப்பைப் பெற்றுள்ளதாகக் கருதப்படுகிற துறைகளுள் சுற்றுலாத் துறையும் ஒன்றாகும். கீழ்க்காணும் காரணங்களால் சுற்றுலா, முன்னுரிமைத் துறையாக கருதப்படுகிறது:

- இந்தியாவின் மேம்பாட்டில் இயற்கை, மனித வளம், பண்பாடு, தொழில்நுட்பம் மற்றும் சீரான வளர்ச்சி ஆகியவற்றில் அதிகமான பங்களிப்பை அளிப்பது.
- இது தொழிலாளர் சார்ந்தது. குடிசை அல்லது சிறு தொழில் சார்ந்தது. உயர் ரக வேலைவாய்ப்பை அளித்து வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வல்லது.
- குறைந்த முதலீட்டில் கிராமப்புறங்களில் வளர்ச்சித் திட்டங்களை ஏற்படுத்த வல்லது. (மைய அரசு சுற்றுலா அமைச்சகத்தின் 2002 ஆம் ஆண்டு தேசிய சுற்றுலாக் கொள்கை)
- இது முன்னேறிய மற்றும் பின்தங்கிய பொருளாதார இணைப்புகளைக் கொண்டுள்ளது. அது, ஒட்டுமொத்த வருமானம், வேலைவாய்ப்பு (குறிப்பாக மகளிர், இளைஞர் மற்றும் உடலூனமுற்ற நபர்களுக்கு சமூகத்தில் சம உரிமையையும், சமூக நீதியையும் பெருமளவில் அளிக்கிறது), முதலீடு ஆகியவற்றை உருவாக்குகிறது. மத்திய, மாநில அரசுகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் வருவாயைப் பெருக்குகிறது.
- ஓர் ஏற்றுமதி தொழிலாக, அந்நியச் செலாவணியை குறிப்பிடத்தக்க அளவுக்கு வழங்க முடிகிறது; மற்றும்
- புரிந்துணர்வு, அமைதி ஆகியவற்றை மேம்படுத்த முடிகிறது. தேசிய ஒற்றுமைக்கும், வட்டார உறுதித்தன்மைக்கும் பங்காற்ற முடிகிறது.

2. சுற்றுலா – ஒரு கண்ணோட்டம்

2.1 சுற்றுலா குறித்த செலவு, அதன் தகைசால் பண்புக்கூறுகளுடன், பரந்த எல்லையுடன் கூடிய பலவகையான பயன்களை அளிக்கிறது. பல வகையான பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு தேவை அதிகரிப்பதுடன், வறுமையைத் தணிப்பதற்கு, ஆதரவான வருமான வளர்ச்சியைக் கொண்டுள்ள வேளாண்மை, தோட்டக்கலை, கோழியின வளர்ப்பு, கைத்திறப் பொருட்கள், போக்குவரத்து, கட்டுமானம் போன்ற எண்ணற்ற துறைகளில் மிகையான ஆற்றலைப் பயன்படுத்துவதற்கான வள வாய்ப்பை, சுற்றுலா அளிக்கிறது. (மத்திய அரசு சுற்றுலாத் துறை ஆண்டறிக்கை, 2007-08)

TRUTH ALONE TRIUMPHS

[2009 ஜூலை 7

2.2 சுற்றுச்சூழல், சீரான பண்பாடு மற்றும் சமூக மேம்பாடு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு சுற்றுலா குழுமம் சுற்றுலாவின் வளர்ச்சியைப் பேணுகிறது. இது பின்வருபவற்றில் பிரதிபலிக்கிறது:

(அ) சுற்றுலாப் பயணிகள் தங்கும் நாட்களை அதிகரிக்கிறது

(ஆ) வருமானம் மற்றும் சுற்றுலாவினால் கிடைக்கும் பயன்கள் பகிர்ந்தளிப்பு மற்றும்;

(இ) இயற்கையாகவும், பண்பாட்டுச் சின்னமாகவும் உள்ள இடங்களின் நிருவாகத்தை மேம்படுத்துகிறது.

இதனால் விளையும் பயன்கள்

அ. சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுலா வட்டங்களிலுள்ள இடங்களில் தரம் வாய்ந்த ஒருங்கிணைந்த சுற்றுலா கட்டமைப்பு வசதிகள்

ஆ. மேம்படுத்தப்பட்ட இணைப்புச் சாலை, உயர்தர சுற்றுச் சூழல், சுற்றுலா சேவைகள்

இ. பல்வேறு நிறுவனங்களின் ஒருங்கிணைந்த முயற்சியால் நிறுவன அமைப்பும், முறைப்படுத்துதலும் மேம்பாடடையச் செய்தல்

ஈ. சுற்றுச் சூழல் பண்பாட்டைப் பேணுதல்மூலம் சமூக ஒருங்கிணைப்பு சுற்றுலா வளர்ச்சியை மேம்பாடடையச் செய்தல்

உ. சுற்றுலாவில் தனியார் துறை மற்றும் சமுதாயப் பங்கேற்பை ஊக்குவித்தல்; மற்றும்

ஊ. வேலைவாய்ப்பை உருவாக்குதல், வறுமை ஒழித்தல், சுற்றுச் சூழல் சீரமைப்பு, மகளிர் மற்றும் பின்தங்கிய பிரிவுகளின் முன்னேற்றம் ஆகியவைமூலம், சீரான சுற்றுலா வளர்ச்சி மற்றும் சுற்றுலாத் தல நிர்வாகத்திற்கென பயிற்சி மற்றும் மனித வள மேம்பாடு திட்டங்கள் செயல்படுத்துதல். (ஆசிய வளர்ச்சி வங்கி சுற்றுலா உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் இடைக்கால அறிக்கை)

3. தமிழ்நாட்டில் சுற்றுலாவின் களம்

3.1 தமிழ்நாடு, பல்வகையான சுற்றுலாச் சிறப்பியல்புகளைத் தன்னகத்தே கொண்டுள்ள மாநிலம். தமிழ்நாட்டில் நீல மலைகள், பசுமைப் புல்வெளிகள், மணற்பாங்கான கடற்கரைகள், மாபெரும் நினைவகங்கள், வியப்பூட்டும் கோயில்கள், விந்தையான

2009 ஜூலை 7]

வனவிலங்குகள், களிப்பூட்டும் சிலைகள் கிராமிய வாழ்க்கை முறை ஆகியன உள்ளன. மேலும், இங்கு, மனதில் நிற்கும் சுற்றுலாத் தலங்கள், தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும் கலாச்சார சங்கமம் மற்றும் இயற்கையோடு இயைந்த சிறப்பம்சங்கள் உள்ளன.

3.2 தமிழ்நாட்டில், உதகமண்டலம், கொடைக்கானல், ஏற்காடு, ஏலகிரி, ஜவ்வாது மலை, கொல்லி மலை, சிறுமலை, வால்பாறை, டாப் சிலிப், பர்வதமலை மற்றும் பச்சமலை ஆகிய மலை வாழிடங்களும், குற்றாலம், ஒகேனக்கல், திற்பரப்பு, குரங்கு அருவி, திருமூர்த்தி மலை, ஆகாச கங்கை மற்றும் பாபநாசம் போன்ற வெள்ளி அருவிகளும், கிண்டி தேசிய பூங்கா மற்றும் ஆனைமலை தேசிய பூங்கா போன்றவையும், முதுமலை, கோடியக்கரை, களக்காடு, முண்டந்துறை மற்றும் பேரிஜம் ஆகிய சிறந்த வனவிலங்கு சரணாலயங்களும், உதகமண்டலம், கொடைக்கானல் மற்றும் கோயம்புத்தூரில் தாவரவியல் பூங்காக்களும் உள்ளன. தஞ்சாவூரில் உள்ள சோழர் கால கோயில்கள், தாராசுரம், கங்கைகொண்ட சோழபுரம், மாமல்லபுர புராதனச் சின்னங்கள், நீலகிரி மலை இரயில் ஆகியன தமிழ்நாட்டில் யுனெஸ்கோ அறிவித்த நினைவுச் சின்னங்களாகும். மெய்சிலிர்க்கும் மெரினா, எழிலான எலியட்ஸ், தித்திக்கும் திருவான்மியூர், திருச்செந்தூர், இராமேசுவரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய கடற்கரைகளுடன் தமிழ்நாடு மிக நீண்ட கடற்கரையைக் கொண்டுள்ளது. தமிழ்நாட்டின் கோயில்கள் தெய்வீகத்தையும் இசையையும் பறைசாற்றுகின்றன. மதுரை, இராமேசுவரம், கும்பகோணம், சிதம்பரம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் எண்ணற்ற கோயில்கள் அமைந்துள்ளன. நேர்த்தியாக வடிக்கப்பட்ட பேரழகு வாய்ந்த சிற்பங்கள் கலைநயச் சிறப்பையும், கலாச்சார சீர்மையையும் பிரதிபலிக்கின்றன.

3.3 தமிழ்நாடு தனித்தன்மை வாய்ந்த கலாச்சாரத்தையும், எண்ணற்ற சுற்றுலா வள வாய்ப்புக்களையும் கொண்டிருப்பதால், மேலைநாடு மற்றும் வெளிநாட்டைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் ஆண்டு முழுவதும் இங்குள்ள சுற்றுலாத் தலங்களுக்குத் திரண்டு வருகின்றனர். பருவ காலங்களில் சுற்றுலாத் தலங்களில் சுற்றுலாப் பயணிகள் நெரிசல் அதிகமாகி விடுகிறது. எனவே, தமிழ்நாடு சுற்றுலாத் துறை பொதுக் கழிப்பிடங்கள், இளைப்பாறும் இடங்கள், குடிநீர் வசதி, சாலை மேம்பாடு, வாகன நிறுத்துமிடம் ஆகிய அடிப்படை வசதிகளை ஏற்படுத்த தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது.


[2009 ஜூலை 7

4. தமிழ்நாடு சுற்றுலா

4.1 தலைமைச் செயலகத்தில் சுற்றுலா அமைச்சகம், அதன் கட்டுப்பாட்டில் சுற்றுலா இயக்குநரகம் என அமைந்து மாநிலத்தில் சுற்றுலா சார்ந்த கொள்கைகளை வகுப்பதிலும், சுற்றுலா வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவதிலும் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் புதிய வழிமுறைகளை முனைவதிலும், புதிய திட்டங்களைக் கண்டறிவதிலும் தனியார் துறைக்கு முன்மாதிரியாக உள்ளது. தமிழ்நாடு சுற்றுலா பிற அரசுத் துறைகள், முகவரமைப்புகள் மற்றும் தனியார் நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுகிறது.

4.2 தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், தங்கும் விடுதிகள், இளைஞர் விடுதிகள், அகமகிழ் விடுதிகள், உணவகங்கள், சுற்றுலாத் திட்டங்கள், படகு இல்லங்கள், தொலைநோக்கி இல்லங்கள் என வர்த்தகத்தின் புதிய அம்சங்களை தனியார் துறைக்கு முன்னோடியாக இருந்து நடத்தி வருகிறது.

4.3 அமைப்பு ரீதியான அட்டவணை:



2009 ஜூலை 7]

4.4 சுற்றுலா அலுவலகங்கள் மற்றும் சுற்றுலா தகவல் மையங்கள் தமிழ்நாட்டில் 18 சுற்றுலா அலுவலகங்களும், வெளிமாநிலங்களில் ஆறு சுற்றுலா அலுவலகங்களும், 18 சுற்றுலா தகவல் மையங்கள் தமிழ்நாட்டிலும், ஆறு சுற்றுலா தகவல் மையங்கள் வெளிமாநிலங்களிலும் சுற்றுலாப் பயணிகள் வசதிக்காக செயல்பட்டு வருகின்றன. சுற்றுலா அலுவலகங்கள் மற்றும் சுற்றுலா தகவல் மையங்களின் வரிசையை பிற்சேர்க்கையில் காணலாம்.

4.5 2008-2009 ஆம் ஆண்டில் திருவண்ணாமலை, காரைக்குடி, வேலூர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் புதிய சுற்றுலா அலுவலகங்கள் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

5. தமிழ்நாடு சுற்றுலாவின் பங்கு

5.1 தனியார் முதலீட்டை ஈர்த்தல், மேம்பாடு மற்றும் சந்தைப்படுத்துதலுக்கான புதிய நெறிகளை, யுக்திகளை வலுப்படுத்துதல் மற்றும் அனுபவமிக்க மனித வளத்தை உருவாக்குதல் போன்றவற்றில் வளர்ச்சியைக் காண சுற்றுலாத் துறை இணைப்புப் பாலமாக இருந்து சுற்றுலா வளர்ச்சியை ஏற்படுத்தி வருகிறது. இவ்வகையில் சுற்றுலாத் துறை பின்வரும் முக்கிய பணிகளைச் செய்து வருகிறது:

அ. கொள்கை சம்பந்தப்பட்ட பணிகள்:

1. மேம்பாட்டுக் கொள்கைகள்

2. ஊக்க உதவித் தொகைகள்

3. மனித வள ஆற்றல் மேம்பாடு (பணியாளர்)

4. மேம்பாட்டு வழிமுறைகள்

ஆ. திட்டமிடல்

இ. முறைப்படுத்துதல்

1. தரங்கள்

2. வழிகாட்டுதல்கள்

ஈ. உள்கட்டமைப்பு மேம்பாடு:

1. மைய மற்றும் மாநில நிதியுதவி

2. சுற்றுலா பொருட்களை விநியோகித்தல்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2009 ஜூலை 7

உ. ஆராய்ச்சி, ஆய்வு, மேற்பார்வை மற்றும் மதிப்பீடு

ஊ. சட்டமன்றம் சார்ந்த பணி

எ. பணியமைப்பு விவகாரங்கள்

ஏ. கள அலுவலகப் பணிகளை ஆய்வு செய்தல்

ஐ. சீர்பெருமக்கள் பற்றிய குறிப்புகள்

ஒ. நிதி, வரவு-செலவுத் திட்ட ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு

ஓ. பொது நலன், குறைகள் மற்றும் மரபு.

5.2 சுற்றுலா இயக்குநரகம் பின்வரும் பணிகளுக்கு பொறுப்பு வகிக்கிறது:

அ. கொள்கைகளை ஏற்படுத்துவதில் கள அலுவலகங்களிலிருந்து தகவல் பெற்று உதவுதல்

ஆ. திட்டங்கள் குறித்து மேற்பார்வை மற்றும் திட்டங்கள் மேற்கொள்வதில் உதவுதல்

இ. கள அலுவலகங்களின் செயல்பாடுகளில் ஒத்துழைப்பு மற்றும் மேற்பார்வை

ஈ. ஆய்வு மற்றும் தரக் கட்டுப்பாடு:

1. சுற்றுலா வழிகாட்டி

2. குறைகள் மற்றும் அதன் நிவர்த்தி

உ. உள்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு:

1. ஊக்கத் தொகை வெளியிடுதல்

2. சுற்றுலா தகவல் மற்றும் வசதி

3. கள விளம்பரம், சந்தையியல் மற்றும் மேம்பாடு

4. விருந்தோம்பல் நிகழ்ச்சிகள்

5. கருத்தரங்குகள் மற்றும் கூட்டங்கள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

2009 ஜூலை 7]

ஊ. மனித வள மேம்பாடு:

1. நிறுவனங்கள்

2. தரங்கள் மற்றும் வழிகாட்டுதல்கள் அமைத்தல்

எ. விளம்பரம் மற்றும் மேம்பாடு:

1. கோட்பாடு

2. விளம்பர திட்டம்

3. புதிய யுக்திகள்

4. ஒருங்கிணைப்பு

5. மேற்பார்வை

ஏ. சட்டமன்றம் சார்ந்த பணிகள்

ஐ. சுற்றுலா இயக்ககத்தின் மனித வள மேம்பாடு மற்றும் பணியமைப்பு சார்ந்த பணிகள்.

6. 2008–09 ஆம் ஆண்டில் முக்கிய நடவடிக்கைகள் மற்றும் சாதனைகள்

- அதிகம் அறிமுகமாகாத சுற்றுலாத் தலங்களை பிரபலப்படுத்துதல், தொழில் முனைவோருக்கு ஊக்க உதவித்தொகை அளித்தல்
- பாரம்பரியச் சிறப்புமிக்க கட்டடங்களை, பாரம்பரிய விடுதிகளாக மாற்றுவதற்கு மானியம்
- ஊரகச் சுற்றுலாவிற்கு ஊக்கம்
- சுற்றுலாப் பயணிகளுடன் நட்பை மேம்படுத்தும் வகையில் "விருந்தினர் போற்றுதும்! விருந்தினர் போற்றுதும்!" முகாம்கள்.
- விருந்தினர் மற்றும் விருந்தோம்புபவர் பொறுப்பை உணர்த்தும் "பொறுப்புணர்வு சுற்றுலா" மூலம் வலியுறுத்தி சுற்றுச்சூழலுக்கு பங்கமில்லா சுற்றுலாவை பேணுதல்
- மருத்துவச் சுற்றுலா முயற்சிகளை வலுப்படுத்துதல்
- உணவுடன் உறையுள் திட்டம்

[2009 ஜூலை 7

- பிற துறைகளின் நிதியை ஒருங்கிணைப்பதன் மூலம் சுற்றுலா வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்துதல்
- பல வண்ண நூல்கள், மடிப்பேடுகள், சுவரொட்டிகள், வண்ணமிகு நாட்காட்டி ஆகிய எண்ணற்ற சுற்றுலா வெளியீடுகள்
- கண்கவர் சுற்றுலா விளம்பரங்கள்
- அயல் நாடுகளில் நடைபெற்ற சுற்றுலாச் சந்தைகளில் பங்கேற்றல்
- உள்நாட்டில் விளம்பர முகாம்கள்
- திறம்பட்ட சந்தைப்படுத்தும் முனைவுகள்
- தமிழர் மரபு, பண்பாட்டை விழாக்கள் மூலமாக வெளிப்படுத்துதல்
- தமிழ்நாடு சுற்றுலா சேவையை இலக்கமயமாக்குதல்
- சுற்றுலா சேவையை பரந்த அடிப்படையில் கணினி மூலம் உடனடி பதிவு செய்தல்
- முக்கிய சுற்றுலாத் தலங்களில் நான்கு புதிய சுற்றுலா அலுவலகங்கள்
- நான்கு தேசிய சுற்றுலா விருதுகள் (2007-ல் மூன்று, 2008-ல் ஒன்று)
- ஹட்கோ மூலம் வரைவு சுற்றுலா பெருந்திட்டம்
- பொருட்காட்சி, கண்காட்சி, மாநாடு, கலந்தாய்வு போன்றவற்றை சந்தைப்படுத்துதல் - மூன்று வட்டார அளவு கருத்தரங்குகள் (சுற்றுச்சூழல் சுற்றுலா ஆளுமை, மருத்துவ சுற்றுலா, சமூகப்பொறுப்புணரும் சுற்றுலா)
- 2008-09 ஆம் ஆண்டில் தமிழ்நாடு சுற்றுலாவின் நிதி ஒதுக்கீடு ரூ.62.04 இலட்சம்
- சுற்றுலாத் தலங்களை தூய்மைப்படுத்தும் முகாம்கள்
- தமிழ்நாடு சுற்றுலாவின் செயல்பாடுகள், நிகழ்வுகள் மற்றும் சேவைகள் அடங்கிய மாதாந்திர செய்திமடல்

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2009 ஜூலை 7]

7. இந்தியாவுக்கு சுற்றுலாப் பயணிகள் வருகை

7.1 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் இந்தியாவின் பங்கு 2004 ஆம் ஆண்டு 0.46 விழுக்காட்டிலிருந்து 2007 ஆம் ஆண்டில் 0.56 விழுக்காடாக கணிசமாக அதிகரித்துள்ளது. இந்தியாவிற்கு வந்த வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை 2004 ஆம் ஆண்டு 3.46 மில்லியனிலிருந்து 2007 ஆம் ஆண்டு 5.08 மில்லியனாக உயர்ந்துள்ளது. சுற்றுலாமூலம் வரும் அந்நியச் செலாவணி வருவாய் மிகவும் பங்களிப்பதாகும். இது, 2004 ஆம் ஆண்டு 6.17 பில்லியன் அமெரிக்க டாலரிலிருந்து (ரூ.27,944 கோடி) 2007 ஆம் ஆண்டு 11.96 பில்லியன் அமெரிக்க டாலராக (ரூ.44,360 கோடி) பெருகியுள்ளது. உலக நாடுகள் மத்தியில் சுற்றுலாமூலம் வரும் வருமானத்தில் இந்தியாவின் பங்கு 2004 ஆம் ஆண்டு 0.98 விழுக்காட்டிலிருந்து 2007 ஆம் ஆண்டு 1.25 விழுக்காடாக உயர்ந்துள்ளது. உள்நாட்டு சுற்றுலாவும் இந்தக் கால அளவில் குறிப்பிடத்தக்க அளவுக்கு அதிகரித்துள்ளது. இந்தியாவின் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை 2004 ஆம் ஆண்டு 366.23 மில்லியனிலிருந்து 2007 ஆம் ஆண்டு 526.57 மில்லியனாக அதிகரித்துள்ளது.

7.2 தமிழ்நாட்டுக்கு சுற்றுலாப் பயணிகள் வருகை

7.2.1 அச்சு மற்றும் மின்னணு ஊடகங்கள் மூலமாக உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் தீவிர சுற்றுலா மேம்பாடு மற்றும் விளம்பரம் செய்ததாலும் மற்றும் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டாலும் தமிழ்நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரித்துள்ளது. அதன் விவரம் கீழே அட்டவணையிடப்பட்டுள்ளது:

ஆண்டு	உள்நாட்டு சுற்றுலா பயணிகள்	வெளிநாட்டு சுற்றுலா பயணிகள்	மொத்தம்	வளர்ச்சி விகிதம் விழுக்காடு
	(இலட்சத்தில்)			
2005	*323.39*	*11.79*	*335.18*	*7.7*
2006	*392.14*	*13.35*	*405.49*	*21.0*
2007	*506.47*	*17.53*	*524.00*	*29.2*
2008	*626.18*	*20.40*	*646.58*	*23.4*

[2009 ஜூலை 7

7.2.2 2007 ஆம் ஆண்டில் 524.00 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் தமிழ்நாட்டிற்கு வருகை தந்துள்ளனர். 2008 ஆம் ஆண்டில் 646.58 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர். இது இவ்விரண்டு ஆண்டுகளில் தமிழ்நாட்டிற்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகள் புள்ளிவிவரத்துடன் ஒப்பிடும்போது 2008 ஆம் ஆண்டின் வருகை 122.58 இலட்சம் அதிகமாகும்.

7.3 தமிழ்நாட்டில், சராசரியாக 4 முதல் 5 நாட்கள் உள் நாட்டுப் பயணியும், 7 நாட்கள் வரை வெளிநாட்டுப் பயணியும் தங்குகிறார்கள். ஒரு வெளிநாட்டுப் பயணி நாள் ஒன்றுக்கு சராசரியாக ரூ.4,396/- செலவழிக்கிறார். உள்நாட்டுப் பயணி நாள் ஒன்றுக்கு ரூ.1,422/- செலவழிக்கிறார். ஒரு நாள் மட்டும் வந்து செல்பவர் (Day Visitor), நாள் ஒன்றுக்குச் சராசரியாக ரூ.540/- செலவழிக்கிறார். வெளிநாட்டுப் பயணிகளில் 23 விழுக்காடு, நட்சத்திரத் தகுதி பெற்ற தங்கும் விடுதிகளிலும், 44 விழுக்காடு நடுத்தரத் தங்கும் விடுதிகளிலும், 13 விழுக்காடு விருந்தினர் விடுதிகளிலும், ஓய்வில்லங்களிலும் தங்குவதாகப் புள்ளிவிவரம் கூறுகிறது. இந்த வகைப்பாடுகளை உள்நாட்டுப் பயணிகளுடன் ஒப்பிடுகையில் முறையே 10 விழுக்காடு, 49 விழுக்காடு மற்றும் 19 விழுக்காடு என்பதாக உள்ளது.

8. சுற்றுலா வளர்ச்சிக்கு வருங்கால உத்தி

8.1 அண்மைக் காலத்தில் உலகளவில் சுற்றுலா பெரும் வளர்ச்சியைக் கண்டுள்ள துறையாகும். தமிழ்நாட்டிலும் சுற்றுலா வளர்ச்சி தேசிய சராசரி அளவையும் விஞ்சி விட்டது. வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் தமிழ்நாட்டின் பங்கு தேசிய சுற்றுலா வரவுகளில் பெருமளவு அதிகரித்துள்ளது. அதுபோன்று, உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் தமிழ்நாட்டின் பங்கு மகத்தானது. மேலும், அது தொடர்ந்து வளர்ந்து வருகிறது. இதன் பயனைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு சுற்றுலா பல்முனை வளர்ச்சி உத்தியை, தரமான சுற்றுலா வளர்ச்சியை எதிர்வரும் ஆண்டுகளில் அடையும் வகையில் தொடர்ந்து பின்பற்றி வருகிறது. சுற்றுலாப் பயணிகள் வருகையை அதிகரிக்கும் நோக்கத்துடனும், அவர்களின் தங்கும் காலத்தை நீட்டிக்க வைக்கும் நோக்கத்துடனும் தமிழ்நாடு சுற்றுலா செயலாற்றுகிறது. சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரித்தால் தான் கூடுதல் அந்நியச் செலாவணியை ஈட்டமுடியும் என்றும், கூடுதல் வேலைவாய்ப்பை உருவாக்க இயலும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

2009 ஜூலை 7]

8.2 சுற்றுலா மேம்பாடு மற்றும் வளர்ச்சிக்காக தமிழ்நாடு சுற்றுலா பின்வரும் பணிகளில் கவனம் செலுத்துகிறது:-

1. சுற்றுலா வள வாய்ப்பைக் கண்டறிதல் மற்றும் பயன்படுத்துதல்

2. அடிப்படை மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் உருவாக்குதல்

3. சுற்றுலாத் தலம் ஏற்கும் திறனுக்கேற்ப சுற்றுலாப் பயணிகளை முறைப்படுத்துதல்

4. எல்லா விதமான ஊடகங்களின் உபயோகத்துடன் அதிகமான சுற்றுலாப் பயணிகளை ஈர்த்தல்

5. புதிய சுற்றுலா சேவைகளை, மறக்கவொண்ணா நினைவுகளை ஏற்படுத்த வழங்குதல்

8.3 பிரபலமில்லா சுற்றுலாத் தலங்களை மேம்படுத்துதல்

சுற்றுலாப் பயணிகளுக்கு அறிமுகமில்லாத, சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த, பாரம்பரிய புனிதத் தலங்களை தமிழ்நாடு சுற்றுலா கண்டறிந்துள்ளது. அவ்விடங்களுக்கு உரிய விளம்பரம் மற்றும் சிறந்த உள்கட்டமைப்பு வசதிகள், நட்சத்திர விடுதிகள், கேளிக்கை பூங்காக்கள், கால்ஃப் விளையாட்டு, உடல் நலம் பேணும் இடங்கள், படகு இல்லங்கள் போன்ற தொழிலில் தொழில் முனைவோரை ஊக்குவிக்க பின்வரும் ஊக்க உதவித் தொகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன:

8.3.1 தங்கும் விடுதிகளுக்கு ஒருமுறை ஊக்கத் தொகை

வ.எண்	நிலை/அந்தஸ்து	ஊக்கத்தொகை
அ.	ஒரு நட்சத்திரம்	மொத்த திட்ட மதிப்பீட்டில் 10 விழுக்காடு (நிலமதிப்பு நீங்கலாக) அல்லது அதிகபட்சமாக ரூ.25.00 இலட்சம்
ஆ.	இரண்டு நட்சத்திரம்	மொத்த திட்ட மதிப்பீட்டில் 10 விழுக்காடு (நில மதிப்பு நீங்கலாக) அல்லது அதிக பட்சம் ரூ.50.00 இலட்சம்
இ.	மூன்று மற்றும் அதற்குமேல் நட்சத்திர நிலை	மொத்த திட்ட மதிப்பீட்டில் 10 விழுக்காடு (நில மதிப்பு நீங்கலாக) அல்லது அதிகபட்சமாக ரூ.100.00 இலட்சம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

[2009 ஜூலை 7

8.3.2 பிற சுற்றுலா முதலீடு வகைகளுக்கு ஒருமுறை ஊக்கத்தொகை

பொழுதுபோக்குப் பூங்காக்கள், குழிப்பந்தாட்ட மைதானம், கம்பிவட ஊர்தி, படகு குழாம்கள் முதலியன	மொத்த திட்ட மதிப்பீட்டில் 10 விழுக்காடு (நில மதிப்பு நீங்கலாக) அல்லது அதிகபட்சமாக ரூ.100.00 இலட்சம்

8.3.3 எளிய தவணை மற்றும் குறைந்த வட்டியுடன் கூடிய கடன்வசதி

சுற்றுலா மேம்பாட்டு வசதிகளை ஏற்படுத்துகையில் செலுத்தப்பட வேண்டிய மதிப்புக் கூட்டு வரியைச் செலுத்துவதற்காக முதல் ஐந்து ஆண்டுகளுக்கு, ஆண்டொன்றுக்கு 0.1 விழுக்காடு என்ற வீதத்தில் குறைந்த வட்டிக்குக் கடன் அளிக்கப்படும்.

8.3.4 பாரம்பரியக் கட்டடங்களைத் தங்கும் விடுதிகளாக மாற்றுதல்

தமிழகத்திற்கு வருகை தரும் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க உரிய நடவடிக்கைகளை தமிழ்நாடு சுற்றுலா மேற்கொண்டு வருகிறது. பாரம்பரியக் கட்டடங்களை, பாரம்பரியத் தங்கும் விடுதிகளாக மாற்றுவோருக்கு, கட்டுமானப் பணிகளுக்கான முதலீட்டில் 10 விழுக்காடு மானியமாக வழங்கப்படுகிறது.

8.3.5 பாரம்பரிய விடுதிகளுக்கு மானியம்

(அ) பாரம்பரிய விடுதி: 1950 ஆம் ஆண்டிற்கு முன்பு கட்டடம் கட்டப்பட்டிருக்க வேண்டும். இதில் குறைந்தது 5 அறைகள் (10 படுக்கைகள்) இருக்க வேண்டும்.

(ஆ) உயர்தர பாரம்பரிய விடுதி: 1935 ஆம் ஆண்டிற்கு முன்பு கட்டடம் கட்டப்பட்டிருக்க வேண்டும். இதில் குறைந்தது 15 அறைகள் (30 படுக்கைகள்) இருக்க வேண்டும்.

(இ) உணவு: இந்த தங்கும் விடுதி பாரம்பரிய உணவை அளிக்க வேண்டும். ஆனால், கான்டினென்டல் சமையலுக்கு ஏறக்குறைய அணுக்கமாக உள்ள நான்கு அல்லது ஐந்து உணவு வகைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

2009 ஜூலை 7]

8.4 தமிழகத்தின் சுற்றுலா அதிசயங்கள்

தமிழகத்தில் உள்ள பல்வேறு சுற்றுலா அதிசயங்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை பெரிதும் ஈர்க்கின்றன. சுற்றுலாப் பயணிகளுக்குப் பயனளிக்கும் வகையில், தமிழகத்தின் சுற்றுலா அதிசயங்கள் உள்ள பகுதிகளைச் சீராக மேம்படுத்த, தமிழ்நாடு சுற்றுலா குறிப்பிட்ட இடங்களைத் தெரிவு செய்யும் நடவடிக்கை எடுத்து வருகிறது. தமிழகத்திலுள்ள சுற்றுலாத் தலங்களில் பல்வேறு வகைகளில் திட்டங்களைத் திட்டமிட்டு வளர்ச்சிப் பணிகளை தமிழ்நாடு சுற்றுலா மேற்கொண்டு வருகிறது.

- யுனெஸ்கோ அறிவித்துள்ள நினைவுச் சின்னங்கள் - மாமல்லபுரம், தஞ்சாவூரிலுள்ள சோழர் கால கோவில்கள் (பெரிய கோயில், கங்கைகொண்ட சோழபுரம், தாராசுரம்) மற்றும் நீலகிரியின் மலை இரயில்.
- சென்னை, காஞ்சிபுரம், மதுரை, இராமேசுவரம், தூத்துக்குடி, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் கன்னியாகுமரி ஆகிய முக்கிய நகரங்கள்
- முருகப் பெருமானின் அறுபடை வீடுகள் (திருப்பரங்குன்றம், சோலைமலை மண்டபம், சுவாமிமலை, பழனி, திருத்தணி மற்றும் திருச்செந்தூர்)
- நவக்கிரகத் தலங்கள் (வைத்தீஸ்வரன் கோவில், திருவெண்காடு, கீழப்பெரும்பள்ளம், திருநள்ளார், ஆலங்குடி, திங்களூர், திருநாகேஸ்வரம், சூரியனார் கோவில் மற்றும் கஞ்சனூர்)
- உதகமண்டலம், கொடைக்கானல் மற்றும் ஏற்காடு ஆகிய மலை வாழிடங்கள்
- அதிகம் பிரபலமடையாத தலங்கள் - 18 (பிற்சேர்க்கை)
- பாரம்பரிய நகரங்கள் - 48 (பிற்சேர்க்கை)
- கிராமியச் சுற்றுலாத் தலங்கள்

8.5 ஏழு அதிசயங்கள்

அண்மையில், ஒரு தனியார் தொலைக்காட்சி அலைவரிசை ஒன்று, ஏழு அதிசயங்களை தமிழ்நாட்டின் அதிசயங்களாக (மீனாட்சியம்மன் கோவில் - மதுரை, பிரகதீஸ்வரர் கோவில் - தஞ்சாவூர்,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2009 ஜுலை 7

இராமநாதசுவாமி கோவில் - இராமேசுவரம், மலைக் கோட்டை - திருச்சிராப்பள்ளி, மாமல்லபுர சிற்பங்கள், சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிமன்றக் கட்டடம், செட்டிநாடு மாளிகை - கானாடுகாத்தான்) அறிவித்துள்ளது.

இது தவிர, பிச்சாவரம் சதுப்பு நிலக் காடுகள், சென்னையிலுள்ள சாந்தோம் தேவாலயம், மெரீனா கடற்கரை, விவேகானந்தர் நினைவுப் பாறை, மாத்தூர் தொட்டிப் பாலம், வேலூர் கோட்டை ஆகியவையும் குறிப்பிடப்பட்டுள்ளன. சுற்றுலா அதிசயங்கள் மேம்பாட்டுத் திட்டத்தில் அடிப்படை மற்றும் கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

8.6 அடிப்படை மற்றும் கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு

சுற்றுலாத் தலங்களில் அடிப்படை மற்றும் கட்டமைப்பு வசதிகள் பின்வரும் வகைகளில் ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

- அறுபடை வீடுகள் பயணச்சுற்று
- நவக்கிரக பயணச்சுற்று
- சமணர் புராதனச் சின்னங்கள் பயணச்சுற்று
- ஆதி சங்கரர் பயணச்சுற்று
- சோழநாட்டு திருப்பதிகள் பயணச்சுற்று
- சென்னை - காஞ்சிபுரம் - மாமல்லபுரம் பயணச்சுற்று
- கிராமப் பயணச்சுற்று
- சுற்றுச்சூழல் பேணும் பயணச்சுற்று
- கடற்கரை காணும் பயணச்சுற்று - பழவேற்காடு, சென்னை, மாமல்லபுரம், முதலியார்குப்பம், ஆலம்பரக்கோட்டை
- வனவிலங்கு காணும் பயணச்சுற்று - கிண்டி குழந்தைகள் பூங்கா, அறிஞர் அண்ணா வனவிலங்கு பூங்கா, முதலைப் பண்ணை, முதுமலை, ஆனைமலை
- சுற்றுலா அதிசயங்கள் காணும் பயணச்சுற்று

2009 ஜூலை 7]

- சப்தவிடத் தலங்கள் பயணச்சுற்று
- தென்னகப் பாரம்பரிய பயணச்சுற்று
- கிழக்குக் கடற்கரைச் சாலை பயணச்சுற்று

8.7 மனித வள மேம்பாடு வழிகாட்டிகள் பயிற்சி முகாம்

தமிழகத்திலுள்ள கோயில்கள், அழகிய கடற்கரைகள், வினோதமான வனவிலங்கு சரணாலயங்கள், கண்கவர் அருவிகள், முகில் முட்டும் கண்கவர் மலை முகடுகள் ஆகியவற்றைக் காண ஆண்டு முழுவதும் அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர்.

சுற்றுலா மேம்பாட்டில் வழிகாட்டிகள் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். நாட்டின் வளத்தை சரியாக விவரிப்பதும், சரியான தகவல் கொடுப்பதும், சுற்றுலாப் பயணிகளுக்குப் பாதுகாப்பான பயணத்தை ஏற்படுத்துவதும், குறையின்றி சுற்றுலாத் தலங்களில் தங்கிச் செல்ல ஏற்பாடு செய்வதும் வழிகாட்டியின் பொறுப்பாகும்.

வேலையில்லா இளைஞர்களுக்கும், ஓய்வு பெற்ற அரசு அலுவலர்களுக்கும் சென்னையிலுள்ள அண்ணா மேலாண்மை பயிற்சி மையத்துடன் ஒருங்கிணைந்து வழிகாட்டிகள் பயிற்சி முகாமை தமிழ்நாடு சுற்றுலா நடத்தி வருகிறது. ஊரக வளர்ச்சித் துறை, 400 நபர்களுக்கு வழிகாட்டிகள் பயிற்சி முகாமை நடத்த ரூ.22.10 இலட்சம் வழங்கி இருக்கிறது. இப்பயிற்சித் திட்டத்தில் ஒவ்வொரு குழுவிற்கும் 10 நாட்கள் பயிற்சியுடன் மூன்று நாட்கள் கள ஆய்வும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக 2008-2009 ஆம் ஆண்டில் 133 நபர்களுக்கு வழிகாட்டிப் பயிற்சி அளிக்கப்பட்டது. 14 ஓய்வு பெற்ற அரசு அதிகாரிகளுக்கும் வழிகாட்டிப் பயிற்சி அளிக்கப்பட்டது. ஏற்கெனவே பயிற்சி பெற்ற 64 நபர்களுக்கு ஒருங்கிணைப்புப் பயிற்சியும் வழங்கப்பட்டது. பயிற்சி பெற்ற வழிகாட்டிகளுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டது.

சுற்றுலா, விருந்தோம்பல் பண்பை அடிப்படையாகக் கொண்ட தொழிலாக கருதப்படுவதால், இதில், வரவேற்பு, விடுதி பராமரிப்பு, உள் அலங்காரம் மற்றும் உணவு ஆகியவற்றில் தொழில்நுட்பத்தைப் புகுத்த வேண்டியது அவசியமாகிறது. தமிழ்நாட்டில் இரண்டு அரசு சார்ந்த விடுதி மற்றும் உணவு மேலாண்மை நிறுவனங்கள் உள்ளன.

[2009 ஜூலை 7

மாநில ஓட்டல் நிர்வாகம் மற்றும் உணவு மேலாண்மை நிறுவனம், துவாக்குடி, திருச்சிராப்பள்ளி (அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமத்தால் அங்கீகரிக்கப்பட்டு, தமிழ்நாடு அரசின் தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்துடன் இணைக்கப்பட்டது) ஓட்டல் நிர்வாகம் மற்றும் உணவு மேலாண்மையில் மூன்றாண்டு பட்டயப் படிப்பும், உணவு தயாரித்தல், உணவு மற்றும் பானங்கள் விநியோகம், விடுதி நிர்வாகம், ரொட்டி தயாரித்தல் ஆகியவற்றில் ஓராண்டு சான்றிதழ் படிப்பும் வழங்குகிறது. 26 ஏக்கர் பரப்பில் விரிந்துள்ள இக்கல்வி நிறுவனத்தில் 600 மாணவர்கள் படித்து வருகின்றனர்.

சென்னை தரமணியில் இயங்கிவரும் ஓட்டல் நிர்வாகம், உணவு மேலாண்மை மற்றும் ஊட்டச்சத்து பயிற்சி நிறுவனம், ஓட்டல் நிர்வாகம் மற்றும் உணவு மேலாண்மையில் மூன்றாண்டு பட்டயப் படிப்பும், பல்வேறு கைவினை சான்றிதழ் படிப்புகளையும் பயிற்று வரும் நாட்டின் முன்னணி கல்வி நிறுவனங்களில் ஒன்று. இந்நிறுவனம் விருந்தோம்பல், விடுதி நிர்வாகம் மற்றும் உணவு மேலாண்மையில் தரமான கல்வியை கடந்த 44 ஆண்டுகளாக வழங்கி வருவதுடன், சுற்றுலாத் தொழிலுடன் சிறந்த இணைப்பைக் கொண்டுள்ளது. இந்த நிறுவனத்தில் சுமார் 600 மாணவர்கள் பல்வேறு பாடப்பிரிவுகளில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

8.8 திறன் சார் பயிற்சி

சுற்றுலாத் துறையின் முனைப்பான மற்றும் திறம்பட்ட மேம்பாட்டிற்காக, தமிழ்நாடு சுற்றுலா திறன் சார் வளர்ப்பு பயிற்சித் திட்டங்களை நடத்தி வருகிறது. கீழ்க்கண்ட வகைகளில் பயிற்சித் திட்டம் அளிக்கப்படும்:

- கிராமப்புறங்களில் வாழும் சமூகத்தினர்
- ஓட்டல்களில் வரவேற்புப் பணிபுரியும் பணியாளர்கள்
- வாடகைச் சீருந்துகள் மற்றும் ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்கள்
- விமான நிலையங்கள் மற்றும் புகைவண்டி நிலையங்களில் சுற்றுலாப் பயணிகளைப் பேணுகின்ற பணியாளர்கள்
- கோயில் பணியாளர்கள்

ALONE TRIUMPHS

2009 ஜுலை 7]

8.9 தொழிலக நிறுவன தொடர்புகள்

இளைஞர்கள் சுற்றுலாக் கல்விய்ய எடுத்துப் பயில்வதை ஊக்குவிக்க, தமிழ்நாடு சுற்றுலா அவர்களுக்குத் தேவையான தகவல்கள் மற்றும் பிற தேவைகளைப் பகிர்ந்து கொள்கிறது. சுற்றுலா தொழில் சார்ந்த பயிற்சியும் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. துறையின் மூத்த அலுவலர்கள் சுற்றுலாக் கல்வி நிறுவனங்களுக்குச் சென்று சுற்றுலா மாணவர்களுடன் கலந்தாய்வு நடத்தி அவர்களுக்குத் தேவையான விவரங்களை வழங்கி வருகின்றனர்.

8.10 தொழில் ரீதியான அமைப்புகள் மற்றும் தொழிற்சங்கங்களுடனான ஒத்துழைப்பு

தொழில் ரீதியான குழுமமாகிய இந்திய மக்கள் தொடர்பு சங்கம் (சென்னை அத்தியாயம்), மற்றும் தென்னிந்திய விடுதி மற்றும் உணவகங்களின் சங்கம் (SIHRA) இந்தியப் பயணம் ஏற்பாடு செய்பவர் சங்கம் (IATO), இந்தியப் பயண முகவர்கள் சங்கம் (TAAI), ஆகிய சுற்றுலா தொழிற்சார்ந்த சங்கங்களுடன் சுற்றுலா மேம்பாட்டிற்காக தமிழ்நாடு சுற்றுலா முனைப்பாக ஒத்துழைப்பை நல்குகிறது.

9. சுற்றுலா கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு

9.1 தமிழ்நாட்டின் சுற்றுலா வளர்ச்சிக்கு, உள்கட்டமைப்பு மேம்பாடு தலையாயதாகக் கொண்டு திகழ்கிறது. சுற்றுலா வளர்ச்சிக்குச் சுற்றுலாத் தலங்கள் மற்றும் பயணச் சுற்றுகளைத் தெரிவு செய்வது முக்கிய ஷரத்தாகத் திகழும். தமிழ்நாடு சுற்றுலா, பெரும் சுற்றுலாத் தலங்கள் மற்றும் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த பயண வட்டங்களைக் கண்டறிந்துள்ளதுடன் தரங்கம்பாடி, மாமல்லபுரம், கொல்லி மலை, ஸ்ரீபுரம்-அரியூர் பகுதி, அமிர்தி காடுகள் - பாலமதி மலை, குற்றாலம், ஒகேனக்கல் மற்றும் திருச்செந்தூர் ஆகிய இடங்களுக்கான திட்டப் பணிகளுக்கு ஏற்கெனவே அனுமதியளித்திருந்தது.

9.2 இத்தகைய கட்டமைப்புத் திட்டப் பணிகளுக்கு, மைய அரசின் சுற்றுலா அமைச்சகத்திடமிருந்து நிதியுதவி மற்றும் மாநில அரசின் நிதி அனுமதி என துறையின் ஆதரவு இரண்டு நிலைகளில் வழங்கப்படுகிறது.

[2009 ஜூலை 7

9.3 சுற்றுலா வளர்ச்சிக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. கட்டமைப்பு மேம்பாடு மற்றும் சுற்றுலாத் தல மேம்பாட்டிற்கு மைய மாநில அரசுகள் போதிய நிதி ஒதுக்கீட்டை வழங்குகின்றன. சுற்றுலாத் தலத்தில் ஒருங்கிணைந்த மேம்பாடு என்ற கொள்கையை மைய அரசு சுற்றுலா அமைச்சகம் சில வருடங்களுக்கு முன்பு வடிவமைத்து, வளர்ச்சித் திட்டங்கள் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

9.4 மைய அரசு நிதி உதவி திட்டங்கள்

தென்னக மற்றும் மேற்கு மாநிலங்களிடையே, 2007-2008 ஆம் ஆண்டில், அதிகபட்சமாக ரூ.2,748.916 இலட்சம் மைய அரசு நிதி உதவி தமிழகத்திற்குப் பெறப்பட்டுள்ளது. 2008-2009 ஆம் ஆண்டில் மைய அரசின் சுற்றுலாத் துறை பின்வரும் சுற்றுலாப் பகுதிகள் மற்றும் சுற்றுலா சுற்றுச் சாலை மேம்பாடு ஆகியவற்றின் மேம்பாட்டிற்கு நிதி உதவி வழங்கியுள்ளது:

வ. எண்	திட்டத்தின் பெயர்	ஒப்பளிப்பு செய்த தொகை	விடுவித்த தொகை
		(ரூ. இலட்சத்தில்)	
1.	சுற்றுலாத் தலங்கள் மேம்பாடு திட்டத்தின்கீழ் நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி மேம்பாடு	373.08	298.47
2.	சுற்றுலாத் தலங்கள் மேம்பாடு திட்டத்தின்கீழ் திருவள்ளூர் மாவட்டம், பழவேற்காடு மேம்பாடு	260.00	208.00
3.	சுற்றுலா சுற்றுச்சாலை திட்டத்தின் கீழ் வேலூர்-(ஸ்ரீபுரம் பொற்கோயில்)-பாலமதி மலை-அமிர்தி காடுகள் சுற்றுலா சுற்றுச்சாலை மேம்பாடு	415.78	332.62
4.	மாமல்லபுரத்தில் பேருந்து வசதிகள் மற்றும் சுற்றுலா வசதி மையம் ஏற்படுத்துதல்	366.03	218.42

2009 ஜூலை 7]

5.	சுற்றுலாத் தலங்கள் மேம்பாடு திட்டத்தின்கீழ் நாமக்கல் மாவட்டம் கொல்லிமலை மேம்பாடு	327.98	262.38
6.	விடுதலைப் போராட்டத் தலம் மேம்பாடு	290.00	232.00
7.	சுற்றுலாத் தலங்கள் மேம்பாடு திட்டத்தின்கீழ் திருநெல்வேலி மாவட்டம், குற்றாலம் மேம்பாடு	452.00	361.00
8.	சுற்றுலாத் தலங்கள் மேம்பாடு திட்டத்தின்கீழ் தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் மேம்பாடு	402.00	322.00
9.	சுற்றுலாத் தலங்கள் மேம்பாடு திட்டத்தின்கீழ் ஒகேனக்கல் மேம்பாடு	336.18	268.91
	மொத்தம்	3223.05	2503.80

9.5 மைய அரசு நிதி உதவித் திட்டத்தின்கீழ் 2007–2008 ஆம் ஆண்டில் ஒப்பளிக்கப்பட்டு நடைபெற்று வரும் திட்டங்கள்:

வ. எண்	திட்டத்தின் பெயர்	ஒப்பளிப்பு செய்த தொகை	விடுவித்த தொகை
		(ரூ. இலட்சத்தில்)	
1.	சுற்றுலாத்தலங்கள் மேம்பாடு திட்டத்தின்கீழ் சிவகங்கை மாவட்டம் செட்டிநாடு மேம்பாடு	475.35	380.28
2.	சுற்றுலாத் தலங்கள் மேம்பாடு திட்டத்தின்கீழ் திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவரங்கம் மேம்பாடு	372.70	298.16
3.	சுற்றுலாத் தலங்கள் மேம்பாடு திட்டத்தின்கீழ் மெரினா கடற்கரையை அழகுபடுத்தல்	492.76	394.21

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	திட்டத்தின் பெயர்	ஒப்பளிப்பு செய்த தொகை	விடுவித்த தொகை
		(ரூ. இலட்சத்தில்)	
4.	சுற்றுலாத் தலங்கள் மேம்பாடு திட்டத்தின்கீழ் வேலூர் கோட்டை அதனைச் சுற்றியுள்ள பகுதிகள் மேம்பாடு	89.32	71.46
5.	சுற்றுலா சுற்றுச்சாலை திட்டத்தின்கீழ் உதகமண்டலம்-முதுமலை-ஆனைமலை மேம்பாடு	439.50	351.60
6.	சுற்றுலாத் தலங்கள் மேம்பாடு திட்டத்தின்கீழ் வேலூர் மாவட்டம், ஏலகிரி மேம்பாடு	365.72	292.57
7.	சுற்றுலா சுற்றுச்சாலை திட்டத்தின்கீழ் சப்தவிடங்கள் ஸ்தலம் மேம்பாடு	314.45	251.56
8.	சுற்றுலாத் தலங்கள் மேம்பாடு திட்டத்தின்கீழ் தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் மேம்பாடு	187.00	149.60
9.	சுற்றுலாச் சேவை புரிபவர்களுக்கான பயிற்சி (Capacity Providers)	12.116	6.00
	மொத்தம்	2748.916	2195.44

9.6 மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், நீலகிரி மாவட்டம்

மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 2008-2009 ஆம் ஆண்டில் நீலகிரி மாவட்டத்தில் உள்ள பல்வேறு சுற்றுலா மையங்களை மேம்படுத்துவதற்காக, ரூ.203.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதே போன்று, 2009-2010 ஆம் ஆண்டில் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பல்வேறு சுற்றுலாப் பகுதிகள் மேம்பாட்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

9.7 மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்

மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2008-2009 ஆம் ஆண்டில் ரூ.80.00 இலட்சம் கொடைக்கானலில்

2009 ஜூலை 7]

அடிப்படை வசதிகள் ஏற்படுத்துவதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

அதேபோன்று, 2009-2010 ஆம் ஆண்டில் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சுற்றுலாப் பகுதிகள் மேம்பாட்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

10. மாநில அரசு நிதி உதவித் திட்டங்கள்

10.1 2008-2009 ஆம் ஆண்டில் மாநில அரசு நிதி உதவித் திட்டத்தின்கீழ் பின்வரும் இடங்கள் மேம்பாட்டிற்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன:

வ. எண்	திட்டத்தின் பெயர்	மாவட்ட நிர்வாகப் பங்கு	சுற்றுலாத் துறைப் பங்கு	மொத்த திட்ட மதிப்பீடு
		(ரூபாய் இலட்சத்தில்)		
1.	சென்னை மாவட்டம், கோயம்பேடு அ/மி குறுங்காலீஸ்வரர் மற்றும் அ/மி வைகுண்டவாசப் பெருமாள் திருக்கோயிலுக்கும் இடையில் உள்ள மண் பாதையை கான்கிரீட் சாலையாக மாற்றுதல்.	0.00	3.40	3.40
2.	திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி அ/மி சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் பகுதியில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல்.	69.12	69.13	138.25
3.	வண்டலூர், ஒட்டேரி ஏரி படகு குழாம் கட்டுதல் மற்றும் படகு வாங்குதல்.	0.00	20.00	20.00

[2009 ஜூலை 7

வ. எண்	திட்டத்தின் பெயர்	மாவட்ட நிர்வாகப் பங்கு	சுற்றுலாத் துறைப் பங்கு	மொத்த திட்ட மதிப்பீடு
		(ரூபாய் இலட்சத்தில்)		
4.	வேலூர் மாவட்டம், அ/மி லெட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோயில் பகுதியில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல்	*16.17*	*16.18*	*32.35*
5.	வேலூர் மாவட்டம், ஏலகிரி மலையில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல்	*70.425*	*70.425*	*140.85*
6.	விழுப்புரம் மாவட்டம், வீடுர் அணை மேம்பாடு	*0.00*	*30.00*	*30.00*
7.	விழுப்புரம் மாவட்டம், கல்வராயன் மலை மேம்பாடு	*0.00*	*60.00*	*60.00*
8.	நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் கடற் கரையினை அழகுபடுத்துதல்.	*121.50*	*121.50*	*243.00*
9.	பெரம்பலூர் மாவட்டம், சாத்தனூரில் உள்ள கல்மரத்தினைச் சுற்றி அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல்	*0.00*	*50.10*	*50.10*
10.	மதுரை மாவட்டம், மதுரையைச் சுற்றியுள்ள மூன்று முக்கிய கோயில் பகுதிகளில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல்.	*101.75*	*101.75*	*203.50*
11.	திருநெல்வேலி மாவட்டம், அடவிநயினார் அணை (ம) பூங்கா, குண்டார் பூங்கா (ம) அணை, மணிமுத்தாறு (ம) கிருஷ்ணாபுரம் பகுதி மேம்பாடு (2-கட்டம்)	*30.23*	*30.23*	*60.46*

2009 ஜூலை 7]

வ. எண்	திட்டத்தின் பெயர்	மாவட்ட நிர்வாகப் பங்கு	சுற்றுலாத் துறைப் பங்கு	மொத்த திட்ட மதிப்பீடு
		(ரூபாய் இலட்சத்தில்)		
12.	திருநெல்வேலி மாவட்டம், தென்காசியில் உயர் மின் கம்ப விளக்கு மற்றும் தார்ச் சாலை அமைத்தல்	18.60	9.30 + (9.30 விடுவிக்க வேண்டும்)	37.20
13.	கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை அ/மி பேட்டராயன் சுவாமி திருக்கோயில் பகுதியில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல்	0.00	9.75	9.75
14.	சேலம் மாவட்டம், தாரமங்கலத்தில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல்	0.00	60.00	60.00
15.	கன்னியாகுமரி மாவட்டம், திற்பரப்பு நீர்விழ்ச்சி மேம்பாடு	0.00	85.00	85.00
16.	இராமநாதபுரம் மாவட்டம், இராமேசுவரம் அக்னி தீர்த்தம் அருகில் வாகன நிறுத்துமிடம் அமைத்தல்	25.50	24.00	49.50
17.	வண்டலூர், அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவின் முகப்பு பகுதியினை மேம்படுத்துதல்	0.00	125.00	125.00
18.	கடலூர் மாவட்டம், வடலூர் அ/மி சத்ய ஞானசபை பகுதியில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல்	0.00	68.41	68.41
	மொத்தம்	453.295	954.175	1407.47

[2009 ஜூலை 7

10.2 பகுதி-2 திட்டத்தின்கீழ் 2008-2009 ஆம் ஆண்டில் பின்வரும் திட்டங்களுக்கு நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளன:

வ. எண்	திட்டத்தின் பெயர்	தொகை (ரூ. இலட்சத்தில்)
1.	திருவள்ளூர் மாவட்டம், பூண்டி நீர்த்தேக்கம் மேம்பாடு	50.00
2.	நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை மேம்பாடு	100.00
3.	சுற்றுலா அலுவலகங்கள் மற்றும் சுற்றுலா தகவல் மையங்கள் புனரமைத்தல் சுற்றுலா அலுவலகங்கள் மாமல்லபுரம், மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் சிதம்பரம் சுற்றுலா தகவல் மையங்கள் வேலூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் திருவனந்தபுரம்	30.00
4.	சுற்றுலா இயக்ககம் மற்றும் சுற்றுலா அலுவலகங்களுக்கு கணினி மற்றும் நிகரி இயந்திரம் வாங்குதல்	8.20
5.	சுற்றுலா இயக்ககம் மற்றும் சுற்றுலா அலுவலகங்களின் பயன்பாட்டிற்கு மடிக் கணினி வாங்குதல்	3.50
6.	சுற்றுலா அலுவலங்களின் பயன்பாட்டிற்கு புகைப்படக் கருவி வாங்குதல்	2.52
	மொத்தம்	194.22

2009 ஜூலை 7]

10.3 2007-2008 ஆம் ஆண்டில் ஒப்பளிக்கப்பட்ட பின்வரும் திட்டங்கள் நடைபெற்று வருகின்றன:—

வ. எண்	திட்டத்தின் பெயர்	தொகை (ரூ. இலட்சத்தில்)
1.	சிவகங்கை மாவட்டம், குன்றக்குடியில் கட்டமைப்பு வசதிகள் செய்தல்	43.25
2.	தூத்துக்குடி மாவட்டம், பாஞ்சாலங்குறிச்சியில் மேம்பாடு மற்றும் புனரமைப்புப் பணிகள்	28.50
3.	திருநெல்வேலி மாவட்டம், குற்றாலத்தில் வளர்ச்சிப் பணிகள்	44.00
4.	கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையத்தில் வனபத்திரகாளியம்மன் கோயிலில் அடிப்படை வசதிகள்	34.49
5.	குலசேகரபட்டினத்தில் கடற்கரைப் பூங்கா அமைத்தல்	22.00
6.	சிவகங்கை மாவட்டம், தேவகோட்டையில் பூங்கா	59.00
7.	ஆலங்குடி, வலங்கைமான் மற்றும் வடுவூர் ஆகிய புனிதத் தலங்களில் அடிப்படை வசதிகள்	5.37
8.	தேனி மாவட்டம், குச்சனூர் அ/மி சனீஸ்வரபகவான் கோயில் பகுதியில் அடிப்படை வசதிகள்	23.25
9.	தூத்துக்குடி மாவட்டம், எட்டையபுரத்தில் வளர்ச்சிப் பணிகள்	31.25
10.	திருவாரூர் மாவட்டம், கண்கொடுத்தவனிதம் எனுமிடத்தில் கட்டமைப்பு வசதிகள்	62.30
11.	நாகப்பட்டினம் மாவட்டம், சிக்கலில் வளர்ச்சிப் பணிகள் (அ/மி நவநீதேஸ்வரர் சுவாமி திருக்கோயில் வளாகத்தில் மேம்பாடு மற்றும் அழகுபடுத்தும் திட்டம்)	14.97
12.	மதுரை எல்லீஸ் நகரில் புனிதப் பயணியர் விடுதி மற்றும் அ/மி மீனாட்சியம்மன் கோயிலின் ஐந்து வாசல்களிலும் காலணி மற்றும் பொருள் வைப்பறை கட்டுதல்	42.45
13.	திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சுற்றுலாத் தலங்களில் அடிப்படை வசதிகள் (மொத்த திட்ட மதிப்பீடு ரூ.81.45 இலட்சத்தில் ரூ. 34.93 மட்டும் இவ்வாண்டில் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.)	34.93

[2009 ஜூலை 7

10.4 ஏனைய துறைகளிடமிருந்து நிதிகளை ஒருங்கிணைத்தல்

10.4.1 சுற்றுலாத் தலங்களில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்காக சுற்றுலாத் துறையானது, மாநில அரசின் சம்பந்தப்பட்ட பிற துறைகளுடன் இணைந்து நிதி ஒதுக்கியுள்ளது.

10.4.2 ஊரகச் சுற்றுலாவை மேம்படுத்துமாறு சுற்றுலாத் துறை கேட்டுக் கொண்டவாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் துறை, "கட்டமைப்பு வசதிகள் தொடர தொய்விலா நிதி" என்ற நிதியை ஏற்படுத்தியது. சுற்றுலாத் தலங்களை இணைக்கும் சாலைகள் மேம்பாட்டிற்கு நெடுஞ்சாலைத் துறை ரூ.25 கோடி நிதி ஒப்பளிப்பு அளித்துள்ளது. சுற்றுலா வரவு செலவுத் திட்டத்தின் வரம்பின்கீழ், நெடுஞ்சாலைகளை மேம்படுத்துவதற்காக, அரசு ரூ.10.00 கோடி வழங்கியுள்ளது. புனித வழிபாட்டுத்தலங்களில் மேற்கொள்ளப்படும் சுற்றுலாத் திட்டங்களுக்குச் செயல்படுத்த தொடர்ந்து 50 சதவிகித நிதியை, இந்து சமய அறநிலையத் துறை வழங்கி வருகிறது. ஏனைய துறைகளிடமிருந்து பெறப்பட்ட செய்தி, கல்வி, தகவல் தொடர்பு நிதிகளும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்திய சுற்றுலாப் பொருட்காட்சிக்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

10.4.3 பின்வரும் திட்டங்கள், பொருட்காட்சிகள், பண்டிகைகள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் செயல்படுத்தப்பட்டுள்ளன:

- தீவுத்திடலில் சாகசச் சுற்றுலா
- முதலியார்குப்பத்தில் நீர் விளையாட்டுக்கள்
- ஊட்டி, ஏற்காடு, ஏலகிரி முதலிய மலை வாழிடங்களில் முகாமிடும் இடங்கள்
- மலை வாழிடங்களில் சிகரப் பயணம்
- மாமல்லபுரத்திலுள்ள கடற்கரை உணவகங்களில் கூடாரக் குடில்கள்
- பாரம்பரியக் கட்டடங்களைப் பாரம்பரிய ஓட்டல்களாக மாற்றுதல்
- பொருட்காட்சிகள், பண்டிகைகள்
- சென்னை மற்றும் கோயம்புத்தூரில் கோடைக் கால பொருட்காட்சிகள்

2009 ஜூலை 7]

- ➢ சென்னையில் உணவுத் திருவிழா
- ➢ சென்னையில் கல்வி மற்றும் சுற்றுலா கண்காட்சி

11. புதிய சுற்றுலா வகைகள்

11.1 சமூகப் பொறுப்புணர்வுச் சுற்றுலா

கிராமப்புறங்களின் மேம்பாட்டிற்காக அதன் வாழ்வாதாரங்களையும், வாழ்க்கை முறையையும் சுற்றுலாப் பயணிகளுக்கு, குறிப்பாக இளைய சமுதாயத்திற்கு எடுத்துக்காட்டும் வகையில், சுற்றுலாத் துறை அயராத முயற்சிகளை எடுத்து வருகிறது. இம்முயற்சி கிராமப்புறங்களைச் சுற்றுலாவுக்கு உகந்ததாக மாற்றுவதுடன் கிராம மக்களின் சமூகப் பொருளாதாரத் தரத்தை உயர்த்தவும் வழி கோலுகிறது. நுட்பமான உயிரின வாழ்க்கைச் சூழல், சிறந்த பழக்க வழக்கங்கள் மற்றும் விருந்தினர்களைப் போற்றுவது தொடர்பான உள்ளூர் பொது மக்களின் பொறுப்புத் தன்மையை பதிய வைப்பதற்கும், கலாச்சாரம், பாரம்பரியம் மற்றும் சம்பிரதாயங்களைச் சுற்றுலாப் பயணிகள் தவறாகப் பயன்படுத்துவதைத் தவிர்ப்பது தொடர்பாக, அவற்றுக்கு மிகவும் மதிப்பளிக்கச் செய்வதும் சமூகப் பொறுப்புணர்வுச் சுற்றுலாவின் நோக்கம் ஆகும்.

11.2 சுற்றுச்சூழல் சுற்றுலா

சில சுற்றுலாப் பயணிகள் சுற்றுச் சூழல் ஆர்வலர்களாக இருப்பர். தமிழ்நாட்டில் மலை வாழிடங்கள், அருவிகள், வனங்கள், பறவைகள் சரணாலயங்கள், கடற்கரைகள் என பல வகையான சுற்றுலா செல்வங்கள் ஏராளமாக உள்ளன. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் வனத் துறையிலிருந்து ஒரு அலுவலரை நியமித்து சுற்றுச் சூழல் சுற்றுலாப் பிரிவை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சுற்றுலாத் தொழில் புரிவோரிடம் முனைப்பை ஏற்படுத்துதல், திறன்சார் முன்னேற்றம் மற்றும் அரசு-தனியார் கூட்டுத் தொழிலில் வருமானம் ஈட்டுதல் ஆகியவைகளில் தொடர்ந்து சுற்றுலா ஒருமித்த நடவடிக்கைகளை எடுப்பதன்மூலம் தமிழ்நாட்டை உலகளவில் சிறந்த மாநிலமாக ஆக்குவதே தமிழ்நாடு சுற்றுலாவின் தொலைநோக்குப் பார்வையாகும்.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

[2009 ஜூலை 7

11.3 ஊரகச் சுற்றுலா

11.3.1 ஊரக அமைவிடங்களின் வாழ்க்கை, கலை, பண்பாடு, பாரம்பரியம் ஆகியவற்றைச் சித்தரிப்பதற்கும், உள்ளூர் சமுதாயம் பொருளாதார ரீதியாகவும், சமூக ரீதியாகவும் ஆதாயம் அடைவதற்கும், சுற்றுலாப் பயணிகளும், உள்ளூர் மக்களும் ஒவ்வொருவருக்கிடையேயான அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கும், அவர்களுக்கிடையே தொடர்பை ஏற்படுத்துவதற்கும், கிராமியச் சுற்றுலாவை மேம்படுத்துவதற்கு தமிழ்நாடு சுற்றுலா முடிவு செய்துள்ளது.

11.3.2 அதிவேகமாக வளர்ந்து வரும் தொழில் நகரங்களின் உருவாக்கத்தால், மக்கள் வாழ்வாதாரத்திற்காகக் கிராமங்களை விட்டு வெளியேறி, நகரங்களுக்குக் குடிபுகும் சூழல் அதிகரித்துள்ளது. இதனால், நகரில் வளரும் மக்களுக்கு, குறிப்பாக சிறார்களுக்கு கிராமியப் பண்பாடு மற்றும் அன்றாட நடைமுறைகள் தெரியாமலேயே போகின்றன. எனவே, தங்களது கிராமிய வளத்தை, நடைமுறைகளை இளைஞர்களுக்குப் புகட்டிடும் நிலைக்கு அவர்களது பெற்றோர் ஆளாகியுள்ளனர். கிராம மக்களின் வாழ்க்கை முறையைச் சுற்றுலாப் பொருளாகச் சித்தரிப்பதன்மூலம் சுற்றுலாப் பயணிகளை அதிக எண்ணிக்கையில் கிராமங்களுக்கு ஈர்க்க இயலும்.

11.3.3 மைய அரசு சுற்றுலா அமைச்சகம் ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்டத்துடன் (UNDP) இணைந்து திறன் வளர்ப்பை முதன்மைத் திட்டமாகக் கிராமியச் சுற்றுலாவிற்காக எடுத்துக் கொண்டுள்ளது. மைய அரசு சுற்றுலா அமைச்சகம் வன்பொருள் திட்டங்களுக்கு வரையறுக்கப்பட்ட வரம்பிற்குள், நிதி உதவி வழங்கி வருகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் உள்ளூர் சமுதாயத்தின் ஒருங்கிணைப்புடன், ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்டத்தால் கண்டறியப்பட்ட அரசு சாரா அமைப்பின் பங்கேற்புடன், மென் பொருள் திட்டக்கூறு செயல்படுத்தப்பட்டது. ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வரும் பகுதிகளுக்கு அப்பாற்பட்ட ஏனைய ஊரக இடங்களுக்குச் சேவை வழங்குவோருக்கான திறன் வளர்ப்புப் பயிற்சித் (ESP) திட்டத்தையும், மத்திய அரசு நீட்டித்துள்ளது. மைய அரசு சுற்றுலா அமைச்சகம் ஒப்பளித்த திட்டப் பணிகளின் பட்டியல் ஒன்று, கீழே விவர அட்டவணையில் அளிக்கப்பட்டுள்ளது:

2009 ஜூலை 7]

வ. எண்	திட்டத்தின் பெயர்	மைய அரசு சுற்றுலா அமைச்சகம் ஒப்பளித்த தொகை (ரூ. இலட்சத்தில்)
1.	தூத்துகுடி மாவட்டம், கழுகுமலை மேம்பாடு: கட்டமைப்பு வசதிகள் பயிற்சித் திட்டம்	 48.68 20.00
2.	சிவகங்கை மாவட்டம், செட்டிநாடு மேம்பாடு: கட்டமைப்பு வசதிகள் பயிற்சித் திட்டம்	 50.00 20.00
3.	தருமபுரி மாவட்டம், தீர்த்தமலை மேம்பாடு	50.00
4.	இராமநாதபுரம் மாவட்டம், தேவிப்பட்டினம் மேம்பாடு (மாநில அரசு பங்கு ரூ.25.60 இலட்சம்)	50.00
5.	திருநெல்வேலி மாவட்டம், திருக்குறுங்குடி மேம்பாடு	50.00
6.	திருநெல்வேலி மாவட்டம், திருப்புடைமருதூர் மேம்பாடு	49.50
7.	தேனி மாவட்டம், குரங்கணி மேம்பாடு	50.00
8.	திண்டுக்கல் மாவட்டம், தடியன்குடிசை மேம்பாடு	50.00
9.	விழுப்புரம் மாவட்டம், இடையன்சாவடியில் பயிற்சித் திட்டம் (மென்பொருள் திட்டத்திற்கு)	20.00

11.3.4 தமிழ்நாடு சுற்றுலா கிராமப்புறங்கள் வளர்ச்சிக்குக் கிராமங்களைத் தெரிவு செய்து வளர்ச்சிப் பணிகளை படிப்படியாக செய்து வருகிறது.

11.3.5 தொழில் மற்றும் சுற்றுலாப் பொருட்காட்சியில் கிராமியப் பின்னணியில் ஓர் உணவகத்தைத் திறந்து கிராமிய உணவை வழங்கியது.

[2009 ஜூலை 7

11.3.6 சென்னை தொழில் மற்றும் சுற்றுலாப் பொருட்காட்சியில் கிராமிய வாழ்க்கை முறையை சித்தரிக்கும் சுற்றுலா கிராமம் ஏற்படுத்தப்பட்டது. இது பார்வையாளர்களை மிகவும் கவர்ந்தது. இதனை மிகவும் சிறந்த அரங்காக நடுவர்கள் தேர்ந்தெடுத்தனர்.

11.3.7 குடியரசு தின அணிவகுப்பிலும், தமிழ்நாடு சுற்றுலா அலங்கார அணிவகுப்பில் கிராமியச் சுற்றுலாவை உரிய வகையில் சித்தரித்து விருதினைப் பெற்றது.

11.4 சாகசச் சுற்றுலா

11.4.1 20 ஆம் நூற்றாண்டில், பாரம்பரிய வெளியிடம் மற்றும் வனாந்திர பொழுதுபோக்கின் பெரும் வளர்ச்சி காரணமாக, சாகசச் சுற்றுலா மேம்பட்டுள்ளதாகத் தெரிகிறது. ஏனைய பொழுது போக்கு அம்சங்களைப் போலல்லாமல், சாகசச் சுற்றுலா, விந்தையான வாய்ப்பு ஒன்றை அளிக்கிறது. இதில் பங்குபெறுவோர் மிகுந்த அனுபவம் பெறுவதுடன் "சாகச முயற்சிகளையும்" நீடித்த அளவிற்கு மேற்கொள்வர். பாரம்பரிய வடிவிலான பொழுதுபோக்குகளில், வழக்கமாக, திட்டவட்டமான வெளிப்புற அமைப்பில் உள்ள பயிற்சித் திறன் கூறுகள் அமைந்திருக்கும். இந்த "அமைப்புக்கூறானது" (Setting) சிறப்பு ஈடுபாடு கொண்ட பயணத்தில், "செயல்பாடுகளை" தான் சாகசச் சுற்றுலா மேற்கொள்ளும் சுற்றுலாப் பயணிகளை பங்கேற்பாளராகக் கவருகிறது. இந்த சாகசச் சுற்றுலா முதலில் செயல்பாடுகளுடன் தொடர்புடையதாகும் என்று இந்த ஆய்வு வாதிடுகிறது. இந்தப் பயணத்தின் நோக்கமே, பாரம்பரிய சுற்றுலா இடங்களை வெறுமனே சுற்றுலாத் தலமாகப் பார்ப்பது மட்டுமின்றி, அதில் பங்குபெறுவதன் வாயிலாக அனுபவங்கள் பெறப்பட வேண்டும் என்பதே ஆகும்.

11.4.2 சாகசப் பயணத்தைப் பற்றி விளக்க அதில் நடைபெறும் நடவடிக்கைகள், உந்து சக்தி, இடர்காப்பு, செயலாக்கம், அனுபவம், சுற்றுச் சூழல் ஆகிய பல்வேறு திட்டக்கூறுகளைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

11.4.3 சுற்றுலாத் தலங்களில் சாகசச் சுற்றுலாவை தமிழ்நாடு சுற்றுலா வளர்த்து வருகிறது. முட்டுக்காடு மற்றும் முதலியார்குப்பம் படகு குழாம்களில் புனல் விளையாட்டிற்கு சாகசப் படகுகள் இயங்கி வருகின்றன. கடின நடைப்பயணத்திற்குத் தேவையான சாதனங்களை சுற்றுலாப் பயணிகளுக்கு தமிழ்நாடு சுற்றுலா வாடகைக்கு

2009 ஜூலை 7]

வழங்குகிறது. மலை வழி நடைப்பயணத்திற்கு தேவைப்படும் உபகரணங்களை வழங்குவதோடல்லாது, மலைப்பகுதிகளில் நடை பயணத்தை இந்திய இளைஞர் விடுதிகள் சங்கத்துடன் ஒருங்கிணைந்து தமிழ்நாடு சுற்றுலா செயலாக்கி வருகிறது. முதலியார்குப்பத்தில் உள்ள நீர் ஸ்கூட்டர்கள், அதிவேக படகுகள், பனிக்கடற் படகுகள் மற்றும் வாழைப்பழ வடிவிலான படகுகள் இளைஞர்கள் மத்தியில் சிலிர்ப்பான அனுபவத்தைத் தருகின்றன. தீவுத்திடலில், தனியார் பங்குடன், பல்வகை சாகச விளையாட்டுக்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. உயரமான இடத்திலிருந்து குதித்துப் பறக்கும் 'பாரா கிளைடிங்' எனும் விண்ணில் காற்றின் உதவியுடன் நிகழ்த்தும் மலை சறுக்கு விளையாட்டு ஏலகிரியில் சுற்றுலாப் பயணிகள் பலரை கவர்ந்தது. முதலியார்குப்பத்தில் 'பாரா செயிலிங்' எனும் கடலில் மிதந்து செல்லும் விளையாட்டு விரைவில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

11.5 மருத்துவச் சுற்றுலா

11.5.1 அண்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வரும் மக்களுக்கு தமிழ்நாடு சிறந்த மருத்துவ சேவையை வழங்குகிறது. அதி நவீன மருத்துவ சேவையைக் கொண்ட உலகத்தரம் வாய்ந்த மருத்துவமனைகள், மருத்துவ வல்லுநர்கள், அரசு மருத்துவமனைகள் உலகின் பிற பகுதிகளிலிருந்தும் நாட்டின் பல பாகங்களிலிருந்து வரும் நோயாளிகளுக்கு சேவை புரிந்து அவர்கள் குணமடைந்து உடல் நலத்துடன் திரும்ப உதவியுள்ளது. அவ்வாறு வரும் நோயாளிகள் விரைவில் குணமடைந்து புத்துணர்வு பெற்று தமது சாதாரண நிலைக்கு வர, அவர்கள் சுற்றுலாத் தலங்களைக் காண உரிய வசதிகளை தமிழ்நாடு சுற்றுலா செய்து வருகிறது.

11.5.2 மேலும், தமிழ்நாடு சுற்றுலாத் துறை, மருத்துவமனைகளுடன் ஒருங்கிணைந்து, மருத்துவ சுற்றுலாவின் மகத்துவத்தை எடுத்துரைக்க தொடர் நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. இம்முயற்சியில் வெற்றி பெற மருத்துவச் சுற்றுலாவின் மகத்துவத்தை உணர்ந்து, மருத்துவ சுற்றுலா தகவல் மையம் தமிழ்நாடு சுற்றுலா வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. சென்னை மற்றும் மதுரையில் உள்ள பல்வேறு மருத்துவமனைகளில் சுற்றுலா தகவல் மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

11.5.3 வெளிநாடுகளிலிருந்தும் உள்நாட்டிலிருந்தும் வந்த மருத்துவ சுற்றுலாப் பயணிகள் பெற்று வரும் மருத்துவ சேவையைக் கண்காணிப்பதற்கு, பல முன்னணி மருத்துவ நிறுவனங்கள் மற்றும்

[2009 ஜூலை 7

மருத்துவக் கல்வி இயக்ககத்திலிருந்து நிபுணர்களைக் கொண்டு ஒரு முதன்மைக் குழுமம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்குழுமம் சுற்றுலாப் பயணிகளுக்கு தேவையான முன்னேற்ற மருத்துவ சேவை குறித்து தமிழ்நாடு சுற்றுலாவிற்கு அறிவுரை வழங்குகிறது. தமிழ்நாட்டிற்கு மருத்துவ சேவை பெற வரும் நோயாளிகளுக்கு உதவிட இங்குள்ள தரமான மருத்துவமனைகள் குறித்த விவரத்தை, அரசு சாரா நிறுவனமான மெடிடூர் இந்தியா மற்றும் பிற மருத்துவ நிறுவனங்களின் அட்டவணை தமிழ்நாடு சுற்றுலாவின் வலைதளம்மூலம் வெளியுலகிற்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

11.5.4 மருத்துவச் சுற்றுலாவின் மகத்துவம் குறித்து விழிப்புணர்வு பெற, பல்வேறு மருத்துவமனைகளில் பணிபுரியும் முதன்மை நிர்வாக அதிகாரிகளுக்கும், மக்கள் தொடர்பு மேலாளர்களுக்கும் திறன் வளர்ப்பு பயிற்சி வழங்கப்பட்டது. மருத்துவ சேவையை சுற்றுலா தோழமையுடன் கூடியதாக்க பல்வேறு மருத்துவமனைகளின் வரவேற்பு அலுவலகத்தில் "சுற்றுலா தகவல் மையம்" வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. வெளிநாட்டு மருத்துவச் சுற்றுலாப் பயணிகளின் தேவைகளை மனதிற்கொண்டு, தமிழ்நாடு சுற்றுலா மருத்துவ ஆய்வை விரைவாகவும், குறைந்த செலவில் ஒளிவுமறைவின்றி பெற உரிய வழிகாட்டி நெறிமுறை குறிப்புகளை பல்வேறு மருத்துவமனைகளுக்கு வழங்கியுள்ளது.

11.5.5 மருத்துவப் பயணிகள், தமிழ்நாட்டிலுள்ள பொருளாதார, சமூக, கலாச்சார மற்றும் மனிதத்துவ பொக்கிஷங்களைக் கொண்டு செயல்படும் மருத்துவமனைகளிலுள்ள நவீன சேவைகளை நுகர, இம்மருத்துவமனைகளை ஊக்குவிப்பதன்மூலம் மருத்துவச் சுற்றுலாவில் தமிழகத்தை நாட்டின் முதன்மையானதாக உருவாக்க தமிழ்நாடு சுற்றுலா செயல்பட்டு வருகிறது.

11.5.6 இதற்கான முதன்மைக் குழு, தொடர்ந்து கூட்டங்களை நடத்தி வந்தது. மையக் குழு எடுத்த முக்கிய முடிவுகள் வருமாறு:

- மருத்துவமனைகளைக் கண்டறிதல்
- கண்டறியப்பட்ட மருத்துவமனைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல்
- மருத்துவச் சுற்றுலா மடிப்பேடு வெளியிடுதல்
- கண்டறியப்பட்ட மருத்துவமனைகளில், சுற்றுலா தகவல் மையம் தொடங்குதல்

2009 ஜூலை 7]

- திறன் வளர்ப்பு பயிற்சியை சுற்றுலா/மருத்துவ சுற்றுலா தகவல் கையாள தரம் வாய்ந்த மருத்துவமனை பணியாளர்களுக்கு வழங்குதல்

- கருத்தரங்குகள்/பயிலரங்குகள் நடத்துதல்

11.5.7 தற்போது, மருத்துவ சுற்றுலாப் பயணிகள் மற்றும் அவர்களின் கவனிப்பாளர்களுக்கும் மருத்துவ விசாக்கள், ஓராண்டு வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இதனால் மருத்துவ பயணிகள் வருகை கீழே தெரிவிக்கப்பட்டவாறாக அதிகரித்துள்ளது:

ஆண்டு	பதிவு எண்ணிக்கை
2006	566
2007	3307
2008	7307

11.6 உணவு மற்றும் உறையுள் (வீட்டில் தங்கல்) திட்டம்

11.6.1 சுற்றுலாத் தலங்களில் வசிப்பவர்கள், தொகை பெற்றுக் கொண்டு அவர்களுடைய வீடுகளில் உள்ள கூடுதல் அறைகளில் தங்க அனுமதிப்பதன் வாயிலாக கூடுதல் வருவாய் ஈட்டுவதற்கு வகை செய்வதற்காக, உணவு மற்றும் உறையுள் (வீட்டில் தங்கல்) திட்டம் தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

11.6.2 இத்திட்டம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும், பிரபலப்படுத்தவும் தமிழ்நாட்டில் ஆறு இடங்களில் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. தமிழ்நாடு சுற்றுலா, தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களிலிருந்து உணவு மற்றும் உறையுள் சேவை புரியும் எழுபத்தேழு (77) நபர்களை பட்டியலிட்டதுடன், இது குறித்த தகவலை தமிழ்நாடு சுற்றுலாவின் வலைதளத்தில் வெளியிட்டுள்ளது. இச்சேவை புரிவோரின் விவரக் கையேடு ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

12. விளம்பரம் மற்றும் சந்தைப்படுத்தல்

12.1 விளம்பரங்கள்

12.1.1 வெளிநாட்டு வானூர்தி பத்திரிகைகளிலும், பிற பெயர்பெற்ற சுற்றுலா பத்திரிகைகளிலும் விளம்பரங்கள் வெளியிடுவதன்மூலம் தமிழ்நாடு சுற்றுலா உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் விளம்பரங்களைத் தொடர்ந்து செயலாக்கி வருகிறது.

[2009 ஜுலை 7

12.1.2 விளம்பரங்கள், எப்.வி.டபிள்யூ. காண்டினாஸ்ட் டிராவலர், ஹை லைஃப், சில்வர் கிரிஸ், கோயிங் பிலேசஸ், செல்லிங் லாங் ஹால், உர்லாப் பெர்ஃபெக்ட், டபிள்யூ.டி.எம். கேடலாக், ஏசியன் வாய்ஸ், தேசி நியூஸ் (கனடா), டெலிகிராப் (யூ.கே), மலேசிய நண்பன், தமிழ் முரசு (சிங்கப்பூர்), ஜலன் ஜலன் (இந்தோனேசியா), தி ஸ்டார், டூரிஸ்டிக் ஆக்சுவல், ஜியோ சாய்சன், கல்ஃப் நியூஸ், பட்ஜெட் டிராவலர், கலீஜ் டைம்ஸ் முதலிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்டன.

12.1.3 பல்வேறு உள்நாட்டு விமான பத்திரிகைகளிலும் நமஸ்கார், ஜெட் விங்ஸ், சுவாகத், விண்டோஸ் மற்றும் எய்சில்ஸ், அவுட்லுக் டிராவலர், நேஷனல் ஜியாகிரபி (இந்தியா ஸ்பிலிட்), டிராவ் டாக், வோர்ல்டு ஆப் டூரிஸம் மற்றும் டிராவல், ஆஸ்பிடாலிடி இந்தியா, ஏசியன் டிராவலர், வாயேஜர்ஸ் வோர்ல்டு, அவுட்பவுண்ட் இண்டர்நேஷனல், டிராவல் ஸ்பான், டுடேஸ் டிராவலர், இந்தியா டுடே டிராவல் பிளஸ், டிராவல் + லெசர் முதலிய பயண பத்திரிகைகளிலும் விளம்பரங்கள் வெளியிடப்பட்டன.

12.1.4 கோடை முகாம், மாமல்லபுரம் நாட்டிய விழா, இரயில் மற்றும் சாலைப் பயணத் திட்டம் போன்ற நிகழ்வு பற்றிய திட்டவட்டமான பிரச்சாரங்கள் குறித்த விளம்பரங்கள் பிரபல ஆங்கில நாளிதழ்களிலும், பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்டன. உள்ளூர் சுற்றுலா நிகழ்வுகள் மற்றும் விழாக்கள் குறித்து உள்ளூர் நாளிதழ்களிலும், பத்திரிகைகளிலும் காலமுறையாக விளம்பரங்கள் வெளியிடப்படுகின்றன. இது குறித்த முக்கிய நிகழ்வுகள் மீதான செய்திகள் தொடர்ந்து பிரசுரமாகின்றன. புதிய சுற்றுலாத் திட்ட முயற்சிகள் குறித்து விவரங்களல்லாது, ஒலி மற்றும் காட்சி விளம்பரங்கள் வானொலியிலும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் தொடர்ந்து விளம்பரப்படுத்தப்படுகின்றன.

12.2 சுற்றுலா வெளியீடுகள்

12.2.1 தகவல் மடிப்பேடுகள் மற்றும் புத்தகங்கள், உயர் தொழில் நுட்ப ஊடகப் பொருட்களான குறுந்தகடுகள், 25 நிமிடங்கள் மற்றும் ஆறு நிமிடங்கள் ஓடக்கூடிய அதி நவீன குறுந்தட்டுகள், டிஜிட்டல் வீடியோ தட்டுகள் ஆகியவை சுற்றுலாப் பயணிகளுக்கு தகவல் தர மிகவும் இன்றியமையாததாகும். 2008-2009 ஆம் ஆண்டில் பின்வரும் மடிப்பேடுகள் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள உலக பாரம்பரியச் சின்னங்கள் மீதான காபி மேசை புத்தகங்கள் வெளியிடப்பட்டன. அவை வருமாறு:

2009 ஜூலை 7]

- நிகழ்வுகள் புத்தகம் (பொருட்காட்சிகள் மற்றும் விழாக்கள்)
- தமிழ்நாட்டின் வரைபடம் (ஆங்கிலத்தில்)
- கன்னியாகுமரி, மதுரை, மாமல்லபுரம், திருச்சிராப்பள்ளி, சிதம்பரம், ஏற்காடு, காஞ்சிபுரம், குற்றாலம் (ஆங்கிலம் மற்றும் தமிழில்), தஞ்சாவூர், ஒகேனக்கல், மருத்துவ சுற்றுலா மற்றும் கிராமிய சுற்றுலா மடிப்பேடுகள்
- தமிழக சுற்றுலாத் தலங்கள் குறித்த கையேடு (தமிழில்)
- *2006* மற்றும் *2007* ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட அரசாணைகளின் தொகுப்பு (பல்வேறு சுற்றுலா திட்டங்களுக்கு அனுமதிக்கின்றவாறு வெளியிடப்பட்ட அரசாணைகளுக்கு இணங்கி நடத்தல்)
- "ஏலகிரி மலைகள் குறித்த ஒரு ஆய்வுக் குறிப்பு" கையேடு

12.2.2 சுற்றுலா தொழில் சார்ந்தோரின் பங்களிப்புடன் 2008 ஆம் ஆண்டின் சுற்றுலா நாட்காட்டி வெளியிடப்பட்டது.

12.2.3 வன விலங்கு மற்றும் இயற்கைக் காட்சிகள் கொண்ட 'தமிழ்நாட்டின் இயற்கை வளங்கள்' எனும் 2009 ஆம் ஆண்டின் சுற்றுலா நாட்காட்டி வெளியிடப்பட்டது. இது சுற்றுலா பொறுப்பாளர்களிடமிருந்தும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளிடமிருந்தும் ஏகோபித்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

12.2.4 விளம்பரத்தில் புதிய யுக்தியை கையாண்டு, பத்திரிகைகளின் பதிப்பாளர்களிடமிருந்து முக்கிய சுற்றுலாத் தலங்கள் அடங்கிய வெளியீடுகள் மதிப்புக் கூட்டாக பெறப்பட்டன.

12.3 தமிழ்நாடு சுற்றுலா செய்தி மடல்

12.3.1 சுற்றுலா தொழில் சார்ந்தோருக்கு உரிய தகவல்களை வழங்க, மாதாந்திர செய்தி மடல் வெளியிடப்பட்டு வருகிறது. இவ்வெளியீடு இந்தியாவிலுள்ள மைய அரசு சுற்றுலா அலுவலகங்கள், நாடெங்குமுள்ள தமிழ்நாடு சுற்றுலா அலுவலகங்கள், பயணம் நடத்துபவர்கள், பயண முகவர்கள் மற்றும் விடுதி உரிமையாளர்கள் அனைவருக்கும் விநியோகிக்கப்படுகின்றன. சுற்றுலாத் துறையில் நடைபெறும் நிகழ்ச்சிகள் மற்றும் முக்கிய சுற்றுலா சார்ந்த நிகழ்வுகள் அனைத்தும் இம்மடலில் முன்னுரிமைப்படுத்தப்படுகின்றன.

12.3.2 தகவல் சேவையை மேம்படுத்த, சிறப்புப் பதிப்புகளும், உயர் தொழில்நுட்பத்தில் உருவாகும் மின்னணு பொருட்களும் *2009-2010* ஆம் ஆண்டில் தயாரிக்கப்படும்.

மடிப்பேடுகள்:

- அரசு அருங்காட்சியகம், சென்னை
- ஏலகிரி
- தமிழக கைவினைப் பொருட்கள்
- தமிழ்நாட்டின் கடற்கரைகள்
- தமிழ்நாட்டின் அருவிகள்
- மாவட்ட வாரியான சுற்றுலா மடிப்பேடுகள் (தமிழில்)
- மலை வாழிடங்கள் குறித்த சுவரொட்டிகள்
- கிராம வளம் குறித்த சுவரொட்டிகள்
- அருவிகள் குறித்த சுவரொட்டிகள்
- கடற்கரைகள் குறித்த சுவரொட்டிகள்
- பாரம்பரிய இடங்கள் குறித்த சுவரொட்டிகள்

12.4 துல்லிய மின்னணு கருவிகள்

மின்னணுப் பொருட்கள் பயன்பாட்டில், காலத்திற்கேற்றவாறு அண்மைக்கால மேம்பாடுகளை அறிந்து கொள்வதற்காக, சுற்றுலா அலுவலர்களுக்கு மடிக்கணினிகளும், துல்லிய நிழற்படக் கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன. எல்.சி.டி. புரொஜெக்டர்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. அனைத்து சுற்றுலா அலுவலகங்களுக்கும், சுற்றுலா வளங்களைக் காட்சிக்கு வைப்பதற்காக, அனைத்து துணைப்பாகங்களுடன்கூடிய "காட்சி ஏற்பாடு முறை" அமைப்பதற்கு கருதப்படுகிறது.

12.5 விளம்பர முகாம்

தமிழ்நாட்டின் சுற்றுலா சிறப்பியல்புகளை, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் இரயில் மற்றும் சாலை பயணத் திட்டத்தை மையப்படுத்தி, *2008-2009* ஆம் ஆண்டில் பெங்களூரு, கொல்கத்தா,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2009 ஜூலை 7]

லக்னோ, புது தில்லி, ஐதராபாத் மற்றும் ஜெய்ப்பூரில் நடத்தப்பட்ட சிறப்பு விளம்பர முகாம்கள் வாயிலாக அதிகமான சுற்றுலாப் பயணிகள் தமிழகத்திற்கு வந்தனர். இத்தகைய முகாம்கள் 2009-2010 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து நடத்தப்படும். விளம்பர முகாம்கள் ஏனைய மாநிலங்களில் உள்ள கீழ்க்கண்ட நகரங்களில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது:

- ஆக்ரா — உத்திரப்பிரதேசம்
- ஜெய்ப்பூர் — இராஜஸ்தான்
- கொல்கத்தா — மேற்கு வங்காளம்
- மும்பை — மகாராஷ்டிரா
- ஐதராபாத் — ஆந்திரப் பிரதேசம்
- போர்ட் பிளேர் — அந்தமான் மற்றும் நிகோபர் தீவுகள்

12.6 நட்புச் சுற்றுலா முகாம்

12.6.1 சுற்றுலா தொழில் புரிவோரிடையே தரமான வசதி மற்றும் சேவையைப் படிப்பிக்க "விருந்தினர் போற்றுதும்! விருந்தினர் போற்றுதும்!!" எனும் புதிய திட்டத்தை தமிழ்நாடு சுற்றுலா அறிமுகப்படுத்தியுள்ளது. சுற்றுலா தொழில் புரிவோர், விடுதி உரிமையாளர்கள், பயண முகவர்கள், சீருந்து மற்றும் ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்கள், வணிகர்கள், காவலர்கள், கோயில் பணியாளர்கள் மற்றும் விமான நிலையப் பணியாளர்கள் ஆகியோர் முனைப்புடன் செயல்பட பயிற்சித் திட்டத்தை தமிழ்நாடு சுற்றுலா நடத்தியுள்ளது. இந்தப் பயிற்சித் திட்டங்கள், சென்னை, தருமபுரி, சேலம், ஈரோடு, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், விழுப்புரம், கடலூர், கன்னியாகுமரி, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் நடத்தப்பட்டன. இதர சுற்றுலாத் தலங்களில் "விருந்தினர் போற்றுதும்! விருந்தினர் போற்றுதும்!!" முகாம்களை இவ்வாண்டு நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்தகைய பயிற்சித் திட்டங்கள் மற்றும் தீவிர பிரச்சாரம் காரணமாக, பொது மக்களின் மனங்களில் சுற்றுலாவின் முக்கியத்துவத்தையும், சுற்றுலாப் பயணிகளை நட்புடன் நடத்துவதையும் பற்றிய விழிப்புணர்வு கணிசமான அளவிற்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

[2009 ஜூலை 7

12.6.2 இதற்கு பெருமளவு வரவேற்பு கிடைத்துள்ளதால், இத்திட்டம் எல்லா மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும். மாநிலத்தில் சுற்றுலா நட்புப் பண்பாட்டை வளர்க்க தீவிர விளம்பர முகாம் தொடங்கப்பட்டது. இது பொதுமக்களின் கவனத்தை ஈர்த்து சீரான பாதையில் அடியெடுத்து வைக்க உதவியது. இப்பிரச்சாரம் நுட்பமான சுற்றுச்சூழலை பாதுகாக்கவும், அதிசயமான வரலாற்று சின்னங்களை காக்கவும், அழகிய இடங்கள் அழிக்கப்படுவதைத் தடுக்கவும் உதவி செய்யும்.

12.6.3 சுற்றுலா நட்பு வாகனம்

'சுற்றுலா நட்பு வாகனம்' எனும் புதிய திட்டம், 2007-2008 ஆம் ஆண்டு இம்மாநிலத்தில் தொடங்கப்பட்டது. சுற்றுலா நட்பு வாகனம் திட்டத்தில் சேர விரும்பும் ஆட்டோ ஓட்டுநர்களின் தகுதி, நன்னடத்தை குறித்த பின்னணி விவரங்கள் குறித்து காவல் மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலகங்களில் சரிபார்க்கப்பட்டபின், இத்திட்டத்தில் பட்டியலிடப்பட்டனர். தெரிவு செய்யப்பட்ட ஓட்டுநர்களுக்கு, சுற்றுலாத் தலங்கள் குறித்தும், தகவல் தொடர்பு, மரியாதையான நடவடிக்கைகள் மற்றும் அது தொடர்பான பொருண்மைகளின்மீது உரிய பயிற்சி வழங்கப்பட்டது. சுற்றுலாப் பயணிகளுக்கு விநியோகிக்க சுற்றுலா வரைபடங்கள் மற்றும் கையேடுகள் அவர்களிடம் வழங்கப்பட்டுள்ளன.

சென்னையில் 39 ஆட்டோ ரிக்ஷாக்களுடனும், கன்னியாகுமரியில் 18 ஆட்டோ ரிக்ஷாக்களுடனும் முதற்கட்டமாக 'சுற்றுலா நட்பு வாகனம்' எனும் திட்டம் தொடங்கப்பட்டது. இரண்டாவது கட்டமாக, 24 ஆட்டோ ரிக்ஷாக்கள் சென்னையில் இணைந்தன. மூன்றாவது கட்டமாக, சென்னையில் 25, திருநெல்வேலியில் (குற்றாலம் வட்டம்) 28 மற்றும் மதுரையில் ஏழு ஆட்டோ ரிக்ஷாக்களும் இணைந்தன. இத்திட்டத்தில் இணைக்கப்பட்ட ஆட்டோ ரிக்ஷாக்கள் போக்குவரத்துத் துறையின் ஒப்புதலுடன் சுற்றுலாத் தலங்களின் புகைப்படங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

12.7 தூய்மை முகாம்கள்

தமிழ்நாடு 1,058 கி.மீ. நீளமான கடற்கரையை உடையது. கடற்கரைகளை சுத்தமாகவும் சுகாதாரமாவும் வைக்க வேண்டும். நமது கடற்கரைகளை குப்பை கூளங்கள் இல்லாததாகப் பார்த்துக் கொள்ள வேண்டியது உள்ளூர்வாசிகளின் கடமையாகும். உள்ளாட்சி

2009 ஜூலை 7]

அமைப்புகளின் ஒத்துழைப்புடன் கடற்கரைகளின் தூய்மையைப் பேண தமிழ்நாடு சுற்றுலா முயற்சிகளை எடுத்துள்ளது. 2008-2009 ஆம் ஆண்டில் சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொது மக்களின் நலன் கருதி மாமல்லபுரம், திருவரங்கம் மற்றும் சென்னையில் தூய்மை முகாம்கள் நடத்தப்பட்டன. உலகச் சுற்றுலா நாளன்று எல்லா மாவட்டங்களிலும் இதுபோன்ற முகாம்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைமையில் நடைபெற்றன.

12.8 நிழற்படப் போட்டி

சுற்றுலா சிறப்பியல்புகளை எடுத்தியம்ப, சிறந்த நிழற்பட கலைஞர்கள் மூலம் சிறப்பான நிழற்படங்கள் பெற, "பெஸ்ட் போட்டோகிராஃபி" பத்திரிகையின் ஒத்துழைப்புடன் நிழற்படப் போட்டி நடத்தப்பட்டது.

13. கூட்டம், ஊக்கம், கருத்தரங்கு மற்றும் பொருட்காட்சி சந்தை

தமிழ்நாடு சுற்றுலா 2008-2009 ஆம் ஆண்டில், சுற்றுச்சூழல் சுற்றுலா மேலாண்மை, மருத்துவச் சுற்றுலா மற்றும் பொறுப்புணர்வுச் சுற்றுலா ஆகிய மூன்று கருத்தரங்குகள் மற்றும் கலந்தாய்வுகளை சென்னையில் நடத்தியது. தமிழ்நாட்டில், கூட்டம், ஊக்கம், கருத்தரங்கு மற்றும் பொருட்காட்சி உள்ளிட்ட 'மைஸ்' எனும் சந்தை, தமிழ்நாட்டின் சுற்றுலா வளத்தை விளம்பரப்படுத்த நடத்தப்படும்.

13.1 கருத்தரங்குகள் மற்றும் பணிப்பட்டறைகள் நடத்துதல்

13.1.1 சுற்றுச்சூழல் சுற்றுலா மேலாண்மை வட்டாரப் பட்டறை

சென்னையில் 30-4-2008 அன்று தென் மாநில சுற்றுலா உயர் அதிகாரிகளும், சுற்றுலா தொழில் சார்ந்தோரும் கலந்து கொண்ட சுற்றுச்சூழல் சுற்றுலா மேலாண்மை வட்டாரப் பட்டறை நடத்தப்பட்டது. அதில், தென்னிந்தியாவிலிருந்து சுற்றுலாத் துறையின் உயர் அதிகாரிகளும், சுற்றுலா ஆர்வலர்களும் கலந்து கொண்டனர். இதில் மென்மையான சுற்றுச்சூழலைப் பாதுகாத்து போற்றுதல் மற்றும் சுற்றுச்சூழல் பங்கமில்லா சுற்றுலா வளர்ச்சி குறித்து வலியுறுத்தப்பட்டது.

13.1.2 மருத்துவச் சுற்றுலா குறித்த பயிலரங்கு

சென்னையில் 18-7-2008 அன்று, மருத்துவச் சுற்றுலா வலிமை பெறுவதை கருத்தில் கொண்டு, மருத்துவச் சுற்றுலா பயிலரங்கம்

நடத்தப்பட்டது. மருத்துவ வல்லுநர்கள் மற்றும் சுற்றுலா தொழில் புரிவோர் கலந்து கொண்ட பயிலரங்கு, அதில் கலந்து கொண்ட அனைவரின் பங்களிப்பைப் பெற்றது.

13.1.3 சமூகப் பொறுப்புணர்வு சுற்றுலா குறித்த பயிலரங்கு

சுற்றுலாப் பயணிகளுக்கும், இளைய சமுதாயத்தினருக்கும் நமது கிராமங்களைப் பற்றி எடுத்துரைப்பது நம்முடைய பொறுப்பு என்பதால், தமிழ்நாடு சுற்றுலா, கிராமப்புறங்களின் வளர்ச்சிக்கு தொடர்ச்சியாக நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதனை வலியுறுத்த ஒரு பயிலரங்கு, சென்னையில் 2008 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் நடத்தப்பட்டது. இப்பயிலரங்கில் கிராமப்புறங்களை காப்பதில் உள்ளூர் மக்களுக்குள்ள பொறுப்பும், கடமையும், அவற்றைக் கண்டு களித்து பாதுகாப்பதில் சுற்றுலாப் பயணிகளின் பொறுப்பும் எடுத்தியம்பப்பட்டது.

13.2 வெளிநாட்டு சுற்றுலா சந்தைகளில் பங்கேற்றல்

13.2.1 பசிபிக் ஆசியா பயணக் கருத்தரங்கு (PATA)

2007 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில், இந்தோனேசியா நாட்டில் பாலி நகரில் நடைபெற்ற பாட்டா சந்தையில் தமிழ்நாடு சுற்றுலா பங்கேற்று, சுற்றுலாச் செல்வங்களையும், தமிழ்நாட்டில் உலகத்தரம் வாய்ந்த குறைந்த செலவிலான மருத்துவ வசதிகளையும் எடுத்துக் கூறியது. பிற சுற்றுலா பயணத் திட்டங்களுடன், மருத்துவ சுற்றுலா பயணத் திட்டத்திற்கும் வெளிநாடுகளிலிருந்து பெரும் வரவேற்பு உள்ளது. 2008 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில், ஐதராபாத்தில் நடைபெற்ற பாட்டா சந்தையில் தமிழ்நாடு சுற்றுலா பங்கேற்று, நமது மாநிலத்தில் உள்ள சுற்றுலாச் செல்வங்களை உயர் தொழில்நுட்ப ரீதியில் எடுத்துக் கூறியது. தமிழ்நாடு சுற்றுலா அரங்கில் ஏற்பாடு செய்யப்பட்ட கிராமிய நடன நிகழ்ச்சி, இந்நிகழ்வின் கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது.

13.2.2 உலக சுற்றுலாப் பயணச் சந்தை

ஒவ்வொரு நவம்பர் மாதத்திலும் லண்டனில், உலக சுற்றுலாப் பயணச் சந்தை நடைபெறுகிறது. 2007 ஆம் ஆண்டு லண்டன் நகரில் நடைபெற்ற உலக சுற்றுலா சந்தையில் தமிழ்நாடு சுற்றுலா பங்கேற்றது. இதில் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகள் பங்கு கொண்டது. தமிழ்நாட்டின் சுற்றுலாச் செல்வங்களும், சுற்றுலாச்

2009 ஜூலை 7]

வளர்ச்சிக்கு தமிழ்நாடு சுற்றுலாவின் முயற்சிகளும் முக்கியப்படுத்தப்பட்டன. 2008 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் லண்டன் நகரில் நடைபெற்ற உலக சுற்றுலா சந்தையில் தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலா தொழில் புரிவோர் கலந்து கொள்ள தமிழ்நாடு சுற்றுலா ஊக்கமளித்து, அவர்களுக்குத் தேவையான அச்சிட்ட மற்றும் மின்னணு சுற்றுலா பொருட்கள் வழங்கி உதவியது. இதனால் இங்கிலாந்து மற்றும் சுற்றியுள்ள நாடுகளிலிருந்து கணிசமான அளவு சுற்றுலாப் பயணிகள் தமிழ்நாட்டிற்கு வருகை தந்தனர்.

13.2.3 சர்வதேச சுற்றுலா சந்தை (ITB)

2008 ஆம் ஆண்டு மார்ச் மாதம் பெர்லின் நாட்டில் ஜெர்மனி நகரில் நடைபெற்ற சர்வதேச சுற்றுலா சந்தையில் தமிழ்நாடு சுற்றுலா பங்கேற்றது. தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு வகையான சுற்றுலா முக்கியத்துவங்களை இச்சந்தையில் கலந்து கொண்ட முக்கிய பிரமுகர்களிடையே காண்பிக்க இச்சந்தை உதவியது. வெளிநாட்டவரிடையே நடந்த கலந்தாய்வு மிகவும் உபயோகமாக இருந்தது. மேலும் அவர்கள் பயணக்குழுவை தமிழ்நாட்டிற்கு அனுப்புவதில் மிகவும் ஆர்வம் காட்டினர். தமிழ்நாடு சுற்றுலா அரங்கில் ஏற்பாடு செய்யப்பட்ட கலை நிகழ்ச்சி அனைவரையும் கவர்ந்தது.

13.2.4 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை அதிக அளவில் வரவழைக்க, தமிழ்நாடு சுற்றுலா பின்வரும் வெளிநாட்டு சுற்றுலா சந்தைகளில் பங்கேற்க முடிவெடுத்துள்ளது:

1. *பசிபிக் ஆசிய பயண முகவர் மாநாடு*
2. *உலக சுற்றுலாப் பயணச் சந்தை, லண்டன்*
3. *ஐ.டி.பி., பெர்லின்*
4. *இந்திய சுற்றுலா மற்றும் அங்காடித் திருவிழா, மலேசியா*
5. *இந்திய சுற்றுலா மற்றும் அங்காடித் திருவிழா, துபாய் (ஐக்கிய அரபு நாடுகள்)*

13.3 தேசிய சுற்றுலா சந்தைகளில் பங்கேற்றல்

13.3.1 இந்திய பயண முகவர்கள் சங்க மாநாடு

சுற்றுலாப் பயணிகள் வருகையை அதிகரிக்க, தமிழ்நாடு சுற்றுலா 5-10-2007 முதல் 8-10-2007 முடிய சென்னையில் நடைபெற்ற இந்திய பயண முகவர்கள் சங்க மாநாட்டை ஒருங்கிணைந்து நடத்தியது.

[2009 ஜூலை 7

13.3.2 அனைத்து மாநகரங்களிலும் (Metros), முக்கிய சுற்றுலாத் தலங்களான ஆக்ரா, ஜெய்ப்பூர் மற்றும் பனாஜி ஆகிய இடங்களில் சுற்றுலா அலுவலகங்களை இயக்குவதை தமிழ்நாடு சுற்றுலா பெருமையாகக் கருதுகிறது. தமிழ்நாட்டை சுற்றுலாப் பயணிகளைக் கவரும் மாநிலமாக ஆக்கவும், பல வகையான சுற்றுலாப் பொருட்களுக்கு, பல்வேறு இடங்களில் உள்ள போட்டிகளைச் சமாளிக்கவும், சுற்றுலாப் பயணிகள் வருகையில் தமிழ்நாட்டின் பங்கை உயர்த்தவும், சுற்றுலா அலுவலகங்களைத் தவிர சுற்றுலா தகவல் மையங்களையும் பல்வேறு மாநிலங்களில் தமிழ்நாடு சுற்றுலா சேவைகளை சந்தைப்படுத்த அமைத்துள்ளது.

13.3.3 இந்த நோக்கம் ஒருங்கிணைந்த சந்தை வினைமுறைத் திறம் மற்றும் பயணத் தொழில் புரிவோரின் கூட்டு முயற்சியுடன் நடத்தப்படும் முகாம்கள் மூலம் நிறைவேற்றப்படுகிறது. பெரும்பாலான சுற்றுலாப் பயணச் சந்தைகளிலும், பிற மாநில சுற்றுலாத் துறை மற்றும் சுற்றுலா ஆர்வலர்களால் நடத்தப்படும் சுற்றுலா கண்காட்சிகளிலும் தமிழ்நாடு சுற்றுலா பங்கேற்றுள்ளது.

13.3.4 2009 ஆம் ஆண்டு ஜனவரி திங்களில், சென்னையில் நடைபெற்ற வெளிநாடு வாழ் இந்தியர் தின விழாவில் தமிழ்நாடு சுற்றுலா பங்கேற்று நடத்திய கலாச்சார விழாவில் தமிழ்நாட்டிலுள்ள கலைகள் மற்றும் கவின்கலைகள் இடம் பெற்றன.

13.3.5 தெற்காசிய பயண மற்றும் சுற்றுலா கண்காட்சி, புது தில்லி - உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வாங்குவோர்-விற்போர் சந்திப்பை பெற தமிழ்நாடு சுற்றுலா, தெற்காசிய பயண மற்றும் சுற்றுலா கண்காட்சியில் (சாத்தே) தொடர்ந்து கலந்து கொள்கிறது.

13.3.6 மாபெரும் இந்திய பயண அங்காடி, ஜெய்ப்பூர்-ஜெய்ப்பூரில் இந்திய வணிக நிறுவனங்களின் கூட்டமைப்பு ஏற்பாடு செய்த மாபெரும் இந்திய பயண அங்காடியில் தமிழ்நாடு சுற்றுலா கலந்து கொண்டது. இதில் வாங்குபவர்-விற்பவர் நேருக்கு நேர் சந்தித்துக் கொண்டதால், இதற்கு பெரும் வரவேற்பு கிடைத்தது.

14. பொருட்காட்சிகளும், விழாக்களும்

14.1 தமிழ்நாட்டின் வளமான பாரம்பரிய கலாச்சாரம் உள்நாட்டிலும் வெளி நாட்டிலும் புகழ் பெற்றுள்ளது. மக்களின் வாழ்க்கையில் இசை, நடனம் மற்றும் நாடகம் ஓர் இன்றியமையாத அங்கமாக விளங்குகின்றன. ஆண்டு முழுவதும் பல்வேறு கலாச்சார

2009 ஜூலை 7]

பொருட்காட்சிகள் மற்றும் விழாக்களை நடத்தி அதில் பங்கு கொள்வதில் இங்குள்ள மக்கள் மிகவும் ஆர்வம் காட்டுகின்றனர். இம்மாநிலத்தின் கலாச்சார நிகழ்வுகள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை பெரிதும் கவர்கின்றன. திருவிழாக்கள் கோலாகலமாக ஆரவாரத்துடன் கொண்டாடப்படுகின்றன.

14.2 2008-2009 ஆம் ஆண்டில், தமிழ்நாடு சுற்றுலா, சுற்றுலா விழாக்களையும், பிற விழாக்களில் சுற்றுலா நிகழ்ச்சிகளையும் பின்வருமாறு ஏற்பாடு செய்தது:

14.2.1 மைய அரசு நிதியுதவியில் நடத்தப்பட்ட விழாக்கள்

- இந்திய நாட்டிய விழா, மாமல்லபுரம் –டிசம்பர்/ஜனவரி
- தேசிய சுற்றுலா மற்றும் கலாச்சார விழா–ஜனவரி கன்னியாகுமரி
- தேசிய புனித விழா, இராமேசுவரம் –ஜனவரி/பிப்ரவரி

14.2.2 மாநில அரசு நிதியில் நடத்தப்படுபவை

- நாடு முழுவதும் பொங்கல் சுற்றுலா விழா – ஜனவரி
- சித்திரை விசு விழா, பாபநாசம் – ஏப்ரல்
- தேயிலை மற்றும் சுற்றுலா விழா, உதகமண்டலம் – ஏப்ரல்
- சித்திரை நாட்டிய விழா, மதுரை – மே
- சித்திரை முழு நிலவு விழா, பூம்புகார் – மே
- கட்டபொம்மன் விழா, பாஞ்சாலங்குறிச்சி – மே
- சலங்கை நாதம் மற்றும் பாகவத மேளா, தஞ்சாவூர் – மே
- மாங்கனி விழா, கிருஷ்ணகிரி – மே
- எல்லா மலை வாழிடங்களில் கோடை விழா – மே
- கந்தூரி விழா, நாகூர் – மே

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

- சாரல் திருவிழா, குற்றாலம் – ஜூலை
- திற்பரப்பு விழா, கன்னியாகுமரி மாவட்டம் – ஜூலை
- ஆடிப்பெருக்கு விழா, ஒகேனக்கல் – ஜூலை
- வேளாங்கன்னி விழா, வேளாங்கன்னி – ஆகஸ்ட்
- எல்லா சுற்றுலாத் தலங்களிலும் உலக சுற்றுலா தினம் – செப்டம்பர்
- சதய விழா, தஞ்சாவூர் – அக்டோபர்
- திருவண்ணாமலை தீபத் திருவிழா – நவம்பர்

14.3 தமிழ்நாடு சுற்றுலா மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் வேலூரில் நடைபெறும் அரசுப் பொருட்காட்சிகள் அனைத்திலும் கலந்து கொண்டு, தமிழ்நாட்டின் சுற்றுலா வளத்தையும், மாவட்டங்களில் அதிகம் பிரபலமடையாத தலங்கள் குறித்தும் எடுத்துக் கூறியது. சுற்றுலா மற்றும் பயணச் சந்தைகள் மற்றும் நாடெங்கும் நடத்தப்பட்ட பொருட்காட்சிகளில் தமிழ்நாடு சுற்றுலா கலந்து கொண்டு மாநிலத்தில் உள்ள வளமான சுற்றுலா முக்கியத்துவங்களை சிறப்புக்கூறாக சித்தரிக்கிறது.

14.4 உலக சுற்றுலா தின கொண்டாட்டங்கள்

சுற்றுலாவில் கிராமிய சுற்றுலா முக்கிய அம்சமாக திகழ்கிறது. தமிழ்நாட்டில் அதிசயக்கத்தக்க கிராமிய சுற்றுலாக்கூறுகள் உள்ளன. 2008 உலக சுற்றுலா தினத்தின் "சூழல் மாற்றத்தின் எச்சவாலையும் சுற்றுலா ஏற்கிறது" எனும் கருப்பொருளை சித்தரிக்கும் விதமாக உலக சுற்றுலா தின கொண்டாட்டங்களில் கிராமிய சுற்றுலா கருத்து வலியுறுத்தப்பட்டது. தூய்மைப்படுத்தும் முகாம், சுற்றுலா விழிப்புணர்வு முகாம் மற்றும் சுற்றுலா நட்பு முகாம் ஆகியன சென்னை மற்றும் ஏனைய மாவட்டங்களிலுள்ள முக்கிய சுற்றுலாத் தலங்களில் நடத்தப்பட்டன.

14.5 இந்திய நாட்டிய விழா – 2009

14.5.1 1992 ஆம் ஆண்டு முதல் டிசம்பர் - ஜனவரி மாதங்களில் உள்ளூர் கலைஞர்களின் திறனை போற்றும் முகமாக மாமல்லபுரத்தின் அழகிய கடற்கரையோரம் நாட்டிய விழாவை தமிழ்நாடு சுற்றுலா

2009 ஜூலை 7]

நடத்தி வருகிறது. இவ்விழாவின் பெருமையை அறிந்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை வருடத்திற்கு வருடம் உயர்ந்து வருகிறது. இதனை மனதில் கொண்டு இவ்வாண்டு இவ்விழா இந்திய நாட்டிய விழாவாக 2008 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 25 ஆம் நாள் முதல் 2009 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 25 ஆம் நாள் வரை, நாட்டிலுள்ள சிறந்த கலைஞர்களுக்கு வாய்ப்பு தந்து, சுற்றுலாப் பயணிகளுக்காக நடத்தப்பட்டது. இந்திய நாட்டிய விழாவாக இவ்வாண்டு கொண்டாடப்பட்ட மாமல்லபுரம் நாட்டிய விழாவில் பலவிதமான இந்திய நுண்கலைகள் மற்றும் நடன வகைகள் சரியான முறையில் தெரிவிக்கப்பட்டன. தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம், கர்நாடகா, புதுச்சேரி, ஜார்கண்ட், நாகாலாந்து, மணிப்பூர், இராஜஸ்தான், ஒரிசா, மிசோரம், சிக்கிம், அஸ்ஸாம் மற்றும் அருணாசலப்பிரதேசம் ஆகிய இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்து சிறந்த கலைஞர்கள் மாமல்லபுரம் கடற்கரைப் பரப்பில் ஒருங்கு திரண்டனர். தென்மண்டல பண்பாட்டு மையம், கலை-பண்பாட்டுத் துறை மற்றும் சென்னை அரசினர் இசைக் கல்லூரி ஆகியவை ஒருங்கிணைந்து பல்வேறு நடன நிகழ்ச்சிகளை வழங்கின.

14.5.2 தமிழகத்தின் பல்வகை கலைகள் மற்றும் கிராமிய கலைகள் உள்ளடக்கிய 'பண்பாட்டுச் சங்கமம்' துவக்க நிகழ்வு நிகழ்த்தப்பட்டது. இதில் சிறந்த பலவகையான இசை நடன நிகழ்ச்சிகள் காண்போருக்கு விருந்தாக்கப்பட்டது.

14.5.3 இனிவரும் ஆண்டுகளில், மேற்கண்ட விழாக்கள் தவிர, மகாகவி சுப்பிரமணிய பாரதியார் மற்றும் உமறுப்புலவர் ஆகியோர் பிறந்த இடமான எட்டயபுரத்தில் முத்தமிழ் விழாவும் நடத்தப்படும்.

14.6 பண்பாட்டு விழா

டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில், சென்னை, பல பண்பாட்டு இசை நடன நிகழ்ச்சிகளால் பொலிவுறுகிறது. குறிப்பாக "சென்னை சங்கமம்" எனும் மாபெரும் விழா சுற்றுலாப் பயணிகளையும், சென்னைவாசிகளையும் பெரிதும் கவர்கிறது. ஒரு வாரம் நடத்தப்பட்ட விழாவில் 2000-க்கும் மேற்பட்ட கலைஞர்கள் பங்கு கொண்டனர். இவ்விழா இசையையும், பாடல்களையும் சென்னையின் மூலை முடுக்குகளிலெல்லாம் ஒலிக்கச்செய்தது.

[2009 ஜூலை 7

15. கணினிமயமாக்கம் மற்றும் மேற்பார்வை

சுற்றுலாப் பயணிகள் பயன்பெற வேண்டும் என்பதற்காக, கடந்த சில ஆண்டுகளில், தகவல் தொழில்நுட்பத்தில் பெரிய முயற்சிகளை தமிழ்நாடு சுற்றுலா எடுத்துள்ளது. இம்முயற்சியின் நோக்கம் கீழே விவரிக்கப்பட்டுள்ளது:

- மேம்பட்ட தமிழ்நாடு சுற்றுலா சேவைகள்
- மேம்பட்ட சுற்றுலா தகவல்

(அ) மேம்பட்ட தமிழ்நாடு சுற்றுலா சேவைகள்

(1) கணினி பயன்பாடு

மேம்பட்ட மற்றும் திறமையான சேவைபுரிய, தலைமை அலுவலகத்தில் இணை இயக்குநர் வரையிலும், கள அலுவலகங்களிலும் கணினி பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மற்றும் வெளிமாநிலங்களிலுள்ள தமிழ்நாடு சுற்றுலா அலுவலகங்களுக்கும் கணினி வழங்கப்பட்டுள்ளது. கணினி மேம்பாடு தொடர்ந்து செய்யப்பட்டு வருகிறது.

(2) மின்னஞ்சல் மற்றும் இணைய தளம்

விரைவான தகவல் பரிமாற்றத்திற்கும், பிற பணிகளுக்குமாக மின்னஞ்சல் மற்றும் இணைய தள வசதி தலைமை அலுவலகத்தில் அனைத்துப் பணியாளர்களுக்கும், தமிழ்நாடு சுற்றுலா அலுவலகங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

(3) திட்ட கண்காணிப்பு முறை

மைய, மாநில அரசு திட்டங்களின் விவரங்களை மேற்பார்வையிடுதல், மேம்படுத்துதல் மற்றும் விவரங்களை பதிவு செய்தல் போன்றவற்றிற்காக திட்டக் கண்காணிப்பு முறை திட்டப்பிரிவிற்காக உருவாக்கப்பட்டது. முறையாக நாளது வரையிலாக்கப்பட்டு வருகிறது.

(ஆ) மேம்பட்ட சுற்றுலா தகவல்

சுற்றுலாப் பயணிகள், சுற்றுலா மேம்பாட்டு முகவரமைப்புகள், ஊடகங்கள் மற்றும் ஏனையோருக்கும் இம்மாநிலத்திலும் பிற மாநிலங்களிலும் தரமான சுற்றுலா தகவல், வசதிகள் மற்றும்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2009 ஜூலை 7]

சேவைகளை வழங்கும் வகையில் பல முனைவுகள் எடுக்கப்பட்டுள்ளன. எடுக்கப்பட்ட சில முக்கியமான நடவடிக்கைகள் வருமாறு:—

(i) வலைதளம் www.tamilnadutourism.org. - முக்கிய தமிழ்நாடு சுற்றுலா மேம்பாட்டு தளம்

(ii) வலைதளம் www.ttdconline.com - தமிழ்நாடு சுற்றுலா சேவைகளை பதிவு செய்ய உருவாக்கப்பட்ட தளம்

16. சுற்றுலா விருதுகள்

16.1 தமிழ்நாடு சுற்றுலா *2006-2007* ஆம் ஆண்டில் பின்வரும் மூன்று தேசிய சுற்றுலா விருதுகளை மைய அரசு சுற்றுலா அமைச்சகத்திடமிருந்து சிறந்த பணிகளுக்காக பெற்றுள்ளது:

(அ) சிறந்த கிராமிய சுற்றுலாத் திட்டம்

(ஆ) சிறந்த ஒருங்கிணைந்த சுற்றுலா வர்த்தக விளம்பரம்

(இ) சிறந்த தன்னார்வத் தொண்டு நிறுவனம்

16.2 *2007-2008* ஆம் ஆண்டிலும், சிறந்த ஒருங்கிணைந்த வர்த்தக விளம்பரத்திற்காக தேசிய சுற்றுலா விருதினைப் பெற்றுள்ளது.

16.3 இது தவிர, *2007-2008* ஆம் ஆண்டில் முன்னணி சுற்றுலா வெளியீடுகளிடமிருந்து பின்வரும் விருதுகளையும் பெற்றுள்ளது:

(அ) டுடேஸ் டிராவலரின் 10-வது ஆண்டு நிறைவு விழாவினை ஒட்டி கலாச்சார சுற்றுலா விருது

(ஆ) சிஎன்பிசி ஆவாஜ் டிராவல் - ஊட்டி சிறந்த வார இறுதி சுற்றுலாத் தலம் (தெற்கு) 2008 ஆம் ஆண்டின் விருது

(இ) ஆஸ்பிடாலிடி இந்தியா மற்றும் எக்ஸ்புளோர் தி வோர்ல்டு அனுவல் இண்டர்நேசனல் வழங்கிய, சுற்றுலா மேம்பாட்டில் இந்தியாவின் சிறந்த மாநிலம் 2008 ஆம் ஆண்டின் விருது

(ஈ) பட்வா விருது

17. நிதி ஒதுக்கீடு

சுற்றுலாப் பயணிகளின் தேவையைப் பூர்த்தி செய்ய மைய, மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் கட்டமைப்பு வசதிகளான ஓய்விடங்கள்,

கழிப்பிடங்கள், வாகன நிறுத்துமிடம், குடிநீர் வசதி, சாலை வசதி, சுகாதார வசதிகள் முதலியவை செய்யப்பட்டுள்ளன.

கடந்த மூன்றாண்டுகளில் கட்டமைப்பு வசதிகளுக்காக வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடு விவரம் கீழே விவரிக்கப்பட்டுள்ளது:

2006-2007	ரூ.*63.57* கோடி
2007-2008	ரூ.*51.53* கோடி
2008-2009	ரூ.*62.04* கோடி

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

1956 ஆம் ஆண்டு கம்பெனி சட்டத்தின்கீழ் *1971*-ல் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கம்பெனியாகப் பதிவு செய்யப்பட்டது. குறிப்பாக பிரபலமாகாத சுற்றுலாத் தலங்கள் உள்பட சுற்றுலா இடங்களில் சுற்றுலா தொடர்பான அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பதும் இதில் அடங்கும். வர்த்தக ரீதியில் சுற்றுலாவை மேம்படுத்தவும், கட்டமைப்பு, அடிப்படை வசதிகளை விரிவுபடுத்தவும் ஐந்து உணவகங்கள் மற்றும் இரண்டு சொகுசுப் பேருந்துகளுடன் எளிய முறையில் இக்கழகம் தொடங்கியது. தற்போது இது நன்கு வளர்ந்து *55* ஓட்டல்கள் மற்றும் *24* சொகுசுப் பேருந்துகளோடு இயங்கி வருகிறது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இம்மாநிலத்திலுள்ள அனைத்து முக்கிய சுற்றுலா மையங்களிலும் சுற்றுலா பயணிகள் வசதிக்காக இளைஞர் விடுதிகள், உணவகங்கள், படகு இல்லங்கள், தொலைநோக்கி இல்லங்கள், ஏரி பூங்காக்கள், பெட்ரோல் பங்க் போன்ற வசதிகளை உருவாக்கியுள்ளது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் உதகமண்டலம், கொடைக்கானல் மற்றும் ஏற்காடு உள்ளிட்ட முக்கிய சுற்றுலாத் தலங்களில் இளைஞர் விடுதிகளை நடத்தி வருகிறது. இங்கு சாதாரண சுற்றுலாப் பயணிகள், கோடைக்காலத்திலும் குறைந்த செலவில் தங்கும் வகையில் வசதி செய்யப்பட்டுள்ளது.

2009 ஜூலை 7]

1. நிதி சாதனை

(ரூபாய் கோடியில்)

வரிசை எண்	பொருள்	2007-2008	2008-2009	வளர்ச்சி விழுக்காடு
1.	விற்பனை அளவு	55.04	69.00	25
2.	நிகர இலாபம்	4.43	9.50	114

உலகப் பொருளாதார வீழ்ச்சியும், மும்பையில் வெடிகுண்டு சம்பவமும் இந்நாட்டிற்கு சுற்றுலாப் பயணிகள் வருகையை பாதித்த போதிலும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மொத்த வியாபாரத் தொகை மற்றும் ஆதாயம் கணிசமான அளவுக்கு அதிகரித்துள்ளது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஓட்டல் பிரிவிலும், போக்குவரத்துப் பிரிவிலும் பல்வேறு முயற்சிகளை எடுத்ததன் மூலம் ஆதாயம் கணிசமான அளவுக்கு அதிகரித்துள்ளது.

1.1 ஊராட்சித் தலைவர்களுக்கு ஊரக வளர்ச்சித் துறை நடத்திய பயிற்சித் திட்டத்தின் ஓர் அங்கமாக சிறப்புப் பயணத்திட்டம் நடத்தப்பட்டது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் விடுதிகள் மற்றும் சொகுசுப் பேருந்துகளைப் பயன்படுத்திக் கொண்டு, மதுரை, கோயம்புத்தூர், மாமல்லபுரம் ஆகிய இடங்களில் யுனிசெஃப் மூலம் கல்வித் துறை சிறப்புப் பயிற்சி பயிலரங்குகளை நடத்தியது. பழைய பேருந்துகளுக்குப் பதிலாக அதி நவீன உயர் தொழில்நுட்ப வசதியுள்ள பேருந்துகள் வாங்கப்பட்டன. புதிய பயணத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இரயில் மற்றும் பேருந்து பயணத் திட்டத்தை வர்த்தகப்படுத்த தீவிர விளம்பர முகாம்கள் நடத்தப்பட்டன. இதனால் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் விடுதிகள் மற்றும் பேருந்து பிரிவுகளின் செயல்பாடுகளில் முன்னேற்றம் ஏற்பட்டது.

1.2 நவீன படகுகள் கோடைக்காலத்திற்கு முன்பாக வழங்கப்பட்டதால், படகுப் பிரிவில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டு, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஒட்டுமொத்த இலாபத்தில் முன்னேற்றம் ஏற்பட்டது.

1.3 முக்கிய விடுதிகள் மேம்பாடு கடந்த இரண்டு ஆண்டுகளில் செய்யப்பட்டதன் காரணமாக, விடுதிகளில் தங்குவோரின் சதவீதம் 2005-2006 ஆம் ஆண்டில் 50 விழுக்காட்டிலிருந்து 2008-2009 ஆம் ஆண்டில் 62 விழுக்காடாக உயர்ந்துள்ளது.

2. ஓட்டல்களை தனியாருக்கு குத்தகைக்கு விடுதல்

அரசு 31 ஓட்டல்களுக்கும் 10 உணவகங்களுக்கும் தனியுரிமை வழங்க ஒப்புதலளித்தது. இக்கழகம், இந்நாள் வரை 24 ஓட்டல்களுக்கும் 7 உணவகங்களுக்கும் தனியுரிமை அளித்துள்ளது. எஞ்சிய ஓட்டல்கள் மற்றும் உணவகங்களுக்கு தனியுரிமை அளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தனியுரிமை அளித்ததன் மூலம் ஈட்டிய வருவாய், எஞ்சிய ஓட்டல்கள் மற்றும் உணவகங்கள் மேம்பாட்டிற்கு உபயோகிக்கப்படுகிறது.

3. இந்திய சுற்றுலா—அண்ணா நூற்றாண்டு தொழில் பொருட்காட்சி

3.1 பேரறிஞர் அண்ணா அவர்களின் நூறாவது பிறந்த நாளை நினைவுகூறும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 35-வது இந்திய சுற்றுலா அண்ணா நூற்றாண்டு பொருட்காட்சி தொடங்கி வைக்கப்பட்டது. இப்பொருட்காட்சி சென்னை மாநகர குடிமக்களை பெரிதும் கவர்ந்திழுத்துள்ளது. 20 நாட்களில் 6.39 இலட்சம் மக்கள் பொருட்காட்சிக்கு வருகை தந்தனர். இது கடந்த ஆண்டு எண்ணிக்கையான 4.30 இலட்சத்தை விட 2 இலட்சம் அதிகமாகும். இதுவரை இல்லாத அளவில் சுமார் 17 இலட்சம் பார்வையாளர்கள் இவ்வாண்டு கண்டு களித்தனர். கடந்த ஆண்டு இந்த எண்ணிக்கை 14 இலட்சமாகும். இப்பொருட்காட்சியில் ஈட்டிய ஆதாயம் ரூ.2.02 கோடியாக அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு ஈட்டிய ஆதாயம் ரூ.1.52 கோடி ஆகும்.

- தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சென்னை தீவுத் திடலில் 2008 மே மாதம் 1 ஆம் தேதி முதல் ஜூன் 7 ஆம் தேதி வரை பனிமழை கண்காட்சி நடைபெற்றது. இதில் ரூ. 70 இலட்சம் வருவாய் கிடைத்துள்ளது.

- சென்னை தீவுத் திடலில் நவராத்திரி விடுமுறையில் அக்டோபர் 2008-ல் உணவுத் திருவிழாவை நடத்தியது. இதன் மூலம் ரூ 4.00 இலட்சம் வருவாய் கிடைத்தது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தனியார் பங்கேற்புடன் நடத்திய இப்பொருட்காட்சிகளைத்தவிர, தனியார் பொருட்காட்சிகள் நடத்த தீவுத்திடல் வாடகைக்கு விடப்பட்டது.

2009 ஜூலை 7]

- கோயம்புத்தூர் சிறைச்சாலை மைதானத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நிகழ்ச்சி மேலாளர் மூலம் ஆகஸ்டு-செப்டம்பர் 2008 மாதங்களில் நுகர்வோர் திருவிழா நடத்தியது. இதன்மூலம் ரூ.19.00 இலட்சம் வருவாய் ஈட்டியது.

3.2 பொருட்காட்சி நடைபெறாத காலங்களான ஏப்ரலிலிருந்து நவம்பர் வரை இதுபோன்ற நிகழ்ச்சிகளை நடத்தியதன்மூலம் ரூ. 1.18 கோடி இலாபம் கிடைத்துள்ளது. இது, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக வரலாற்றில் இதுவரை இல்லாத ஒன்றாகும். மேலும், 2003-2004 ஆம் ஆண்டில் ஈட்டப்பட்ட அதிக வருமானமாகக் கருதப்பட்ட ரூ.44.00 இலட்சத்தைவிட இது கூடுதலாகும்.

4. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் மின்னணு ஆளுமை

- இந்தியாவிலேயே முதன் முதலாக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் இணைய தளம் மூலம் நேரடி முன் பதிவு செய்யும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இணைய தளப் பதிவுமூலம் 2004-2005 ஆம் ஆண்டில் ரூ.14.97 இலட்சமாக இருந்த வருவாய், 2008-2009 ஆம் ஆண்டில் ரூ.138.70 இலட்சமாக உயர்ந்துள்ளது.

- கணினி தொழில்நுட்பத்தில் மதிப்புக் கூட்டப்பட்ட சேவையின் மூலமாக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் விடுதிகள் பயன்பாட்டிலும், பயணங்கள் செயல்பாட்டிலும் கூடுதல் வருமானத்தை ஈட்டியுள்ளது. ஸ்பெயின், அமெரிக்க ஐக்கிய நாடுகள், லண்டன், பிரான்ஸ், ஆஸ்திரேலியா, பின்லாந்து, கனடா, நார்வே, ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், நெதர்லாந்து, சிங்கப்பூர், சீனா, துபாய், மொரீசியஸ், மலேசியா, இலங்கை, தென் ஆப்பிரிக்கா ஆகிய 70-க்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து சுற்றுலாப் பயணிகள் கணினி உபயோகம் மூலம் உடனடியாக விடுதிகள் மற்றும் பயணத் திட்டங்கள் குறித்த பதிவுகளைச் செய்துள்ளனர். மாதந்தோறும் 1,00,000 சுற்றுலாப் பயணிகள் இந்த வலைதளத்தைப் பார்க்கின்றனர். தினந்தோறும் 90-100 மின்னஞ்சல் பெறப்படுகிறது.

- தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தனது வலைதளத்தில் **http:tamilnadutourism.org** சுற்றுலாப் பயணிகள் வசதிக்காக சுற்றுலாத் தலங்களின் தகவல்கள், விடுதிகள், பொருட்காட்சிகள் மற்றும் விழாக்கள், கலை மற்றும் பண்பாடு முதலிய

[2009 ஜூலை 7

விவரங்களைச்சேர்த்து சீரமைத்தது. வலைதளத்தை 2008-09 ஆம் ஆண்டில் 6.74 இலட்சம் நபர்கள் பார்வையிட்டுள்ளனர். கடந்த ஆண்டு (2007-08) 5.27 இலட்சம் நபர்கள் பார்வையிட்டுள்ளனர்.

- தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் 12 ஓட்டல்களுக்கான முன்பதிவினை தமிழக சுற்றுலாப் பயணிகள் மட்டுமின்றி, சென்னை, புதுதில்லி, மும்பை மற்றும் கொல்கத்தா விற்பனை மையங்களில் இணைய தளம் மூலம் முன்பதிவு முறையை வெளிமாநில மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் அறிமுகப்படுத்தியுள்ளது.
- தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், முதலமைச்சர் பொது நிவாரண நிதி தொகையை வலைதளம் **www.ttdconline..com/cmprf.htm** மூலம் செலுத்தத் தேவையான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. இதன்மூலம் ரூ.11.54 இலட்சம் சேர்க்கப்பட்டுள்ளது.

5. அய்யன் திருவள்ளுவர் சிலை

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், 2002 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் இருந்து கன்னியாகுமரியிலுள்ள அய்யன் திருவள்ளுவர் சிலை பராமரிப்புப் பணியை ஏற்றுக் கொண்டது. பல மேம்பாட்டுப் பணிகளான சிலையைச் சுற்றிலும் கிரானைட் தளம் அமைத்தல், நடைபாதை சீரமைப்பு போன்றவை மேற்கொள்ளப்பட்டன. 2008-2009 ஆம் ஆண்டு ரூ.90.00 இலட்சம் செலவில் சிலை பாதுகாப்பிற்கு பாலிசிலிகான் இரசாயன பூச்சு பூசப்பட்டுள்ளது. சுற்றுலாப் பயணிகள் கடற்கரையிலிருந்து திருவள்ளுவர் சிலைக்குச் செல்வதற்கு ரூ.210 இலட்சம் செலவில் 2008-2009 ஆம் ஆண்டில் இரண்டு நவீன கப்பல்கள் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின்மூலம் மைய சுற்றுலாத் துறையின் பங்களிப்புடன் வாங்கப்பட்டு உபயோகத்தில் உள்ளன.

6. வர்த்தக மேம்பாட்டு நடவடிக்கைகள்

- டெல்லி, ஜெய்ப்பூர், கொல்கத்தா, அகமதாபாத், லக்னோ மற்றும் ஐதராபாத்தில் சாலையோர காட்சி விளக்கங்கள் மற்றும் விளம்பர முகாம்கள் நடத்தப்பட்டன.

2009 ஜூலை 7]

- முதலியார்குப்பம் படகு குழாமில் வாழைப்பழ வடிவ படகுகளும், விரைவுப் படகும் அறிமுகப்படுத்தப்பட்டன. ஆகஸ்டு 2008-ல் முதலியார்குப்பம் மழைத்துளி படகு குழாமில் நீர் விளையாட்டுகளை பிரபலப்படுத்த படகுப் போட்டிகள் நடத்தப்பட்டன.

- இந்நடவடிக்கைகளினால் முதலியார்குப்பத்திலுள்ள படகு இல்லத்திற்கு நல்ல வருவாய் கிடைக்கப்பெற்று 109 விழுக்காடு வளர்ச்சி அடைந்துள்ளது. கடந்த ஆண்டு விற்பனை அளவு 18.28 இலட்சத்துடன் ஒப்பிடும்போது, இவ்வாண்டு ரூ.38.13 இலட்சம் வருவாய் ஈட்டியுள்ளது.

- 2008 ஆம் ஆண்டு ஜூலை மாதம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தங்க அட்டை மற்றும் பிளாட்டினம் அட்டை திட்டத்தைத் துவக்கி வைத்தார். தங்க அட்டை உறுப்பினர், கட்டணம் ரூ.1,000 செலுத்தி மூன்றாண்டுகள் வரையிலும், பிளாட்டினம் அட்டை உறுப்பினர், கட்டணம் ரூ.5,000 செலுத்தி பத்தாண்டுகள் வரையிலும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக விடுதிகளில் 20 விழுக்காடு வரை கட்டணச் சலுகையைப் பெற முடியும். இதுவரை 201 தங்க அட்டைகளும், 19 பிளாட்டினம் அட்டைகளும் விநியோகிக்கப்பட்டுள்ளன.

- இணைய தளம் மூலம் தங்கம் மற்றும் பிளாட்டினம் அட்டைகள் பெற இயலும். சுற்றுலாப் பயணிகள் தங்கள் புகைப்படங்களை கணினியில் பதிந்து இவ்வட்டைகளைப் பெற முடியும்.

7. 2008–2009–இல் இதர வர்த்தக முயற்சிகள்

- தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பழைய 4 பேருந்துகளை மாற்றி புதிய உயர் தொழில்நுட்ப சொகுசுப் பேருந்துகளை வாங்கியுள்ளது. கடந்த இரண்டாண்டுகளில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 16 பேருந்துகளை ரூ. 4 கோடி செலவில் வாங்கியுள்ளது. இதன்மூலம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பழைய பேருந்துகளைப் பயன்படுத்தி வந்த நிலையை மாற்றி புதிய சொகுசுப் பேருந்து வாங்கப்பட்டு சுற்றுலாப் பயணிகளுக்குக் கூடுதல் வசதிகளுடன் பயணம் இனிமையாக அமையும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2009 ஜூலை 7

- மாமல்லபுரத்திலுள்ள கடற்கரை ஓய்வு வளாகத்தில் 20 நடுத்தரக் குடில்கள் மேம்பாடு மற்றும் 20 புதிய குடில்களைக் கட்டுதல் பணிகள் ரூ.2.20 கோடி செலவில் முடிக்கப்பட்டதுடன், குறைந்த கட்டண 20 குடில்கள் நிலை உயர்த்தப்பட்டன. இக்குடில்கள் மூலம் ஆண்டிற்கு கூடுதல் வருவாய் ரூ.60.00 இலட்சம் ஈட்டப்படும்.

- மதுரை, கன்னியாகுமரி, ஏற்காடு, இராமேசுவரம், கொடைக்கானல் மற்றும் ஒகேனக்கல் ஆகிய இடங்களில் உள்ள விடுதிகள் ரூ. 2.35 கோடியில் மேம்படுத்தப்பட்டன.

- கன்னியாகுமரி பாரம்பரிய ஓட்டல் ரூ.80.00 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டது.

- முட்டுக்காடு படகு குழாம் ரூ.88.00 இலட்சம் செலவில் தரம் உயர்த்தப்பட்டு புதுப்பிக்கப்பட்டது. புதுப்பிக்கப்பட்ட படகு குழாம் சுற்றுலாப் பயணிகளைப் பெரிதும் கவருகிறது.

- புதிய படகுகள் வாங்குவதற்கு ரூ.90.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இதன்மூலம் கடந்த ஆண்டு ரூ.5.95 கோடியாக இருந்த வருவாய் 30 விழுக்காடு அதிகரித்து 2008-2009 ஆம் ஆண்டில் ரூ.7.74 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

8. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தனியார் பங்கேற்புடன் புதிய வர்த்தக முயற்சிகள்

8.1 தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சென்னை தீவுத் திடலிலும், முதலியார்குப்பம் படகு குழாமிலும் தனியார் நிறுவனத்துடன் இணைந்து சாகச விளையாட்டுக்கள் நடத்த ஒப்பந்தம் செய்துள்ளது. தீவுத் திடலில் பங்ஜி ஓட்டம், ஜார்பின் பால், மலையேற்றம், பெயின்ட் பால் மற்றும் டிராம்போலின் விளையாட்டுக்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

8.2 அனல்காற்று பலூன் மற்றும் பாரா செயிலிங் விளையாட்டுக்கள் விரைவில் முதலியார்குப்பம் மழைத்துளி படகு குழாமில் தொடங்கப்படவுள்ளன.

2009 ஜூலை 7]

- 2009 ஆம் ஆண்டு இந்திய சுற்றுலா அண்ணா நூற்றாண்டு-தொழில் பொருட்காட்சி நிகழ்ச்சி மேலாளர் மூலம் நடத்தப்பட்டது. நிலையான வாடகை ரூ.2.20 கோடியுடன், நுழைவுவாயில் வசூலில் 30 விழுக்காடும் வருமானமாகப் பெறப்பட்டது.

- தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 24 ஓட்டல்கள் மற்றும் 7 உணவகங்களை ஏற்கெனவே தனியாருக்கு 10 முதல் 15 ஆண்டுகளுக்கு தனியுரிமை அளித்துள்ளது. இந்த ஓட்டல்கள் தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டு சிறப்பாகப் பராமரிக்கப்படுகின்றன.

- மாமல்லபுரம் கடற்கரை விடுதி வளாகத்தில், புத்துணர்ச்சி மருத்துவ வசதிகள் கொண்ட மூங்கில் குடில்கள் தனியார் கூட்டமைப்புடன் அமைக்கப்பட்டுள்ளன.

9. இரயில் மற்றும் சாலை பயணத் திட்டம்

மும்பை, புதுதில்லி மற்றும் கொல்கத்தாவிலிருந்து 2002 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் ஆரம்பிக்கப்பட்ட இரயில் மற்றும் சாலை பயணத் திட்டம், தொடர்ச்சியாக அகமதாபாத் மற்றும் ஜெய்ப்பூர் ஆகிய இடங்களிலிருந்தும் விரிவுபடுத்தப்பட்டது. வசதி செய்யப்பட்ட இரயில் பயணச்சீட்டு, சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்தில் வரவேற்பு, உயர் தொழில்நுட்பப் பேருந்தில் பயணம், அனுபவமிக்க சுற்றுலா வழிகாட்டி சேவை மற்றும் திருப்பதி கோயில் விரைவு தரிசனம் ஆகியவை இச்சுற்றுலாவின் சிறப்பம்சமாகும்.

இப்பயணத்திட்டம் சுற்றுலாப் பயணிகளின் வரவேற்பைப் பெற்றுள்ளது. 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.61.00 இலட்சமாக இருந்த வருமானம், 130 விழுக்காடு அதிகரித்து 2008-2009 ஆம் ஆண்டில் ரூ.140.00 இலட்சமாக உயர்ந்துள்ளது.

10. புதிய முயற்சிகள்

- ஊட்டி, கோயம்புத்தூர் மற்றும் இராமேசுவரத்தில் மதுபான விடுதிகள் ரூ. 72.00 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட உள்ளன.

- ரூ.21.00 இலட்சம் செலவில் ஓட்டல் தமிழ்நாடு, ஓசூரில் 10 குடில்கள் தரம் உயர்த்தப்பட உள்ளன.

[2009 ஜூலை 7

- ரூ.35.00 இலட்சம் செலவில் ஓட்டல் தமிழ்நாடு, கிருஷ்ணகிரியில் 16 அறைகள் மேம்படுத்தப்பட உள்ளன.
- ரூ.73.00 இலட்சம் செலவில் ஓட்டல் தமிழ்நாடு, கன்னியாகுமரியில் 12 குடில்கள் மேம்படுத்தப்பட உள்ளன.
- ரூ.32.00 இலட்சம் செலவில் ஓட்டல் தமிழ்நாடு, உதகமண்டலத்தில் 8 குடில்கள் மேம்படுத்தப்பட உள்ளன.
- ரூ.18.00 இலட்சம் செலவில் ஓட்டல் தமிழ்நாடு, திருச்செந்தூரில் 19 அறைகள் மேம்படுத்தப்பட உள்ளன.
- ரூ.41.00 இலட்சம் செலவில் ஓட்டல் தமிழ்நாடு, இராமேஸ்வரத்தில் 11 அறைகள் மேம்படுத்தப்பட உள்ளன.
- ரூ. 56.00 இலட்சம் செலவில் ஓட்டல் தமிழ்நாடு, கோயம்புத்தூரில் 29 அறைகள் மேம்படுத்தப்பட உள்ளன.
- சென்னை தீவுத் திடலில் மன்றோ சிலை அருகில் ரூ. 45.00 இலட்சம் செலவில் பசுமை மகிழ்வுந்து பூங்கா அமைக்கப்பட உள்ளது.

11. "எங்கும் ஏறலாம் எங்கும் இறங்கலாம்" சுற்றுலா

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், 18 இருக்கைகள் கொண்ட நான்கு குளிர்சாதன பேருந்துகளை சென்னையிலிருந்து மாமல்லபுரம் வரை எங்கும் ஏறி, எங்கும் இறங்கும் வசதியுடைய புதுமையான "Hop on - Hop off" சுற்றுலாத் திட்டத்தைத் தொடங்கியது. இச்சுற்றுலாவில் பங்கு பெறும் பயணிகள் கீழ்க்காணும் இடங்களை அவரவர் விருப்பத்திற்கு ஏற்ப கண்டு மகிழலாம்:

(1) அருள்மிகு மருந்தீஸ்வரர் கோயில், திருவான்மியூர்

(2) வி.ஜி.பி தங்கக் கடற்கரை

(3) மாயாஜால்

(4) எம்.ஜி.எம்.

(5) தட்சணசித்ரா

(6) படகு குழாம், முட்டுக்காடு

(7) அருள்மிகு நித்திய கல்யாணப் பெருமாள் கோயில், திருவிடந்தை

(8) முதலை பண்ணை

(9) கடற்சிங்கம் கண்காட்சி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
ALONE TRIUMPHS

2009 ஜூலை 7]

(10) புலிக்குகை

(11) கடற்கரைக் கோயில், மாமல்லபுரம்

(12) ஐந்து இரதம்

(13) அர்ஜுனன் தபசு

சுற்றுலாப் பயணிகள் தங்கள் விருப்பத்திற்கேற்ப எங்கும் ஏறி, இறங்கி அரை மணி நேர இடைவெளியில் இந்த பயண வசதியைப் பெறலாம். இச்சுற்றுலாவில் பயணம் செய்யும் பயணிகளுக்கு கட்டணமாக ஒரு நபருக்கு ரூ.250.00 என்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. தொடக்க விழா சலுகையாக சுற்றுலாப் பயணிகளுக்கு கட்டணத்தில் 25 விழுக்காடு தள்ளுபடி அளிக்கப்பட்டுள்ளது. சுற்றுலாப் பயணிகளுக்கு பல்வேறு இடங்களில் 10 விழுக்காடு முதல் 35 விழுக்காடு வரை தள்ளுபடி அளிக்கப்படுகிறது. இப்பயணத்தில், முட்டுக்காடு படகு குழாமில் இலவசமாக படகுச் சவாரி சென்று வர சலுகை அளிக்கப்படுகிறது.

12. சுற்றுலா சேவைகள்

12.1 விடுதி மேலாண்மை முறை

முக்கிய விடுதிகளில் விடுதி மேலாண்மை முறை மூலம் ஓட்டல் நடவடிக்கைகள் கணினிமயமாக்கப்பட்டுள்ளது - ஓட்டல் தமிழ்நாடு, மாமல்லபுரம், திருச்சிராப்பள்ளி, மதுரை 1, மதுரை 2, கொடைக்கானல், ஏற்காடு, உதகமண்டலம், கோயம்புத்தூர், இராமேசுவரம், திருச்செந்தூர், தஞ்சாவூர் மற்றும் கன்னியாகுமரி.

12.2 பயணத் திட்ட மேலாண்மை முறை

சுற்றுலா வளாகத்திலும் பிற விற்பனை நிலையங்களிலும் பயணத் திட்ட நடவடிக்கைகள் முழுவதுமாகச் செயற்படுத்த பயணத் திட்ட மேலாண்மை முறை மூலம் கணினி மயமாக்கப்பட்டுள்ளது.

12.3 படகு குழாம்கள் மேலாண்மை முறை

முட்டுக்காடு, கொடைக்கானல், பைகாரா, பிச்சாவரம் மற்றும் ஏற்காடு ஆகிய படகு குழாம்களில் படகுகள் இருக்கும் இடம் குறித்து கணினி மூலம் அறியும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

13. இணைய தள மூலம் திட்டங்கள் மேற்பார்வை

www.tourism.tn.nic.in என்ற இணைய தளம் மூலம் திட்டங்கள் இணைய தளம் மூலம் நேரடி மேற்பார்வை செய்யும் முறை வகுக்கப்பட்டுள்ளது.

14. தமிழில் வலைதளம்

சுற்றுலாப் பயணிகள் வசதிக்காக தமிழில் வலைதளம் www.tamilnadutourism.org/tamil அண்மையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

15. உண்மை உணர்த்தும் சுற்றுலா (Virtual Tour)

அதிக அளவில் சுற்றுலாப் பயணிகளைக் கவர, தமிழ்நாட்டிலுள்ள முக்கிய சுற்றுலாத் தலங்களை இணைத்து சிறந்த பயணத் திட்டத்தை அறிமுகப்படுத்த தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் உத்தேசித்துள்ளது. இப்பயணத்திட்டத்தில் இணைய தளத்திலும், குறுந்தட்டுகளிலும் சுற்றுலாத் தலத்தை நேரில் காண்கின்ற சிந்தையை சுற்றுலாப் பயணிகள் பெறமுடியும். இத்திட்டத்தால் தமிழ்நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை உயரும்.

முடிவுரை

சுற்றுலா நமது முயற்சிகளை ஊக்கப்படுத்தும் சக்தி.

சுற்றுலாவிற்கு செலவிடப்பட்ட தொகை முதலீடாகும்.

சுற்றுலா, தேவையற்ற தடைகளைத் தாண்ட உதவுகிறது.

சுற்றுலா, சகோதரத்துவத்தை வளர்த்து நட்பைப் பேணுகிறது.

சுற்றுலா, வேலைவாய்ப்பையும் அறிவையும் வளர்க்கிறது.

சுற்றுலா, விழுமியங்களையும் பண்பையும் பாதுகாக்கிறது.

சுற்றுலா, நினைவுச் சின்னங்களைப் பாதுகாத்து, வளப்படுத்துகிறது.

தமிழ்நாடு சுற்றுலா எண்ணிலடங்கா அனுபவங்களை அள்ளித் தருகிறது.

சுற்றுலாப் பயணிகளை முன்னிறுத்தி சேவையாற்றுகிறது.

சுற்றுலாப் பயணிகளை மதிப்புடன் நடத்துகிறது.

சுற்றுலாப் பயணிகளுக்கு தமது வீட்டில் இருக்கும் அனுபவத்தைத் தருகிறது.

பல்வகையான அனுபவங்களை அளித்து எல்லாத் திசைகளிலும் புகழ் பரப்புகிறது.

சுற்றுலாப் பயணிகள் விருந்தினர்களாக வந்து, வீட்டினராக மாறி, நண்பர்களாகத் திரும்புகின்றனர்.

சுற்றுலாப் பயணிகள் நினைவுகளை உருவாக்க வருகிறார்கள்; பாதுகாக்கப் பிரிகிறார்கள்.

பிற்சேர்க்கை

[2009 ஜூலை 7

பிற்சேர்க்கை

தமிழ்நாடு – ஒரு பார்வை

தமிழ்நாடு – ஒரு பார்வை

1. புவியியல் அமைவு

வட அட்சரேகை 8° 5′ க்கும் 13° 35′ க்கும் இடையில் கிழக்கு தீர்க்கரேகை 76° 15′ க்கும் 80° 20′க்கும் இடையில் மக்கள்தொகை குறித்த தகவல் (2001 கணக்கெடுப்பின்படி)

அ. பரப்பு (ச.கி.மீ.)	130058
ஆ. மக்கள் தொகை (எண்ணிக்கை)	62405679
பாலின அடிப்படையில்,	
ஆண்	31400909
பெண்	31004770
பரப்பளவின்படி,	
கிராமம்	34921681
நகரம்	27483998

2. வெப்பநிலை (2007-2008) (டிகிரி செல்சியஸ்)

அ. சமவெளிப்பகுதிகள்	
அதிகளவு	32.79
குறைந்தளவு	23.80
ஆ. மலைவாழிடங்கள்	
அதிகளவு	19.88
குறைந்தளவு	12.11
மழையளவு (2007-2008) (மி.மீ)	
இயல்பான	911.6
உண்மையான	1164.8

தமிழ்நாடு சட்டப்பேரவை TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2009 ஜூலை 7]

3. நீர்ப்பாசனம் (2006-2007)—

ஏரிகள்	531376

4. மீன்வளம் (2007-2008) (எண்ணிக்கை)

அ. கடலோரப் பகுதியின் நீளம் (கி.மீ)	1076
ஆ. கடலோர மாவட்டங்கள்	13
இ. கடலோரத் தொகுதிகள் (எண்ணிக்கை)	25

5. காடுகள்

வனப்பரப்பு (ச.கி.மீ) (2005-2006)	22883.51
அ. காப்புக் காடுகள்	19444.60
ஆ. காப்பு நிலங்கள்	2132.85
இ. வகைப்படுத்தப்படாத காடுகள்	1306.06

6. சாலை மற்றும் போக்குவரத்து சாலையின் நீளம் (கி.மீ.)

தேசிய நெடுஞ்சாலை (2007-2008)	4499.364
மாநில நெடுஞ்சாலை (2007-2008)	56971.000
மாநகராட்சி மற்றும் நகராட்சி சாலைகள் (2006-2007)	7014.000
ஊராட்சி ஒன்றியம் மற்றும் கிராம ஊராட்சி (2007-2008)	99610.000
பேரூராட்சி சாலைகள் (2007-2008)	15592.000
ஏனையவை (வனச்சாலை) (2007-2008)	3511.000
இருப்புப் பாதை (கி.மீ.) (2007-2008)	
அ. இருப்புப் பாதை தடத்தின் நீளம்	3950.80
அகல இரயில் பாதை	2616.09
மீட்டர் இரயில் பாதை	1334.71

ஆ. இருப்புப்பாதை நீளம்	5911.05
இ. இரயில் நிலையங்கள் (எண்ணிக்கை)	541
அகல இரயில் பாதை	390
மீட்டர் இரயில் பாதை	137
அகல மற்றும் மீட்டர் இரயில் பாதை	14
துறைமுகங்கள் (எண்ணிக்கை) (2007-2008)	18
பெரிய துறைமுகங்கள்	3
சிறிய துறைமுகங்கள்	15
விமான நிலையங்கள் (எண்ணிக்கை) (2007-2008)	5
7. கல்வி (2007-2008) (எண்ணிக்கை)	
அ. பல்கலைக்கழகங்கள்	29
ஆ. கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்	523
இ. தொழிற்கல்வி கல்லூரிகள்	
1. மருத்துவம் (2007-2008)	
மருத்துவம்	18
பல் மருத்துவம்	23
துணை மருத்துவம்	134
இந்திய மருத்துவ நிறுவனங்கள்	24
2. பொறியியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்கள்	293
3. பல்தொழில் நுட்பக் கல்லூரிகள்	252
4. வேளாண்மை	11
5. கால்நடை மற்றும் மீன்வளம்	3

2009 ஜூலை 7]

	6. சட்டக் கல்லூரிகள்	*9*
	7. சிறப்பு கல்விக்கான கல்லூரிகள் *(2006-2007)*	*181*
	8. கல்வியியல் கல்லூரிகள்	*309*
	9. தொழிற்கல்விக்கான பள்ளிகள்	*62*
	10. சிறப்புக் கல்விக்கான பள்ளிகள்	*102*
	11. பிற தொழிற்கல்வி நிறுவனங்கள்	*136*
	12. பொதுக்கல்விக்கான பள்ளிகள்	*53103*
	மேல்நிலைப் பள்ளிகள்	*4736*
	உயர்நிலைப் பள்ளிகள்	*5095*
	நடுநிலைப் பள்ளிகள்	*8126*
8.	தொலைத் தொடர்பு *(எண்ணிக்கை) (2007-2008)* உபயோகத்திலுள்ள செல்லிடப்பேசிகள் *(பிஎஸ்என்எல் சென்னை* தொலைபேசி*)*	*3337087*
9.	வருவாய் *(2007-2008) (ரூபாய் கோடியில்)*	
	அ. மதிப்புக் கூட்டு வரி	*16473*
	ஆ. கேளிக்கை வரி	*16*
	இ. நுழைவு வரி	*1125*
10.	வருவாய் நிருவாகம் *(2007-2008) (எண்ணிக்கை)*	
	அ. வருவாய் மாவட்டங்கள்	*31*
	ஆ. வருவாய் வட்டங்கள்	*208*
	இ. வருவாய்க் கிராமங்கள் *(டி ஆர் எஸ்-இன்படி)*	*17292*

11. உள்ளாட்சி மன்றங்கள் (2007-2008) (எண்ணிக்கை)

அ. மாநகராட்சிகள்	8
ஆ. நகராட்சிகள்	150
இ. ஊராட்சி ஒன்றியங்கள்	385
ஈ. பேரூராட்சிகள்	561
சுற்றுலா தொடர்பானவை	102
இன்றியமையாதவை	78
உ. மாவட்ட ஊராட்சிகள்	29
ஊ. கிராம ஊராட்சிகள்	12618

12. சமூக வளர்ச்சி (2007-2008) (எண்ணிக்கை)

அ. ஏற்படுத்தப்பட்ட சுய உதவிக் குழுக்கள்	19061

13. காவல் மற்றும் சிறைகள் (2007) (எண்ணிக்கை)

அ. அனுமதிக்கப்பட்ட காவல் படை	102421
காவல் நிலைய விவரம்	
ஆ. காவல் நிலையங்கள்	1256
இ. அனைத்து மகளிர் காவல் நிலையங்கள்	196
ஈ. புறக்காவல் நிலையங்கள்	94

14. சட்டமன்றப் பேரவை (2006) (எண்ணிக்கை)

சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் (2006)

அ. தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள்	234
ஆ. நியமன உறுப்பினர்கள் (ஆங்கிலோ-இந்திய உறுப்பினர்)	1
நாடாளுமன்ற உறுப்பினர்கள்	
மக்களவை (2004)	39
மாநிலங்களவை	18

2009 ஜூலை 7]

தமிழ்நாடு சுற்றுலா – ஓர் கண்ணோட்டம்

1.	சுற்றுலா அலுவலகங்கள் (தமிழ்நாட்டில்-18, வெளி மாநிலங்களில்-6)	:	24
2.	சுற்றுலா தகவல் மையங்கள் (தமிழ்நாட்டில்-18, வெளி மாநிலங்களில்-6)	:	24
3.	உலக பாரம்பரிய சின்னங்கள்	:	5
4.	மாநில தொல்பொருள் துறையினால் பராமரிக்கப்படும் சின்னங்கள்	:	85
5	மைய அரசு தொல்பொருள் துறையினால் பராமரிக்கப்படும் சின்னங்கள்	:	247
6.	கோட்டைகள்	:	11
7.	அருங்காட்சியகங்கள்	:	14
8.	இந்துசமய அறநிலையத் துறையினால் பராமரிக்கப்படும் கோவில்கள்	:	38436
9.	பெரிய துறைமுகம்	:	3
10.	பெரிய மலைவாசஸ்தலங்கள்	:	3
11.	இரண்டவாது நீளமான கடற்கரை	:	மெரினா (சென்னை) 13 கி.மீ.
12.	தமிழ்நாட்டின் உயரமான மலைச் சிகரம்	:	தொட்ட பெட்டா (2636 மீட்டர்)
13.	பன்னாட்டு விமான நிலையங்கள்	:	3
14.	தமிழ்நாட்டில் உள்ள மொத்த ரயில் பாதை	:	3941 கி.மீ.
15.	மொத்த இளைஞர் விடுதிகள்	:	7
16.	தமிழ்நாட்டில் உள்ள மொத்த ஓட்டல்கள்	:	53
17.	மொத்த படகு இல்லங்கள்	:	8
18.	மொத்த பேருந்துகள்	:	20
19.	மொத்த தொலைநோக்கு இல்லங்கள்	:	3
20.	பொழுதுபோக்கு பூங்காக்கள்	:	23

சுற்றுலாவின் வகைகள்

1. பொழுதுபோக்குச் சுற்றுலா
2. ஆன்மிகச் சுற்றுலா
3. பாரம்பரியச் சுற்றுலா
4. சாகசச் சுற்றுலா
5. கப்பல் சுற்றுலா
6. ஊரகச் சுற்றுலா
7. பொறுப்புணர்வு சுற்றுலா
8. வணிகச் சுற்றுலா
9. மருத்துவச் சுற்றுலா
10. சுற்றுச் சூழல் சுற்றுலா
11. பண்பாட்டுச் சுற்றுலா
12. கல்விச் சுற்றுலா
13. விளையாட்டுச் சுற்றுலா

சுற்றுலா அலுவலகங்கள் மற்றும் சுற்றுலா தகவல் மையங்கள் தமிழ்நாட்டில் செயல்படுபவை

சுற்றுலா அலுவலகங்கள்

(1) சென்னை

(2) கன்னியாகுமரி

(3) உதகமண்டலம்

(4) கொடைக்கானல்

(5) மாமல்லபுரம்

(6) மதுரை

(7) இராமேசுவரம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2009 ஜுலை 7]

(8) தஞ்சாவூர்

(9) திருச்சிராப்பள்ளி

(10) திருநெல்வேலி

(11) சேலம்

(12) தருமபுரி

(13) சிதம்பரம்

(14) பூம்புகார்

(15) வேலூர்

(16) கோயம்புத்தூர்

(17) காரைக்குடி

(18) திருவண்ணாமலை

சுற்றுலாத் தகவல் மையங்கள்

விமான நிலையங்கள்

(1) சென்னை *(பன்னாட்டு விமான நிலையம்)*

(2) சென்னை *(உள்நாட்டு விமான நிலையம்)*

(3) மதுரை

(4) கோயம்புத்தூர்

(5) திருச்சிராப்பள்ளி

இரயில் நிலையங்கள்

(6) சென்னை *(சென்ட்ரல்)*

(7) சென்னை *(எழும்பூர்)*

(8) மதுரை

(9) கோயம்புத்தூர்

(10) இராமேசுவரம்

(11) திருச்சிராப்பள்ளி

(12) திருநெல்வேலி

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2009 ஜூலை 7

பேருந்து நிலையங்கள்

(13) புறநகர்ப் பேருந்து நிலையம், கோயம்பேடு

(14) இராமேசுவரம்

பிற இடங்கள்

(15) கூடலூர் (நீலகிரி மாவட்டம்)

(16) தரங்கம்பாடி (நாகப்பட்டினம் மாவட்டம்)

(17) ஒட்டல் தமிழ்நாடு வளாகம், தஞ்சாவூர் (தஞ்சாவூர் மாவட்டம்)

(18) பாஞ்சாலங்குறிச்சி (தூத்துக்குடி மாவட்டம்)

பிற மாநிலங்களில் செயல்படுபவை

சுற்றுலா அலுவலகங்கள்

(1) புது தில்லி

(2) மும்பை

(3) கொல்கத்தா

(4) பனாஜி (கோவா)

(5) ஜெய்ப்பூர்

(6) ஆக்ரா

சுற்றுலாத் தகவல் மையங்கள்

	இடம்	மாநிலம்
(1)	இரயில் நிலையம், பெங்களூரு	கர்நாடகா
(2)	ஐதராபாத்	ஆந்திரப்பிரதேசம்
(3)	திருவனந்தபுரம்	கேரளா
(4)	அகமதாபாத்	குஜராத்
(5)	புவனேசுவரம்	ஒரிசா
(6)	லக்னோ	உத்தரப்பிரதேசம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2009 ஜூலை 7]

அதிக பிரபலமாகாத சுற்றுலாத் தலங்கள்

வ.எண்.	அதிக பிரபலமாகாத சுற்றுலாத் தலங்கள்	மாவட்டம்
1.	பெரியபாளையம்	திருவள்ளூர்
2.	பழவேற்காடு	
3.	ஏலகிரி	வேலூர்
4.	திருக்கடையூர்	நாகப்பட்டினம்
5.	வேதாரண்யம்	
6.	தரங்கம்பாடி	
7.	திருமணஞ்சேரி	
8.	சித்தன்னவாசல்	புதுக்கோட்டை
9.	புளியஞ்சோலை	பெரம்பலூர்
10.	தாரமங்கலம்	சேலம்
11.	கொல்லிமலை	நாமக்கல்
12.	ஒகேனக்கல்	தருமபுரி
13.	பவானி கூடுதுறை	ஈரோடு
14.	வால்பாறை	கோயம்புத்தூர்
15.	மேகமலை	தேனி
16.	சிறுமலை	திண்டுக்கல்
17.	திருப்புடைமருதூர்	திருநெல்வேலி
18.	திற்பரப்பு	கன்னியாகுமரி

[2009 ஜூலை 7

புராதன நகரங்கள்

வ. எண்	புராதன நகரம்	மாவட்டம்
1.	காஞ்சிபுரம்	காஞ்சிபுரம்
2.	மாமல்லபுரம்	
3.	ஸ்ரீபெரும்புதூர்	
4.	சிதம்பரம்	கடலூர்
5.	பிச்சாவரம்	
6.	மருதூர்	
7.	குறிஞ்சிப்பாடி	
8.	மரக்காணம்	
9.	திருவந்திபுரம்	
10.	இராமேசுவரம்	இராமநாதபுரம்
11.	வாலிநோக்கம்	
12.	சேதுக்கரை	
13.	ஸ்ரீரங்கம்	திருச்சிராப்பள்ளி
14.	ஸ்ரீவில்லிபுத்தூர்	விருதுநகர்
15.	தஞ்சாவூர்	தஞ்சாவூர்
16.	கும்பகோணம்	
17.	கங்கைகொண்டசோழபுரம்	பெரம்பலூர்
18.	மதுரை	மதுரை
19.	பழனி	திண்டுக்கல்
20.	திருச்செந்தூர்	தூத்துக்குடி
21.	திருத்தணி	திருவள்ளூர்
22.	திருவள்ளூர் நகரம்	
23.	கன்னியாகுமரி	கன்னியாகுமரி
24.	பத்மநாபபுரம்	
25.	குளச்சல்	

2009 ஜூலை 7]

வ. எண்	புராதன நகரம்	மாவட்டம்
26.	திருவண்ணாமலை	திருவண்ணாமலை
27.	செஞ்சி	விழுப்புரம்
28.	பரிக்கல்	
29.	திருவக்கரை	
30.	செட்டிநாடு	சிவகங்கை
31.	காரைக்குடி	
32.	இடைக்காட்டூர்	
33.	பிள்ளையார்பட்டி	
34.	காளையார்கோவில்	
	நவதிருப்பதிகள்	தூத்துக்குடி
35.	(அ) திருக்கோளூர்	
36.	(ஆ) குரும்பூர்-மணப்பாடு	
37.	தரங்கம்பாடி	நாகப்பட்டினம்
38.	பூம்புகார்	
39.	நாகூர்	
40.	வேளாங்கண்ணி	
41.	குற்றாலம்	திருநெல்வேலி
42.	திருநெல்வேலி	
43.	திருச்செங்கோடு	நாமக்கல்
44.	பேரூர்	கோயம்புத்தூர்
45.	பவானி	ஈரோடு
46.	சித்தன்னவாசல்	புதுக்கோட்டை
47.	ஆவுடையார்கோவில்	
48.	திருமயம்	

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2009 ஜூலை 7

தமிழ்நாட்டிற்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகள் விவரம்

வ. எண்	வருடம்	உள் நாட்டினர் (இலட்சத் தில்)	வளர்ச்சி விகிதம்	வெளி நாட்டினர் (இலட்சத் தில்)	வளர்ச்சி விகிதம்	மொத்தம் (இலட்சத் தில்)	வளர்ச்சி விகிதம்
1.	2002	246.61	3.6	8.05	4.1	254.66	3.6
2.	2003	270.59	9.7	9.02	12	279.61	9.8
3.	2004	300.77	11.2	10.58	17.3	311.35	11.4
4.	2005	323.39	7.5	11.79	11.4	335.18	7.7
5.	2006	392.14	21.3	13.35	13.2	405.50	21.0
6..	2007	506.47	28.2	17.53	31.3	524.00	29.2
7.	2008	626.18	23.6	20.40	16.4	646.58	23.4


TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வரைபடம்

மற்றும்

புகைப்படங்கள்


[2009 ஜூலை 7




ஆந்திரபிரதேசம்
தமிழ்நாடு சுற்றுலா வரைபடம்
சென்னை
காஞ்சீபுரம்
கர்நாடகா
வேலூர்
திருவண்ணாமலை
தருமபுரி
விழுப்புரம்
சேலம்
ஈரோடு
கடலூர்
நீலகிரி
நாமக்கல்
பழனி
கோயம்புத்தூர்
கரூர்
திண்டுக்கல்
புதுக்கோட்டை
மதுரை
விருதுநகர்
இராமநாதபுரம்
தூத்துக்குடி
திருநெல்வேலி
கன்னியாகுமரி
இந்தியப் பெருங்கடல்

2009 ஜூலை 7]

சுற்றுலா புள்ளி விவரங்கள்







தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

சுற்றுலா புள்ளி விவரங்கள்

சுற்றுலாப் பயணிகள் வருகையின் வளர்ச்சி விகிதம்




தமிழ்நாடு சுற்றுலாவின் மூலம் ஈட்டிய அந்நியச் செலவாணி விபரம் 2005–2008




TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம்

இணையதளம் மூலம் நேரடி பதிவு மற்றும் விசாரணை





இணையதளம் நேரடி முன்பதிவு மூலம் ஈட்டிய வருவாய்




TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம்







சுற்றுலாத் திட்டங்கள்



இயற்கைப் பூங்கா - ஏலகிரி




சுற்றுலாத்தல மேம்பாடு - மதுரை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

11-137—28

[2009 ஜூலை 7

சுற்றுலாத் திட்டங்கள்



(முன்பு)



சுற்றுச்சூழல் பூங்கா - கல்லணை (தற்போது)

சுற்றுலா நிகழ்வுகள்



மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவக்கிவைக்கப்பட்ட
சுற்றுலா தொழில் பொருட்காட்சி 2009



சுற்றுலா தொழில் பொருட்காட்சி 2009

[2009 ஜூலை 7

சுற்றுலாத் திட்டங்கள்




கிராமியச் சுற்றுலா அரங்கம் - தீவுத்திடல்



கிராமியச் சுற்றுலா

2009 ஜூலை 71

சுற்றுலா நிகழ்வுகள்



இந்திய நாட்டிய விழா 2009 - மாமல்லபுரம்



இந்திய நாட்டிய விழா 2009 - மாமல்லபுரம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2009 ஜூலை 7

சுற்றுலா நிகழ்வுகள்



கிராமிய உணவுத் திருவிழா - தீவுத்திடல்



கிராமிய உணவுத் திருவிழா - தீவுத்திடல்

2009 ஜூலை 7]

சாகச சுற்றுலா



விரைவுப் படகு - மழைத்துளி படகு குழாம் - முதலியார் குப்பம்



வாழைப்பழ வடிவப் படகு
மழைத்துளி படகு குழாம் - முதலியார் குப்பம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2009 ஜுலை 7

சாகச சுற்றுலா



வான்குடை சறுக்கு விமானம் - ஏலகிரி மலை

சுற்றுலா நட்பு வாகனம்



TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்

2009 ஜூலை 7]

சொகுசு சுற்றுலா



எங்கும் ஏறி எங்கும் இறங்கும் சுற்றுப்பயணம்
சென்னை - மாமல்லபுரம்



எங்கும் ஏறி எங்கும் இறங்கும் சுற்றுப்பயணம்
சென்னை - மாமல்லபுரம்

2009 ஜூலை 7

தூய்மை முகாம்



தூய்மை மெரினா

சுற்றுலா விருது



தேசிய சுற்றுலா விருது - இரண்டாம் ஆண்டு தொடர்ச்சி

இணைப்பு III

(736 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

கலை பண்பாட்டு இயக்ககம்

(மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பில் உள்ளது.)

மொழி மனிதனை விலங்குகளிடமிருந்து வேறுபடுத்தியது, பண்பாடு கற்கால மனிதனிடமிருந்து மாறுபடுத்தியது. நாகரிகத்தின் உச்சகட்ட வளர்ச்சியினைக் கலையும் பண்பாடும் வெளிப்படுத்துகின்றன. அவை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லப்படுவதோடு கடைப் பிடிப்பதன்மூலம் பாதுகாக்கப்படுகிறது. கட்டடங்களும், கட்டமைப்புகளும் பண்பாட்டின் வன்பொருள்களாக விளங்குகின்றன. கலை, இசை போன்றவை மென்பொருள்களாகத் திகழ்கின்றன. அறிவியலும், கலையும் ஒன்றுக்கொன்று அனுசரணையாய் இருந்து முன்னேற்றமடைய உதவுகின்றன. அவை இரண்டும் தேடல், ஆர்வம் மற்றும் படைப்புத்திறன் ஆகியவற்றில் இணைகின்றன. அறிவியல் கண்டுபிடிப்புகள் கலை வடிவங்களைச் சிறந்த முறையில் பாதுகாப்பதற்கும், அதிக அளவில் பரவலாக்குவதற்கும், மேம்படுத்துவதற்கும் உதவுகின்றன.

கலை, இறுகிய மனத்தைத் தளர்த்துவதற்கும், கடுமையான பணிகளின்போது நம்மைப் புதுப்பிப்பதற்கும் உதவுகிறது. துயரத்தை நீக்கி, துன்பத்தைத் தாங்கிக்கொள்ளக்கூடிய ஆற்றலை அளிக்கிறது. இயற்கையைப்போலத் தோற்றமளிப்பதுடன், மானிடச் சமுதாயத்தின் நுட்பமான உணர்வுகளை வெளிப்படுத்துகிறது. அவை நம் ஆழ்மனத்தில் சலனவட்டங்களை ஏற்படுத்தி அமைதியாக நம்மை மேம்படுத்துகின்றன. சாதாரண வாழ்வில் வெள்ளிக் கீற்றை மெருகேற்றி உயர்ந்த இடத்திற்கு அழைத்துச் செல்ல அவை பயன்படுகின்றன.

கலை பண்பாட்டுத் துறை, கலை வடிவங்களை அனைவரும் அறியச் செய்ய அயராது பணியாற்றுகிறது. அது கலை நிகழ்வுகளை அதிகப்படுத்தி கலைஞர்களையும் ஊக்கப்படுத்துகின்றது. இத்துறை, நமது பண்பாட்டு நெறிகளை எதிர்கால சந்ததியினர் அறிந்தொழுகவும், அவர்கள் மகிழவும், நினைவில் வைத்துப் போற்றவும் அரும்பணியாற்றுகிறது.

[2009 ஜூலை 7

கலை பண்பாட்டு இயக்ககம்

கலை பண்பாட்டு இயக்ககம், ஆணையர் அவர்களின் தலைமையில் செயல்பட்டு வருகின்றது. கலை பண்பாட்டு இயக்ககம், கலை பண்பாடு தொடர்பான அனைத்து அரசு கலைக் கல்வி நிறுவனங்களின் பணிகளையும் கட்டுப்படுத்தி ஒழுங்குபடுத்துகின்றது. அரசு இசைக் கல்லூரிகள், அரசு இசைப் பள்ளிகள், அரசு கவின்கலைக் கல்லூரிகள், அரசு கட்டட மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி, சவகர் சிறுவர் மன்றம், ஓவிய நுண்கலைக் குழு ஆகியன கலை பண்பாட்டு இயக்ககத்தின் நேரடி நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் உரிய மேற்பார்வையால் செம்மையாகச் செயல்பட்டு வருகின்றன. கலை பண்பாட்டு இயக்ககம் தற்பொழுது சென்னை, அரசு இசைக் கல்லூரி வளாகத்தில் இயங்கி வருகின்றது. தமிழ் வளர்ச்சி வளாகத்தில் கலைப் பண்பாட்டு இயக்ககத்திற்கென ரூ.50.00 இலட்சம் செலவில் கட்டப்பட்டு வரும் புதிய கட்டடம் முடியும் தருவாயில் உள்ளது.

1. மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள்

கலை பண்பாட்டுப் பணிகளை மக்களிடையே கொண்டு செல்லும் வாயிலாக, 1997-1998 ஆம் ஆண்டில் நான்கு மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் காஞ்சிபுரம், தஞ்சாவூர், சேலம், மதுரை ஆகிய இடங்களிலும், 1998-1999 ஆம் ஆண்டில் இரண்டு மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களிலும் தோற்றுவிக்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றன. இக்கலை பண்பாட்டு மையங்கள் மாவட்டக் கலை மன்றங்கள், மாவட்ட அரசு இசைப் பள்ளிகள், சவகர் சிறுவர் மன்றங்கள் ஆகியவற்றின் கலைப் பணிகளை ஒருங்கிணைத்து, அரசு திட்டங்களைச் சிறப்புடன் மாவட்ட அளவில் நிறைவேற்றி வருகின்றன. மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள், உதவி இயக்குநர்கள் தலைமையில் இயங்கி வருகின்றன. மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம், தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு, தென்னகப் பண்பாட்டு மையம் ஆகியவற்றுடன் இணைந்து தமிழிசை விழா, கார்த்திகை ஒளி விழா, பொங்கல் கலைவிழா, நாட்டுப்புறக் கலைவிழா, பாவை விழா, சாரல் விழா, சீர்காழி மூவர் விழா, கட்டபொம்மன் பிறந்தநாள் விழா, அருவித் திருவிழா, குமரித் திருவிழா, சதய விழா, ஆழித்தேர் விழா, கோடை விழா, மத நல்லிணக்க விழா முதலிய கலை விழாக்களையும், கலைப் பயிற்சிகளையும் நடத்தி வருகின்றன.

2009 ஜூலை 7]

2. மாவட்டக் கலை மன்றங்கள்

கலைஞர்களை அடையாளம் கண்டு உதவவும், மறைந்து கிடக்கும் கலைகளை மக்களிடையே கொண்டு செல்லவும் மாவட்டந்தோறும் மாவட்டக் கலை மன்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மாவட்டக் கலைமன்றங்கள்மூலம் பல்வேறு கலைஞர்களுக்கு அடையாள அட்டைகளும் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வடையாள அட்டைகள், அரசிடமிருந்து உதவியைப் பெறுதல், அரசு நடத்தும் கலை நிகழ்ச்சிகளுக்கு முன்னுரிமை மற்றும் பயணச் சலுகை பெறுதல் ஆகியவற்றிற்கு பயன்படுகின்றன.

3. நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியம்

நலிந்த நாட்டுப்புறக் கலைஞர்களின் வாழ்வில் நம்பிக்கையை ஏற்படுத்துவதும் அவர்கள் திறமைகளைப் போற்றி, அவர்களைப் பாதுகாப்பதும் முக்கியம் என்பதை தமிழக அரசு உணர்ந்து, அவர்களுக்குத் தேவையானபோது நிதியுதவி அளிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட இயக்கம், தமிழக நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியம். நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு நல உதவி அளிக்கவும், நலிந்த நிலையில் உள்ளவர்கள் பொலிவு பெறும் வகையில் திட்டங்களைச் செயல்படுத்தவும், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களைத் தலைவராகக் கொண்டு இது செயல்பட்டு வருகிறது. நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நோக்குடன் ரூ.1.00 கோடி வழங்கப்பட்டுள்ளது. நல வாரியத்தின்மூலம் உறுப்பினர்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது. மாவட்டங்கள்தோறும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு சுமார் 15,000 நாட்டுப்புறக் கலைஞர்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். மாவட்டங்கள்தோறும் இலவச மருத்துவ முகாம்கள் நடத்தப்பெற்று 3,779 நாட்டுப்புறக் கலைஞர்கள் பயன்பெற்றுள்ளனர். மேலும், 86 நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு இலவச வீட்டு மனைகள் வழங்கப்பட்டுள்ளன. நாட்டுப்புறக் கலைகளில் கலை வடிவங்களைக் கண்டறிந்து, அவற்றைப் பாதுகாத்து, எதிர்வரும் தலைமுறையினருக்குக் கொண்டு செல்லும் வகையில் ரூ.20.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இக்கலைகளில் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

[2009 ஜூலை 7

4. இசைக் கல்வி பயிலகங்கள்

இந்திய இசை வரலாற்றில் தமிழிசைக்குத் தனி இடம் உண்டு. நமது மாநிலத்தின் பண்பாட்டை உயர்த்துவதில் ஒரு முக்கியமான அங்கமாக இசை இருந்து வருகின்றது. இசையில் முறையான கல்வியை வழங்குவதற்காக இசைக் கல்லூரிகளும், இசைப் பள்ளிகளும் செயல்பட்டு வருகின்றன. இசைக் கல்லூரிகளில் பயிலும் அனைத்துப் பிரிவு மாணவர்களுக்கும் கல்வி உதவித் தொகையாக திங்கள் ஒன்றுக்கு ரூ.250/- வீதம் வழங்கப்படுகின்றது. 2008-2009 ஆம் ஆண்டில், அரசு இசைக் கல்லூரிகளுக்கு ரூ.5.00 இலட்சம் செலவில் இசைக் கருவிகளும், ரூ.3.15 இலட்சம் செலவில் கணினிகளும் வாங்கப்பட்டுள்ளன.

4.1 அரசு இசைக் கல்லூரி, சென்னை

சென்னை, அரசு இசைக் கல்லூரி 1949 ஆம் ஆண்டு தொடங்கப்பெற்றது. இக்கல்லூரியில் குரலிசை, கின்னரம் (வயலின்), வீணை, முழவு (மிருதங்கம்), புல்லாங்குழல், கடம், கஞ்சிரா, முகர்சிங், நாதசுரம், தவில் ஆகிய இசைக் கருவிகளில் பயிற்சி, நாட்டுப்புறக் கலைகள், பரதநாட்டியம் ஆகியவற்றில் மூன்றாண்டு பட்டயப் படிப்பும், குரலிசையில் மேல்நிலை இசைக் கலைமணி ஈராண்டு முதுநிலை பட்டயப் படிப்பும், நட்டுவாங்கத்தில் ஈராண்டு பட்டயப் படிப்பும், இசை ஆசிரியர் பயிற்சியில் ஓராண்டு பட்டயப் படிப்பும் பயிற்றுவிக்கப்படுகின்றன. இக்கல்லூரியில் 2008-2009 ஆம் கல்வியாண்டில் 341 மாணவ மாணவியர் பயின்றனர்.

4.2 அரசு இசைக் கல்லூரி, மதுரை

மதுரை, அரசு இசைக் கல்லூரி 1979 இல் தொடங்கப்பெற்றது. இக்கல்லூரியில் குரலிசை, வீணை, கின்னரம் (வயலின்), முழவு (மிருதங்கம்), புல்லாங்குழல், நாதசுரம், பரதநாட்டியம், நாட்டுப்புறக் கலைகள் ஆகியவற்றில் மூன்றாண்டு பட்டயப் படிப்பும், ஓராண்டு இசை ஆசிரியர் பயிற்சியில் பட்டயப் படிப்பும் பயிற்றுவிக்கப்படுகின்றன. இக்கல்லூரியில் 2008-2009 ஆம் கல்வியாண்டில் 140 மாணவ மாணவியர் பயின்றனர்.

4.3 அரசு இசைக் கல்லூரி, கோயம்புத்தூர்

கோயம்புத்தூர் அரசு இசைக் கல்லூரி 1993 இல் தொடங்கப்பெற்றது. இக்கல்லூரியில் குரலிசை, கின்னரம் (வயலின்),

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2009 ஜூலை 7]

வீணை, பரதநாட்டியம் ஆகியவற்றில் மூன்றாண்டு பட்டயப் படிப்பும், இசை ஆசிரியர் பயிற்சியில் ஓராண்டு பட்டயப் படிப்பும் பயிற்றுவிக்கப்படுகின்றன. இக்கல்லூரியில் 2008-2009 ஆம் கல்வியாண்டில் 85 மாணவ மாணவியர் பயின்றனர்.

4.4 அரசு இசைக் கல்லூரி, திருவையாறு

திருவையாறு, அரசு இசைக் கல்லூரி 1997 இல் தொடங்கப்பெற்றது. இக்கல்லூரியில் குரலிசை, கின்னரம் (வயலின்), வீணை, முழவு (மிருதங்கம்), பரதநாட்டியம், நாதசுரம், தவில் ஆகியவற்றில் மூன்றாண்டு பட்டயப் படிப்பும், இளங்கலை இசையில் மூன்றாண்டு குரலிசை பட்டப் படிப்பும் பயிற்றுவிக்கப்படுகின்றன. இக்கல்லூரியில் 2008-2009 ஆம் கல்வியாண்டில் 132 மாணவ மாணவியர் பயின்றனர். இக்கல்லூரிக்கு ரூ.56.50 இலட்சம் செலவில் புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

4.5 மாலை நேர இசைக் கல்லூரி மையங்கள்

சென்னையில் இரண்டு மாலை நேர இசைக் கல்லூரி மையங்களும், மதுரையில் ஒரு மாலை நேர இசைக் கல்லூரி மையமும் நடத்தப்பட்டு வருகின்றன. சென்னை தியாகராய நகர் மையத்தில் குரலிசை, வீணை, கின்னரம் (வயலின்) ஆகியவற்றிலும், இசைக் கல்லூரி வளாக மையத்தில் குரலிசை, வீணை, கின்னரம் (வயலின்), முழவு (மிருதங்கம்) ஆகியவற்றிலும், மதுரை மையத்தில் குரலிசை, வீணை, கின்னரம் (வயலின்), முழவு (மிருதங்கம்), பரதநாட்டியம் ஆகியவற்றிலும் ஈராண்டு சான்றிதழ் படிப்பு பயிற்றுவிக்கப்படுகின்றன. 2008-2009 ஆம் கல்வியாண்டில், சென்னை மாலை நேர இசைக் கல்லூரி மையத்தில் 39 மாணவ மாணவியர்களும், மதுரை மாலை நேர இசைக் கல்லூரி மையத்தில் 56 மாணவ மாணவியர்களும் பயன்பெற்றனர்.

4.6 மாவட்ட அரசு இசைப் பள்ளிகள்

இளம் பருவத்திலேயே இசை ஆர்வம் மிக்கவர்களை ஊக்குவித்து அவர்களது இசை ஆர்வத்தினைத் தூண்டும் வகையிலும், அவர்களைப் புகழ்மிக்க இசைக்கலைஞர்களாக உருவாக்கும் நோக்கத்துடனும், மாவட்ட அரசு இசைப் பள்ளிகள் 1997 ஆம் ஆண்டு திருவாரூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, சேலம், புதுக்கோட்டை ஆகிய ஐந்து மாவட்டங்களிலும், 1998 ஆம் ஆண்டு விழுப்புரம், கடலூர், பெரம்பலூர், தூத்துக்குடி, கரூர் ஆகிய 5 மாவட்டங்களிலும்,

[2009 ஜூலை 7

1999 ஆம் ஆண்டு காஞ்சிபுரம், திருவண்ணாமலை, சீர்காழி, கிருட்டிணகிரி, சிவகங்கை ஆகிய 5 மாவட்டங்களிலும், 2000 ஆம் ஆண்டு ஈரோடு, இராமநாதபுரம் ஆகிய 2 மாவட்டங்களிலும் ஆக மொத்தம் இதுகாறும் 17 மாவட்ட அரசு இசைப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. மாவட்ட அரசு இசைப் பள்ளிகளில் குரலிசை, பரதநாட்டியம், தேவாரம், நாதசுரம், தவில் ஆகிய பாடப் பிரிவுகளில் மூன்றாண்டுச் சான்றிதழ் படிப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. 2007-2008 ஆம் ஆண்டு முதல் கின்னரம் (வயலின்), முழவு (மிருதங்கம்) ஆகிய பாடப் பிரிவுகள் கூடுதலாகத் தொடங்கப்பட்டுள்ளன. 2008-2009 ஆம் கல்வியாண்டில் மாவட்ட அரசு இசைப் பள்ளிகளில் 979 மாணவ மாணவியர் பயின்றனர்.

4.7 அரசு கவின் கலைக் கல்லூரிகள்

4.7.1 அரசு கவின் கலைக் கல்லூரி, சென்னை

இக்கல்லூரி 1850 இல் தொடங்கப்பெற்றது. தலைசிறந்த ஓவியர்களை உருவாக்கிய பெருமை பெற்றது. பின்வரும் பிரிவுகளில் நான்காண்டு கால இளங்கலைப் பட்டப் படிப்பும், இரண்டாண்டு கால முதுகலைப் பட்டப் படிப்பும் பயிற்றுவிக்கப்படுகின்றன.

இளங்கலைப் பட்டப் படிப்பு:

(1) சுடுமண் (ஆலையக) வடிவமைப்பு

(2) துகிலியல் (ஆலையக) வடிவமைப்பு

(3) காட்சி வழித் தொடர்பு வடிவமைப்பு

(4) வண்ணக் கலை

(5) சிற்பக் கலை

(6) பதிப்போவியம்

முதுகலைப் பட்டப் படிப்பு:

(1) வண்ணக் கலை

(2) காட்சி வழித் தொடர்பு வடிவமைப்பு

(3) சுடுமண் (ஆலையக) வடிவமைப்பு

(4) துகிலியல் (ஆலையக) வடிவமைப்பு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

2009 ஜூலை 7]

இக்கல்லூரியின் பாடத்திட்டங்கள் அனைத்தும் சென்னைப் பல்கலைக்கழகத்தின் இசைவு பெற்றவையாகும். இக்கல்லூரியில் 2008-2009 ஆம் கல்வியாண்டில் 505 மாணவ மாணவியர் பயின்றனர். இக்கல்லூரியில் உள்ள தொன்மை மிக்க கட்டடங்களைப் புதுப்பிக்க ரூ.1.88 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது. புதுப்பிக்கும் பணிகள் முடிவுற்றபின் சென்னையின் சுற்றுலாத் தலங்களில் ஒன்றாக இது திகழும். ரூ.4.00 இலட்சம் செலவில் புதுப்பாணி ஓவியக் கலைஞர்களுக்கான முகாம் நடத்தப்பட்டு 500-க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயன்பெற்றுள்ளனர்.

4.7.2 அரசு கவின் கலைக் கல்லூரி, கும்பகோணம்

இக்கல்லூரி 1887 ஆம் ஆண்டு தொடங்கப்பெற்றது. பின்வரும் பிரிவுகளில் நான்காண்டுகால இளங்கலைப் பட்டப் படிப்பும், இரண்டாண்டுகால முதுகலைப் பட்டப் படிப்பும் பயிற்றுவிக்கப்படுகின்றன:

இளங்கலைப் பட்டப் படிப்பு:

(1) வண்ணக் கலை

(2) காட்சி வழித் தொடர்பு வடிவமைப்பு

(3) சிற்பக் கலை

முதுகலைப் பட்டப் படிப்பு:

(1) வண்ணக் கலை

(2) சிற்பக் கலை

இக்கல்லூரியின் பாடத்திட்டங்கள் அனைத்தும் திருச்சிராப்பள்ளி, பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் இசைவு பெற்றவையாகும். இக்கல்லூரியில் 2008-2009 ஆம் கல்வியாண்டில் 263 மாணவ மாணவியர் பயின்றனர்.

4.7.3 அரசு கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி, மாமல்லபுரம்

மாமல்லபுரம் சிற்பச் சரித்திரத்தில் முக்கிய இடத்தை வகிக்கிறது. இந்திய சிற்பக் கட்டடக் கலையின் அருங்காட்சியமாக அது திகழ்கிறது. திறந்தவெளி சிற்பம், குடைவரைக் கோயில்கள், ஒற்றைக் கற்சிற்பம் ஆகிய மூன்றும் ஒரே இடத்தில் அமைந்திருப்பது அதன்

சிறப்பு. இத்தகு வரலாற்றுப் புகழுடைய மாமல்லபுரத்தில் அரசு கட்டடக் கலை சிற்பக் கலைக் கல்லூரி 1957 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகின்றது. இக்கல்லூரியில் 2000-2001 ஆம் ஆண்டு முதல் நான்காண்டு பட்டப் படிப்பு தொடங்கப் பெற்று பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றது. மரபு கட்டடக் கலைப் பிரிவில் தொழில் நுட்பவியல் இளங்கலைப் பட்டமும், மரபு சிற்பக் கலை, மரபு ஓவியக் கலை-வண்ணம் ஆகிய பிரிவுகளில் கவின் கலை இளங்கலைப் பட்டமும் வழங்கப்படுகின்றன. இக்கல்லூரியில் 2008-2009 ஆம் கல்வியாண்டில் 111 மாணவ மாணவியர் பயின்றனர். இக்கல்லூரியின்மூலம் நடத்தப்படும் அருங்காட்சியகத்திற்கு தமிழ் பண்பாடு தொடர்பான புதிய சிற்பங்களை உருவாக்கிட ரூ.87.00 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு பணிகள் நிறைவடைந்துள்ளன.

4.8 கலைக் காவிரி நுண்கலைக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள கலைக் காவிரி நுண்கலைக் கல்லூரி அரசு நிதியுதவி பெறும் கல்லூரியாகும். இக்கல்லூரியின் நிருவாகம் 2000-2001 ஆம் கல்வி ஆண்டு முதல் கலை பண்பாட்டு இயக்ககத்தின் கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இக்கல்லூரிக்கான நிதியுதவி கல்லூரிக் கல்வி இயக்ககம்மூலம் வழங்கப்படுகிறது. இக்கல்லூரியில் ஒருங்கிணைக்கப்பட்ட ஐந்தாண்டு இள நுண்கலைப் பட்டப் படிப்புகள், மூன்றாண்டு பட்டப் படிப்புகள், முதுகலை பட்டப் படிப்புகள் பின்வரும் பாடப்பிரிவுகளில் பயிற்றுவிக்கப்படுகின்றன:

(1) பரதநாட்டியம்

(2) குரலிசை

(3) கின்னரம் (வயலின்)

(4) வீணை

(5) முழவு (மிருதங்கம்)

இக்கல்லூரியில் 2008-2009 ஆம் கல்வியாண்டில் 186 மாணவ மாணவியர் பயின்றனர்.

2009 ஜூலை 7]

5. தென்னகப் பண்பாட்டு மையம், தஞ்சாவூர்

மேதகு தமிழக ஆளுநரைத் தலைவராகக் கொண்டு தஞ்சாவூர் தென்னகப் பண்பாட்டு மையம் செயல்பட்டு வருகின்றது. இம்மையம் தென் மாநிலங்களுக்காக மைய அரசால் ஏற்படுத்தப்பட்ட ஒரு அமைப்பாகும். இம்மையத்தின் மூல நிதிக்கு, தமிழ்நாட்டின் பங்காக இரண்டு கோடி ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், தென்னகப் பண்பாட்டு மையக் கட்டடம் கட்டப்பெறுவதற்கு ரூ.2.00 கோடி நிதியுதவியும், மையம் ஏற்படுத்த ரூ.1.54 கோடி மதிப்புள்ள 25 ஏக்கர் நிலமும் தமிழக அரசு ஏற்கெனவே அளித்துள்ளது. 2008-2009 ஆம் ஆண்டில் கலை பண்பாட்டுத் துறைக்கு ஒதுக்கப்பட்ட ரூ.16.00 இலட்சம் தொகையில், மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள்மூலம் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

6. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

இந்திய அரசின் அமைப்பான சங்கீத நாடக அகாதெமியின் நோக்கங்களை மாநில அளவில் செயற்படுத்துவதற்காகவும், தொன்மை வாய்ந்த தமிழகக் கலைகளைப் போற்றிப் பாதுகாக்கவும் தமிழக அரசால் 1955 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. 1973 ஆம் ஆண்டில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் என அரசால் பெயர் மாற்றம் செய்யப்பெற்றது. மாநில அரசு வழங்கும் நல்கைத் தொகை மூலம் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.

6.1 கலைப் பணித் திட்டங்கள்

மாநிலங்களிடையே கலைக் குழுக்களைப் பரிமாற்றம் செய்தல், நலிந்த நிலையில் வாழும் புகழ்பெற்ற கலைஞர்களுக்கு மாதந்தோறும் நிதியுதவி வழங்குதல், புகழ்பெற்ற மறைந்த கலைஞர்களின் குடும்பங்களுக்கு குடும்பப் பேணுகை நிதி உதவி வழங்குதல், தமிழ்நாட்டில் பல்வேறு கலை நிறுவனங்களின்மூலம் கலை நிகழ்ச்சிகளை நடத்த வாய்ப்பளித்து அதன்மூலம் திறமைமிக்க புத்திளங்கலைஞர்களுக்கு ஆதரவும் ஊக்கமும் அளித்தல், கலைத் துறையின் மேம்பட்ட வளர்ச்சிக்கு சேவை செய்த புகழ்மிக்க கலைஞர்களுக்கு கலைமாமணி என்ற மாநில விருது வழங்கி சிறப்பு செய்தல், தமிழ்ப் பண்பாட்டினை சித்தரித்து தயாரிக்கும் சிறந்த தமிழ் நாடகங்களை உருவாக்கும் தொழில்முறை நாடகக் குழுக்களுக்கு நாடகத் தயாரிப்பு நல்கை வழங்குதல், அரும்பெரும் கலை நூல்களை வெளியிட நூல் வெளியீட்டு நல்கை வழங்குதல், கலை மேதைகளின் நினைவு விழாக்களை நடத்தும் தன்னார்வக் கலை நிறுவனங்களுக்கு

நல்கை வழங்குதல், கலைஞர்கள் பயன்பெறும் வண்ணம் பல்வேறு கலைவிழாக்கள் நடத்துதல், மறைந்து வரும் தொன்மைச் சிறப்புமிக்க கலைத்தன்மைகளை வருங்கால மரபினரும் கண்டு உணரும் வண்ணம் அவற்றை ஆவணமாக்குதல், புகழ்பெற்ற முதுபெரும் இசைக் கலைஞர்களின் இசை நிகழ்ச்சிகளைப் பதிவு செய்து பாதுகாத்தல், நம் மரபுவழி ஊரகக் கலைகள், கவின்மிகு நுண்கலைகளைப் பற்றிய ஆய்வுகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்தல் ஆகிய முதன்மைப் பணிகளை இயல் இசை நாடக மன்றம் செய்து வருகின்றது.

6.2 கலைமாமணி விருது வழங்குதல்

கலைத் துறையில் செயற்கரிய சேவை செய்து புகழ்பெற்ற கலைஞர்களைப் பாராட்டிச் சிறப்பு செய்யும் பொருட்டு, அவர்களுக்குத் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், கலைமாமணி விருது வழங்குகிறது. இதுவரை, 1,450 கலைஞர்களுக்குக் கலைமாமணி விருது வழங்கப்பட்டுள்ளது. கலைமாமணி விருது வழங்கும் விழாவில், இதுகாறும், 324 மறைந்த புகழ்பெற்ற கலைமேதைகளின் திருவுருவப் படங்கள் திறந்துவைக்கப்பட்டுள்ளன. கலைமாமணி விருது வழங்கும் விழாக்களில் வறிய நிலையில் வாழும் மூத்த கலைமாமணி விருதாளர்களுக்குப் பொற்கிழி (பணமுடிப்பு) வழங்கப்பட்டு வருகின்றது. இவ்வகையில் ரூ.1,000/- வீதம் 147 கலைஞர்களுக்கும், ரூ.5,000/- வீதம் 17 கலைஞர்களுக்கும், ரூ.10,000/- வீதம் 13 கலைஞர்களுக்கும், ரூ.15,000/- வீதம் 22 கலைஞர்களுக்கும், ஆக மொத்தம் 199 கலைஞர்களுக்குப் பொற்கிழி வழங்கப்பட்டுள்ளது. கலை வளர்ச்சிக்குப் பாடுபட்டு வரும் தன்னார்வக் கலை நிறுவனங்களையும், செம்மையுறச் செயல்பட்டு வரும் நாடகக் குழுக்களையும் பாராட்டும் வகையில், இதுவரை 27 கலை நிறுவனங்களுக்கும், 18 நாடகக் குழுக்களுக்கும் கேடயங்களும், சுழற்கேடயங்களும் வழங்கப் பெற்றுள்ளன. 2007 ஆம் ஆண்டிற்கான கலைமாமணி விருதிற்கு 71 கலைஞர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

6.3 நலிந்த நிலையில் வாழும் கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்குதல்

கலையையே வாழ்வாகக் கொண்டு அகவை முதிர்ந்த நிலையில் நலிந்து வாழும் சிறந்த கலைஞர்களுக்குத் திங்கள்தோறும் ரூ.500/- நிதியுதவியாக வழங்கப்பட்டு வந்தது. 2006 ஆம் நிதியாண்டிலிருந்து இந்நிதியுதவித் தொகை ரூ.1,000/- ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 6,891 நலிந்த கலைஞர்கள் நிதியுதவி பெற்று வருகின்றனர்.

2009 ஜுலை 7]

6.4 மறைந்த புகழ்பெற்ற கலைஞர்களின் குடும்பத்தாருக்குக் குடும்பப் பேணுகை நிதியுதவி வழங்குதல்

கலைஞர்களின் மறைவினால் தவிக்கும் குடும்பங்களுக்குக் குடும்பப் பேணுகை நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் ரூ.2,000/- வீதம் 88 குடும்பங்களுக்கும், ரூ.3,000/- வீதம் 77 குடும்பங்களுக்கும், ரூ.5,000/- வீதம் 81 குடும்பங்களுக்கும், ரூ.6,000/- வீதம் 93 குடும்பங்களுக்கும் ஆக மொத்தம் 339 மறைந்த கலைஞர்களின் குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

6.5 மாநிலங்களுக்கிடையே கலைக் குழுக்கள் பரிமாற்றம்

இந்தியத் திருநாட்டின் தேசிய ஒருமைப்பாட்டு ஒற்றுமை உணர்வை வலுவாக்கவும் மாநிலங்களுக்கிடையே கலை-பண்பாட்டு மரபினைப் பற்றிய தகவல்களைப் பரிமாறிக் கொள்ளவும், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மாநிலங்களுக்கிடையே கலைக் குழுக்கள் பரிமாற்றத் திட்டத்தைச் செயற்படுத்தி வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை தமிழகத்திற்கு 81 வெளி மாநிலக் கலைக் குழுக்கள் வருகை புரிந்துள்ளன. 84 தமிழகக் கலைக் குழுக்கள் வெளி மாநிலங்களுக்குச் சென்று கலை நிகழ்ச்சிகள் நடத்தி வந்துள்ளன. இவ்வாண்டு இமாச்சலப் பிரதேச மாநிலத்திற்கு கிராமியக் கலைக் குழு அனுப்பப்பட்டு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

6.6 திறம்படைத்த இளம் கலைஞர்களை ஊக்குவித்தல்

குரலிசை, கருவியிசை, பரதநாட்டியம் ஆகிய கலைத் துறைகளில் பயிற்சி பெற்ற புத்திளங்கலைஞர்களை அறிமுகம் செய்யும் வண்ணம் தமிழகத்தில் செம்மையுடன் இயங்கி வரும் தன்னார்வக் கலை நிறுவனங்களுக்கு மன்றம் நிதியுதவி செய்து அதன் வாயிலாகக் கலை நிகழ்ச்சிகள் நடத்திட ஊக்குவித்து வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 1,792 இளங்கலைஞர்கள் பயன் பெற்றுள்ளனர்.

6.7 நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு/கலைக் குழுக்களுக்கு இசைக் கருவிகள், ஆடை அணிகலன்கள் வாங்க நிதியுதவி வழங்குதல்

நாட்டுப்புறக் கலைஞர்களுக்கும், கலைக் குழுக்களுக்கும், இசைக் கருவிகள், ஆடை அணிகலன்கள் வாங்க மன்றம் நிதியுதவி வழங்கி வருகின்றது. இத்திட்டத்தின்கீழ், ஒவ்வொரு தனிப்பட்ட கலைஞருக்கும் ரூ.750/- வீதம் தொகையும் ஒவ்வொரு கலைக் குழுவிற்கும்

[2009 ஜூலை 7

ரூ.2,500/- தொகையும் நல்கையாக வழங்கப்படுகிறது. இதுவரை 1,425 ஊரகக் கலைஞர்களும்/கலைக் குழுக்களும் பயன் அடைந்துள்ளனர். இவ்வகையில், பதிவு செய்யப்பெற்ற நாட்டுப்புறக் கலைக் குழுக்களுக்கு இவ்வாண்டு ரூ.3.00 இலட்சம் மதிப்பில் இசைக் கருவிகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

6.8 புதிய நாடகங்கள் தயாரிக்க நிதியுதவி வழங்குதல்

தமிழ் கலை பண்பாட்டைப் பின்னணியாகக் கொண்டு, தமிழில் சிறந்த நாடகங்கள் தயாரித்திட நாடகக் குழுக்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ், இதுவரை 42 நாடகங்கள் மன்ற நல்கையுடன் உருவாக்கப்பட்டு மேடையேற்றம் செய்யப்பட்டுள்ளன.

6.9 புதிய நாட்டிய நாடகங்கள் தயாரிக்க நிதியுதவி வழங்குதல்

தமிழ் இலக்கியம், பண்பாடு ஆகியவற்றைப் பின்னணியாகக் கொண்டு தமிழில் சிறந்த நாட்டிய நாடகங்கள் தயாரித்து மேடையேற்றம் செய்யும் நாட்டிய நாடகக் குழுக்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது. இதுவரை 17 நாட்டிய நாடகங்கள் மன்ற நல்கையில் தயாரிக்கப்பட்டு மேடையேற்றம் செய்யப்பட்டுள்ளன.

6.10 அரிய கலை நூல்களுக்கு நல்கை வழங்குதல்

கலை நூல்களைப் பதிப்பித்து வெளியிட நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ், இதுவரை 104 நூல்கள் மன்ற நல்கையுடன் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

6.11 விருந்தினர் மாளிகை கட்டுதல்

வெளி மாவட்டங்களிலிருந்து சென்னைக்குக் கலை நிகழ்ச்சிகள் நடத்த வரும் கலைஞர்கள் தங்குவதற்கு இயல் இசை நாடக மன்ற வளாகத்தில் 363.90 சதுர மீட்டர் பரப்பளவில் விருந்தினர் விடுதி கட்டப்பட்டு வருகின்றது.

6.12 மன்ற கலை விழாக்கள்

மறைந்து வரும் நம் மரபுவழிச் சிறப்புமிக்க ஊரகக் கலைகளின் சிறப்பினைத் தற்போதைய தலைமுறையினர் கண்டுணரும் வண்ணமும், தொழில் வாய்ப்பின்றி வாழ்ந்து வரும் ஊரகக் கலைஞர்களுக்கு நிகழ்ச்சிகள் நட்த்திட வாய்ப்புகள் நல்கும் வண்ணமும், இயல் இசை நாடக மன்றம் பல்வேறு கலை

விழாக்களையும், ஊரகக் கலை விழாக்களையும் நடத்தி வருகின்றது. கலைமேதைகளின் நினைவு விழா, முப்பெரும் கலைவிழா, நாடக விழா, நாட்டிய விழா ஆகிய விழாக்களை நடத்தி வருவதுடன், சுற்றுலாத் தலங்கள், திருக்கோயில்கள் மற்றும் குற்றாலச் சாரல் விழா ஆகியவற்றில் கலை நிகழ்ச்சிகளையும் வழங்கி வருகின்றது.

(அ) சென்னையில், 2008, மார்ச் திங்கள் 29 முதல் ஏப்ரல் திங்கள் 6 ஆம் தேதி வரை கருத்தரங்கம், தெருக்கூத்து விழா, நாதசுரத் திருவிழா, தமிழிசை, தேவார திருவருட்பா இசை விழா, தவில்-நாதசுரக் கலைவிழா, பாரதி விழா, ஜீவா நூற்றாண்டு விழா, கவியரங்கம் மற்றும் விவாத மேடை என ஒன்பது நாட்கள் ஒப்பற்ற கலை இலக்கியத் திருவிழா சிறப்பாக நடத்தப்பட்டது.

(ஆ) தமிழில் சிறந்த நாட்டிய-நாடகங்கள் தயாரித்து மேடையேற்றம் செய்யும் மன்றத் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட நான்கு நாட்டிய-நாடகங்களை அரங்கேற்றம் செய்த விழா சென்னையில், 2008 ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள் 20 முதல் 23 ஆம் தேதி வரை மிகச் சிறப்பாக நடத்தப்பட்டது.

(இ) பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு விழா சென்னையில், 2008, டிசம்பர் திங்கள் 4 முதல் 6 ஆம் தேதி வரை கவியரங்கம், கருத்தரங்கம், கலை விழா, நூல் வெளியீடு என மூன்று நாட்கள் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

6.13 மன்றத்தின் சார்பாக வழங்கப்பட்ட கலை நிகழ்ச்சிகள்

(அ) சுற்றுலாத் தலங்களில் கலை நிகழ்ச்சிகள் நடத்தும் திட்டத்தில், திருநெல்வேலி மாவட்டம், குற்றாலத்தில் நடைபெற்ற சாரல் திருவிழாவில், 2008, ஆகஸ்ட் திங்கள் 10 முதல் 12 ஆம் தேதி வரை மன்றத்தின் சார்பில் கலை நிகழ்ச்சிகள் நிகழ்த்தப்பட்டன.

(ஆ) திருக்கோயில்களில் கலை நிகழ்ச்சிகள் வழங்கும் திட்டத்தில், சிவகங்கை மாவட்டம், கொத்தமங்கலம், சூதவனேஸ்வரர் திருக்கோயில் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு, 2008, ஆகஸ்ட் திங்கள், 26 மற்றும் 27 தேதிகளில், மன்றத்தின் சார்பில் இரண்டு இசை நிகழ்ச்சிகள் நிகழ்த்தப்பட்டன.

(இ) இமாச்சலப் பிரதேசத்தில் உள்ள குலு மனாலிக்கு 15 கலைஞர்கள் கொண்ட குழு ஒன்று 6-10-2008 முதல் 15-10-2008 வரை அனுப்பப்பட்டு, பல்வேறு பகுதிகளில் ஐந்து கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

[2009 ஜூலை 7

6.14 பிற மாநிலங்களில் தமிழகக் கலை விழாக்கள் நடத்துதல்

(அ) உத்திரப்பிரதேச மாநிலம், நொய்டாவில் உள்ள அவ்வைத் தமிழ்ச் சங்கத்துடன் இணைந்து, 2009, சனவரித் திங்கள், 24 முதல் 26 ஆம் தேதி வரை தமிழக நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகள் நிகழ்த்தப்பட்டன.

(ஆ) ஒரிசா மாநிலம், கந்தஹாரில் நடைபெற்ற தேசிய காரவேலா விழாவில், 2009, பிப்ரவரித் திங்கள், 6 முதல் 8 ஆம் தேதி வரை தமிழக கிராமியக் கலை நிகழ்ச்சிகள் நிகழ்த்தப்பட்டுள்ளன.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், தன்னார்வக் கலை நிறுவனங்களுக்கும், அதன் பல்வேறு கலைப் பணிகளுக்காக நல்கை வழங்கி வருகின்றது.

7. தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு

தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு அரசால் 1975 இல் தொடங்கப்பட்டது. நுண்கலைகளான ஓவியம், சிற்பம், பதிப்போவியம் ஆகிய கலைகளை வளர்க்கவும் பாதுகாக்கவும், பரப்பவும், இக்கலைகளில் ஈடுபட்டுள்ள கலைஞர்களை ஊக்குவிக்கவும் ஓவிய நுண்கலைக் குழு செயல்படுகிறது. மாநில அரசு வழங்கும் நல்கைத் தொகைமூலம் பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறது.

7.1 "கலைச் செம்மல்" விருது வழங்கும் திட்டம்

'கலைச் செம்மல்' விருதுகள் மரபு வழி, நவீன கலைப் பிரிவுகளைச் சார்ந்த புகழ் பெற்ற ஓவிய, சிற்பக் கலை வல்லுநர்கள் அவரவர்கள் துறைகளில் புரிந்து வரும் அரிய சாதனைகளைப் பாராட்டும் வகையில் வழங்கப்படுகின்றன. ஒவ்வொருவருக்கும் பாராட்டிதழுடன் ரூ.20,000/- வழங்கப்படுகிறது. மரபு வழிப் பிரிவில் ஐந்து ஓவிய, சிற்பக் கலை வல்லுநர்களுக்கும், நவீனபாணிப் பிரிவில் 36 ஓவிய, சிற்பக் கலை வல்லுநர்களுக்கும் இவ்விருதுகள் இதுவரை வழங்கப்பட்டுள்ளன. 2002-2003 ஆம் ஆண்டு முதல் 2007-2008 ஆம் ஆண்டு வரை 6 ஆண்டுகளுக்கு 12 கலைஞர்களுக்கு மரபு வழி பிரிவு மற்றும் நவீனபாணிப் பிரிவில் 13-2-2009 அன்று விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. இதுவரை மரபு வழிப் பிரிவில் 11 ஓவிய, சிற்பக் கலை வல்லுநர்களுக்கும், நவீனபாணிப் பிரிவில் 42 ஓவிய, சிற்பக் கலை வல்லுநர்களுக்கும் இவ்விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

2009 ஜூலை 7]

7.2 மாநில அளவில் மரபு வழிக் கலைக் காட்சி விருது வழங்கும் திட்டம்

மாநில அளவில் மரபு வழிக் கலைக் காட்சிகள் ஓவிய நுண்கலைக் குழுவால் நடத்தப்பட்டு மரபு வழி ஓவிய சிற்பக் கலைஞர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். சிறந்த படைப்புகளுக்கான கலைக்காட்சி விருதுகளாக 30 அகவைக்கு மேற்பட்ட "மூத்த கலைஞர்கள்" பங்கு கொள்ளும் பிரிவில் ஐந்து சிறந்த ஓவிய, சிற்பக் கலைஞர்களுக்கு ரூ.15,000/- வீதமும் 30 அகவைக்குட்பட்ட "இளங் கலைஞர்கள்" பங்கு கொள்ளும் பிரிவில் பத்து சிறந்த ஓவிய, சிற்பக் கலைஞர்களுக்கு ரூ.5,000/- வீதமும் வழங்கப்படுகிறது. 73 ஓவிய, சிற்பக் கலைஞர்களுக்கு, மரபு வழிக் கலைக் காட்சி விருதுகள் இதுவரை வழங்கப்பட்டுள்ளன.

7.3 மாநில அளவில் நவீனபாணிக் கலைக் காட்சி விருது வழங்கும் திட்டம்

மாநில அளவில் நவீனபாணிக் கலைக் காட்சிகள் ஓவிய நுண்கலைக் குழுவால் நடத்தப்பட்டு, ஓவிய சிற்பக் கலைஞர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். சிறந்த படைப்புகளுக்கான கலைக்காட்சி விருதுகளாக 30 அகவைக்கு மேற்பட்ட "மூத்த கலைஞர்கள்" பங்கு கொள்ளும் பிரிவில் ஐந்து சிறந்த ஓவிய, சிற்பக் கலைஞர்களுக்கு ரூ.15,000/- வீதமும் 30 அகவைக்குட்பட்ட "இளங் கலைஞர்கள்" பங்கு கொள்ளும் பிரிவில் பத்து சிறந்த ஓவிய, சிற்பக் கலைஞர்களுக்கு ரூ.5,000/- வீதமும் வழங்கப்படுகிறது. இதுவரை 249 ஓவிய, சிற்பக் கலைஞர்களுக்கு நவீனபாணிக் கலைக் காட்சி விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

7.4 தனியார் கலைக் காட்சி அல்லது கூட்டுக் கலைக் காட்சி நடத்த நிதி உதவி வழங்கும் திட்டம்

தமிழ்நாட்டு ஓவிய, சிற்பக் கலைஞர்கள் அவரவர்களது கலைப் படைப்புகள் அடங்கிய கலைக் காட்சிகளைத் தனியாகவோ, குழுவாகவோ இணைந்து நடத்திட கலைக் காட்சிகளுக்குக் காட்சி ஒன்றுக்கு ரூ.5,000/- வீதம் நிதி உதவி வழங்கப்படுகிறது. 143 கலைஞர்கள் தனியர் கலைக் காட்சி நடத்துவதற்காகவும், பத்து குழுக்கள் கூட்டுக் கலைக் காட்சி நடத்துவதற்காகவும் இதுவரை நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

7.5 நுண்கலை பயிலும் மாணவ மாணவியர்களுக்குப் படிப்புதவித் தொகை வழங்கும் திட்டம்

சென்னை, கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரிகளில் நுண்கலை பயிலும் மாணவ மாணவிகளை ஊக்குவிக்கும் வகையில் முதுகலை இறுதியாண்டு பயிலும் சிறந்த மாணவ மாணவிகளுக்கு ரூ.5,000/- வீதமும், இளங்கலை இறுதியாண்டு பயிலும் சிறந்த மாணவ மாணவிகளுக்கு ரூ.3,000/- வீதமும் படிப்புதவித் தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரை இளங்கலைப் பிரிவில் 498 பேருக்கும், முதுகலைப் பிரிவில் 62 பேருக்கும் படிப்புதவித் தொகைகள் வழங்கப்பட்டுள்ளன.

7.6 மாவட்டங்களில் கலைக் கூடங்கள்

தமிழ்நாட்டு ஓவிய சிற்பக் கலை வல்லுநர்களின் படைப்புகளைக் கொண்ட ஓவிய நுண்கலைக் குழுவின் கலைக் கூடங்கள் ஒன்று உதகமண்டலத்திலும் மற்றொன்று மதுரையிலும் இயங்கி வருகின்றன. கன்னியாகுமரியில் அமைக்கப்பட இருந்த மூன்றாவது கலைக்கூடம் சென்னை, அரசு கவின்கலைக் கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளது. சென்னை, அரசு கவின்கலைக் கல்லூரியில் கலைக்கூடம் அமைப்பதற்காக ரூ.4.50 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

8. தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம், சென்னை

சிறுவர் சிறுமிகளுக்குப் பொதுக் கல்வியுடன் கலைக் கல்வி அளிப்பதை அடிப்படைப் பணியாகக் கொண்டு, 1979 இல் தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம் தொடங்கப்பெற்றது. ஐந்து அகவை முதல் பதினாறு அகவைக்கு உட்பட்ட சிறார்களுக்குக் கலைப் பயிற்சிகள் அளிப்பதும், கலைத் திறமைகளை வெளிக்கொணர்வதும், கலைகளை வெளிப்படுத்துவதும் இதன் நோக்கமாகும்.

தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் மொத்தம் 36 இடங்களில் சவகர் சிறுவர் மன்றங்கள் இயங்கி வருகின்றன. 24 இடங்களில் மாவட்ட சவகர் சிறுவர் மன்றங்கள் எனவும் பத்து இடங்களில் சிறுவர் மன்ற விரிவாக்க மையங்கள் எனவும் இரண்டு இடங்களில் சவகர் சிறுவர் மன்ற ஊரக மையங்கள் எனவும் இயங்கி வருகின்றன. அண்மையில் தொடங்கப்பெற்ற அரியலூர் மாவட்டத்தில் மையத்தை அமைக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

2009 ஜூலை 7]

8.1 மாவட்ட சவகர் சிறுவர் மன்றங்கள்

சென்னை, புதுக்கோட்டை, மதுரை, உதகமண்டலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, கடலூர், நாகர்கோயில், தஞ்சாவூர், காஞ்சிபுரம், சிவகங்கை, திருநெல்வேலி, சேலம், இராமநாதபுரம், திண்டுக்கல், தருமபுரி, கிருட்டிணகிரி, தேனி, வேலூர், திருவள்ளூர், ஈரோடு, திருவாரூர், விருதுநகர் மற்றும் விழுப்புரம் ஆகிய இடங்களில் மாவட்ட சவகர் சிறுவர் மன்றங்கள் இயங்கி வருகின்றன.

8.2 சவகர் சிறுவர் மன்ற விரிவாக்க மையங்கள்

பெரம்பலூர், தஞ்சாவூர், குளித்தலை, கரூர், சென்னை (டாக்டர் எம்.ஜி.ஆர். காது கேளாதோர் பள்ளி, ராமாபுரம்), மதுரை, தூத்துக்குடி, நாகப்பட்டினம், திருவண்ணாமலை, நாமக்கல் ஆகிய இடங்களில் சவகர் சிறுவர் மன்ற விரிவாக்க மையங்கள் இயங்கி வருகின்றன.

8.3 சவகர் சிறுவர் மன்ற ஊரக மையம்

குழந்தைகளின் கலைத் திறமைகளை வெளிப்படுத்திட புதுக்கோட்டை மாவட்டம் பொன்புதுப்பட்டி, மதுரை எல்லிசு நகர் ஆகிய இரு இடங்களில் சவகர் சிறுவர் மன்ற ஊரக மையங்கள் செயல்படுகின்றன.

8.4 சவகர் சிறுவர் மன்றங்களில் பகுதி நேரமாகப் பயிற்றுவிக்கப்படும் கலைகள்

சவகர் சிறுவர் மன்றங்களில் பரதநாட்டியம், நாட்டுப்புற நடனம், கைவினை, குரலிசை, நாடகம், உடல்திறன் பயிற்சி, மிருதங்கம், தபேலா, கராத்தே, கணினி, கீபோர்டு, வீணை, அயல்முரசு (டிரம்ஸ்), அயல்முழவு (பேண்ட்ஸ்), தையல், ஓவியம்-வண்ணம் தீட்டுதல், திரைஅச்சு, புல்லாங்குழல், யோகா மற்றும் சிலம்பம் ஆகிய இருபது கலைகளில் கீழ்வருமாறு பகுதி நேரப் பயிற்சி அளிக்கப்படுகிறது:

சென்னையில் 16 கலைகளில் வாரம் ஆறு நாட்களிலும், மாவட்ட சவகர் சிறுவர் மன்றங்கள், விரிவாக்க மையங்களில் ஏதேனும் நான்கு கலைகளில் வாரத்தில் மூன்று நாட்களிலும், ஊரக மையங்களில் இரண்டு கலைகளில் வாரத்தில் மூன்று நாட்களிலும், மாலை நேரத்தில் பயிற்சியளிக்கப்படுகின்றன. மாநிலத்திலுள்ள அனைத்துச் சிறுவர் மன்றங்களிலும் சுமார் 9,000 சிறுவர் சிறுமியர் பயிற்சி பெற்று வருகின்றனர். இரு ஊரக மையங்கள் மற்றும் கிருட்டிணகிரி மாவட்ட

[2009 ஜூலை 7

சிறுவர் மன்றம் நீங்கலாக அனைத்து சவகர் சிறுவர் மன்றங்களிலும் சிறுவர் நூலகங்கள் செயல்படுகின்றன.

சென்னை போன்ற பெருநகரங்களில் வசிக்கும் சிறுவர் அனைவரும் பயன்பெற்றிட ஏதுவாக சிறுவர் மன்றப் பயிற்சிகளை பரவலாக்கிடவும், சிறுவர் மன்ற மையங்கள் தொடங்கப்பட்டு சென்னை பெரியார் நகரில், 17-11-2007 முதல் 16 வகை கலைகளிலும், சென்னை வியாசர்பாடி முத்தமிழ் நகரில் 12-12-2007 முதல் 7 வகையான கலைகளிலும், தாம்பரம் சேலையூரில் 11-4-2008 முதல் 8 வகையான கலைகளிலும், புழுதிவாக்கம் நகரில் 15-8-2008 இல் தொடங்கப்பட்டு 6 வகை கலைகளிலும், மேற்கு தாம்பரத்தில் 3-11-2008 முதல் 2 வகை கலைகளில் சனி, ஞாயிறு ஆகிய விடுமுறை நாட்களில் பயிற்சியளிக்கப்படுகின்றன.

சென்னை மாநகராட்சியின் 30 பள்ளிகளில் சவகர் சிறுவர் மன்ற கலைப் பயிற்சிகளான நடனம், குரலிசை, ஓவியம், ஆகிய கலைகளில் வாரத்தில் 3 நாட்களில் பள்ளி நேரத்திற்குப் பின் பயிற்சியளிக்கப்படுகின்றன. சென்னை மாநகராட்சியின் 10 பள்ளிகளில் நடனப் பயிற்சியும், 10 பள்ளிகளில் குரலிசைப் பயிற்சியும், 10 பள்ளிகளில் ஓவியப் பயிற்சியும் பயிற்றுவிக்கப்படுகின்றன.

ஓரிசா மாநிலம் புவனேஸ்வரில் 20-4-2008 முதல் 22-4-2008 முடிய நடைபெற்ற 27-வது தேசிய வைசாக் திருவிழாவில் தமிழ்நாட்டின் சார்பாக இராமநாதபுரம், சிவகங்கை, காஞ்சிபுரம், சென்னை ஆகிய சிறுவர் மன்றங்களைச் சேர்ந்த 16 சிறார்கள் பங்கேற்றனர்.

புதுதில்லி தேசிய சிறுவர் மன்றம், திருவனந்தபுரம் நகரில் நடத்திய தென் மண்டல தேசிய இளந்திரு விருது தெரிவு முகாமில் தமிழ்நாட்டிலிருந்து 56 குழந்தைகளும், புதுதில்லியில் நடைபெற்ற தேசிய இளந்திரு விருது தெரிவில் 13 குழந்தைகளும், புதுதில்லி தேசிய குழந்தைகள் முகாமில் 42 குழந்தைகளும், புதுடெல்லி மற்றும் ஆக்ராவில் நடைபெற்ற தேசிய சுற்றுச்சூழல் முகாமில் சென்னை, சிவகங்கை, திருநெல்வேலி, சேலம், கரூர், நாமக்கல் ஆகிய சிறுவர் மன்றங்களிலிருந்து 14 சிறார்களும் கலந்து கொண்டனர்.

கரூர் நகரில் அனைத்து சவகர் சிறுவர் மன்றங்கள் சேர்ந்த 100 குழந்தைகளுக்கு 10 நாட்கள் சுடுமண் சுதை சிற்பம், பொம்மை செய்தல், துணி ஓவியம், கூட்டுக் கைவினை, மெழுகுவர்த்தி செய்தல் ஆகிய கலைகளில் மாநில அளவிலான கைவினை கலைப் பயிற்சி முகாம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

2009 ஜூலை 7]

மாவட்டங்கள்தோறும் கலைப் போட்டிகள் நடத்தி, அவற்றில் வெற்றி பெற்றவர்களுக்கிடையே 11-1-2009 அன்று திருச்சி நகரில் மாநில கலைப் போட்டியும் நடத்தப்பட்டுள்ளது. இதில் வெற்றி பெற்றவர்களுக்கு 14-1-2009 தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று பரிசுகளும், சான்றுகளும் வழங்கப்பட்டுள்ளன.

திருச்சியை சேர்ந்த செல்வி ஸ்ரீநிதி, மேடைக் கலைக்காகவும், சென்னையை சேர்ந்த செல்வி சுவேதா விஸ்வகர்மா, படைப்புக் கலைக்காகவும் 2007 ஆம் ஆண்டிற்கான தேசிய இளந்திரு விருதுக்காக புதுதில்லி தேசிய சிறுவர் மன்றத்தால் தெரிவு செய்யப்பட்டு 10-6-2008 அன்று மேதகு குடியரசு தலைவர் அவர்களால் புதுதில்லியில் உள்ள குடியரசு தலைவர் மாளிகையில் இவ்வுயரிய விருது பெற்றுள்ளனர்.

கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த செல்வி ஜே.பி. தர்ஷிணி, எழுத்துக் கலைக்காகவும், சென்னையை சேர்ந்த செல்வன் எம். சுப்ரபாலன், அறிவியல் கலைக்காகவும், 2008 ஆம் ஆண்டிற்கான தேசிய இளந்திரு விருதுக்காக புதுடெல்லி தேசிய சிறுவர் மன்றத்தால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

2008-2009 ஆம் ஆண்டில் புதுடெல்லி தேசிய சிறுவர் மன்றம் தமிழ்நாட்டில் இயங்கும் சிறுவர் மன்றங்களில் 14 சிறுவர் மன்றங்களுக்கு இணைவு வழங்கியுள்ளது.

தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றத்திற்கு ரூ.70.00 இலட்சம் செலவில் சென்னை, அரசு இசைக் கல்லூரி வளாகத்தில் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டின் 57 பள்ளிகளில் சவகர் சிறுவர் மன்ற கலைப் பயிற்சி அளித்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கலை பண்பாட்டுத் துறை, கலை வடிவங்களைப் பேணிக் காப்பதில் அனைத்து ஆதாரங்களையும் திரட்டி தொடர்ந்து பணியாற்றும்; மக்களின் மனநிலையில் மாற்றத்தை ஏற்படுத்தி, தமிழ்நாட்டின் பாரம்பரியக் கலைகளைப் பரப்புவதற்கும், ஊக்குவிப்பதற்கும் மற்றும் பாதுகாப்பதற்கும் தீவிரமாகச் செயலாற்றும் அனைத்து கலை வடிவங்களையும் உரியமுறையில் பயன்படுத்தி மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவும், அவர்தம் வாழ்வில் முன்னேற்றம் அடைவதற்கும் தக்க நடவடிக்கை எடுக்கும்.

[2009 ஜூலை 7

தொல்லியல் துறை

தொல்லியல் துறை மனித குல வளர்ச்சியை காலங்கடந்த பின்னரும் அறிந்து கொள்ள உதவுகிறது. ஒரு பண்பாட்டினை பின்தொடர்ந்து செல்லுதல், அதன் வாழ்க்கை முறை, கட்டடக் கலைச் சாதனைகள் மற்றும் ஒரு குறிப்பிட்ட இனத்தின் பழைய நிகழ்வுகளை நினைவுக்குக் கொண்டு வருதல் ஆகியவற்றை கடந்த காலத்தை ஆழ்ந்தறிவதன் மூலம் புரிந்து கொள்ள முடிகின்றது. தொல்லியல் என்பது ஓர் அறிவியல். ஏனெனில், மீட்டல், ஆவணப்படுத்துதல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் மனித குலம் விட்டுச் சென்ற தொல்பொருட்கள் மற்றும் சுற்றுச் சூழல் தரவுகளுக்கு புதிய விளக்கங்கள் அளித்தல் ஆகியவற்றின்மூலமும், கட்டடக் கலை, கலைப்பொருட்கள் கூறுகள், உயிரியல் தடயங்கள் மற்றும் நிலவியல் மூலமும் மனித இனப் பண்பாட்டினை பற்றி அறிந்துகொள்ள இயலும். இது மானிடவியல், வரலாறு, கலைவரலாறு, செவ்வியல், மனித இனவியல், புவியியல், மண்ணியல், மொழியியல், இயற்பியல், தகவல் அறிவியல், வேதியியல், புள்ளியியல், பழஞ்சூழலியல், தொல் விலங்கியல், தொல் தாவரவியல் ஆகிய பொருளகத்திலிருந்து பெறுகிறது. வரலாற்றுக் கால - வரலாற்றுக்கு முந்தையகால சமுதாயங்களின் மனித குலப் பண்பாட்டின் தோற்றம் மற்றும் வளர்ச்சியினை விளக்குதல், ஆவணப்படுத்துதல், வரலாற்றைப் புரிந்து கொள்ளல், காலவரிசைப்படுத்துதல், மனித இன வாழ்க்கைப் போக்கு மற்றும் பண்பாட்டு வளர்ச்சி மற்றும் சூழலியல் ஆகியவற்றை பற்றி அறிய உதவுவதும் தொல்லியல் நோக்கங்களுள் அடங்கும்.

தொல்லியல் துறை

தமிழ்நாடு அரசு, தொல்லியல் துறை 1961 ஆம் ஆண்டு தொடங்கப்பெற்றது. தமிழகத்திலுள்ள நினைவுச் சின்னங்களையும், வரலாற்றுச் சின்னங்களையும் சீரமைத்துப் பாதுகாப்பதையும், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அகழாய்வுப் பணி செய்வதையும் முக்கிய குறிக்கோளாகக் கொண்டு தொடங்கப்பெற்றது. பின்னர், கல்வெட்டுக்களை படியெடுத்தல், அவற்றைப் புத்தக வடிவில் அச்சிட்டு வெளியிடுதல், தொல்லியல் அகழ்வைப்பகங்களை அமைத்தல், கலைப் பொருட்களை பாதுகாத்தல், அவற்றை நிழற்படங்களுடன் ஆவணப்படுத்துதல் மற்றும் பழம்பொருட்கள் பதிவு செய்தல் இத்துறையின் பணிகளாக விரிவுபடுத்தப்பட்டது.

2009 ஜூலை 7]

அரசினர் கீழ்த்திசை ஓலைச்சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையம் இத்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் சென்னை பல்கலைக்கழக வளாகத்தில் செயல்பட்டு வருகின்றது.

பாதுகாப்புப் பிரிவு

சமயஞ் சார்ந்த மற்றும் சமயஞ்சாரா 85 வரலாற்றுச் சின்னங்கள் இத்துறையால் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. பன்னிரெண்டாம் நிதிக் குழுவின்கீழ் 36 வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாக்க அரசு ரூ.7.80 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இத்தொகையில் ரூ.3.00 கோடி மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை பராமரிப்புப் பணிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டது. இப்பணிகள் அனைத்தும் நடைபெற்று வருகின்றன. திருமலை நாயக்கர் அரண்மனை பாதுகாப்புப் பணி முடிவுறும் தருவாயில் உள்ளது.

அகழாய்வு மற்றும் அகழ்வைப்பகப் பிரிவு

வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களில் அகழாய்வு மேற்கொள்ளுதல் இத்துறையின் முதன்மைப் பணியாகும். வரலாற்றுச் சிறப்பு மிக்க 32 இடங்களில் இதுவரை அகழாய்வுப் பணி மேற்கொள்ளப்பட்டு, பல தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டு, மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள 14 தொல்லியல் அகழ்வைப்பகங்களில் பாதுகாக்கப்பட்டு வரப்படுகின்றன. வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களில் அகழாய்வுப் பணி மேற்கொள்ளும் திட்டத்தின்கீழ் 2008 ஆம் ஆண்டில் அரியலூர் மாவட்டத்திலுள்ள கங்கைகொண்ட சோழபுரம் எனும் வரலாற்றுச் சிறப்பு மிக்க இடத்தில் ரூ.3.00 இலட்சம் செலவில் அகழாய்வுப் பணி மேற்கொள்ளப்பட்டு, பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன.

மாணவர்கள் மற்றும் பொதுமக்களிடையே பாறை ஓவியங்கள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த இத்துறை, சென்னை அரசு கவின் கலைக் கல்லூரியுடன் இணைந்து பாறை ஓவியங்கள் குறித்த கண்காட்சியினை 19-11-2008 முதல் 25-11-2008 வரை ஒருவார காலத்திற்கு உலக மரபு வார விழாவின் ஒரு பகுதியாக நடத்தின.

[2009 ஜூலை 7

கல்வெட்டுப் பிரிவு

ஆணையரகத்தில் செயல்பட்டு வரும் கல்வெட்டுப் பயிற்சி நிறுவனத்தில் முதுகலைப் பட்டம் பெற்ற எட்டு மாணவர்களுக்கு ஓராண்டு கால கல்வெட்டுப் பட்டயப் பயிற்சி மற்றும் தொல்லியல் முதுகலைப் பட்டயப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதுவரை 192 மாணவர்கள் இப்பயிற்சியை முடித்துள்ளனர். ஒவ்வொரு மாணவருக்கும் பயிற்சி உதவித் தொகையாக திங்கள்தோறும் ரூ.1,000/- வழங்கப்படுகிறது.

2004-2005 ஆம் ஆண்டு துவங்கி, தொடர்ந்து நடைபெற்றுவரும் தமிழகக் கல்வெட்டுகளைப் படியெடுக்கும் முனைப்புத் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டிலுள்ள 25,000-க்கும் மேற்பட்ட தமிழ் கல்வெட்டுகளில் 20,235 கல்வெட்டுகள் இத்துறையால் படியெடுக்கப்பட்டுள்ளன. இதில் 13,149 கல்வெட்டுக்கள் துறை கல்வெட்டாய்வாளர்களால் படிக்கப்பட்டுள்ளன. 2008-2009 ஆம் ஆண்டுக்கான பகுதி-II திட்டத்தின்கீழ் 10,000 கல்வெட்டுக்களைப் புத்தகமாக வெளியிடும் சிறப்புத் திட்டத்திற்கு ரூ.8.60 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் மூன்றாண்டு கால ஒப்பந்த அடிப்படையில், ஒரு தொல்லியல் வல்லுநர் மற்றும் இத்துறையின் கல்வெட்டுப் பயிற்சி நிறுவனத்தில் பயின்று வேலையில்லாத நான்கு மாணவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். 2008-2009 ஆம் ஆண்டு முதல் இச்சிறப்புத் திட்டம் நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது. மேலும், படிக்கப்பட்ட கல்வெட்டுக்களை டிஜிடல் முறையில் பாதுகாக்க 2008-2009 ஆம் ஆண்டு பகுதி-II திட்டத்தின்கீழ் கான்டெக்ஸ் கிரிஸ்டல் ஸ்கேனர் மற்றும் அவை சார்ந்த உபகரணங்கள் வாங்க ரூ. 17.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டு அவ்வுபகரணங்கள் வாங்கப்பட்டுள்ளன.

மத்திய தொல்லியல் துறையால் படியெடுக்கப்பட்ட 1915 ஆம் ஆண்டு கல்வெட்டுகளை தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை கல்வெட்டு ஆய்வாளர்கள் படித்துள்ளனர். இக்கல்வெட்டுகளை மத்திய மற்றும் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை இணைந்து வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது.

வெளியீடுகள்

இத்துறையின் அண்மையில் புதுப்பிக்கப்பட்ட அச்சுப் பிரிவின் வாயிலாக தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள், தொல்லியல் சின்னங்கள் அகழாய்வு குறித்த அறிக்கைகள், மாவட்ட தொல்லியல் கையேடுகள்

2009 ஜூலை 7]

ஆகியவை தமிழிலும், ஆங்கிலத்திலும் நூல்களாக வெளியிடப்பட்டு வருகின்றன. மேலும், அகழாய்வு அறிக்கைகள், கல்வெட்டு, தொல்லியல் மற்றும் அகழ்வைப்பக வழிகாட்டி நூல்கள் என இதுவரை *204* நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. 'கல்வெட்டு' காலாண்டு இதழ் ஒன்றும் அச்சுப்பிரிவு வாயிலாக வெளியிடப்படுகிறது. இதுவரை *76* இதழ்கள் வெளியிடப்பட்டுள்ளன.

நிழற்படப் பிரிவு

இப்பிரிவு பல்வேறு கோயில்கள், சிற்பங்கள், ஓவியங்கள் மற்றும் பழம்பொருட்களை நிழற்படம் எடுப்பதாகும். அகழாய்வின் பல்வேறு நிலை, அகழாய்வு இடங்கள், மரபுச் சின்னங்கள் ஆகியவை படமெடுக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. கல்வெட்டுப் படிகள் டிஜிட்டல் முறையில் படமெடுக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

பழம்பொருட்களை பதிவு செய்தல்

பழமையான கலைப் பொருட்களை இந்தியாவில் இருந்து கடத்தப்படுவதைத் தடை செய்வதற்கு *1972* ஆம் ஆண்டு பழம் பொருட்கள் பாதுகாப்புச் சட்டத்தினை இந்திய அரசு இயற்றியுள்ளது. இச்சட்டத்தினை திறம்பட நடைமுறைப்படுத்த இரண்டு பதிவு அலுவலர் அலுவலகங்கள் சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளியில் இயங்கி வருகின்றன. இத்திட்டத்திற்கான அனைத்து செலவினத்தையும் மத்திய அரசே ஏற்றுக்கொள்கிறது. தமிழ்நாட்டில் *1974* ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை தமிழ்நாட்டில் *52,311* விண்ணப்பங்கள் பதிவு செய்வதற்காக பெறப்பட்டு, அவற்றில் *42,499* விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

அரசினர் கீழ்த்திசை ஓலைச்சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையம்

இந்நூலகத்தில் கணிதம், வானசாத்திரம், சித்தா, ஆயுர்வேதம், யுனானி, வேதங்கள், ஆகமம், கட்டடக் கலை, இசை, கவின் கலைகள், வரலாறு மற்றும் பல்வேறு பொருண்மைகள் தமிழ், சமஸ்கிருதம், மராத்தி, உருது, அராபிக் மற்றும் பாரசீக மொழிகளில் *72,000*-க்கும் மேற்பட்ட தாள் மற்றும் ஓலைச் சுவடிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இந்நூலகத்தில் *450*-க்கும் மேற்பட்ட நூல்கள் பல்வேறு மொழிகளில் வெளியிடப்பட்டுள்ளன. தேசிய குழுமத்தின் சுவடிகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் *1,880* தமிழ் சித்தா ஓலைச் சுவடிகள் டிஜிட்டல் செய்யப்பட்டுள்ளன.

[2009 ஜூலை 7

புதிய திட்டங்கள்

2009-2010 ஆம் ஆண்டு பகுதி-II திட்டத்தின்கீழ் பின்வரும் 6 திட்டப் பணிகள் ரூ.25.30 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படவுள்ளன:

1. துறையின் அச்சுப் பிரிவுக்கு பாலிமர் பிரின்டர், மூன்று கணினிகள் மற்றும் அவை சார்ந்த உபகரணங்கள், வெட்டு இயந்திரம் மற்றும் சேமிப்பு அறைகலன்கள் வாங்குதல்.

2. திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டம், இராஜாக்கல் மங்கலம் என்னும் வரலாற்றுச் சிறப்பு மிக்க இடத்தில் அகழாய்வுப் பணி மேற்கொள்ளுதல்.

3. இரண்டு கல்வெட்டு நூல்கள், நான்கு மாணவர்களது ஆய்வு நூல்கள், மூன்று முக்கிய நூல்கள் மறுபதிவு செய்தல், மூன்று தொல்லியல் அகழ்வைப்பகங்களது வழிகாட்டி நூல்கள், ஒரு தொல்லியல் அகழாய்வு குறித்த நூல் மற்றும் பத்து மாவட்டங்களது மரபு சார்ந்த நூல்கள் அச்சிட்டு வெளியிடுதல்.

4. எட்டு கணினிகள் மற்றும் அவை சார்ந்த உபகரணங்கள் வாங்குதல்.

5. அரசினர் கீழ்த்திசை ஓலைச் சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையத்திற்கு புகையூட்டி, இரசாயனப் பொருட்கள், டிஜிட்டல் பணிக்கு கணினி சார்ந்த உபகரணங்கள், காப்புறை அட்டை மற்றும் கட்டுப் பொருட்கள் வாங்குதல்.

6. ஐந்து தொல்லியல் அகழ்வைப்பகங்களை காப்புறை செய்யப்பட்ட புகைப்படங்கள் வைத்து மேம்படுத்துதல்.

தொல்லியல் துறை, தமிழ்நாட்டின் தொன்மை நாகரிகத்தினை வெளிக்கொணர்ந்து பாதுகாத்திட தொடர்ந்து பாடுபடுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — TRUTH ALONE TRIUMPHS

2009 ஜுலை 7]

அருங்காட்சியகங்கள் துறை

இந்தியாவின் தலைசிறந்த அருங்காட்சியகங்களில் ஒன்றான சென்னை அரசு அருங்காட்சியகம் 1851 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அருங்காட்சியகத் துறையின்கீழ், இருபது மாவட்ட அருங்காட்சியகங்கள் செயல்பட்டு வருகின்றன. சென்னை அருங்காட்சியகத்தில் உள்ள தென்னிந்தியப் படிமங்களும் மற்றும் வரலாற்றுப் புகழ்வாய்ந்த மரபுச் சின்னங்களும், குறிப்பாக ராபர்ட் புரூஸ்புட் சேகரிப்புகளும், ஆதிச்சநல்லூர் பெருங்கற்கால சேகரிப்புகளும், புத்த, சமண இந்து சமய சிற்பங்களும் குறிப்பிடத்தக்கவை. அவற்றில் அமராவதி சிற்பங்கள் சிறப்பானவை. பல மதிப்புமிக்க அரிய விலங்கியல் மற்றும் தாவரவியல் சேகரிப்புகளும் இங்கே உள்ளன. இதன் படிமக் காட்சிக்கூடத்தில் அரிய சேகரிப்புகள் காட்சிக்கு வைக்கப்பட்டு உள்ளன. இப்பிரிவு அயல்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளை அதிக அளவில் ஈர்க்கின்றது.

அருங்காட்சியகம் பொதுவாக அறிவியல், கலைப் பொருட்கள் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் கொண்ட பொருள்களைப் பாதுகாக்குமிடமாகவும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் இடமாகவும், கல்வி, அறிவு வளர அவற்றைக் காட்சிப்படுத்தும் இடமாகவும் திகழ்கிறது.

சென்னை அரசு அருங்காட்சியகமும் மற்றும் மாவட்ட அருங்காட்சியகங்களும் பொதுமக்கள் மற்றும் மாணவர்களுக்கு அறிவுத்திறனை மேம்படுத்தும் விரிவாக்க மையங்களாக விளங்குகின்றன. உலகின் இயற்கை அமைப்புகளையும், வரலாறு - கலைப் பண்புகளையும், அறிவியல், தொழில்நுட்பச் சாதனைகளையும் பொதுமக்கள் அறிந்து கொண்டு பாராட்டும் வகையில் அருங்காட்சியகங்கள் அமைந்துள்ளன. அவற்றைக் காணும் பார்வையாளர்கள் அறிவில் மேம்படவும், பாரம்பரியம் பற்றிப் புரிந்துணரவும் அவை சாளரங்களாகத் திகழ்கின்றன. சிறுவர் முதல் பெரியவர் வரை அவர்களது திறமை, விருப்பத்தைப் பொறுத்து அவர்களுக்குத் தேவையான கல்வி மற்றும் கள ஆய்வுப் பணிகளுக்கான தகவல்களை அளிக்கும் கல்விச் சாலைகளாக, தொல்பொருள் நூலகங்களாகத் திகழ்கின்றன. பள்ளி மாணவர்கள் முதல் பல்கலைக்கழக மாணவர்கள் வரை பார்வையிடவும், பயன்பெறவும் ஆராய்ச்சி மேற்கொள்ளவும் வாய்ப்பளிக்கின்றன.

[2009 ஜூலை 7

அருங்காட்சியகங்களின் முக்கியப் பணிகள்

1. அரும்பொருட்களைச் சேகரித்துப் பாதுகாத்தல்

2. அறிவியல் பூர்வமாக காட்சிப்பொருட்களைப் பாதுகாத்தல் மற்றும் கலைநயம் மிக்க வகையில் காட்சிப்படுத்தல்.

3. ஆய்வாளர்களுக்கு சேகரிப்புகளை ஆய்வு செய்வதற்காக உதவிகளைத் தனித்தோ அல்லது பிற நிறுவனங்கள், பல்கலைக்கழகங்களுடன் இணைந்தோ ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளுதல். ஆராய்ச்சி மாணவர்களுக்கு சேகரிப்புகளைக் காண வழிவகுத்தல்.

4. சேகரிப்புகளின் விவரங்கள் தயாரித்தல், பெயர்ப் பட்டியல் தயாரித்தல், புத்தகங்கள் மற்றும் மலர்கள் வெளியிடுதல்.

5. கல்விப் பணிகளாக அடிக்கடி சிறப்புக் கண்காட்சிகள் நடத்துதல், வல்லுநர்களைக் கொண்டு விரிவுரைகள் ஆற்றுதல்.

6. வேதியப் பாதுகாப்பு மற்றும் ஆய்வு கூடத்தின் வாயிலாக புத்தாக்கம் செய்து சுட்டுப்பொருட்களை சீர்கேட்டிலிருந்து பாதுகாத்தல். தேசிய கையெழுத்துப்படி குழு விருப்பப்படி, கையெழுத்துப் படிகள் பாதுகாப்பு மையத்தின் வாயிலாகக் கையெழுத்துப்படிகளைப் பற்றிய பாதுகாப்பு விழிப்புணர்வு மேம்படுத்துதல்.

அரசு அருங்காட்சியகம், சென்னை

இதன் முன்கட்டடத்திலுள்ள மானிடவியல் கூடங்களில் கட்டடப் பணிகள் 2005-2006, 2006-2007 மற்றும் 2007-2008 ஆண்டுகளில் பகுதி-II திட்டத்தின்கீழ் சீர்படுத்தும் பணி முடிவுற்றது. இதற்கான மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.100.00 இலட்சம் ஆகும். காட்சிக் கூடம் மற்றும் காட்சிப் பெட்டிகளில் மின் பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன.

மாவட்ட அருங்காட்சியகங்கள்

தற்போது, புதுக்கோட்டை, சேலம், மதுரை, திருச்சிராப்பள்ளி, வேலூர், ஈரோடு, கடலூர், உதகமண்டலம், கோயம்புத்தூர், கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, திருநெல்வேலி, சிவகங்கை, திருவாரூர்,

2009 ஜுலை 7]

பழனி, நாகப்பட்டினம், காஞ்சிபுரம், இராமநாதபுரம், கரூர், விருதுநகர் ஆகிய இடங்களில் 20 மாவட்ட அருங்காட்சியகங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் புதுக்கோட்டை அருங்காட்சியகம் அன்றிருந்த சமஸ்தான காலத்திலிருந்து செயல்படுகிறது. மற்ற அருங்காட்சியகங்கள் அண்மைக் காலத்தில் தோற்றுவிக்கப்பட்டன.


புதுக்கோட்டை மாவட்ட அரசு அருங்காட்சியகத்தின் நூற்றாண்டு விழா நடைபெறுவதை முன்னிட்டு பல்வேறு ஆக்கப் பணிகளை 2009-2010 பகுதி-II திட்டத்தின்கீழ் மேற்கொள்வதற்கு ரூ.80.00 இலட்சத்திற்கு கருத்துரு ஏற்பளிக்கப்பட்டுள்ளது.

மைய அரசின் நிதி உதவியுடன் ஆவணக் காப்பறை கட்டும் பணியின் பெரும் பகுதி முடிவுற்றது. பன்னிரெண்டாவது நிதிக் குழுவின் மானியம் ரூ.35.00 இலட்சம் பெறப்பட்டு சென்னை அருங்காட்சியகத்தில் உயர் மின்னழுத்தம் அமைக்கும் பணி பொதுப் பணித் (மின்) துறையால் துவக்கப்படவுள்ளது.

மைய அரசின் மண்டலம் மற்றும் உள்ளூர் அருங்காட்சியகங்களை மேம்படுத்துதல் மற்றும் வலுப்படுத்துதல் என்ற திட்டத்தின்கீழ் சென்னை மற்றும் திருநெல்வேலி மாவட்ட அருங்காட்சியகங்களில் பல்வேறு பணிகளை மேற்கொள்வதற்கு மைய அரசிடமிருந்து ரூ.42.00 இலட்சம் நிதி உதவி பெறப்பட்டுள்ளது. இப்பணிகளுக்குரிய மாநில அரசின் பங்குத் தொகை ரூ.14.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அனைத்துப் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

அருங்காட்சியகத் துறை, சுற்றுலாப் பயணிகளுக்குத் தமிழகத்தின் மேன்மையை உணர்த்துவதிலும், ஆர்வலர்களுடைய அறிவின் ஆழத்தை அதிகப்படுத்துவதிலும் எப்பொழுதும் முன்னோடியாகத் திகழ்கிறது. அருங்காட்சியகத்தை வரலாற்று அறிஞர்கள் ஆராய்கின்றனர், மாணவர்கள் படிக்கிறார்கள், ஆராய்ச்சியாளர்கள் பாகுபாடு செய்கின்றனர், இலக்கியவியலார் வியந்து பாராட்டுகின்றனர்.

புகைப்படங்கள்



புராதனக் கட்டடம் என்ற நிலையில்
புதுப்பிக்கப்பட்ட அரசு இசைக் கல்லூரி—சென்னை




நாட்டுப்புறக் கலைகளில் பயிற்சி வழங்கியபோது
ஒயிலாட்டம் பயின்ற மாணவ, மாணவியர்கள்




சீர்காழியில் தமிழிசை மூவர் விழா

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS



தெருவோரக் குழந்தைகளுக்கு ஓவியப் பயிற்சி

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS




கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS




புதுப்பிக்கப்பட உள்ள சென்னை அரசு கவின் கலைக் கல்லூரி




திருமலை நாயக்கர் அரண்மனை— மதுரை

TRUTH ALONE TRIUMPHS




பாறைக் கல்வெட்டு ஓவியங்கள்—விழுப்புரம்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS



டேனிஷ் கோட்டை – தரங்கம்பாடி

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS




மனோரா – தஞ்சாவூர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS




வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

புராதன தானியக் கிடங்கு—தஞ்சாவூர்




சமணர் மலைச் சிற்பங்கள்—கழுகுமலை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS




சென்னை அருங்காட்சியகத்தின் தேசிய கலைக்கூடம்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS



சென்னை அருங்காட்சியகத்தின் தரைத் தளத்தில்
உள்ள வெண்கல காட்சிக்கூடம்




சென்னை அருங்காட்சியகத்தில் உள்ள வெண்கலக் காட்சிக்கூடத்தின் மேற்பரப்பில் இருந்து எடுக்கப்பட்ட படம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS




சென்னை அருங்காட்சியகத்தில் உள்ள
ராஜா ரவிவர்மாவின் ஓவியக் கலைக்கூடம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS



ஒளியூட்டப்பட்ட சென்னை அருங்காட்சியகத்தின்
வெளிப்புறத் தோற்றம்



தேசிய கலைக்கூடம்—சென்னை

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு IV

(736 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண் 11–முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு

கொள்கை விளக்கக் குறிப்பு, 2009–2010

முன்னுரை

'காணி நிலம் வேண்டும்' என்று மகாகவி பாரதியார் பாடியதைப் போல அசையாச் சொத்து வாங்க வேண்டுமென்பது ஒவ்வொருவரின் கனவாகும். அக்கனவு மெய்ப்படும் போது, அச்சொத்தினை சட்டபூர்வமாக பாதுகாத்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும். அவ்வாறு அசையாச் சொத்துக்களின் பரிமாற்றம் நடைபெறும் போது அதற்கு சட்டபூர்வமான அங்கீகாரம் வழங்குவதைத் தனது முதன்மையான குறிக்கோளாகக் கொண்டு செயல்படும் பதிவுத் துறை, தன்னை நாடி வரும் பொதுமக்களுக்கு திறமையான மற்றும் தங்கு தடையற்ற சேவை வழங்கும் நோக்குடன் செயலாற்றி வருகின்றது. அசையாச் சொத்துக்கள் தொடர்பான ஆவணங்களைப் பதிவு செய்யும் போது, முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் விதிப்பதன்மூலம் அரசு கருவூலத்திற்கு கணிசமான வருவாய் திரட்டப்படுகிறது. மாநிலத்தின் பழமையான துறைகளுள் ஒன்றான பதிவுத் துறை, அரசுக்கு வருவாயை ஈட்டித் தருவதில் மூன்றாவது பெரிய துறையாக விளங்குகிறது. கடந்த 2008-2009 நிதியாண்டில் இத்துறையின் மூலம் ரூ.4,099.54 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. 1864 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு தனது முதல் ஆண்டில் அதாவது 1865-66-ல் ரூ.1,42,871 என்ற அளவில் மட்டும் வருவாயை ஈட்டிய பதிவுத் துறை, படிப்படியாக வளர்ச்சி பெற்று, தற்போது அரசுக்கு வருவாயை ஈட்டும் முதன்மையான துறைகளுள் ஒன்றாக உருவெடுத்து 2008-2009 நிதியாண்டில் ரூ.4,099.54 கோடி அளவிற்கு வருவாயைப் பெருக்கியுள்ளது என்பது வியப்பிற்குரிய ஒரு நிகழ்வாகும்.

பதிவுத் துறையால் ஈட்டப்பட்ட வருவாயில் கடந்த 5 ஆண்டுகளில் சீரான முன்னேற்றம் காணப்பட்டது. ஆனால் உலகளவில் ஏற்பட்ட பொருளாதார இடர்ப்பாடு மற்றும் அதன் தொடர்ச்சியான நிதி நிலை சரிவினால் 2008-2009 ஆண்டில் துறையால் ஈட்டப்பட்ட

வருவாய் சிறிதளவு குறைந்துள்ளது. கடந்த 5 ஆண்டுகளில் பதிவுத் துறையால் ஈட்டப்பட்ட வருவாய் மற்றும் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் விவரம் பின்வருமாறு:

ஆண்டு	பதிவான ஆவணங்களின் எண்ணிக்கை	வளர்ச்சி சதவிகிதம்	ஈட்டப்பட்ட வருவாய் (ரூபாய் கோடியில்)	வளர்ச்சி சதவிகிதம் (2007-2008 வரை)
2004-2005	1761696	10.59%	1881.53	8.58%
2005-2006	2011566	14.18%	2348.64	24.83%
2006-2007	2492294	23.90%	3407.50	45.08%
2007-2008	2691002	7.97%	4232.36	24.21%
2008-2009	2832686	5.27%	4099.54	(-)3.14%

சட்டபூர்வமான கடப்பாடுகள்

இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி வரி அல்லது தீர்வை வசூலிக்க சட்டபூர்வமான அதிகாரம் அவசியமாகும். முத்திரைத் தீர்வை, பதிவுக் கட்டணம் போன்றவற்றை வசூலிக்க வழிவகை செய்யும் பின்வரும் சட்டங்களைப் பதிவுத் துறை நிர்வகிக்கின்றது:

1. 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் (மத்திய சட்டம் 2/1899)
2. 1908 ஆம் ஆண்டு பதிவுச் சட்டம் (மத்திய சட்டம் 16/1908)
3. 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு வணிகம் அல்லாத நிறுமங்கள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 16/1972)
4. 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 27/1975)
5. 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம் (மத்திய சட்டம் 40/1982)

2009 ஜூலை 7]

துணைப் பணிகள்

ஆவணங்களைப் பதிவு செய்து முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் ஆகியவற்றை வசூலிப்பதைத் தலையாய கடமையாகப் பதிவுத் துறை கொண்டிருப்பினும், பொதுமக்களின் திருமணம் பற்றிய நிலையினை வரைமுறைப்படுத்துவதிலும் முக்கியப் பங்காற்றுகிறது. கீழ்க்கண்ட சட்டங்களின்கீழ் நடைபெறும் திருமணங்களைத் துறை பதிவு செய்கின்றது:

1. 1872 ஆம் ஆண்டு இந்திய கிறித்துவ திருமணச் சட்டம் (மத்திய சட்டம் 15/1872)
2. 1886 ஆம் ஆண்டு பிறப்பு, இறப்பு மற்றும் திருமணச் சட்டம் (மத்திய சட்டம் 6/1886)
3. 1932 ஆம் ஆண்டு பார்சி திருமண மற்றும் விவாகரத்துச் சட்டம் (மத்திய சட்டம் 3/1932)
4. 1954 ஆம் ஆண்டு சிறப்பு திருமணச் சட்டம் (மத்திய சட்டம் 43/1954)
5. 1955 ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டம் (மத்திய சட்டம் 25/1955)

பதிவுத் துறை அலுவலர்கள் கீழ்க்கண்ட சட்டங்களின் சில வரையறுக்கப்பட்ட பணிகளைச் செய்ய அதிகாரம் பெற்றுள்ளனர்:

1. 1932 ஆம் ஆண்டு இந்திய கூட்டுப் பங்காண்மைச் சட்டம் (மத்திய சட்டம் 9/1932)
2. 1961 ஆம் ஆண்டு வரதட்சணை தடுப்புச் சட்டம் (மத்திய சட்டம் 28/1961)
3. 1969 ஆம் ஆண்டு பிறப்புகள் மற்றும் இறப்புகள் சட்டம் (மத்திய சட்டம் 18/1969)

துறையின் நிர்வாக அமைப்பு

பதிவுத் துறைத் தலைவர் இத்துறையின் தலைவராவார். துறையால் நிர்வகிக்கப்படும் பல்வேறு சட்டங்கள் பதிவுத் துறைத் தலைவருக்கு பல்வேறு சட்டரீதியான அங்கீகாரத்தை வழங்குகின்றன. அவற்றுள் 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டத்தின்கீழ் முதன்மை

[2009 ஜூலை 7

வருவாய் கட்டுப்பாட்டு அலுவலர், 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம் மற்றும் 1975 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் பதிவாளர் ஆகியவை குறிப்பிடத்தகுந்தவை ஆகும். இதுவன்றி, 1899ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டத்தின் பிரிவு 47ஏ-வின் படி மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) மற்றும் தனித் துணை ஆட்சியர் (முத்திரை) ஆகியோரால் சந்தை மதிப்பு நிர்ணயம் செய்து பிறப்பிக்கப்படும் ஆணைகளுக்கு எதிராக செய்யப்படும் மேல்முறையீடுகளின் மீது ஆணையிடும் அதிகாரமும் இவருக்கு உள்ளது. மேலும், இவர்களால் பிறப்பிக்கப்படும் ஆணைகளைச் சீராய்வு செய்யவும் பதிவுத் துறைத் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

மேற்கூறப்பட்ட சட்டரீதியான பணிகளை பதிவுத் துறைத் தலைவர் செவ்வனே செய்ய தலைமையிடத்தில் பின்வரும் அலுவலர்கள் அவருக்கு உதவியாகப் பணிபுரிகின்றனர்:

1. கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (முத்திரை மற்றும் பதிவு)
2. கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (வழிகாட்டி)
3. கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (புலனாய்வு)
4. கூடுதல் சீட்டுப் பதிவாளர்
5. நேர்முக உதவியாளர் (பொது)
6. மாவட்டப் பதிவாளர் (வழிகாட்டி)
7. மாவட்டப் பதிவாளர் (ஆய்வு)
8. நேர்முக உதவியாளர் (சீட்டு)
9. கணக்கு அலுவலர்

பதிவுத் துறையைத் திறம்பட நிர்வகிக்க ஏதுவாக, துறை 9 மண்டலங்களாகவும் 50 மாவட்டங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது.

மண்டல அலுவலகங்கள்

துணைப் பதிவுத் துறைத் தலைவரின் தலைமையில் செயல்படும் மண்டல அலுவலகங்கள், சென்னை, வேலூர், கடலூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, சேலம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டு

2009 ஜூலை 7]

செயல்படுகின்றன. மண்டலம் முழுவதையும் நிர்வகிப்பது, திடீராய்வு மற்றும் விசாரணைகள் மேற்கொள்வது ஆகியவற்றை முக்கிய பணிகளாகக் கொண்ட துணைப் பதிவுத் துறைத் தலைவர்கள், 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டத்தின்கீழ் இணைப் பதிவாளர்களாகவும், முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் நியமனத்தில் மாவட்டப் பதிவாளர்களின் ஆணையின்மீது பெறப்படும் மேல்முறையீடுகளில் ஆணையிடும் அலுவலர்களாகவும் உள்ளனர்.

துணைப் பதிவுத் துறைத் தலைவர்களுக்கு உதவிட, சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய ஐந்து இடங்களில் வட்டார உதவி பதிவுத் துறைத் தலைவர்கள் உள்ளனர். சார் பதிவாளர் அலுவலகங்களில் திடீராய்வு மேற்கொள்வது மற்றும் தணிக்கை மாவட்டப் பதிவாளர்களின் பணியினை சோதனை ஆய்வு செய்வது போன்றவை இவர்களின் முக்கிய பணிகளாகும்.

மாவட்ட அலுவலகங்கள்

நிர்வாக வசதிக்காக, மாநிலம் முழுவதும் 50 பதிவு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் மாவட்டப் பதிவாளர் ஒருவரின் நிர்வாகத்தின்கீழ் செயல்படுகின்றன. வட சென்னை, மத்திய சென்னை, தென் சென்னை, வேலூர், திருச்சிராப்பள்ளி, மதுரை வடக்கு, மதுரை தெற்கு, திருநெல்வேலி, சேலம் கிழக்கு, சேலம் மேற்கு, ஈரோடு, கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களில் உள்ள மாவட்டப் பதிவாளர் அலுவலகங்கள் அவற்றிலுள்ள பணிப் பளுவைக் கருத்திற்கொண்டு உதவி பதிவுத் துறைத் தலைவர் நிலை அலுவலரால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. மாவட்டப் பதிவாளர்கள் சங்கங்களின் பதிவாளராகவும், சீட்டுகளின் துணைப் பதிவாளராகவும், திருமணப் பதிவாளராகவும் மற்றும் முத்திரைத்தாள் விற்பனையாளர்களை நியமிக்கும் அலுவலர்களாகவும் உள்ளனர்.

இதுவன்றி, 45 தணிக்கை அலகுகள் ஒவ்வொன்றும் ஒரு தணிக்கை மாவட்டப் பதிவாளரின் தலைமையில், பதிவு செய்யப்பட்ட ஆவணங்களை 100 சதவீதம் தணிக்கை செய்ய உள்ளன. பதிவு செய்யப்பட்ட ஆவணங்களில் குறைவு மதிப்பீடு ஏதேனும் உள்ளதா என்பதை இவர்கள் சரிபார்க்கின்றனர்.

[2009 ஜூலை 7

சார் பதிவாளர் அலுவலகங்கள்

ஆவணங்களைப் பதிவு செய்வதற்கும் மற்றும் இன்ன பிற தேவைகளுக்கும் பொதுமக்கள் அணுகும் அலுவலமாக பதிவுத் துறையின் ஆணிவேர் அலுவலகங்களான சார் பதிவாளர் அலுவலகங்கள் விளங்குகின்றன. இவ்வலுவலகங்களின் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு, இவை முக்கியத்துவம் வாய்ந்த 568 இடங்களில் செயல்படுகின்றன. ஆவணப் பதிவுடன், இந்து திருமணம் மற்றும் சிறப்புத் திருமணமும் இவ்வலுவலகங்களில் பதிவு செய்யப்படுகின்றன. 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டத்தின்கீழ் உதவிப் பதிவாளர்களாகவும் சார் பதிவாளர்கள் செயல்படுகின்றனர்.

பதிவுத் துறை பயிற்சி நிலையம்

பதிவுத் துறையால் நிர்வகிக்கப்படும் பல்வேறு சட்டங்கள் மற்றும் விதிகளில் துறையின் அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கும் பொருட்டு சென்னையில் பதிவுத் துறை பயிற்சி நிலையம் செயல்பட்டு வருகின்றது. துணை பதிவுத் துறைத் தலைவர் நிலையில் உள்ள அலுவலர் ஒருவர் இயக்குநராகவும், உதவி பதிவுத் துறைத் தலைவர் மற்றும் மாவட்டப் பதிவாளர் நிலையில் விரிவுரையாளர்களும் இந்நிலையத்தில் உள்ளனர். தகவல் தொழில்நுட்ப உத்திகளும் இங்கு பயிற்றுவிக்கப்படுகின்றன.

புலனாய்வுப் பிரிவு

சொத்துரிமை மாற்றம் நடைபெறும்போது அவற்றில் உள்ள கட்டடங்களும் உரிமை மாற்றம் செய்யப்பட்டால் அவற்றின் மதிப்பிற்கும் முத்திரைத் தீர்வை செலுத்தப்பட வேண்டும். அரசின் வருவாயைப் பாதுகாக்கவும், முத்திரைத் தீர்வை ஏய்ப்பினைத் தடுக்கவும், ஒரு கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் தலைமையில், 8 மாவட்டப் பதிவாளர்கள், 4 சார் பதிவாளர்கள் மற்றும் 2 உதவி செயற்பொறியாளர்களைக் கொண்ட ஒரு புலனாய்வுப் பிரிவு இத்துறையில் செயல்படுகின்றது. பதிவு செய்யப்பட்ட ஆவணங்களை விரைவாகத் திரும்ப வழங்கும் பொருட்டு அனைத்து பதிவு அலுவலர்களும் கட்டடங்களின் மதிப்பை நிர்ணயிக்க கள ஆய்வு மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

2009 ஜூலை 7]

விழிப்புப் பணி பிரிவு

பொதுமக்களிடமிருந்து பதிவுத் துறை அலுவலர்கள் குறித்து பெறப்படும் புகார் மனுக்களை விசாரிக்கும் பொருட்டு ஒரு உதவி பதிவுத் துறைத் தலைவர் மற்றும் ஒரு சார்பதிவாளரைக் கொண்ட விழிப்புப் பணிப் பிரிவு ஒன்று இத்துறையில் செயல்பட்டு வருகின்றது.

மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) / தனித் துணை ஆட்சியர் (முத்திரை)

1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டத்தின்படி உரிமை மாற்றப்படும் சொத்தின் சந்தை மதிப்பின் அடிப்படையில் முத்திரைத் தீர்வை செலுத்தப்பட வேண்டும். சொத்துக்களின் சந்தை மதிப்பை அறிந்திட ஏதுவாக, அனைத்து பதிவு அலுவலர்களுக்கும் கிராம வாரியான வழிகாட்டி மதிப்புப் பதிவேடுகள் வழங்கப்பட்டுள்ளன. வழிகாட்டி மதிப்பின் அடிப்படையில் ஆவணதாரர்கள் முத்திரைத் தீர்வை செலுத்த முன்வராத நேர்வுகளில், பதிவு அலுவலர்கள், ஆவணத்தைப் பதிவு செய்தவுடன், 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டத்தின் பிரிவு 47 ஏ(1)ன் படி, சொத்தின் சந்தை மதிப்பு மற்றும் செலுத்தப்பட வேண்டிய முத்திரைத் தீர்வையை நிர்ணயம் செய்யும் பொருட்டு சம்மந்தப்பட்ட மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) அல்லது தனித் துணை ஆட்சியருக்கு (முத்திரை) அனுப்புகின்றனர். சென்னை மற்றும் கோயம்புத்தூரில் உள்ள மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) மற்றும் வேலூர், கடலூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, விருதுநகர், தூத்துக்குடி மற்றும் சேலம் ஆகிய இடங்களில் உள்ள தனித் துணை ஆட்சியர் (முத்திரை) ஆகியோர் இத்தகைய ஆவணங்களில் சந்தை மதிப்பு மற்றும் செலுத்தப்பட வேண்டிய முத்திரைத் தீர்வை ஆகியவற்றை நிர்ணயம் செய்கின்றனர்.

செய்யப்படவுள்ள சட்டத் திருத்தங்கள்

(அ) பொது அதிகார ஆவணங்களின் பதிவைக் கட்டாயமாக்குவதும் அவ்வாவணங்களில் கண்டுள்ள சொத்தின் அமைவிடத்தில் உள்ள சார் பதிவாளர் அலுவலகத்தில் மட்டுமே இவற்றைப் பதிவு செய்யவும் வரையறுக்க 1908 ஆம் ஆண்டு பதிவுச் சட்டத்திற்குத் திருத்தம் விரைவில் கொண்டு வரப்படவுள்ளது. இதன் மூலம் பொது அதிகார ஆவணங்களினால் நடைபெறும்

[2009 ஜுலை 7

சட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ஆ) மதிப்புக் குறைவாகப் பதியப்படும் ஆவணங்களை 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டத்தின் பிரிவு 47 ஏ(1)ன் படி நடவடிக்கை எடுப்பதால் ஏற்படும் சட்டச் சிக்கல்களைத் தவிர்க்கும் பொருட்டு, வழிகாட்டி மதிப்புகளை நிர்ணயம் செய்ய சட்ட ரீதியான குழுக்களை அமைக்கவும், வழிகாட்டி மதிப்புகளுக்கு சட்ட ரீதியான அங்கீகாரம் வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கொப்ப 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டத்தின் பிரிவு 47 ஏ-விற்குச் செய்யப்பட்டுள்ள திருத்தம் விரைவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

கட்டுமானப் பணிகளுக்கான நடவடிக்கைகள்

மாநிலத்தின் பெரிய துறைகளுள் ஒன்றான பதிவுத் துறையில், மாநிலம் முழுவதும் பரவலாக 600 அலுவலகங்களுக்கு மேல் உள்ளன. இவற்றில் 50 சதவீத அலுவலகங்கள் தனியார் கட்டடங்களில் இயங்கி வருவதால் இவ்வலுவலகங்களுக்குத் தேவையான கட்டடங்கள் கட்ட அரசு கருதியுள்ளது. 2006 முதல் 2008 ஆண்டு வரையிலான காலகட்டத்தில் 35 சார்பதிவாளர் அலுவலகங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. மேலும் கூடுதலான அலுவலகங்களுக்குக் கட்டடம் கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

துறையின் கட்டுமானப் பணிகளுக்காக 13-வது நிதிக் குழுவில் ரூ.237 கோடி நிதி ஒதுக்கீடு கோரி கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

முத்திரைத்தாள்கள்

கொள்முதல் மற்றும் வழங்கல்

1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டத்தின்படி, முத்திரைத் தீர்வை சிறப்பு ஒட்டு வில்லைகள் மூலமாகவோ அல்லது நீதி சாரா முத்திரைத்தாள்கள் மூலமாகவோ செலுத்தப்பட வேண்டும். ஆவணங்கள் எழுதுவதில் உபயோகப்படுத்தப்படும் நீதி சாரா முத்திரைத்தாள்கள் நாசிக்கில் உள்ள இந்திய பாதுகாப்பு அச்சகத்திலும், ஐதராபாத்தில் உள்ள தேசிய பாதுகாப்பு அச்சகத்திலும் அச்சடிக்கப்பட்டு, இவ்வச்சகங்களிலிருந்து கருவூலம் மற்றும் கணக்குத் துறையின் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு மாநிலத்திலுள்ள

2009 ஜூலை 7]

அனைத்து கருவூலங்கள்/சார்நிலைக் கருவூலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. முத்திரைத்தாள் விற்பனையாளர்கள், முத்திரைத்தாள்களை கருவூலம்/சார்நிலைக் கருவூலத்திலிருந்து வாங்கி பொது மக்களுக்கு வழங்குகின்றனர். சார்பதிவாளர்களும் அலுவல் முறையில் முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் என்பதால் அவர்களும் முத்திரைத்தாள்களை விற்பனை செய்கின்றனர். முத்திரைத்தாள் விற்பனையாளர்களால் முறைகேடுகள் நடைபெறாமல் தடுத்திட அவர்களது கணக்குகள் பதிவுத் துறை அலுவலர்களால் காலமுறையில் சோதனை செய்யப்படுகின்றன. கடந்த 2003 மற்றும் 2004 ஆம் ஆண்டுகளில் முத்திரைத்தாள் விற்பனையாளர்களின் கணக்குகள் தீவிரமாக சோதனை செய்யப்பட்டு, அதில் முறைகேடு புரிந்தவர்களின் உரிமம் இரத்து செய்யப்பட்டது. இதனால் முத்திரைத் தாள் விற்பனையாளர்களின் எண்ணிக்கை கணிசமான அளவில் குறைந்தது. இதனால் பொது மக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாவண்ணம் கடந்த ஆண்டில் புதியதாக முத்திரைத்தாள் விற்பனையாளர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு புதிய நியமனங்கள் செய்யப்பட்டன. தற்போது சுமார் 3,900-க்கும் மேற்பட்ட முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் உள்ளனர். முத்திரைத்தாள்கள் கிடைக்கப்பெறவில்லையெனில் முத்திரைத் தீர்வையை ரொக்கமாகவோ வரைவோலை மூலமாகவோ செலுத்தலாம்.

மின்னணு முத்திரையிடுதல் (e-Stamping)

போலி முத்திரைத்தாள்களின் புழக்கம் மாநில அரசின் வருவாய்க்கு அச்சுறுத்தலாக இருந்து வருவதால் மாற்று வழிகளில் முத்திரைத் தீர்வையை வசூலிக்க யோசனை செய்யப்பட்டு அதன் பின்னர் மின்னணு முத்திரையிடும் (e-Stamping) முறையை நடைமுறைப்படுத்த அரசு உத்தேசித்துள்ளது. இதன்படி மின்னணு முறையில் தயாரிக்கப்படும் முத்திரை சான்றிதழ்களில் (stamp certificate) ஆவணங்களை எழுதலாம். மத்திய அரசால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனமான Stock Holding Corporation of India-வுடன் பதிவுத் துறைத் தலைவரால் இம்முறையை தமிழ்நாட்டில் அமல்படுத்த ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டுள்ளது. இம்முறை முதலில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில அலுவலகங்களில் விரைவில் அமல்படுத்தப்பட்டு பின்னர் மாநிலம் முழுமைக்கும் விரிவுபடுத்தப்படும். இம்முறையை அமல்படுத்துவதன் மூலம் அரசுக்கு வருவாய் விரைவில் கிடைப்பதுடன் போலி முத்திரைத்தாள்களின் புழக்கத்தையும் இது நீக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

[2009 ஜூலை 7

ஆவண எழுத்தர்கள் மற்றும் நகல் எழுத்தர்கள்

பொதுமக்களின் ஆவணங்களை எழுதுவதில் ஆவண எழுத்தர்களும், நகலெடுப்பதில் நகல் எழுத்தர்களும் உதவி புரிகின்றனர். ஆவண எழுத்தர் உரிமம் மூன்று விதமாக அதாவது மாநில உரிமம், பதிவு மாவட்ட உரிமம் மற்றும் சார் பதிவக உரிமம் என வழங்கப்படுகின்றது. தற்போது ஏழாயிரத்துக்கும் மேற்பட்ட ஆவண எழுத்தர்களும் இரண்டாயிரத்து முன்னூறுக்கும் மேற்பட்ட நகல் எழுத்தர்களும் உள்ளனர்.

பாதுகாப்பு நடவடிக்கைகள்

முத்திரைத்தாள்களின் மெய்ப்புத் தன்மையை அறிய அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களுக்கும் புற ஊதா விளக்குகள் வழங்கப்பட்டுள்ளன.

விற்பனை ஆவணங்களில் வாங்குபவர் மற்றும் விற்பவர்களின் புகைப்படங்களும், மற்ற ஆவணங்களில் ஆவணத்தைத் தாக்கல் செய்பவரின் புகைப்படமும் ஒட்டுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அசல் மற்றும் போலி ஆவணங்கள்/சான்றிதழ்களிடையிலான வேறுபாட்டை அறிந்து கொள்ள பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் துறையால் வழங்கப்படும் சான்றுகளில் ஹாலோகிராம் ஒட்டு வில்லைகள் ஒட்டப்படுகின்றன.

பல்வகைப் பணிகள்

சங்கங்கள் பதிவு

1975 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் பதிவுத் துறையால் சங்கங்களைப் பதிவு செய்து அவை மேற்பார்வையிடப்படுகின்றன. 31-12-2008 அன்று நிலவரப்படி இம்மாநிலத்தில் 1,37,355 பதிவு பெற்ற சங்கங்கள் உள்ளன.

சீட்டுகள்

சீட்டு நிறுவனங்களால் நடத்தப்படும் சீட்டுகள் 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிச் சட்டம் மற்றும் 1984 ஆம் ஆண்டு சீட்டு நிதி விதிகள் ஆகியவற்றின்கீழ் நிர்வகிக்கப்படுகின்றன. பதிவுத் துறைத் தலைவர் சீட்டுப் பதிவாளராகச் செயல்படுகிறார். சீட்டு நிறுவனங்களின் நடவடிக்கைகளைக் கண்காணிக்க ஏதுவாக பதிவுத் துறைத்

2009 ஜூலை 7]

தலைவருக்கு ஒரு கூடுதல் சீட்டுப் பதிவாளரும், நேர்முக உதவியாளர் (சீட்டு) ஒருவரும் உதவி புரிகின்றனர்.

மண்டல அளவில் துணைப் பதிவுத் துறைத் தலைவர்கள் இணை சீட்டுப் பதிவாளர்களாகவும், பதிவு மாவட்ட அளவில் மாவட்டப் பதிவாளர்கள் துணை சீட்டுப் பதிவாளர்களாகவும் தத்தமது எல்லைக்குள் உள்ளனர். மேலும், மாநிலம் முழுவதிலும் உள்ள 47 சார் பதிவாளர்கள் (சீட்டு மற்றும் சங்கம்) சீட்டுகளைச் சீராக நடத்துவதை உறுதி செய்கின்றனர். சீட்டுகள் தொடர்பான நடுவர் தீர்ப்பு வழக்குகளைத் தீர்வு செய்யும் பொருட்டு மத்திய சென்னையிலும், வட மற்றும் தென் சென்னையிலும், கோயம்புத்தூரிலும் தனியாக மூன்று சீட்டு நடுவர்கள் செயல்பட்டு வருகின்றனர். மாநிலத்தில் மொத்தம் 2,115 பதிவு பெற்ற சீட்டு நிறுவனங்கள் சுமார் 33,500 சீட்டுகளை நடத்தி வருகின்றன.

கூட்டுப் பங்காண்மை நிறுவனங்கள்

1932 ஆம் ஆண்டு இந்திய கூட்டுப் பங்காண்மைச் சட்டம், கூட்டுப் பங்காண்மை நிறுவனங்களை மாவட்டப் பதிவாளர்களிடம் பதிவு செய்ய வழிவகை செய்கின்றது. அவ்வாறு பதிவு பெற்ற நிறுவனங்கள் திருப்திகரமாக செயல்படுவதற்கான சாற்றுரையை ஆண்டுதோறும் மாவட்டப் பதிவாளர்களிடம் தாக்கல் செய்ய வேண்டும். 30-11-2008 அன்றுள்ளவாறு மாநிலத்தில் மொத்தம் 4,86,885 பதிவு செய்யப்பட்ட கூட்டுப் பங்காண்மை நிறுவனங்கள் உள்ளன.

திருமணப் பதிவு

நவீன யுகத்தில், திருமணங்கள் பதிவு செய்யப்படுவது முக்கியத்துவம் அடைந்துள்ளது. திருமணங்கள் எந்தச் சடங்குகளின்படி நடைபெறுகின்றதோ அதற்கேற்ப பல்வேறு சட்டங்களின்கீழ் அவை பதிவு செய்யப்படுகின்றன.

1955 ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டம்

இந்துக்களிடையே ஏற்கெனவே நடைபெற்ற திருமணத்தை சார் பதிவாளர்களால் இச்சட்டத்தின்படி பதிவு செய்யப்படுகின்றது. உச்ச நீதிமன்ற ஆணைக்கேற்ப 22-10-2007 முதல் அனைத்து இந்து திருமணங்களையும் பதிவு செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

[2009 ஜூலை 7

1954 ஆம் ஆண்டு சிறப்பு திருமணச் சட்டம்

இச்சட்டத்தின்கீழ் இரு வேறு மதத்தினரிடையே நடைபெறும் திருமணங்கள் சார் பதிவாளர்/மாவட்டப்பதிவாளரால் பதிவு செய்யப்படுகின்றது. இச்சட்டத்தின்படி, உத்தேசிக்கப்பட்ட திருமணம் குறித்த அறிவிப்பை சம்பந்தப்பட்ட திருமண அலுவலரிடம் தாக்கல் செய்து 30 நாட்களுக்குப்பின் ஆட்சேபணை ஏதும் பெறப்படாத பட்சத்தில் திருமணம் பதிவு செய்யப்படுகிறது.

உச்ச நீதிமன்ற ஆணைக்கேற்ப இச்சட்டத்தின்கீழ் நடைபெறும் திருமணங்களைப் பதிவு செய்வதைக் கட்டாயமாக்க அரசு பரிசீலித்து வருகிறது.

1972 ஆம் ஆண்டு இந்திய கிறித்துவ திருமணச் சட்டம்

இந்தியக் கிறித்துவர்களிடையே நடைபெறும் திருமணம் இச்சட்டத்தின்கீழ் உரிமம் பெற்றவர்களாலும், மத குருக்களாலும் நடத்தி வைக்கப்படுகின்றன. இச்சட்டத்தின்கீழ் நடத்தி வைக்கப்பட்ட திருமணங்களின் வடிப்புகள் பதிவுத் துறைத் தலைவர் அலுவலகத்தில் வழங்கப்படுகின்றன.

மின்னணு ஆளுமை

தகவல் தொழில்நுட்பத் திறன் கொண்ட சேவைகள் அறிமுகப்படுத்தப்பட்டதன் விளைவாக பதிவுத் துறையில் விரைவான மற்றும் தங்கு தடையற்ற சேவையை அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மொத்தமுள்ள 568 சார் பதிவாளர் அலுவலகங்களில், 450 சார் பதிவாளர் அலுவலகங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள அலுவலகங்களும் விரைவில் கணினிமயமாக்கப்படவுள்ளன.

கணினிமயமாக்கப்பட்ட அலுவலகங்களில் வழங்கப்படும் சேவைகளின் விவரம் பின்வருமாறு:

(அ) பதிவு செய்யப்பட்ட ஆவணங்களைக் குறுந்தகடுகளில் ஒளி வருடல் (Scan) மூலம் பதிவு செய்வதால், பதிவு விவரங்களை விரைவாக சரிபார்க்கவும் நகலெடுக்கவும் ஏதுவாகிறது.

(ஆ) வில்லங்கச் சான்றுகள் விரைவாக வழங்கல்.

(இ) சொத்து மதிப்பு குறித்த பட்டியலை விரைவாகத் தயார் செய்தல்.

(ஈ) திருமணம்/சங்கங்கள் நிறுவனங்கள்/சீட்டுகள் பதிவு செய்தல்.

2009 ஜூலை 7]

பதிவுத் துறையின் இணையதளமான www.tnreginet.net-ன் மூலம் பின்வரும் சேவைகள் வழங்கப்படுகின்றன:

(அ) வில்லங்கச் சான்றுகள் பெற விண்ணப்பிக்கலாம்.

(ஆ) பொதுமக்கள் அறிந்துகொள்ள ஏதுவாக அனைத்துப் பகுதிகளுக்குமான வழிகாட்டி மதிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன.

(இ) பதிவுத் துறையால் நிர்வகிக்கப்படும் பல்வேறு சட்டங்களில் கூறப்பட்டுள்ள படிவங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

(ஈ) ஆவணங்களின் மாதிரி வரைவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

2009–2010 ஆம் ஆண்டுக்கான பகுதி–2 திட்டங்கள்

பதிவுத் துறைக்கு 2009-2010 ஆம் ஆண்டுக்கான பகுதி 2 திட்டங்களின்கீழ் பின்வரும் திட்டங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன:

(1) பதிவுத் துறைத் தலைவர் அலுவலகத்திற்கு ரூ.10 இலட்சம் செலவில் கணினி மற்றும் அதற்கான உபகரணங்கள் வாங்குதல்.

(2) சென்னையில் உள்ள ரெஜிநெட் மையத்திற்கு ரூ.5.89 இலட்சம் செலவில் கணினி மற்றும் அதற்கான உபகரணங்கள் வாங்குதல்.

(3) 10 சார்பதிவாளர் அலுவலகங்கள் மற்றும் 8 மாவட்டப் பதிவாளர் அலுவலகங்களுக்கு ரூ.10.41 இலட்சம் செலவில் 18 நகலெடுக்கும் இயந்திரங்கள் வாங்குதல்.

(4) 2 மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) மற்றும் 9 தனித் துணை ஆட்சியர் (முத்திரை) அலுவலகங்களுக்கு ரூ.1.40 இலட்சம் செலவில் 11 நிகரிகள் வாங்குதல்.

(5) பதிவுத் துறையின் பல்வேறு அலுவலகங்களுக்கு ரூ.6.25 இலட்சம் செலவில் 250 இரும்பு மேசைகள் வாங்குதல்.

(6) பதிவுத் துறையின் பல்வேறு அலுவலகங்களுக்கு குறுந்தகடு (compact disc) வைப்பதற்காக 100 அலமாரிகள் ரூ.10 இலட்சம் செலவில் வாங்குதல்.

(7) பதிவுத் துறையின் பல்வேறு அலுவலகங்களுக்கு ரூ.11.25 இலட்சம் செலவில் 750 இரும்பு நாற்காலிகள் வாங்குதல்.

(8) பதிவுத் துறையின் பல்வேறு அலுவலகங்களுக்கு ரூ.4 இலட்சம் செலவில் 100 பிளாஸ்டிக் நாற்காலிகள் வாங்குதல்.

[2009 ஜூலை 7

இணைப்பு V

(737 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண் 28—செய்தி மற்றும் விளம்பரம் கொள்கை விளக்கக் குறிப்பு, 2009–2010

முகவுரை

"ஏழைகள் வாழ வேண்டும்;
எரியாத குடிசை வேண்டும்;
வயிறார உணவு, மானமாரத்துணி;
அறிவாரக் கல்வி இவைகளைத் தரவேண்டும்;
உழைப்பதற்கு வாய்ப்பும்;
உழைப்பதற்கேற்ற ஊதியமும் வேண்டும்
என்று எண்ணுகின்றது எங்கள் எண்ணம்"

—என உரைத்தார் நூற்றாண்டு நாயகர் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள்.

பேரறிஞர் அண்ணாவின் பேருள்ளம் விரும்பியவாறு மக்கள் நலன் பேணும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசு, அடுக்கடுக்காகப் பற்பல திட்டங்களை வகுத்து அவற்றைத் திறம்படச் செயல்படுத்தி வருகிறது.

அரசின் திட்டம் ஒவ்வொன்றும் அதன் பயனாளிகளைச் சென்றடைந்திடும் வகையில், அரசுத் துறைகளின் செயல்பாடுகளையும், திட்டங்கள் குறித்த முழு விவரங்களையும் மக்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லும் தலையாய பணியினை ஆற்றி வருகிறது செய்தி மக்கள் தொடர்புத் துறை.

ஏழை எளியோர் வாழ்க்கை உயர, மகளிர் மனம் மகிழ்ந்திட, உழைக்கும் மக்கள் ஊக்கம் பெற்றிட, அரசு செயல்படுத்தும் திட்டங்களையும், அவற்றால் விளையும் நன்மைகளையும் எளிய மக்களும் புரிந்து கொள்ளும் வகையில், இனிய தமிழில் தகவல்களைத் தருவது இத்துறையின் முதன்மையான இலக்காகும்.

2009 ஜூலை 7]

நோக்கம் நிறைவேற, நொடிப் பொழுதையும் வீணாக்காது புதிய தொழில்நுட்ப முறைகள் அனைத்தையும் பயன்படுத்தி எல்லா வழிகளிலும் விளம்பரப் பணிகளை சிற்றூர், பேரூர், நகரம், மாநகரம் என எல்லாப் பகுதிகளுக்கும் சென்று இத்துறை இடைவிடாது செய்து வருகிறது.

அரசின் நலத் திட்டங்கள், அரசுத் துறைகளின் செயல்பாடுகள், அரசின் சாதனைகள் ஆகியவற்றை எளிய மக்களின் உள்ளத்தில் பதிய வைக்கும் அளப்பரிய அரும்பணியை செய்தி மக்கள் தொடர்புத் துறை மேற்கொண்டு வருகிறது.

மக்களாட்சிக்கு வலிவையும் பொலிவையும் சேர்க்கும் இன்றியமையாத ஊடகங்களின் கூறுகளான பத்திரிகைகள் மற்றும் தொலைக்காட்சிகள் வாயிலாக அரசின் திட்டங்கள் குறித்த தகவல்களை தினந்தோறும் மக்களுக்கு அளிக்கும் செய்தி வெளியீட்டுப் பிரிவு;

நாட்டிற்கு உழைத்த நல்லோர், நற்றமிழ் அறிஞர்கள் ஆகியோருக்கு திருவுருவச் சிலைகள், நினைவு மண்டபங்கள் அமைத்துப் பராமரிப்பதுடன் அவர் தம் நினைவைப் போற்றிப் புகழ்ந்துரைக்கும் வகையில் விழாக்கள் எடுத்து சிறப்புச் செய்யும் நினைவகங்கள் பிரிவு;

அரசின் திட்டங்களை விளம்பரம் செய்து மக்களுக்கு விளக்கம் அளித்திடும் விளம்பரப் பிரிவு;

நாளிதழ்களைப் பல ஆண்டுகள் பாதுகாத்து தேவையேற்படும்போது அரசுக்குச் செய்தி நறுக்குகள் தர மேற்கோள் பிரிவு;

ஆய்வு மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் பயன்படும் செய்தி நிலையங்கள்;

அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகளை விளக்கும் வகையில் செய்திப்படங்கள் மற்றும் குறும்படங்களைத் தயாரித்து அளிக்கும் தமிழ்நாடு திரைப்படப் பிரிவு;

திரைப்படத் துறையின் பல்வேறு தொழில்நுட்பக் கலைகளை மாணவர்களுக்குப் பயிற்றுவிக்கும் எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம்;

அரசின் திட்டங்களையும் செயல்பாடுகளையும் மக்களிடம் அச்சு வடிவிலும் இணையதளம் மூலமாகவும் கொண்டு சேர்த்திடும் தமிழரசு;

அரசின் திட்டங்களையும் சாதனைகளையும் எளிய மக்களுக்கும் விளக்கி அரசுப் பொருட்காட்சிகளை நடத்திடும் பொருட்காட்சிப் பிரிவு;

மாவட்டங்களில் அரசுத் துறைகளின் செயல்பாடுகளையும், அரசின் சாதனைகளையும் விளக்கி, பல்துறைப் பணி விளக்க முகாம்களை நடத்துவதுடன், தொலைக்காட்சி, பத்திரிகைகள் மற்றும் கிராமங்களில் வீடியோ படக்காட்சி வாயிலாகவும் அரசின் திட்டப் பணிகளை செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் மூலமாக மக்களுக்குக் கொண்டு சேர்க்கும் இன்றியமையாப் பணி உள்ளிட்ட பல்வேறு பணிகளை பயனுறச் செய்திடும் முதன்மையான துறையாக செய்தி மக்கள் தொடர்புத் துறை விளங்கி வருகிறது.

எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்

—என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கு இணங்க மக்கள் நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் உறுதி கொண்டு, அதனை நடைமுறைப்படுத்துவதில் வெற்றி பெற்றுவரும் தமிழக அரசின் எண்ணங்களுக்கு ஏற்ப, செய்தி மக்கள் தொடர்புத் துறை செம்மாந்த பணிகளைச் செய்து வருகிறது.

2009 ஜூலை 7]

அத்தியாயம்—1

செய்தி வெளியீட்டுப் பிரிவு

செய்தி வெளியீட்டுப் பிரிவிலிருந்து நாள்தோறும் (24 மணி நேரம், விடுமுறை நாட்கள் உள்பட) அரசின் அறிவிப்புகள், திட்டங்கள், நடைபெறும் அரசு நிகழ்ச்சிகளின் விவரங்கள், அதன் தொடர்புடைய வண்ணப் புகைப்படங்கள் ஆகியவை அனைத்து ஊடகங்களுக்கும் கணினி உதவியுடன், மின் அஞ்சல் மூலமாக அனுப்பப்பட்டு அவை அனைத்து ஊடகங்களின்மூலம் உடனுக்குடன் மக்களுக்கு அறியச் செய்யும் ஒருங்கிணைப்புப் பணி செய்யப்பட்டு வருகிறது.

இப்பிரிவின் ஆரம்ப காலங்களில், மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் பல்வேறு அரசுத் துறைகளிடமிருந்து பெறப்படும் செய்தி வெளியீடு/செய்திக் குறிப்புகள் தட்டச்சு செய்யப்பட்டு, அதனைப் பிரதிகள் எடுத்து, இப்பிரிவில் உள்ள இருசக்கர ஊர்திப் பணியாளர்மூலம் நாளிதழ்களுக்கும், தொலைக்காட்சிகளுக்கும் நேரடியாக வழங்கப்பட்டு வந்தன. தொழில்நுட்ப வளர்ச்சியால் தொலைநகல் இயந்திரங்கள் அன்றாடப் பயன்பாட்டிற்கு வந்த பின்னர், செய்தி வெளியீடுகள் அனைத்தும் தொலைநகல் மூலமாகவும், மின் ஆளுமை அறிமுகத்திற்குப் பின்னர், செய்தி வெளியீடுகள்/செய்திக் குறிப்புகள் அனைத்தும் மின் அஞ்சல் மூலமும், 200 பத்திரிகைகள், காலமுறை இதழ்கள், செய்தி நிறுவனங்கள், இணையதள செய்தி நிறுவனங்கள் மற்றும் தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு உடனுக்குடன் ஒரே சமயத்தில் அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றன.

1-4-2008 முதல் 31-3-2009 வரை 1,116 செய்தி வெளியீடுகளும், 117 செய்திக் குறிப்புகளும், 678 புகைப்படம்/ ஒளிப்பதிவு/ செய்தி சேகரிப்பு கடிதங்களும், பத்திரிகைகள்/ஊடகங்கள்/ செய்தி நிறுவனங்களுக்கு தலைமை இடத்திலிருந்து அனுப்பப்பட்டுள்ளன.

பத்திரிகையாளர் நலன்

பத்திரிகையாளர் ஓய்வூதியம்

பத்திரிகைத் துறையில் 20 ஆண்டுகள் பணியாற்றிப் பணியிலிருந்து ஓய்வுபெற்று, நலிவுற்ற நிலையில் உள்ள பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் மாதாந்திர ஓய்வூதியம், இவ்வரசு

[2009 ஜூலை 7

பொறுப்பேற்றபின் ரூ.3,000/-லிருந்து ரூ.4,000/-ஆக உயர்த்தப்பட்டு தற்போது இத்திட்டத்தின் மூலமாக 31-3-2009 வரை 87 நபர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 1987 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த நிதி ஆண்டில் (2009-2010) ரூபாய் 37.35 இலட்சம் ஓய்வூதியத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வரசு பொறுப்பேற்றபிறகு 23 பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கியுள்ளது. 1-4-2008 முதல் 31-3-2009 வரை 6 பத்திரிகையாளர்களுக்கு பத்திரிகையாளர் ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது.

பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம்

1999 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் ஓய்வூதியம் பெற்று இயற்கை எய்திய பத்திரிகையாளரின் மனைவிக்கு வழங்கப்பட்டு வந்த மாதாந்திர ஓய்வூதியம், இவ்வரசு பொறுப்பேற்றபின் ரூ.1,500/-லிருந்து ரூ.2,000/-ஆக உயர்த்தப்பட்டு, 31-03-2009 வரை 20 நபர்களுக்கு குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது. இந்த நிதி ஆண்டில் (2009-2010) ரூபாய் 5.40 இலட்சம் குடும்ப ஓய்வூதியத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வரசு பொறுப்பேற்ற பிறகு ஐந்து பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கியுள்ளது. 1-4-2008 முதல் 31-3-2009 வரை 3 பத்திரிகையாளர்கள் குடும்பங்களுக்கு பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது.

பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி

பத்திரிகைத் துறையில் ஆசிரியர், உதவி ஆசிரியர், நிருபர், புகைப்படக்காரர் மற்றும் பிழை திருத்துபவர் பணிகளில் 20 ஆண்டுகள் பணிபுரிந்து பணியில் இருக்கும்போது இயற்கை எய்தினால் அவர்களுக்கு பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி, மாண்புமிகு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டு வந்தது.

இவ்வரசு பொறுப்பேற்றவுடன் பத்திரிக்கையாளர் நலன் கருதி, 20 ஆண்டுகள் பணிபுரிந்தால்தான் குடும்ப உதவி நிதி வழங்கப்படும் என்பதை மாற்றி, 5 ஆண்டுகள் பணிபுரிந்தால் ரூபாய் 50 ஆயிரம் எனவும், 10 ஆண்டுகள் பணிபுரிந்தால் ரூபாய் 1.00 இலட்சம் எனவும், 15 ஆண்டுகள் பணிபுரிந்தால் ரூபாய் 1.50 இலட்சம் எனவும், 20 ஆண்டுகள் பணிபுரிந்தால் ரூபாய் 2.00 இலட்சம் எனவும் வழங்க

2009 ஜூலை 7]

இவ்வரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. 31-3-2009 வரை 39 நபர்களுக்கு பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி வழங்கப்பட்டுள்ளது. இதுவரை ரூபாய் 37.05 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வரசு பொறுப்பேற்ற பிறகு 14 பத்திரிகையாளர் வாரிசுதாரர்களுக்கு ரூ.22,25,000/- பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி வழங்கப்பட்டுள்ளது. 1-4-2008 முதல் 31-3-2009 வரை ஒரு பத்திரிகையாளர் குடும்பத்திற்கு பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி வழங்கப்பட்டுள்ளது.

பத்திரிகையாளர் மருத்துவ சிகிச்சைக்கு நிதியுதவி

இவ்வரசு பொறுப்பேற்றபின் 6 பத்திரிகையாளர்களின் மருத்துவ சிகிச்சைக்கு நிதியுதவியும், ஒரு பத்திரிகையாளர் மகளின் அறுவை சிகிச்சைக்கான நிதியுதவியும் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை ரூபாய் 5.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 1-4-2008 முதல் 31-3-2009 வரை ஒரு பத்திரிகையாளருக்கு மருத்துவ சிகிச்சை நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

பத்திரிகையாளர்களுக்கு அரசு வாடகைக் குடியிருப்பு வசதி

பத்திரிகையாளர்களுக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மூலம் சிறப்பு அடிப்படையில் அரசு வாடகை வீடு ஒதுக்கப்பட்டு வருகிறது. இதுவரை தமிழகம் முழுவதும் 283 பத்திரிகையாளர்களுக்கு வாடகை வீடு ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வரசு பொறுப்பேற்றபின் 140 பத்திரிகையாளர்களுக்கு வாடகை வீடு ஒதுக்கப்பட்டுள்ளது.

பத்திரிகையாளர்களுக்கு வீட்டுமனை வசதி

பத்திரிகையாளர்களுக்கு வீட்டுமனை வசதி செய்து கொடுக்கும் பொருட்டு, 11 மாவட்டங்களில் இதுவரை 438 நபர்களுக்கு வீட்டு மனை வழங்கப்பட்டுள்ளது. இவ்வரசு பொறுப்பேற்றபிறகு, வேலூர், சேலம், திண்டுக்கல், திருச்சி மாவட்டங்களில் 174 பத்திரிகையாளர்கள்/ புகைப்படப் பிடிப்பாளர்களுக்கு வீட்டு மனை வழங்கியுள்ளது.

பத்திரிகையாளர் நல நிதியம்

14-1-2008 அன்று வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண் 17, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் (நிர்.4) துறை மூலம், பத்திரிகையாளர் நல நிதியத்திற்கு ரூபாய் ஒரு கோடி நிதி தனியே ஒதுக்கப்பட்டு, தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது. இந்த வைப்பீட்டுத் தொகைக்கு மாதம் ஒன்றிற்கு வட்டியாக

ரூபாய் 83,333/- கிடைக்கும். இந்த வட்டித் தொகையிலிருந்து, கடுமையான நோயினால் பாதிக்கப்பட்டு மருத்துவ சிகிச்சை மேற்கொள்ளும் பத்திரிகையாளர்களுக்கு மருத்துவ நிதி உதவியாக ஒருவருக்கு ரூபாய் ஐம்பதாயிரத்திற்கு மிகாமல் நிதி உதவி அளிக்கப்படும்.

பத்திரிகையாளர் அறைக்கு இணையதள வசதி

தலைமைச் செயலகத்திலுள்ள பத்திரிகையாளர் அறையிலிருந்து ஒரே நேரத்தில் 20 பத்திரிகையாளர்கள், தங்கள் நிறுவனங்களுக்கு செய்திகளை/புகைப்படங்களை மின் அஞ்சலில் உடனுக்குடன் அனுப்புவதற்கு "அகண்ட கற்றை கம்பியில்லா வலைதள வசதி" (Broadband Wireless internet facilities) 21-6-2007 முதல் செய்து தரப்பட்டுள்ளது. இவ்வசதியைப் பயன்படுத்துவதன்மூலம் செய்திகளும், புகைப்படங்களும் உரிய நேரத்திற்குள் விரைவாக நிறுவனங்களுக்குச் சென்றடைந்து பத்திரிகைகளில் விரைந்து வெளிவருவதற்கு வழிவகுக்கின்றது.

செய்தியாளர் அங்கீகார அடையாள அட்டை

செய்தியாளர்களுக்கு அரசு அமைத்துள்ள "பத்திரிகையாளர் அங்கீகாரக் குழு" வின் பரிந்துரையின் பேரில் ஆண்டுதோறும் நாளிதழ்கள்/தொலைக்காட்சிகள்/செய்தி நிறுவனங்களில் பணிபுரியும் பத்திரிகையாளர்களுக்கு செய்தியாளர் அங்கீகார அட்டை (Accreditation Card) வழங்கப்பட்டு வருகிறது. நடப்பாண்டில் (2009) செய்தியாளர் அங்கீகார அட்டை சென்னையில் 732 பத்திரிகையாளர்களுக்கும், மற்ற மாவட்டங்களில் 102 பத்திரிகையாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலம் 907 பத்திரிகையாளர்களுக்கு அடையாள அட்டை (Identity Card) வழங்கப்பட்டுள்ளது.

பத்திரிகையாளர்களுக்கு இலவச பேருந்துப் பயண அட்டை

அங்கீகார அட்டை மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களால் அடையாள அட்டை பெற்ற பத்திரிகையாளர்கள் செய்தி சேகரிப்பதற்கு வசதியாக அரசுப் பேருந்துகளில் பயணம் மேற்கொள்ளும்போது இலவசமாகப் பயணிப்பதற்கு ஏதுவாக ஒரு வருட காலத்திற்கு செல்லத்தக்க வகையில் இலவச பேருந்துப் பயண அட்டை ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது. இவ்வாண்டு,

2009 ஜூலை 7]

சென்னையில் அங்கீகார அட்டை பெற்ற 391 பத்திரிகையாளர்களுக்கும், மாவட்டங்களில் 1,434 பத்திரிகையாளர்களுக்கும் ஆக மொத்தம் 1,825 இலவச பேருந்துப் பயண அட்டை வழங்கப்பட்டுள்ளது. இலவச பேருந்துப் பயண அட்டை வழங்கும் வகையில் சுமார் ரூபாய் 55.00 இலட்சம் நடப்பாண்டில் செலவிடப்படவுள்ளது. இத்தொகை அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு இத்துறையால் ஈடு செய்யப்படவுள்ளது.

காலமுறை இதழ் பத்திரிகையாளர்களுக்கு செய்தியாளர் அட்டை

காலமுறை இதழ்களின் பத்திரிகையாளர்களுக்கு செய்தியாளர் அட்டை பரிந்துரைக் குழுவின் பரிந்துரையின் பேரில் செய்தியாளர் அடையாள அட்டை வழங்கப்பட்டு வருகிறது. நடப்பாண்டில் (2009) சென்னையில் பணிபுரியும் 217 செய்தியாளர்/புகைப்படக்காரர்களுக்கு செய்தியாளர் அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது.

புகைப்படப் பிரிவு

புகைப்படப் பிரிவில் ஆரம்ப காலங்களில் எடுக்கப்பட்டு வந்த கருப்பு-வெள்ளை புகைப்படங்கள், இப்பிரிவிலேயே பிரதிகள் எடுக்கப்பட்டு, நாளிதழ்களுக்கும், காலமுறை இதழ்களுக்கும், இருசக்கர ஊர்திப் பணியாளர் மூலம் அனுப்பப்பட்டு வந்தது. மின் ஆளுமை அறிமுகத்திற்குப் பின்னர், தற்போது புதிய வகை டிஜிடல் புகைப்படக் கருவிகள் மூலம் வண்ணப் புகைப்படங்கள் எடுக்கப்பட்டு, அவை மின் அஞ்சல் மூலம் உடனுக்குடன் ஏறக்குறைய 200 ஊடகங்களுக்கு தலைமைச் செயலகத்திலிருந்து ஒரே நேரத்தில் அனுப்பி வைக்கப்படுகின்றன. அத்துடன் முக்கிய விழாக்கள் நடைபெறும் இடத்திலிருந்து எடுக்கப்பட்ட புகைப்படங்களை உடனுக்குடன் அனுப்பும் வகையில், இணையதள வசதியுடன் கூடிய 3 புதிய மடிக்கணினிகள் வாங்கப்பட்டு, நிகழ்ச்சிகள் நடைபெறும் இடத்திலிருந்தே புகைப்படங்கள் உடனுக்குடன் ஊடகங்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

நவீன பயன்பாட்டிற்கு ஏற்றவாறு, மின் ஆளுமையின் உதவியோடு, நிகழ்ச்சிகளில் எடுக்கப்படும் படங்கள் அனைத்தும் குறுந்தகட்டிலும் பதிவு செய்யப்பட்டு அவை எதிர்காலப் பயன்பாட்டிற்கு ஏதுவாகப் பாதுகாப்பாக வைக்கப்பட்டு வருகின்றன.

[2009 ஜூலை 7

அத்தியாயம்–2

மேற்கோள் பிரிவு

மேற்கோள் பிரிவின்மூலம் நாள்தோறும் தமிழ், ஆங்கில நாளிதழ்கள் மற்றும் காலமுறை இதழ்களில் வெளிவரும் முக்கியச் செய்தி நறுக்குகள், மாண்புமிகு முதலமைச்சர், தொடர்புடைய துறைகளின் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் மற்றும் துறைச் செயலாளர்கள் ஆகியோரின் பார்வைக்கும், நடவடிக்கை எடுக்கவும் அனுப்பப்படுகிறது. மேலும் 2000 ஆம் ஆண்டு தொடங்கி முக்கிய நாளிதழ்கள் முறையாகத் தொகுக்கப்பட்டு, அரசுக்கு அவ்வப்போது தேவைப்படும் செய்திக் குறிப்புகளை நகலெடுத்து வழங்குவதே இப்பிரிவின் தலையாய பணியாகும்.

செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், புத்தகப் பதிவாளராகவும் (Registrar of Books) இருப்பதால், ஆண்டுதோறும் புத்தக வெளியீட்டாளர்களால் அனுப்பி வைக்கப்படும் புத்தகங்களின் இரண்டு பிரதிகள் பெறப்பட்டு பதிவு செய்யப்படுகிறது. ஏப்ரல் 2008 முதல் மார்ச் 2009 முடிய 2,124 புதிய புத்தகங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2009 ஜூலை 7]

அத்தியாயம்—3

நினைவகங்கள்

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு நாட்டிற்காகப் பெருந்தொண்டாற்றி பல்வேறு தியாகங்களைப் புரிந்த தலைவர்களையும் தமிழ்ச் சான்றோர்களையும், வருங்காலச் சந்ததியினருக்கு அறிமுகப்படுத்தி அவர்களுக்குச் சிறப்புச் செய்து போற்றிடும் வகையில் அவர்களின் நினைவாக 48 நினைவகங்கள், 4 அரங்கங்கள், 5 நினைவுத் தூண்கள், ஒரு நினைவுப் பூங்கா ஆகியன இத்துறையால் உருவாக்கப்பட்டு, பேணிக்காக்கப்பட்டு வருகின்றன.

நினைவகங்கள்

1. திருப்பூர் குமரன் நினைவகம், திருப்பூர், திருப்பூர் மாவட்டம்.
2. பகுத்தறிவுக் கவிராயர் உடுமலை நாராயணகவி மணி மண்டபம், உடுமலைப்பேட்டை, கோயம்புத்தூர் மாவட்டம்.
3. தந்தை பெரியார் நினைவகம், வைக்கம், கோட்டயம் மாவட்டம், கேரள மாநிலம்.
4. பெரியார்-அண்ணா நினைவகம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.
5. தீரன் சின்னமலை மணிமண்டபம், அரச்சலூர் கிராமம், ஈரோடு மாவட்டம்.
6. மூதறிஞர் இராஜாஜி பிறந்த இல்லம், தொரப்பள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம்.
7. வள்ளல் அதியமான் கோட்டம், அதியமான் கோட்டை, தருமபுரி.
8. நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் நினைவு இல்லம், நாமக்கல் மாவட்டம்.
9. வ.வே. சுப்பிரமணியம் நினைவகம், வரகனேரி, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
10. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் மணிமண்டபம், பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம்.

11. தில்லையாடி வள்ளியம்மை நினைவகம், தில்லையாடி, நாகப்பட்டினம் மாவட்டம்.

12. தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே.சா நினைவில்லம், உத்தமதானபுரம், திருவாரூர் மாவட்டம்.

13. கவியரசர் கண்ணதாசன் மணிமண்டபம், காரைக்குடி, சிவகங்கை மாவட்டம்.

14. தவத்திரு குன்றக்குடி அடிகளார் மணிமண்டபம், குன்றக்குடி, சிவகங்கை மாவட்டம்.

15. மருதுபாண்டியர் நினைவு மண்டபம், திருப்பத்தூர், சிவகங்கை மாவட்டம்.

16. தியாக சீலர் கக்கன் மணிமண்டபம், தும்பைப்பட்டி, மதுரை மாவட்டம்.

17. தியாகி விஸ்வநாததாஸ் நினைவு மண்டபம், திருமங்கலம், மதுரை மாவட்டம்.

18. பரிதிமாற் கலைஞர் மணிமண்டபம், விளாச்சேரி, மதுரை மாவட்டம்.

19. மொழிஞாயிறு தேவநேயபாவாணர் மணிமண்டபம், சாத்தமங்கலம், மதுரை மாவட்டம்.

20. பெருந்தலைவர் காமராசர் பிறந்த இல்லம், விருதுநகர், விருதுநகர் மாவட்டம்.

21. பெருந்தலைவர் காமராசர் நூற்றாண்டு மணிமண்டபம், விருதுநகர், விருதுநகர் மாவட்டம்.

22. மகாகவி பாரதியார் மணிமண்டபம், எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம்.

23. மகாகவி பாரதியார் இல்லம், எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம்.

24. கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் இல்லம், ஓட்டப்பிடாரம், தூத்துக்குடி மாவட்டம்.

2009 ஜூலை 7]

25. வீரன் அழகுமுத்துக்கோன் மணிமண்டபம், கட்டாரங்குளம், தூத்துக்குடி மாவட்டம்.

26. சுதந்திரப் போராட்ட வீரன் சுந்தரலிங்கம் நினைவகம், கவர்னகிரி, தூத்துக்குடி மாவட்டம்.

27. சுதந்திரப் போராட்ட வீரன் வெள்ளையத்தேவன் நினைவகம், வல்லநாடு, தூத்துக்குடி மாவட்டம்.

28. உமறுப்புலவர் நினைவகம், எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம்.

29. கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. மணிமண்டபம், திருநெல்வேலி, திருநெல்வேலி மாவட்டம்.

30. பூலித்தேவன் நினைவு மாளிகை, நெற்கட்டும்செவல் கிராமம், திருநெல்வேலி மாவட்டம்.

31. பொதுவுடைமை வீரர் ப. ஜீவானந்தம் மணிமண்டபம், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.

32. காந்தி நினைவு மண்டபம், கன்னியாகுமரி, கன்னியாகுமரி மாவட்டம்.

33. பெருந்தலைவர் காமராசர் மணிமண்டபம், கன்னியாகுமரி, கன்னியாகுமரி மாவட்டம்.

34. சதாவதானி செய்குத்தம்பி பாவலர் நினைவு மண்டபம், இடலாக்குடி, கோட்டார், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.

35. பேரறிஞர் அண்ணா நினைவு இல்லம், சின்ன காஞ்சிபுரம், காஞ்சிபுரம் மாவட்டம்.

36. முத்து மண்டபம், (இலங்கையின் கடைசித் தமிழ் மன்னர் விக்ரம ராஜ சிங்கன் நினைவகம்), வேலூர், வேலூர் மாவட்டம்.

37. பேரறிஞர் அண்ணா நினைவிடம் மற்றும் பேரறிஞர் அண்ணா அருங்காட்சியகம், மெரினா கடற்கரை, காமராசர் சாலை, சென்னை மாவட்டம்.

38. பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிடம் மற்றும் அருங்காட்சியகம், மெரினா கடற்கரை, காமராசர் சாலை, சென்னை மாவட்டம்.

39. மகாகவி பாரதியார் நினைவு இல்லம், துளசிங்க பெருமாள் கோயில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை மாவட்டம்.

40. பெருந்தலைவர் காமராசர் நினைவு இல்லம், திருமலைச்சாலை, தியாகராயநகர், சென்னை மாவட்டம்.

41. வள்ளுவர் கோட்டம், நுங்கம்பாக்கம், சென்னை மாவட்டம்.

42. காந்தி மண்டபம், சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை மாவட்டம்.

43. மூதறிஞர் இராஜாஜி நினைவாலயம், சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை மாவட்டம்.

44. மொழிப்போர்த் தியாகிகள் மணிமண்டபம், சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை மாவட்டம்.

45. தியாகிகள் மணிமண்டபம், சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை மாவட்டம்.

46. பெரியவர் எம். பக்தவத்சலம் நினைவிடம், சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை மாவட்டம்.

47. பெருந்தலைவர் காமராசர் நினைவகம், சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை மாவட்டம்.

48. கண்ணியத்திற்குரிய காயிதெமில்லத் மணிமண்டபம், காயிதெமில்லத் அரசினர் மகளிர் கல்லூரி அருகில், சென்னை மாவட்டம்.

அரங்கங்கள்

1. இராஜாஜி மண்டபம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை மாவட்டம்.
2. கலைவாணர் அரங்கம், வாலாஜா சாலை, சென்னை மாவட்டம்.
3. அண்ணா கலை அரங்கம், வேலூர், வேலூர் மாவட்டம்.
4. மகாமகம் கலை அரங்கம், கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2009 ஜூலை 7]

நினைவுத் தூண்கள்

1. "வெள்ளையனே வெளியேறு" இயக்கப் பொன்விழா நினைவுத் தூண், காந்தி மண்டப வளாகம், சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை மாவட்டம்.

2. சுதந்திரப் பொன்விழா நினைவுத் தூண் (போர் நினைவுச் சின்னம் அருகில்), காமராசர் சாலை, சென்னை மாவட்டம்.

3. குடியரசுப் பொன்விழா நினைவுத் தூண், (காந்தி சிலை அருகில்) காமராசர் சாலை, சென்னை மாவட்டம்.

4. சிப்பாய்ப் புரட்சி நினைவுத் தூண், வேலூர் மாவட்டம்.

5. பெருந்தலைவர் காமராசர் நூற்றாண்டு விழா நினைவுத் தூண், விருதுநகர், விருதுநகர் மாவட்டம்.

நினைவுப் பூங்கா

1. வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட இடத்தில் நினைவுப் பூங்கா, கயத்தாறு, தூத்துக்குடி மாவட்டம்.

சிலைகள்

- நட்பின் சின்னமாக, நடிப்பிலக்கணத்தின் உருவமாக விளங்கிய நடிகர் திலகம் செவாலியே சிவாஜிகணேசன் அவர்களின் திருவுருவச் சிலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சென்னை, காமராசர் சாலையில் ரூ.8.95 இலட்சம் செலவில் 21-7-2006 அன்று திறந்து வைக்கப்பட்டது.
- சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் தியாகிகள் மணிமண்டபம் முன்பு, சுதந்திரப் போராட்ட வீரர் தியாகி செண்பகராமன் அவர்களுக்கு ரூ.1.77 இலட்சம் செலவில் பீடத்துடன் கூடிய திருவுருவச் சிலை அமைக்கப்பட்டு 17-7-2008 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

இதரப் பணிகள்

- சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் ரெட்டமலை சீனிவாசன் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்க ரூ.21 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன.

[2009 ஜூலை 7

- காந்தி மண்டப வளாகத்தை பொதுப் பணித் துறையின் மேற்பார்வையில் ஏர்செல் நிறுவனத்தின் உதவியுடன் சுமார் ரூ.80 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்துதல் தொடர்பாக புரிந்துணர்வு ஒப்பந்தம் (Memorandum of Understanding) 7-7-2008 அன்று கையெழுத்தானது. மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- 2007-2008 ஆம் ஆண்டுக்கான செய்தி மற்றும் விளம்பரம் மானியக் கோரிக்கை எண் 28-ன்கீழ் மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் "தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டையில், பட்டுக்கோட்டை அழகிரி அவர்களுக்கு நினைவு மண்டபம் கட்டப்படும்" என அறிவித்திருந்ததைத் தொடர்ந்து தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் சாலையில் ஆவுடையான்குளம் என்ற இடத்தில் பட்டுக்கோட்டை அழகிரி அவர்களுக்கு ரூ.39 இலட்சம் செலவில் நினைவகம் அமைக்க ஆணை வெளியிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

- சீர்காழியில் தமிழிசை மூவரான அருணாசலக் கவிராயர், மாரிமுத்தாப் பிள்ளை, முத்துத்தாண்டவர் ஆகியோருக்கு சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

- திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் சுதந்திரப் போராட்ட வீரர் தியாகி பி. சீனிவாசராவ் அவர்களுக்கு ரூ.25 இலட்சம் செலவில் நினைவு மண்டபம் அமைக்க ஆணை வெளியிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

- சென்னை திருவல்லிக்கேணியில் பழுதடைந்த பாரதியார் இல்லம் ரூ.7 இலட்சம் செலவில் பழுது நீக்கம் செய்யப்பட்டு புனரமைக்கப்பட்டது.

2009 ஜூலை 7]

அத்தியாயம்—4

அரசு விழாக்கள்

இந்தியத் திருநாட்டின் விடுதலைக்காக அரும்பாடுபட்ட, தன்னிகரில்லாத் தலைவர்களையும், தமிழ்மொழி வளர்ச்சிக்காக அல்லும் பகலும் அயராது உழைத்த அறிஞர் பெருமக்களையும் போற்றிப் புகழ்ந்திடவும், அவர்களது தியாகங்களையும், அருமை பெருமைகளையும் நாட்டு மக்கள் அறிந்திடச் செய்யும் நோக்கோடும், அவர்களது பிறந்த நாள் விழாக்கள் மற்றும் நினைவு நாள் நிகழ்ச்சிகள் அரசினால் நடத்தப்பட்டு வருகின்றன. அன்றைய தினத்தில், அவர்களது திருவுருவச் சிலைகளுக்கு அருகில் புகைப்படம் வைத்து மலர் தூவி அரசின் சார்பில் மரியாதை செலுத்தப்படுகிறது.

கீழ்க்குறிப்பிட்டுள்ள தலைவர்களின் திருவுருவச் சிலைகளுக்கு, அவர்களின் பிறந்த நாளின்போது, அவர்களின் புகைப்படம் வைத்து அரசின் சார்பில் மாலைகள் அணிவித்து மரியாதை செய்யப்படுகிறது.

1.	ஜனவரி 17	பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். பிறந்த நாள்
2.	ஜனவரி 23	நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் பிறந்த நாள்
3.	ஜனவரி 30	உத்தமர் காந்தியடிகள் நினைவு நாள்
4.	ஏப்ரல் 14	டாக்டர் அம்பேத்கர் பிறந்த நாள்
5.	ஏப்ரல் 27	சர்.பிட்டி. தியாகராயர் பிறந்த நாள்
6.	ஏப்ரல் 29	பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள்
7.	மே 8	தமிழர் பண்பாட்டுச் சின்னம் கண்ணகி—சித்திரை முழு நிலவு நாள்
8.	ஜூன் 5	கண்ணியத்திற்குரிய காயிதெமில்லத் பிறந்த நாள்
9.	ஜூன் 24	கவியரசர் கண்ணதாசன் பிறந்த நாள்
10.	ஜூலை 15	பெருந்தலைவர் காமராசர் பிறந்த நாள்
11.	ஜூலை 17	தியாகிகள் தினம்—தியாகி பாஷ்யம் என்ற ஆர்யா

12.	ஜூலை 17	தியாகிகள் தினம் - தியாகி சங்கரலிங்கனார்
13.	செப்டம்பர் 5	கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. பிறந்த நாள்
14.	செப்டம்பர் 15	பேரறிஞர் அண்ணா பிறந்த நாள்
15.	செப்டம்பர் 17	தந்தை பெரியார் பிறந்த நாள்
16.	செப்டம்பர் 29	முன்னாள் மேயர் சிவராஜ் பிறந்த நாள்
17.	அக்டோபர் 2	உத்தமர் காந்தியடிகள் பிறந்த நாள்
18.	அக்டோபர் 30	பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பிறந்த நாள்
19.	நவம்பர் 14	பண்டித ஜவஹர்லால் நேரு பிறந்த நாள்
20.	டிசம்பர் 10	மூதறிஞர் இராஜாஜி பிறந்த நாள்
21.	டிசம்பர் 11	மகாகவி பாரதியார் பிறந்த நாள்

ஒவ்வொரு ஆண்டும், தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் வீரன் அழகுமுத்துக்கோன் பிறந்த நாள் விழாவும், ஒட்டப்பிடாரத்தில் வ.உ. சிதம்பரனார் பிறந்த நாள் விழாவும், பாஞ்சாலங்குறிச்சியில் வீரபாண்டிய கட்டபொம்மன் பிறந்த நாள் விழாவும், கவர்ணகிரியில் வீரன் சுந்தரலிங்கம் பிறந்த நாள் விழாவும், எட்டயபுரத்தில் மகாகவி பாரதியார் பிறந்த நாள் விழாவும், இராமநாதபுரத்தில் ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி பிறந்த நாள் விழாவும், ஈரோடு மாவட்டம், ஓடாநிலையில் தீரன் சின்னமலை நினைவு ஆடிப்பெருக்கு விழாவும், நாமக்கல் மாவட்டம், கொல்லி மலையில் வல்வில் ஓரி விழாவும், சென்னை மற்றும் அனைத்து மாவட்டங்களிலும் உத்தமர் காந்தியடிகள் பிறந்த நாள் விழாவும், மதுரை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பிறந்த நாள் விழாவும், கிருஷ்ணகிரி மாவட்டம் தொரப்பள்ளியில் மூதறிஞர் இராஜாஜி பிறந்த நாள் விழாவும் கொண்டாடப்படுகின்றன.

சிறப்பு விழாக்கள்

1. அயோத்திதாச பண்டிதர் அவர்களால் தொடங்கப்பட்ட "ஒரு பைசா தமிழன்" வார இதழின் நூற்றாண்டு விழா 8-7-2008 அன்று சென்னையில் நடத்தப்பட்டது.

2009 ஜூலை 7]

2. சர்.பிட்டி. தியாகராயர், டி.எம். நாயர் மற்றும் டாக்டர் சி. நடேசன் ஆகியோரின் நினைவாக 17-09-2008 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அஞ்சல் தலைகள் வெளியிடப்பட்டன.

3. திருவள்ளுவர் திருநாள் மற்றும் அரசு விருதுகள் வழங்கும் விழா 15-1-2009 அன்று, சென்னை கலைவாணர் அரங்கத்தில் கொண்டாடப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசு விருதுகளை வழங்கினார்கள்.

4. பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு சென்னை, கலைவாணர் அரங்கில் பேரறிஞர் அண்ணா அவர்களின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் புகைப்படக் கண்காட்சி நடத்தப்பட்டது.

5. தமிழ்ப் புத்தாண்டையொட்டி புது டெல்லி தமிழ்நாடு இல்லத்தில் 14-1-2009 அன்று, பேரறிஞர் அண்ணா அவர்களின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் புகைப்படக் கண்காட்சி நடத்தப்பட்டது.

பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா

2008-2009 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட அறிக்கையினை சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்த மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் "தற்போதைய இளைஞர் சமுதாயம் அந்த மறக்கமுடியாத மாமனிதரைப் பற்றி நன்றாக அறிந்திட 2009 ஆம் ஆண்டு அண்ணாவின் நூற்றாண்டாக தமிழகமெங்கும் சிறப்பாகக் கொண்டாடப்படும் என்ற அறிவிப்பையும் தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் சார்பில் செய்திட விரும்புகிறேன்" என்று அறிவித்தார்கள்.

அதன்படி, பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு விழாவினை 15-9-2008 முதல் ஒரு ஆண்டு முழுவதும் தமிழ்நாடு முழுவதும் அரசு சார்பாக சிறப்பாகக் கொண்டாடும் வகையில் தமிழகத்தின் அரசியல், பொருளாதாரம், சமூகம், மொழி, இலக்கியம், நாடகம், திரைப்படம் உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய பெருந்தொண்டினை எடுத்தியம்பும் வண்ணம் பின்வரும் நிகழ்ச்சிகள்/திட்டங்களுடன் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன.

[2009 ஜூலை 7

1. புகைப்படக் கண்காட்சிகள்

அனைத்து மாவட்டங்களிலும் பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழாவின் துவக்க விழா, அண்ணா அவர்களின் வாழ்க்கையில் நடைபெற்ற முக்கிய நிகழ்வுகளின் புகைப்படக் கண்காட்சியுடன் நடைபெற்றன. இவ்விழாவில் தமிழகமெங்கும் அண்ணா அவர்களின் பல்வேறு சாதனைகளை விளக்கும் பட்டிமன்றமும், கவியரங்கங்களும், கருத்தரங்குகளும் நடைபெற்றன.

2. அனைத்து அரசுக் கட்டடங்களுக்கும் அண்ணாவின் பெயரைச் சூட்டுதல்

பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் நூற்றாண்டு விழா கொண்டாடப்படும் இந்த ஓராண்டு காலத்தில் திறக்கப்படும் ஒரு கோடி ரூபாய்க்கும் குறையாத மதிப்புள்ள அனைத்து அரசுக் கட்டடங்களுக்கும், தனிப் பிரிவாக அமையும் அரசுக் கட்டடங்களுக்கும் அண்ணாவின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

3. இளைஞர்கள் பங்குகொள்ளும் விளையாட்டுப் போட்டிகள்

இவ்வாண்டு முழுவதும், விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் நடத்தும் அனைத்துப் போட்டிகளும் பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா பெயரிலேயே நடத்தப்பட்டு வருகின்றன. மாநிலம் முழுவதும் அண்ணா சுடர் தொடர் ஓட்டம் செப்டம்பர் மாதம் சிறப்பாக நடைபெற உள்ளது.

4. மகளிர் விழிப்புணர்வு முகாம்கள்

தமிழகமெங்கும் மகளிர் சுய உதவிக் குழுக்கள்மூலம் பல்வேறு போட்டிகளும், கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டுப் பரிசுகள் வழங்கப்பட்டன.

5. பேரறிஞர் அண்ணா அவர்களின் வாழ்க்கை வரலாறு சாதனைகளை விளக்கும் விளக்கப்படம் மற்றும் குறும்படங்கள்

தமிழ்நாடு திரைப்படப் பிரிவின்மூலம் பேரறிஞர் அண்ணா அவர்களின் வாழ்க்கையை சித்தரிக்கும் "அண்ணா வாழ்கிறார்" என்ற திரைப்படம் தயாரிக்கப்பட்டு தமிழ்நாடு முழுவதும் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளன்று திரையிடப்பட்டது. மேலும்

2009 ஜூலை 7]

இத்திரைப்படம் கலைஞர் தொலைக்காட்சி, பொதிகை, வின், மெகா மற்றும் தமிழன் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்பட்டது. மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள்மூலம் உள்ளூர் கேபிள் தொலைக்காட்சிகளிலும், வீடியோ ஊர்திகள்மூலமும் ஒளிபரப்பப்பட்டன.

6. பேரறிஞர் அண்ணா அவர்களின் உரைகள் பதிவான ஒலிக் குறுந்தகடுகள்

அண்ணா அவர்கள் ஆற்றிய 12 உரைகள் மற்றும் அண்ணா அவர்களைப் பற்றிய 12 பாடல்கள் அடங்கிய ஒலி குறுந்தகடுகள் தயாரிக்கப்பட்டு மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் மூலம் தமிழகம் முழுவதும் ஒலிபரப்பப்பட்டன.

7. அண்ணா நூற்றாண்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் இதரப் பணிகள்

➢ அனைத்து மாவட்டங்களிலும் அண்ணா நினைவுத் தூண்கள் மற்றும் அலங்கார வளைவுகள் அமைக்கவும், காஞ்சிபுரத்தில் சிறப்பு அலங்கார வளைவு அமைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

➢ பேரறிஞர் அண்ணா அவர்களின் உருவம் பொறித்த நாணயங்கள் விரைவில் வெளியிடப்படவுள்ளன.

➢ பேரறிஞர் அண்ணா அவர்களின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் இணையதளம் விரைவில் தொடங்கி வைக்கப்பட உள்ளது.

➢ சென்னையில் உலகத்தரத்தில் கூட்ட அரங்கமும், மாநிலத்தின் பிற மாவட்டங்களில் அரங்கங்களும் கட்டப்பட உள்ளன.

➢ மாநிலம் முழுவதும் மகளிர் விழிப்புணர்வு முகாம்கள், பள்ளி, கல்லூரி மாணவர், மாணவியரிடையே பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி ஆகியவை நடைபெற உள்ளன.

➢ நாட்டுப்புறக் கலைகள்மூலம் அண்ணாவின் வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

➢ அண்ணா நூற்றாண்டு விழா சிறப்பு மலர் தயாரிக்கப்பட்டு வருகிறது.

➢ தமிழகத்தில் உள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரில் இருக்கைகள் அமைக்கப்பட உள்ளன.

➢ அண்ணா அவர்களின் பொன்மொழிகள் சிறுகையேடுகளாக இலவசமாக பொதுமக்களுக்கு வழங்கப்படவுள்ளன.

➢ அண்ணா நூற்றாண்டு விழாவை முன்னிட்டு அனைத்து அரசுத் துறைகள், பள்ளி, கல்லூரிகள் மற்றும் ஊராட்சி அமைப்புகள் பங்குகொள்ளும் நிகழ்ச்சிகள் இந்த ஆண்டில் 365 நாட்களும் மாநிலத்தின் ஏதாவது ஒரு இடத்தில் நடைபெறும் வண்ணம் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2009 ஜூலை 7]

அத்தியாயம்–5

விளம்பரம்

அரசின் கொள்கைகள், திட்டங்கள், அதன் செயல்பாடுகள் மற்றும் சாதனைகள் குறித்த விவரங்களை நாளிதழ்களில் விளம்பரம் செய்வதன்மூலம் அனைத்துத் தரப்பு மக்களும் முழுமையாக அறிந்துகொள்ளச் செய்யும் மகத்தான பணியை இத்துறை செய்து வருகின்றது.

தமிழ்நாடு அரசின், அனைத்துத் துறைகள், அனைத்து வாரியங்கள், நிறுவனங்கள் மற்றும் அரசு சார்புடைய அமைப்புகள் ஆகியவற்றின் அனைத்து விளம்பரங்களும், நாளிதழ்கள் மற்றும் காலமுறை இதழ்களில் வெளியிடுதல் மையப்படுத்தப்பட்டு இத்துறை வழியாக வெளியிடப்பட்டு வருகின்றன. விளம்பரத்தின் தன்மை மற்றும் அவை சென்றடைய வேண்டிய பகுதி, மக்கள் ஆகியவற்றின் அடிப்படையில் பத்திரிகைகளுக்கு விளம்பரங்கள் அளிக்கப்பட்டு வருகின்றன.

அரசின் நலத் திட்டங்களான,

(1) புதிய சட்டப் பேரவை—தலைமைச் செயலகம் அடிக்கல் நாட்டுதல்,

(2) மாநகரப் போக்குவரத்துக் கழகத்தால் பல்வேறு வழித்தடங்களுக்குப் புதிய பேருந்துகள் இயக்கி வைக்கப்பட்டது,

(3) அரசு கம்பிவடத் தொலைக்காட்சி ஒளிபரப்பு தொடங்கப்பட்டது,

(4) பல்வேறு மேம்பாலங்களின் திறப்பு விழாக்கள்,

(5) வேலூர் மாநகராட்சித் தொடக்க விழா,

(6) தூத்துக்குடி மாநகராட்சித் தொடக்க விழா,

(7) திருப்பூர் மாநகராட்சித் தொடக்க விழா,

(8) நியாய விலைக் கடைகளில் ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்கும் திட்டம்,

[2009 ஜுலை 7

(9) நியாய விலைக் கடைகளில் 50 ரூபாய்க்கு மளிகைப் பொருட்கள் வழங்கும் திட்டம்,

(10) தமிழர் திருநாளை முன்னிட்டு, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்களுக்கு இலவச வேட்டி, சேலை வழங்குதல்,

(11) தமிழர் திருநாளை முன்னிட்டு, அனைத்துத் தரப்பினருக்கும் இலவசமாகப் பொங்கல் பொருட்கள் வழங்கும் திட்டம்

போன்றவை குறித்த பல்வேறு விளம்பரங்கள் அனைத்துத் தரப்பு மக்களையும் சென்றடையும் வகையில், அரசு நலத் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தும் நோக்கில் முன்னணி நாளிதழ்களில் வெளியிடப்பட்டன. உள்நாட்டு, அயல்நாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்த்து, அவர்களின் வருகையை அதிகரிக்கும் வகையில் முக்கியத்துவம் வாய்ந்த விளம்பரங்கள் வெளியிடப்படுகின்றன. விளம்பரங்களுடன் இலவச கட்டுரைகளை வெளியிட நாளிதழ்களின் வெளியீட்டாளர்களுடன் கலந்துபேசி, கட்டணத்தில் சலுகை பெற்று விளம்பரச் செலவில் சிக்கனம் கடைபிடிக்கப்படுகின்றது. தமிழ்நாட்டின் அடிப்படைக் கட்டமைப்புகளை வெளிப்படுத்தும் இத்தகைய விளம்பரங்கள் அயல்நாட்டு நேரடி மூலதனத்தையும், பிற மாநிலங்களின் தொழில் முனைவோர்களிடமிருந்து புதிய கூடுதலான மூலதனத்தையும் ஈர்க்க வகை செய்துள்ளது.

நவீன தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி, கூடுதல் செலவு ஏதுமின்றி அனைத்து அரசு விளம்பரங்களும் மக்களை எளிதில் சென்றடையும் வகையில் ஒப்பந்தப்புள்ளி மற்றும் வரைகலை விளம்பரங்கள் மத்திய அரசின் தேசிய தகவல் மையத்தின் வழியாக, தமிழக அரசின் www.tn.gov.in என்ற வலைதளத்தில் இலவசமாக வெளியிடப்படுவதுடன், www.tender.tn.gov.in என்ற வலைதளத்தில் டெண்டர் படிவங்களை இலவசமாகப் பெறுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அரசு விளம்பரங்கள் பத்திரிகைகளில் வெளியிடப்படுவதுடன், இணையதளத்திலும் வெளியிடப்படுவதால், அரசின் வெளிப்படையான நிருவாகம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்பதோடு, தகுதியான எவரும் தமிழக அரசின் ஒப்பந்தப்புள்ளிகளில் பங்கேற்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம், 1998 மற்றும் அதன்கீழ் இயற்றப்பட்ட தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகள், 2000-ன்படி அரசின் செயல்பாடுகள் அனைத்தையும் மக்கள்

2009 ஜூலை 7]

அறிந்துகொள்ளும் வகையில் மாவட்ட/மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர்கள் வாரந்தோறும் வெளியிடப்படுகின்றன. மேலும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் தமிழ்நாடு அரசின் www.tn.gov.in என்ற வலைதளத்தில் இலவசமாக வெளியிடப்படுகின்றது.

ரூ.5 இலட்சத்திற்கு மேல் ரூ.10 இலட்சம் வரையிலான கொள்முதல் மதிப்பு மற்றும் ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.25 இலட்சம் வரையிலான பணிகளின் மதிப்பு ஆகியன பற்றிய ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்கள் மாவட்ட ஒப்பந்தப்புள்ளி செய்திமலரிலும், ரூ.10 இலட்சத்திற்கு மேற்பட்ட கொள்முதல் மதிப்பு மற்றும் ரூ.25 இலட்சத்திற்கு மேற்பட்ட பணிகளின் மதிப்பு ஆகிய ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்கள் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் வெளியிடப்படுகின்றன. இம்மலர்களில், ஒப்பந்தப்புள்ளிகள்மீது மேற்கொண்ட முடிவுகளும் வெளியிடப்பட்டு வருகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2009 ஜூலை 7

அத்தியாயம்—6

தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகள் மற்றும் திரைப்பட மானியம்

தமிழ்த் திரையுலகை ஊக்குவிக்கும் பொருட்டு சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோருக்கு தமிழ்நாடு அரசால் 1968 ஆம் ஆண்டு முதல் திரைப்பட விருதுகள் வழங்கப்படுகின்றன. சிறந்த திரைப்படங்கள், நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோரைத் தேர்வு செய்வதற்கென ஆண்டுதோறும் தேர்வுக் குழு ஒன்று தமிழக அரசால் அமைக்கப்படுகிறது.

இக்குழுவால் தேர்வு செய்யப்படும் திரைப்படங்களுக்கு ஆண்டுதோறும் கீழ்க்கண்டவாறு விருதுகள் வழங்கப்படுகின்றன:

1. முதல் பரிசு — ரூ. 2 இலட்சம் ரொக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழ்
2. இரண்டாம் பரிசு — ரூ. 1 இலட்சம் ரொக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழ்
3. மூன்றாம் பரிசு — ரூ. 75 ஆயிரம் ரொக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழ்
4. சிறப்புப் பரிசு — ரூ. 75 ஆயிரம் ரொக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழ்

பெண்களைப் பற்றி உயர்வாகச் சித்தரிக்கும் திரைப்படத்திற்கு சிறப்புப் பரிசாக ரூ. 1.25 இலட்சம் ரொக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழ் ஆகியவை வழங்கப்படுகின்றன.

சிறந்த நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் ஒவ்வொருவருக்கும் தலா 5 பவுன் தங்கப் பதக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கப்படுகின்றன.

2000 ஆம் ஆண்டிலிருந்து விருது பெறும் கலைஞர்களில் ஆண் மற்றும் பெண் குரல்வளக் கலைஞர்களும் (Dubbing Artists) சேர்க்கப்பட்டுள்ளனர். சிறந்த குணச்சித்திர நடிகர், சிறந்த குணச்சித்திர நடிகை, சிறந்த நகைச்சுவை நடிகை ஆகியோருக்கான விருதுகள் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டு 2001 ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகின்றன. அளவான குடும்பம் மற்றும் திட்டமிட்ட குடும்ப

2009 ஜுலை 7]

நெறிகளைப் பிரதிபலிக்கின்ற திரைப்படங்களுக்கு முதல் பரிசு ரூ.50,000/-, இரண்டாம் பரிசு ரூ. 25,000/- மூன்றாம் பரிசு ரூ. 10,000/- வீதம் வழங்கப்பட்டு வருகின்றன. 2005 மற்றும் 2006 ஆம் ஆண்டுகளுக்கான திரைப்பட விருதுகள் வழங்கும் விழா 16-10-2007 அன்று சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளுக்கு ஓய்வு பெற்ற மாண்புமிகு நீதியரசர் திரு. ஏ.கே. ராஜன் அவர்களைத் தலைவராகக் கொண்ட 12 உறுப்பினர்கள் அடங்கிய தேர்வுக் குழு அமைக்கப்பட்டுள்ளன. அக்குழு திரைப்படங்களைப் பார்வையிட்டு வருகின்றது.

கலைத் துறை வித்தகர் விருதுகள்

தமிழ்த் திரையுலக வரலாற்றில் நீங்காத இடம் பெற்ற அறிஞர் அண்ணா, கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன், தியாகராஜ பாகவதர், ராஜாசாண்டோ, மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்., கவிஞர் கண்ணதாசன், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ஆகியோரின் பெயர்களில் கலைத் துறை வித்தகர் விருதுகள் வழங்கப்படுகின்றன.

அரசு மானியம்

குறைந்த செலவில் தயாரித்து வெளியிடப்பட்ட தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு மானியம் வழங்கும் திட்டத்தினை அரசு செயல்படுத்தி வருகிறது. ஆண்டுதோறும் தரமான தமிழ்த் திரைப்படங்களைத் தேர்ந்தெடுக்க ஒரு தேர்வுக் குழு அரசால் அமைக்கப்படுகிறது. தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொரு படத்திற்கும் ரூ. 7 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. 2005 ஆம் ஆண்டு 45 திரைப்படங்கள் மற்றும் 2006 ஆம் ஆண்டு 49 திரைப்படங்களையும் பார்வையிட்டு அவற்றில் மொத்தம் 70 திரைப்படங்களுக்கு மானியம் வழங்கப்பட்டது. மேலும் 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட திரைப்படங்களுக்கு மானியம் வழங்க, நீதியரசர் திரு. பி. பாஸ்கரன் அவர்களைத் தலைவராகக் கொண்ட 8 உறுப்பினர்கள் அடங்கிய தேர்வுக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

சின்னத்திரை விருதுகள்

2007-2008 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், சின்னத்திரைக் கலைஞர்களுக்கு விருதுகளை வழங்கி, கலையுலகை ஊக்குவிக்கும் பணிகள் நிறைவேற்றப்படும் என்று அறிவித்ததையொட்டி, முதன் முறையாக மாண்புமிகு முதலமைச்சர்

[2009 ஜூலை 7

அவர்களால் 2006 ஆம் ஆண்டு சின்னத்திரைக் கலைஞர்களுக்கான விருதுகளை வழங்கிட தேர்வுக் குழு ஒன்று அமைக்கப்பட்டு அதன் பரிந்துரையின் அடிப்படையில் 8-8-2008 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் சின்னத்திரைக் கலைஞர்களுக்கான விருதுகள் வழங்கப்பட்டன. சிறந்த நெடுந்தொடருக்கு முதல் பரிசு ரூ. 2 இலட்சம் ரொக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழும், இரண்டாம் பரிசு ரூ. 1 இலட்சம் ரொக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழும், சிறந்த வாரத் தொடர் ஒன்றிற்கு ரூ. 1 இலட்சம் ரொக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழும் வழங்கப்படும். மேலும் சிறந்த இயக்குநர், சிறந்த கதை ஆசிரியர், சிறந்த திரைக்கதை ஆசிரியர், சிறந்த வசனகர்த்தா, சிறந்த ஒளிப்பதிவாளர், சிறந்த படத்தொகுப்பாளர், சிறந்த கதாநாயகன், சிறந்த கதாநாயகி, சிறந்த குணச்சித்திர நடிகர், சிறந்த குணச்சித்திர நடிகை, சிறந்த வில்லன் நடிகர், சிறந்த வில்லி நடிகை, சிறந்த குழந்தை நட்சத்திரம், சிறந்த பின்னணி இசையமைப்பாளர், சிறந்த பின்னணிக் குரல் கொடுப்பவர் (ஆண்), சிறந்த பின்னணிக் குரல் கொடுப்பவர் (பெண்), சிறந்த தந்திரக் காட்சியாளர் ஆகியோருக்குத் தங்கப் பதக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழும் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படும்.

ஆண்டின் சிறந்த சாதனையாளர், ஆண்டின் சிறந்த வாழ்நாள் சாதனையாளர் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டு தலா ரூ. 1 இலட்சம் ரொக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கப்படும்.

மேலும் 2007 ஆம் ஆண்டின் சின்னத்திரை விருதுகள் வழங்க தேர்வுக் குழு ஒன்று அமைத்திட, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

தமிழ்த் திரைப்படத் துறையினருக்கு வழங்கப்படும் அரசின் சலுகைகள்

1. குறைந்த செலவில் தயாரித்து வெளியிடப்படும் தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு தலா ரூ.7 இலட்சம் மானியம் வழங்கப்படுகிறது.

2. சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோருக்கு ரொக்கப் பரிசு, நினைவுப் பரிசு, தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் ஆகியவை வழங்கப்படுகின்றன.

3. திரையுலகில் குறிப்பிடத்தக்க சாதனை புரிந்தவர்களுக்கு கலைத் துறை வித்தகர் விருதுகள் வழங்கப்படுகின்றன.

2009 ஜூலை 7]

4. திரைப்படக் கலைஞர்களுக்கு வழங்குவதைப் போல, சின்னத்திரைக் கலைஞர்களுக்கும் கடந்த 2006 ஆம் ஆண்டு முதல் ரொக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழ் ஆகியவை வழங்கப்படுகின்றன.

5. அரசுக்குச் சொந்தமான இடங்களில் படப்பிடிப்பு நடத்த ஒற்றைச் சாளர முறையில் அனுமதி வழங்கப்படுகிறது.

6. திரைப்படத் துறையில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க, மாவட்டம் மற்றும் மாநில அளவில் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

7. சண்டைக்காட்சியில் நடிக்கும்பொழுது சண்டைப் பயிற்சியாளர் காயமுற்று இறந்தால், அவரது குடும்பத்தினருக்கு ரூ.1 இலட்சமும், செயல்பட முடியாத அளவுக்கு ஊனமுற்றால் ரூ.50 ஆயிரமும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

8. திரைப்படம் மற்றும் தொலைக்காட்சித் துறையினரின் வேண்டுகோளுக்கிணங்க, அவர்களை மேலும் ஊக்கப்படுத்தும் வகையில், வெளிப்புறப் படப்பிடிப்புக்கான கட்டணங்கள் கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ளன.

9. தேசிய மற்றும் சர்வதேச விருதுகள் பெறும் தமிழ்த் திரைப்படங்களை ஊக்குவிக்கும் பொருட்டு அப்படங்களுக்கு ஊக்கத் தொகை வழங்க தமிழக அரசு ஆணையிட்டுள்ளது.

தமிழில் தலைப்பு

தமிழ்மொழி ஆர்வத்திற்கு மென்மேலும் ஊக்கம் அளித்திடும் வகையில், தமிழிலேயே பெயர் சூட்டப்படும் புதிய திரைப்படங்களுக்கு 22-7-2006 முதல் கேளிக்கை வரியிலிருந்து முழுமையான விலக்களித்து, வணிக வரித் துறையால் ஆணை வெளியிடப்பட்டது.

2008 ஆம் ஆண்டு, சென்னையில், இன்டோ சினி அப்ரிசியேசன் பவுண்டேஷன் அமைப்பினால் நடத்தப்பட்ட சர்வதேசத் திரைப்பட விழாவிற்கு அரசின் சார்பில் ரூ.25.00 இலட்சம் நல்கை வழங்கப்பட்டு, சர்வதேசத் திரைப்பட விழா 17-12-2008 முதல் 26-12-2008 வரை நடத்தப்பட்டது.

[2009 ஜூலை 7

திரைப்படத் துறைக்கு அளிக்கப்பட்ட சலுகைகளை மறு ஆய்வு செய்ய சீரமைப்புக் குழு

2009-2010 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் தெரிவித்தவாறு, திரைப்படத் துறைக்கு உதவும் வகையில் வெளிப்புறப் படப்பிடிப்புக்கான கட்டணத்தைக் குறைத்ததோடு, தமிழில் பெயர் சூட்டப்படும் தமிழ்த் திரைப்படங்களுக்குக் கேளிக்கை வரியிலிருந்து முழுமையாக விலக்கு அளித்தும், இவற்றின் பயன் பொதுமக்களுக்குச் சென்றடையாத நிலை தொடர்வதால் இச்சலுகைகளை மறு ஆய்வு செய்ய, திரைப்படங்கள், திரையரங்குகள், கேளிக்கை வரி விதிப்பு, வெளிப்புறப் படப்பிடிப்புக் கட்டணங்கள் மற்றும் ஏனைய பிரச்சினைகளைக் குறித்து திரைப்படத் துறையினர், உள்ளாட்சி மன்றங்களின் பிரதிநிதிகள், பொதுமக்களின் பிரதிநிதிகள் ஆகியோருடன் கலந்து பேசி விவாதித்து அரசுக்குப் பரிந்துரை அளிக்க பின்வரும் உறுப்பினர்களைக் கொண்ட சீரமைப்புக் குழு ஒன்றை அமைத்து அரசு ஆணையிட்டுள்ளது:

1. திரு ஏ.வி.எம். சரவணன் *2.* திரு. அபிராமி ராமநாதன், *3.* கோவை மேயர், திரு. வெங்கடாசலம் *4.* ஆலந்தூர் முன்னாள் நகர் மன்றத் தலைவர், திரு ஆர். எஸ். பாரதி *5.* உள் துறைச் செயலாளர் *6.* வணிக வரித் துறைச் செயலாளர் *7.* செய்தித் துறைச் செயலாளர்.

இக்குழுவின் கூட்டம் தொடர்பான ஒருங்கிணைப்புப் பணிகளை இயக்குநர்/துணைச் செயலர், செய்தி மக்கள் தொடர்புத் துறை மேற்கொள்வார். இக்குழு முதல் நிலைக் குழுவாகக் கருதப்படும். இக்குழு மூன்று மாதத்திற்கு ஒரு முறை கூடும்.

2009 ஜூலை 7]

அத்தியாயம்—7

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு

1. தமிழ்நாடு திரைப்படப் பிரிவின் தோற்றம்

திரைப்படம் மற்றும் வீடியோ தகவல் தொழில்நுட்பத்தில் ஏற்பட்டுள்ள மாபெரும் நன்மைகளை அடையவும் அவற்றை மக்களுக்கும் அரசுக்கும் இடையே ஒரு சிறந்த இணைப்புக் கருவியாகப் பயன்படுத்தவும், அரசு 1968 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படப் பிரிவைத் தோற்றுவித்தது. துவக்கத்தில் தமிழ்நாடு திரைப்படப் பிரிவானது திரைப்படத் தொழில்நுட்பப் பயிலகத்தின் ஒரு அங்கமாகச் செயல்பட்டு வந்தது. பின்னர் 1973 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு திரைப்படப் பிரிவு தனியாகச் செயல்படத் தொடங்கியது.

செய்திப் படப் பிடிப்பு

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு, தமிழ்நாட்டில் நடைபெறும் அனைத்து முக்கிய அரசு நிகழ்ச்சிகளை, குறிப்பாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு அமைச்சர்கள் பங்குபெறும் நிகழ்ச்சிகளை வீடியோவில் படமெடுத்து, வீடியோ செய்தி மலர்களாகத் தயாரித்து வெளியிடுகிறது. மேலும், எடுக்கப்படும் வீடியோ காட்சிகள் செயற்கைக்கோள் தொலைக்காட்சிகளுக்கு வழங்கவும், பிற்காலத் தேவைக்கு-ஆவணப் பயன்பாட்டிற்கும் பயன்படுத்தப்படுகிறது.

திரைப்பட செய்தி மலர் தயாரிப்பு (35 மிமீ.—ல்)

செய்தி மலர் படப்பிடிப்புகளை 10 நிமிடப் படமாகத் தொகுத்து அதை மத்திய அரசு திரைப்படப் பிரிவின் சென்னை மற்றும் மதுரை கிளைகளின் உதவியுடன் தமிழகத்திலுள்ள 1,410 திரையரங்குகளில் வெளியிடுகிறது. தமிழ்நாடு திரைப்படப் பிரிவு இதுவரை 417 திரைப்பட செய்தி மலர்களைத் தயாரித்துள்ளது.

கருத்து விளக்கத் திரைப்படம் தயாரிப்பு (35 மிமீ.—ல்)

தமிழ்நாடு அரசின் அனைத்துத் துறைகள்/வாரியங்கள்/ கழகங்களுக்குக் கருத்து விளக்கப்படம் தயாரிக்கும் ஒரே முகமை தமிழ்நாடு திரைப்படப் பிரிவு ஆகும். தமிழ்நாடு திரைப்படப் பிரிவு இதுவரை குடும்ப நலம், வேளாண்மை, தீண்டாமை, வனப் பாதுகாப்பு

[2009 ஜூலை 7

குறித்து 10-லிருந்து 20 நிமிடம் வரை ஓடக்கூடிய கருத்து விளக்கத் திரைப்படங்களை வெளியிட்டுள்ளது.

வீடியோ செய்தி மலர் தயாரிப்பு

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு முக்கியமான மக்கள் நலத் திட்டங்கள் அடங்கிய வீடியோ செய்தி மலர்களைத் தயாரித்துள்ளது. இவை மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள்மூலம் களவிளம்பரப் பணிக்காக அனுப்பப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு திரைப்படப் பிரிவில் ஆண்டிற்கு 12 திரைப்பட செய்தி மலர்களும், 12 வீடியோ செய்தி மலர்களும் தயாரிக்கப்படுகின்றன.

அங்கீகரிக்கப்பட்ட தயாரிப்பாளர்கள்

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு கருத்து விளக்கப்படங்கள் தயாரிக்க இயலாத நேரங்களில் தனியார் தயாரிப்பாளர்கள்மூலம் கருத்து விளக்கப்படங்கள் தயாரிக்கப்படுகின்றன. இதற்கென 108 தனியார் படத்தயாரிப்பாளர் அடங்கிய பட்டியலை அரசு அங்கீகரித்துள்ளது. இந்த பட்டியலில் உள்ள படத் தயாரிப்பாளர்கள் தமிழ்நாடு திரைப்படப் பிரிவுக்காக ஃபிலிம்/வீடியோ கருத்து விளக்கப்படங்கள் தயாரித்துள்ளனர். மேலும் ஃபிலிம் மற்றும் வீடியோ கோப்புக் காட்சிகள், தனியார் படத் தயாரிப்பாளர்களுக்கு அவர்கள் விருப்பத்தின் பேரில் அதற்குரிய கட்டணம் பெற்றுக் கொண்டு வழங்கப்படுகின்றன.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2009 ஜூலை 7]

அத்தியாயம்--8

எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம்

எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம், திரைப்படத் தயாரிப்பு தொழில்நுட்ப திரைப்பட நுணுக்கங்களையும், கலை உணர்வுகளையும் பயிற்றுவிக்கும் முன்னோடி நிறுவனம் ஆகும். இந்நிறுவனத்தின் முக்கியக் குறிக்கோள் பல்வேறு விதமான திரைப்படங்கள் மற்றும் வீடியோ படங்கள் தயாரிப்பதற்குத் தேவையான தொழில்நுட்பங்களையும் பிற திரைப்படத் துணைப் பாடங்களையும் மாணவர்களுக்குக் கற்றுத்தருவதாகும்.

இந்தியாவில் உள்ள திரைப்படம் மற்றும் தொலைக்காட்சித் தொழில்நுட்பப் பயிற்சி தரும் சிறந்த மூன்று நிறுவனங்களில் எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனமும் ஒன்றாகும்; மற்ற இரண்டு நிறுவனங்கள் பூனாவில் உள்ள திரைப்படம் மற்றும் தொலைக்காட்சித் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனமும், கொல்கத்தாவில் உள்ள சத்யஜித் ரே திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனமும் ஆகும்.

எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் கீழ்க்கண்ட பட்டயப் படிப்புகள் நடத்தப்படுகின்றன:

வ. எண்	பட்டயப் படிப்புகளின் பெயர்	காலம்	கல்வித் தகுதி	இருக்கைகளின் எண்ணிக்கை
1.	இயக்குதல் மற்றும் திரைக்கதை வசனம் எழுதுதல்	3 ஆண்டுகள்	ஏதாவது ஒரு பட்டப்படிப்பு	14
2.	ஒளிப்பதிவு	3 ஆண்டுகள்	மேல்நிலை வகுப்பு தேர்ச்சி	14
3.	ஒலிப்பதிவு மற்றும் ஒலிப்பொறியியல்	3 ஆண்டுகள்	மேல்நிலை வகுப்பு தேர்ச்சி	14

[2009 ஜூலை 7

வ. எண்	பட்டயப் படிப்புகளின் பெயர்	காலம்	கல்வித் தகுதி	இருக் கைகளின் எண்ணிக்கை
4.	படத்தொகுப்பு	3 ஆண்டுகள்	மேல்நிலை வகுப்பு தேர்ச்சி	14
5.	படம் பதனிடுதல்	3 ஆண்டுகள்	மேல்நிலை வகுப்பு தேர்ச்சி	14

இந்நிறுவனத்தில் பயிற்சி அளிக்கப்படும் எல்லா பட்டயப் படிப்புகளுக்கும் புதுடில்லியில் உள்ள அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழு (AICTE) அங்கீகாரம் அளித்துள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் மாணவர்களின் சேர்க்கை பற்றிய விவரம் முன்னணி தமிழ் மற்றும் ஆங்கில நாளேடுகளில் விளம்பரம் வெளியிடப்பட்டு, ஜூலைத் திங்களில் மாணவர்களின் சேர்க்கை நடைபெறுகின்றது.

கட்டண விவரம்:

கல்விக் கட்டணம் — ரூ.10,000

சிறப்புக் கட்டணம் — ரூ.1,500

வளர்ச்சிக் கட்டணம் — ரூ.1,000

இறுதி ஆண்டில், அனைத்துத் துறைகளிலும் பயிலும் மாணவர்கள் 14 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு குழுவும் ஒரு பட்டயக் குறும்படம் வீதம் 14 பட்டயப் படங்கள் தயாரிக்க பயிற்சி அளிக்கப்படுகிறது. தமிழக அரசு ஆண்டுதோறும் பட்டயப் படிப்பு மாணவர்களின் படப்பிடிப்பு தயாரிப்புச் செலவிற்காக ரூ.14 இலட்சம் செலவு செய்கிறது.

தமிழ்நாடு அரசு, "எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர் குறும்பட விருது" என்ற பெயரில் இந்நிறுவன மாணவர்கள் தயாரிக்கும் பட்டயக் குறும்படங்களின் சிறந்த இயக்குநர், சிறந்த ஒளிப்பதிவாளர், சிறந்த ஒலிப்பதிவாளர், சிறந்த படத்தொகுப்பாளர் மற்றும் சிறந்த படச்சுருள்

2009 ஜூலை 7]

பதனிடுபவர் ஆகியோருக்கு தலா ஒரு பவுன் தங்கப் பதக்கம் ரூ.5,000 ரொக்கம் மற்றும் நினைவுக் கேடயம் வழங்கி வருகிறது.

மாணவர்களால் தயாரிக்கப்படும் பட்டயப் படங்களை தேசிய மற்றும் சர்வதேசத் திரைப்பட விழாக்களில் கலந்து கொள்ள அனுப்பும் பொருட்டு ஆண்டுதோறும் ரூ.75,000 தமிழக அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

எம்.ஜி.ஆர். திரைப்பட நகரிலுள்ள குளிர்சாதன வசதியுடன் கூடிய படப்பிடிப்புத் தளத்தின் சீரமைப்புப் பணிகளுக்காக ரூ.1.43 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தற்போது பொதுப் பணித் துறைமூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது.

மாணவர்கள் படப்பிடிப்புத் தளம் ரூ.18 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் 2008-2009 ஆண்டு பகுதி-II திட்டத்தின்கீழ் ரூ.90 இலட்சம் செலவில் வண்ணப்படச் சுருள் பகுப்பாய்வு (Colour Analyser) கருவி கொள்முதல் செய்ய அரசு அனுமதி வழங்கியது. ஆனால் சில நிர்வாகக் காரணங்களினால் 2009 மார்ச் மாதத்திற்குள் (நிதியாண்டிற்குள்) மேற்கண்ட கருவிகள் வாங்க இயலவில்லை. இருப்பினும் 2009-2010 ஆம் நிதியாண்டில் மேற்கண்டுள்ள கருவிகளை வாங்கிட தொடர் நடவடிக்கை எடுக்கப்படும்.

2009-2010 ஆம் நிதியாண்டில் பகுதி-II திட்டத்தின்கீழ் அரசு படப் பதனிடுதல் பிரிவிற்குக் கருவிகள் வாங்கிட ரூ.50 இலட்சமும், நூலக மேம்பாட்டிற்கு ரூ.4.50 இலட்சமும் வழங்கிட அரசு அனுமதி அளித்துள்ளது.

[2009 ஜூலை 7

அத்தியாயம்–9

திரைப்படம், வீடியோ மற்றும் கேபிள் தொலைக்காட்சி இணைப்பு

தமிழ்நாட்டில் திரைப்படத் தொழில் பல ஆயிரக்கணக்கான கலைஞர்களுக்கும், தொழில்நுட்ப வல்லுநர்களுக்கும் வேலை வாய்ப்பளிக்கும் முக்கியத் தொழிலாக விளங்குகிறது. குறைந்த மற்றும் நடுத்தர வருமானப் பிரிவைச் சார்ந்தவர்களுக்குத் திரையரங்குகளில் திரைப்படங்களைப் பார்ப்பது என்பது ஒரு முக்கியமான பொழுது போக்காகும். எனவே, திரைப்படத் தொழிலின் முன்னேற்றத்திற்காக பல்வேறு சலுகைகளை வழங்கி வருகிறது.

2. தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட வகையிலான மொத்தம் 1,535 திரையரங்குகள் உள்ளன:

1. நிரந்தரத் திரையரங்குகள்	:	1,257
2. ஓரளவு நிரந்தரத் திரையரங்குகள்	:	117
3. நிரந்தரமற்ற திரையரங்குகள்	:	152
4. திறந்த வெளித் திரையரங்குகள்	:	9
மொத்தம்	:	1535

3. 1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) சட்டம் மற்றும் அதன்கீழ் இயற்றப்பட்ட 1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) விதிகள் திரையங்குகளில் திரைப்படம் காண வருகின்ற பொதுமக்களுக்குக் கிடைக்க வேண்டிய அடிப்படை வசதிகள், கட்டட நிலைப்புத் தன்மை, முறையான பராமரிப்பு ஆகியவற்றிக்கு வகை செய்கின்றன. தற்போதுள்ள திரைப்படச் சட்டம் அதாவது 1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரையரங்குகள் (முறைப்படுத்துதல்) சட்டம் மிகவும் பழைமையான ஒன்று. அதில் சினிமாத் துறையில் ஏற்பட்டுள்ள நவீன முன்னேற்றங்களைக் கையாள போதுமான வழிவகைகள் இல்லை. எனவே, தற்போதுள்ள 1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரையரங்குகள் (முறைப்படுத்துதல்) சட்டம் மற்றும் அதன்கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகளை மாற்றி அமைக்க வேண்டியது அவசியம் என அரசு கருதுகிறது. எனவே, மேற்படி சட்டம் மற்றும் விதிகளுக்குத் தகுந்த மாற்றங்களை தெரிவிக்கும் வகையில் நில நிர்வாகத் துறை சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் அவர்களின் தலைமையில் அலுவல் மற்றும் அலுவல் சாராத உறுப்பினர்களைக் கொண்ட குழுவை 2007 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் அரசு

2009 ஜூலை 7]

அமைத்துள்ளது. அந்தக் குழு தன்னுடைய அறிக்கையை அரசுக்கு அளித்துள்ளது. அது தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளது.

கேபிள் தொலைக்காட்சிக் கட்டமைப்பு

4. 1995 ஆம் ஆண்டு கேபிள் தொலைக்காட்சிக் கட்டமைப்பு (முறைப்படுத்துதல்) சட்டம் இந்தியா முழுவதும் உள்ள கேபிள் தொலைக்காட்சிக் கட்டமைப்பினை முறைப்படுத்துகிறது. *2000* ஆம் ஆண்டு திருத்தப்பட்ட கேபிள் தொலைக்காட்சி (முறைப்படுத்தல்) சட்டத்தின் (சட்டம் *36/2000*) படி மாவட்ட மாஜிஸ்டிரேட்டுகள் உட்கோட்ட மாஜிஸ்டிரேட்டுகள் மற்றும் சென்னை காவல் துறை ஆணையாளர் ஆகியோர் இச்சட்டத்தின் *3, 5, 6* அல்லது *8* ஆகிய பிரிவுகளை மீறும் கேபிள் தொலைக்காட்சி இயக்குபவர்கள்மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர். மத்திய அரசு, *9-1-2004* ஆம் நாளிட்ட அதன் அறிவிக்கையின் மூலம், கேபிள் தொலைக்காட்சி சேவையை இந்திய தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்திடம் (TRAI) ஒப்படைத்துள்ளது. நாடு முழுவதும் ஒளிபரப்புச் சேவையை முறைப்படுத்த *1995* ஆம் ஆண்டு கேபிள் தொலைக்காட்சிக் கட்டமைப்பு (முறைப்படுத்துதல்) சட்டத்திற்குப் பதிலாக புதிய சட்டம் ஒன்றை இயற்றுவது குறித்த செயற்குறிப்பு மத்திய அரசின் தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறையின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

வீடியோ சட்டமும் விதிகளும்

5. 1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு வீடியோ கேசட் பதிவுக் கருவிகள் மூலமாக தொலைக்காட்சிப் பெட்டி திரையிலும், கம்பிவடத் தொலைக்காட்சிப் பெட்டித் திரையிலும் திரைப்படங்களைக் காட்டுதல் (முறைப்படுத்தல்) சட்டம் தமிழ்நாட்டில் வீடியோ கேசட் பதிவுக் கருவிகளைப் பயன்படுத்தி, திரைப்படங்களை தொலைக்காட்சித் திரைகளில் ஒளிபரப்புச் செய்வதை முறைப்படுத்துகிறது. இச்சட்டம் வீடியோ கேசட் பதிவுக் கருவிகள் மூலம் தொலைக்காட்சித் திரையில் திரைப்படங்களை ஒளிபரப்புவதற்கும், வீடியோ நூலகங்கள் நடத்துவதற்கும் தனியார்களுக்கு உரிமம் வழங்க வகை செய்கிறது. மாவட்ட அளவில் அந்தந்த மாவட்ட ஆட்சியர்களும், சென்னை மாநகரில், காவல் துறை ஆணையாளரும் உரிமம் வழங்கும் அலுவலர்களாக செயல்படுகின்றனர். வீட்டில் குடும்ப உறுப்பினர்களின் பயன்பாட்டிற்காக வீடியோ கேசட் பதிவு கருவிகள்மூலம்

[2009 ஜூலை 7

தொலைக்காட்சித் திரையில் திரைப்படங்களைக் காட்டுவதற்கு உரிமம் எதுவும் அவசியம் இல்லை.

திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவு

6. தமிழ்நாடு புலானாய்வுத் துறை குற்றப்பிரிவில் திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவு சென்னை காவல் துறை கூடுதல் தலைமை இயக்குநரின் (குற்றம்) நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகிறது. பதிப்புரிமைச் சட்டம், 2000 ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்பச் சட்டம் ஆகியவை தொடர்பான சட்ட விதி மீறல்களைத் தடுக்கவும், இப்பிரிவு ஆற்றும் பணிகள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது பன்னிரெண்டு திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவுகள் தமிழ்நாட்டில் இயங்கி வருகின்றன. வீடியோ தடுப்புப் பிரிவினால் 2004 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரை (17-2-2009 வரை) பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை, அவ்வழக்குகளில் கைது செய்யப்பட்ட எதிரிகளின் எண்ணிக்கை, கைப்பற்றப்பட்ட சொத்துக்களின் மதிப்பு முதலிய விவரங்கள் கீழேயுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன:

வருடம்	பதிவு செய்யப் பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	கைது செய்யப் பட்ட எதிரிகளின் எண்ணிக்கை	கைப்பற்றப் பட்ட சொத்தின் மதிப்பு (ரூபாயில்)	கம்பிவட தொலைக் காட்சி நடத்து பவர்கள் மீது பதிவு செய்யப் பட்ட வழக்கு களின் எண்ணிக்கை
2004	1,180	1,206	12,06,43,647/-	53
2005	826	950	9,44,55,557/-	13
2006	1,153	1,193	19,00,04,502/-	10
2007	1,844	1,866	17,38,74,360/-	9
2008	1,968	1,955	1,72,23,401/-	17
2009 (17.02.09 வரை)	64	64	16,36,965/-	3

மாநில அளவில் அதிகார எல்லையைக் கொண்டுள்ள திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவு மாநில முழுவதிலும் திருட்டு வீடியோவை நன்கு கட்டுப்படுத்தியுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2009 ஜூலை 7]

அத்தியாயம்—10

தமிழரசு

தமிழ்நாடு அரசின் கொள்கைகள், செயல்பாடுகள், சாதனைகள் போன்றவற்றை மக்களிடையே கொண்டு சேர்க்கும் தமிழக அரசின் அச்சு ஊடகமாக 'தமிழரசு' இதழ் திகழ்கிறது.

'தமிழரசு' தமிழ் இதழ், மாத இதழாகவும், ஆங்கில இதழ் காலாண்டு இதழாகவும் வெளியிடப்பட்டு வருகின்றன. தமிழரசு தமிழ் இதழின் விலை ரூ.10/- ஆகவும், ஆண்டுச் சந்தா ரூ.120/- ஆகவும், ஆயுள் சந்தா (10 ஆண்டுகளுக்கு) ரூ.1,000/- ஆகவும், நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

'தமிழரசு' ஆங்கில இதழின் விலை ரூ.15/- ஆகவும், ஆண்டுச் சந்தா ரூ.60/- ஆகவும், ஆயுள் சந்தா (10 ஆண்டுகளுக்கு) ரூ.500/- ஆகவும், நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

தமிழரசு தமிழ் மற்றும் ஆங்கில இதழ்களின் சந்தாக்களின் எண்ணிக்கை 69,591 ஆகும். இதில் 54,640 ஆயுள் சந்தாக்களாகும்.

தமிழரசு தமிழ் மற்றும் ஆங்கில இதழ்கள் தமிழக அரசின் இணையதளத்திலும் (www.tn.gov.in) உடனுக்குடன் வெளியிடப்பட்டு வருகிறது.

வாசகர்களுக்கும், பொது மக்களுக்கும் பயனுள்ள பல தகவல்களை தமிழரசு இதழ் வழங்கி வருகிறது. மேதகு தமிழக ஆளுநர் அவர்களின் உரைத் தொகுப்புகள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உரைத் தொகுப்புகள் மற்றும் அறிவிப்புகள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களின் உரைத் தொகுப்புகள் மற்றும் அறிவிப்புகள், தமிழக அரசின் சாதனைகள், தமிழக அரசின் திட்டங்கள், அவற்றின் செயல்பாடுகள், தமிழக அரசால் மக்களுக்கு வழங்கப்படும் நலத் திட்ட உதவிகள், மாவட்ட வளர்ச்சிப் பணிகள் குறித்த கட்டுரைகள் மற்றும் திட்டங்களால் பயன்பெற்ற பயனாளிகளின் நேர்காணல்கள் மற்றும் வெற்றிக் கதைகள் ஆகியவை வெளியிடப்படுகின்றன. மேலும், மகளிர் நலம் மற்றும் சமூக நலம் சார்ந்த திட்டங்களை விளக்கிடும் கட்டுரைகள், இலக்கியச் சிந்தனைகள், சிறுகதைகள், கவிதைகள் ஆகியனவும் வெளியிடப்பட்டு வருகின்றன.

[2009 ஜூலை 7

தமிழரசு இதழ்கள் மட்டுமல்லாமல், சிறப்பு வெளியீடுகள், மடிப்பேடுகள், சிறப்புக் கையேடுகள், அரசு விழா அழைப்பிதழ்கள், சுவரொட்டிகள் ஆகியவற்றையும் அழகு மிளிர வடிவமைத்து, தமிழரசு அச்சகத்தில் சிறப்புற அச்சிடப்பட்டு வெளியிடப்படுகின்றன. மேலும், செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் இதரப் பிரிவுகளுக்குரிய விண்ணப்பங்கள் மற்றும் படிவங்கள் அச்சிடப்படுகின்றன.

பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு விழாவை தமிழக அரசு நடப்பாண்டில் *(2008-2009)* சிறப்பாகக் கொண்டாடுவதையொட்டி, "பேரறிஞர் அண்ணா வாழ்க்கைக் குறிப்பு" மடிப்பேடுகளாக அச்சிடப்பட்டு இலவசமாக பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு அரசின் அறிவிப்புகள் மற்றும் நலத் திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு ஆக்கப்பணிகளை பொதுமக்கள் அறிந்து பயன்பெறும் வகையில், செய்திகள் தொகுத்து வடிவமைக்கப்பட்டு, 'அரசுச் செய்தி' சுவரொட்டி அரசு மைய அச்சகத்தின்மூலம் மாதம் இருமுறை (ஒரு முறைக்கு *20,000* சுவரொட்டிகள் வீதம்) அச்சடிக்கப்பட்டு, மாவட்டங்கள் மற்றும் மாநகராட்சிகளிலுள்ள செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் வாயிலாக பொது மக்கள் கூடும் இடங்களில் ஒட்டப்பட்டு, நல்ல முறையில் விளம்பரம் செய்யப்பட்டு வருகிறது.

சிறப்பு வெளியீடுகள்

1. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல் துறை அதிகாரிகள் மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் *2008* ஜூன் *19, 20* ஆகிய நாட்களில் ஆற்றிய உரை.

2. சர். பிட்டி. தியாகராயர், டாக்டர் சி. நடேசனார், டாக்டர் டி.எம். நாயர் ஆகியோரின் வாழ்க்கைக் குறிப்பு.

3. "மத நல்லிணக்கத்தைப் பராமரிப்பதில் முனைப்புடன் செயல்பட்டு வரும் தமிழகம்" - புது டெல்லியில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் தலைமையில் நடைபெற்ற தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவின் கூட்டத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் உரை *13-10-2008.*

2009 ஜூலை 7]

4. "பயங்கரவாதத்தை ஒழிக்க—ஒவ்வொரு குடிமகனும் உறுதி பூண வேண்டும்"—புதுடெல்லியில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்கள் தலைமையில் 6-1-2009 அன்று நடைபெற்ற உள்நாட்டுப் பாதுகாப்புத் தொடர்பான முதலமைச்சர்கள் மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் உரை.

5. திருவள்ளுவர் திருநாளில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களிடமிருந்து அய்யன் திருவள்ளுவர் விருது, தந்தை பெரியார் விருது, அண்ணல் அம்பேத்கர் விருது, பேரறிஞர் அண்ணா விருது, பெருந்தலைவர் காமராசர் விருது, மகாகவி பாரதியார் விருது, பாவேந்தர் பாரதிதாசன் விருது, தமிழ்த்தென்றல் திரு.வி.க. விருது, முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது ஆகிய தமிழக அரசின் விருது பெறுவோரின் தகுதியுரை 15-1-2009.

6. "ஆளுநர் உரை: கலைஞர் அரசின் திசைகாட்டும் கருவி" - தமிழக சட்டப் பேரவையில் மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்குப் பதிலளித்து மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 30-1-2009 அன்று ஆற்றிய உரை.

தமிழரசு அலுவலகப் பயன்பாட்டுக்காக பகுதி-II திட்டம் 2008-2009-இன்கீழ் ரூ.4.96 இலட்சம் செலவில் பலவண்ண அச்சுப்பொறி (Multicolour Printer) பொருத்தி பயன்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழரசு அச்சகப் பணியாளர் வருகையினைப் பதிவு செய்ய, ரூ.38 ஆயிரம் செலவில் நவீன நேரம் பதிவு செய்யும் கருவி பொருத்தப்பட்டது.

[2009 ஜூலை 7

அத்தியாயம்–11

பொருட்காட்சி

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் பொருட்காட்சிப் பிரிவால் நடத்தப்படும் அரசுப் பொருட்காட்சிகள், அரசின் கொள்கைகள், நலத் திட்டங்கள், சமூக விழிப்புணர்ச்சி மற்றும் சாதனைகள் குறித்த விளக்கங்களைப் பொதுமக்கள் எளிதில் அறிந்திடும் வகையில் ஆண்டுதோறும் ஏப்ரல் - ஜூன் மாதங்களில் மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாநகரங்களிலும், ஜூலை - செப்டம்பர் மாதங்களில் சேலம் மாநகரிலும், இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை திருநெல்வேலி அல்லது வேலூர் நகரிலும் நடத்திடவும் ஆணையிடப்பட்டுள்ளது.

இப்பொருட்காட்சிகளில், மத்திய, மாநில அரசுத் துறைகள், பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் ஆகியவை கலந்து கொள்கின்றன. அரசுப் பொருட்காட்சிகள் மக்களுக்குப் பொழுதுபோக்காக அமைவதோடு பலருக்கு வேலை வாய்ப்பையும் அளித்து வருகின்றன. மேலும், இப்பொருட்காட்சிகளில் பல்சுவை கலை நிகழ்ச்சிகள் நாள்தோறும் நடைபெறுகின்றன. ஒவ்வொரு அரசுப் பொருட்காட்சியிலும், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை சிறந்த முறையில் விற்பனை செய்யும் பொருட்டு கடைகள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. ஒவ்வொரு அரசுப் பொருட்காட்சியிலும் நடுவர் குழு அமைக்கப்பட்டு, அவர்களால் தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த அரசுத் துறை மற்றும் அரசு சார்பு நிறுவனங்களின் அரங்குகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும், மாவட்டங்களில் ஆண்டுதோறும் முக்கிய விழாக்கள் நடைபெறும் இடங்களில் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள்மூலம் சிறு கண்காட்சிகள், நடத்தப்படுகின்றன. இதற்கென ஆண்டுதோறும் ரூ.3 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

இந்தியத் துணைக் கண்டத்தின் ஒருமைப்பாடு, மதநல்லிணக்கம் ஆகியவற்றை வலியுறுத்தும் வகையில் புதுடெல்லியில் ஆண்டுதோறும் நடைபெறும் மலர்ப் பேரணி விழாவில் ((Phool Walon Ki Saire) தமிழ்நாடு அரசின் சார்பில் மலர்ப் பதாகையை ஏந்தி, தமிழக

2009 ஜூலை 7]

நாட்டுப்புறக் கலைக் குழுவினர் கலை நிகழ்ச்சிகள் நடத்திப் பங்கேற்று பரிசு பெற்று வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும். 2008 ஆம் ஆண்டும் இப்பேரணியில் தமிழ்நாடு பரிசு பெற்றது பெருமைப்படத்தக்கது.

சென்னை மற்றும் புதுடெல்லியில் ஆண்டுதோறும் நடைபெறும் குடியரசுத் தினவிழா அணிவகுப்பில் அலங்கார ஊர்திகள் கலந்து கொள்வதும், சென்னையில் நடைபெறும் குடியரசுத் தின விழாவில், அரசின் பல்வேறு திட்டங்களை வெளிப்படுத்தும் வகையில், அலங்கார ஊர்திகள் அணிவகுப்பு நடத்திட ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொள்வதும் இத்துறையின் பங்களிப்பாகும். 2009 ஜனவரித் திங்களில் புதுடெல்லியில் நடைபெற்ற குடியரசுத் தின விழா அலங்கார ஊர்தி அணிவகுப்பில், தமிழ்நாடு அரசின் சார்பில் பங்கேற்று மூன்றாம் பரிசினையும், சென்னையில் நடைபெற்ற குடியரசுத் தின அலங்கார ஊர்தி அணிவகுப்பில் முதல் பரிசினையும் இத்துறை பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஒவ்வொரு ஆண்டும் சென்னையில் நடைபெறும் அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில் இத்துறை பங்கேற்று அரங்கு அமைத்து வருகிறது. புதுடெல்லியில் நடைபெறும் அகில இந்திய பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியிலும், தமிழகத்தின் சார்பில் இத்துறை ஆண்டுதோறும் பங்கேற்று வருகிறது.

பல்துறைப் பணி விளக்க முகாம்கள்

அரசின் பல்வேறு துறைகளையும் ஒருங்கிணைத்து அரசுத் துறைகளின் சார்பில் அரங்குகள் அமைத்து, அரசின் திட்டங்களையும், சாதனைகளையும், கொள்கை விளக்கங்களையும், பொது மக்களுக்கு பயன்தரும் வகையில் விளக்கக்கூடிய வகையில், பல்துறைப் பணி விளக்க முகாம்கள் மற்றும் சிறு புகைப்படக் கண்காட்சிகள் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட்டு வருகின்றன. பல்துறைப் பணி விளக்க முகாம்கள் நடைபெறும் போது, பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்துவதன்மூலம் விளம்பரப் பணிகளும் மேற்கொள்ளப் படுகின்றன.

மேலும், அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைமையில், மாவட்ட அளவில் கிராமங்களில்

[2009 ஜூலை 7

நடத்தப்படும் பொது மக்கள் குறைகள் கேட்கும் மனு நீதி நாள் நிகழ்ச்சிகளின் போதும் சிறிய அளவிலான பல்துறைப் பணி விளக்க முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

அரசு நல்வாழ்வுத் திட்டங்களைப் பொது மக்கள் முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ளும் வகையில், விளம்பரப்படுத்தும் வழிமுறைகள் குறித்து, மாவட்ட விளம்பர ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஆலோசித்து, முடிவுகள் மேற்கொண்டு, விளம்பரப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கடந்த ஆண்டு மானியக் கோரிக்கையில் ஆண்டிற்கு இரண்டு முறை மாவட்டங்களில் பொருட்காட்சி நடத்தப்படும் என்ற அறிவிப்பின்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழாவினையொட்டி சிறப்புப் புகைப்படக் கண்காட்சிகள் மாவட்டங்களின் ஊராட்சி அளவில் ஆண்டு முழுவதும் நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதால், மாவட்டத்திற்கு ஆண்டிற்கு இரண்டு முறை பொருட்காட்சிகள் நடத்துவதற்கு அதிக நிதி தேவைப்படுவதால், பொருட்காட்சிகளை மாவட்ட அளவில் எளிமையான முறையில் நடத்த செயல் திட்டங்கள் உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2009 ஜூலை 7]

அத்தியாயம்—12

மாவட்ட செய்தி—மக்கள் தொடர்பு அலுவலகங்கள்

தமிழக அரசு அறிவிக்கும் பல்வேறு நலத் திட்டங்களின் நோக்கங்கள் மற்றும் சாதனை விவரங்களைப் பொதுமக்கள் அறியவும், அவற்றின் பலனை முழுமையாக அடைவதற்கு ஏதுவாகவும், அவற்றைப் பற்றிய விழிப்புணர்வை அவர்களிடம் உருவாக்கிடவும், விளம்பரப் பணிகளையும் செவ்வனே மேற்கொள்ளும் பணிகளை மாவட்டங்களில் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள் மேற்கொண்டு வருகிறார்கள்.

அனைத்து ஊடகங்களுக்கு செய்தி வெளியீடுகள்-புகைப்படங்கள் வழங்குதல், வீடியோ படக் காட்சிகள் நடத்துதல், பத்திரிகையாளர் கூட்டங்களுக்கும் சுற்றுப்பயணங்களுக்கும் ஏற்பாடு செய்தல், கேபிள் தொலைக்காட்சிகள்மூலம் விளம்பரப் பணி ஆற்றுதல், அரசு விழாக்களை நடத்துதல், சிறு கண்காட்சியினை அமைத்தல், நினைவகங்களைப் பராமரிக்கச் செய்தல் போன்ற பல்வேறு பணிகளைச் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள் மேற்கொண்டு வருகிறார்கள்.

இவர்கள் பணி சிறக்கும் வகையில் அனைத்து மாவட்டங்களுக்கும் அரசின் சார்பில் புதிய வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள், 'டிஜிட்டல்' நிழற்படக் கருவிகள், நிகரிகள், ஸ்கேனர்கள், நகலெடுக்கும் இயந்திரங்கள் மற்றும் செல்லுமிடத் தொலைபேசிகள் உள்ளிட்ட அடிப்படைத் தேவைகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஆறு மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கு இணையதள வசதியுடன் கூடிய மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலகங்கள் நவீன தகவல் தொடர்புச் சாதனங்களுடன் தன்னிறைவுடன் செயல்படுகின்றன.

மாவட்ட அலுவலகங்களில் உள்ள பழுதடைந்த ஊர்திகள், நிகரிகள், நகலெடுக்கும் கருவிகள் ஆகியவை பகுதி-II திட்டங்களில் படிப்படியாகப் புதுப்பிக்கப்பட்டு, பணிகள் தொய்வில்லாமல் நடக்கத்தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2008-2009 ஆம் ஆண்டு பகுதி-II திட்டத்தின்கீழ், ரூ.42.00 இலட்சம் செலவில் கோயம்புத்தூர், காஞ்சிபுரம், கரூர், நாமக்கல், பெரம்பலூர், திருவள்ளூர் மற்றும் திருவாரூர் மாவட்டங்களுக்குப் பழைய ஊர்திகளுக்குப் பதிலாக புதிய 7 டெம்போ டிராவலர் ஊர்திகள்

[2009 ஜூலை 7

(வீடியோ வாகனங்கள்) வழங்கப்பட்டுள்ளன. மேலும், ரூ.9.00 இலட்சம் செலவில் 2 டெம்போ டிராக்ஸ் ஜூடோ ஊர்திகள் (செய்தியாளர் வாகனங்கள்) காஞ்சிபுரம் மற்றும் சென்னை ஆகிய மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டன. செய்தி மக்கள் தொடர்புத் துறையில் கணினிப் பயன்பாட்டினை அதிகரிக்கும் வகையில், 9 மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கும் மற்றும் தலைமையிடப் பயன்பாட்டிற்கும் மொத்தம் 17 கணினிகள் ரூ7.21 இலட்சம் செலவில் வாங்கி வழங்கப்பட்டன. மேலும், கடலூர், கோயம்புத்தூர், நாகப்பட்டினம், சேலம், புதுக்கோட்டை, வேலூர், திருச்சிராப்பள்ளி, காஞ்சிபுரம், தருமபுரி மற்றும் நீலகிரி மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலகத்திலுள்ள பழைய நிகரிகளுக்குப் பதிலாக 10 புதிய நிகரி இயந்திரங்கள் ரூ.0.88 இலட்சம் செலவில் வாங்கி வழங்கப்பட்டன.

புதியதாகத் தோற்றுவிக்கப்பட்ட அரியலூர் மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலகத்திற்கு விளம்பரச் சாதனங்கள் வாங்கி வழங்கவும், ரூ.7.00 இலட்சம் செலவில் ஒரு டெம்போ டிராவலர் வாகனம் (வீடியோ வாகனம்) வாங்கவும் அரசாணை வெளியிடப்பட்டு தொகை வழங்கப்பட்டுள்ளது. மேலும், திருப்பூர் மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலகத்திற்கு விளம்பரச் சாதனங்கள் வாங்கி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2009 ஜூலை 7]

அத்தியாயம்—13

தகவல் மையங்கள்

செய்தி-மக்கள் தொடர்புத் துறையின்கீழ் சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், கோயம்புத்தூர், புதுடெல்லி ஆகிய ஆறு இடங்களில் செய்தி நிலையங்கள் இயங்கி வருகின்றன.

மாநிலச் செய்தி நிலையம், சென்னை அரசினர் தோட்டத்திலுள்ள கலைவாணர் அரங்கத்தின் பின்புறம் செயல்பட்டு வருகிறது. மாநிலச் செய்தி நிலையத்தில் நூலகம் மற்றும் படிப்பகம் செயல்பட்டு வருகிறது.

இந்நூலகத்தில், தலைவர்களின் வரலாற்று நூல்கள், குழந்தைகள் நூல்கள், அறிவியல் நூல்கள் மற்றும் அரசியல் நூல்கள் போன்ற பல்வேறு தலைப்புகளில் சுமார் 21,000-க்கும் மேற்பட்ட தமிழ், ஆங்கில நூல்கள் உள்ளன. இது தவிர சட்டமன்றப் பேரவை நடவடிக்கை குறிப்புகள், பேரவை வெளியீடுகள், அரசுத் துறை வெளியீடுகள் ஆகியவை இங்கு மேற்கோள் பணிக்காக உள்ளது. அரசின் சாதனைகள் குறித்த விவரங்களும் பொதுமக்களுக்கு தெரிவிக்கப்படுகின்றது. நூலகத்தைப் பள்ளி மாணவ, மாணவியர், கல்லூரி மாணவ, மாணவியர், ஆசிரியர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் ஆகியோர் பயன்படுத்தி வருகின்றார்கள்.

மாநிலச் செய்தி நிலையத்திலுள்ள படிப்பகத்தில் தமிழ், ஆங்கில நாளேடுகள், வார, மாத மற்றும் காலமுறை இதழ்கள் வாங்கப்பட்டு பொதுமக்கள் படிப்பதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது. நாள்தோறும் 100 முதல் 150 நபர்கள் வரை படிப்பகத்தைப் பயன்படுத்தி பயன்பெற்று வருகின்றார்கள்.

காலமுறை இதழ்கள், நாளேடுகள் ஆகியவை சேகரித்து வைக்கப்பட்டு, அரசின் மேற்கோள் பணிக்காகத் தேவைப்படும் பொழுது வழங்கப்படுகின்றன. மேலும், செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் அரசு விழாக்களுக்குத் தேவையான குறிப்புகள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், அரசின் உயர் அலுவலர்கள் ஆகியோருக்கு மேற்கோளுக்காகவும் தரப்படுகின்றது. தமிழரசு இதழுக்குக் குறிப்பு எடுத்துக் கொள்ளத் தேவையான நூல்களும், தகவல்களும் மாநிலச் செய்தி நிலையத்திலிருந்து வழங்கப்படுகின்றது.

[2009 ஜுலை 7

மேலும், மாநிலச் செய்தி நிலையத்திலுள்ள தகவல் பலகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சாதனைகள் மற்றும் பல்வேறு பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட புகைப்படங்கள் பொதுமக்கள் பயன்பெறும் விதத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

நிறைவுரை

அரசு அளிக்கும் திட்டங்களின் பயன்கள் முழுவதும் மக்களை உடனுக்குடன் சென்றடைய வேண்டும் என்பதுதான் தமிழக அரசின் உன்னத நோக்கமாகும். இந்த உயரிய இலக்கினை அடைந்திடும் வகையில், வளர்ந்து வரும் புதிய தொழில்நுட்ப முறைகள் அனைத்தையும் பயன்படுத்தி, மக்கள் நல அரசின் பணிகளை மக்களிடம் கொண்டு சேர்க்கும் மகத்தான செயல்பாடுகளை செய்தி-மக்கள் தொடர்புத் துறை சிறப்பாகச் செய்து வருகிறது. கடைக்கோடி மக்களுக்கும் அரசின் நலத் திட்ட உதவிகள் சென்றடைந்து பொது மக்கள் அனைவரும் வளமான வாழ்வைப்பெற்று, நமது மாநிலம் முன்னேற்றப் பாதையில் வீறுநடை போடுகிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு–1

வரவு-செலவு திட்ட மதிப்பீடு 2009-2010 நிகரச் செலவு ரூபாய் ஆயிரத்தில்

		2008-2009 கணக்குகள்	2008-2009 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு	2008-2009 திருத்த மதிப்பீடு	2009-2010 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு
2059	பொதுப்பணிகள்	79,93	75,40	81,62	65,70
2220	செய்தி மற்றும் விளம்பரம்	30,99,53	34,86,76	42,84,40	40.90.97
2235	சமூகப் பாதுகாப்பும் நலனும்	1,36,06	48,60	41,89	42.75
2250	ஏனைய சமூகப் பணிகள்	5,30	6,18	7,32	8,20
4220	செய்தி விளம்பரம் குறித்த மூலதனச் செலவு	78,89	97,00	1,01,98	1
6220	செய்தி-விளம்பரத்திற்கான கடன்கள்	5,22	..	5,43,42	..
	மொத்தம்	3,40,493	3,71,394	5,06,063	4,20,763

இணைப்பு VI

(737 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண் 30–எழுதுபொருள் மற்றும் அச்சு கொள்கை விளக்கக் குறிப்பு, 2009–2010

1. தோற்றம் மற்றும் வளர்ச்சி

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, 1831 ஆம் ஆண்டு, டிசம்பர் 17 அன்று துவங்கப்பட்டு, 177 ஆண்டுகளைக் கடந்து செயல்பட்டு வருகின்றது. புனித ஜார்ஜ் கோட்டை அரசிதழ்களை அச்சிடுவதற்கென்று தனியாக அச்சுப் பிரிவுடன் இத்துறை சென்னையில் 10 பணியாளர்களைக் கொண்டு நிறுவப்பட்டது. அதிலிருந்து படிப்படியாக வளர்ச்சி அடைந்து தற்போது இத்துறையில் அரசு மைய அச்சகம் மற்றும் அரசு எழுதுபொருள் கிடங்கு தவிர, ஏழு கிளை அச்சகங்கள் உள்ளன.

தமிழக அரசின் எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை அரசின் பல்வேறு துறைகள் மற்றும் அரசு நிறுவனங்களின் அனைத்து அச்சுப் பணிகளையும் மேற்கொண்டு வருவதால், சேவைத் துறையாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

1.1 அரசு அச்சகங்கள் செயல்படும் இடங்கள்

அரசு மைய அச்சகம் மற்றும் உயர் நீதிமன்ற வளாகத்தில் உள்ள அரசு கிளை அச்சகம் சென்னை மாநகரிலேயே செயல்பட்டு வருகின்றன. அரசு கிளை அச்சகங்கள் மதுரை, திருச்சிராப்பள்ளி சேலம், புதுக்கோட்டை, விருத்தாசலம் மற்றும் சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை, மதுரை ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. இவை தவிர, அரசு எழுதுபொருள் கிடங்கும் சென்னை மாநகரிலேயே செயல்பட்டு வருகின்றது.

2. எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை பற்றிய ஒரு கண்ணோட்டம்

இத்துறையில் மொத்தம் 1,802 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். அதில் 429 பெண் பணியாளர்கள் அடங்குவர்.

2009 ஜூலை 7]

இத்துறையில் 82 (ஆண் 65, பெண் 17) உடல் ஊனமுற்ற பணியாளர்கள், 70 (ஆண் 59, பெண் 11) கண் பார்வையற்றவர்கள், 5 (ஆண் 3, பெண் 2) காது கேளாத மற்றும் வாய் பேசாத பணியாளர்கள் ஆக மொத்தம் உடல் குறைபாடுள்ள 157 நபர்கள் பணிபுரிகின்றனர்.

2.1 எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்ககம், சென்னை–2

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்ககம் பணியாளர் நிர்வாகம், பொது நிர்வாகம், அனைத்து அரசு அச்சகங்களுக்கும் தேவையான இயந்திரங்களின் மையக் கொள்முதல், அனைத்து அரசு அச்சகங்களிலும் உள்ள இயந்திரப் பயன்பாட்டிற்குத் தேவையான உதிரி பாகங்கள் மற்றும் பயன்படுபொருட்களின் மையக் கொள்முதல் மற்றும் இணக்கமான செயல்திறமிக்க தொழில் உறவுகளைப் பராமரித்தல் போன்ற அனைத்து கொள்கை சார்ந்த நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது. மேலும், அச்சு தொடர்பான அனைத்துப் பணிகளிலும் அரசுக்கு ஆலோசகராக விளங்கி வருகின்றது.

துறைத் தலைவர், இயக்குநர் ஆவார். அவருக்கு உதவியாக நிர்வாகப் பிரிவினைப் பொறுத்தமட்டில் இணை இயக்குநரும், தொழில்நுட்பப் பிரிவினைப் பொறுத்தமட்டில் ஒரு பொது மேலாளரும் உதவியாக இருந்து வருகின்றனர். எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்ககம் பின்வரும் 5 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, கீழ்க்கண்ட அலுவலர்களால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது:

(1) நிர்வாகப் பிரிவு	வருவாய்த் துறையிலிருந்து வரப்பெற்றுள்ள இணை இயக்குநர்
(2) தொழில்நுட்பப் பிரிவு	பொது மேலாளர்
(3) கணக்குப் பிரிவு	கருவூலம் (ம) கணக்குத் துறையிலிருந்து வரப்பெற்றுள்ள முதன்மைக் கணக்கு அலுவலர்
(4) வெளியீடுகள் பிரிவு	உதவி இயக்குநர்
(5) தொழிலாளர் நலப் பிரிவு	தொழிலாளர் துறையிலிருந்து வரப்பெற்றுள்ள தொழிலாளர் நல அலுவலர்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2009 ஜூலை 7

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்ககத்தில் 153 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். நிருவாக அமைப்பு முறை, "இணைப்பு-அ"-வில் கொடுக்கப்பட்டுள்ளது.

2.2 அரசு மைய அச்சகம், சென்னை—79

அரசு மைய அச்சகம் தமிழக அரசின் அங்கமாக பெருமைகொள்ளும் அளவிற்கு 177 ஆண்டுகள் சேவை செய்து வந்துள்ளது. இவ்வச்சகம், பல்வேறு வகையான அச்சுப் பணிக்குத் தேவைப்படும் வெவ்வேறு இயந்திரங்களைக் கொண்டு, தங்க சாலையில் 5.5 ஏக்கர் பரப்பளவில் உள்ள கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றது.

அரசு மைய அச்சகத்தில் மொத்தம் 1,009 பணியாளர்கள் மூன்று முறை மாற்றங்களில் பணிபுரிந்து வருகின்றனர். இந்த அச்சகத்தின் பணி முற்றிலுமாக இரண்டு பணி மேலாளர்களால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. இவர்களுக்கு துணைப் பணி மேலாளர்கள், உதவிப் பணி மேலாளர்கள், உதவிப் பொறியாளர்கள், உதவி இயக்குநர்கள், ஒரு உதவி கணக்கு அலுவலர் ஆகியோர் உதவி புரிகின்றனர். இந்த அச்சகத்தின் வரவு-செலவுப் பிரிவு மற்றும் மிகக் கமுக்கப் பிரிவு ஞாயிற்றுக்கிழமை உள்ளிட்ட அனைத்து நாட்களிலும் செயல்பட்டு வருகின்றன.

சென்னை—79, அரசு மைய அச்சகத்தில் அச்சிடப்படும் மிக்க முன்னுரிமை வாய்ந்த இனங்கள்.

மேதகு ஆளுநர் உரை

நிதிநிலை அறிக்கை

கொள்கை விளக்கக் குறிப்பு மற்றும் மானியக் கோரிக்கை

சாதனை விளக்கக் குறிப்பு

வரவு-செலவு ஆவணங்கள்

அரசிதழ்கள்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விவாதங்கள்

பல்வேறு சட்டமன்றக் குழுக்களின் அறிக்கைகள்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய வெளியீடுகள்

2009 ஜூலை 7]

தேர்தல் ஆணைய படிவங்கள், அறிவிக்கைகள் மற்றும் வாக்குச் சீட்டுகள்

மாநில கணக்குத் துறைத் தலைவரின் அறிக்கைகள்

மோட்டார் வாகன பதிவுச் சான்றிதழ்கள்

வினாத்தாள் போன்ற மிகக் கமுக்கப் பணிகள்

சட்டத் தொகுப்புகள் மற்றும் நடைமுறை நூல்கள்

காலமுறை வெளியீடுகள்

நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள் மற்றும் பதிவேடுகள்

வணிக வரித் துறைப் படிவங்கள்

செலுத்துச் சீட்டு போன்ற கருவூலத் துறைப் படிவங்கள்

இவை தவிர, மேதகு ஆளுநர், மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர், மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர், மாண்புமிகு தலைமை நீதியரசர், மாண்புமிகு அமைச்சர்கள், மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர், தலைமைச் செயலாளர் போன்ற முக்கியப் பிரமுகர்களுக்கான பெயர் முகவரியிட்ட தாள் மற்றும் உறைகள் இங்கு தயாரிக்கப்படுகின்றன.

இத்துடன் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் சிற்றேடுகள் மற்றும் அறிவுரைகள், அரசுத் தேர்வுகள் மற்றும் தொழில்நுட்பத் தேர்வுகளுக்கான விடைத்தாள் ஆகியவையும் இங்கு அச்சிடப்பட்டு வருகின்றன.

மேற்கண்ட அச்சுப் பணிகளை முனைப்பாகவும், திறமையாகவும், கவனமாகவும் மேற்கொள்ள ஏதுவாக, அச்சுத் தொழில்நுட்பத் துறையில் ஏற்பட்டுள்ள அண்மைக்கால வளர்ச்சிக்கு ஏற்ப அரசு மைய அச்சகம் படிப்படியாக நவீனமயமாக்கப்பட்டு வருகிறது.

2.3 அரசு எழுதுபொருள் கிடங்கு, சென்னை–1

அரசு எழுதுபொருள் கிடங்கானது அனைத்து வகைக் காகிதங்கள், அட்டைகள் மற்றும் இதர எழுதுபொருட்களான தட்டச்சுப் பொறிகள், படிபெருக்கிகள், படிபெருக்கி மை, மைபடித்தாள், படிபெருக்கித் தாள் மற்றும் அச்சகம் தயாரித்த கோடிட்ட தாள்கள் ஆகியவற்றை மாநில அரசுத் துறைகளுக்காகக் கொள்முதல் செய்து

சேமித்து, அனைத்து அரசுத் துறைகளுக்கும் அவற்றை இலவசமாக வழங்கும் மையமாக விளங்குகின்றது. இந்த அலுவலகம் துணை இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ் ஒரு உதவி இயக்குநர் உதவி புரிய 120 பணியாளர்களைக் கொண்டு வழக்கமான அலுவலக நேரங்களில் இயங்கி வருகின்றது. தமிழ்நாடு 1998 ஆம் ஆண்டு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிச் சட்டத்தின் விதிமுறைகள் மற்றும் 2000 ஆம் ஆண்டு விதிகளின்படி, அனைத்து எழுதுபொருட்களும் கொள்முதல் செய்யப்படுகின்றன.

சில வகைக் காகிதங்கள் தமிழ்நாடு செய்தித் தாள் மற்றும் காகித நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யப்படுகையில் சில சிறப்பு வகைக் காகிதங்கள், அட்டைகள், மை படித்தாள் மற்றும் படிபெருக்கி மை போன்றவை, தமிழ்நாடு 1998 ஆம் ஆண்டு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிச் சட்டத்தின் விதிமுறைகள் மற்றும் 2000 ஆம் ஆண்டு விதிகளின்படி ஒப்பந்தப்புள்ளி கோருவதன்மூலம் வெளி அங்காடிகளிலிருந்து ஆண்டுதோறும் கொள்முதல் செய்யப்படுகின்றன. தட்டச்சுப் பொறிகள், படி பெருக்கிகள் மற்றும் கணக்கிடும் கருவிகள், மத்திய அரசின் வழங்கல் மற்றும் விற்பனை தலைமை இயக்குநர் நிர்ணயிக்கும் ஒப்பந்த விலை வீதங்களில் கொள்முதல் செய்யப்படுகின்றன.

எழுதுபொருட்கள் தேவைக் கோரிக்கை அளிக்கும் 3,491 அரசு அலுவலகங்களுள் 3,375 அலுவலகங்களுக்கு இலவசமாகவும், 116 அலுவலகங்களுக்கு முன்கூட்டியே பணம் செலுத்தும் முறையிலும் குறித்த வரையறைகளுடன் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றன.

2.4 அரசு கிளை அச்சகம், உயர் நீதிமன்றக் கட்டடம், சென்னை–104

இந்த அச்சகம் 1923 ஆம் ஆண்டு சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் வாடகையில்லா அடிப்படையில் உயர்நீதி மன்றத்தின் அச்சுத் தேவைகளை நிறைவு செய்யும் முக்கிய நோக்கத்துடன் நிறுவப்பட்டது. நாள்தோறும் வெளியிடப்படும் உயர் நீதிமன்ற வழக்குப் பட்டியல்கள் தவிர, உயர் நீதிமன்றப் பயன்பாட்டிற்கு தேவையான 708 வகையான படிவங்கள் மற்றும் பதிவேடுகளும் இந்த அச்சகத்தில் அச்சிடப்படுகின்றன. இந்த அச்சகத்தினை நவீனமயமாக்கும் நோக்கோடு நாள்தோறும் வெளியிடப்படும் வழக்குப் பட்டியல்கள் அச்சிடுவதில் தேவையற்ற காலதாமதத்தினை தவிர்த்திடவும், இந்த அச்சகத்தில் ஏற்கெனவே உள்ள மார்க்' 62, வெப் ஆப்செட் இயந்திரத்துடன் ஒரு வெப் ஆப்செட் அச்சிடும்

இயந்திரமும் நிறுவப்பட்டுள்ளது. இந்த அச்சகம் 107 பணியாளர்களைக் கொண்டு இரண்டு முறை மாற்றுப் பணிகளில் செயல்பட்டு வருகின்றது. இந்த அச்சகம் ஒரு உதவிப் பணி மேலாளர் மற்றும் ஒரு உதவிப் பொறியாளர் உதவி புரிய ஒரு துணைப் பணி மேலாளரின் தலைமையின்கீழ் உள்ளது.

2.5 அரசு கிளை அச்சகம், மதுரை–7

இந்த அச்சகம் வருவாய், காவல், வணிக வரி, சுகாதாரம் மற்றும் பதிவுத் துறைகளின் அச்சுத் தேவைகளை நிறைவு செய்ய நிறுவப்பட்டு, 1976 ஆம் ஆண்டு முதல் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. மதுரை, திண்டுக்கல், விருதுநகர், தேனி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களின் அரசிதழ்கள் இந்த அச்சகத்தில் அச்சிடப்படுகின்றன. பல்வேறு துறைகளுக்குத் தேவையான சுமார் 211 வகையான நிலைப்படுத்தப்பட்ட படிவங்களும், பதிவேடுகளும் இங்கு அச்சிடப்படுகின்றன. இந்த அச்சகம் 128 பணியாளர்களைக் கொண்டு இரண்டு முறை மாற்றுப் பணிகளில் செயல்பட்டு வருகின்றது. இந்த அச்சகம் இரண்டு உதவிப் பணி மேலாளர்கள் மற்றும் ஒரு உதவி இயக்குநரும் உதவி புரிய ஒரு துணைப் பணி மேலாளரின் தலைமையின்கீழ் உள்ளது.

2.6 அரசு கிளை அச்சகம், சேலம்

இந்த அச்சகம் 1966 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, 1986 ஆம் ஆண்டு முதல் சொந்தக் கட்டடத்தில் 73 பணியாளர்களைக் கொண்டு இரண்டு முறை மாற்று பணிகளில் இயங்கி வருகின்றது. சேலம், கோயம்புத்தூர், நாமக்கல், ஈரோடு, தருமபுரி, நீலகிரி ஆகிய மாவட்டங்களின் அரசிதழ்கள் இந்த அச்சகத்தில் அச்சிடப்படுகின்றன. புதிதாக உருவாக்கப்பட்டுள்ள திருப்பூர் மாவட்ட அரசிதழ்கள் அச்சிடும் பணியும் இந்த அச்சகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. முக்கியமாக கருவூலம், மருத்துவம், அரசுத் தேர்வுகள் ஆகிய துறைகளின் அச்சுத் தேவைகளை இந்த அச்சகம் நிறைவு செய்கின்றது. இங்கு பல்வேறு அரசுத் துறைகளுக்குத் தேவையான சுமார் 146 வகையான நிலைப்படுத்தப்பட்ட படிவங்களும், பதிவேடுகளும் அச்சிடப்படுகின்றன. இந்த அச்சகம், உதவிப் பணி மேலாளர் பதவி நிலையில் உள்ள கிளை மேலாளரின் தலைமையின்கீழ் உள்ளது. மற்றொரு உதவிப் பணி மேலாளர் அவருக்கு உதவி புரிகிறார்.

[2009 ஜூலை 7

2.7 அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை

இந்த அச்சகம் 1949 ஆம் ஆண்டு முதல் சொந்தக் கட்டடத்தில், 69 பணியாளர்களைக் கொண்டு இரண்டு முறை மாற்றுப் பணிகளில் இயங்கி வருகின்றது. இந்த அச்சகம் ஆதிதிராவிடர் நலம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம், காவல் துறை, ஓய்வூதியத் துறை, சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை ஆகிய துறைகளின் அச்சுத் தேவைகளை நிறைவு செய்கின்றது. இவைதவிர, சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், இராமநாதபுரம், கன்னியாகுமரி, தஞ்சாவூர், திருவாரூர், திருவண்ணாமலை, புதுக்கோட்டை, தூத்துக்குடி, நாகப்பட்டினம், சிவகங்கை ஆகிய மாவட்டங்களின் அரசிதழ்கள் இந்த அச்சகத்தில் அச்சிடப்படுகின்றன. பல்வேறு துறைகளுக்குத் தேவையான சுமார் 290 வகையான நிலைப்படுத்தப்பட்ட படிவங்களும், பதிவேடுகளும் இங்கு அச்சிடப்படுகின்றன. இந்த அச்சகம் உதவிப் பணி மேலாளர் பதவி நிலையில் உள்ள கிளை மேலாளரின் தலைமையின்கீழ் உள்ளது.

2.8 அரசு கிளை அச்சகம், திருச்சிராப்பள்ளி

இந்த அச்சகம் 1965 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, அரியமங்கலம் தொழிற்பேட்டையில் உள்ள தொழில் பிரிவுகளின் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வந்தது. 1990 ஆம் ஆண்டு முதல் துவாக்குடியில் சொந்தக் கட்டடத்தில், 62 பணியாளர்களைக் கொண்டு இரண்டு முறை மாற்றுப் பணிகளில் இயங்கி வருகின்றது. திருச்சிராப்பள்ளி, கரூர், அரியலூர், பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களின் அரசிதழ்கள் இந்த அச்சகத்தில் அச்சிடப்படுகின்றன. அனைத்து அரசு அலுவலங்களுக்கும் தேவையான தன் பதிவேடுகள், ரொக்கப் பதிவேடுகள் மற்றும் பொதுப் படிவங்கள் இங்கு அச்சிடப்படுகின்றன. பல்வேறு துறைகளுக்குத் தேவையான சுமார் 126 வகையான நிலைப்படுத்தப்பட்ட படிவங்களும், பதிவேடுகளும் இந்த அச்சகத்தில் அச்சிடப்படுகின்றன. இந்த அச்சகத்தினை நவீனமயமாக்குவதற்காக பகுதி-2 திட்டத்தின்கீழ் ஒரு "வெப் ஆப்செட்" அச்சு இயந்திரம் 2007 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இந்த அச்சகம் உதவிப் பணி மேலாளர் பதவி நிலையில் உள்ள கிளை மேலாளரின் தலைமையின்கீழ் உள்ளது.

2009 ஜூலை 7]

2.9 அரசு கிளை அச்சகம், விருத்தாசலம்

இந்த அச்சகம் 1966 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, சொந்தக் கட்டடத்தில் 47 பணியாளர்களைக் கொண்டு இரண்டு முறை மாற்றுப் பணிகளில் இயங்கி வருகின்றது. வேலூர், விழுப்புரம், கடலூர் ஆகிய மாவட்டங்களின் அரசிதழ்கள் இந்த அச்சகத்தில் அச்சிடப்படுகின்றன. பொதுப் பணி, வேலைவாய்ப்பகம், வேளாண்மை, கால்நடை பராமரிப்பு, தீயணைப்பு, தொழில் மற்றும் வணிகம், தேசிய மாணவர் படை, புள்ளியியல் ஆகிய துறைகளின் நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள் இங்கு அச்சிடப்படுகின்றன. இந்த அச்சகம் ஒரு துணைப் பணி மேலாளரின் தலைமையின்கீழ் உள்ளது. இவருக்கு ஒரு உதவிப் பணி மேலாளர் உதவி புரிகிறார்.

2.10 அரசு கிளை அச்சகம், சென்னை உயர் நீதிமன்றக் கிளை, மதுரை

இந்த அச்சகம் 2006 ஆம் ஆண்டில் முக்கியமாக, சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளையின் அன்றாட வழக்குப் பட்டியல்களை அச்சிடுவதற்காக தொடங்கப்பட்டது. இதற்காக ஒரு புதிய "வெப் ஆப்செட்" அச்சு இயந்திரம் 22-1-2007 அன்று நிறுவப்பட்டு சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளையின் அச்சுத் தேவைகளை சிறந்த முறையில் நிறைவு செய்து வருகின்றது. இந்த அச்சகம் ஒரு துணைப் பணி மேலாளரின் கட்டுப்பாட்டின்கீழ் 34 பணியாளர்களைக் கொண்டு, இரண்டு முறை மாற்றுப் பணிகளில் செயல்பட்டு வருகின்றது.

2.11 அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம், சென்னை–2

இந்த அரசு வெளியீடுகள் விற்பனை நிலைய அலுவலகம், சென்னை அண்ணா சாலையில் உள்ள எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்கக வளாகத்திலேயே உள்ளது. ஒரு துணை விற்பனை நிலையமும், சென்னை-104-ல் உள்ள உயர் நீதிமன்ற வளாகத்தில் உள்ள அரசு கிளை அச்சகத்தில் செயல்பட்டு வருகின்றது.

அரசிதழ்கள், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய வெளியீடுகள், சட்டத் தொகுப்புகள், சட்டங்கள் மற்றும் விதிகள், தொலைபேசிக் கையேடுகள், பணிப் பதிவேடுகள் போன்றவை இங்கு விற்பனை செய்யப்படுகின்றன. மேலும், இந்திய அரசின் வெளியீடுகளை விற்பனை செய்யும் முகவரமைப்பாகவும் இவ்விற்பனை நிலையம் இயங்கி வருகின்றது. அரசு வெளியீடுகள், தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள அங்கீகரிக்கப்பட்ட

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

32 முகவர்கள் மூலமாகவும் விற்பனை செய்யப்படுகின்றன. அரசிதழ் மூலமாக பெயர் மாற்றம் செய்ய இவ்வலுவலகத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தூய தமிழில் பெயரினை மாற்றம் செய்வதற்கு ரூ.50/- கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

2008-2009 ஆம் நிதியாண்டில் தனியார் அறிவிக்கைகள் மற்றும் பிற வெளியீட்டுக் கட்டணமாக ரூ.1,41,15,068/-ம், அரசிதழ்கள் மற்றும் அரசு வெளியீடுகளின் விற்பனை மூலம் ரூ.13,10,394/-ம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. இப்பிரிவு உதவி இயக்குநரின் (வெளியீடுகள்) தலைமையின்கீழ் உள்ளது.

3. 2008–2009 ஆம் ஆண்டில் முன்னுரிமை அடிப்படையில் அச்சிடப்பட்ட இனங்கள் குறித்த பட்டியல்

பின்வரும் அச்சுப் பணிகள் இத்துறையினால் முனைப்புடனும், செம்மையாகவும் நிறைவேற்றப்பட்டுள்ளன:

(1)	"அரசு செய்திகள்" சுவரொட்டிகள்	4,00,000 எண்ணிக்கைகள்
(2)	தேர்தல் படிவங்கள்	6,25,00,000 எண்ணிக்கைகள்
(3)	திருமங்கலம் இடைத் தேர்தலுக்கான வாக்குச்சீட்டுகள்	5,000 எண்ணிக்கைகள்
(4)	வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கான அடையாள அட்டைகள்	11,00,000 எண்ணிக்கைகள்
5)	அரசுத் தேர்வுகளுக்கான படிவங்கள் மற்றும் விடைத்தாள்கள்	43,00,000 எண்ணிக்கைகள்
(6)	தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கான படிவங்கள்	3,00,000 எண்ணிக்கைகள்
(7)	சாதிச் சான்றிதழ்கள்	15,00,000 எண்ணிக்கைகள்
(8)	குடும்ப அட்டைகளுக்கான உள் தாள்கள்	4,00,000 எண்ணிக்கைகள்
(9)	குடும்ப நலத் துறைக்கான படிவங்கள்	20,00,000 எண்ணிக்கைகள்

2009 ஜூலை 7]

(10)	ஆசிரியர் தின கொடிகள் (இருவகைகள்)	*23,00,000* எண்ணிக்கைகள்
(11)	நரிக்குறவர் நல வாரியத்திற்கான படிவங்கள் மற்றும் அடையாள அட்டைகள்	*50,000* எண்ணிக்கைகள்
(12)	பழங்குடியினர் நலத் துறைக்கான படிவங்கள்	*2,75,000* எண்ணிக்கைகள்
(13)	மாண்பமை உயர் நீதிமன்ற நீதியரசர்களுக்கான வாழ்த்து அட்டைகள்	*28,600* எண்ணிக்கைகள்
(14)	2009 ஆம் ஆண்டிற்கான அரசு நாட்காட்டிகள் மற்றும் நாட்குறிப்பேடுகள்	*1,55,450* எண்ணிக்கைகள்
(15)	மாநில கணக்காய்வுத் தலைவரின் தணிக்கை அறிக்கைகள்	மூன்று வகைகள்
(16)	சட்டமன்றப் பேரவை விவாதங்கள் மற்றும் குழு அறிக்கைகள்	*3,87,000* புத்தகங்கள்
(17)	மோட்டார் வாகன வரிச் சீட்டுகள்	*3,00,000* புத்தகங்கள்
(18)	இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, இந்திய வனப் பணி, கோட்டாட்சியர் மற்றும் நீதித் துறை அதிகாரிகள் குறித்த பட்டியல்	*4,500* புத்தகங்கள்
(19)	தொலைபேசிக் கையேடுகள் (ஆங்கிலம் மற்றும் தமிழ்)	*13,000* புத்தகங்கள்

4. பணியாளர் நலன்

பணியாளர் நலன் தொழிலாளர் நல அலுவலர் ஒருவர், தொழிலாளர் நல உதவி அலுவலர் இருவர், சுகாதார கண்காணிப்பாளர் ஒருவர் ஆகியோரால் நன்கு பேணப்படுகின்றன. தொழிலாளர் நலன் தொடர்பான தனிப்பட்ட பிரிவு ஒன்று,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தொழிலாளர்களிடமிருந்து எழுத்து மூலமாகப் பெறப்படும் குறைகளை ஆராய்ந்து உடனடியாக கவனிப்பதன்வாயிலாக, அவற்றை இணக்கமான முறையில் களைவதற்கு அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படுகின்றன. அரசு மைய அச்சகத்தில் மருந்தகம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இம்மருந்தகத்தின் மருத்துவ அலுவலர், வாரத்திற்கொருமுறை இயக்ககம் உட்பட, சென்னை மாநகரத்திலுள்ள அனைத்துப் பிரிவுகளையும் பார்வையிட்டு வருவதுடன், தொழிலாளர்கள், பணியாளர் மற்றும் அதிகாரிகளுக்குத் தேவையான மருத்துவ வசதிகளை அளிக்கிறார்.

4.1 அரசு அச்சகங்கள் அனைத்திலும் பணி புரிகின்ற தொழிலாளர்களுக்கான ஏனைய படிகள்

அரசு அச்சகங்கள் அனைத்திலும் பணி புரிகின்ற தொழிலாளர்கள் தங்களுடைய அன்றாடக் கடமைகளைச் செவ்வனே நிறைவேற்ற, அவர்களை உற்சாகப்படுத்தி ஊக்கமூட்டுவதற்காக, அவர்களுக்கு பின்வரும் படிகள் வழங்கப்படுகின்றன:

(அ) இரவு நேரப் படி : நாளொன்றுக்கு ரூ.7/-

(ஆ) சீருடைகளுக்கான தையற்கூலி

ஆண்களுக்கு : ரூ.800/- இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை (4 ஜோடிகளுக்கு)

பெண்களுக்கு : ரூ.120/- இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை (4 ஜோடிகளுக்கு)

(இ) சிற்றுண்டிப் படி : ரூ.150/- மாதமொன்றுக்கு

4.2 அரசு அச்சகங்களில் கூட்டுறவுச் சங்கத்தின் செயல்பாடு

அந்தந்த அச்சகங்களில் பணிபுரிந்து வருகின்ற தொழிலாளர்களின் நலன் கருதி, தமிழ்நாடு எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள், அரசு மைய அச்சகத்திலும், அரசு கிளை அச்சகங்களிலும் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் வாயிலாக, சங்க உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் ரூபாய் இரண்டு இலட்சம் வரையில் கடனுதவி வழங்கப்பட்டு வருகிறது.

2009 ஜூலை 7]

4.3 பணியாளர்களுக்கான மனமகிழ் மன்றம்

பணியிடத்தில், தொழிலாளர்களிடையே இணக்கமான சூழ்நிலையினை உருவாக்கும் நோக்கில் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்காக விளையாட்டுப் பொருட்களும், பரிசுப் பொருட்களும் வாங்குவதற்கு, அரசு ஆண்டுதோறும் ரூ. *1* இலட்சம் ஒதுக்கீடு செய்து வருகிறது. இதன் வாயிலாக, தொழிலாளர்களின் நலனும், விளையாட்டு மனப்போக்கும் நன்கு பேணப்படுகின்றன.

4.4 கூட்டுறவுப் பண்டகசாலை

தமிழ்நாடு அரசு எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை பணியாளர்களின் கூட்டுறவுப் பண்டகசாலை, குடும்ப அட்டை பெற்றுள்ள இத்துறை பணியாளர்களுக்கு பங்கீட்டுப் பொருட்கள் உட்பட இன்றியமையாப் பொருட்களை நியாய விலையில் வழங்கி வருகிறது.

5. வெளி ஆதாரம்மூலம் பணியாளர்கள் நியமனம்

தற்போதுள்ள அரசாணைகளின்படி, இத்துறையின் அலுவலக வளாகங்களில் சுத்தம் செய்து, பராமரிப்புப் பணியை மேற்கொள்ள பெருக்குபவர்கள், துப்புரவுப் பணியாளர்கள் ஆகியோர் வெளி ஆதாரம்மூலம் நியமிக்கப்பட்டுள்ளனர். இதே போன்று அரசு அச்சகங்களுக்கான பாதுகாப்புக் காவலர்களும் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நலக் கழகத்தின்மூலம் பணியில் அமர்த்தப்பட்டு வருகின்றனர்.

6. நிருவாக அமைப்பு முறை மற்றும் பணியாளர்கள் விவரம்

இத்துறையின் நிருவாக அமைப்பு முறை, அனைத்து கிளை அச்சகங்கள் மற்றும் பணியாளர்களின் எண்ணிக்கை *(2008-2009)* ஆகிய விவரங்கள், இணைப்பு 'அ' மற்றும் 'ஆ' வில் கொடுக்கப்பட்டுள்ளன.

7. அரசு அச்சகங்களை நவீனப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்

மிகப் பெரிய மைய அச்சகம், உட்பட அனைத்து அச்சகங்களின் அச்சுத் தரத்தினை உயர்த்திடவும், அச்சிடுகின்ற அளவை

அதிகரித்திடவும் தொலைநோக்குப் பார்வையுடன் இந்த அச்சகங்களில் பகுதி-2 திட்டத்தின்கீழ் நவீன இயந்திரங்கள் படிப்படியாக நிறுவப்பட்டு வருகின்றன. அரசு மைய அச்சகத்தினை நவீனமயமாக்கும் பொருட்டு நவீன இயந்திரங்கள் கொள்முதல் செய்ய ரூ.4 கோடி ஒதுக்கீடு செய்து சட்டப் பேரவையில் மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களால் அறிவிப்பு வெளியிடப்பட்டது. இயந்திரங்களை விரைவில் கொள்முதல் செய்வதற்காக, தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 32 பக்கங்களை இரகசிய குறியீட்டுடன் A4 அளவில் அச்சிட்டு, எண்ணிட்டு, மடித்து, கம்பியடித்து அல்லது ஒட்டி ஒரு மணி நேரத்தில் 30,000 பிரதிகள் பெற இயலும் திறன்கொண்ட இயந்திரங்களை நிறுவ கருதப்பட்டுள்ளது. இவ்வியந்திரங்கள் நிறுவப்பட்டால் தேர்வுகள் நடத்தும் அரசு தொழில்நுட்பத் தேர்வுத் துறை, அரசு தேர்வுத் துறை மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஆகியவற்றின் அனைத்து முக்கியமான, இரகசியமான மற்றும் காலக்கெடு நிர்ணயிக்கப்பட்ட பணிகளையும் வெகு விரைவாகவும், சிறப்பாகவும் முடிக்க இயலும்.

2008–2009 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள்

பகுதி-2 திட்டத்தினை செயல்படுத்துவதற்காக 2008-2009 ஆம் ஆண்டிற்கு அரசு ரூபாய் 80 இலட்சம் அனுமதித்துள்ளது. மேற்கண்ட திட்டத்தின்கீழ் விருத்தாசலம், அரசு கிளை அச்சகத்திற்கு வெட்டும் நவீன இயந்திரமும் (புரோக்ராமபில் கட்டிங்), திருச்சிராப்பள்ளி அரசு கிளை அச்சகத்திற்கு புத்தகம் கட்டும் இயந்திரமும் (பெர்பெக்ட் பைண்டர்), சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையின் அரசு கிளை அச்சகத்திற்கு மின் உற்பத்தி இயந்திரமும் (ஜெனரேட்டர்), சென்னை அரசு மைய அச்சகத்திற்கு ஒளிநகல் இயந்திரம், நுண்ணிய துளையிடும் இயந்திரம், இரண்டு பாலிமர் ரப்பர் ஸ்டாம்ப் இயந்திரம், மின்னணு எடை இயந்திரம், ஸ்பைரல் பைண்டிங் இயந்திரம், ஸ்கிரீன் பிரிண்டிங் இயந்திரம், துணைப்பாகங்களுடன் இரண்டு கணினிகள் ஆகியவற்றைக் கொள்முதல் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பின்வரும் இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு நிறுவப்பட்டுள்ளதோடு, இயக்ககத்திற்கு ஒரு ஜீப் மற்றும் மதுரை

2009 ஜூலை 7]

அரசு கிளை அச்சகத்திற்கு ஒரு ஜீப் என இரண்டு ஜீப்புகளும் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன:

வ. எண்	பொருட்கள்	இடம்
1.	கணினி மற்றும் அதன் துணைப்பாகங்கள்	அரசு மைய அச்சகம், சென்னை-79.
2.	ஒளிநகலி (Photo Copier)	அரசு மைய அச்சகம், சென்னை-79.
3.	மின்னணு எடைபோடும் இயந்திரம்	அரசு மைய அச்சகம், சென்னை-79.
4.	புரோக்ராமபில் கட்டிங் இயந்திரம்	அரசு கிளை அச்சகம், விருத்தாசலம்.
5.	பெர்பெக்ட் பைண்டர் சிங்கிள் கிளாம்ப் இயந்திரம்	அரசு கிளை அச்சகம், திருச்சிராப்பள்ளி.
6.	ரீடச்சிங் டேபிள்	அரசு கிளை அச்சகம் சென்னை உயர் நீதிமன்றக் கிளை, மதுரை.
7.	ஹைட்ராலிக் ட்ராலி 4 எண்ணிக்கைகள்	அரசு கிளை அச்சகம், சென்னை உயர் நீதிமன்றக் கிளை, மதுரை.
8.	டாம்பனர் ரோலர் கிளீனிங் இயந்திரம்	அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை.
9.	மின் உற்பத்தி இயந்திரம்	அரசு கிளை அச்சகம், மதுரை.

2009–2010 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்

நவீன உலகில் கணினி பயன்பாட்டின் முக்கியத்துவத்தை உணர்ந்து, 2009-2010 ஆம் ஆண்டுக்கான பகுதி-2 திட்டத்தின்கீழ், இயக்ககம் மற்றும் கிளை அச்சகங்களுக்கு கணினி மற்றும் அதன்

[2009 ஜூலை 7

துணைப்பாகங்களை கொள்முதல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்ககத்தின் அலுவலகப் பயனுக்கான ஜீப் பயனற்றதென ஒதுக்கப்பட்ட நிலையில், இயக்ககத்திற்கென ஒரு ஜீப் வாங்க கருதப்பட்டுள்ளது. இயக்ககம் மற்றும் கிளை அச்சகங்களில் இருப்பில் வைக்கப்படும் பல கோடி ரூபாய் மதிப்புமிக்க காகிதங்கள், வேதியியல் பொருட்கள், மசகெண்ணெய் ஆகியவற்றை தீயிலிருந்து பாதுகாக்கும் நோக்கினைக் கருதி இத்துறையின் அனைத்துப் பிரிவுகளின் பயனுக்காக தீயணைப்பான்களைக் கொள்முதல் செய்து நிறுவவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையைச் சார்ந்த அச்சகங்கள் மற்றும் அலுவலகங்களின் பயன்பாட்டிற்கு கணினிகள் மற்றும் தீயணைப்பான்களைக் கொள்முதல் செய்வதற்காக பகுதி-2 திட்டத்தின்கீழ் அரசு ரூபாய் 24.64 இலட்சம் அனுமதித்துள்ளது. அது பற்றிய விவரங்கள் இணைப்பு 'இ' இல் கொடுக்கப்பட்டுள்ளன.

8. சாதனைகள்

இத்துறை உலகளாவிய நவீனயுகத்தில் அடியெடுத்து வைத்துள்ளது. இத்துறை குறித்து, தேவையான செய்தி மற்றும் விவரங்களை அனைவரும் பெற வசதியாக, இத்துறைக்கென ஒரு வலைதளம் தொடங்குவது அவசியம் என்று கருதப்பட்டது. அதன்படி, இத்துறைக்கென அலுவல் முறை வலைதளம் ஒன்றை மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் 20-11-2008 அன்று தொடங்கிவைத்துள்ளார்.

அரசின் அறிவிக்கைகள், நொடிப்பு மனு குறித்த தனியார் அறிவிக்கைகள், பெயர் மாற்றம் மற்றும் மத மாற்றம் குறித்த அறிவிக்கைகள் ஆகியவை அடங்கிய தமிழ்நாடு அரசிதழ்கள் மேற்கண்ட வலைதளத்தில் http://www.tn.gov.in/Stationery Printing இடம் பெறச்செய்து, அதன் மூலம் பொதுமக்கள் தங்களுக்குத் தேவையான விவரங்களை உடனுக்குடன் பெற வசதி செய்யப்பட்டுள்ளது.

9. வரவு—செலவுத் திட்ட மதிப்பீடு

2009-2010 ஆம் ஆண்டிற்கான இத்துறையின் வரவு செலவுத் திட்ட மதிப்பீடு இணைப்பு 'ஈ' இல் கொடுக்கப்பட்டுள்ளது.

2009 ஜூலை 7]

10. முடிவுரை

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை தொடங்கப்பட்டு 177 ஆண்டுகள் கடந்த பின்னருங்கூட அரசு மற்றும் பொதுமக்களின் ஆதரவுடன் இன்னும் சிறப்பாக வலுவான துறையாக தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு முழுவதும் உள்ள மாநில அரசு அலுவலகங்களுக்குத் தேவையான பணிப் பதிவேடுகள் உட்பட பல்வேறு வகையான நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள், பதிவேடுகள் ஆகியவற்றை இத்துறை மட்டுமே அச்சிட்டு வழங்குகிறது. ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் முக்கிய நிகழ்வுகளான பிறப்பு, இறப்பு ஆகியவற்றைப் பதிவு செய்யத் தேவையான படிவங்கள் அச்சிட்டு வழங்குவதன்மூலம் மனித வாழ்க்கையில், இத்துறை பின்னிப் பிணைந்து முக்கியப் பங்கு வகிக்கிறது. காவல் நிலையத்தில் பதியப்படும் முதல் தகவல் அறிக்கை, புறநோயாளியாக அரசு மருத்துவமனையில் மருத்துவரிடம் ஆலோசனை பெறுதல், வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் ஓட்டுநர் உரிமம் பெறுதல், சாதிச் சான்றிதழ் பெறுதல் ஆகியவற்றிற்குத் தேவையான அனைத்து படிவங்களும் இத்துறையால் அச்சிட்டு வழங்கப்பட்டு வருகின்றன. மாநிலம் முழுவதிலும் உள்ள அனைத்து அரசு துறைகளுக்குத் தேவைப்படும் எழுதுபொருட்களையும் இத்துறை கொள்முதல் செய்து வழங்கி வருகிறது. இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் தேர்தல் பணிக்காக, தேர்தல் ஆணையத்திற்குத் தேவையான வாக்குச்சீட்டுகள், உறைகள் மற்றும் இதர தேவையான படிவங்களை தேர்தல் ஆணைய தேவையின்படி இத்துறையால் அச்சிட்டு வழங்கப்பட்டு வருகிறது. அனைத்து அரசு அச்சகங்களும் நவீனமயமாக்கப்பட்டு வருவதால் இத்துறை தனது பணியினை மேலும் சிறப்பாக தொடர்ந்து செய்து, அரசுக்கும் பொதுமக்களுக்கும் ஒரு பாலமாக செயல்படும்.

TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு—அ

நிர்வாக அமைப்பு முறை

இயக்குநர்

- **தொழில்நுட்பப் பிரிவு**
 - பொது மேலாளர்
- **கணக்குப் பிரிவு**
 - தலைமைக் கணக்கு அலுவலர்
 - விலை மதிப்பீட்டுக் கணக்கு அலுவலர்
- **நிர்வாகப் பிரிவு**
 - இணை இயக்குநர்

மேலாண்மை குறிக்கோள் ஆலோசகர்
துணைப் பணி மேலாளர் (பராமரிப்பு)
உதவிப் பணி மேலாளர் (கொள்முதல்)
தனி அலுவலர் (படிவம்)

இயக்குநரின் நேர்முக உதவியாளர்
உதவி இயக்குநர் (பணியாளரமைப்பு)
உதவி இயக்குநர் (இருப்பு சரிபார்ப்பு)
உதவி இயக்குநர் (வெளியீடுகள்)
தொழிலாளர் நல அலுவலர்

அலுவலகம்	பொறுப்பாளர்
அரசு மைய அச்சகம், சென்னை	இரண்டு பணி மேலாளர்கள்
எழுதுபொருள் கிடங்கு அலுவலகம், சென்னை	துணை இயக்குநர் (எழுதுபொருள்)
அரசு கிளை அச்சகம், உயர் நீதிமன்ற வளாகம், சென்னை—104	துணைப் பணி மேலாளர்
அரசு கிளை அச்சகம், புதுக் கோட்டை	கிளை மேலாளர்
அரசு கிளை அச்சகம், திருச்சி	கிளை மேலாளர்
அரசு கிளை அச்சகம், சேலம்	கிளை மேலாளர்
அரசு கிளை அச்சகம், விருத்தாசலம்	துணைப் பணி மேலாளர்
அரசு கிளை அச்சகம், மதுரை	துணைப் பணி மேலாளர்
அரசு கிளை அச்சகம், சென்னை உயர் நீதிமன்ற கிளை மதுரை	துணைப் பணி மேலாளர்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு–ஆ

1-4-2009-நாளன்றுள்ளபடி பணியாளர்களின் எண்ணிக்கை

வ. எண்	பிரிவு	அலுவலர்கள்	அமைச்சுப் பணியாளர்கள்	இதர பிரிவு பணியாளர்கள்	01–04–2009 ஆம் நாள் நிலவரப்படி பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை
1.	எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்ககம் (அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம் உட்பட) சென்னை–2	12	104	37	153
2.	அரசு மைய அச்சகம், சென்னை-79	16	196	797	1009
3.	அரசு எழுதுபொருள் கிடங்கு அலுவலகம், சென்னை-1.	02	51	67	120
4.	அரசு கிளை அச்சகம், உயர் நீதிமன்ற வளாகம், சென்னை-104	02	10	95	107
5.	அரசு கிளை அச்சகம், மதுரை–7	05	10	113	128
6.	அரசு கிளை அச்சகம், சேலம்	02	05	66	73
7.	அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை	01	08	60	69
8.	அரசு கிளை அச்சகம், திருச்சிராப்பள்ளி	01	06	55	62
9.	அரசு கிளை அச்சகம், விருத்தாசலம்	02	06	39	47
10.	அரசு கிளை அச்சகம், சென்னை உயர் நீதிமன்ற கிளை, மதுரை–23	02	03	29	34
	மொத்தம் ..	45	399	1358	1802

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு—இ

2009—2010ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள்

வரிசை எண்	திட்டங்கள் பற்றிய விவரங்கள்	முடிவான செலவு			(ரூபாய் இலட்சத்தில்) 2009—2010—ல் செலவு			
		தொடரினச் செலவு	தொடராச் செலவு	மொத்தம்	வருவாய்	மூலதனம்	கடன்	மொத்தம்
1.	இயக்குநர் அலுவலகத்திற்கு 10 கணினிகள், 4 டாட்மேட்ரிக்ஸ், 2 லேசர் பிரிண்டர்கள், 5 தீயணைப்பான்கள், 1 வேன் ஆகியவற்றை வாங்குதல்	—	9.50	9.50	9.50	—	—	9.50
2.	சென்னை—1, அரசு எழுது பொருள் பண்டக சாலைக்கு 2 கணினிகள், 1 டாட்மேட்ரிக்ஸ், 10 தீயணைப்பான்கள் ஆகியவற்றை வாங்குதல்	—	1.30	1.30	1.30	—	—	1.30"
3.	சென்னை—79, அரசு மைய அச்சகத்திற்கு 15 கணினிகள், 3 டாட்மேட்ரிக்ஸ், 2 லேசர் பிரிண்டர்கள், 1 ஒளி நகலி, 10 தீயணைப்பான்கள் ஆகியவற்றை வாங்குதல்	—	7.70	7.70	7.70	—	—	7.70
4.	சென்னை—104, சென்னை உயர் நீதி மன்றம், அரசு கிளை அச்சகத்திற்கு 5 தீயணைப்பான்கள் வாங்குதல்	—	0.30	0.30	0.30	—	—	0.30
5.	விருத்தாசலம் அரசு கிளை அச்சகத்திற்கு 5 தீயணைப்பான்கள் வாங்குதல்	—	0.30	0.30	0.30	—	—	0.30

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு—இ—*தொடர்ச்சி*

2009–2010 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள்

வரிசை எண்.	திட்டங்கள் பற்றிய விவரங்கள்	முடிவான செலவு			(ரூபாய் இலட்சத்தில்) 2009–2010–ல் செலவு			
		தொடரினச் செலவு	தொடராச் செலவு	மொத்தம்	வருவாய்	மூலதனம்	கடன்	மொத்தம்
6.	திருச்சிராப்பள்ளி அரசு கிளை அச்சகத்திற்கு 5 தீயணைப்பான்கள், 1 ஒளிநகலி ஆகியவற்றை வாங்குதல்	--	1.80	1.80	1.80	--	--	1.80
7.	சேலம் அரசு கிளை அச்சகத்திற்கு 2 கணினிகள், 1 லேசர் பிரிண்டர், 5 தீயணைப்பான்கள் ஆகியவற்றை வாங்குதல்	--	1.30	1.30	1.30	--	--	1.30
8.	புதுக்கோட்டை அரசு கிளை அச்சகத்திற்கு 2 கணினிகள், 4 தீயணைப்பான்கள் ஆகியவற்றை வாங்குதல்	--	0.84	0.84	0.84	--	--	0.84
9.	மதுரை அரசு கிளை அச்சகத்திற்கு 2 கணினிகள், 5 தீயணைப்பான்கள் ஆகியவற்றை வாங்குதல்	--	0.90	0.90	0.90	--	--	0.90
10.	மதுரை, சென்னை உயர் நீதிமன்றக் கிளைக்கு 1 லேசர் பிரிண்டர், 5 தீயணைப்பான்கள் ஆகியவற்றை வாங்குதல்	--	0.70	0.70	0.70	--	--	0.70
	மொத்தம்	--	24.64	24.64	24.64	--	--	24.64

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு—ஈ

2009–2010 ஆம் ஆண்டு வரவு–செலவுத்திட்ட மதிப்பீடு

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை

(நிகரச் செலவு ரூபாய் ஆயிரத்தில்)

		2008–09 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு	2008–09 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடு	2009–10 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு
2058	எழுதுபொருள் மற்றும் அச்சு	73,64,65	74,44,63	77,63,75
2059	பொதுப் பணிகள்	55,23	55,23	60,75
4058	எழுதுபொருள் அச்சு குறித்த மூலதனச் செலவு	4,00,08	3,82,28	9
	மொத்தம் ...	78,19,96	78,82,14	78,24,59

தமிழ்நாடு சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு VII

(806 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண் 28–செய்தி மற்றும் விளம்பரம்

அறிவிப்புகள், 2009–2010

1. எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர்களின் பயன்பாட்டிற்கென ரூ.50 இலட்சம் செலவில் வண்ணப் படச்சுருள் பதனிடும் இயந்திரம், சென்சிடோ மீட்டர் மற்றும் டென்சிட்டோ மீட்டர் ஆகிய கருவிகள் வாங்கி வழங்கப்படும்.

2. எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன நூலகத்திற்கு ரூ.4.50 இலட்சம் செலவில், தற்போதைய தொழில்நுட்பம் சார்ந்த புத்தகங்கள் மற்றும் திரைப்படக் கலை சார்ந்த புத்தகங்கள் புதிதாக வாங்கி வழங்கப்படுவதுடன், கணினிகள் மற்றும் குளிர்சாதன வசதியுடன் நூலகம் புதுப்பித்து நவீனப்படுத்தப்படும்.

3. செய்தி-மக்கள் தொடர்புத் துறையில் உள்ள புகைப்படப் பிரிவில் அனைத்து முக்கியத் தலைவர்கள் பங்கேற்ற நிகழ்ச்சிகளின் அரிய பழைய புகைப்பட நெகடிவ் படச்சுருள்கள் உள்ளன. இவற்றை ரூ.13.25 இலட்சம் செலவில் டிஜிட்டல் முறையில் ஸ்கேன் செய்து பொருத்தமாகத் தலைப்பிட்டு, தேவைப்படும்போது தேடி எடுக்க சிறப்பு மென்பொருள் மற்றும் சேர்வர் அமைத்து நீண்ட காலப் பயன்பாட்டிற்கு உதவும் வகையில் சேமித்து வைக்கப்படும்.

4. செய்தித் துறையின் உயர் அலுவலர்களின் நிருவாகப் பணிகள் களவிளம்பரப் பணிகள் மற்றும் அரசு விழா தொடர்பான பணிகள் தொய்வின்றி நடைபெற பழைய கார்களுக்குப் பதிலாக மூன்று புதிய அம்பாசிடர் கார்கள் ரூ. 14.25 இலட்சம் செலவில் வாங்கி வழங்கப்படும்.

5. மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலக களவிளம்பரப் பணிகள் தொய்வின்றி நடக்க பழுதடைந்த ஊர்திகளுக்குப் பதிலாக ரூ. 14.25 இலட்சம் செலவில் 2 டெம்போ டிராவலர் ஊர்திகள் வாங்கி வழங்கப்படும்.

[2009 ஜூலை 7

6. மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கு ரூ. 10 இலட்சம் செலவில் 2 பொலீரோ ஊர்திகள் வாங்கி வழங்கப்படும்.

7. செய்தி-மக்கள் தொடர்புத் துறை தலைமையகத்தில் நிருவாகப் பணிகள் துரிதமாக நடக்க ஏனைய துறைகளில் உள்ளது போல் ரூ. 1.50 இலட்சம் செலவில் ஒரு டிஜிட்டல் நகலெடுக்கும் இயந்திரம் வாங்கி வழங்கப்படும்.

8. மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலகங்களில் பழுதான ஒளி நகலெடுக்கும் இயந்திரங்களுக்குப் பதிலாக ரூ.1 இலட்சம் செலவில் 5 புதிய ஒளிநகல் இயந்திரங்கள் வாங்கி வழங்கப்படும்.

9. பெருகிவரும் ஊடக நிறுவனங்களின் எண்ணிக்கைக்கேற்ப, செய்தி வெளியீட்டுப் பிரிவிற்கு துணை சாதனங்களுடன் ரூ. 0.90 இலட்சம் செலவில் இரண்டு கணினிகள் வாங்கி வழங்கப்படும்.

10. மாணவர்களுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும் மற்றும் இந்திய ஆட்சிப் பணித் தேர்வு ஆகிய போட்டித் தேர்வுகளில் பங்கு பெறுபவர்களுக்கும் வழிகாட்டியாக விளங்கும் மாநிலச் செய்தி நிலைய நூலகத்திலுள்ள புத்தகங்கள் ரூ.1 இலட்சம் செலவில் பைண்டு செய்யப்படும்.

11. தலைமையகம் மற்றும் புதிதாகத் தொடங்கப்பட்ட மூன்று மாவட்டங்களின் பயன்பாட்டிற்கு ரூ. 12.50 இலட்சம் செலவில் 5 நிக்கான் D200 டிஜிட்டல் காமிராக்கள் துணை சாதனங்களுடன் வாங்கி வழங்கப்படும்.

12. இவ்வாண்டு முதல் ஆண்டுதோறும் நவம்பர் 23 அன்று உவமைக் கவிஞர் சுரதா அவர்களின் பிறந்தநாள் அரசின் சார்பில் கொண்டாடப்படும்.

13. மதுரை மாவட்டம், தும்பைப்பட்டியில் தியாக சீலர் கக்கன் அவர்களின் நூற்றாண்டு விழா தமிழ்நாடு அரசின் சார்பில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படும்.

இணைப்பு VIII

(820 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண் 29—சுற்றுலா

அறிவிப்புகள், 2009—2010

1. நாகப்பட்டினம் மாவட்டம், திருக்கடையூர் அருள்மிகு அபிராமி கோயில்

சுற்றுலாப் பயணிகள் வசதிக்காக குடிநீர் வசதி, கழிப்பறை மற்றும் உடை மாற்றும் அறை, வைப்பறை, இளைப்பாறும் இடம், ஓட்டுநர்கள் ஓய்வறை, வாகனம் நிறுத்துமிடம், வாகனம் பழுது பார்க்கும் வசதி, பெட்ரோல் பங்கு, சுற்றுலா தகவல் மையம், அங்காடி, வங்கி உடனடி பணம் எடுக்கும் வசதி, சைக்கிள் மற்றும் சுற்றுச்சூழலுக்குகந்த வாகன வசதி ஏற்படுத்த ரூ.75.00 இலட்சம் வழங்கப்படும்.

2. வால்பாறையில் ஒருங்கிணைந்த சுற்றுலா வசதிகள், கோயம்புத்தூர் மாவட்டம்

கிரேடு 3 நகராட்சியில் தேயிலைத் தோட்டங்களுக்கு மத்தியில் வால்பாறை உள்ளது. வால்பாறை 217.87 சதுர மீட்டர் பரப்பில் 95,107 மக்கள் தொகையுடன் சிறப்பாக அமைந்துள்ளது. வால்பாறை மலையடிவாரத்தில் உள்ள குரங்கு நீர்வீழ்ச்சிக்கு பெருமளவில் மக்கள் வந்து செல்கின்றனர். வால்பாறையிலிருந்து 10 கி.மீ. தொலைவில் கருமலை வேளாங்கண்ணி தேவாலயம் மற்றும் பாலாஜி கோயில் ஆகியவை அமைந்துள்ளன. வால்பாறையிலிருந்து 5 கி.மீ. தொலைவில் உள்ள சோலையாரில் பளிங்கிலான விநாயகர் சிலை அமைந்துள்ளது. அண்டிமுடி எஸ்டேட்டில் உள்ள முருகன் ஆலயம் முடீஸ் செல்லும் வழியில் அமைந்துள்ளது. ஆசியாவில் இரண்டாவது பெரிய சோலையார் அணைப் பகுதியின் வனப் பகுதியில் உள்ள நீர்வீழ்ச்சியை (இங்கிருந்து 15 கி.மீ. தொலைவில் உள்ளது) இங்கிருந்து காண முடியும்.

சுற்றுலாப் பயணிகள் வசதிக்காக குடிநீர் வசதி, கழிப்பறை மற்றும் உடை மாற்றும் அறை, வைப்பறை, இளைப்பாறும் இடம், ஓட்டுநர்கள் ஓய்வறை, வாகனம் நிறுத்துமிடம், வாகனம் பழுது பார்க்கும் வசதி, பெட்ரோல் பங்கு, சுற்றுலா தகவல் மையம், அங்காடி, வங்கி உடனடி பணம் எடுக்கும் வசதி, சைக்கிள் மற்றும் சுற்றுச்சூழலுக்குகந்த வாகன வசதி ஏற்படுத்த ரூ.100.00 இலட்சம் வழங்கப்படும்.

[2009 ஜூலை 7

3. மிகவும் பிரபலமடையாத சுற்றுலாத் தலங்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஈரோடு மாவட்டம் அந்தியூரில் சுற்றுலா மேம்பாடு

பிரபலமடைந்த சுற்றலாத் தலங்களுடன் பிரபலமடையாத சுற்றுலாத் தலங்களையும் காண தமிழ்நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகளை ஊக்குவிக்கும் வகையில், சுற்றுலாத் தலங்களின் தன்மையைப் பொறுத்து அதனைக் காண வழிவகை செய்ய வேண்டியுள்ளது.

சுற்றுலாப் பயணிகள் வசதிக்காக ஈரோடு மாவட்டத்தில் உள்ள அந்தியூர் குதிரைச் சந்தைப் பகுதியில் குடிநீர் வசதி, கழிப்பறை மற்றும் உடை மாற்றும் அறை, வைப்பறை, இளைப்பாறும் இடம், ஓட்டுநர்கள் ஓய்வறை, சிற்றுண்டி விடுதி, வாகனம் நிறுத்துமிடம், வாகனம் பழுது பார்க்கும் வசதி, பெட்ரோல் பங்கு, சுற்றுலா தகவல் மையம், அங்காடி, வங்கி உடனடி பணம் எடுக்கும் வசதி, சைக்கிள் மற்றும் சுற்றுச்சூழலுக்குகந்த வாகன வசதி ஏற்படுத்த ரூ.15.00 இலட்சம் வழங்கப்படும்.

4. வேலூர், காரைக்குடி, திருவண்ணாமலை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள புதிய சுற்றுலா அலுவலகங்களுக்கு கட்டமைப்பு வசதிகள் செய்து தருதல்

வேலூர், காரைக்குடி, திருவண்ணாமலை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள நான்கு புதிய சுற்றுலா அலுவலகங்களுக்கு ரூ. *15.00* இலட்சம் (ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்) செலவில் *2009-2010* ஆம் ஆண்டு கட்டமைப்பு வசதிகள் செய்து தரப்படும்.

5. சுற்றுலாத் தலங்களை சுத்தமாக வைத்துக் கொள்வது, சிற்பங்கள் மேல் எழுதி அவற்றை அழுக்காக்குவது, சுற்றுலாப் பயணிகளிடம் நட்புடன் நடந்து கொள்வது, சிறந்த முறையில் பயணிகளுக்கு வழிகாட்டுவது தொடர்பாக சுற்றுலாப் பயணிகளிடையே விழிப்புணர்வு அதிக அளவில் ஏற்படுத்த களப் பயிற்சி வழங்கப்படும்.

6. சுற்றுலாத் தலங்களைப் பற்றி முழுமையாக அறிந்து கொள்ள சுற்றுலாத் துறையில் பணியாற்றும் அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும் பயண பயிற்சித் திட்டம் நடத்தப்படும்.

2009 ஜூலை 7]

7. தமிழகத்தின் தொன்மை, கட்டடக்கலை மற்றும் பண்பாடு ஆகியவற்றை சர்வதேச அளவில் விளம்பரப்படுத்த முகாம்கள் நடத்தப்படும்.

8. சுற்றுலா வளர்ச்சி, உணவுடன் உறையுள் திட்டம், புராதனச் சின்னங்களைப் பாதுகாத்தல் மற்றும் சுற்றுலா நட்புணர்வு ஆகியவை பற்றிய கருத்தரங்கம் நடத்தப்படும்.

9. சுற்றுலா விழாக்களில் நாட்டுப்புறக் கலைகளை விளம்பரப்படுத்தி, நாட்டுப்புறக் கலைஞர்களை அதிக அளவில் ஊக்குவிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

10. சுற்றுலாப் பயணிகள் மற்றும் உள்ளூர் மக்கள் பெரிதும் பயன் பெறும் வகையில் சென்னை மாநகரில் உள்ள பூங்காக்களில் 'பூங்காவில் பூங்காற்று' என்ற தலைப்பில் இசை நிகழ்ச்சிகளும், கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்படும்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

11. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தங்கும் விடுதிகள் மற்றும் சுற்றுலாப் பயண திட்டங்கள் செல்லிடத் தொலைபேசி மூலம் முன்பதிவு செய்யப்படும்.

12. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தங்கும் விடுதிகளில் 20 விழுக்காடு சலுகை பெற வழங்கப்படும் தங்க அட்டைகள் மற்றும் பிளாட்டினம் அட்டைகள் இனி கணினிமூலமும் வழங்கப்படும்.

13. தமிழ்நாடு சுற்றுலா விடுதி, திருச்சிராப்பள்ளி ரூ. 98 இலட்சம் செலவில் கூடுதலாக ஒன்பது அறைகளுடன் விரிவுபடுத்தப்படும்.

14. தமிழ்நாடு சுற்றுலா விடுதி, தஞ்சாவூர் ரூ.99 இலட்சம் செலவில் கூடுதலாக பன்னிரெண்டு அறைகள் மற்றும் சிறிய கூட்டரங்கத்துடன் விரிவுபடுத்தப்படும்.

15. சர்வதேச சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்காக இராமேசுவரத்தில் ரூ.100 இலட்சம் செலவில் கூடுதலாக சுற்றுலா வளாகம் கட்டப்படும்.

16. இரயில் மற்றும் சாலை சுற்றுலா பயணத் திட்டம் ஆந்திர மாநிலம் ஐதராபாத்திலிருந்தும் தொடங்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2009 ஜுலை 7

கலை பண்பாட்டுத் துறை

அறிவிப்புகள், 2009–2010

1. கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரியில் கவின் கலை குறித்த அருங்காட்சியக் கலைக் கூடம் அமைத்தல்

இந்நிதியாண்டில் கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரியில் கவின் கலை குறித்த அருங்காட்சியக் கலைக் கூடம் அமைக்கப்படும். இதற்காக ரூ.50,00,000/- ஒதுக்கீடு செய்யப்படும்.

2. காஞ்சிபுரம், சேலம், மதுரை, திருச்சிராப்பள்ளி மண்டல கலை பண்பாட்டு மையங்களுக்கு ஒளி அச்சு இயந்திரம் (Photocopying Machine) வாங்குதல்

காஞ்சிபுரம், சேலம், மதுரை, திருச்சிராப்பள்ளி மண்டல கலை பண்பாட்டு மையங்களுக்கு ஒளி அச்சு இயந்திரம் (Photocopying Machine) வாங்க இந்நிதியாண்டில் ரூ.2,00,000/- கூடுதல் செலவில் மேற்கொள்ளப்படும்.

3. கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரிக்கு நவீன ஒளி அச்சு இயந்திரம் (Photocopying Machine) வாங்குதல்

கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரிக்கு நவீன ஒளி அச்சு இயந்திரம் (Photocopying Machine) வாங்க ரூ.1,00,000/- ஒதுக்கீடு செய்யப்படும்.

4. மாவட்ட அரசு இசைப்பள்ளி மாணவர்களுக்கு தரை விரிப்புகள்

அரசு மாவட்ட இசைப்பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு தரை விரிப்புகள் வாங்க ரூ.5,00,000/- மாணவர் நலன் கருதி ஒதுக்கீடு செய்யப்படும்.

5. சென்னை மற்றும் கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரிகளில் சிற்பக் கலைப் பிரிவிற்கு மெட்டல் காஸ்டிங் பவுண்ட்ரி (Metal Casting Foundry) அமைத்தல்

சென்னை மற்றும் கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரிகளில் மாணவர்கள் பயன்பெற சிற்பக் கலைப் பிரிவிற்கு மெட்டல் காஸ்டிங் பவுண்ட்ரி (Metal Casting Foundry) அமைக்கும் பணிகள் ரூ.3,50,000/- கூடுதல் செலவில் மேற்கொள்ளப்படும்.

2009 ஜூலை 7]

6. சென்னை மற்றும் கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு வரைவு மேசைகள்/நாற்காலிகள்/நெடுமனைகள் வாங்குதல்.

சென்னை மற்றும் கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களின் வசதிக்காக வரைவு மேசைகள்/நாற்காலிகள்/நெடுமனைகள் வாங்க ரூ.7,45,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

7. சென்னை அரசு கவின் கலைக் கல்லூரிகளில் சுடுமண் பிரிவில் பயிலும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் சூட்டடுப்பு (Kiln) வாங்குதல்.

சென்னை அரசு கவின் கலைக் கல்லூரிகளில் சுடுமண் பிரிவில் பயிலும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் சூட்டடுப்பு (Kiln) ரூ.6,65,000/- கூடுதல் செலவில் வாங்கப்படும்.

8. சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருவையாறு இசைக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு தரை விரிப்புகள் வாங்குதல்.

சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருவையாறு இசைக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு வசதியாக தரை விரிப்புகள் வாங்க ரூ.2,00,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

9. சென்னை அரசு இசைக் கல்லூரியின் வகுப்பறைகளில் மின்விசிறிகள், குழல் விளக்குகள் பொருத்துதல்.

சென்னை அரசு இசைக் கல்லூரியில் பயிலும் மாணவர்களின் நலன்கருதி, வகுப்பறைகளில் மின் விசிறிகள், குழல் விளக்குகள் பொருத்தும் பணிகள் ரூ.1,00,000/- கூடுதல் செலவில் மேற்கொள்ளப்படும்.

10. சென்னை அரசு இசைக் கல்லூரியின் நூலகப் பயன்பாட்டிற்கு கண்ணாடியுடன் கூடிய பீரோக்களும், மாணவர்கள் அமர்ந்து படிப்பதற்கு நீண்ட மேசைகள் உள்ளிட்ட மரத்தளவாடங்கள் வாங்குதல்.

